பவானந்தர் கழக வெளியீடு—2.

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

நச்சினார்க்கினியம்

பதிப்பாசிரியர் :

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,
மாஜித் தலைமைத் தமிழாசிரியர்,
பெப்ரீஷியஸ் உயர் கலாசாலை, சென்னை.

பவானந்தர் கழகம்,
வேப்பேரி :: :: சென்னை.

பதிப்புரிமை] 1941 [விலை ரூ. 3.

P31, D21,1,5
N41

Acc. No. 673
Dt 21. 11 [illegible]

[illegible]
[illegible]

பொருளடக்கம்

பொருள்	பக்கம்
உரிமையுரை	iv
பதிப்புரை	v
திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளை அவர்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்	xiii
இப்பதிப்பில் எடுத்தாண்ட நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி	xix
பிழை திருத்தம்	xx
மூலமும் உரையும் :	
க. கிளவி ஆக்கம்	1
உ வேற்றுமை இயல்	69
ங. வேற்றுமை மயங்கியல்	102
ச. விளி மரபு	131
ரு. பெயர் இயல்	156
சு. வினை இயல்	189
எ. இடை இயல்	267
அ. உரி இயல்	310
கூ. எச்ச இயல்	356
சூத்திர முதற்குறிப்பு அகராதி	451
அரும்பதம் முதலியவற்றின் அகராதி	459
விஷய அகராதி	499
மேற்கோள் அகராதி	509

உரிமையுரை

கண்டவர் வியக்கும் கவினுறு வடிவும்
கலைதெரி புலமையும் சீர்சால்
தண்டமிழ் மொழியில் ஆர்வமும் அதனைத்
தழைத்திடச் செய்தலின் விருப்பும்
கொண்டநற் பெரியோய்! சரவண பவானந்
தன்னெனும் கோதிலாய்! கருத்தின்
எண்டகு தொல்காப் பியப்பதிப் பிதனை
என்றருள் உரிமையா இனிதே

ஸ்ரீ:

பதிப்புரை

ஸ்ரீ சடகோபர்

'தேன ருமகிழ்த் தொடையலும் மவுலியும்
திருக்கிளர் குழைக்காதும்
கான ருமலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமும் மார்பமும்
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென்
நயனம்விட் டகலாவே.'[1]

செந்தமிழ் மொழியின் திறன் அறிந்து பயிலக் கருவியாயுள்ள இலக்கண நூல்களுள் தொன்மை வாய்ந்த '**தொல்காப்பியம்**' என்னும் நூலுக்கு உரை கண்ட மெய்ஞ்ஞானப் புலவருள் உச்சிமேற் புலவர் கொள் **நச்சினர்க்கினியர்** என்னும் புலவர் பெருமானர், பாண்டி நாட்டில், மதுரையம்பதியில், அந்தணர் மரபில், செந்தமிழ் செய்த நற்றவப் பயனய்த் தோன்றியவர். இவரது சமயம் சைவம். இவர், '**உரையாசிரியர்**' என வழங்கும் **இளம்பூரணர்க்கும்**, 'வடநூற் கடலும் தமிழ்நூற் கடலும் நிலை கண்டுணர்ந்த பெருந்தகையார்' எனப் போற்றப்படும் **சேனவரையர்க்கும்** காலத்தாற் பிற்பட்ட

1. பெருந்தொகை, 1824.

வர். இவர் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும், வடமொழிக் கலைகளையும் ஐயந் திரிபற ஓதி உணர்ந்த உயர் அறிஞர் என்பது, இவர் இயற்றியருளிய உரைகளால் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதின் விளங்குவதாகும்.

'பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டும்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.'

என்னும் வெண்பாவான் இவர் உரையியற்றியருளிய நூல்கள் இன்ன என்பது விளங்கும்.

'தோல்காப் பியத்தில் தொகுத்த பொருளனைத்தும்
எல்லார்க்கும் ஒப்ப இனிதுரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு.'

என்னும் வெண்பா இவர் இயற்றியருளிய தொல்காப்பிய உரையின் சிறப்பை விளக்க எழுந்ததாகும்.

இவ்வறிஞர்தம் அருமை பெருமைகளைப் பின் வரும் உரைச் சிறப்புப் பாயிர ஆசிரியப்பாவானும் இனிதறியலாம் :—

'பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொருள் நுண்ணிதின் உணர்ந்து
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
ஞற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தையன் ஆகிப் பாற்பட
எழுத்தும் சொல்லும் பொருளும்இம் மூன்றும்
இழுக்கற ஆய்ந்த வழுக்கில்தொல் சீர்த்தித்
தோல்காப் பியம்எனும் தொடுகடற் பரப்பை
மறுவும் குறைவும் இன்றி என்றும்
கலையின் நிறைந்த கதிர்மதி என்ன
நிலையுடை கலத்தின் நெடுங்கரை காணக்

கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்
உரையிடை இட்ட காண்டிகை உரைத்தும்
ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டும் உணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட உரைத்தும்,
ஒலித்திரைத் தலத்தின் உணர்ந்தோர் உரைக்கும்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை உவமமும் ஏனை உவமமும்
தெள்ளிதின் தெரிந்து திணைப்பொருட் கேற்ப
உள்ளுறை உவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
இறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற உரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற இன்னுரை பொருள்பெற விளம்பியும்,
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடல் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது என்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்,
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியும் காட்சியும் காசினி அறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்
கிதுபொருள் என்றவன் எழுதா தொழிய
'இதுபொருள்' என்றதற் கேற்ப உரைத்தும்,

தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்
தானே ஆகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்
இருவினை கடியும் அருவியம் பொதியில்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி ஊழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.'

இத்தகைய நல்லறிஞரால் ஆய்ந்து இயற்றப்பட்ட தொல்காப்பியச் சொல்லதிகார உரையிற் காணும் நயங்கள், கற்றார் உணர்ந்து மகிழ்தற்குரியன ஆகும். ஆதலின், 'படிப்பாரும் எழுதுவாரும் இன்றிப் பாண வாய்ப்பட்டும், தேடுவாரும் தொடுவாரும் இன்றிச் செல்லுக்கு இரையாகியும் காலாந்தரத்தில் ஒன்றொன்றாய் அழிந்து போம் பழைய தமிழ் நூல்களை இயன்றமட்டும் அச்சிட்டு நிலை நிறுத்தத் தொடங்கிய'[1] காலஞ்சென்ற அருங்கலை வினோதர் உயர் திருவாளர் யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், பல தேசப் பிரதி ரூபங்களைக்கொண்டு அரிதின் முயன்று ஆராய்ந்து, நந்தன ௵ புரட்டாசி ௴ (கி. பி. 1892) இந்நூலை வெளியிட்டார்கள்.

பிள்ளையவர்கள் இந்நூலை வெளியிட்ட காலம், சங்க இலக்கியங்கள் மிகுதியும் பயிற்சியில் இல்லாத காலமாதலின், அவ்விலக்கியங்களினின்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது உரையில் மேற்கோளாக எடுத்தாண்ட

1. இவ்வாக்கியங்கள் உயர் திருவாளர் சீ. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் இந்நூலின் முதற்பதிப்பில் 'நன்றி கூறல்' என்னும் தலைப்பின் கீழ் அச்சிட்டவை.

பகுதிகளிற் பல, உண்மை உருவம் காண இயலாதவாறு பதிப்பிக்கப்பட்டன; ஏடெழுதுவோராலும் பாடம் கேட்போராலும் சிற்சில இடங்களில் புகுத்தப்பட்ட பிழைகளும் அச்சேறிவிட்டன. தாம் எடுத்தாளும் மேற்கோள்களுக்கு ஆகரம் குறிக்கும் வழக்கம் ஆசிரியர் நச்சினார்க்கினியரிடம் இல்லை. ஆதலின், இன்ன மேற்கோள் இன்ன நூலில் இப்பகுதியில் உள்ளது என்பதைப் பதிப்பாசிரியர் உணர இயலாது போயினமை வியப்புக்கிடமானதன்று. அங்ஙனம் உணர இயலாது போயினமையின், மேற்கோள்களின் உண்மையுருவம் காண்டலும் இயலாதாயிற்று. அங்ஙனம் பிழைபட அமைந்த மேற்கோள்களுள் ஒன்று,

> 'கவிசெந் தாழைக் குவிபுறத் திருந்த
> செவிசெஞ் சேவலும் பொருவலும் வெருவர
> வாய்வன் காக்கையும் கூகையும் கூடி.'

என்பது. இதில் 'தாழி' என்பது 'தாழை' எனவும், 'போகுவல்' என்பது 'பொருவல்' எனவும் பிழைபட்டன. இது போல்வன விரிக்கிற் பெருகும்.

யான் இந்நூலை என் சிற்றறிவிற்கும் பதிப்புத் தொழில் அனுபவத்திற்கும் பெருமுயற்சிக்கும் இயைந்த வகையில் ஒருவாறு ஆராய்ந்து, கிடைத்த ஏட்டுப் பிரதிகளின் உதவியினாலும் பேரறிஞர்களின் பெருமுயற்சியால் வெளி வந்துலவும் சங்க இலக்கியங்களின் துணையாலும், இந்நூலின் முதற்பதிப்பில் எனக்குப் புலனான வழுக்களைக் களைந்து, இந்நூலுரையிற் பயின்று வரும் மேற்கோள்களுள் பலவற்றிற்கு அவ்வப்பக்கங்களின் அடிக்குறிப்பில் ஆகரம் காட்டி, பாட பேதங்களையும் குறிப்பிட்டு, படிப்பார்க்குப் பொருள் இனிது விளங்குமாறு கடின சந்திகளைப் பிரித்துப் பொருள் அமைதிக்கேற்ப நிறுத்தக் குறிகளை அமைத்து, இதனைக் கற்பார்க்கு எளிதிற் பயன்படுமாறு அரும்பத முதலியவற்

றின் அகராதியும் விஷய அகராதியும் மேற்கோள் அகராதியும் தொகுத்து நூலின் இறுதியிற் சேர்த்துப் பதிப்பித்துள்ளேன்.

இப்பதிப்பு முற்றும் திருத்தமான பதிப்பென்று கூறுதற்கு யான் சிறிதும் ஒருப்படேன்: பின்னும் பல திருத்தமான ஏடுகள் கிடைக்கப் பெறின் பற்பல திருத்தங்கள் தோன்றும் என்பது உண்மை. ஆதலின், கல்வி அறிவு ஒழுக்கங்களாற் சிறந்த அறிஞர்கள் இப்பதிப்பிற் குறை பல காணின், அவற்றை என் முயற்சிக் குறைவால் நேர்ந்தனவாகக் கொள்ளாது, இப்பதிப்பைப் பின்னுந் தூயதாக்குதற்பொருட்டு அவற்றை எனக்குத் தக்க ஏதுக்களுடன் எடுத்துக்காட்ட அவர்களைப் பெரிதும் வேண்டிக்கொள்ளுகிறேன். நெடுங் காலமாகப் பிரதி கிடையாதிருந்த குறையை நீக்கப் பவானந்தர் கழக நற்றொண்டின் பயனாக வெளி வந்த இப்பதிப்பினை அறிஞர் பல்லாற்றானும் ஆதரிப்பரென்பது எனது கருத்து.

தமிழ் மொழியில் அளவற்ற ஆர்வம் உடையவரும் தமிழ் வளர்ச்சியைத் தம் வாழ்க்கை நலத்தின் தனி வளர்ச்சியெனக் கருதிப் பழந்தமிழ் நூல்கள் பலவற்றை வெளியிட்டவருமாகிய காலஞ்சென்ற **திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளையவர்கள்,** தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தமிழ் மக்களின் நன்மையினைப் பெரிதும் நாடித் தமிழ் மொழியினைப் பல்லாற்றானும் சிறப்பித்தற் பொருட்டு அமைத்த **பவானந்தர் கழகத்** தரும பரிபாலன சபையார், ஐவர் அடங்கிய ஆலோசனைக் கழகம் ஒன்று அமைத்து, அக்கழக அங்கத்தினருள் ஒருவனாகிய என்னைப் பதிப்பாசிரியனாக ஏற்படுத்தி இந்நூலைப் பதிப்பிக்க வேண்டினர்.

ஆலோசனைக் கழகத்தின் ஏனைய அங்கத்தினர்கள், சென்னைக் கிறித்தவ கல்லூரி மாஜித் தமிழ்ப்பேராசிரி

யர் உயர்திரு. ச. த. சற்குணர், B.A., அவர்களும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி உயர் கலாசாலை மாஜித் தலைமைத் தமிழாசிரியரும் என் நல்லாசிரியருமாகிய உயர்திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. மோ. கந்தசாமி முதலியார், B.A., M.R.A.S., அவர்களும், வித்துவான் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M.A., B.L., M.O.L., அவர்களும் ஆவார்கள். இப்பெரியார்கள் இந்நூல் அச்சேறுங் காலத்து இறுதி அச்சுத் தாள்களைப் பார்வையிட்டருளி, இதனைப் பதிப்பித்தலில் என்னைப் பெரிதும் ஊக்கியருளினார்கள். இவர்கள் அன்புடைமைக்கு யான் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

பவானந்தர் கழகத்தின் தரும பரிபாலகர்களாகிய உயர் திருவாளர்கள் T. G. தாமோதர முதலியார் அவர்களும், T. S. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்களும், J. கண்ணப்ப முதலியார் அவர்களும், M. பாலசுப்பிரமணிய முதலியார், M.A., அவர்களும், V. மோகன வேங்கடராம செட்டியார் அவர்களும் என்னை நன்கு உபசரித்து, இந்நூலைப் பதிப்பிக்க வேண்டிய உதவிகளைப் புரிந்து மேன்மைப்படுத்தினார்கள். இப்பெருமக்களுக்கு எனது அன்போடு கூடிய வந்தனம் என்றும் உரியதாகுக!

யான் இந்நூலை ஆராய்தற்கு உதவியாயிருந்த ஏட்டுப் பிரதிகளைக் கொடுத்துதவிய சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்தைச் சார்ந்த கீழ்நாட்டுக் கலை நூல் நிலையக் கையெழுத்துப் பிரதிப் பாதுகாப்பாளர் அவர்களுக்கும், எனது வேண்டுகோளை மறாது தமது ஏட்டுச் சுவடிக் கருவூலத்தினின்றும் எச்சவியலுக்கு மட்டும் நச்சினார்க்கினியர் உரையினையுடைய ஓர் ஏட்டுப்பிரதியை ஆராய்ந்தெடுத்து உபகரித்த செந்தமிழ்ப் பரிபாலகர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர்

உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கும் யான் என்றும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும்போது உடனிருந்து எனக்கு வேண்டும் உதவிகளைப் புரிந்து என்னை உற்சாகப்படுத்தி வந்த என் தமையனர் புதல்வர்களாகிய திரு நின்ற செல்வர்கள் மே. பெ. அரங்கசாமியும், மே. பெ. கோதண்டபாணியும் கல்வியும் செல்வமும் ஆயுளும் மேன் மேலும் ஓங்கப் பெற்றுத் தமிழ்க்குத் தொண்டு புரியத் திருவருள் சுரக்குமாறு இறைவனை வேண்டுகின்றேன்.

இந்நூல் அச்சாகுங் காலத்து நலிவுற்றிருந்த என் உடலுக்கும் மனத்திற்கும் உரத்தையும் ஊக்கத்தையும் அளித்து, இஃது இடையூறின்றி இனிது நிறைவேறத் திருவருள் சுரந்த எல்லாம் வல்ல இறைவன் இணையடித் தாமரைகளை மன மொழி மெய்களால் எண்ணி ஏத்தி இறைஞ்சுகின்றேன்.

சென்னை,
15 - 3 - 41.

மே. வீ. வே.

பவானந்தர் கழக ஸ்தாபகர்

திவான் பகதூர் ச. பவானந்தம் பிள்ளையவர்கள்,

I. S. O., O. B. E.,

M. R. A. S. (London), F. R. H. S. (London)

திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளையவர்கள்
வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.' —திருக்குறள்

என்னும் வள்ளுவர்தம் வாய்மொழியின் முற்பகுதிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இவ்வுலகில் தோன்றித் தம் புகழ் நிறுவிச் சென்ற பெருமக்களுள் **திவான் பகதூர் சரவண பவானந்தம் பிள்ளையவர்களும்** ஒருவர். இவர் **முத்துசாமி பிள்ளை** என்னும் வேளாண்குடிச் செல்வரும் **சந்திரமதி** என்னும் அவர்தம் மனைவியாரும் செய்த நற்றவப் பயனாய்த் தோன்றினர். 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்,' என்னும் முதுமொழிக்கேற்ப, இளமைப் பருவத்திலேயே இவரிடம் சீரிய குணங்கள் தோன்றித் தழைத்தன. இவர் இளமையில் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து, ஒழுக்கத்திற் சிறந்து, 'இம் மைந்தரைப் பெற இவர்தம் பெற்றோர் எத்தவம் இழைத்தனரோ!' என்று கண்டோர் கூற விளங்கினர். இவர் வழக்கறிஞராக விரும்பி இங்கிலந்து செல்ல முயன்றபோது, வைதிக மதப்பற்றுள்ளவராகிய இவர் தம் அன்னையார் மறுக்க, 'தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை,' எனும் கட்டுரைக்கிணங்கி, அக்கருத்தினை ஒழித்தனர்.

அந்நாளில் நகரக் காவற்படையின் திறத்தையும் உரத்தையும் வளர்க்கக் கருதின **கர்னல் டி. வெல்டன்,**

ஸி. ஐ. இ. என்னும் புகழ் பெற்ற நகரக் காவற்படை அதிகாரத் தலைவர்,[1] கல்வியில் தேர்ந்த இளைஞரை நகரக் காவற்படையிற் சேர்க்க விரும்பிப் போட்டிப் பரீட்சை ஒன்றை ஏற்படுத்தினர். அப்பரீட்சை எழுதியவர்களுள் முதல்வராய்த் தேறிய பிள்ளையவர்களைக் கர்னல் வெல்டன் துரை மகனர் தாம் புதிதாக ஏற்படுத்திய குற்ற வர்த்தமான விசாரணை வகுப்பில்[2] தமது நேர்முகக் காரியஸ்தராக[3] நியமித்தனர். இவர் தாம் மேற்கொண்ட தொழில்களைக் கர்னல் வெல்டனும் பிறருங் கண்டு வியக்கும்படி செய்து, இளம்புகழ் ஈட்டினர்.

இவர் தென்னிந்தியாவிற் பற்பல இடங்களில் ஏற்பட்ட குழப்பங்களைத் திறம்பட அடக்கி, ஐரோப்பிய மேற்பார்வை உத்தியோகஸ்தர்களால் 'அற்புதம் விளைத்த விற்பன்னர்,' எனப் புகழ்ந்து உரைக்கப்பட்டார்; கொலை, கொள்ளை, பொய்க் கையெழுத்து, மோசம் முதலிய சிக்கலான வழக்குகளைக் கண்டுபிடித்து, தமது நுண்ணறிவால் அவற்றின் உண்மையை நாடி அறிந்து வெளிப்படுத்தியதால், தம் மேலதிகாரிகளாலும் நீதிபதிகளாலும் மிகவும் பாராட்டப்பட்டனர். மனந்தடுமாறுமை, நேர்பட ஒழுகல், நிருவாக சாதுரியம் ஆகிய அரும்பண்புகள் இவரிடம் விளங்கின. இவர் சட்டப் பரீட்சையில் தேருதவராயினும், தமக்கு இயற்கையிலேயே சட்ட நூற்களை ஆராய்வதில் ஏற்பட்டிருந்த பெருவிருப்பத்தால், அவற்றை நன்கு ஆய்ந்துணர்ந்த சட்ட அறிஞராவர்.

இவர் F.L., B.L., சட்டப் பரீட்சைகளுக்குரிய 30 நூல்களை ஆராய்ந்தெழுதிப் பதிப்பித்துள்ளார்.

---

1. The Commissioner of Police
2. The Criminal Intelligence Department
3. Personal Officer

1904-ஆம் ஆண்டு முதல் 1912-ஆம் ஆண்டு வரையில் இவர் சென்னை நகரக் குற்ற வர்த்தமான விசாரணை வகுப்புத் தலைவராய் அமைந்து, அரசாங்கத்திற்கு அரிய சேவை செய்தனர்.

மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் சென்னைக்கு விஜயம் செய்த போது (1906ஃ ஜனவரிமீ 24—28௳) அவர்களுக்கு மெய்காப்பாளராயிருக்கும் பொறுப்பை ஏற்று இவர் திறம்படச் செயலாற்றியதற்கு வியந்து, இளவரசர் தம் திருக்கரத்தாலேயே விசேட விருதுப் பதக்கம்[1] ஒன்றை இவருக்கு அணிந்து மகிழ்ந்தார். மிண்டோ பிரபுவும், ஹார்டிஞ்சு பிரபுவும் சென்னையில் தங்கியிருந்தபோதும் இவரே அவர்களுக்கு மெய்காப்பாளராயிருந்து அவர்கள் மெச்சும்படி செயலாற்றினர்.

1918ல் இவர் சென்னைத் தென் பாரிச நகரக் காவற்படை அதிகாரத் தலைமைப் பிரதிநிதியாய் இருந்தபோது இவர் ஆற்றிய செயல்கள் துரைத்தனத்தாரால் மிகப் பாராட்டப்பட்டன.

இங்ஙனம் முப்பத்தைந்தாண்டுகள் இவர் ஆற்றிய உத்தமத் தொண்டுகளைத் துரைத்தனத்தார் தொடர்ச்சியாக அரசாங்க அறிக்கைகளிலும்[2] வர்த்தமானப் பத்திரிகைகளிலும் அடிக்கடி புகழ்ந்திருக்கின்றனர். இவர் சென்னை ஷெரீப்பாயும் விளங்கினர்.

இவர் தமது உத்தியோக அலுவல்களைத் திறம்படச் செய்து புகழீட்டியதுடன் அமையாமல், நாட்டு மக்களின் நலங் கருதி அறிவுத் துறையிலும் பற்பல தொண்டுகள் ஆற்றி வந்தனர். இதனல், வர்த்தமானப் பத்திரிகைகள் இவரைப் 'பரோபகாரப்போலீஸ் உத்தியோகஸ்தர்' எனப் பாராட்டியிருக்கின்றன.

---

1. Special Medal 2. Administration Reports

இவர் தம் பெயரால் 'பவானந்தர் கழகம்' என்னும் கல்விக் கழகம் ஒன்றை நிறுவி, அதன் வளர்ச்சிக்காகவும் தொண்டுகளுக்காகவும் தாம் அரிதின் ஈட்டிய பெரும் பொருளை இறுதி முறி[1] வாயிலாக அர்ப்பணம் செய்திருக்கின்றனர். பல துறைகளில் ஆராய்ச்சிகள் புரிவதும், பொது ஜன நன்மைக்கான ஞானத்தையும் கல்வியையும் நீதி நெறியிலும் உடற்கூற்றுத் துறையிலும் மக்களிடையிற் பரவச் செய்வதுமே அக்கழகத்தின் நோக்கமாகும். அக்கழகச் சார்பில் இவரால் நிறுவப்பட்ட நூல் நிலையம் ஒன்று திகழ்கின்றது. அந்நூல் நிலையத்தில் சற்றேறக்குறைய நாற்பது ஆண்டுகளாக இவரால் அரிதின் முயன்று தொகுக்கப்பெற்ற பல்லாயிரம் நூல்கள்—ஏட்டு வடிவிலும் கையெழுத்திலும் அச்சிலும் அமைந்தவை—உள்ளன.

இவர் இலண்டன்மாநகர ராஜரிகத் தேச சரித்திர சங்கத்தில் ஓர் அங்கத்தினர்;[2] ராஜரிக ஆசிய சங்கத்திலும் ஓர் அங்கத்தினர்.[3] தமிழ் நூல்கள் பலவற்றை இவர் பல வகைக் குறிப்புகளுடனும் ஆராய்ச்சி முகவுரைகளுடனும் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழூலகத்திற்குச் சிறந்த தொண்டாற்றியிருக்கின்றார். தமிழ் மொழியிடத்தும் தமிழரிடத்தும் இவருக்கிருந்த அன்பின் பெருக்கினை அளவிட்டுக் கூறல் இயலாது. தமிழிலக்கணங்களில் தொன்மை வாய்ந்தனவும் சிறந்தனவுமாகிய **தொல்காப்பியம் பொருளதிகாரம்** (நச்சினார்க்கினியர் பேராசிரியர் உரையுடன்), **யாப்பருங்கல விருத்தியுரை, இறையனரகப்பொருளுரை, பேரகத்தியத் திரட்டு,** இராமானுச கவிராயர் சங்கர நமச்சிவாயப் புலவர் சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்களின் உரைகளைத் தழுவி எழு

1. Will
2. Fellow of the Royal Historical Society
3. Member of the Royal Asiatic Society

தப்பட்ட நன்னூல் காண்டிகையுரை முதலியவற்றை இவர் தம் பொருளைக்கொண்டு வெளியிட்டிருக்கின்றனர். இவரால் இயற்றப்பட்ட நாடகங்களும் மொழி பெயர்ப்பு நூல்களும் பல. இவர் இயற்றிய நாடகங்கள் இலண்டன் மா நகரத்தில் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாரும் மேரி மகாராணியாரும் கண்டு களிக்க அவர்கள் முன்னிலையில் நடித்துக் காட்டப்பட்டமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

இவர் சென்னைப் பல்கலைக் கழகத் திராவிட வாசக சங்கத்திற்குத் தலைவராயும், ஷை பல்கலைக் கழக அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட திராவிடச் சொற்றொடராக்கச் சங்கத்தின் அங்கத்தினராயுமிருந்திருக்கிறார்; தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் சபாநாயகருக்குப் பிரதிநிதியாய்[1] இருந்திருக்கிறார். இவர் இயற்றிய நூல்களிற் பல, பல்கலைக் கழகச் சார்பில் நடைபெறும் கல்லூரிகளின் மாணவர்களுக்கும் உயர்தரப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கும் பாட புத்தகங்களாக அமைக்கப்பட்டன. இவர் இயற்றிய வாசக பாடங்கள் இளஞ்சிறார்க்குப் பயன்பட்டு வருகின்றன.

இவர் தலைவராயும் அங்கத்தவராயும் அமர்ந்து தொண்டாற்றிய கலைக் கழகங்களும் சபைகளும் பல வாகும். அக்கழகங்களும் சபைகளும் இவரைப் பெரிதும் பாராட்டி உள்ளன. அவற்றைப்பற்றிய குறிப்புகள் யாவும் இவரது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் விரிவான நூலில் வெளி வருமாதலின், விரிவஞ்சி இங்கு விடப்பட்டன.

இவர் அரசாங்கத்தாரால் பெற்ற பட்டங்களும் பரிசுகளும் மதிப்புரைகளும் பல. 1889-ஆம் ஆண்டு உத்தியோகத்திற் சேர்ந்த இவர், படிப்படியாய்உயர்ந்து,

---

1. Vice-President

1908-ஆம் ஆண்டு போலீஸ் அஸிஸ்டெண்டு கமிஷனர் பதவியை ஏற்றனர்; 1918-ஆம் ஆண்டு டேபுடி கமிஷனர் பதவியை மேற்கொண்டனர்.

இவர் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியாருக்கும், அரசாங்கத்திற்கும், நாட்டுக்கும் ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளுக்காக ஆண்டுதோறும் ஆயுள் வரையில் இவருக்கு அறுநூறு ரூபாய் நிரந்தர வருமானமளிக்கும் ஜாகீர் ஒன்று 1922ஆம் ஏப்ரல்மீ 12உ முதல் பயன் தருமாறு வழங்கப்பட்டது.

இவருடைய பக்தி மிகுந்த பரிசுத்தமான பிரமசரிய வாழ்க்கையும், இனிய குணமும், சிறந்த கலையுணர்வும், வசீகரத் தோற்றமும், வணங்கிய வாக்கும், நுணங்கிய கேள்வியும், வள்ளன்மையும், அடுத்தவரை ஆதரிக்கும் நற்பண்பும் இவரை எவரும் விரும்பிப் பாராட்டும் பண்புகளாயிருந்தன. 'கற்றோருடன் கலந்துரையாடி மகிழ்வதிலும் பேரின்பம் வேறில்லை,' என்னும் கருத்துடன் இப்பெரியார் வாழ்ந்து வந்தமையின், புலவருங் கவிஞரும் போற்ற வாழ்ந்தவர் ஆவர்.

இங்ஙனம் அரசறிய வாழ்ந்து, பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தது போலவும் ஊருணி நீர் நிறைந்தது போலவும் பலர்க்கும் பயன்படுபவராய் விளங்கிய இப்பெரியார், 1932-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆந் தேதி இம்மண்ணுலக வாழ்வை நீத்து, விண்ணுலகத்தார்க்கு நல்விருந்தினராயினர். இறைவன் திருவடி நீழலில் இவர் ஆன்மா என்றும் நிலவி இன்பந் திளைப்பதாகுக!

இப்பதிப்பில் எடுத்தாண்ட நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பு அகராதி

அகத்திணையியல்
அகப்.—அகப்பொருள்
அகம்.—அகநானூறு
ஆசாரக்.—ஆசாரக்கோவை
இ-ள்.—இதன் பொருள்
இறை.—இறை. அகப்.—இறையனார் அகப்பொருள்
உ-ம்.—உதாரணம்
உயிர் மயங்.—உயிர் மயங்கியல்
உவமவியல்
எழுத்.—எழுத்ததிகாரம்
எ-று.—என்றவாறு
ஐங்.—ஐங்குறு.—ஐங்குறுநூறு
ஐக். எழு.—ஐந்திணை எழுபது
ஐந். ஐம்.—ஐந்திணை ஐம்பது
ஏலாதி
ஏனாதி.—ஏனாதிநாத நாயனார் [புராணம்
கல்லா.—கல்லாடம்
கலி.—கலித்தொகை
களவழி.—களவழி நாற்பது
களவியல்
கற்பியல்
கார்.—கார் நாற்பது
குற். புணர்.—குற்றியலுகரப் புணரியல்
குறள்.—திருக்குறள்
குறிஞ்சி.—குறிஞ்சிப்பாட்டு
குறுந்.—குறுந்தொகை
சங். ந.—சங்கர நமச்சிவாயப் புலவர்
சிலப்.—சிலப்பதிகாரம்
சிறுபஞ்ச.—சிறுபஞ்ச மூலம்
சிறுபாண்.—சிறுபாணாற்றுப் படை
சீவக.—சீவக சிந்தாமணி
சுயம்வர.—சுயம்வர காண்டம்
சூ.—சூத்திரம்
செய்யுளியல்
திணை. நூற்.—திணைமாலை நூற்றைம்பது
திரிகடுகம்
திருக்கோ.—திருக்கோவையார்
தொல்.—தொல்காப்பியம்
நச்.—நச்சினார்க்கினியர்
நள.—நளவெண்பா
நற்.—நற்றிணை
நன்.—நன்னூல்
நாலடி.—நாலடியார்
நான்மணி.—நான்மணிக்கடிகை
நெடுநல்.—நெடுநல் வாடை
பதிற்.—பதிற்றுப்பத்து
பரி.—பரி பாடல்
பி-ம்:—பிரதி பேதம்
பு. வெ.—புறப்பொருள் வெண்பா [மாலை
புள். மயங்.—புள்ளி மயங்.—புள்ளி மயங்கியல்
புறத்திணையியல்
புறம்.—புறநானூறு
பெரிய பு.—பெரிய புராணம்
பெரும்பாண்.—பெரும்பாணாற்றுப் படை
பொருந.—பொருநராற்றுப்படை
பொருளியல்
மதுரைக்.—மதுரைக் காஞ்சி
மயிலை நா.—மயிலை நாதர்
மரபியல்
மலைபடு.—மலைபடு கடாம்
முத்தொள்ளாயிரம்
முதுமொழி.—முதுமொழிக் [காஞ்சி
முருகு.—திருமுருகாற்றுப் படை
முல்லை.—முல்லைப்.—முல்லைப்பாட்டு
மெய்ப்பாட்டியல்
மேற்.—மேற்கோள்
யாப். வி.—யாப்பருங்கல விருத்தி
வேற். மயங்.—வேற்றுமை மயங்கியல்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
59	26	இயல்யினுள்	இயல்பினுள்
73	24	வராது	வாராது
121	24	செய்யத்தகும்	செய்யத்தகுமக் .
187	16	வதுவை வந்த	வதுவை அயர்ந்த
203	21	விடை	வினை
207	14	போல்வான்	போல்வன்
240	4	யற்றபெண்	யற்றவென்
246	6	உறற்கால்	உரற்கால்
401	12	நின்றான்	தின்றான்
421	1	321	421
442	12	ஒக்கல் தலைவ!’	ஒக்கல் தலைவ!’[1]

ஸ்ரீ:

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

நச்சினார்க்கினியம்

க. கிளவி ஆக்கம்

1] சோற்பொருள் வரையறை [க

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;
அஃறிணை என்மனார் அவரல பிறவே;
ஆயிரு திணையின் இசைக்குமன் * சொல்லே.

என்பது சூத்திரம். 'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ?' எனின் †, மேற்பாயிரத்துள் 'எழுத்தும் சொல்லும்பொருளும் நாடி'[1] என நிறுத்த முறையானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின்றார் ஆதலின், சொல் அதிகாரம் என்னும் பெயர்த்து. அது, 'சொல்லை உணர்த்திய முறைமை' என விரியும்.

சொல் என்றது, எழுத்தினான் ஆக்கப்பட்டு இரு திணைப் பொருள் தன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசையை. இங்கு 'ஆக்கப்படுதல்' என்றது,

பிரதி பேதம்: * இசைக்குமன † இத்தொடர் பழைய பதிப்பில் இல்லை.
1. எழுத். சிறப்புப்பாயிரம், 5.

ஒரு சொற்கூறுமிடத்து ஓரெழுத்துப்போக ஓரெழுத்துக் கூறுவதல்லது ஒரு சொல்லாக முடியும் எழுத்தெல்லாம் சேரக்கூறல் ஆகாமையின், அவ்வெழுத்துக்கள் கூறிய அடைவே போயினவேனும்,* கேட்டோர் கருத்தின்கண் ஒரு தொடராய் நிலைபெற்று நின்று பொருளை அறிவுறுத்தலை. ஆயின், ஓரெழுத்தொருமொழிக்கு ஆக்குதல் இன்றால் எனின், ஓரெழுத்தொருமொழியைக் கூறியக்கால் அதுவும் செவிப்புலனாய்க் கருத்தின்கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளை ஆக்குதலின், அதுவும் ஆக்கும் தன்மை உடையதாயிற்று.

இரு திணைப் பொருளுமாவன, ஐம்பாற்பொருளின் பகுதியாகிய காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும், அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும்பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும் நிலைத்திணையுமாம். இவையெல்லாம் ஐம்பாலாய் அடங்கின.

இனிப் பொருள் தன்மையாவது, மக்கள் தன்மையும் இயங்குதிணைத் தன்மையும் நிலைத்திணைத் தன்மையுமாம். இத்தன்மை, ஒரு பொருட்குக் கேடு பிறந்தாலும் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பல வகைப்பட்ட பொருடோறும் நிற்குமென்று உணர்க.

கருவியாவது, அப்பொருள் தன்மையை ஒருவன் உணர்தற்கு அவ்வோசை கருவியாய் நிற்றல். இதனை ஐம்பொறிகள் ஒருவன் பொருளை உணர்தற்குக் கருவியாய் நின்றாற்போலக் கருவியாய் நிற்குமென்று உணர்க.

இனி, 'ஓசையைச் சொல் என்றீரேல், கடலொலி சங்கொலி விண்ணொலி முதலியனவும் சொல்லாகாவோ?' எனின், சொல் † 'இது முன்பு யான் உணர்ந்த எழுத்து,' என்றே பின்பு கூறியக்காலும் உணர நிற்றலின், கேடின்றி நிலைபேறு உடையதாயிற்று. இவை அங்ஙனம் உணர்தல் ஆற்றாமையானும், எழுத்தினான்

பி-ம்: * போயிற்றேனும் † சொல்லு

ஆக்கப்படாமையானும் நிலைபேறு இலவாயின; ஆதலின், சொல் எனப்படா. அன்றியும், 'ஓசை, அரவம், இசை' என்பன போலன்றிக் 'கிளவி, சொல், மொழி' என்பன எழுத்தினான் ஆகிய ஓசையை உணர்த்தும். முற்கு, வீளை முதலியன, எழுத்தினான் ஆக்கப்படாமையின், சொல்லாகா.

இனி ஒரு சாரார், எழுத்தினான் ஆகிய ஓசையையும் கெடும் என்பர். உரையாசிரியரும், 'சொல்லென்பது எழுத்தினான் ஆக்கப்பட்டுத் திணை அறிவுறுக்கும் ஓசை,' என்றும், 'தன்னை உணர நின்றவழி எழுத்து எனப்படும்; தான் இடை நின்று பொருள் உணர்த்தியவழிச் சொல் எனப்படும்,' என்றும் கூறினார், இக்கருத்தே பற்றி.

இனிச்சேனாவரையர் 'சொல் பொருள் குறித்து வரும்,' என்றாரால் எனின், ஒருவன் பொருள் தன்மையை உணர்தற்குச் சொல் கருவியாய் நிற்றல் அன்றித் தனக்கு ஓர் உணர்வு இன்மையின் தான் ஒருபொருளைக் கருதி நிற்றல் இன்று என மறுக்க.

அச்சொல்லை எட்டு வகையானும் எட்டு இறந்த பல வகையானும் உணர்த்துப: இரண்டு திணையும், ஐந்து பாலும், ஏழு வகை வழூவும், எட்டு வேற்றுமையும், ஆறு ஒட்டும், மூன்று இடமும், மூன்று காலமும், வழக்கும் செய்யுளும் ஆகிய இரண்டு இடமும் என எட்டு வகையான் உணர்த்துப. இனி எட்டு இறந்த பல வகையாவன, சொல் நான்கு வகைய என்றலும், அவற்றையே பலவாகப் பகுத்தலும், விகார வகையும், பொருள்கோள் வகையும், செய்யுட்கு உரிய சொல் நான்கு என்றலும், பிறவுமாம்.

அச்சொற்றான், தனிமொழியும் தொடர்மொழியும் என இரு வகைப்படும். தனி மொழி பொருள் விளக்குமாறு,

'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்

இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.'[1]

என்னும் மரபியற்சூத்திரத்தான் உணர்க.

தொடர்மொழி, இருமொழித்தொடரும் பன்மொழித்தொடரும் என இரு வகைப்படும். அவை தொடருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் தொடரும். இனி வடநூலார் கூறியவாறே அவாய்நிலையானும் தகுதியானும் தொடரும் என்றலுமாம்.

(உ-ம்.) சாத்தன், உண்டான், மன், நனி என்பன தனிமொழி.

சாத்தன் வந்தான்—இது பயனிலைத் தொடர்.

யானைக்கோடு—இது தொகைநிலைத் தொடர்.

நிலம் நீர்—இஃது எண்ணுநிலைத் தொடர். இவை இருமொழித் தொடர்.

'அறம் வேண்டி அரசன் உலகம் புரக்கும்,' என்பது பன்மொழித் தொடர்.

வழுக் களைந்து சொற்களை அமைத்துக்கோடலின், இவ்வோத்துக் கிளவி ஆக்கம் என்னும் பெயர் பெற்றது. இனிச் சொற்கள் பொருள்கண்மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவி ஆக்கம் என்னும் பெயர் பெற்றது என்றுமாம்: 'ஒருவன்மேல் ஆமாறு இது; ஒருத்திமேல் ஆமாறு இது; பலர்மேல் ஆமாறு இது; ஒன்றன்மேல் ஆமாறு இது; பலவற்றின்மேல் ஆமாறு இது; வழு ஆமாறு இது; வழு அமையுமாறு இது,' எனப் பொருள் கண்மேல் ஆமாறு உணர்த்தினமையின்.

இனி இத்தலைச் சூத்திரம் சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துகின்றது.

(இதன் பொருள்:) மக்கட்சுட்டே - மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளை, உயர்திணை என்மனார் - உயர்திணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; அவர் அல பிறவே - அம்மக்

1. மரபியல், சூ. 89.

கள் அல்லாத பிற பொருளை, அஃறிணை என்மனார் - அஃறிணை என்று கூறுவர் தொல்லாசிரியர்; ஆயிரு திணையின் இசைக்கும் மன்சொல்லே - அவ்விரு திணைப் பொருள்களையும் உணர்த்தும் சொற்கள் (என்றவாறு).

ஏகாரம் மூன்றும் ஈற்றசை. இனைத்தென அறிந்த உம்மை, விகாரத்தால் தொக்கது.

'இசைப்பு இசையாகும்,'[1] என்றதனால், இசைப்பு ஒலிக்கும் என்னும் பொருள் தந்தது எனின், சொல் லுக்குப் பொருள் உணர்த்தும்வழி அல்லது ஒலித்தல் கூடாமையின், 'உணர்த்தும்,' என்னும் தொழிலினை 'இசைக்கும்,' என்னும் தொழிலினால் கூறினார். இதுவும் ஓர் மரபு வழுவமைதி. பொருளை உணர்த்துவான் ஒரு சாத்தனே எனினும், அவற்கு அது கருவியாக அல்லது உணர்த்தல் ஆகாமையின், அக்கருவிமேல் தொழில் ஏற்றிச் 'சொல் உணர்த்தும்,' என்று கருவிக்கருத்தா வாகக் கூறினார். இவ்வாசிரியர் எவ்விடத்தும் சொல்லைக் கருவிக்கருத்தாவாகக் கூறுமாறு மேலேகாண்க. அஃது,

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.'[2]

என்றாற்போல்வது.*

இச்சூத்திரத்தால் 'பொருள் இரண்டு; சொல் இரண்டு,' என வரையறுத்தார்.

'உயர்திணை' என்பது, 'உயர்ந்த ஒழுக்கம்' என இறந்த கால வினைத்தொகை. அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்தி நின்றது. இதனைப் பண்புத் தொகை என்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை ? இது காலம் தோன்றி நிற்றலின்.

'மக்கட்சுட்டு' என்பது, 'மக்களாகிய சுட்டு' என இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. சுட்டு - நன்கு மதிப்பு. அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்தி

பி-ம்: * போல்வன

1. உரியியல், சூ. 12. 2. பெயரியல், சூ. 1.

நின்றது. சேனவரையர் இதனைப் பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்றாராலோ எனின், இரு பெயரொட்டு ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு உணராமல் கூறினமையின், அது பொருந்தாது. 'என்னை வேறுபாடு?' எனில், ஈண்டு ஆகு பெயராய் நின்ற நன்கு மதிக்கும் பொருளும் மக்களையே உணர்த்தி நிற்கும். அன்மொழித் தொகை அவ்வாறன்றி, 'வெள்ளாடை' என்றால் வெண்மையும் ஆடையும் அன்றி உடுத்தாளையே உணர்த்தி நிற்கும். இது தம்முள் வேற்றுமை.

''அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்'[1]

என்புழி, 'வெள்ளாடை' என்புழித் தொக்க இருமொழி மேலும் நில்லாது 'உடுத்தாள்' என்னும் அன்மொழி மேல் நின்றது,' என்று உதாரணம் காட்டினர் சேன வரையரும் என்று உணர்க.

அஃறிணை, 'அவ்வொழுக்கம் அல்லவாகிய ஒழுக்கம்' எனப் பண்புத்தொகை. அது பொருளை உணர்த்தி நின்றது ஆகுபெயராய்.

'என்மனர்' என்பது, ஓர் ஆர் ஈற்று நிகழ்கால முற்று வினைத் திரிசொல். 'என்றிசினோர்' என்பது, அவ்வாறு வந்த இறந்த கால முற்று வினைத் திரிசொல்.

'மக்க டாமே ஆறறி வுயிரே.'[2]

என்று மக்கள் உயர்ந்தமை மரபியலில் கூறுப. 'அவ ரல' என்னது, 'பிற' என்றார், அஃறிணை உயிர் உள்ளன வும் இல்லனவும் ஆகிய இரு கூறும் அடங்குதற்கு.

'மறங்கடிந்த அருங்கற்பின்'[3] எனவும், 'சில்சொல் லிற் பல்கூந்தல்'[4] எனவும் பிறாண்டும் சான்றோர் செய்யு ளில் 'இன்' சாரியை உருபு பற்றாது நிற்றல் நோக்கி

---

1. எச்சவியல், சூ. 23. 2. மரபியல், சூ. 33.
3. புறம். 166 : 13. 4. புறம். 166 : 16.

உரையாசிரியரும் 'ஆயிரு திணையினையும்' என இரண்டாம் உருபு விரித்துப் பொருள் கூறினர்.

இனிச் சேனுவரையர், 'மக்கட்சுட்டு' என்பதற்கு 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும்? அது மக்கட் சுட்டு,' என்றும், 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' என்பதற்குச் 'சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாதலின், 'ஆயிரு திணையின்கண்' என ஏழாவது விரிக்க,' என்றும் பொருள் கூறினரால் எனின், முன்னர் 'மக்கள் என்று கருதப்படும் பொருளை உயர்திணை என்ப,' என்று அவர் கண்ணழிவு கூறியது, ஒரு பொருளிடத்து நின்ற மக்கள் தன்மையாலே ஒருவற்கு அப் பொருள் மக்களென்று கருதப்பட்டதென்று பொருள் தந்து நின்றது; பின்னர், 'மக்களாகிய சுட்டு யாதன் கண் நிகழும்?' என்றது நோக்குகின்றவர்க்கு 'மக்களாகிய கருத்து யாதொரு பொருளிடத்துத் தோன்றும்?' என்று பொருள் தந்தால், 'வெள்ளாடை' என்னும் பண்புத்தொகை போல அக்கருத்து மக்கள் ஆகாமையின், பண்புத்தொகை அன்றும்; 'அது மக்கட்சுட்டு' என்றதற்கு 'அப்பொருள் மக்கட்சுட்டு' என்று அவர் கூறிய பொருளானும் மக்களையே தோற்றுவித்து நிற்றலின், அன்மொழித்தொகை அன்றும்; அன்றியும், ஆசிரியர் ஈண்டு ஒரு பொருள் நின்று தன்னை ஒருவற்கு உணர்த்து மாறும் ஒருவன் அதனை உணருமாறும் ஆராய்கின்றார் அல்லர்; 'உயர்ந்த ஒழுக்கம்' என்று முதனூலாசிரியர் கூறிய குறி உலகத்தார்க்கு விளங்கப் பொருள் கூறக் கருதி, அதன் பயன் எய்துவிப்பத் தாமும் 'மக்களாகிய நன்கு மதிக்கும் பொருள்' என்று அச்சொற்குப் பொருள் கூறினர் என்று உணர்க. அவர் கூறிய உயர்ச்சி தோன்றத் தாமும் 'நன்கு மதிப்பு' என்று பொருள் கூறினர், தாமும் 'உயர்திணை' என்றே ஆளுதல் பற்றி.

இனி, 'இசைப்பு இசையாகும்'[1] என்பதனல், திணை இடமாகச் சொற்கள் நின்று பிறவற்றை இசைத்தல் வேண்டும். அதனன் அது பொருந்தாது. அன்றியும், ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத்தாயின், 'ஆடூஉ அறிசொல்'[2] முதலிய சூத்திரங்கள் எல்லாம் சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாக 'ஆடூஉவின்கண் நிகழும் சொல், மகடூஉவின்கண் நிகழும் சொல்' என்றே சூத்திரம் செய்வர்; அங்ஙனம் செய்யாது, 'ஒருவன் ஆண்மகனை அறியும் சொல்லும் பெண்டாட்டியை அறியும் சொல்லும்' என 'அறியும்' என்னும் பெயரெச்சம் 'சொல்' என்னும் கருவிப் பொருளைக்கொண்டு முடியச் சூத்திரம் செய்தலின், ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத்து அன்மை அறிக.

'மன்' என்பது, வினைபற்றிய அசை நிலை இடைச்சொல்லாய் நின்றது.

2] உயர்திணைப் பாற்பகுப்பு [உ

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

இஃது உயர்திணைப் பாலைப் பகுக்கின்றது.

(இ-ள்.) ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல் - ஒருவன் ஆண் மகனை அறியும் சொல்லும் பெண்டாட்டியை அறியும் சொல்லும், பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி - பல்லோரை அறியும் சொல்லொடு சிவணுகையினலே, அம்முப் பாற்சொல் - அம்மூன்று கூருகிய சொல்லும், உயர்திணைய - உயர்திணையினை உடையவாம் (எ-று.)

ஆண் பன்மையும் பெண் பன்மையும் அவ்விருவரும் தொக்க பன்மையும் அன்றிப் பன்மைப்பொருள் வேறு இன்மையின், ஆடூஉவும் மகடூஉவும் பல்லோர் அறியும் சொல்லொடு சிவணுகையினலே மூன்று கூறு

1. உரியியல், சூ. 12. 2. கிளவியாக்கம், சூ. 2.

ஆயிற்று என்றார். எனவே, அல்லுழி இரண்டேயாம் என்பது கருத்து.

செய்தெனெச்சம் காரண காரியப் பொருட்டாய் நின்றது. 'உயர்திணைய' என்ற ஆறும் வேற்றுமையாய் நிற்கும் சொல், ஈண்டுப் பெயராகாது வினைக்குறிப் பாய் நின்றது.

இனி, 'சிவண' எனத் திரிப்பாரும் உளர்.

இவ்வாறு அன்றிச் 'சிவணி உயர்திணையவாம்,' என்பார்க்கு முப்பாற்சொற்கும் பயனிலையாய் நின்ற 'உயர்திணையவாம்' என்னும் வினைக்குறிப்பு ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல் என்னும் இரண்டன் வினையாகிய 'சிவணி' என்னும் செய்தெனெச்சத்திற்கு வினைமுதல் வினை ஆயிற்று, உயர்திணையவாகல் ஆடூஉ அறிசொற்கும் மகடூஉ அறிசொற்கும் எய்துதலின். 'ஆடூஉ, மகடூஉ' என்பன பண்டையார் வழக்கு. அறி சொல், அதற்குக் கருவியாகிய சொல்.

3] அஃறிணைப் பாற்பகுப்பு [௩

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

இஃது, அஃறிணைப்பாலைப் பகுக்கின்றது.

(இ-ள்.) ஒன்று அறி சொல்லே பல அறிசொல் என்று - ஒருவன் ஒன்றனை அறியும் சொல்லும் பலவற்றை அறியும் சொல்லும் என்று சொல்லப்பட்ட, ஆயிரு பால் சொல் அஃறிணைய - அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையினை உடையவாம் (எ-று.)

4] பேடியும் தெய்வமும் திணை பால்களுள் அமையுமாறு [௪

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியுமந் தந்தமக் கிலவே;
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

இஃது ஐயம் அறுக்கின்றது, மேல் தொகையுள் ஒழிந்த தெய்வத்தையும் வகையுள் ஒழிந்த பேடியையும் இவ்வாறு ஆம் என்றலின்.

(இ-ள்.) உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய - ஒருவன் உயர்திணை இடத்துப் பெண்பாற்கு உரிய அமைதித் தன்மையைக் கருதுதற்குக் காரணமான, ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும் - ஆண்பாற்கு உரிய ஆளும் தன்மை திரிந்த பெயர்ப்பொருளும், தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவியும் - தெய்வத் தன்மையைக் குறித்த பெயர்ப் பொருளும், இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே - இவையெனத் தம் பெயர்ப் பொருளினை வேறு அறிய நிற்கும் ஈற்று எழுத்தினையுடைய சொற்களைத் தமக்கு உடைய அல்ல; உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும் - உயர்திணை இடத்திற்கு உரிய பாலாய் வேறுபட்டு இசைக்கும் (எ-று.)

'அலி அன்று,' என்றற்குப் 'பெண்மை சுட்டிய' என்றார். 'பெண் அன்று,' என்றற்கு 'ஆண்மை திரிந்த' என்றார். இரண்டு இடத்துப் பெயர்நிலைக்கிளவியும் சொல்லினால் பொருள் அறியப்படுதலின் ஆகுபெயராய் அப்பொருள் உணர்த்தி நின்றன.

'சுட்டிய' என்பது, 'நிலம் பூத்த மரம்'[1] என்பது போலும் பெயரெச்சம். அது, 'பெயர்நிலைக்கிளவி' என்பதனோடு முடியும். 'ஆண்மை திரிந்த' என்பது, இடைநிலை. இதன் பொருள், ஆண்பாற்கு உரிய ஆளும் தன்மை முற்பிறப்பில் தான் செய்த தீவினையால் தன்னிடத்து இல்லையான பெயர்ப்பொருள் என்க. என்றது, 'நல்வினை செய்யாத பொருள்' என்றவாறு. இதற்குப் பெண்மை திரிதலும் உண்டேனும், ஆண்மை திரிதல் பெரும்பான்மை.

பால் பிரிந்து இசைத்தலாவது, தாம் உயர்திணைப் பொருளாய் அவற்றின் ஈற்றினால் இசைத்தலாம்.

பேடியைப் பாலுள்ளும் தெய்வத்தைத் திணையுள்ளும் அடக்கினார்.

1. கலி. 27 : 9.

(உ-ம்.) பேடி வந்தாள்.
பேடியர் வந்தார்.
தேவன் வந்தான்.
தேவி வந்தாள்.
தேவர் வந்தார்.

என வரும்.

பேடியர், பேடிமார், பேடிகள் என்பனவும் அடங்குதற்குப் 'பேடி' என்னாது, 'ஆண்மை திரிந்த' என்றார்.

'பெண்அவாய் ஆண்இழந்த பேடி அணியாளோ?' [1]

என்பதனால் பெண் அவாய் நிற்றல் கொள்க.

'அந்தம் தமக்கு இல,' என்றதனான், நிரயப்பாலர், அலி, மகண்மா முதலியவற்றையும் இம்மூவீற்றின் ஏற்பதனால் முடிக்க.

(உ-ம்.) நரகன் வந்தான்.
நரகி வந்தாள்.
நரகர் வந்தார்.
அலி வந்தான்.
அலியர் வந்தார்.
மகண்மா வந்தாள்.

என வரும்.

5] ஆடூஉ அறிசொல் [ரு

னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.

இஃது, ஆடூஉ அறிசொல் உணர்த்துகின்றது.

(இ-ள்.) னஃகான் ஒற்று - னஃகானாகிய ஒற்றினை ஈறாக உடைய சொல், ஆடூஉ அறிசொல் - ஒருவன் ஆண் மகனை அறியும் சொல்லாம் (எ-று.)

ஏகாரம், தேற்றேகாரம்.

(உ-ம்.) உண்டனன், உண்டான்.
உண்ணாநின்றனன், உண்ணாநின்றான்.
உண்பன், உண்பான்.
கரியன், கரியான்.

என வரும்.

1. நாலடி. 251.

'உண்டனன், உண்டான்' என்புழி னகரம் ஒழிந்த மூவெழுத்துக்களும் ஏனைப்பாற்கும் வருதலின், னகரத்தின் சிறப்பு நோக்கி, 'னஃகான் ஒற்றே' என்றார். 'அன், ஆன்' என்னும் இரண்டனையும் தொகுத்து 'னஃகான்' என்றார். மேலனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

6] மகடூஉ அறிசொல் [சூ

ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்.

இது, மகடூஉ அறிசொல் உணர்த்துகின்றது.

(இ-ள்.) ளஃகான் ஒற்று - ளஃகானாகிய ஒற்றினை ஈறாக உடைய சொல், மகடூஉ அறிசொல் - ஒருவன் மகடூஉவினை அறியும் சொல்லாம் (எ-று.)

(உ-ம்.) உண்டனள், உண்டாள்.
உண்ணாநின்றனள், உண்ணாநின்றாள்.
உண்பள், உண்பாள்.
கரியள், கரியாள்.

என வரும்.

7] பலர் அறிசொல் [எ

ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட* மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

இது, பலர் அறிசொல் உணர்த்துகின்றது.

(இ-ள்.) ரஃகான் ஒற்றும் - ரஃகானாகிய ஒற்றினை ஈறாக உடைய சொல்லும், பகர இறுதியும் - பகரமாகிய இறுதியை உடைய சொல்லும், மாரைக்கிளவி உளப்பட மூன்றும் - மார் என்னும் இடைச்சொல்லை ஈறாக உடைய சொல் உட்பட மூன்றும், நேரத்தோன்றும் பலர் அறிசொல்லே - நிரம்பத் தோன்றும் பலரை அறியும் சொல்லாம் (எ-று.)

'அகரத்தோடு புணர்ந்த பகரம் அல்லது உயர்திணைப் பன்மையை உணர்த்தாது,' என்றற்கு ஈண்டுப் 'பகரம்' என்றும், மேல் 'அ ஆ வ'[1] என்றும், பகர

பி-ம்: * உட்பட 1. கிளவியாக்கம், சூ. 9.

அகர உயிர்மெய் ஈறாய் நிற்றல் உடம்பொடு புணர்த்துக் கூறினாராயிற்று.

(உ-ம்.) உண்டனர், உண்டார்.
உண்ணாநின்றனர், உண்ணாநின்றார்.
உண்பர், உண்பார்.
கரியர், கரியார்.
கூறுப, வருப.
'ஆர்த்தார் கொண்மார் வந்தார்.'

என வரும்.

'மார் ஈறு, ஆர் ஈறு என அடங்கும்,' எனின், மகர ஒற்றுக் காலம் காட்டும் எழுத்தாய் முதல் நிலைக்கு ஏற்ற வாற்றான் 'உண்பார், வருவார்' என்றாற்போல வேறுபட்டு வரல் வேண்டும்; அங்ஙனம் வேறுபடாமையானும், வினைகொண்டு முடிதலானும், மார் ஈறு ஆர் ஈற்றின் அடங்காதாயிற்று. ஏனைப் பன்மை ஈறுகள் திரிபு உடைமையின், இவற்றை 'நேரத் தோன்றும்,' என்றார். 'பகர இறுதி' என்றது,

'மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின்
மொழியா ததனை முட்டின்று முடித்தல்'[1]

என்பதற்கு இனம்.

8] ஒன்றறி சொல் [அ

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி ஆகும்.

இஃது, அஃறிணைக்கண் ஒன்றறிசொல் உணர்த்துகின்றது.

(இ-ள்.) ஒன்று அறி கிளவி - ஒருவன் ஒன்றனை அறியும் சொல், தறட ஊர்ந்த குன்றியலுகரத்து இறுதி ஆகும் - தறட என்னும் ஒற்றுக்களை ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தினை ஈறாக உடைய சொல்லாம் (எ-று.)

1. மரபியல், சூ. 110.

(உ-ம்.) வந்தது, வாராநின்றது, வருவது, கரியது, கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று, குண்டு கட்டு*, குறுந்தாட்டு.

என வரும்.

9] பல அறி சொல் [கூ

அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

இஃது, அஃறிணைக்கண் பல அறிசொல் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பல அறிசொல் - ஒருவன் பலவற்றை அறியும் சொல்லாவன, அஆவ என வரூஉம் இறுதி அப்பால் மூன்று - அ ஆ வ என வரூஉம் இறுதியை உடைய அக்கூற்று மூன்று சொல்லாம் (எ-று.)

(உ-ம்.) அ-உண்டன, உண்ட.
உண்ணாநின்றன, உண்ணாநின்ற.
உண்பன, உண்ப.
கரியன, கரிய, கோட்ட.

என வரும்.

'உண்ப என்பது பலர் அறிசொல் அன்றோ?' எனின், 'தகைத்தன, தகையாநின்றன, தகைப்பன' என 'அன்' பெற்றும், 'தகைத்த, தகையாநின்ற, தகைப்ப' என 'அன்' பெறாதும் நின்றாற்போலவும், 'கானம் தகைப்ப செலவு'[1] என்றாற்போலவும் 'உண்ப' என்பதும் 'அன்' பெறாது நின்ற அகர ஈற்றுப் பல அறி சொல்; பகர ஈற்றுப் பலர் அறிசொல் அன்று.

ஆ - உண்ணா, தின்னா
எனவும்,

வ - உண்குவ, தின்குவ
எனவும் வரும்.

'இவை 'அன்' பெறாது எதிர்காலத்து வரும் வகர ஒற்று ஊர்ந்து நின்ற அகர ஈறு ஆகாவோ?' எனின்,

பி-ம்: * குன்று கட்டு 1. கலி. 3 : 22.

Acc-no. 673
Dt 21.11.77

குகரம் பெறுதலின் வகர ஈறேயாம். 'வருவ, சொல்வ' எனக் குகரம் பெறாதவழி அகர ஈறு ஆதலும், பெற்ற வழி வகர ஈறு ஆதலும் உடையவாம்.

10] வினையில் இருதிணை ஐம்பாலை உணர்த்தும் ஈற்றெழுத்து [௧०

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

இது, மேல் பாலுணர்த்திய எழுத்து இனைத்தென்றும், அவை வினைக்கண் நின்று உணர்த்துமென்றும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) இரு திணை மருங்கின் ஐம்பால் அறிய - உயர் திணை அஃறிணை என்னும் இரண்டு திணைக்கண்ணும் உளவாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலினையும் அறிய, ஈற்று நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும் - அவ்வச் சொல்லின் இறுதிக்கண் நின்று ஒலிக்கும் பதினோரிடைச்சொற்களும், தோற்றந்தாமே வினையொடு வருமே - பால் உணர்த்துதற்குப் புலப்படுதற்கண் வினைச்சொற்கு ஈறாய்ப் புலப்படும் (எ-று.)

பதினோரிடைச்சொல்லையும் 'எழுத்து' என்றார், எழுத்தினால் சொல் ஆதல் பற்றி. இது கருத்து ஆதல், 'மாரைக் கிளவி'[1] என்றதனால் பெற்றாம். 'ஈற்றின் நின்று இசைக்கும்' என்றது, னகரம் முதலிய இரண்டற்கும் ஞாபகம்; அல்லனவற்றிற்கு அனுவாதம். அவை னகாரமும் ளகாரமும் ரகாரமும் பகாரமும் மாரும் துவ்வும் றுவ்வும் டுவ்வும் அவ்வும் ஆவும் வவ்வும். இது, விரித்தது தொகுத்தது. வினையியலுள் வினைக்கு ஈறு பற்றி ஓதிப் பெயரியலுள் பெயர்கள்தம்மை எடுத்து ஓதினமையானும், இப்பதினோரீறும் பெயர்க்கண் திரிபு உடையவாய் வருதலானும், பெயர்க்கு இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க.

---

1. கிளவியாக்கம், சூ. 7.

11] ஒரு பாற்சொல் ஏனைப்பாற்சொல்லுடன் மயங்காமை [கக

வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா; தம்மர பினவே.

இது, 'வழுவற்க,' என்று காத்தலும், 'வழுவி அமைக,' என்று காத்தலுமாகிய இரண்டனுள், 'வழு வற்க,' என்று காக்கின்றது.

(இ-ள்.) வினையின் தோன்றும் பால் அறி கிளவியும்-வினைச்சொல்லான் விளங்கும் பால் அறியப்படும் பொருளும், பெயரின் தோன்றும் பால் அறி கிளவியும்-பெயர்ச்சொல்லான் விளங்கும் பால் அறியப்படும் பொருளும், மயங்கல் கூடா-ஒன்றோடு ஒன்றை மயங்கச் சொல்லுதல் பொருந்தா; தம் மர பின - தத்தம் இலக்கணத்தாலே சொல்லுதல் உடைய (எ-று.)

'சொல்' என்றார், அதனான் உணரும் பொருளை. பால் மயங்காது எனவே, திணை மயங்காமையும் கூறிற்றாம்.

(உ-ம்.) உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை—இவை வினை நின்று பெயர்மேல் தத்தம் மரபினான் வந்தன.

அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன— இவை பெயர் நின்று வினைமேல் தத்தம் மரபினான் வந்தன.

'வினைச்சொல்லான் விளங்கும்,' எனவே, அதனிலுள்ள காலமும் இடனும் மயங்காமையும் பெற்றாம். அவை, 'உண்டேன் நெருநல், உண்ணா நின்றேன் இன்று, உண்கு நாளை; யான் வந்தேன், நீ வந்தாய், யாம் வந்தேம், நீயிர் வந்தீர்,' என வரும்.

இனி, 'உய்த்துக்கொண்டு உணர்த்தல்'[1] என்பதனால், 'தம்மரபின' என்பதனைப் பிரித்து வேறோர் தொட

1. மரபியல், சூ. 110.

ராக்கி, மரபு மயங்காமையும் கொள்க. அவை, யானை மேய்ப்பானைப் பாகன் என்றலும், யாடு மேய்ப்பானை இடையன் என்றலுமாம்.

இச்சூத்திரத்தால், திணையும் பாலும் இடமும் காலமும் மரபும் வழூவாமல் காத்தார்.

இனி, 'மயங்கல் கூடா,' என்பதனானே 'மயங்குதலும் உண்டு,' என்பது பெற்றாம். அம்மயக்கம் எழுவகைய என்பது உரையில் கோடும். அவை, திணை மயக்கமும், பால் மயக்கமும், கால மயக்கமும், இடமயக்கமும், செப்பு மயக்கமும், வினா மயக்கமும், மரபு மயக்கமும் என ஏழாம். இவை மயங்கும் எனவே, வழூவாதல் பெற்றாம்.

உண்டான் அது, உண்டான் அவை, உண்டாள் அது, உண்டாள் அவை, உண்டார் அது, உண்டார் அவை, உண்டது அவன், உண்டன அவன், உண்டது அவள், உண்டன அவள், உண்டது அவர், உண்டன அவர்—இவை திணை வழூ.

உண்டான் அவள், உண்டான் அவர், உண்டாள் அவன், உண்டாள் அவர், உண்டார் அவன், உண்டார் அவள், உண்டது அவை, உண்டன அது—இவை பால் வழூ. இவை வினை நின்று பெயர்மேல் வழீஇயின.

அவன் வந்தது, அவன் வந்தன, அவள் வந்தது, அவள் வந்தன, அவர் வந்தது, அவர் வந்தன, அது வந்தான், அவை வந்தான், அது வந்தாள், அவை வந்தாள், அது வந்தார், அவை வந்தார்—இவை திணை வழூ.

அவன் வந்தாள், அவன் வந்தார், அவள் வந்தான், அவள் வந்தார், அவர் வந்தான், அவர் வந்தாள், அது வந்தன, அவை வந்தது—இவை பால் வழூ. இவை பெயர் நின்று வினைமேல் வழீஇயின.

செத்தானைச் 'சாம்,' என்றல் கால வழூ.

யான் உண்டான், யான் உண்டாய் என்றாற்போல்வன இட வழூ.

இவை பெயர் வினைகளைப்பற்றி வரும் விகற்பமும் கொள்க.

யானை மேய்ப்பானை இடையன் என்றலும், யாடு மேய்ப்பானைப் பாகன் என்றலும் மரபு வழு.

செப்பும் வினவும் வழுவாமையும், வழுவுமாறும் மேலே கூறுப. வினை இயலுள் கடைக்கண் கால வழுவமைதியும், மரபியலுள் மரபு வழுவமைதியும் கூறி, ஏனைய வழீஇ அமையுமாறு இவ்வோத்தினுள் கூறுப.

12] ஆண்மை திரிந்த பெயர் [கஉ

ஆடூஉ அறிசொல்லோடு பொருந்தாமை

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற் காகிடன் இன்றே.

இதுவும் அது.

(இ-ள்.) ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி - 'உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்'[1] என மேற்கூறிய ஆண்மை திரிந்த பெயர்ச்சொல், ஆண்மை அறி சொற்கு ஆகு இடன் இன்று - ஆடூஉ அறி சொல்லோடு பொருந்தும் இடன் உடைத்தன்று (எ-று.)

இது, 'வழுவற்க,' என்கின்றது ஆகலின், ஈண்டுப் போதந்து வைத்தார்.

13] செப்பும் வினவும் வழாமல் காத்தல் [கங

செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்.

இதுவும் அது.

(இ-ள்.) செப்பும் வினவும் - வினய பொருளை அறிவுறுப்பதனையும் அறியலுறவு வெளிப்படுப்பதனையும், வழாஅல் ஓம்பல் - வழுவாமல் போற்றுக (எ-று.)

'செவ்வன் இறை'யும், 'இறை பயப்பது'வும் எனச் செப்பு இரு வகைத்து. அவற்றுள் இறை பயப்பன தாம், வினவெதிர் வினவலும், ஏவுதலும், மறுத்தலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், உடம்படுதலும், சொல் தொகுத்து இறுத்தலும், சொல்லாது

1, கிளவியாக்கம், சூ. 4.

இறுத்தலும் என எண்வகை. 'உயிர் எத்தன்மைத்து?' என்று வினைய வழி, 'உணர்தல் தன்மைத்து,' என்றல் **செவ்வன் இறை**யாம். 'உண்டியோ?' என்று வினைய வழி, 'வயிறு குத்திற்று,' என்றலும், உற்றது உரைத்தலாய் 'உண்ணேன்,' என்பது பயத்தலின் **இறை பயப்பது**ஆம். 'கடம்பூர்க்கு வழி யாதோ?' எனில், 'இடம் பூணி என் ஆவின் கன்று,' என்றல் **செப்பு வழு**வாம்.

அறியான் வினவும், ஐய வினவும், அறிபொருள் வினவும் என வினா மூவகைத்து. 'உயிர் எத்தன்மைத்து?' என்றல் **அறியான் வினா**. ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் வினவப்படாமையின், பொது வகையான் உணர்ந்து, சிறப்பு வகையான் அறியாமையின் வினவினான் என்று உணர்க. 'குற்றியோ மகனோ தோன்றுகின்ற உரு!' என்பது **ஐய வினா**. அறியப்பட்ட பொருளை வேறு அறிதலும் அறிவுறுத்தலும் முதலிய பயன் நோக்கி வினாதல் **அறி பொருள் வினா**. இவ்வறி பொருள் வினவின்கண்ணே அறிவு ஒப்புக் காண்டலும், அவன் அறிவு தான் காண்டலும், மெய் அவற்குக் காட்டலும் அடங்கின.

ஒரு விரல் காட்டி, 'நெடிதோ, குறிதோ?' என்றலும், 'கறக்கின்ற எருமை சினையோ, பாலோ?' என்றலும், பிறவும் **வினா வழு**வாம்.

செப்பு ஆசிரியன்கண்ணது ஆகலானும், வினா இன்றியும் செப்பு நிகழ்தலானும் செப்பு முற்கூறினர்.

செவ்வன் இறையும், அறியான் வினவும், ஐயவினாவும் வழாநிலை ஆதலின், 'வழாஅல் ஓம்பல்,' என்பதனால் கொள்க. ஏனைய, வழுவமைப்புழிக் காண்க.

14] வினாச் செப்பாகவும் வருதல் [கச

வினாவும் செப்பே வினாவெதிர் வரினே.

இது, வழுவமைக்கின்றது.

(இ-ள்.) வினா எதிர் வரின் - வினைப்பொருளை ஒருவாற்றான் அறிவுறுத்து வினாவிற்கு மறு மொழியாய் வரின், வினாவும் செப்பு - வினாத்தானும் செப்பாம் (எ-று.)

'சாத்தா, உண்டியோ?' என்று வினாய வழி, 'உண்ணேனோ?' என வரும் வினா, வினா வாய்பாட்டால் வந்ததேனும், 'உண்பேன்,' என்னும் பொருள்பட வருதலின், செப்பு ஆயிற்று. இது, வினாவெதிர் வினாதல்.

15] செப்பு வழுவமைதி [கரு

செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

இதுவும் அது.

(இ-ள்.) செப்பே வழீஇயினும் வரைநிலை இன்று - செவ்வன் இறை ஆகாது செப்பு வழுவி வரினும் கடியப்படாது, அப்பொருள் புணர்ந்த கிளவியான - ஒருவாற்றான் அவ்வினாய பொருட்கு இயைவுபட்ட கிளவியாதற்கண் (எ-று.)

'சாத்தா, உண்டியோ?' என்று வினாயவழி, 'வயிறு குத்திற்று,' என உற்றது உரைத்தலும், 'வயிறு குத்துகின்றது,' என மறுத்தலும், 'நீ உண்,' என ஏவுதலும், 'வயிறு குத்தும்,' என உறுவது கூறலும், 'பசித்தேன்,' என்றும், 'பொழுது ஆயிற்று,' என்றும் உடம்படுதலும் ஒருவாற்றான் வினாய பொருளை அறிவுறுத்தன. 'குமரி ஆடிப் போந்தேன், ஒரு பிடி சோறு தம்மின்,' என்பது, சொல்லாது இறுத்தல். சொல் தொகுத்து இறுத்தல், 'எப்பொரு ளாயினும்'[1] என்புழியும், 'அப்பொருள்'[2] என்புழியும் கூறுப.

'செப்பே' என நின்ற ஏகாரம், பிரிநிலை ஏகாரம்; வினா நிற்பச் செப்பை வாங்கிக்கொண்டு அமைத்தலின். உம்மை, சிறப்பும்மை.

செப்பு வழுவினும் அமைக. வினா வழீஇயின இடத்து அமையாதாம்.

1. கிளவியாக்கம், சூ. 35. 2. கிளவியாக்கம், சூ. 36.

16] சேப்புக்கும் வினுவுக்கும் மரபு [கசு

செப்பினும் வினுவினும் சினைமுதல் கிளவிக்
கப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

இது, செப்பிற்கும் வினுவிற்கும் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) செப்பினும் வினுவினும் - செப்பின்கண்ணும் வினுவின்கண்ணும், சினை முதல் கிளவிக்கு - சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும், உறழ் துணைப் பொருளே - ஒப்புமை கருதாது மாறுபடக் கூறும் பொருளும் ஒப்புமை கூறப்படும் பொருளும், அப்பொருள் ஆகும் - அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளே யாம் (எ-று.)

(உ-ம்.) இவள் கண்ணின் இவள் கண் பெரிய.
நும் அரசனின் எம் அரசன் முறை செய்யும்.
இவள் கண்ணின் இவள் கண் பெரியவோ ?
எம் அரசனின் நும் அரசன் முறை செய்யுமோ ?
இவள் கண் ஒக்கும் இவள் கண்.
எம் அரசனை ஒக்கும் நும் அரசன்.
இவள் கண் ஒக்குமோ இவள் கண் ?
எம் அரசனை ஒக்குமோ நும் அரசன் ?

என வரும்.

'**தன்னினம் முடித்தல்**' என்பதனான், எண்ணுங்காலும், 'துகிரும், முத்தும், பொன்னும்' என இனம் ஒத்தன எண்ணுக; 'முத்தும், கருவிருந்தையும், கானங்கோழியும், பொன்னும்' என்று எண்ணற்க.

17] மரபு வழு அமையுமாறு [கஎ

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே.

இது, மரபு வழு அமையுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும் - ஒரு பொருட்கு உரிய சொல்லால் பட்டாங்கே சொல்லுதல் நீர்மை அன்று என்று அது களைந்து அதற்குத் தக்கதோர் வாய்பாட்டால் கூறுதலையும் ஒரு காரணமின்றி வழங்கற்பாடே பற்றி

வருவதனையும் பற்றி நடக்கும், பகுதிக்கிளவி - இலக்கணத்தில் பக்கச்சொல், வரை நிலை இல - கடியப்படா (எ-று.)

செத்தாரைத் 'துஞ்சினர்' என்றலும், ஓலையைத் 'திருமுகம்' என்றலும், சுடுகாட்டை 'நன்காடு' என்றலும், கெட்டதனைப் 'பெருகிற்று' என்றலும் போல்வன தகுதி..

பண்பு குறியாது சாதிப்பெயராய் 'வெள்யாடு, வெண்களமர், கருங்களமர்' என வருவனவும், குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் 'சிறிது' என்னாது 'சில' என்றலும், அடுப்பின் கீழ்ப்புடையை 'மீயடுப்பு' என்றலும் போல்வன வழக்காம்.

18] செய்யுட்குரிய மரபு வழுவமைதி [கஅ

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல; செய்யு ளாறே.

இது, செய்யுட்கு மரபு வழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்.) இனச்சுட்டு இல்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை - இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப் படுதல் இல்லாத பண்பு அடுத்து வழங்கப்படும் பெயரை ஒரு பொருட்குக் கொடுத்தல், வழக்காறு அல்ல செய்யுளாறு - வழக்கு நெறி அல்ல செய்யுள் நெறி (எ-று.)

'செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்
வெண்திங்களுள் வெயில்வேண்டினும்'[1]

என இவை கருஞாயிறும் கருந்திங்களுமாகிய இனம் இன்மையின் விசேடிக்கப்படாவாயினும், செய்யுட்கு அணியாய் நிற்றலின் அமைத்தார். எனவே, வழக்கின்கண் பண்புகொள் பெயர் இனம் குறித்து வருதல் மரபு என்பதூஉம் செய்யுட்கண் வழீஇ அமைதல் மரபு என்பதூஉம் கூறியவாறு ஆயிற்று.

பண்பு அடாது, 'வடவேங்கடம் தென்குமரி,'[2] முட்டாழை, கோட்சுறு எனத் திசையும் உறுப்பும் தொழி

1. புறம். 38 : 7,8. 2. தொல். எழுத்து. பாயிரம்.

உம் முதலிய அடை அடுத்து இனம் சுட்டாது வருவன 'ஒன்றேன முடித்த'லால்* செய்யுளாறு என அமைக்க.

19] இயற்கைப்பொருளில் மரபு வழாமை [கக

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

இஃது, இயற்கைப் பொருட்கண் மரபு வழுவாமை கூறுகின்றது.

(இ-ள்.) இயற்கைப் பொருளை - பொருட்குப்பின் தோன்றாது உடன் நிகழும் தன்மைத்தாய பொருளை அதன் இயல்பு கூறுங்கால், இற்று எனக் கிளத்தல் - ஆக்கமும் காரணமும் கொடாது 'இற்று' எனச் சொல்லுக (எ-று.)

(உ-ம்.) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்யது, வளி உளரும், உயிர் உணரும்.

என வரும்.

சேற்று நிலம் மிதித்து வன்னிலம் மிதித்தான், 'நிலம் வலிதாயிற்று,' என்றவழி, மெலிதாயது வலிதாய் வேறுபட்டது என ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின், இயற்கைப்பொருள் ஆக்கமொடு வந்தது அன்றாம்.

20] செயற்கைப் பொருளில் மரபு வழாமை [உ௦

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

இது, செயற்கைப் பொருள்மேல் மரபு வழுவாமை கூறுகின்றது.

(இ-ள்.) செயற்கைப் பொருளை - காரணத்தால் தன்மை திரிந்த பொருளைத் திரிபு கூறுங்கால், ஆக்கமொடு கூறல் - ஆக்கம் கொடுத்துச் சொல்லுக (எ-று.)

21] மேலதற்கு ஓர் புறனடை [உக

ஆக்கந் தானே காரண முதற்றே.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) ஆக்கந்தானே-செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறுங்கால் அவ்வாக்கச்சொற்றான், காரண முதற்று - காரணச் சொல்லை முன்னுக உடைத்து (எ-று.)

பி-ம்: * 'ஒன்றென முடித்தல்' என்பதனால்

(உ-ம்.) கடுக்கலந்த கைபிழி எண்ணெய் பெற்றமையான்
மயிர் நல்லவாயின.
எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்
தமையான் பைங்கூழ் நல்லவாயின.

என வரும்.

'மயிர் நல்ல; பைங்கூழ் நல்ல,' என ஆக்கம் இன்றி வந்தது, பொருட்குப்பின் தோன்றாது உடன் தோன்றி நிற்றலின் இயற்கைப் பொருளாம். அவ்வாறன்றி, முன் தீயவாய்ப் பின் நல்ல ஆயினவழி அத்தீமை காணுதான், 'மயிர் நல்ல,' எனினும் இழுக்கின்று, அச் செயற்கை உணராமல் கூறலின்.

22] எய்தியது விலக்கல் [உஉ

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) ஆக்கக் கிளவி - 'காரணமுதற்று,'[1] என்ற ஆக்கச் சொல், காரணம் இன்றியும் போக்கு இன்று என்ப - காரணம் இன்றி வரினும் குற்றம் இன்று என்று கூறுப, வழக்கினுள்ளே - வழக்கிடத்து (எ-று.)

(உ-ம்.) மயிர் நல்ல ஆயின.
பயிர் நல்ல ஆயின.

என வரும்.

எனவே, செய்யுட்குக் காரணம் பெற்றே வருமாயிற்று.

'வருமழைய வாய்க்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
கருமுருகன் சூடிய கண்ணி—திருநுதால்!
இன்றென் குரற்கூந்தற் பெய்தமையாற் பண்டைத்தன்
சாயல ஆயின தோள்.'

என இது காரணமும் ஆக்கமும் பெற்றது.

'குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து
குக்கில் புறத்த சிரல்வாய'[2]

என இதற்கு ஆக்கம் விகாரத்தால் தொக்கது என்று உணர்க.

---

1. கிளவி ஆக்கம், சூ. 21. 2. களவழி, 5.

'அரிய கானம் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் தோளே.'[1]

இதற்குக் 'கற்புக் காலத்தால் தோள் எளிய ஆயின,' என அக்காலம் காரணமாயிற்று.

உம்மை எதிர்மறை ஆகலான், காரணம் கொடுத்துச் சொல்லுதலே வலியுடைத்து.

23] ஐயப்பொருள்மேல் சொல் நிகழ்த்துமாறு [உ௩

பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயின் பன்மை கூறல்.

இது, மேல் 'இயற்கை, செயற்கை' எனப் பகுத்த பொருள்களுள் திணை உணர்ந்து பால் ஐயம் தோன்றிய வழி அவ்வையப்பொருள்மேல் சொல் நிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பால் மயக்குற்ற ஐயக் கிளவி - திணை துணிந்து பால் துணியாது நின்ற ஐயப்பொருளை, தான் அறி பொருள் வயின் பன்மை கூறல் - தான் அறிந்த உயர்திணைப் பொருளிடத்துப் பன்மையால் கூறுக (எ-று.)

ஐயப்பொருளாவது, சிறப்பியல்பால் தோன்றாது பொது இயல்பால் தோன்றிய பொருள்.

'ஆண்மகன்கொல்லோ பெண்டாட்டிகொல்லோ தோன்றுகின்றவர்!' என வரும்.

'திணைவயின்' என்னாது, 'தான் அறி பொருள் வயின்' எனப் பொதுப்படக் கூறிய அதனால், 'ஒருவன் கொல்லோ பலர்கொல்லோ இக்கறவை உய்த்த கள்வர்! ஒருத்திகொல்லோ பலர்கொல்லோ இக்குருக்கத்தி நீழல் வண்டல் அயர்ந்தார்!' எனத் திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மை ஒருமைப் பால் ஐயமும் கொள்க.

---

1. குறுந். 77.

அப்பொருட்கு இரு பாலுமாய் நிற்றல் இன்மையின், தான் ஒன்றுகிய பொருளைப் பன்மையாகக் கூறினும் அமைக என வழுவமைத்தார்.

24] இதுவும் அது. [உச

உருவென* மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை.

இதுவும் ஐயப்பொருள்மேல் சொல் நிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்.) இரு ஈற்றும் சுட்டுங்காலை-திணை ஐயத்துக்கண்ணும் அஃறிணைப்பால் ஐயத்துக்கண்ணும் கூறும் மரபு கருதுமிடத்து, உருவென மொழியினும் - திணை ஐயத்துக்கண் உருவெனச் சொல்லுமிடத்தும், அஃறிணைப் பிரிப்பினும் - ஒருமையும் பன்மையுமாகப் பிரிக்கப்படும் அஃறிணை இயற்பெயராகிய பொதுச்சொற்கண்ணும், உரித்து - ஐயத்தைப் புலப்படுத்தும் பொதுவாகிய தன்மை உரித்து (எ-று.)

குற்றிகொல்லோ மகன்கொல்லோ இத்தோன்றுநின்ற உரு!
ஒன்றுகொல்லோ பலகொல்லோ இச்செய் புக்க பெற்றம்!

என வரும்.

'உருவினும்' என்னது, 'உருவென மொழியினும்' என்றதனுன், உருவின் பொருளவாகிய **வடிவு, பிழம்பு, பிண்டம்** என்னும் தொடக்கத்தனவும் கொள்க. உருவு முதலியன உயர்திணைப் பன்மை ஒருமைப்பால் ஐயத்திற்கு ஏலாமையும் ஏனைத் திணை ஐயத்திற்கு ஏற்புடைமையும் தோன்றச் 'சுட்டுங்காலை' என்றூர்.

'உருபு' எனப் பகர உகரமாகப் பாடம் ஓதில், அது வேற்றுமை உருபிற்கும் உவம உருபிற்கும் பெயராய், வடிவை உணர்த்தாது என்று உணர்க. 'அதுவென் உருபுகெட'[1] எனவும், 'உருபினும் பொருளினும் மெய்தடு மாறி'[2] எனவும், 'உருபுதொடர்ந் தடுக்கிய'[3] என

பி-ம்: * உருபென

1. வேற். மயங். சூ. 11.
2. வேற். மயங். சூ. 18.
3. வேற். மயங். சூ. 19.

வும், 'உருபுதொக வருதலும்'[1] எனவும், 'மெய்யுருபு தொகா'[2] எனவும், 'யாதன் உருபின்'[3] எனவும் பிறாண்டும் வேற்றுமைக்கு 'உருபு' என்றே சூத்திரம் செய்த வாறு காண்க. 'உவம உருபு' என்றல் அவ்வோத்திற் கூறிய உரைகளான் உணர்க.

அன்றியும், சான்றோர் செய்யுட்களிலும் 'உருவு கிளர் ஒளிவினை' எனவும், 'ஞாயிற் றுருவுகிளர் வண்ணங் கொண்ட'[4] எனவும், 'உருவக் குதிரை'[5] எனவும், 'வேண் டுருவம் கொண்டதோர் கூற்றங்கொல்!'[6] எனவும் பிறாண்டும் கூறுமாற்றான் உணர்க.

'உருவு' என்பது, உடல் உயிர் கூட்டப் பொதுமை யாகிய 'மக்கள்' என்னும் பொதுமைக்கு ஏலாது உட லையே உணர்த்துதலானும், 'பெற்றம்' என்பது இயற் பெயராயினும் ஒருகால் சொல்லுதற்கண் ஒருபால்மேல் நில்லாது இரு பால்மேல் நிற்றலானும் வழுவமைதி ஆயிற்று.

25] ஐயுற்றுத் துணிந்த பொருள்மேல் அன்மைத் தன்மை கூறும் மரபு [உரு

தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

இது, முன்னர்க் கூறிய பால் ஐயத்தையும் திணை ஐயத்தையும் துணிந்து கூறும் வழி அவற்றிற்கு அன் மைத்தன்மை கூறும் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) தன்மை சுட்டலும் உரித்து - ஒருவர்க்குப் பால் ஐயமும் திணை ஐயமும் நிகழ்ந்துழி அங்ஙனம் ஐயுறலே அன்றி அவர்க்கு அப்பொருள்களின் உண்மைத் தன்மையைக் கருது தலும் உரித்து, அன்மைக் கிளவி வேறு இடத்தான என மொழிப - ஆண்டு ஒரு பொருள் ஒரு பொருள் அல்லவாம் தன்மை உணர்த்தும் சொல் ஐயத்துக்கு வேறாய்த் துணிந்து

1. வேற். மயங். சூ. 21. 2. வேற். மயங். சூ. 22. 3. வேற். மயங். சூ. 23.
4. பதிற். 52 : 29,30. 5. அகம். 1 : 2. 6. கலி. 56 : 9.

தழீஇக்கொண்ட பொருளின்கண்ண என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) இவன் பெண்டாட்டி அல்லன், ஆண் மகன்.
இவள் ஆண் மகன் அல்லள், பெண்டாட்டி.
இவன் குற்றி அல்லன், மகன்.
இவ்வுரு மகன் அன்று, குற்றி.
இப்பெற்றம் பல அன்று, ஒன்று.
இப்பெற்றம் ஒன்று அல்ல, பல.

என வரும்.

'இவன்' என்னும் எழுவாய், 'அல்லன்' என்பதனோடு முடிந்தது. 'மகன்' என்பது, 'இவன்' என்னும் சுட்டுப் பெயர்க்குப் பெயர்ப் பயனிலையாய் நின்றது. இவற்றிற்கு ஐந்தாம் உருபு விரித்தலும் ஒன்று, 'பெண்டாட்டியின் அல்லன்' என.

இனிச் சேனாவரையர் முன்னிற்சூத்திரத்தில் உருவென்பதனை 'ஆண் மகன்கொல்லோ பெண்டாட்டி கொல்லோ இத்தோன்றாநின்ற உருவு!'* எனப் பால் ஐயத்திற்கு 'உருவு' என்னும் ஐயப்புலப் பொதுச்சொல் உரித்து என்று உதாரணம் காட்டி, இச்சூத்திரத்தில் 'அன்மைக்கிளவி மறுக்கப்படும் பொருள்மேல் ஆம்,' என்று கூறினால் எனின், அவர் உதாரணம் காட்டியவற்றில் ஆண் மகன் என்று துணிந்தவழிப் 'பெண்டாட்டி அல்லள், ஆண் மகன்,' என்றும், பெண்டாட்டி என்று துணிந்தவழி 'ஆண் மகன் அல்லன், பெண்டாட்டி,' என்றும் மறுக்கப்படும் பொருள்மேல் அன்மை கூறி, அவற்றிற்கு 'இவ்வுருவு பெண்டாட்டி அல்லள், ஆண் மகன்,'என்றும், 'இவ்வுருவு ஆண் மகன் அல்லன், பெண்டாட்டி,' என்றும் 'உருவு' என்னும் சொல் கூட்டியே பொருள் முடிக்க வேண்டுதலின், 'உருவு' என்னும் அஃறிணைப்பெயர் 'அல்லன், அல்லள்' என்னும்

பி-ம்: * உருபு

உயர்திணை வினைக்குறிப்போடு முடியாமை உணர்க. அன்றியும், 'இவன் பெண்டாட்டி அல்லள், ஆண் மகன்; இவள் ஆண் மகன் அல்லன், பெண்டாட்டி' என அவர் சொல் முடித்தற்குக் கூட்டிய சுட்டுப்பெயர் கூட்டினும் முடியாமையும் உணர்க. இனி, 'குற்றியோ மகனோ!' என்று ஐயுற்றான் மகனென்று துணிந்தது, மக்கள் தன்மையை ஆண்டுப் பெற்றன்றே? அது பெறவே, குற்றித் தன்மை ஆண்டு இல்லை ஆயிற்று. ஆண்டு இல்லாத குற்றித்தன்மையன் அல்லன் மகன் ஆதலான், அஃது அல்லாதான்மேல் அன்மை ஏற்றுதலே ஆசிரியர் கருத்து என்று உணர்க. இனிக் குற்றி என்று துணியினும், இஃது ஒக்கும். உம்மை, எண்ணும்மை.

26] வண்ணச் சினைச்சொற்கண் மரபு [உசு

அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

இது, வண்ணச் சினைச்சொற்கண் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) அடை சினை முதல் என மூன்றும் - பண்புச் சொல்லும் சினைச்சொல்லும் முதற்சொல்லும் என்ற மூன்றும், முறை மயங்காமை நடைபெற்று இயலும் - கூறப்பட்ட முறை மயங்காமை வழக்கைப் பொருந்தி நடக்கும், வண்ணச் சினைச் சொல் - வண்ணம் முதலாகிய பண்புகளோடு தொடர்ந்த சினைச் சொல்லை உடைய முதற்சொல் (எ-று.)

மீட்டும் 'வண்ணச்சினைச்சொல்' என்றது, அச்சொற்குப் பெயர் கூறிற்று.

(உ-ம்.) செங்கால் நாரை
பெருந்தலைச் சாத்தன்

என வழக்கினுள் மயங்காது எனவே, செய்யுளுள்,

'கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர*
வாய்வன் காக்கையும் கூகையும் கூடி'[1]

பி-ம்: * வெருவா 1. புறம். 238: 1-3.

என மயங்கியும் வருமாயிற்று. சினையொடு முதற்கு ஒற்றுமையுடைமையான் முதலொடும் இயைந்தன.

'பெருந்தோள் சிறுநுசுப்பின் பேரமர்க்கண் பேதை'

என்பதும் அவ்வாறே மயங்கி வந்தது, செய்யுளாதலின். 'பெருவழுதுணங்காய்' என்பது, பெருமை முதன்மேலே கூறுதலின், சொல்லுவான் கருத்து வேறாயிற்று. இன்னும் 'வழக்கினுள் மயங்காது,' என்றதனால், 'சிறு பைந் தூவி'[1] எனச் சினையொடு குணம் இரண்டு அடுத்தல் செய்யுளாறு என்க. 'இளம்பெருங்கூத்தன்' என்பது சினையின்மையின் வேண்டியவாறு வந்தது.

27] பால் திணை வழுவமைதி [உஎ

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி;
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

இது, பால் வழூவும் திணை வழூவும் அமைக்கின்றது.

(இ-ள்.) ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும் - ஒருவனையும் ஒருத்தியையும் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும் - ஒன்றனை உயர்திணைப் பன்மையாகச் சொல்லும் பன்மைச்சொல்லும், வழக்கின் ஆகிய உயர் சொற் கிளவி - வழக்கின் உளவாகிய உயர்த்துச் சொல்லும் சொல்லாம்; இலக்கண மருங்கிற் சொல் ஆறு அல்ல - இலக்கண முறைமையால் சொல்லும் நெறி அல்ல (எ-று.)

'வழக்கின் ஆகிய' எனவே, வழூவமைதி பெற்றாம். உயர்சொல் - உயர்க்கும் சொல். ஒருவனையும் 'தாம் வந்தார்,' என்ப; ஒருத்தியையும் 'தாம் வந்தார்,' என்ப; ஒன்றனையும் 'தாம் வந்தார்,' என்ப.

(உ-ம்.) யாம் வந்தேம்.
நீர் வந்தீர்.
இவர் வந்தார்.

என வரும்.

---

1. அகம். 57.

'தாம் வந்தார் தொண்டனர்,' என்பது, உயர்சொல் குறிப்பு நிலையின் இழிபு விளக்கிற்று.

'இலக்கண மருங்கிற் சொல் ஆறு அல்ல,' என்ற மிகையான், ஓர் எருத்தை 'எந்தை வந்தான்,' எனவும், ஓர் ஆவை 'எம் அன்னை வந்தாள்,' எனவும்,

'கோடுங்கோல் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாயர்.'[1]

எனவும் ஒப்புமை கருதாது காதல் பற்றி உயர்த்து வழங்கலும், 'கன்னி நறுஞாழல்,[2] கன்னி எயில்' எனவும், ஓர் எருத்தை 'நம்பி' எனவும், ஒரு கிளியை 'நங்கை' எனவும் அஃறிணையை உயர்திணை வாய்பாட்டால் கூறலும்; பண்புகொள் பெயர்க்கொடை, வழக்கினகத்தும் 'பெருங்கொற்றன், பெருஞ்சாத்தன்' என இல் குணம் அடுத்து உயர்த்துக் கூறலும் கொள்க. 'என் பாவை வந்தது,' என்பது ஆகுபெயர். அஃது ஒப்பு உள்வழிக் கூறியது.

28] இடம் பற்றி நிகழும் சொற்களுக்குப் பொது விதி [உ-அ

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப.

இஃது, இடம் பற்றி நிகழும் சொற்களுக்குப் பொது விதி கூறுகின்றது.

(இ-ள்.) செலவினும் வரவினும் தரவினும் கொடையினும் நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும் - செலவு முதலிய நான்கு வினையானும் இடம் நிலைபெறப் புலப்படாநின்ற அந் நான்கு சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம்மூவிடத்தும் உரிய என்ப - தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம்மூவிடத்திற்கும் உரியவாய் வரும் என்று கூறுவர் புலவர் (எ-று.)

---

1. முல்லைப். 15, 16. 2. சிலப். 7:9.

'ஈங்கு' முதலியன தன்மைக்கண்ணும், 'ஆங்கு' முதலியன படர்க்கைக்கண்ணும் அடக்கப்பட்டன.

வினைச்சொல் பால் உணர்த்தும் ஈற்றான் மூன்றிடத்திற்கும் உரிமை வினை இயலுள் கூறி, செலவு முதலியன முதனிலைதாமே இடம் உணர்த்தி நிற்றலின் ஈண்டுக் கூறினார், அவற்றுள் அடங்காமையின்.

29] அவற்றுள் சிலவற்றிற்குச் சிறப்பிலக்கணம் [உகூ

அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.

இஃது, அவற்றுள் சிலவற்றிற்குச் சிறப்பிலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும் - முற்கூறிய நான்கு சொல்லினுள் தரு சொல்லும் வரு சொல்லும் ஆகிய இரண்டு சொல்லும், தன்மை முன்னிலை ஆயீரிடத்த - தன்மை முன்னிலையாகிய அவ்விரண்டிடத்திற்கும் உரிய (எ-று.)

(உ-ம்.) எனக்குத் தந்தான்.
நினக்குத் தந்தான்.
என்னுழை வந்தான்.
நின்னுழை வந்தான்.
ஈங்கு வந்தான்.

என ஈற்றான் அன்றித் தரவும் வரவுமாகிய வினை, தன்கண்ணும் முன் நின்றான்கண்ணும் சென்றன. முன்னிற்சூத்திரத்துப் பொதுவிதியான் மூன்றிடத்தும் வரைவின்றி ஆம் எனவும் கொள்ள வைத்தமையான்,

'பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த'[1]
'புனல்தரு பசுங்காய் தின்ற'[2]
'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது'[3]

1. புறம். 55 : 3. 2. குறுந். 292. 3. அகம். 36 : 6.

'அரிமலர் ஆய்ந்தகண் அம்மா கடைசி
திருமுகமும் திங்களும் செத்துத்—தெருமந்து
வையத்தும் வானத்தும் செல்லா தணங்காகி
ஐயத்துள் நின்ற தரவு.'[1]

என மயங்குவனவும் அமைக.

'தரவு வரவு உணர்த்தும் சொல்' என்பது பொருள்.

30]　　இதுவும் அது.　　[௩௦

ஏனை இரண்டும் ஏனை இடத்த.

இதுவும் அது.

(இ-ள்.) ஏனை இரண்டும் - செலவுச்சொல்லும் கொடைச் சொல்லும், ஏனை இடத்த - படர்க்கைக்கு உரிய (எ-று.)

(உ-ம்.) அவன்கண் சென்றான்.
ஆங்குச் சென்றான்.
அவர்க்குக் கொடுத்தான்.

என ஈற்றான் அன்றிச் செலவுத்தொழிலும் கொடைப் பொருளும் படர்க்கையான்கண் சென்று உற்றன.

31]　　அறியாப் பொருள்மேல் சொல் நிகழ்த்தும் மரபு　　[௩௧

யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.

இஃது, அறியாப்பொருள்மேல் சொல் நிகழ்த்தும் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும் - யாது எவன் என்று சொல்லப்படும் அவ்விரண்டு சொல்லும், அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் - அறியாப் பொருளிடத்து ஒருவன் வினவும் வினாவாய் யாப்புறத் தோன்றும் (எ-று.)

(உ-ம்.) இச்சொற்குப் பொருள் யாது?
இச்சொற்குப் பொருள் எவன்?

இது, பொது வகையான் உணரப்பட்டுச் சிறப்பு வகையான் உணர்த்தப்படாத பொருளாம். இக்

1. யாப். வி. சூ. 57 உரை மேற்.

காலத்து 'எவன்' என்பது, 'என்' என்றும் 'என்னை' என்றும் மருவிற்று.

'யாவன்? யாவள்? யாவர்? யார்? யா? யாவை? யாண்டு? யாங்கு? எப்பொருள்?' என்பன திணை பால் முதலியன உணர்த்தலின், அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றாவாயின. ஆயின், 'யாது? எவன்?' என்பவற்றிற்கும் அவை உளவால் எனின், வினவுகின்றான் அஃறிணை ஒருமையும் பன்மையும் துணிந்து அவற்றின் பகுதி அறிதற்கு வினவுகின்றான் அல்லன், பொது வகையான் வினவுகின்றான் என்று அறிவுறுக்குமாறு வழக்கு நோக்கி உணர்க.

32] அறிந்த பொருள்மேல் ஐயந்தீர்க்க வரும் வினா [௩௨

அவற்றுள்,
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்
தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே.

இஃது, அவற்றுள் ஒன்று அறிந்த வழியும் வரும் என்று அறிந்து காக்கின்றது. எனவே, மரபு கூறிற்றாம்.

(இ-ள்.) அவற்றுள் யாது என வரூஉம் வினாவின் கிளவி - அக்கூறப்பட்ட இரண்டனுள் யாது என்னும் வினாச்சொல் அறியாப்பொருளை வினாதலே அன்றி, அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத் தெரிந்த கிளவி ஆதலும் உரித்து - அறிந்த பொருட்கண் ஐயம் தீர்தற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து (எ-று.)

(உ-ம்.) நம் எருது ஐந்தனுள் கெட்ட எருது யாது? என வரும். இஃது அறிந்த பொருட்கண் ஐயம் தீர்தலின், வழுவமைதி அன்று.

முன்னிற்சூத்திரத்துள் 'யாது' என்பதனை இச்சூத்திரத்தோடு பொருந்தப் பின் வையாததனால், செறியத் தோன்றாதனவற்றினும் வருவன கொள்க.

நமருள் யாவன் போயினன்?

என எல்லாவற்றோடும் ஒட்டுக.

இனி, 'கடிசொல் இல்லை'[1] என்பதனால்,

நமருள் எவன் போயினன்?

அவற்றுள் எவ்வெருது கெட்டது?

என்பனவும் கொள்க.

உம்மை எதிர்மறை ஆகலான், ஐயத்தாய் நிற்றல் வலியுடைத்து.

33] சினைமுதற்கிளவிகள் உம்மை வேண்டல் [௩௩

இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.

இது, வரையறையுடையது தொகை பெறும் வழிப் படுவதோர் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) இனைத்தென அறிந்த சினை முதல் கிளவிக்கு - கேட்போரால் இத்துணை என்று அறியப்பட்ட சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும், வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் - முடிக்கும் சொல்லோடு படும் தொகுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுக (எ-று.)

(உ-ம்.) நம்பி கண் இரண்டும் நொந்தன.

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்.

எனச் சினை முதற்கிளவிகள் தாமே வினைப்பட்டமையின், உம்மை வேண்டின.

'பன்னிரு கையும் பாற்பட இயற்றி'[2]

இது பிற வினைப்படுத்தினது.

'முரசுமுழங்கு தானை மூவரும் கூடி'[3]

இது தானே வினைப்பட்டது. பன்னிரண்டென்னும் தொகுதியும் கையும் 'இயற்றி' என்பதன்மேல் வருதலின், 'கை' என்பதனோடு இயைந்த 'இயற்றி' என்னும் வினை, தொகைப் பெயரோடும் இயைந்ததாம். 'ஐந்தலை

1. எச்சவியல், சூ. 56. 2. முருகு. 118. 3. பொருந. 54.

நாகம் உடன்றது,' என்பதற்கு 'நாகம்' வினைப்படு தொகுதி அன்று, முடிக்கும் சொல் அன்மையின். இனிக் 'கண்ணிரண்டும் குருடு; எருது இரண்டும் மூரி,' எனப் பெயர் கொண்டவழிப் பெயரும் முடிக்கும் சொல்லேயாம். 'சுவை ஆறும் உடைத்து இவ்வடிசில்; கதி ஐந்தும் உடைத்து இக்குதிரை,' எனச் சிறவாத பண்பு முதலியன பற்றி வருவனவும் கொள்க.

'இருதோள் தோழர் பற்ற'[1]

என்பது பிறரால் வினைப்படுக்கப்பட்டது. இதற்கு உம்மை விகாரத்தால் தொக்கது, செய்யுள் ஆதலின். இத்துணை என்று அறியாக்கால், 'முருகற்குக் கை பன்னிரண்டு,' என்று உம்மை பெறுதாம்.

'ஒண்குழை ஒன்றொல்கி எருத்த லைப்ப'[2]

என்பது, ஒன்றேனும், இனைத்தென அறிந்த பின் உம்மை வேண்டும். அது, விகாரத்தால் தொக்கது.

34] மன்னுப் பொருள் உம்மை வேண்டல் [நூ-ச

மன்னுப் பொருளும் அன்ன இயற்றே.

இது, நிலையாப்பொருட்கண் மரபு நிகழ்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்.) மன்னுப் பொருளும் - உலகத்து நிலை இல்லாத பொருளும், அன்ன இயற்று - அதுபோல உம்மை கொடுத்துக் கூறுதல் வேண்டும் (எ-று.)

'பொருளும்' என்ற எச்ச உம்மையான், உலகத்து இல்லாத பொருளும், இடமும் காலமும் பொருளும் முதலியனவற்றோடு படுத்துக் கூறுதற்கண் உம்மை கொடுத்துக் கூறுதல் வேண்டும் என்று பொருள் உரைத்துக்கொள்க.

'யாக்கையும் நிலையாது,' எனவே, 'இளமையும் செல்வமும் நிலையா,' என்னும் பொருளும் உணர்த்தி எச்ச உம்மையாய் நிற்கும் உம்மை பெறுதல் ஒப்புமை

1. நன். சூ. 398. மயிலைநா. உரை மேற்.
2. ஷை ஷை

யான், முற்றும்மையோடு எச்ச உம்மையை மாட்டெறிந்தார்.

இனிப் 'பவளக்கோட்டு நீல யானை சாத வாகனன் கோவிலுள்ளும் இல்லை; குருடு காண்டல் பகலும் இல்லை; 'உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா,'[1] என இல்லாப் பொருள்களும் எச்ச உம்மை பெற்றவாறு காண்க. இடம் முதலியவற்றோடு வாராதவழி உம்மை பெறா.

'மன்னுக* பெருமநீ நிலமிசை யானே.'[2]

எனவும்,

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்'[3]

எனவும்,

'மன்னாப் பொருட்பிணி முன்னி'[4]

எனவும் மன்னுமை நிலையாமையை உணர்த்துதல் அன்றி, இன்மையை யாண்டும் உணர்த்தாமை காண்க.

35]   சொல் தொகுத்து இறுத்தல்   [௩௫

எப்பொருள் ஆயினும் அல்ல தில்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்.

இது, வினயதன் புறத்துச் சொல் பல்காமல் 'சொல் தொகுத்து இறுத்தல்' என்னும் செப்பு ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எப்பொருள் ஆயினும் - யாதானும் ஒரு பொருளை ஆயினும், அல்லது இல் எனின் - தன்னுழை உள்ளது அல்லதனை இல்லையெனல் உறுமே எனின், அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல் - அவன் வினய பொருடன்னையே கூறாது அதற்கு இனமாகிய பிறிது பொருளைக் கூறி இல்லை என்க (எ-று.)

'நூறு விற்கும் பட்டாடை உளவோ?' என்று வினயினர்க்கு, 'ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை,' என்றும், 'பயறுளவோ வணிகீர்?' என்றார்க்கு,

---

பி-ம்: * மன்னிய.   1. நாலடி. 104.   2. புறம். 6: 29.
3. புறம். 165: 1.   4. நற். 71.

'உழுந்து அல்லது இல்லை; கொள் அல்லது இல்லை,' என்றும் தன்னுழை உள்ளது அல்லதனை இல்லை என்பான், பிறிது பொருளைக் கூறினன்.

''பயறு உளவோ?' என்றவழி அல்லது என்பது ஒழியவும், 'பயறு இல்லை; உழுந்து உள,' என்றால் படும் இழுக்கு என்னை?' எனின், 'எப்பொருளாயினும்' என்றது ஐம்பாற்பொருளை ஆகலானும், 'அல்லது' என்பது அஃறிணை ஒருமைப்பாற்கு உரித்தேனும் மற்றை நான்கு பாற்கண்ணும் பால் வழூவாயும் திணை வழூவாயும் மயங்குதலானும், அது கண்டு அதனை அமைத்தற்கு 'எப்பொருள் ஆயினும் அல்லது இல்' என்றார். 'அவன் அல்லது, அவள் அல்லது, அவர் அல்லது, அது அல்லது, அவை அல்லது' என வரும்.

'நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்
யானல தில்லையிவ் வுலகத் தானே.'[1]

எனச் சான்றோர் செய்யுளுள் பயின்று வருமாறும் உணர்க. 'அவன் அல்லது பிறன் இல்லை,' என மேல் வரும் சொல்லோடு படுத்து வழூவமைதியாதல் அறிக.

பயற்றான் முடிக்கும் குறை உழுந்தான் முடித்தலன்றிப் பாம்புணிக்கருங்கல்லான் முடித்தல் ஆகாமையின், 'பயறு உளவோ?' என்றார்க்குப் 'பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை,' என்றல் பொருந்தாமை உணர்க.

36] மேலதற்கு ஓர் புறனடை [௩௬

அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்.

இது, மேலதற்கு ஓர் புறனடை ஆயதோர் இறுத்தல் வகைமை கூறுகின்றது.

(இ-ள்.) அப்பொருள் கூறின் - அல்லது இல் என்பான் பிறிது பொருள் கூறாது அப்பொருடன்னையே கூறுமாயின், சுட்டிக் கூறல் - முன்னர்க் கிடந்த பொருளைச் சுட்டிச் சொல்லுக (எ-று.)

1. அகம். 268 : 8, 9.

'இவை அல்லது இல்லை; இப்பயறு அல்லது இல்லை,' என வரும். வினையினன் பயற்றின் நன்மையும் தீமையும் உணர்ந்துகோடற்கும், தவிர்தற்கும் இவ்வாறே கூறுக என்றார். சுட்டாது, 'பயறு அல்லது இல்லை,' எனின், 'பயறு உள; உழுந்து முதலிய இல்லை,' எனப் பிறிது பொருள் ஏற்பித்துச் செப்பு வழுவாம்.

'**தன்னினம் முடித்தல்**' என்பதனல், 'பெரும்பயறு அல்லது இல்லை; பசும்பயறு அல்லது இல்லை,' எனக் கிளந்து கூறுதலும் கொள்க.

37] பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் மரபு [௩எ

பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் ஆயினும்
பொருள்வேறு படாஅ தொன்ரு கும்மே.

இது, திணை வழு அமையுமாறும், ஒரு பொருட்பெயர் சுட்டாய் நின்று அப்பொருள் உணர்த்துவதோர் மரபு வழுவமைதியும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) சுட்டுப் பொருளோடு புணரா ஆயினும் ஆகும் - ஒரு சுட்டுத் தான் உணர்த்துதற்கு உரிய அஃறிணைப்பொருளை உணர்த்தாது உயர்திணைப்பொருளை உணர்த்தி நிற்குமாயினும் ஆம், பெயர் பொருளோடு புணரா ஆயினும் சுட்டுப்பொருள் வேறு படாது ஒன்ருகும் - சில பொருட்பெயர் சுட்டுப்பொருளை உணர்த்தா ஆயினும் தாம் சுட்டுவதோர் பொருளிடத்து வேறு பட நில்லாமல் அப்பொருளையே உணர்த்தி நிற்கும் (எ-று.)

'இஃது ஒத்தன்,'[1] என்றவழி, 'இஃது' என்ற* அஃறிணைப்பொருளை உணர்த்திய சுட்டு, 'இவன் ஒருத்தன்' என உயர்திணைப்பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க. 'இஃதோ செல்வற் கொத்தனம் யாமென'†[2] என்பதும் அது.

'நாயுடை முதுநீர்'[3] என்னும் அகப்பாட்டினுள்,

பி-ம்: * என்றது † கொத்தனென

1. கலி. 84: 18. 2. அகம். 26: 19, 20. 3. அகம். 16.

'நாணி நின்றோள் நிலைகண் டியானும்
பேணினென் அல்லனோ மகிழ்ந ! வானத்
தணங்கருங் கடவுள னன்னோள்நின்
மகன்தாய் ஆதல் புரைவதாங் கெனவே.'*

என்புழி 'நாணி நின்றோள்' என்னும் பொருட்பெயர் தன் தொடர்ப்பொருளைக்கொண்டு முடிந்த பின்னர், அப் பொருட்பெயர்மேல் ஒரு காரியம் கூற வேண்டியவழி, 'அவள்' எனச் சுட்டிக் கூறுதல் வேண்டும்; அங்ஙனம் கூறாது, 'வானத் தணங்கருங் கடவு ளன்னோள்' என எல்லார்க்கும் பொதுவாயதோர் பெயரால் கூறினள் ஆயினும், கூறுகின்றாள் பரத்தையைக் கருதியே கூறுதலின், அக்'கடவுளன்னோள்' என்ற பெயரும் சுட்டுப் பெயர்த்தன்மையாய் நின்றவாறு காண்க.

'அளிநிலை பொறாஅது,[1] என்னும் அகப்பாட்டினுள், 'ஒண்ணுதல்........உயிர்த்த காலை மாமலர் மணியுரு விழந்த ....தோற்றம் கண்டே கடிந்தனம்,' என முடித்த பின்னர் அவள்மேல் பின்னரும் ஒரு காரியம் கூறக் கருதிய தலைவன், 'ஒண்டொடி' எனப் பொதுப்பெயரால் கூறினனேனும், அப்பெயர் 'அவள்' என்னும் பொருள் தந்து நின்றவாறு காண்க.

'கோய்தளிர்த் தண்படலைக்† கூத்தப்‡ பெருஞ்சேந்தன்
வைகலும் ஏறும் வயக்களிறே !—கைதொழுவல்;
காலைக வண்ணனைக் கண்ணுறக் காணவெஞ்
சாலேகம் சார நட.'[2]

'போற்பூண் சுமந்த புணர்மென் முலைக்கோடு போழ
நற்பூங் கழலான் இருதிங் கள்நயந்த வாறும்
கற்பா டழித்த கனமா மணித்தூண்செய் தோளான்
வெற்பூ டறுத்து விரைவின் நெறிக்கொண்ட வாறும்.'[3]

என்றாற்போலப் பிற செய்யுட்களுள்ளும் பொருட்பெயர் சுட்டுப்பெயர்ப் பொருளவாய் வருதல் பெரும்பான்மை என்று உணர்க.

பி-ம்: * புரைவதா லெனவே † தண்டலை ‡ கூற்றப்
1. அகம். 5. 2. நன். சூ. 397. சங். ந. உரை மேற். 3. சீவக. 19.

'வையைக் கிழவன் வயங்குதார் மாணகலம்
தையலாய்! இன்றுநீ நல்கினை* நல்காயேல்
கூடலார் கோவொடு நீயும் படுதியே†
நாடறியக் கெளவை ஒருங்கு.'[1]

என்புழிக் 'கூடலார்கோ' என்றாற்போலப் பின் பொருட்பெயர் பொதுவாய் நில்லாது அப்பொருளையே விளக்கிச் சுட்டாய் நிற்பனவும் ஒன்றேன முடித்தலால் கொள்க.

இச்சூத்திரத்திற்குப் பலரும் கூறும் பொருளெல்லாம் முன்னிற்சூத்திரத்தால் பெற்றவாறு காண்க.

உம்மை, சிறப்பும்மை. அது வேறு பொருள்படுதல் மாலைத்து ஆயினும், பொருள் வேறுபடாது ஒன்றாகும் என்றவாறு.

38] இயற்பெயரும் சுட்டுப்பெயரும் சேர்ந்து வருமுறை [கூஅ

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

இஃது, ஒரு பொருளை உணர்த்தும் இரு பெயர் வழுக் காக்கின்றது.

(இ-ள்.) இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்- இயற்பெயராகிய சொல்லும் சுட்டுப்பெயராகிய சொல்லும், வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின் - ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் பிறிது வினை கோடற்கு ஒருங்கு நிகழும் காலம் தோன்றுமாயின், சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார் - உலகத்தார் சுட்டுப் பெயராகிய சொல்லை முற்படக் கிளவார், இயற்பெயர் வழிய என்மனார் புலவர் - இயற்பெயர்க்குப் பின்னாகக் கூறுவர் என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

'ஒருங்கு இயலும்' என்றதனான், ஒரு பொருளை உணர்த்துதல் கொள்க. 'வழிய' என்றதனான், இயற்

பி-ம்: * நல்குதி † படுதியோ

1. நன். சூ. 397. சங். ந. உரை மேற்.

பெயர்வழி நிற்றற்கு உரிய அகர இகரச் சுட்டே கொள்க.

'சாத்தன் வந்தான், அவற்குச் சோறு கொடுக்க.'

'சாத்தி வந்தாள், அவட்குப் பூக்கொடுக்க.'

என வரும்.

'அவன் வந்தான், சாத்தற்குச் சோறு கொடுக்க,' எனின், அவனும் சாத்தனும் வேறாய், அவன் வருந்துணையும் சாத்தன் சோறு பெறாதிருந்தானாவான் செல்லும். அங்ஙனம் கூறற்க.

இனி, 'இயற்பெயர் வழிய' என்ற மிகையான், இயற்பெயர் அல்லா உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப் பெயர்க்கும் சுட்டுப்பெயர் பின் வருதல் கொள்க.

'நம்பி வந்தான், அவற்குச் சோறு கொடுக்க.'

'நங்கை வந்தாள், அவட்குப் பூக்கொடுக்க.'

'எருது வந்தது, அதற்குப் புல் இடுக.'

'குதிரை வந்தது, அதற்கு முதிரை கொடுக்க.'

என வரும்.

'தன்னினம் முடித்தல்' என்பதனான், விரவுப்பெயருள் இயற்பெயர் ஒழிந்தனவும் கொள்க.

'முடவன் வந்தான், அவற்குச் சோறு கொடுக்க.'

முடத்தி வந்தாள், அவட்குக் கூறை கொடுக்க.'

என வரும்.

'வினைக்கு ஒருங்கு இயலும்' என்று வினை கூறுதலால், பெயர்க்கு இயலாது முன் கூறினும் அமைக என்பதாம்.

'சாத்தன் அவன்.'

'அவன் சாத்தன்.'

என வரும்.

39] எய்தியது விலக்கல் [௩௯

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) முற்படக் கிளத்தல் - இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைக்கு ஒருங்கு இயலும்வழிச் சுட்டுப்பெயரை முற்கூறுதல், செய்யுளுள் உரித்து - செய்யுளிடத்து உரித்து (எ-று.)

'அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய்! வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி—முகனமர்ந்
தன்னை அலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு.'[1]

சேந்தன், இயற்பெயர்.

40] சுட்டு முதலாகிய காரணக் கிளவி [௪௦

சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்.

இதுவும் அச்சுட்டு ஆராய்ச்சியே கூறுகின்றது.

(இ-ள்.) சுட்டு முதல் ஆகிய காரணக் கிளவியும் - சுட்டுப்பெயர் முதலாகிய காரணப் பொருண்மையை உணர்த்தும் சொல்லும் (உம்மையால், காரணம் இன்றி வரும் சுட்டுப்பெயரும்), சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும் - சுட்டுப்பெயர் போலத் தன்னால் சுட்டப்படும் தொழிலை உணர்த்தும் சொற்குப் பின் கிளக்கப்படும் (எ-று.)

'சுட்டுப்பெயர் இயற்கை' எனவே, வழக்கிற்குப் பின்னும் செய்யுட்கு முன்னும் நிற்கும் என்பது பெற்றாம்.

'சாத்தன் கை எழுதுமாறு வல்லன், அதனால் தந்தை உவக்கும். சாத்தி சாந்து அரைக்குமாறு வல்லள், அதனால் கொண்டவன் உவக்கும்.—இவற்றுள்* சுட்டு முதலாகிய காரணக் கிளவி உருபு அன்று; உருபு ஏற்ற சுட்டுப் பெயரோடு ஒப்பதோர் இடைச்சொல்; என்னை? பிளவுபடாது ஒன்றுபட்டு இசைத்தலின்.

'சாத்தன் வந்தான், அஃது அரசற்குத் துப்பு ஆயிற்று. கிழவன் பிரிந்தான், அதனைக் கிழத்தி உணர்ந்திலள்,' என இவை காரணம் இன்றி வந்தன.

பி-ம்: * இதனுள்

1. நன். சூ. 394. சங். ந. உரை மேற்.

41] இயற்பெயர்க் கிளவியைப் பிற்படக் கிளத்தல் [சக

சிறப்பின் ஆகிய பெயர் நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

இதுவும் ஒரு பொருளை உணர்த்தும் இரு பெயர் வழுக் காக்கின்றது.

(இ-ள்.) சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும் - வினைக்கு ஒருங்கு இயலும்வழிச் சிறப்பின் ஆகிய பெயராய் நிற்றலை உடைய சொற்கும் (உம்மையால், தவம், கல்வி, குடி, உறுப்பு முதலியவற்றான் ஆகிய சொற்கும்), இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார் - இயற்கைப் பெயராகிய சொல்லை உலகத்தார் முற்படக் கிளவார் பிற்படக் கிளப்பர் (எ-று.)

சிறப்பு, மன்னர் முதலியோரால் பெறும் வரிசை :

'ஏனாதி நல்லுதடன்.'
'முனிவன் அகத்தியன்.'
'தெய்வப்புலவன் திருவள்ளுவன்.'
'சேரமான் சேரலாதன்.'
'சோழன் வன்கிள்ளி'
'பாண்டியன் மாறன்.'
'குருடன் கொற்றன்.'

என வரும்.

'தச்சக் கொற்றன்', தொழிலினான் ஆகிய பெயர்.

'திருவிரவாசிரியன்' என்றாற்போல இயற்பெயர் முற் கூறுவன பிறவும் இக்காலத்தார் மயங்கக் கூறுவன பிறவும் 'கடிசொல் இல்லை'[1] என்பதனால் கொள்க.

42] ஒரு பொருட் பல பெயர் மரபு வழுக் காத்தல் [சஉ

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

இஃது, ஒரு பொருளை உணர்த்தும் பல பெயர் வழுக் காக்கின்றது.

---

1. எச்சவியல், சூ. 56.

(இ-ள்.) ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி - ஒரு பொருளை உணர்த்துதலைக் குறித்து வந்த பல பெயர்ச் சொற்கள், தொழில் வேறு கிளப்பின் - ஒரு தொழிலையே முடிபாகக் கூறாது பெயர்தோறும் வேறாகிய தொழில்களைக் கொடுத்து முடிப்பின், ஒன்றிடன் இல - ஒரு பொருளினவாய் ஒன்றுதல் இல (எ-று.)

கிளவி, கருவிக்கருத்தாவாய் நின்றது.

ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்,' என்னாது, 'ஆசிரியன் வந்தான்; பேரூர் கிழான் உண்டான்; செயிற்றியன் சென்றான்,' என வேறு வேறு முடிக்கும் சொல் கொடுப்பின், ஒருவன் ஆகாது வேறு வேறு பொருளாம்.

'எந்தை வருக! எம்பெருமான் வருக!'

என்றாற்போல்வன, காதல் பற்றிப் பலகால் ஒரு தொழிலே வந்தனவாம்.

43]　　எண்ணில் திணை வழுவமைதி　　[சந

தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

இஃது, எண்ணின்கண் திணை வழு அமைக்கின்றது.

(இ-ள்.) தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி என்று - தன்மைச்சொல்லும் அஃறிணைச்சொல்லும் என்று கூறிய இரண்டும், எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார் - எண்ணும் இடமாகிய இடத்து விராய் வந்து தன்மைப் பன்மைச் சொல்லான் அஃறிணைச்சொல் முடிதலை நீக்கார் ஆசிரியர் (எ-று.)

மேல், 'பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி'[1] என்பதனானும் பன்மைத்தன்மை பெற்றாம்.

'யானுமென் எஃகமும் சாறும் அவனுடைய
யானைக்கும் சேனைக்கும் போர்.'

இஃது, இரு திணையும் விராய் எண்ணி, அஃறிணை உயர்திணையோடு முடிந்தது.

1. வினையியல், சூ. 12.

44] ஒருவன் ஒருத்தி என்னும் சொல் மரபு [சச

ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது.

இஃது, எண்ணு வகையால் கூறும் ஒரு வகைச் சொல் நிகழ்ச்சி கூறுகின்றது.

(இ-ள்.) ஒருமை எண்ணின் பொதுப் பிரி பாற்சொல் - ஒருமை எண்ணினை உணர்த்தும் ஒருவர் என்னும் பொதுமையி னின்றும் பிரிந்த பால் உணர்த்தும் சொல்லாகிய ஒருவன் ஒருத்தி என்னும் சொல், ஒருமைக்கு அல்லது எண்ணு முறை நில்லாது - ஒருமைக்கண் அல்லது இருமை முதலிய எண்ணு முறைமைக்கண் நில்லாது (எ-று.)

எனவே, பொதுப் பிரியாப் பாற்சொல்லாகிய 'ஒருவர்' என்னும் சொல், 'இருவர், மூவர்' என எண்ணு முறைமைக்கண் நிற்பதாயிற்று. 'இருவன், மூவன்' எனவும், 'இருத்தி, முத்தி' எனவும், னகர ஈறும் இகர ஈறும் இயைபு இன்மையானும், ரகர ஈறு இயைபு உடைமை யானும் இங்ஙனம் கூறினர்.

'ஒன்றேன முடித்தல்' என்பதனன், 'ஒருவேன், ஒருவை' என்னும் தன்மை முன்னிலை ஈறும் எண்ணுமுறை நில் லாமை கொள்க.

45] எண்ணில் திணை வழுவமைதி [சரு

வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்

இஃது, எண்ணின்கண் திணை வழு அமைக்கின்றது.

(இ-ள்.) வியங்கோள் எண்ணுப்பெயர் - வியங்கோளோடு தொடரும் எண்ணுப்பெயர், திணை விரவு வரையார் - திணை விராய் வருதலை நீக்கார் ஆசிரியர் (எ-று.)

'ஆவும் ஆயனும் செல்க.'

என்றது, எண்ணும்மை ஆதலின், சேறல் தொழில் இரண் டிற்கும் எய்துதலின் வழு இன்றேனும், அஃறிணை ஏவற் றொழிலை முற்ற முடியாமை கருதி வழு அமைத்தார்.

'ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்'[1]

என எண்ணி, 'நும் அரண் சேர்மின்'[2] என முன்னிலை வினை கோடல் செய்யுள் முடிபு என்பது அதிகாரப் புறனடையால் கொள்க.

'ஆவும் ஆயனும் சென்ற கானம், செல்லும் கானம்' என வியங்கோள் அல்லா விரவு வினையான் வருதல் **'தன்னினம் முடித்த'**லால் கொள்க.

46] மரபு வழுக் காத்தல் [சசு

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்.

இது, மரபு வழுக் காக்கின்றது.

(இ-ள்) வேறு வினைப் பொதுச்சொல் - வேறுபட்ட வினை யினையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை, ஒரு வினை கிளவார் - அவற்றுள் யாதானும் ஒரு வினையால் கூறார். எனவே, அவற்றை யெல்லாம் உள்ளடக்கி நிற்கும் பொது வினை யால் கூறுவர் (எ-று.)

'அடிசில்' என்பது, உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கும்; **'அணி'** என்பது, கட்டுவன, கவிப் பன, செறிப்பன, பூண்பனவற்றிற்கும்; **'இயம்'** என்பது, கொட்டுவன, ஊதுவன, எழுப்புவனவற்றிற்கும்; **'படை'** என்பது, எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற் றிற்கும் பொதுவாதலின்,

'அடிசில் உண்டார்; கை தொட்டார்.'

எனவும்,

'அணி அணிந்தார்; மெய்ப்படுத்தார்.'

எனவும்,

'இயம் இயம்பினர்; படுத்தார்.'

எனவும்,

'படை வழங்கினர்; தொட்டார்.'

எனவும் பொது வினையால் கூறுப. இவற்றை ஒரு வினை யால் கூறின், வழுவாம்.

---

1. புறம். 9: 1. 2. புறம் 9: 5.

'மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி'[1]

எனவும்,

'நளிபுகை கமழாது இறுயினிர்* மிசைந்து'[2]

எனவும்,

'இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த'[3]

எனவும்,

'கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரும் அந்நிலை அயின்றனர்.'[4]

எனவும் இவை தின்றெனவும் விழுங்கி எனவும் பெரும் பான்மை வருதலின், 'மிசைந்தார், அயின்றார்' என்பன உதாரணம் காட்டல் பொருந்தாமை உணர்க.

இனி,

'உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.'[5]

என்னும் பொருளியல் சூத்திரத்தான் உண்டல் தொழில் எல்லாவற்றிற்கும் பெரும்பான்மை வருதல் பெற்றாம்.

'அறுசுவை அடிசில் அணியிழை தருதலின்
உறுவயி றார ஓம்பாது தின்றென'

என்பது இழித்தற்கண் வருதலின், வழுவன்று.

47] இதுவும் அது [சஎ

எண்ணுங் காலும் அதுவதன் பண்பே.

இதுவும் அது.

(இ-ள்.) எண்ணுங்காலும் - அவ்வேறு வினைப் பொருள்களைப் பொதுச் சொல்லால் கூறாது பிரித்து எண்ணுமிடத்தும், அது அதன் மரபே - அதன் இலக்கணம் ஒரு வினையால் கிளவாது பொது வினையால் கிளத்தலேயாம் (எ-று.)

'சோறும் கறியும் நன்றென்று உண்டார்.'

'யாழும் குழலும் பறையும் இயம்பினர்.'

பி-ம்: * இருனீர்

1. கலி. 50: 2. 2. மலைபடு. 249. 3. கலி. 29: 2, 3. 4. பரி. 5: 44, 45. 5. பொருளியல், சூ. 19.

'ஊன் துவை
கறிசோறு உண்டுவருந்து தொழில் அல்லது'[1]

என்புழி நுகரப்படும் பொருள் எல்லாவற்றிற்கும் உண்டல் தொழில் வந்தவாறு காண்க.

48] இரட்டைக் கிளவி [சஅ

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா.

இஃது, உரிச்சொற்கண் மரபு வழூக் காக்கின்றது.

(இ-ள்.) இரட்டைக் கிளவி - இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள், இரட்டிற்பிரிந்து இசையா - இரட்டித்து நிற்றலிற்பிரிந்து நில்லா (எ-று.)

சுருசுருத்தது; மொடுமொடுத்தது.

என இசை பற்றியும்,

கோறுகொறுத்தார்; மொறுமொறுத்தார்.

எனக் குறிப்புப் பற்றியும்,

குறுகுறுத்தது; கறுகறுத்தது.

எனப் பண்பு பற்றியும் இரட்டித்துப் பிரியாது நின்றன.

இவை 'குறுத்தது குறுத்தது' என ஒரு சொல் முழுவதும் இரு முறை வாராமையின், அடுக்கு அன்று. இவை மக்கள் இரட்டையும் விலங்கு இரட்டையும்போல வேற்றுமை இன்றி, இலை இரட்டையும் பூ இரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாம். 'குறு' என்னும் சொல் அடுத்துக் 'குறுத்தது' என்பது மிகுதி உணர்த்திற்றேல், 'குறு' என்பது யாண்டும் மிகுதி உணர்த்தல் வேண்டும். அஃது உணர்த்தாமையின், இரண்டும் ஒரு சொல்லே ஆயிற்று.

49] ஒரு பெயர்ப் பொதுச்சொல் மரபு வழுக் காத்தல் [சகூ

ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

1. புறம். 14 : 13, 14.

இஃது, ஒரு பெயர்ப் பொதுச்சொல்லை மரபு வழுக் காக்கின்றது.

(இ-ள்.) உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும் - உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும், ஒரு பெயர்ப் பொதுச்சொல் - ஒரு பெயராய்ப் பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை, உள் பொருள் ஒழியத் தெரிபு வேறு கிளத்தல்-பிற உள் பொருள் ஒழியத் தெரிந்துகொண்டு பொதுமையின் வேறாகச் சொல்லுக, தலைமையும் பன்மையும் - தலைமையானும் பன்மையானும் (எ-று.)

பிறரும் வாழ்வார் உளரேனும், 'பார்ப்பனச்சேரி' என்றல் உயர்திணைக்கண் தலைமை பற்றிய வழக்கு. 'எயினர் நாடு' என்பது அத்திணைக்கண் பன்மை பற்றிய வழக்கு.

பிற புல்லும் மரமும் உளவேனும், 'கமுகந்தோட்டம்' என்றல் அஃறிணைக்கண் தலைமை பற்றிய வழக்கு.

பார்ப்பார் பலராயினும், கமுகு பலவாயினும் அவை தாமே பன்மை பற்றிய வழக்காம்.

'ஒன்றென முடித்த'லான், 'அரசர் பெருந்தெரு, ஆதீண்டு குற்றி, வயிரக் கடகம்' என்னும் பொதுச்சொல் அல்லனவும் கொள்க.

பல குடி சேர்ந்தது சேரி. பல பொருள் தொக்கது தோட்டம்.

50] இரு திணை இரு பாற்பொதுப்பெயர் மரபு [ரு௦

பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

இஃது, இரு திணை இரு பாற்கும் பொதுவாகிய பெயர்க்கண் மரபு வழுக் காக்கின்றது.

(இ-ள்.) பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம் - உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் பெயரினானும்

தொழிலினானும் பொதுமையிற்பிரிந்த ஆண் பாற்கும் பெண் பாற்கும் உரியவாய் வருவன எல்லாம், மயங்கல் கூடா - வழு வாகா, வழக்கு வழிப்பட்டன - வழக்கின்கண் அடிப்பட்டன ஆதலான் (எ-று.)

(உ-ம்.) 'பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்.'—இது, பெயரிற்பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்.

'வடுகரசர் ஆயிரவர் மக்களை உடையர்.'—இது, பெயரிற்பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

'இவர் வாழ்க்கைப்பட்டார்.'—இது, தொழிலிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்.

'இவர் கட்டில் ஏறினர்.'—இது, தொழிலிற்பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

இவை உயர்திணைக்கண் பெயரானும் தொழிலானும் பிரிந்தன.

'நம்பி நூறு எருமை உடையன்.'—இது, பெயரிற் பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்.

'நம் அரசன் ஆயிரம் யானை உடையன்.'—இது, பெயரிற்பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

'யானை ஓடிற்று,' என்பது, தொழிலிற்பிரிந்த பெண் ஒழி மிகு சொல்.

'யானை நடந்தது.'—இது, தொழிலிற்பிரிந்த ஆண் ஒழி மிகு சொல்.

இவை அஃறிணைக்கண் பெயரானும் தொழிலானும் பிரிந்தன. இவை இரு பாற்கும் பொதுவாயினும், ஒரு பாற்கண் தாமே பிரிந்தன.

'இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லர்; இவர் பெரிதும் கால்கொண்டு ஓடுவர்,' எனத் தொழிலின் மிகுதி விளக்கி வருவனவும் கொள்க.

51] திணை வழுவமைதி [ருக

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

இது, திணை வழு அமையுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பலவயினானும் எண்ணுத்திணை விரவுப் பெயர் - பல இடத்தும் திணை விராய் எண்ணப்பட்ட பெயர், செய்யு ளுள்ளே அஃறிணை முடிபின - செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற்கொண்டு முடியும் (எ-று.)

'வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை என்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்.'[1]

'கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரு
நான்குடன் மாண்ட தாயினும்'[2] [மென்ன

என வரும்.

'பலவயினானும்' என்றமையான், சிலவயினான் திணை விரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான் முடிவனவும், திணை விராய் எண்ணி உயர்திணையான் முடிவனவும் கொள்க.

'பாணன் பறையன் துடியன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியும் இல்லை.'[3]

என்றது, 'பாண்குடி, பறைக்குடி' எனக் குடியைச் சுட்டி நில்லாது 'பாணன், பறையன்' எனப் பால் காட்டி நிற்றலான், உயர்திணைப் பொருள் நின்று அஃறிணை முடிபு கொண்டனவேயாம்.

'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி எனப்படு வார்.'[4]

---

1. நன். சூ. 378. சங். ந. உரை மேற். 2. புறம். 55 : 7-9.
3. புறம். 335 : 7, 8. 4. ஆசாரக். 64.

'பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டு'[1]

இவை திணை விராய் எண்ணி உயர்திணையான் முடிந்தன.

உயர்திணையும் 'பொருள்' என்னும் பொதுமையான் அஃறிணைக்கண் அடங்குதலானும், உயர்திணைக்கண் அஃறிணை அவ்வாறு அடங்காமையானும் ஆசிரியர் 'அஃறிணை முடிபின,' என்றார்.

திணை விராய் எண்ணி அஃறிணையானும் உயர்திணை யானும் முடிந்தது தலைமை பற்றியும் பன்மை பற்றியும் இழிவு பற்றியும் என உணர்க.

'தானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்.'[2]

என்றாற்போல்வன, தலைமைப் பொருட்கு வினை கொடுப்பவே தலைமை இல் பொருளும் உடன் முடிந்த தோர் முறைமை பற்றி வந்தனவாம்.

52] பல பொருள் ஒரு சொல்லின் வகை [ருஉ

வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்
றாயிரு வகைய பலபொருள் ஒருசொல்.

இதனால், பல சொல்லான் ஒரு பொருள் உணர்த்தி இனி ஒரு சொல்லான் வரும் பல பொருள் உணர்த்து கின்றார், அவற்றின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றார்.

(இ-ள்.) வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல் - வினையான் வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லும், வினை வேறுபடாஅப் பல பொருள் ஒரு சொல் - வினையான் வேறு படாத பல பொருள் ஒரு சொல்லும், என்று ஆயிரு வகைய பல பொருள் ஒரு சொல் - என அவ்விரண்டு வகைப்படும் பல பொருள் ஒரு சொல் (எ-று.)

---

1. சிலப். 21 : 53, 54. 2. 'யானும் தோழியும்' யா. வி. சூ. 28. மேற்.

53] வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல் [டுங

அவற்றுள்,

வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

இஃது, அவற்றுள் வினை வேறுபடுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல் - அவ்விரண்டனுள்ளும் வினையான் வேறுபடும் பல பொருள் ஒரு சொல், வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும் - ஒரு பொருட்கே சிறந்த வினையானும் இனத்தானும் சார்பானும், பொருள் தெரி நிலை தேறத் தோன்றும் - பொருள் தெரி நிலைமைக்கண் பொதுமை நீங்கித் தெளியத் தோன்றும் (எ-று.)

'மா' என்பது, ஒரு சார் விலங்கிற்கும் மரத்திற்கும் வண்டிற்கும் பிற பொருட்கும் பொது. 'குருகு' என்பது, ஓர் பறவைக்கும் உலை மூக்கிற்கும் வளைக்கும் பிற பொருட்கும் பொது.

'மா பூத்தது.'—இது, வினை.

'மாவும் மருதும் ஓங்கின.'—இஃது, இனம்.

கவசம் புக்கு நின்று, 'மா கொணா,' என்பது சார்பு.

ஒரு சாதிக்கண் அணைந்த சாதி, இனம்; ஒருவாற்றான் இயைபுடையது, சார்பு.

'ஒன்றென முடித்தல்' என்பதனால், 'இம்மா வயிரம்; வெளிறு,' என வேறுபடுக்கும் பெயரும் கொள்க.

'கழிப்பூக் குற்றும்* கானல் அல்கியும்†'[1]

என்றாற்போலச் சில பொருளை ஒழித்துச் சில பொருள் மேல் நிற்றல் உரையிற்கொள்க.

இனமும் சார்பும் பின் வரும் வினையொடு கூடி அல்லது பொருள் முடியாமையின், அவையும் வினை வேறுபட்டனவேயாம்.

பி-ம்: * குற்று † அல்கி 1. அகம். 330 : 1.

54] மேலதற்கு ஓர் புறனடை [ருச

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்.

இது, மேலிற்சூத்திரத்திற்கோர் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) ஒன்று வினை மருங்கின் ஒன்றித் தோன்றும் - கூறிய வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல் வினையான் வேறுபட நில்லாது பொது வினை கொண்டு பொதுமைப்பட நின்றுழியும் வினை வேறுபட்டாற்போல 'இன்னது இது' என வேறுபட நிற்றலும் வழக்கினகத்து உண்டு (எ-று.)

'மா வீழ்ந்தது,' என்பது, வீழ்தல் வினை எல்லாவற்றிற்கும் பொதுவேனும், 'இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லுகின்றது இம்மாவினை,' என ஒன்றினை உணர்த்தி நின்றவாறு காண்க. என்றது, வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல், ஒருகால் வினை வேறுபடாத பல பொருள் ஒரு சொற்போல நிற்கும் என்றவாறு.

55] வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் [ருரு

வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

இது, நிறுத்த முறையானே வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) வினை வேறுபடாஅப் பல பொருள் ஒரு சொல் - வினையான் வேறுபடாத பல பொருள் ஒரு சொல், நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும் - ஆராயுங்காலத்து இன்னது இது எனக் கிளக்கப்பட்டு அவ்வாராய்ச்சி உடையவிடத்து நடக்கும் (எ-று.)

'கன்று நீர் ஊட்டுக,' என்றவழிக் கேட்டான் இன்ன கன்று என்பது அறிய வாராதவழி 'ஆன்கன்று, பூங்கன்று' என்று கிளந்தே சொல்லுக என்றவாறு.

'நினையுங்காலை' என்றதனால், கருமச் சிதைவு உள்வழிக் கிளந்து கூறுக என்பது கொள்க.

'கன்றுற்றுப் படுத்த புன்தலைச் சிறார்'[1]
என்றவழிக் கருமச்சிதைவு இல்வழிக் கிளத்தல் வேண்டா வாயினவாறு காண்க.

அன்றி,

'ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்'

என ஒரு சூத்திரமாக்கி, 'வேறுபடாத வினை கொண்ட வழி வேறுபடாது தோன்றும் வினை வேறுப்படாப் பல பொருள் ஒரு சொல்,' என்று பொருள் கூறி, வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்லாகிய 'மா' என்பது தானே 'வீழ்ந்தது' என்னும் பொது வினை கொண்டவழி வினை வேறுபடாதாய் நின்றதற்கு 'மா மரம் வீழ்ந்தது,' எனக் கிளந்து கூறுக என்றார் சேனு வரையர். அங்ஙனம் பொருள் கூறின், 'வினை வேறு படாப் பல பொருள் ஒரு சொல்' என வேறோர் சொல் இன்றி, 'ஆயிரு வகைய'[2] என்பதனோடு மாறுபடும் என மறுக்க.

56] மரபு வழுக் காத்தல் [ருசு

குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.

இது, மரபு வழுக் காக்கின்றது.

(இ-ள்.) குறித்தோன் கூற்றம் - ஒரு பொருள் வேறுபடக் குறித்தோன் கூற்று ஆற்றல் முதலியவற்றான் விளங்காதாயின், தெரித்து மொழி கிளவி - அப்பொருளைத் தெரிவித்துச் சொல் லும் சொல்லாகக் கூறுக (எ-று.)

'அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலைப்பெய்த நீர்.'

எனத் தெரித்து மொழிக. 'கலந்தது போல வருமே இலங்கருவி அன்பன் மலைப்பெய்த நீர்,' எனத்தெரித்து மொழியாக்கால் வழுவாம்.

1. குறுந். 241. 2. கிளவியாக்கம், சூ. 52.

'ஊட்டி யன்ன ஒண்டளிர்ச் செயலை'

என்றது, ஊட்டாததனை ஊட்டியதுபோலக் கூறலின், வேறோர் உவம இலக்கணமாம்.

'பல்லார்தோள் தோய்ந்து வருதலால் பாய்புனல்*
நல்வய லூர!நின் தார்புலால்—புல்லெருக்க
மாசில் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையால்
காதல்தாய் நாறும் எமக்கு.'

இதுவும் தெரித்து மொழிந்தது.

'ஒல்லேம்† குவளைப் புலாஅல் மகன்மார்பிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது.'

எனத் தெரித்து மொழியாதாயிற்று ஆயினும், தலைவன் தவறும் புதல்வன்மேல் அன்பும் காரணமாகக் கூறலும் வழுவன்று என்றலும் ஒன்று.

57] சில உயர்திணைப்பெயர் அஃறிணை முடிபு கோடல் [ருள

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்
றுவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்.

இது, திணை வழூக் காக்கின்றது.

(இ-ள்.) குடிமை ஆண்மை இளமை மூப்பே அடிமை வன்மை விருந்தே குழுவே பெண்மை அரசே மகவே குழவி தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி காதல் சிறப்பே செறற்

பி-ம்: * பூம்பொய்கை † புல்லேம்

சொல் விறற்சொல் என்று ஆவறு மூன்றும் உளப்பட அன்ன பிறவும் அவற்றொடு சிவணித் தொகைஇ - குடிமை முதலாக விறற்சொல் ஈறாகச் சொல்லப்பட்ட அப்பதினெட்டும் உளப்பட அவை போல்வன பிறவும் அவற்றொடு பொருந்தித் தொக்கு, முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம் - சொல்லுவான் குறிப் பொடு படுத்து உயர்திணைப் பொருளை உணரப்படும் சொற்கள் எல்லாம், உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும் - உயர்திணை இருபாற்கண்ணும் பெரும்பான்மை நிலைபெற்றன ஆயினும், அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும் - அஃறிணைப்பொருளை உணர்த்தி நின்றவழி போல அஃறிணை முடிபே கொள்ளும் (எ-று.)

'என்னை உயர்திணைப் பொருள் உணர்த்தியவாறு?' எனின், இக்குடிமை முதலியன எல்லாம் பெரும்பான்மையும் உயர்திணைக்குப் பண்பேயாய் நின்று அப்பண்பினை உணர்த்தி, அஃறிணையாய் நில்லாது, அப்பண்புச்சொல் தன் பண்பையும் தன்னை உடைய பொருளையும் ஒருங்கு தோற்றுவித்துப் பிரியாது நிற்றலின், உயர்திணைப் பொருளையே உணர்த்திற்றும். இங்ஙனம் நிற்கும் என்று உணர்தல் சொல்லுவான் குறிப்பினான் அன்றி உயர் திணைப்பொருளின் நீர்ந்து இன்னவாறு நிற்கும் என்று வேறோர் ஆற்றான் உணர்தல் இன்று என்றற்கு 'முன் னத்தின் உணரும்' என்றார். இவற்றுள் விரவுப்பெய ராய் அஃறிணைப் பண்பை உணர்த்துவன உளவேனும், அவையும் சொல்லுவான் குறிப்பான் ஒருகால் உயர் திணைப் பண்பே உணர்த்தும் என்று கருதி, 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்' என்றார். உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும் மேல் கூறு படுத்துதும்.

இனி, 'குடிமை, ஆண்மை' முதலியவற்றை ஆகுபெயர் என்பாரும் உளர். 'குடிமை' என்னும் குணப்பெயர் ஆகுபெயராய்க் குடிமகனை உணர்த்திற்றேல், 'குடிமை நல்லன்,' என உயர்திணையான் முடியும்; அன்றிக் 'குடிமை' எனத் தனக்கு உரிய பண்பை உணர்த்தி

நிற்குமேல், பின்னர் 'அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்,' என வேண்டா; தானே அஃறிணையான் முடியும். ஆதலின், 'ஆகுபெயர்' என்றலும் 'பண்பு உணர்த்தி நிற்கும்' என்றலும் பொருந்தாமை உணர்க. இக்குடிமை முதலியவற்றிற்கு 'நன்று, தீது' என்றும், 'வந்தது, போயிற்று' என்றும் ஏற்ற அஃறிணை வினை கொடுத்து ஒட்டுக.

இனி இவை உயர்திணைப் பண்பாய் அப்பொருளை யும் ஒருங்கு உணர்த்தி நிற்குமாறு:—

குடிமையாவது, குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம். அஃது, 'ஒழுக்கம் உடைமை குடிமை'[1] என்றதனான் உணர்க. 'மடிமை குடிமைக்கண் தங்கின்'[2] என உயர் திணை இரு பாலையும் உணர்த்திற்று.

ஆண்மையாவது, ஆளும் தன்மை. அஃது,

'ஆபிடை இருபே ராண்மை செய்த பூசல்'[3]

என இரு பாலையும் உணர்த்திற்று. இன்னும்,

'ஊராண்மைக் கொத்த படிறுடைத்து'[4]

எனவும்,

'வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யானும் வலியராய்த்—தாளாண்மை'

எனவும் வரும். இது,

'வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்
வாளாண் எதிரும் பிரிவி னானும்'[5]

எனவும்,

'உட்குடையாள் ஊராண் இயல்பினள்'[6]

எனவும் விகாரமாயும் நிற்கும். இவ்வாண்மை, ஆளுந் தன்மையே அன்றி ஆண்பாலாகிய தன்மையும் உணர்த் தும் என்றற்கு

'ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்'[7]

என்று ஆசிரியர் விரவுப்பெயர்க்கண் உடம்பொடு புணர்த்து ஓதினர். இவ்விரண்டு பண்பும்,

1. குறள், 133. 2. குறள், 608. 3. குறுந். 43. 4. கலி. 89 : 2.
5. களவியல், சூ. 16. 6. நாலடி. 384. 7. பெயரியல், சூ. 27.

'பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.'[1]

என்னும் மெய்ப்பாட்டியல் சூத்திரத்தால் தலைவற்கும் தலைவிக்கும் ஒப்ப உரிய என்றே ஓதுகின்றார் ஆதலின் ஈண்டும் இரு பாற்கும் ஒப்பவே ஓதினர்.

இனி, ஆண்மையை 'ஆள்வினை' என்றும் உரைப்ப. இவ்வாண்மையும் மேல் கூறும் பெண்மையும் உயர்திணை ஆண் பாலையும் பெண் பாலையும் உணர்த்தா என்று கருதி,

'ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய;
பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய.'[2]

என அஃறிணைக்கே ஓதியவற்றையே,

'பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.'[3]

எனக் கிளந்து கூறாதவழி உயர்திணையை உணர்த்தும் என்று மரபியலுள் கூறுவர். அன்றியும்,

'புல்லா வாழ்க்கை* வல்லாண் பக்கமும்'[4]

என்றும்,

'பாடாண் பகுதி'[5]

என்றும் பிறாண்டும் 'ஆண்மை' என்னாது, 'ஆண்' என்றே சூத்திரம் செய்ததனானும், 'ஆண் மக்கள், பெண் மக்கள்' என்னும் வழக்கானும் உணர்க. இனி, ஆண்மையை விரவுப்பெயர் என்றால், முற்காட்டிய உதாரணங்கட்கும் விரவுப்பொருள் அஃறிணைப் பெயர்க்கும் ஏலாமை உணர்க.

'ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த'[6]

பி-ம்: * வாட்கை

1. மெய்ப்பாட்டியல், சூ. 25.
2. மரபியல், சூ. 50.
3. மரபியல், சூ. 69.
4. புறத்திணையியல், சூ. 21.
5. புறத்திணையியல், சூ. 25.
6. புறம். 242 : 4.

என்பதற்கும் 'ஆளும் தன்மை தோன்ற' என்றே பொருள் உரைத்துக்கொள்க.

இளமையாவது, காமச்செவ்வி நிகழ்வதோர் காலம்.

'இளமை கழிந்த பின்றை வளமை
காமம் தருதலும் இன்றே.'[1]

என உயர்திணை இரு பாலும் உணர்த்திற்று.

மூப்பு, 'மூப்புடை முதுபதி' என உயர்திணை இரு பாலையும் உணர்த்திற்று.

இளமையும் மூப்பும் பொருள்மேல் நில்லாது பண்பின்மேல் நிற்பின், அஃறிணையையும் உணர்த்தும்.

'அடிமை' என்பது, 'அடிமை புகுத்தி விடும்,'[2] என உயர்திணை இரு பாலும் உணர்த்தும்.

வன்மையாவது, ஒரு தொழிலை வல்லுதல். அது,

சொல் வன்மை நன்று.

என உயர்திணை இரு பாலும் உணர்த்தும். ஈண்டு வன்மை, வலியன்று.

விருந்து, 'விருந்தெதிர் கோடலும்*'[3] என உயர்திணை இரு பாலையும் உணர்த்திற்று.

'ஆங்கவை விருந்தாற்றப் பகல்அல்கி'[4]

என அஃறிணைக்கும் இது வரும்.

குழூ, 'குழூவின் பெயர்' எனவும், 'ஐம்பெருங் குழூவும் எண்பே ராயமும்'[5] எனவும் உயர்திணை இரு பாலும் உணர்த்தும்.

பெண்மையாவது, கட்புலன் ஆயதோர் அமைதித் தன்மை. அது,

'பெண்மை அடுத்த மகஎன் கிளவி'[6]

என்பதனான் உணர்க. இது 'மகள்' என்பது பெண் பால் உணர்த்தப் 'பெண்மை' என்பதும் பெண் பால்

பி-ம்: * கொள்ளவும்

1. நற். 126 : 9, 10. 2. குறள், 608. 3. சிலப். 16 : 73.
4. கலி. 66 : 4. 5. சிலப். 5 : 157. 6. பெயரியல், சூ. 9.

உணர்த்துமேல் கூறியது கூறலாம் ஆதலின், ஆசிரியர்க்கு இதுவே பொருளாயிற்று.

'ஆண்மை அடுத்த மகன்'[1]

என்பதற்கும் இஃது ஒக்கும். அது,

'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்'[2]

என்பதனானும்,

'பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.'[3]

என்பதனானும் உணர்க. இப்பெண்மை, அமைதித் தன்மையே அன்றிப் பெண் பாலாகிய தன்மையும் உணர்த்தும் என்பது கருதி, ஆசிரியர்,

'பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்'[4]

என விரவுப் பெயர்க்கண் உடம்பொடு புணர்த்து ஓதினார். உயர்திணை ஆண் பாற்கு உரித்தன்றிப் பெண் பாற்கே வரினும் அதுவும் உயர்திணையே ஆதல் நோக்கி,

'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்'

என்றார்.

அரசு, 'அரசுபடக் கடந்தட்டு'[5] என உயர்திணை ஆண் பால் உணர்த்திற்று. 'பெண் அரசி ஏந்தினள்'[6] என ஈறு வேறாய வழிப் பெண் பாலும் உணர்த்தும். இஃது,

'அரசுவா வீழ்ந்த களத்து'[7]

என அஃறிணைக்கும் வரும்.

இனி, மகவும் குழவியும்,

'குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே.'[8]

என அஃறிணைக்கே அன்றி உயர்திணை இரு பாற்கும் வரும் என்றார்.

---

1. பெயரியல், சூ. 9. 2. கிளவியாக்கம், சூ. 4. 3. குறள், 147. 4. பெயரியல், சூ. 26. 5. கலி. 105 : 1. 6. சீவக. 736. 7. களவழி, 35. 8. மரபியல், சூ. 23.

தன்மை திரி பெயர், அலி.

உறுப்பின் கிளவி, குருடு, முடம். இவை இரு பாற்கும் ஒக்கும். விரவுப்பெயர்க்காயின், 'முடவன், முடத்தி' என வரும்.

காதல், 'யானை வந்தது, பாவை வந்தது,' என ஒப்பின்றிக் காதல் பற்றி நிற்கும். அது,

'போர்யானை வந்தீக ஈங்கு.'[1]

என வரும்.

'தன்னினம் முடித்த'லால்,

'தேமலர் அங்கண் திருவே புகுதக.'[2]

என உவப்பும் கொள்க.

சிறப்பு, கண்போலச் சிறந்தாரைக் 'கண்' என்றலும், உயிர்போலச் சிறந்தாரை 'உயிர்' என்றலுமாம். அஃது,

'ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வருமெம்* உயிர்.'[3]

என வரும்.

செறற்சொல், செறுதலைப் புலப்படுக்கும் 'பொறியறை, கெழீஇயிலி.' அது, 'போசீத்தை'†[4] என்றாற்போல்வது.

'தன்னினம் முடித்த'லான்,

'ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்.'[5]

என இழிபும் கொள்க.

விறற்சொல், விறலை உணர்த்தும் 'பெருவிறல்,[6] அருந்திறல்' போல்வன.

'அன்ன பிறவும்' என்றதனால், 'வேந்து, வேள், குரிசில், அமைச்சு, புரோசு'[7] என ஒரு பாற்கு உரிய காட்டலும் ஒன்று. இரு பாற்கு உரியன வந்துழிக் காண்க.

பி-ம்: * வருமென் † பொய்ச்சீத்தை

1. கலி. 86:10. 2. சீவக. 2121. 3. கலி. 81:9, 10. 4. கலி. 94:22. 5. குறள், 848. 6. கலி. 81:10. 7. பதிற். 7-ஆம் பத்து. பதிகம்.

இவையெல்லாம் 'பண்பு' என்று விளக்கிய, பண்பு வாய்பாட்டால் ஓதினர். இவை உயர்திணைப் பண்புப் பெயராய் அப்பொருளையும் ஒருங்கு உணர்த்தினவேனும், அஃறிணைச் சொற்கொண்டு முடியும் என வழூவமைத்தார்.

58] இதுவும் அது. [ருஅ

'காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

இதுவும் திணை வழுக் காக்கின்றது.

(இ-ள்.) காலம் உலகம் உயிரே உடம்பே பால் வரை தெய்வம் வினையே பூதம் ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம் ஆயீரைந்தொடு அன்ன பிறவும் - காலம் முதலாகச் சொல் ஈறுகச் சொல்லப்பட்ட அப்பத்தும் அத்தன்மையன பிறவு மாகிய, ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம் - அவ்வுயர்திணைக்கண் வரும் சொல் எல்லாம், உயர்திணை மேன பால் பிரிந்து இசையா- உயர்திணைச்சொல் ஆயினும் உயர்திணைக்கண் பால் பிரிந்து இசையா; அஃறிணைப்பாலவாய் இசைக்கும் (எ-று.)

இச்சூத்திரத்துக் கூறியவற்றுள் உலகமும் உயிரும் உடம்பும் ஒழிந்தன எல்லாம் தெய்வத்தையே உணர்த்தின* ஆதலின், 'தெய்வம்' என்பதனை,

'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்'[1]

என்பதனான் உயர்திணை என்பது பெற்றாம். இவை எல்லாம் 'தெய்வம்' என்னும் உயர்திணைப்பொருளை உணர்த்தினவேனும்† 'தெய்வம்' என்னும் சொல் அஃறிணை வாசகம் ஆதலின், அதற்கு ஏற்ப அஃறிணை முடிபே கொள்ளும் என்றார்.

பி-ம்: * உணர்த்திற்று † உணர்த்திற்றேனும்

1. கிளவியாக்கம், சூ. 4.

இச்சொற்கள், கூறுகின்ற பொழுதே தத்தம் உயர்திணைப் பாற்பொருளே தோற்றுவித்து நிற்றலின், ஆகுபெயர் அன்மை உணர்க.

'இவற்குக் காலம் ஆயிற்று,' என்றது காலக்கடவுளை. 'உலகம் பசித்தது,' என்றது உலகத்தாரை. 'உயிர் போயிற்று; உடம்பு நுணுகிற்று,'—இவை உயர்திணை முடிபு கொள்ளா என விலக்குதலின், ஈண்டு உயர்திணைக்கே உரிய ஆயின. என்னை?

'அறஞ்செய்து துறக்கம் புக்கான்.'
'உயிர் நீத்து ஒரு மகன் கிடந்தான்.'

என உயிரும் உடம்பும் வரின், வேறன்றி அவராக உணரப்பட்டு உயர்திணைக்கு ஏற்ற முடிபு கோடலின், மக்களே ஆயின. இவை இங்ஙனம் உணர்த்தலின், ஆகுபெயர் அன்று.

'தெய்வம் செய்தது.'—இதனைப் பால்வரை தெய்வம் என்றார், இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுத்தலின்.

'வினை விளைந்தது.'—இஃது இரு வினைத் தெய்வம்.

'பூதம் புடைத்தது;[1] ஞாயிறு பட்டது; திங்கள் எழுந்தது.'

'சொல் நன்று.'—இது நாமகளாகிய தெய்வம்.

'பிறவும்' என்றதனல்,

பொழுது நன்று; யாக்கை தீது; விதி வலிது; கனலி கடுகிற்று; மதி நிறைந்தது; வெள்ளி எழுந்தது; வியாழம் நன்று.

என வரும்.

'காலம், உலகம்' என்பன, வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின். 'உலகம்' என்பது, மக்கள் தொகுதியை உணர்த்தியவழி உயர்திணையாயும், இடத்தை உணர்த்திய

1. சிலப். 5 : 134.

வழி அஃறிணையாயும் வருதலின், ஒருசொல் இருபொருட் கண்ணும் சென்றது எனப்படாது, இருசொல் எனவே படும். அங்ஙனம் மக்கள் தொகுதியை உணர்த்துங்கால் உரிப்பெயராயே உணர்த்திற்று; ஆகுபெயர் அன்று. இங்ஙனம் வருவனவற்றைப் பலகால் எடுத்து ஓதாமை இலேசாகக் கருதி,

'ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்'[1]

என எழுத்து ஒப்புமை பற்றி 'ஒரு சொல்' என்றார். 'உலோகம்' என்றது வடமொழித் திரிபு.

59] 'குடிமை' என்னும் சூத்திரத்திற்குப் புறனடை [ருகூ

நின்றுங் கிசைத்தல் இவணியல் பின்றே.

இது, 'குடிமை ஆண்மை'த்[2] தொடக்கத்திற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) நின்றாங்கு இசைத்தல் - ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல், இவண் இயல்பு இன்று - காலம் முதலிய சொற்களிடத்து இயல்பு இல்லை (எ-று.)

எனவே, 'குடிமை, ஆண்மை' முதலிய சொற்களிடத்து இயல்பு உண்டாம் என்றவாறு.

குடிமை நல்லன்; ஆண்மை நல்லன்; மூப்புத் தீயன்.

என ஒட்டுக.

60] 'காலம்' என்னும் சூத்திரத்திற்குப் புறனடை [சும0

இசைத்தலும் உரிய வேறிடத் தான.

இது, 'காலம் உலகத்'திற்கு[3] ஓர் புறனடை.

(இ-ள்.) இசைத்தலும் உரிய - காலம் உலகம் முதலிய சொற்களும் உயர்திணையாய் இசைத்தலும் உரிய, வேறு இடத்தான - ஈறு திரிதற்கு ஏற்பன ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்ட இடத்து (எ-று.)

'காலன் கொண்டான்; உலகர் பசித்தார்,' என ஈறு திரிவனவற்றோடு ஒட்டுக.

---

1. உரியியல், சூ. 1. 2. கிளவியாக்கம், சூ. 57.
3. கிளவியாக்கம், சூ. 58.

61] அருத்தாபத்தி [சூ க

எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே.

இஃது, அருத்தாபத்தி கூறுகின்றது.

(இ-ள்.) எடுத்த மொழி-இனமாகிய பொருட்கண் ஒன்றை விதந்து வாங்கிக் கூறிய அச்சொல், இனம் செப்பலும் உரித்து-தன் பொருட்கு இனமாகிய பிற பொருளைக் குறிப்பால் உணர்த்துதலும் உரித்து (எ-று.)

உம்மை எதிர்மறை ஆகலின், உணர்த்தாமையும் உரித்தாயிற்று.

'அறம் செய்தான் துறக்கம் புகும்.'
என்றவழி இனப்பொருளாகிய
'மறம் செய்தான் நிரயம் புகும்.'
என்பது உணர்த்திற்று.

'இழிவறிந்து உண்பான்கண் இன்பம் எய்தும்.'[1]
என்ற வழிக்
'கழிபே ரிரையான் இன்பம் எய்தான்.'[2]
என்பதும் இனப்பொருளை உணர்த்திற்று.

'கீழ்ச்சேரிக் கோழி அலைத்தது,' என, 'மேற்சேரிக் கோழி அலைப்புண்டது'ம் அது.

'ஆ வாழ்க! அந்தணர் வாழ்க!'
என்பன, இனம் செப்பாதன. அருத்தாபத்தி இனம் செப்புமாறு, தன்னோடு மறுதலைப்பட்டு நிற்பது ஒன்று உள்வழி ஆயிற்று. மறுதலைப்பாடு பல உள்வழிச் செப்பாது. ஆவிற்கு மறுதலை, 'எருமை, ஒட்டகம்' எனப் பல உள; அந்தணர்க்கு மறுதலை, 'அரசர், வணிகர், வேளாளர்' எனப் பிறரும் உளர். அங்ஙனம் பல மறுதலை உள்வழிச் செப்பாது.

62] திணை வழுக் காத்தல் [சூ உ

கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவி

1, 2. குறள், 946ன் கருத்து.

பன்மை கூறும் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே.

இதுவும் திணை வழூக் காக்கின்றது.

(இ-ள்.) கண்ணும் தோளும் முலையும் பிறவும் - கண்ணும் தோளும் முலையும் அவை போல்வன பிறவும், பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவி - பன்மையைக் குறித்து நின்ற சினை நிலைமையை உணர்த்திய சொற்கள், தம் வினைக்கு இயலும் எழுத்தலங்கடை - அவை தமக்கு உரிய பன்மை வினைக்கு ஏற்ற அகர ஈற்றால் கூறக் கருதாது தம் முதல் வினைக்கு ஏற்ற ஒருமை ஈற்றானும் பன்மை ஈற்றானும் கூறக் கருதியவழி, பன்மை கூறும் கடப்பாடு இல - தமக்கு உரிய பன்மையால் கூறப்படும் யாப்புறவு உடைய அல்ல (எ-று.)

(உ-ம்.) கண் நல்லள்; முலை நல்லள்.

எனவும்,

கண் நல்லர்; தோள் நல்லர்; முலை நல்லர்.

எனவும்,

கண் நொந்தாள்; தோள் நொந்தாள்; முலை நொந்தாள்.

எனவும் வரும்.

'பிறவும்' என்றதனால், 'புருவம், காது' முதலியனவும் கொள்க.

மூக்கு நல்லள்; கொப்பூழ் நல்லள்.

என ஒருமைச் சினைப்பெயர் நின்று உயர்திணை கொண்டனவும்,

நிறம் கரியள்; கவவுக் கடியள்.

எனப் பண்பும் தொழிலும் நின்று உயர்திணை கொண்டனவும் '**தன்னினம் முடித்த**'லால் கொள்க.

கண் நொந்தது; முலை எழுந்தது.

என்றாற்போல்வன சாதி ஒருமை உணர்த்தலும் இதனால் கொள்க.

கோடு கூரிது கரி; குளம்பு கூரிது குதிரை.

எனப் பன்மைச் சினைப்பெயர் நின்று, முதல் வினையாகிய ஒருமையான் முடிவனவும் கொள்க.

கிளவி ஆக்கம் முற்றும்.

உ. வேற்றுமை இயல்

63] வேற்றுமையின் தொகை [க

வேற்றுமை தாமே ஏழென மொழிப.

என்பது சூத்திரம். இவ்வோத்து, செயப்படு பொருள் முதலியனவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்து உணர்த்தலின், **வேற்றுமை ஓத்து** என்று காரணப்பெயர் பெற்றது. முன்னர் நான்கு சொற்கும் பொது இலக்கணம் உணர்த்திய அதிகாரத்தானே இப்பொது இலக்கணம் கூறுகின்ற ஓத்தினையும் சேரக் கூறினர். 'அப் பொது இலக்கணம் என்னை?' எனின், வேற்றுமை தாமும் பெயரும் ஒருசார் வினைச்சொல்லும் இடைச் சொல்லும் உரிச்சொல்லுமாகிய பொது இலக்கணமாதல் உடைமையானும்,

'எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.'[1]

எனவும்,

'அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே.'[2]

எனவும்,

'ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.'[3]

எனவும்,

'பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா.'[4]

எனவும், தொழிற்பெயர் காலம் தோன்றும் எனவும் மேற்கூறும் சிறப்புடைப்பெயர்க்குப் பொது இலக்கணம்

---

1. வேற்றுமையியல், சூ. 4.
2. ௸ ௸ 5.
3. வேற்றுமையியல், சூ. 8.
4. ௸ ௸ 9.

ஈண்டுக் கூறுதல் உடைமையானும் இவ்வோத்துப் பொது இலக்கணமே கூறியதாயிற்று.

'ஆயின், வேற்றுமை மயங்கியலும் விளி மரபும் இடை வைத்தது என்னை?' எனின், இவ்வேற்றுமையின் மயக்கம் யாப்புடைமையின் வேறு ஓத்தாக்கி, விளி இவைபோற் சிறப்பின்மையின் வேறு ஓர் ஒத்தாக்கி வைத்தார். இங்ஙனம் வைத்துப் பின்னர்ச் சிறந்த பெயர் வினை இடை உரிகளை முறையே கூறி, இவற்றுள் எஞ்சி நின்ற இலக்கணத்தை எச்சவியலிற் கூறினர் என்று உணர்க.

'பொருண்மை சுட்டல்'[1] முதலிய ஆறு பொருளையும் குறித்து அவற்றால் தான் வேறுபட நிற்றலானும், முடிக்கும் சொல்லைத் தான் விசேடித்து நிற்றலானும் எழுவாயும் வேற்றுமையாயிற்று.

இச்சூத்திரம், 'வேற்றுமை இனைத்து,' என்கின்றது.

(இ-ள்.) வேற்றுமை தாமே எழென மொழிப - வேற்றுமையாவன எழென்று சொல்லுவர் தொல்லாசிரியர் (எ-று.)

'தாமே' என்பது சந்த இன்பம் செய்து நின்றது.

64] இதுவும் அது. [உ

விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

இஃது, ஒழிந்த வேற்றுமையும் கூறித் தொகை கூறுகின்றது.

(இ-ள்.) விளி கொள்வதன்கண் விளியோடு - விளி ஏற்கும் பெயர்க்கண்ணதாகிய விளியோடு முற்கூறியவற்றைத் தலைப்பெய்ய, எட்டே - வேற்றுமை எட்டாம் (எ-று.)

'விளி கொள்வதன்கண் விளி' என்றதனால், 'பிறிதோர் இடைச்சொல்லை ஏலாது தானே திரிந்தும் இயல்பாயும் நிற்கும் பெயர் இறுதி விளி,' என்பது பெற்றாம்.

1. வேற்றுமையியல், சூ. 5.

65] வேற்றுமைகளின் பெயரும் முறையும் [௩

அவைதாம்,
பெயர்ஐ ஒடுகு
இன்அது கண்விளி என்னும் ஈற்ற.

இஃது, அவற்றின் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) அவைதாம் - எட்டு எனப்பட்ட வேற்றுமையாவன, விளி என்னும் ஈற்ற - விளி வேற்றுமையை இறுதியாக உடைய, பெயர் ஐ ஒடு கு இன் அது கண் - பெயரும் ஐயும் ஒடுவும் குவ்வும் இன்னும் அதுவும் கண்ணுமாம் (எ-று.)

'சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்,' என்பதனான் ஒடுவும் அதுவும் ஓதினாரேனும், மூன்றாவதற்குச் சிறுபான்மை ஓடும் ஆனும், ஆறாவதற்கு அகர ஈறும் ஆதுவும்* கொள்க.

66] எழுவாய் வேற்றுமை [௪

அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

இது, முறையானே எழுவாய் வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - மேற்கூறிய வேற்றுமை எட்டனுள், எழுவாய் வேற்றுமை-முதல் வேற்றுமையாவது, பெயர் தோன்றும் நிலையே - பெயர்ப்பொருள் அறுவகைப்பட்ட பயனிலையும் தன்கண் தோன்ற நிற்கும் நிலைமை (எ-று.)

அஃது, உருபும் விளியும் ஏலாது நிற்கும் நிலையது ஆயிற்று.

(உ-ம்.) மக்கள், ஆ
என வரும்.

'இதனை முற்கூறியது என்னை?' எனின், 'சாத்தன் குடத்தைக் கையால் வனைந்து கொற்றற்குக் கொடுத்

பி-ம்: * அதுவும்

தான்,' என வினைமுதல் நின்று ஏனையவற்றை நிகழ்த்து தல் வேண்டுதலின். அவ்வினை முதலாகிய எழுவாயை முற்கூறினர், அன்றியும் மேல் இரண்டாவது மூன்ருவது என்று ஆளுமிடத்து இதனை முதல் வேற்றுமை என்றே ஆள வேண்டுதலின். அப்பொருள் தருதற்கு முன்னிற் சூத்திரத்திற் பெயரென்று கூறிய அதற்கே 'எழுவாய் வேற்றுமை' என்று வேருேர் பெயர் கொடுத்தார். இதற்கு இப்பெயர் கூறிய அதனுனே உருபும் விளியும் ஏற்பனவற்றைப் பெயர் என்று வழங்குதல் பெற்ரும். அஃது, 'ஈறு பெயர்க்கு ஆகும்,'[1] என்றதனுனும் உணர்க.

67] எழுவாய் பயனிலை ஏற்குமாறு [ரு

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினை நிலை உரைத்தல் வினுவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே.

இஃது, அவ்வெழுவாய் ஆறு பயனிலையும் ஏற்கும் என்கின்றது.

(இ-ள்.) பொருண்மை சுட்டல் - ஒரு பொருளினது பண்பு முதலியன சுட்டாது அப்பொருட்டன்மையது உண்மைத்தன் மையே சுட்டி நிற்க வருதல், வியங்கொள வருதல் - தான் ஏவலைக் கொள்ள வருதல், வினை நிலை உரைத்தல் - தனது தொழிலினைச் சொல்ல வருதல், வினுவிற்கு ஏற்றல்-தான் வினுவிற்குப் பொருந்தி வருதல், பண்பு கொள வருதல் - தனது பண்பினைத் தான் கொள்ள வருதல், பெயர் கொள வருதல் - தான் பெயரைக்கொண்டு முடிய வருதல், என்று அன்றி அனைத்தும் - என்று சொல்லப்பட்ட அவ்வனைத்து வரவும், பெயர்ப்பயனிலையே - அவ்வெழுவாய் வேற்றுமையது பயனுகிய நிலைமை (எ-று.)

தன்னை முடித்தற்குப் பின் வரும் சொல்லின் பொருண்மையைத் தான் அவாவி நிற்கும் நிலை வேறுபாட்டைப் பயனிலை என்ருர்.

---

1. வேற்றுமையியல், சூ. 8.

(உ-ம்.) ஆ உண்டு, ஆ செல்க, ஆ கிடந்தது, ஆ யாது? ஆ எவன்? ஆ கரிது, ஆ பல.

என வரும்.

'தன்னினம் முடித்தல்' என்பதனான்,

ஆ இல்லை, ஆ அல்ல.

என வினைக்குறிப்பும் கொள்க.

'பொருள்' என்னது 'பொருண்மை' என்றார், அப்பொருளினது தன்மை உணர்த்துதற்கு. பொருள் தன்மையாவது, அப்பொருள்களின் சாதித்தன்மை. 'ஆ என்னும் பொருள் கெட்டதேனும், அவ்வாவினது சாதித் தன்மை எக்காலத்தும் கெடாது நிற்கும்,' என்பது உணர்த்துதற்கு, 'ஆ உண்டு,' என்றார். 'கட்புலனாகிய ஆ கெடவும், அச்சாதித்தன்மை கெடாது,' என்பது தோன்றப் 'பொருண்மை சுட்டல்' என்று சூத்திரம் செய்தார்.

வினை நிலை உரைத்தல், தன் தொழில்; வியங்கொள வருதல், மேல் தன்கண் தொழில் நிகழ்வதாக ஒருவன் ஏவப்படுதல். இரண்டற்கும் இதுவே வேறுபாடு.

வினை நிலை உரைத்தலும், பண்பு கொள வருதலும், பெயர் கொள வருதலும், முடிக்கும் சொல் ஆதலே அன்றி, முடிக்கப்படும் சொல் ஆதலும் உடைய. வியங்கோளும் வினவும், முடிக்கும் சொல்லாயல்லது நில்லா. வினைக்குறிப்பு, முடிக்கும் சொல்லாயல்லது வராது.

'ஆ பல,' என்பது பிறிது ஓர் சொல் நோக்காது, ஆ என்பதனோடு அமைந்து மாறும்.

முன்னிற்சூத்திரத்துத் 'தோன்று நிலை'[1] என்றதனானே 'ஆயன் சாத்தன் வந்தான்,' எனப் பண்பு ஒட்டு ஆகாது விட்டிசைத்து நின்று மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலை கோடலும், 'ஆயன் வந்

1. வேற்றுமையியல், சூ. 4.

தான் சாத்தன்,' என வினைப்பின்னும் நிற்றலும், 'சாத்தன் தலைவன் ஆயினன்,' எனப் பயனிலைக்கு அடையாய் நிற்றலும், 'சாத்தன் கண் நல்லன்,' எனச் சினைவினை முதற்கு ஏற்றிக் கூறலும், 'இம்மணி நிறம் நன்று,' எனப் பண்பின் தொழிலைப் பண்பு அடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், 'இக்குதிரை நடை நன்று,' எனத் தொழிலின் தொழிலைத் தொழில் அடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், 'இவ்யாறு நீர் ஒழுகும்,' என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றிக் கூறலும், 'இறைவன் அருளல் எம் உயிர் காக்கும்; இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும்,' என எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர் தானும் எழுவாயாய்ப் பயனிலை கோடலும், அஃது உருபு ஏற்றலும், 'ஆ செல்க; செல்க ஆ,' என முன்னும் பின்னும் பயனிலை நிற்றலும் பிறவும் கொள்க.

'சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே.'[1]

எனவும்,

'கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி'[2]

எனவும் வரும் பண்புகளும் பொருள் இயைபு இன்றேனும் பெயர்கொள வருதற்பாற்படுதலும், 'ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்,' எனப் பல பெயர் ஒருங்கு எழுவாயாய் நின்று ஒரு பயனிலை கோடலும் இதனாற்கொள்க. இன்னும் எழுவாய் வேற்றுமையின் விகற்பமெல்லாம் வழக்கினகத்து அறிந்து இவ்விலேசான் முடித்துக்கொள்க.

68] தொகைப்பெயரும் பயனிலை கொள்ளல் [சூ

பெயரி ஞகிய தொகையுமா ருளவே;
அவ்வும் உரிய அப்பா லான.

இது, தொகைப்பெயரும் பயனிலை கொள்ளும் என்கின்றது.

1. நற்றிணை, 50. 2. புறம். 117:6.

(இ-ள்.) பெயரினாகிய தொகையுமாருளவே - பெயரும் பெயரும் தொக்க தொகையும் உள (உம்மையால், பெயரும் வினையும் தொக்க தொகையும் உள); அவ்வும் உரிய அப்பாலான - அவ்விரண்டனுள் பெயரும் பெயரும் தொக்க தொகையும் உரிய அவ்வெழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளுமிடத்து (எ-று.)

'அவ்வும் உரிய,' என்றது, இரண்டற்கும் பொது வேனும், 'ஏற்புழிக்கோட'லான் ஒன்றற்கே ஆயிற்று.

(உ-ம்.) யானைக்கோடு கிடந்தது.
மதி முகம் வெயர்த்தது.
கொல்யானை நின்றது.
கருங்குதிரை ஓடிற்று.
உவாஅப் பதினான்கு கழிந்தன. *
பொற்றொடி வந்தாள்.

என வரும்.

'நிலம் கடந்தான்; குன்றத்து இருந்தான்,' எனப் பெயரொடு வினை தொக்கன எழுவாயாய்ப் பயனிலை கொள்ளாது முற்றாய் நிற்கும் என்று உணர்க. இதனால், தொகை இரு வகைய என்பதூஉம் கூறினார் ஆயிற்று.

69] எழுவாய் புலப்பட்டும் புலப்படாதும் நிற்றல் [எ

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இஃது, அவ்வெழுவாய் புலப்பட்டும் புலப்படாதும் நிற்கும் என்கின்றது.

(இ-ள்.) எவ்வயிற்பெயரும் வெளிப்படத் தோன்றி - மூன்றிடத்து எழுவாயும் செவிப்புலனாகத் தோன்றி நின்று, அவ்வியல் நிலையல் செவ்விது என்ப - பயனிலை கோடல் செவ்விது என்ப ஆசிரியர் (எ-று.)

எனவே, அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கோடலும் உண்டு; அது செவ்விது அன்று என்றவாறும்.

பி-ம்: * கழிந்தது.

''அவ்வியல் நிலையல்' என்பது எவ்வியல் நிலையலோ?' எனின், மேற்கூறிய ஆறு பயனிலையும்கொண்டு நிற்றல். செவ்விது, அப்பயனிலை கோடலில் திரியா வாய்ப் பயனிலைப்பட்டு நிற்றல். 'செவ்விது' எனவே, பிறிது ஏற்றற்குச் செவ்விய ஆகாமையும் உடைய; 'அவை நீயிர்,' என்பதும், 'அவ்வாய்க்கொண்டான்,' என்பதும் உருபு ஏற்றற்குச் செவ்விய அல்ல.

'கருவூர்க்குச் செல்வையோ சாத்தா?' என்றவழிச் 'செல்வல்,' எனவும், 'யான் எது செய்வல்?' என்றவழி, 'இது செய்,' எனவும், 'இவன் யார்?' என்றுழிப் 'படைத் தலைவன்' எனவும் செப்பியவழி, 'யான், நீ, இவன்' என்னும் எழுவாய் வேற்றுமை வெளிப்படாது நின்று, 'செல்வல், இது செய், படைத்தலைவன்' என்னும் பயனிலை கொண்டவாறு காண்க.

70] உருபு நிற்கும் இடம் [அ

கூறிய முறையின் உருபுநிலை திரியா
தீறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.

இஃது, உருபு நிற்கும் இடம் கூறுகின்றது.

(இ-ள்.) கூறிய முறையின் உருபு நிலை திரியாது - மேல் ஐ ஒடு கு இன் அது கண் என்று கூறிய முறைமையை உடைய உருபுகள் தத்தம் நிலை திரியாது, பெயர்க்கு ஈறு ஆகும் இயற்கைய என்ப - பெயர்க்கு ஈறு ஆகும் இயல்புடைய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண்

என வரும்.

இவ்விடைச்சொற்கள் பெயர்க்கு உறுப்பு ஆகாது தாம் என வேறு உணரப்பட்டு இறுதி நிற்றலின், 'நிலை திரியாது' என்றார். எனவே, வினைக்குத் தாம் என வேறுபடாது நிற்கும் ஆயின.

71] பேயர்க்கு ஓர் இலக்கணம் [கூ

பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே.

இது, பெயர்க்கு ஓர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) பெயர்க் கிளவி - பெயர்ப்பெயராகிய சொல்லும், நிலைக்கிளவி - அப்பெயரது நிலையிலே நிற்றலை உடைய சொல்லும், காலம் தோன்றா - காலம் தோன்றாவாய் நிற்கும், தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே-ஒரு பொருளது புடை பெயர்ச்சியாய்க் காலம் தோன்றுதற்குப் பொருந்தும் ஒரு கூற்றுத் தொழிற்பெயர் அல்லா இடத்து (எ-று.)

'பெயர், தொழில் நிலை' என்பன ஆகுபெயர். பெயர், பொருள்; தொழில் நிலை, காலம்; ஒட்டும், பொருந்தும்.

இதனால், திணையும் பாலும் காலமும் இடனும் தோன்றும் தொழிற்சொல் படுத்தல் ஓசைப்பட்டு நின்றால், தொழிற்பெயராய் நின்று, பயனிலை கொண்டும் உருபு ஏற்றும் காலத்தைத் தோற்றுவித்தலும்; பெயர்ப்பெயரும், பெயரது நிலையிலே நிற்றலையுடைய சொல்லும் காலத்தை யாண்டும் தோற்றுவியாமையும் கூறினார்.

இடுகுறியாய்ச் 'சாத்தன், கொற்றன்' என வரும் பெயர்ப்பெயரும், புடைபெயர்ச்சி மாத்திரம் உணர்த்தி நிற்கும் 'உண்டல், தின்றல்' என வரும் வினைப்பெயரும், 'பூசல், வேட்டை' என்றாற்போலப் புடை பெயர்ச்சி விளக்காது நிற்கும் வினைப்பெயரும், 'உண்டான், தின்றான்' என்றாற்போலக் காலம் தோன்றி வினைமுதன் மேல் நின்ற படுத்தல் ஓசையான் ஆம் தொழிற்பெயரும், ஓசை வேறுபாட்டான் அன்றி 'உண்டவன், உண்ணுமது' என்றாற்போலத் தானே பெயராய்க் காலம் தோன்றி வினைமுதன்மேல் நிற்கும் தொழிற்பெயரும்,

'கோலவர் கொடுமரம் தேய்த்தார்.'[1]

அவன் ஏறிற்றுக் குதிரை.

என்றாற்போலச் செயப்படுபொருட்கண் காலம் காட்டி நின்ற தொழிற்பெயரும், 'யான் சொன்னவன், உண்பது* நாழி'[2] என்றாற்போலச் செயப்படுபொருண்மேல் பெயராய்க் காலம் தோன்றி நிற்கும் தொழிற்பெயரும், பிறவாற்றாய் வரும் பெயர் வேற்றுமையும் உணர்க.

72] இரண்டாம் வேற்றுமையின் பொருள் [க0

இரண்டா குவதே,
ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலின் தோன்றும் அதுவே.

இது, முறையே இரண்டாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி இரண்டாகுவதே - 'பெயர் ஐ ஒடு கு இன் அது கண்'[3] என்னும் சூத்திரத்து ஐ எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் இரண்டாவது ஆம்; அது எவ்வழி வரினும் - அஃது யாண்டு வரினும், வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலின் தோன்றும் - வினைச் சொல்லினும் வினைக்குறிப்புச் சொல்லினும் பிறந்த செயப்படு பொருளாகிய அவ்விரண்டு காரணத்தின்கண்ணும் தோன்றும் (எ-று.)

'பெயரிய' என்பது, 'கவிரம் பெயரிய'[4] என்றாற் போல நின்றது.

'வினை, வினைக்குறிப்பு' என்பன ஈண்டு ஆகுபெயர், அம்முதனிலைகளால் பிறந்த அச்சொற்களை உணர்த்தலின்.

'முதல்' என்றது காரணத்தை. 'ஆயெட் டென்ப தொழின்முத னிலையே'[5] என்றமையால், அக்காரணங்

பி-ம்: * உண்பவை.

1. கலி. 12 : 1, 2. 2. புறம். 189 : 5. 3. வேற்றுமையியல், சூ. 3.
4. அகம், 198 : 15. 5. வேற். மயங். சூ. 29.

கள் எட்டு உளவேனும், 'ஏற்புழிக்கோடல்' என்பதனல் செயப்படுபொருளே ஈண்டுக் கோடும்.

காரியத்தை நிகழ்த்துவிப்பது காரணம்.

ஒரு வினைமுதல் செய்யும் தொழிலினை உறுவது செயப்படுபொருள்.

(உ-ம்.) குடத்தை வனைந்தான்.
குழையை உடையன்.

என வரும்.

'எவ்வுழி வரினும்' என்றதனன்,

புகழை நிறுத்தல்
புகழை உடைமை

என வினைப்பெயரிற் புடைபெயர்ச்சி பற்றியும் முடியும்.

இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப் படுவதும் எனச் செயப்படுபொருள் மூன்ரும். அவை முறையே இல்லதனை உண்டாக்கலும், உள்ளதனைத் திரித்தலும், தொழிற்பயனுறுந் துணையாய் நிற்றலும் ஆம். இவ்வுருபை முடித்தற்கு மேலிற் 'காப்பு' முதலிய வாய்பாடு பற்றி வரும் பொருள்களை இம்மூன்று கூற்ருனும் பகுக்கின்ருர், ஈண்டு வினை மாத்திரையும் வினைப்பெயரு மாகப் பகுப்பர்.

'குடத்தை வனைந்தான்,' என்றது, மேல் வரும் 'இழை' என்னும் இயற்றப்படும் பொருள். அஃது, 'எயிலை இழைத்தான்,' என வரும். என்றது, 'எயிலை இழைத்தலைச் செய்தான்,' என்னும் பொருட்டு. 'இழை' என்னும் வினை மாத்திரையை உணர்த்தும் முதனிலைப் பெயர் நின்று, முன்னர் 'இழைத்தல்' என வினைப்பெயரையும் தோற்றுவித்து, 'இழைத்தலை' என்னும் உருபையும் ஏற்பித்து, 'செய்தான்' என வினை ஒழிந்த காரணங்கள் ஏழானும் நிகழும் காரியத்தினையும் தோற்றுவித்து நிற்றலின், 'இழை' என்னும் முதனிலைப்பெயரை வேற்றுமைப் பொருளாக எடுத்து ஓதினர். இப்பொருட்கண்

தோன்றிய 'செய்தான்' என்னும் காரியத்துடன் அல்லது 'எயிலை' என்னும் இரண்டாவது முடியாமை உணர்க. என்னை? செய்தற்கு இழைத்தல் செயப்படு பொருள் நீர்மைத்தாய்க் காரணமாய் நிற்றலானும், ஒழிந்த காரணங்கள் தன்கண் நிகழ்ந்து காரியமாம் தன்மை இழைத்தற்கின்றும் ஆதலானும் என்பது. இவ்வாறே மேலிற் சூத்திரத்து ஒழிந்த பொருள்களையும் விரிக்க.

இனி, வினைக்குறிப்பிற்கும் 'குழையை உடையன்' என்புழி உடையன் எனக் கருதுதல் வினை; அக்கருத்தை நிகழ்த்துகின்றான் வினைமுதல்; அக்குழை அவன் கருத்து நிகழ்த்தப்படும் பொருளாய்க் கிடக்கின்ற தன்மை செயப்படு பொருள். இவ்வாறே ஒழிந்தனவும் குறிப்பால் காண்க.

73] இரண்டாவதன் பொருள் பற்றிய வாய்பாடுகள் [௭௧

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின்* என்று
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனர்.

இஃது, அதனை முடிக்கும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) காப்பின்........சிதைப்பின் என்று - காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருளும், அன்ன பிறவும் அம்முதற்பொருள என்ன கிளவியும் -

---

பி-ம்: * பழிப்பின்

அவை போல்வன பிற பொருளுமாகிய அச்செயப்படு பொருள் மேல் வரும் எல்லாச் சொல்லும், அதன்பால என்மனார் - அவ் விரண்டாம் வேற்றுமையின் கூற்றன என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 1. எயிலை இழைத்தான்—இவ்வியற்றப்படுவது ஒரு தன்மைத்து ஆகலின், ஒரு வாய்பாடே கூறினார்.

2. கிளியை ஒப்பும், பொருளை இழக்கும் - இவற்றிற்கு வேறுபாடு, ஒரு தொழில் உறுவிக்கப் பட்டுத் தானே போதலும் தொழிற்பயன் உற்ற மாத்திரையாய் ஒருவன் கொண்டு போகப் போதலும்.

நாணை அறுக்கும், மரத்தைக் குறைக்கும்—இவற்றிற்கு வேறுபாடு, சிறிது இழவாமல் வேறு படுத்தலும், சிறிது இழக்க வேறு படுத்தலும், பெருமையைச் சுருக்குதலும்.

நெல்லைத் தொகுக்கும், வேலியைப் பிரிக்கும்—இவற்றிற்கு வேறுபாடு, விரிந்தது தொகுத்தலும் தொகுத்தது விரித்தலும்.

அறத்தை ஆக்கும், நாட்டைச் சிதைக்கும்—இவற்றிற்கு வேறுபாடு, மிகுத்தலும் கெடுத்தலும்.

இவ்வெட்டும் வேறுபடுக்கப்படுவன.

3. ஊரைக் காக்கும், தந்தையை ஒக்கும், தேரை ஊரும், குரிசிலைப் புகழும், நாட்டைப் பழிக்கும், புதல்வனைப் பெறும், மனைவியைக் காதலிக்கும், பகைவரை வெகுளும், செற்றாரைச் செறும், நட்டாரை உவக்கும், நூலைக் கற்கும், பொன்னை நிறுக்கும், அரிசியை அளக்கும், அடைக்காயை எண்ணும், ஊரைச் சாரும், நெறியைச் செல்லும், சூதினைக் கன்றும், கணையை நோக்கும், கள்ளரை அஞ்சும் எனப் பத்தொன்பதும் எய்தப்படுவன.

இவை தாம் தொழிலுறுவனவும் தொழிற்பயன் உறுவனவுமாய் வரும் வேறுபாடும் உணர்க. வெகுடலும் செறலும் கொலைப்பொருளாய வழி வேறுபடுக்கப் படுவன. செறல், வெகுளியது காரியம்; உவத்தல், காதலது காரியம்.

இனிச் செய்வான் கருத்து இல்வழி நிகழும் செயப்படு பொருளும், செய்வானும் செயப்படு பொருளும் தானேயாய் நிற்பனவும் கொள்க.

(உ-ம்) சோற்றைக் குழைத்தான்.
சாத்தன் தன்னைக் குத்தினான்.

என வரும்.

இன்னும் இச்செயப்படு பொருள் தன்கண் தொழில் நிகழ்ந்தும் நிகழாதும் வரும்: அறுத்தல் முதலியன தன்கண் நிகழ்வன; சார்தல் முதலியன தன்கண் நிகழாதன.

'அன்ன பிறவும்' என்றதனால், 'பகைவரைப் பணித்தான்; சோற்றை அட்டான்; குழையை உடையன்; பொருளை இலன்,' என்றாற்போல்வன கொள்க.

இச்சூத்திரம் 'தொகுத்த மொழியான்* வகுத்தனர் கோடல்'[1]

74] மூன்றாம் வேற்றுமையின் பொருள் [கஉ

மூன்றா குவதே,
ஒடுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே.

இது, முறையானே மூன்றாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) ஒடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி மூன்றாகுவதே - மேல் ஒடு எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் மூன்றாவதாம்; அது வினைமுதல் கருவி அனைமுதற்று - அது வினைமுதலும் கருவியுமாகிய அவ்விரண்டு காரணத்தையும் பொருளாக உடைத்து (எ-று.)

பி-ம்: * மொழியின் 1. மரபியல், சூ. 110.

மேல் 'அதனின் இயறல்'[1] முதலியன ஆன் உருபிற்கு ஏற்ப உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தலின், அவற்றிற்கு முற்கொண்ட ஓடு என்பதற்கும் ஆல் என்பதற்கும் வினைமுதல் கருவி கொள்க. ஆன், ஆலாய்த் திரிந்தும் நிற்கும்.

'வினைமுதல், கருத்தா' என்பன ஒன்று. கருத்தா நின்று தன்னை ஒழிந்த கருவி முதலிய காரணங்கள் ஏழனையும் காரியத்தின்கண் நிகழ்த்துதலின், அதனை வினைமுதல் என்றார்.

இஃது, இயற்றும் வினைமுதலும் ஏவும் வினைமுதலும் என இரு வகைப்படும். 'கொடியொடு துவக்குண்டான்,' என்பது, இயற்றும் வினைமுதல். அது, 'கொடி தன்னொடு துவக்குதலைச் செய்யப்பட்டான் சாத்தன்,' என்னும் பொருட்டு. கொடியினது நிகழ்ச்சி, ஈண்டுக் கருவி. கொடி சாத்தனைத் தொழிலுறுவிக்குங்கால் தான் அவனை நீங்கா உடனிகழ்ச்சியை விளக்கிற்று ஒடு என் உருபு. 'அரசனால் இயற்றப்பட்ட தேவ குலம்,' என்பது, ஏவும் வினைமுதல்.

இனி, 'கருவி, காரணம், ஏது, நிமித்தம்' என்பன, தம்முள் வேறுபாடு உடையவேனும், ஒத்த பொருளன.* அக்காரணம் முதற்காரணமும் துணைக்காரணமும் என இரு வகைப்படும். முதற்காரணமாவது, காரியத்தோடு ஒற்றுமையுடையது; துணைக்காரணமாவது, அம்முதற் காரணத்திற்குத் துணையாகிய வினை முதலிய எட்டும். அக்கருவியாவது, வினைமுதற்றொழிற்பயனைச் செயப்படு பொருட்கண் உய்ப்பது. அதுவும் இயற்றுதற்கருவியாகிய காரகக் கருவியும், அறிதற்கருவியாகிய ஞாபகக் கருவியும் என இரு வகைப்படும். 'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்' என்பது காரகக் கருவி. அஃது, 'ஊசி

பி-ம்: * 'பொருட்டு' என்பது முன் பதிப்புப் பாடம்.

1. வேற்றுமையியல், சூ. 13.

கொண்டு சாத்தன் குயிலுதலைச் செய்யப்பட்ட தூசும் பட்டும்' என்னும் பொருட்டு. சாத்தன் தொழிற்பயனை ஊசி தூசிலும் பட்டிலும் நிகழ்த்திற்று. இது துணைக் காரணம். 'மண்ணான் இயன்ற குடம்'—முதற்காரணம். இதுவும் காரகக் கருவி. 'உணர்வினான் உணர்ந்தான்; புகையினான் எரியுள்ளது உணர்ந்தான்'—இவை ஞாபகக் கருவி. இவற்றிற்கு உணர்வு முதற்காரணம். காரகமாவது, தொழிலை இயற்றுவிப்பது. ஞாபகமாவது, அறிவிப்பது.

இனி, ஆல் 'அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது; வேலால் எறிந்தான்,' எனவும், ஓடு,

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'[1]
'காவோடு அறக்குளம் தொட்டானும்'[2]
'நாவீற் றிருந்த புலமா மகளோடு நன்பொற்
பூவீற் றிருந்த திருமா மகள்'[3]

எனவும் வரும்.

'இதுநனி பயக்கும் இதனான் என்னும்.'

இஃது, ஆன் வந்தது.

75] மூன்றாவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள் [கரு

அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) அதனின் இயறல் - ஒன்றான் ஒன்று பண்ணப்படுதல் என்னும் பொருண்மை, அதற்றகு கிளவி - ஒன்றனான்

1. குறள், 140. 2. திரிகடுகம், 70. 3. சீவக. 30.

ஒன்று தருதல் என்னும் பொருண்மை, அதன் வினைப்படுதல் - ஒன்றனான் ஒன்று தொழிலுறுதல் என்னும் பொருண்மை, அதனின் ஆதல் - ஒன்றனான் ஒன்று ஆதல் என்னும் பொருண்மை, அதனிற்கோடல் - ஒன்றனான் ஒன்றைக் கோடல் என்னும் பொருண்மை, அதனொடு மயங்கல் - ஒன்றனோடு ஒன்று மயங்குதல் என்னும் பொருண்மை, அதனோடு இயைந்த ஒரு வினைக் கிளவி - ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒரு வினை ஆகல் என்னும் பொருண்மை, அதனோடு இயைந்த வேறு வினைக் கிளவி - ஒன்றனோடு ஒன்று இயைந்த வேறு வினை ஆகல் என்னும் பொருண்மை, அதனோடு இயைந்த ஒப்பு அல் ஒப்புரை - ஒன்றனோடு ஒன்று இயைந்த ஒப்பு அல்லாத ஒப்பினை உரைத்தல் என்னும் பொருண்மை, இன் ஆன் ஏது - இன்னும் ஆனுமாகிய ஏதுப் பொருண்மை, என வரூஉம் - என்று சொல்லப்பட்டு வரும் பத்தும், ஈங்கு வரூஉம் அன்ன பிறவும் - வினைமுதலும் கருவியுமாகிய பொருளிடத்து வரும் அவை போல்வன பிற பொருள்களும், அதன்பால என்மனார் - அம்மூன்றுவதன் கூற்றன என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) மண்ணான் இயன்ற குடம்
வாயான் தக்கது வாய்ச்சி
அறிவான் அமைந்த சான்றோர்

இவை கருவி.

நாயாற்கோட்பட்டான்.
சாத்தனான் முடியும் இக்கருமம்.

இவை வினைமுதல்.

வாணிகத்தான் ஆயினான்.
காணத்தாற்கொண்ட அரிசி

இவை கருவி, ஆன் உருபான் வந்தன.

எண்ணோடு விராய அரிசி
ஆசிரியனோடு வந்த மாணாக்கன்
'மலையோடு பொருத மாஅல் யானை' (மலைக்கு வினை இன்மையின், இது வேறு வினை ஆயிற்று.)

'பொன்னோடு இரும்பனையர் நின்னொடு பிறரே.'
(பொன்னோடு இரும்பை உவமித்தலை ஒப்பார் நின்னோடு பிறரை உவமிக்குமிடத்து என்றவாறு.)

இவை **வினைமுதல்,** ஒடு உருபான் வந்தன.

முயற்சியின் பிறத்தலான் ஒலி நிலையாது—இதனுள் 'முயற்சியின்' என்பது காரக ஏது; 'பிறத்தலான் ஒலி நிலையாது,' என்பது ஞாபக ஏது. ஐந்தாவதற்கு உரிய ஏதுவும் ஈண்டு ஓதினது, ஏதுவை வரையறுத்தற்கு.

'அன்ன பிறவும்' என்றதனல்,

கண்ணாற்கொத்தை—இது சினை வினை முதற்கு ஏறியது.

'உறழ்மணியான் உயர்மருப்பின.'[1]

'பெண்டகையாற் பேரமர்க் கட்டு.'[2]—இவை, ஆன், ஒடுவாயின.

'மனத்தோடு வாய்மை மொழியின்'[3]—ஒடு, ஆன் ஆயிற்று.

மதியோடு ஒக்கும் முகம்—இஃது ஒப்பு.

சூலோடு கழுதை பாரம் சுமந்தது—இது கட்புலனாகா ஒரு வினை ஒடு.

இவை முதலியன கொள்க. இவற்றின் வேறுபாடு உய்த்து உணர்க.

76] நான்காம் வேற்றுமையின் பொருள் [கசு

நான்கா குவதே,
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே.

இது, முறையானே நான்காவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி நான்காகுவதே-மேல் கு எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்று

1. புறம். 22 : 2. 2. குறள், 1083. 3. குறள், 295.

மைச்சொல் நான்காவதாம்; அது எப்பொருளாயினும் கொள்ளும் - அஃது யாதானுமொரு பொருளாயினும் அதனைத் தான் ஏற்று நிற்கும் (எ-று.)

(உ-ம்.) அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான்.

என வரும்.

மாணுக்கர்க்கு நூற்பொருள் உரைத்தான்.

எனக் கொடைப்பொருளவாகிய சொல்லானன்றிப் பிற வாய்பாட்டால் கூறுவனவும்,

மாணுக்கர்க்கு அறிவு கொடுத்தான்.

எனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கண் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் அடங்குதற்கு 'எப்பொருளாயினும்' என்றார்.

77] நான்காவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள் [கரு

அதற்குவினை உடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட்டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனர்.

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) அதற்கு வினை உடைமை-ஒன்றற்கு ஒன்றுபயன் படுதல், அதற்கு உடம்படுதல் - ஒன்றற்கு ஒரு பொருளை மேற் கொடுப்பதாக உடம்படுதல், அதற்குப் படு பொருள் - ஒன்றற்கு உரிமை உடையவாகப் பொதுவாகிய பொருளைக் கூறு இடப்படுதல், அது ஆகு கிளவி - உருபு ஏற்கும் பொருள் தானேயாய்த் திரிவதோர் பொருண்மை, அதற்கு யாப்புடைமை- ஒன்றற்கு ஒன்று பொருத்தமுடைத்தாதல், அதற்பொருட்டு ஆதல் - ஒரு பொருளினை மேற்பெறுதல் காரணமாக ஒரு தொழில் நிகழ்தல், நட்பு - ஒன்றற்கு ஒன்று நட்பாதல், பகை- ஒன்றற்கு ஒன்று பகையாதல், காதல் - ஒன்றற்கு ஒன்று காதல்

உடைத்தாதல், சிறப்பு - ஒன்றற்கு ஒன்று சிறத்தல், என்ற கிளவியும் - என்று சொல்லப்பட்ட பொருள்களும், அப்பொருளும் - அன்ன பொருள்களும், அதன் பால என்மனார் - அந் நான்கன் உருபின் கூற்றன என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) கரும்பிற்கு வேலி

'நிலத்துக் கணியென்ப நெல்லும் கரும்பும்,'[1] என்பதும் அது. வினை, உபகாரம்.

சாத்தற்கு மகள் உடம்பட்டார்.

'சான்றோர் கொலைக்கு உடம்பட்டார்,' என்பதும் அது.

சாத்தற்குக் கூறு கொற்றன்.

கடி சூத்திரத்திற்குப் பொன்

பொன் கடி சூத்திரமாய்த் திரியும் ஆதலின், 'அதுவாகு கிளவி' என்றார். கிளவி, பொருள்.

கைக்கியாப்புடையது கடகம்.

'உண்டி வெய்யோர்க் குறுபிணி எளிது.'[2] என்பதும் அது.

கூழிற்குக் குற்றேவல் செய்யும்.

அவர்க்கு நட்டான்.

'அவற்குத் தமன்' என்பதும் அது.

அவற்குப் பகை

'கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை'[3] என்பதும் அது.

நட்டார்க்குக் காதலன்

'புதல்வற்கு அன்புறும்' என்பதும் அது.

வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய அரசர்.

'கற்பார்க்குச் சிறந்தது செவி,' என்பதும் அது.

'அப்பொருளும்' என்றதனானே,

இச்சொற்குப் பொருள் இது.

1. நான்மணி. 9. 2. முதுமொழி. 77. 3. குறள், 290.

அவர்க்குச் சோறு உண்டு.

நினக்கு வலி வாள்.

அவ்வூர்க்கு இவ்வூர் காதம்.

'மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை.'[1]

'போர்க்குப் புணைமன்.'[2]

'பிணிக்கு மருந்து'[3]

'நட்டார்க்குத் தோற்றலை நாணாதோன்'[4]

'தன்சீ ரியல்நல்லாள் தானவற் கீன்ற மைந்தன்'

அவற்குத் தக்காள் இவள்.

'உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர்.'[5]

என்றாற்போல்வன கொள்க.

78] ஐந்தாம் வேற்றுமையின் பொருள் [கசு

ஐந்தா குவதே,
இன்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
'இதனின் இற்றிது,' என்னும் அதுவே.

இது, முறையானே ஐந்தாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஐந்தாகுவதே - மேல் இன் எனப் பெயர் கொடுத்து ஓதிய வேற்றுமைச் சொல் ஐந்தாவதாம்; அது 'இதனின் இற்று இது,' என்னும் - அஃது 'இப்பொருளின் இத்தன்மையாய் இருக்கும் இப் பொருள்,' என்னும் பொருண்மையை உணர்த்தும் (எ-று.)

ஐந்தாவது, பொருவும் எல்லையும் நீக்கமும் ஏதுவும் என நான்கு வகைப்படும். பொரு, உறழ் பொருவும் உவமப்பொருவும் என இரு வகைப்படும். உறழ்தல், ஒன்றனன் ஒன்றை மிகுத்தல். ஏதுவும், ஞாபக ஏதுவும் காரக ஏதுவும் என இரு வகைப்படும். ஞாபக ஏது முன் கூறிற்று. காரக ஏது, 'அச்சம், ஆக்கம்' என்பனவற்

பி-ம்: * பொருட்டு. 1. நான்மணி. 20. 2. பு. வெ. 80.
3. குறள், 1102. 4. கலி. 43 : 10, 11. 5. இறை. சூ. 14, உரை,

ருல் பெறப்படும். நீக்கப் பொருண்மை, 'தீர்தல், பற்று விடுதல்' என்பனவற்ருல் பெறப்படும். ஏனை இரண்டும் 'இதனின் இற்று இது,' என்பதனுல் பெறப்படும், அவ் விரண்டனையும் அஃது இரு முறையான் உணர்த்தும் ஆதலின். எல்லைப்பொருள்,

கருவூரின் கிழக்கு இவ்வூர்.
இதனின் ஊங்கு

என வரும். இவையும் 'இற்று' என்னும் பொருள.

79] ஐந்தாவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள் [களஎ

வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்ரு
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்ரு
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்ரு
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதல்என்
றன்ன பிறவும் அதன்பால என்மனுர்.

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) வண்ணம்........விடுதல் என்று - வண்ணம் முதலாகப் பற்று விடுதல் ஈருகச் சொல்லப்பட்ட பொருள்களும், அன்ன பிறவும் அதன்பால என்மனுர் - அவை போல்வன பிற பொருள்களும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தன என்று கூறுவர் புலவர் (எ-று.)

வண்ணம், வெண்மை கருமை முதலியன. வடிவு, வட்டம் சதுரம் முதலியன. அளவு, நெடுமை குறுமை முதலியன. சுவை, கைப்புப் புளிப்பு முதலியன. நாற்றம், நறுநாற்றம் தீநாற்றம் முதலியன.

(உ-ம்.) காக்கையிற்கரிது களம்பழம்—'இதனின்' என்பது, காக்கை; 'இற்று' என்பது, கரிது; 'இது' என்பது களம்பழம்.

இதனின் வட்டம் இது.
இதனின் நெடிது இது.
இதனின் தீவிது இது.
இதனின் தண்ணிது இது.
இதனின் வெய்யது இது.
இதனின் நன்று இது.
இதனின் தீது இது.
இதனின் சிறிது இது.
இதனின் பெரிது இது.
இதனின் வலிது இது.
இதனின் மெலிது இது.
இதனின் கடிது இது.
இதனின் முதிது இது.
இதனின் இளைது இது.
இதனின் சிறந்தது இது.
இதனின் இழிந்தது இது.
இதனின் புதிது இது.
இதனின் பழைது இது.
இவனின் இலன் இவன்.
இவனின் உடையன் இவன்.
இதனின் நாறும் இது.
இதனின் பல இவை.
இதனின் சில இவை.

இவற்றிற்கு இருவகைப் பொருவும் விரிக்க.

அச்சம் - கள்ளரின் அஞ்சும்.
ஆக்கம் - வாணிகத்தின் ஆயினன்.
'கோட்டிற்செய்தகொடிஞ்சிநெடுந்தேர்'[1] என்பதும் அது.
தீர்தல் - ஊரின் தீர்ந்தான்; 'தலையின் இழிந்த மயிர் அனையர்'[2] என வரும்.

1. பொருந. 163. 2. குறள், 964.

பற்று விடுதல்—'காமத்திற் பற்று விட்டான்,' எனவரும்.

'அன்ன பிறவும்' என்றதனுன்,

அவனின் அளியன் இவன்.
அதனிற்சேய்த்து இது.
இகழ்ச்சியிற்கெட்டான்.[1]
மகிழ்ச்சியின் மைந்து உற்ருன்.[2]

என்பன போல்வன கொள்க.

80] ஆரும் வேற்றுமையின் பொருள் [கஅ

ஆரு குவதே,
அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
தன்னினும் பிறிதினும் 'இதன திது' எனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

இது, முறையானே ஆருவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஆருகுவதே - மேல் அது எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஆருவதாம்; அது - அவ்வேற்றுமைச்சொல், தன்னினும் - ஒரு பொருளினது உடைமைப் பொருளாகி நிற்கும் தன்னேடு ஒற்றுமையுடைய பொருளானும், பிறிதினும் - ஒரு பொருளினது உடைமைப் பொருளாய் நிற்கும் தன்னின் வேருகிய பொருளானும், 'இதனது இது' எனும் - 'இப்பொருளினுடையது இப்பொருள்' என்பது பட நிற்கும், அன்ன கிளவிக் கிழமைத்து - அன்ன பொருளால் தோன்றும் கிழமையைப் பொருளாக உடைத்து (எ-று.)

ஈண்டுத் 'தன்' என்றது, உருபு ஏற்கும் பொருளை. 'அன்ன' என்ருர், 'இதன இவை' என்னும் பன்மை உருபும், 'ஆது' என்னும் ஒருமை உருபும் அடங்குதற்கு.

(உ-ம.) சாத்தன ஆடை
தனது வெள்வேல்
'யானை வளவன் கொல்லி மீமிசை'

என வரும்.

1, 2. குறள், 539.

ஒன்று பல குழீஇயதும், வேறு பல குழீஇயதும், ஒன்றியற்கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய் திரிந்து ஆயதும் எனத் **தற்கிழமை** ஐந்து வகைப்படும்,

'ஐம்பால் உரிமையும் அதன் தற் கிழமை.'

என்பது **அகத்தியம்** ஆதலின்.

பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையும் எனப் **பிறிதின் கிழமை** மூவகைப்படும்.

81] ஆறுவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள் [கசு

இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்துவேறு படூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றும் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர்.

இஃது, அதனை முடிக்க வரும் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) இயற்கை........வாழ்ச்சியின் - இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்டனவும், திரிந்து வேறு படூஉம் அன்ன பிறவும் - ஒரு சாரன திரிந்து வேறுபடும் அவை போல்வன பிறவுமாகிய, கூறிய மருங்கில் தோன்றும் கிளவி - முற் கூறிய கிழமைப்பொருட்கண் தோன்றும் சொல் எல்லாம், ஆறன் பால என்மனார் புலவர் - ஆறும் வேற்றுமைத் திறத்தன என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 1. எண்ணது குப்பை—இஃது, ஒன்றுபல குழீஇய தற்கிழமை.

2. படையது குழாம்—இது, வேறு பல குழீஇய தற்கிழமை.

3. சாத்தனது இயற்கை,
நிலத்தது அகலம்—இவை, இயற்கைக்கிழமை.

4. சாத்தனது நிலைமை,
சாத்தனது இல்லாமை—இவை, நிலைக்கிழமை.

இந்நான்கும் **ஒன்றியற்கிழமை.**

ஒரு பொருளின் ஏகதேசம் அறிவித்தற்கு 'ஒருவழி உறுப்பு' என்றார். அவை,

யானையது கோடு,
புலியது உகிர்—இவை, உறுப்பின் கிழமை.

செயற்கையாவது, தன் தன்மை திரிந்து வேறோர் தன்மை ஆதல். அவை,

சாத்தனது செயற்கை,
சாத்தனது கற்றறிவு.

முதுமைக் கிழமை,

அரசனது முதுமை,
அரசனது முதிர்வு.

இஃது அறிவின் முதிர்ச்சி என்பது அறிவித்தற்கு இளமை கூறாராயினர்.

வினைக் கிழமை,

சாத்தனது வினை,
சாத்தனது செலவு.

இவை, மெய் திரிந்து ஆய தற்கிழமை.

உடைமைக் கிழமை,

சாத்தனது உடைமை,
சாத்தனது தோட்டம்.

முறைமைக் கிழமை,

மறியது தாய்,
மறியது தந்தை.

கருவிக் கிழமை,

இசையது கருவி,
வினைக் கலத்தது திகிரி.

துணைக் கிழமை,

அவனது துணை,

அவனது இணங்கு.

கலமாவது, ஓலை.

நிலத்தது ஒற்றிக்கலம்,

சாத்தனது விலைத் தீட்டு.

இஃது, இரு பொருட்கு உரிமை உடைமையின், உடைமையின் வேறாயிற்று.

முதற்கிழமை,

ஒற்றியது முதல்,

ஒற்றியது பொருள்.

தெரிந்து மொழிச் செய்தி, தெரிந்து மொழியால் செய்யப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தி ஆயிற்று.

கபிலரது பாட்டு

இது 'பாரியது பாட்டு' எனவும் நிற்றலின், இரு பொருட்கு உரியதாம்.

பரணரது பாட்டியல்

இதுவும் அது. இவை பொருட்பிறிதின் கிழமை.

கிழமைக் கிழமை,

முருகனது குறிஞ்சி நிலம்.

இது நிலப்பிறிதின் கிழமை.

வெள்ளியது ஆட்சி

இது காலப்பிறிதின் கிழமை.

வாழ்ச்சி,

காட்டது யானை.

இது பொருட்பிறிதின் கிழமை.

யானையது காடு.

இது நிலப்பிறிதின் கிழமை.

வாழ்ச்சி, வாழ்தலை உணர்த்துங்கால் தற்கிழமையுமாம்.

'அன்ன பிறவும்' என்றது,

எட்சாந்து,
கோட்டு நூறு.

இவை முழுதுந் திரிந்தன.

சாத்தனது ஒப்பு,
தொகையது விரி,
பொருளது கேடு,
சொல்லது பொருள்.

இவை சிறிது திரிந்தன.

82] ஏழாம் வேற்றுமையின் பொருள் [௨௦

ஏழா குவதே,
கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே.

இது, முறையானே ஏழாவது இப்பொருட்கண் வரும் என்கின்றது.

(இ-ள்.) கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி ஏழாகுவதே - மேல் கண் என்று பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச்சொல் ஏழாவதாம்; அது வினை செய் இடத்தின் நிலத்தின் காலத்தின் அனை வகைக் குறிப்பின் தோன்றும் - அது வினை செய்யாநிற்றலாகிய இடத்தின்கண்ணும் வினை நிகழாது வரையறை உடையதோர் நிலமாகிய இடத்தின்கண்ணும் வினை நிகழாது வரையறைப்பட்டு நிற்கும் காலமாகிய இடத்தின்கண்ணும் என மூவகைக் குறிப்பின்கண்ணும் தோன்றும் (எ-று.)

எனவே, ஏழாவது இடப்பொருட்டு ஆயிற்று.

(உ-ம்.) தட்டுப்புடைக்கண் வந்தான்.
மாடத்தின்கண் இருந்தான்.
கூதிர்க்கண் வந்தான்.

என வரும். இவை இடமும் இடத்து நிகழ் பொருளும் வேறாய் வந்தன.

குன்றத்தின்கண் குவடு

இஃது அவ்விரண்டும் ஒன்றாய் வந்தது.

'குறிப்பின் தோன்றும்,' என்றது, 'அவற்றை இடம் எனக் கருதிய வழியே அவ்வேழன் உருபு தோன்றுவது; அல்லுழித் தோன்றாது,' என்றவாறு.

83] ஏழாம் வேற்றுமையின் உருபுகள் [உக

கண்கால் புறம் அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார்* அயல்புடை தே†வகை எனாஅ
முன் இடை கடைதலை வலம் இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

இஃது, இவ்வேழாவதற்கு முடிக்க வரும் பொருள் வேறுபாடு இன்றி உருபின் பாகுபாடே உடைமையின், உருபின் பாகுபாடே கூறுகின்றது.

(இ-ள்.) கண் - கண் என்னும் பொருளும், கால்....புடை - கால் முதலாகப் புடை ஈறாகச் சொல்லப்பட்ட உருபுகளும், தே வகை எனா - தே வகை என்னும் திசைக்கூற்றுப் பொருண்மையும், முன்....இடம் எனா - முன் முதலாக இடம் ஈறாக ஓதப் பட்ட உருபுகளும், அன்ன பிறவும் - அவை போல்வன பிற உருபுகளும், அதன்பால என்மனார் - ஏழாவதன் கூற்றன என்று கூறுவர் புலவர் (எ-று.)

இச்சூத்திரத்தால் கூறிய உருபுகள் ஓர் இடத்தின் ஏகதேசத்தினை வரையறுத்து உணர்த்தும் வழி ஆறாவ தனை உணர்த்தியும் ஓர் இடத்தினை வரையறுத்துஉணர்த் தாது கண் என்பதுபோல இடம் என முழுதுணர்வு செல்ல நின்றவழி ஏழாவதனையே உணர்த்தியும் நிற்கும் சிறப்பின்மை கருதி வேறாக எடுத்து ஓதினர். ஏழாவ தற்கு இம்மூவகைப் பொருட்பாகுபாடு அன்றி வேறு பொருட்பாகுபாடு இன்மையின், முன்னையன போலப் பொருளினைப் பகுத்து ஓதார் ஆயினர்.

பி-ம்: * சார்பு † தேம்

ஆசிரியர் 'கூறிய முறையின் உருபு',[1] 'இறுதியும் இடையும்' என்னும் சூத்திரங்களால் பெயர் இறுதிக்கும் முடிக்கும் சொற்கும் முன்னிற்பது உருபு என்று கூறினமையால், பொருளிடை நில்லாமையும் பெற்றாம்.

சிறந்த **கண்** என்னும் உருபை முற்கூறி, ஈண்டுக் **கண்** என்பதனைச் சிறப்பில்லா உருபுகளோடு எடுத்து ஓதினார், 'கண்ணகல் ஞாலம்'[3] என்புழி அக் 'கண்' ஞாலந் தன்னையே உணர்த்தி ஓர் இடத்தினை வரையறுத்து உணர்த்தாது நிற்பதோர் இடைச்சொல் என்பது உணர்த்துதற்கு.

'தே வகை' என்னும் பொருள் வரையறைப்படாது, சொல்லுவான் குறிப்பிற்றாய் நிற்றலின், இடத்துள் அடக்கார் ஆயினார்.

இவ்விரண்டு பொருட்கும் வேறு ஓர் சூத்திரம் செய்யாது இவ்வுருபுகளுடனே ஓதினார், சூத்திரம் சுருங்குதற்கு.

(உ-ம்.) ஊர்க்கால் இருந்தான்.
ஊர்ப்புறத்து இருந்தான்.
மாடத்தகத்து இருந்தான்.
ஊருள் இருந்தான்.
சான்றோருழைச் சென்றான்.
மாடத்துக்கீழ் இருந்தான்.
மாடத்துமேல் இருந்தான்.
ஏர்ப்பின் சென்றான்.
காட்டுச்சார் ஓடும் களிறு.
ஊரயல் இருந்தான்.
ஊர்ப்புடை இருந்தான்.
வடக்கண் வேங்கடம்
தேர்முன் சென்றான்.
சான்றோரிடை இருந்தான்.

---

1. வேற்றுமையியல், சூ. 8. 2. வேற். மயங். சூ. 20.
3. நள. சுயம்வர. 154.

கோயிற்கடைச் சென்றான்.
தந்தைதலைச் சென்றான்.
கைவலத்து உள்ளது கொடுக்கும்.
கையிடத்துப் பொருள்

என வரும்.

'அன்ன பிற'வால் வருவன,

குடத்தில் விளக்கு
ஊரிலே இருந்தான்.
கிழவோள் தேஎத்து[1]
கிழவிமாட்டு

எனவும்,

பொருட்கண் உணர்வு
மலர்க்கண் நாற்றம்
ஆகாயத்துக்கண் பருந்து

எனவும் வரும்.

இன்னும்,

மணியின்கண் ஒளி
கையின்கண் விரல்
நிறத்தின்கண் எழில்
ஆடற்கண் அழகு

எனக் கிழமையும் சினையும் பண்பும் வினைப்பெயரும் பற்றி வரும்.

இனி, 'கண் கால் முதலியன உருபை விளக்குதற்கு அவ்வுருபின் பொருளாய் நின்று, கண்ணென் உருபு விரித்துக்கொண்டு நிற்கும்,' எனின், 'கண் என்னும் உருபின் பொருளாவது, கண் என்னும் இடைச்சொல்லால் உணர்த்தப்படும் இடப்பொருண்மை,' என்று பொருள் உரைத்தால், பின் வருகின்ற இடப் பொருண்மையை முன்னும் கூறிற்றேயாம் ஆகலின், கூறியது கூறிற்றாம். அல்லதூஉம், 'கண்ணகல் ஞாலம்' என்புழிக் கண் என்னும் இடைச்சொல்லான் உணர்த்தும்

1. இறை. அகப். சூ. 8.

இடப்பொருண்மைக்கும் 'இடத்துக்கண்' எனக் கண்ணென் உருபு மீண்டும் கூறல் வேண்டும். அல்லதூஉம்,

'கண்ணின்று கூறுதல் ஆற்ருன் அவனுயின்'[1]

என்பதற்கு 'என்கணின்று' எனத் தோன்ரு எழுவாயாய் நின்று கண்ணென் உருபு ஏற்று நின்றதாம். அல்லதூஉம்,

வடக்கண் வேங்கடம்

என்புழிக் கண்ணென் உருபு விரித்தலின், ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாதாம். அல்லதூஉம்,

ஆலின்கீழ்க் கிடந்த ஆ
மரத்தின்மேல் இருந்த குரங்கு

என்பன முதலியவற்றிற்குக் கண்ணெனுருபு கொடுத்து உலகம் வழங்காமை உணர்க. முன்னர் இரண்டாவது முதலிய உருபுகளை முடித்தற்கு எடுத்து ஓதிய காப்பு முதலிய பொருள்களைப்போல உருபை முடித்து நில்லாது ஈண்டுக் கூறிய பொருள்கள் கண் என்னும் உருபையே உணர்த்தி நின்றன என்றலின், சேனவரையரும் இப் பொருள்களை உருபு என்றே கூறினர் ஆயிற்று. அங்ஙனம் கூறி அத்துச் சாரியை கொடுத்து உதாரணம் காட்டவே, உருபின் பின்னரும் அத்துச் சாரியை வருதல் தாமும் நேர்ந்தார் ஆயிற்று.

84] தொகையை விரிக்கும் முறை [உஉ

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலும் தொகைவயின் பிரிந்து
பல்லா றுகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப.

இது, வேற்றுமை தொக்குழி விரிக்குமாறும், அதற்கு இனமாகிய அன்மொழி தொக்குழி விரிக்குமாறும் கூறுகின்றது.

1. கலி. 37 : 8.

P31, D21,1,5

 A14

(இ-ள்.) வேற்றுமைப் பொருளை ஈற்று நின்று இயலும் தொகைவயின் பொருளை விரிக்கும் காலை - வேற்றுமைத் தொகைவயின் நின்ற பொருளை அன்மொழித்தொகைவயின் நின்ற பொருளை விரிக்கும் காலத்து, பொருள் புணர்ந்து - அவ்வேற்றுமைப் பொருளோடும் அன்மொழிப் பொருளோடும் புணர்ந்து, பல் ஆறு ஆகப் பிரிந்து இசைக்கும் எல்லாச் சொல்லும் உரிய என்ப - பல நெறியாகப் பிரிந்து ஒலிக்கும் எல்லாச் சொல்லும் விரித்தற்கு உரிய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

மேலும், 'ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே,'[1] என்பர்.

'கருங்குழற்பேதை, பொற்றொடி அரிவை, மட்குடம்' என்னும் வேற்றுமைத் தொகைகள், 'கருங்குழலை உடைய பேதை, பொற்றொடியை அணிந்த அரிவை, மண்ணான் இயன்ற குடம்' என விரிந்தவாறு காண்க.

'தாழ் குழல், பொற்றொடி, மட்காரணம்' என்னும் அன்மொழித்தொகைகள், 'தாழ் குழலை உடையாள், பொற்றொடியை அணிந்தாள், மண்ணாகிய காரணத்தின் இயன்றது,' என விரிந்தவாறு காண்க.

வேற்றுமை இயல் முற்றும்.

1. எச்சவியல், சூ. 22.

௩. வேற்றுமை மயங்கியல்

85] இரண்டாவது ஏழாவதோடு மயங்குதல் [க

கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்
குரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை.

என்பது சூத்திரம். இது, தன் பொருளின் தீராது பிறிது ஒன்றன் பொருட்கண் செல்லும் பொருள் மயக்கமும், தன் பொருளின் தீர்ந்து செல்லும் உருபு மயக்கமும் என்னும் இரு வகை மயக்கமும் உணர்த்தலின், **வேற்றுமை மயங்கியல்** என்னும் பெயர்த்து ஆயிற்று.

இச்சூத்திரம், இரண்டாவதன் பொருளும், அதிகாரத் தான் நின்ற ஏழாவதன் பொருளும் மயங்கும் மயக்கம் கூறுகின்றது.

(இ-ள்.) கருமம் அல்லாச் சார்பு என் கிளவிக்கு - கருமச் சார்ச்சி அல்லாத 'அரசரைச் சார்ந்தான்,' என வரும் சார்பு என்னும் பொருண்மைக்கு, கண் என் வேற்றுமை உரிமையும் உடைத்து - ஏழாம் வேற்றுமை உரித்தாய் வருதலும் உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'தூணினைச் சார்ந்தான்' என்றாற்போல மெய்யுறல் இன்றி, 'அரசர்கண் சார்ந்தான்,' என வரும்.

இதனுள் அரசரது சார்தற்கு இடமாகிய அருள், தன் பொருளதனின் நீங்காதே பிறிதின் பொருளாகிய செயப்படு பொருட்கண் சென்றது ஏழாவது. 'தூணின் கண் சார்ந்தான்,' என்பது வழக்கம் இன்று, ஆசிரியர் மறுத்தலின்.

86] இதுவும் அது. [உ

சினை நிலைக் கிளவிக் கையும் கண்ணும்
வினை நிலை ஒக்கும் என்மனார் புலவர்.

இதுவும் அவ்விரண்டன் மயக்கம் கூறுகின்றது.

(இ-ள்.) சினை நிலைக் கிளவிக்கு - சினைப்பொருள்மேல் நிற்கும் சொல்லிற்கு, ஐயும் கண்ணும் வினை நிலை ஒக்கும் என்மனார் புலவர் - இரண்டாவதும் ஏழாவதும் வினை கூறும் நிலைமைக்கண் ஒக்கும் என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) கோட்டைக் குறைத்தான்.
கோட்டின்கண் குறைத்தான்.

என வரும்.

'அறுத்தல் குறைத்தல் முதலிய இரண்டாவதன் கண் ஏழாவது வந்ததேனும், வழக்குப் பயிற்சி நோக்கி, 'வினைநிலை ஒக்கும்,' என்றார்.

87] இதுவும் அது. [ங

கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே.

இதுவும் அது.

(இ-ள்.) கன்றலும் செலவும் - கன்றற்பொருள்மேல் வரும் சொல்லும் செலவுப்பொருள்மேல் வரும் சொல்லும், ஒன்றுமார் வினையே - இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் ஒரு தொழில (எ-று.)

(உ-ம்.) சூதினைக் கன்றினான்.
சூதின்கண் கன்றினான்.
நெறியைச் சென்றான்.
நெறிக்கண் சென்றான்.

என வரும்.

பொருள்பற்றி ஓதினமையால்,
சூதினை இவறினான்.
சூதின்கண் இவறினான்.
நெறியை அடைந்தான்.
நெறிக்கண் அடைந்தான்.

எனவும் வரும்.

இஃது இரண்டாவதன் பொருளை எடுத்து ஓதலின், வேறு கூறினர்; வழக்கின்கண் பயின்று வருதலின், ஏழாவதனையும் ஒப்பக் கூறினர். சினை முதல் மயக்கம் கூறுகின்றதற்கு இடையே இச்சூத்திரம் வைத்தார், இரண்டாவதும் ஏழாவதும் அதிகாரத்தால் பெறுகின்ற இலேசு நோக்கி.

88] உருபு மயக்கமாய் வருவனவற்றைக் கூறுமாறு [ச

முதற்சினைக் கிளவிக் கதுஎன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இஃது, உருபு மயக்கமாய் வருவனவற்றைக் கூறுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) முதல் சினைக் கிளவிக்கு - முதற்சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு, அது என் வேற்றுமை முதற்கண் வரின் - ஆறும் வேற்றுமை முதற்கண்ணே வருமாயின், சினைக்கு ஐ வரும் - சினைச்சொல்லின்கண் இரண்டாம் வேற்றுமை வரும் (எ-று.)

(உ-ம்.) யானையது கோட்டைக் குறைத்தான்.
என வரும்.

இஃது ஒரு தொடர்க்கண் இரண்டு உருபு வருதலின் மயக்கம் ஆயிற்று.

89] பொருள் மயக்கம் [ரு

முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

இது, பொருள் மயக்கம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) முதல் முன் ஐ வரின் - அம்முதற்சினைக் கிளவிக்கண் முதற்சொல் முன் இரண்டாம் வேற்றுமை வரின், சினை முன் கண் என் வேற்றுமை வருதல் தெள்ளிது என்ப - சினைச் சொல் முன் கண் என் வேற்றுமை வருதல் தெள்ளிது என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) யானையைக் கோட்டின்கண் குறைத்தான்.

இது, பொருள் மயக்கம். 'தெள்ளிது' என்றதனான்,

யானையைக் கோட்டைக் குறைத்தான்.

என ஐகாரம் வருதலும், முன்னர்க் கூறிய எல்லாம் பண்பும் தொழிலும் பொருள் தொடர்ச்சியும் பற்றி வருதலும் கொள்க.

மணியது நிறத்தைக் கெடுத்தான்.
மணியை நிறத்தின்கண் கெடுத்தான்.
மணியை நிறத்தைக் கெடுத்தான்.

என முற்கூறியதும் இவையும், ஒரு தொடரின் இரண்டு உருபும் மயங்கலின், **உருபு மயக்கம்.**

தலைமகனது செலவை அழுங்குவித்தல்
தலைமகனைச் செலவின்கண் அழுங்குவித்தல்
தலைமகனைச் செலவை அழுங்குவித்தல்
சாத்தனை நூலை ஓதுவித்தான்.
யாற்றை நீரை விலக்கினான்.

என வரும். இவை **உருபு மயக்கம்.**

90] முதலும் சினையும் சொல்லுவான் குறிப்பினவாதல் [சூ

முதலும் சினையும் பொருள்வேறு படாஅ;
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

இது, முதல் சினைகளை ஆராய்கின்றது.

(இ-ள்.) முதலும் சினையும் பொருள் வேறுபடாஅ - முதலும் சினையும் முதலாயது முதலேயாய்ச் சினையாயது சினையேயாய்ப் பொருள்கள் தம்முள் வேறுபட நில்லா; நுவலுங்காலைச் சொற்குறிப்பின - சொல்லுங்கால் சொல்லுவானது சொல்லுதற்குறிப்பினால் முதல் என்றும் சினையென்றும் வழங்கப்படும் (எ-று.)

(உ-ம்.) கோட்டது நுனியைக் குறைத்தான்.
கோட்டை நுனிக்கண் குறைத்தான்.
கோட்டை நுனியைக் குறைத்தான்.

என ஒரு முதலின் சினையை முதலாகக் குறித்தவழி அதுதான் முதலாய் நின்றவாறு காண்க. 'படை' என்பதனை முதலாகப் பார்க்கும் வழிப் 'படையினது யானை' என முதல் சினையாய் நிற்கும்.

91]. பிண்டப்பெயரும் அவ்விலக்கணம் பெறல் [எ

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.*

இது; 'பிறன் உடம்பட்டது தான் உடம்படுதல்'.[1]

(இ-ள்.) பிண்டப் பெயரும் ஆயியல் திரியா - பல பொருள் தொகுதியை† உணர்த்தும் பெயரும் முதற்சினைப்பெயர் இயல்பின் திரியா; பண்டு இயல் மருங்கின் மரீஇய மரபே - அவ்வாறு அவற்றை முதலும் சினையுமாக வழங்குதல் மேல் தொட்டு வழங்கி வாராநின்ற கூற்றான் மருவிய முறை (எ-று.)

(உ-ம்) குப்பையது தலையைச் சிதறினான்.
குப்பையைத் தலைக்கண் சிதறினான்.
குப்பையைத் தலையைச் சிதறினான்.

என வரும்.

இது, முதல் சினை அதிகாரத்தின் இலக்கணம் அல்லாமை கூறினர். இது, வேறுபல் குழீஇய படை முதலியவற்றிற்கும் ஒக்கும்.

92] ஒடு உருபு [அ

உயர்ந்த பொருள் உணர்த்தும் பெயர்வழி வருதல்

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.

இது, மூன்றாவதன்கண் சொல்லுதல் வகைமை கூறுகின்றது.

(இ-ள்.) ஒரு வினை ஒடுச்சொல் - 'அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி' என மூன்றாவதற்கு ஓதிய ஒருவினை ஒடுச்சொல், உயர்பின் வழித்து - உயர்ந்த பொருளை உணர்த்தும் பெயர் வழித் தோன்றும் (எ-று.)

பி-ம்: * பண்பே † பகுதியை 1. மரபியல், சூ. 110.

(உ-ம்.) அரசனோடு இளையர் வந்தார்.

என வரும்.

இஃது உயர் பொருளும் இழி பொருளும் பற்றி மயங்கி வருதலின், ஈண்டுக்கூறி, இழி பொருளை விலக்கினார்.

சாத்தனோடு கொற்றன் வந்தான்.

என உயர்பு இல்வழி எண் ஒடு வந்தது.

குலம், தவம், கல்வி, வினை, உபகாரம் முதலியவற்றான் உயர்பு கொள்க.

''நாயோடு நம்பி வந்தான்,' என்றாற்போல்வன இழி பொருட்கண்ணும் ஒரு வினை ஒடுச்சொல் வந்ததால்' எனின், அது யாதானும் ஒருவாற்றான் உயர்பு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார்; கூறுப ஆயின், அஃது 'ஒரு வினை ஒடுச்சொல்' எனப்படாது. 'கைப்பொருளோடு வந்தான்,' என்றாற்போல்வன பிறிதோர் பொருள் தந்த ஒடு; அது 'பொருள் உண்டாக வந்தான்,' என்றவின்.

93]　　ஏதுப்பொருள் மூன்றாவதன்கண்ணும்　　[கூ
ஐந்தாவதன்கண்ணும் வருதல்

மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர்.

இது, மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏது ஒத்த கிழமைய என்கின்றது.

(இ-ள்.) மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய - மூன்றாம் வேற்றுமைக்கண்ணும் ஐந்தாம் வேற்றுமைக்கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட, ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி - ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல், நோக்கு ஓரனைய என்மனார் புலவர் - அவ்வேதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒரு தன்மைய என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) வாணிகத்தான் ஆயினன்.
வாணிகத்தான் ஆய பொருள்.
வாணிகத்தின் ஆயினன்.
வாணிகத்தின் ஆய பொருள்.

என வரும்.

எனவே, ஞாபக ஏதுவின்கண் வரும் இன்னும் ஆனும் ஒத்த உரிமை இல என்பது பெற்றாம். இஃது, உருபும் பொருளும் மயங்கிற்று.

94] நோக்கு அல் நோக்கத்திற்கு ஏதுவும் செயப்படு பொருளும் ஒத்த உரிமைய ஆதல் [கூo

இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கமவ்
விரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும்.

இது, நோக்கு அல் நோக்கத்திற்கு ஏதுவும் செயப்படுபொருளும் ஒத்த உரிமைய என்கின்றது.

(இ-ள்.) இரண்டன் மருங்கின் நோக்கு அல் நோக்கம் - இரண்டாவதற்கு உரித்தாக ஓதிய கண்ணால் நோக்கும் நோக்கம் இன்றி மனத்தால் நோக்கும் நோக்கம், அவ்விரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும் - அம்மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் உரிய ஏதுப்பொருண்மையும் ஆம் (எ-று.)

(உ-ம்.) வானோக்கி வாழும்.'[1]

என்புழி 'வானை நோக்கி வாழும்,' என விரியும் வழி, 'வானன் ஆய பயனைக் கருதி உயிர் வாழும்,' எனவும், 'வானின் ஆய பயனைக் கருதி உயிர் வாழும்,' எனவும் செயப்படுபொருளும் ஏதுவும் ஒப்பப் பிறந்து நிற்றல் இச்சூத்திரத்திற்குக் கருத்து. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று.

95] ஆறாவதன் பொருளில் வரும் உயர்திணைத் தொகையில் நான்கன் உருபு விரிதல் [கக

அதுஎன் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே.

1. குறள், 542.

இஃது, ஆறுவதற்கு ஓதிய முறைப்பொருட்கண் நான்காவது விரியுமாறும், ஆறன் உருபு கெட அதன் உடைமைப்பொருள் விரியுமாறும் கூறுகின்றது.

(இ-ள்.) உயர்திணைத் தொகைவயின் குகரம் வரும் - உயர்திணைப் பொருள் இரண்டு சேர்ந்தவிடத்து உருபு விரிப்புழி நான்கன் உருபு விரியும், அது என் வேற்றுமை அது என் உருபு கெட வரும் - அதுவன்றி அவ்வுயர்திணைத் தொகைவயின் ஆறும் வேற்றுமையை விரிப்புழி அவ்வது என் உருபு தான் கெட்டுப்போக அதன் உடைமைப் பொருள் விரியும் (எ-று.)

(உ-ம்.) 'நம்பி மகன்' என்னும் தொகை
'நம்பிக்கு மகன்' என விரியும்

இஃது உருபு மயக்கம். இனி,

'நின்மகள், பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு'[1]
'யாம்எம் மகளைப்பா ராட்ட'[2]
'என்னணியியற் குறுமகள் ஆடிய'[3]

என்பவற்றுள் அது என் உருபு கெட, அதன் உடைமைப் பொருள் விரிந்தவாறு காண்க. இவை உருபு நிலைக் களத்துப் பொருள் மயங்கின. இவற்றிற்கு நான்கன் உருபு விரிப்பின், 'நினக்கு மகளாகியவள், எனக்கு மகனாகியவளை, எனக்கு மகளாகிய குறுமகள்' என ஆக்கம் கொடுத்துக் கூறல் வேண்டும்; ஆண்டு அம்முறைமை செயற்கையாம் ஆகலின், அது பொருள் அன்மை உணர்க.

96]   இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு   [கஉ

தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான.

இஃது, இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

1. அகம். 48 : 1, 2. 2. கலி. 85 : 29. 3. நற். 184.

(இ-ள்.) தடுமாறு தொழிற்பெயர்க்கு - தனக்கே உரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப் பெயரொடும் சென்று தடுமாறும் தொழிலொடு தொடர்ந்த பெயர்க்கு, இரண்டும் மூன்றும் கடிநிலை இல - இரண்டாவதும் மூன்றாவதும் கடியப்படா, பொருள்வயினான - அவ்வேற்றுமை தொக்கு அவற்றின் பொருள் நிற்குமிடத்து (எ-று.)

(உ-ம்.) 'புலி கொல் யானை' என்புழிப் புலி செயப்படுபொருளாயவழி இரண்டாவதும், அது வினைமுதலாயவழி மூன்றாவதும் விரியும். அது, 'புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை' என வரும்.

'வினைத்தொகைக்கண்ணும் செயப்படு பொருள் பிறக்குமோ?' எனின், 'செய்குன்று, உறை பதி' என்றாற்போல்வனவற்றுள் பிறந்தவாறு காண்க. இஃது **உருபு மயக்கம்.**

97] மேலதற்கு ஓர் புறனடை [கரு

ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணருமோரே.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) ஈற்றுப்பெயர் முன்னர் - தடுமாறும் தொழிலொடு புணர்ந்த இரு வகைப் பெயருள் இறுதிப்பெயர் முன்னர் வந்த, மெய்யறி பனுவலின் - பொருள் வேறுபாடு உணர்த்தும் சொல்லான், வேற்றுமை தெரிப உணருமோரே - அப்பொருள் வேற்றுமை தெரிவார் உணர்வோர் (எ-று.)

(உ-ம்.) புலி கொல் யானை ஓடாநின்றது.
புலி கொல் யானை ஓடாநின்றன.
புலி கொல் யானைக்கோடு வந்தன.

என வரும். முன் புலியைக் கொன்ற யானை பின் பிறிது ஒன்றான் இறந்துழியும் 'புலி கொல் யானைக்கோடு வந்தன,' என்ப. இது குறிப்பான் உணரப்படும் என்றற்கு 'உணருமோரே' என்றார். இன்னும் இதனானே

'புலி கொல் யானை கிடந்தது,' என்புழிச் சொல்லுவான் குறிப்பான் உணர்தலும் கொள்க.

98] ஓம்படைப்பொருளில் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கல் [கச

ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே தொகவரு காலை.

இஃது, இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஓம்படைக் கிளவிக்கு - பாதுகாத்தலாகிய பொருண்மைக்கு, ஐயும் ஆனும் தாம் பிரிவு இல - இரண்டாவதும் மூன்றாவதும் ஒத்த உரிமைய, தொக வரு காலை - வேற்றுமை தொக்கவழி (எ-று.)

(உ-ம்.) புலி போற்றி வா.

என்புழிப் 'புலியைப் போற்றி வா,' என விரியும் வழிப் 'புலியானாய ஏதத்தைப் போற்றி வா,' என இரண்டுருபும் பொருளும் ஒப்ப விரிந்துழி, இரண்டும் மயங்கியவாறு காண்க.

'இன்' உருபு, பிரிவுடைத்தாய், 'புலியிற்போற்றி வா,' எனச் சிறுபான்மை வரும்.

99] வாழ்ச்சிக்கிழமையில் ஆறாவதும் ஏழாவதும் மயங்கல் [கரு

ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்
கேழும் ஆகும் உறைநிலத் தான.

இஃது, ஆறாவதும் ஏழாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு - ஆறாம் வேற்றுமைக்கண் ஓதிய வாழ்ச்சிக்கிழமைக்கு, உறை நிலத்து ஆன ஏழும் ஆகும் - உறை நிலப்பெயர் பின்மொழியாயவழி ஏழாவதும் வரும் (எ-று.)

(உ-ம்.) காட்டது யானை
காட்டின்கண் யானை

என வரும். அந்நிலத்து வாழ்வதனை 'அதனது' எனப் படும், அது பற்றுக்கோடாக உண்டாய், அஃது இன்றி விடின் தான் வாழ்தல் இல்லாமையின். 'யானைக்காடு' என்பது உறைநிலப் பெயர். முன் மொழியாய் வருதலின், 'யானைக்கண் காடு' என ஏழனுருபு விரியாதாயிற்று. இது பொருள் மயக்கம்.

100] • கோடைப்பொருளில் நான்காவதும் ஆறாவதும் மயங்கல் [கசு

குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்தும் ஆகும்.

இது, நான்காவதன் பொருள் ஆறாவதற்குச் செல்லும் என்கின்றது.

(இ-ள்.) குத் தொக வரூஉம் கொடை எதிர் கிளவி - நான்கன் உருபு தொக வரும் கொடையை விரும்பி மேற்கோடலை உணர்த்தும் தொகைச்சொல்லினது, அப்பொருள்-அக்கொடை எதிர்தலாகிய அப்பொருண்மை, ஆறற்கு உரித்தும் ஆகும் - ஆறாம் வேற்றுமைக்கு உரித்துமாம் (எ-று.)

(உ-ம்.) நாகர் பலி

என்பது 'நாகர்க்கு நேர்ந்த பலி, நாகரது பலி' என விரியும். 'நாகர்க்கு நேர்ந்த பலி' எனவே, பிறர்க்கு ஆகாத பலி அவர் உடைமை ஆயிற்று ஆதலின், ஆறாவதும் உரித்தாகப்பெற்றது. 'சாத்தற்கு நேர்ந்த சோறு' என்புழி அது பிறர்க்கும் ஆதலின், ஆண்டு ஆறாவது ஏலாது. தெய்வம் அல்லாதாரிலும் சிறந்தார்க்கு நேர்ந்ததேல், ஆண்டும் ஆறாவதும் வரும் என்று உணர்க.

101] அச்சப்பொருளில் ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்கல் [கஎ

அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னான.

இஃது, ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அச்சக் கிளவிக்கு - அச்சப்பொருள்மேல் வரும் சொல்லிற்கு, ஐந்தும் இரண்டும் எச்சம் இல - ஐந்தாவதும் இரண்டாவதும் ஒத்த உரிமைய, பொருள் வயினான - வேற்றுமை தொக அவற்றின் பொருள் நின்றவழி (எ-று.)

(உ-ம்.) பழி அஞ்சும்.

என்பது 'பழியின் அஞ்சும், பழியை அஞ்சும்,' என வரும். 'கள்ளரின் அஞ்சும்' என்பதற்கு 'அவரின் மிக அஞ்சும்' என்னும் பொருண்மையையும் தருமேனும், அப்பொருள் கொள்ளற்க. 'கள்ளரான் அஞ்சும்' என்பதே கொள்க. இஃது உருபும் பொருளும் மயங்கிற்று.

102]　　வேற்றுமை மயக்கமும் வழக்கிற்பிழையாமை　　[கஅ

அன்ன பிறவும் தொன்னெறி பிழையா
துருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.

இது, வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை.

(இ-ள்.) அன்ன பிறவும் - மேல் வேற்றுமை மயக்கம் கூறப்பட்ட வேற்றுமையே அன்றி அவை போல்வன பிறவும், தொன்னெறி பிழையாது - தொன்று தொட்டு வரும் வழக்கிற் பிழையாது, உருபினும் பொருளினும் மெய் தடுமாறி - உருபானும் பொருளானும் ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று, இரு வயின் நிலையும் வேற்றுமை எல்லாம் - பிறிது ஒன்றன் பொருளும் தன் பொருளுமாகிய ஈரிடத்தும் நிலை பெறும் வேற்றுமை எல்லாம், திரிபிடன் இலவே தெரியுமோர்க்கே - திரிபு உடைய அல்ல தெரிந்து உணர்வோர்க்கு (எ-று.)

ஏதுப்பொருட்கண் வரும் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் இரு வயின் நிற்றல் இன்மையின், அவற்றை ஒழித்து, ஏனையவற்றிற்கே இரு வயின் நிற்றல் கொள்க.

என்னை? 'வழி போயினர் எல்லாரும் கூறை கோட் பட்டார்,' என்றவழிக் கடவுளரை ஒழித்து ஏனை யோர்க்கே அக்கூறை கோட்படுதல் எய்தினாற்போல.

'அன்ன பிற' ஆவன,

நோயின் நீங்கினான்; நோயை நீங்கினான்.
சாத்தனை வெகுண்டான்; சாத்தனொடு வெகுண்டான்.
முறையாற்குத்தும் குத்து, முறையிற்குத்தும் குத்து

என வரும். இது 'முறைக் குத்துக் குத்தினான்,' எனத் தொக்கு நின்றதன்கண் இரண்டும் விரிந்தன.

கடலொடு காடு ஒட்டாது; கடலைக் காடு ஒட்டாது.
தந்தையொடு சூளுற்றான்; தந்தையைச் சூளுற்றான்.

என இவை தொகையாயும், தொகையன்றியும் மயங்கி நிற்குமாறு உணர்க.

103] பல உருபு தொடர்ந்து அடுக்கியவழிப்படுவதோர் இலக்கணம் [கக

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே.

இது, பல உருபு தொடர்ந்து அடுக்கியவழிப் படுவ தோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி- ஓர் உருபும் பல உருபும் தம்முள் தொடர்ந்து அடுக்கி வந்த வேற்றுமை உருபை இறுதியாக உடைய சொற்கள், ஒரு சொல் நடைய - முடிக்கும் சொல் ஒன்றனான் முற்றுப்பெற்று நடக்கும், பொருள் செல் மருங்கே - அவ்வொன்றனால் பொருள் செல்லும் பக்கத்து (எ-று.)

(உ-ம்.) 'என்னொடும் நின்னொடும் சூழாது'[1]
'துடிப்பெனப்புரையுநின் திரண்டநேர் அரிமுன்கைச்
சுடர்விரி வினைவாய்ந்த* தூதையும் பாவையும்
விளையாட ....'[2]

பி-ம் : * வரி வாய்த்த. 1. அகம். 128 : 7. 2. கலி. 59 : 4-6.

என்புழி முன் கையால் தூதையயாலும் பாவையாலும் விளையாட என அடுக்கி முடிந்தது.

'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்'[1]
யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான்.

என வரும்.

இச்சூத்திரத்தின் கருத்து, முன்னர்ப் பல உருபு தொடர்ந்த சொற்கள் ஒரு சொல்லான் முடிதலும், ஓர் உருபு தொடர்ச்சியும் ஒரு சொல்லான் முடிதலும் கூறுதல் ஆயிற்று.

கோட்டை நுனிக்கண் குறைத்தான்.

என்புழி முன் மொழிக்கண் பொருள் நிற்றலானும்,

திணையிற் கிளியைக் கடியும்.

என்புழிப் பின் மொழிக்கண் பொருள் நிற்றலானும், இவற்றை அடையென்று கூறுதல் பொருந்தாது என்று உணர்க.

104] வேற்றுமை உருபு விரிந்து நிற்கும் இடம் [௨௦

இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

இஃது, உருபு நிற்கும் இடம் கூறுகின்றது.

(இ-ள்.) இறுதியும் இடையும் - வேற்றுமைத்தொடர் இறுதிக்கண்ணும் அதன் இடை நிலத்தும், எல்லா உருபும் - ஆறு உருபும், நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் - தத்தமக்கு ஓதிய பொருட்கள் நிற்றலை நீக்கார் கொள்வர் ஆசிரியர் (எ-று.)

இவற்றுள் இறுதிக்கண் நிற்பனவற்றின் ஆறன் உருபு இறுதிக்கண் நில்லாது; நின்றதேல், வினைக்குறிப்பாம் என்று உணர்க. இதற்காக அன்றே 'ஈறுபெயர்க் காகும் இயற்கைய'[2] என்று ஓதிய அதனை மீட்டும் ஈண்டு 'இறுதியும்' என்று வகுத்துக் கூறிற்று என்று உணர்க.

1. குறள், 543. 2. வேற்றுமையியல், சூ. 8.

ஆறன் உருபு ஒழிந்தவற்றிற்கு உதாரணம்,

கடந்தான் நிலத்தை.
வந்தான் சாத்தனொடு.
கொடுத்தான் சாத்தற்கு.
வலியன் சாத்தனின்.
இருந்தான் குன்றத்துக்கண்.

என வரும்.

இனி இடை நிற்பன,

நிலத்தைக் கடந்தான்.
சாத்தனொடு வந்தான்.
சாத்தற்குக் கொடுத்தான்.
சாத்தனின் வலியன்.
சாத்தனது ஆடை.
குன்றத்துக்கண் இருந்தான்.

என வரும். 'சாத்தனது ஆடை' என்புழி 'அது' என்பது பெயராய் நிற்கும். 'ஆடை சாத்தனது,' என்புழி 'ஆடை' என்னும் உடைமைப்பெயர் எழுவாயாய்ச் 'சாத்தனது ஆயிற்று,' என்னும் பயனிலையோடு முடிதலின், வினைக் குறிப்பு ஆயிற்று.

105] ஆறன் உருபிற்கு உரிய இலக்கணமும் [உக
எல்லா உருபிற்கும் பொது இலக்கணமும்

பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இஃது, ஆறன் உருபிற்கு உரியதோர் இலக்கணமும் எல்லா உருபிற்கும் பொது இலக்கணமும் கூறுகின்றது.

(இ-ள்.) பிறிது பிறிது ஏற்றலும் - ஆறன் உருபு தன்னை ஒழிந்த உருபினை ஏற்றலும் (பெயர்க்குப் பிறிதாய் நிற்றலின், 'பிறிது' என்றார்.), உருபு தொக வருதலும் - இடையிலும் இறுதியிலும் ஆறு உருபும் தொக்கு நிற்றலும், நெறிபட வழங்

கிய வழி மருங்கு என்ப - நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்து வரும் என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) சாத்தனதனை
சாத்தனதனொடு
சாத்தனதற்கு
சாத்தனதனின்
சாத்தனதன்கண்

என வரும்.

உருபு தொகுமிடத்து உருபும் பொருளும் உடன் தொகுதலும், உருபு தானே தொகுதலும் உடைய.

(உ-ம்.) கடந்தான் நிலம்.
இருந்தான் குன்றத்து.

என வரும்.

நிலம் கடந்தான்.
தாய் மூவர்
கருப்பு வேலி
வரை வீழ் அருவி
சாத்தன் கை
'குன்றக் கூகை'[1]

என வரும். இவை உருபு தொக்கன. 'படைக்கை' என்பது உருபும் பொருளும் தொக்கது.

சாத்தன்றனது

எனத் தன்னையும் ஏற்றல்* உரையிற்கொள்க.

106] எய்தியது விலக்கல் [உஉ

ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின் மெய் உருபு - ஐகார வேற்றுமைப் பொருளும் கண்ணென் வேற்று

பி-ம்: * ஏற்றுதல் 1. குறுந். 153

மைப் பொருளும் அல்லாத பிற பொருள்மேல் நின்ற உருபு, இறுதியான தொகா - தொடர்மொழி இறுதிக்கண் தொக்கு நில்லா (எ-று.)

(உ-ம்.) அறம் கறக்கும்.*

என்பது 'கறக்கும் அறம்' என இறுதிக்கண் தொகாமை காண்க.

'தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.'[1]

என ஆன் உருபு இறுதிக்கண் தொக்கதால் எனின், அது வினைச்சொல் காரணப் பொருட்டாய் நின்றது.

107] உருபுகள் தம் பொருள அன்றி மயங்குமாறு [உ௩

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

இஃது, உருபுகள் தம் பொருள அன்றி மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) யாதன் உருபிற் கூறிற்றாயினும் - ஒரு தொடர் யாதானும் ஒரு வேற்றுமையது உருபு கொடுத்துச் சொல்லப் பட்டது ஆயினும் (அவ்வுருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லும் பொருள் இயையாத வழி), பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும் - பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமை யைச் சாரும் (எ-று.)

(உ-ம்.) 'கிளையரில் நாணற் கிழங்குமணற் கீன்ற
முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்'[2]

என்புழி 'மணலுள் ஈன்ற' என ஏழாவதன் பொருள் ஆயிற்று.

'கோக்கினுக் கொழிந்த தீம்பழம் கொக்கின்'[3]

என்புழியும் 'கொக்கினின்றும்' என ஐந்தாவதன் பொரு ளாயிற்று.

பி-ம்: * கற்கும் 1. குறுந். 35. 2. அகம். 212: 4, 5. 3. நற். 280.

முற்கூறிய எல்லாம் தம்முள் இயைபுடைய பொருள் மயக்கமே மயங்குமாறு கூறி, இஃது ஓர் இயைபும் இல்லாத உருபு மயக்கமே கூறிற்று என்று உணர்க.

108] எதிர்மறைக்கண்ணும் வேற்றுமைப்பொருள் திரியாமை [உச

எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

இது, வேற்றுமைகள் தம் பொருள் மாறுபட்டுழியும் அப்பொருள என்கின்றது.

(இ-ள்.) எதிர் மறுத்து மொழியினும் - விதி முகத்தால் கூறாது எதிர் மறுத்துக் கூறினும், தத்தம் மரபின் பொருள் நிலை திரியா - தத்தம் இலக்கணத்தான் வரும் பொருள் நிலை திரியா, வேற்றுமைச் சொல்லே - வேற்றுமை உருபுகள் (எ-று.)

(உ-ம்.) மரத்தைக் குறையான்.
வேலான் எறியான்.

என வரும். வினை நிகழாமையின், மரமும் வேலும் செயப்படு பொருளும் கருவியும் ஆகாவேனும், எதிர் மறையும் விதி வினையோடு ஒக்கும் என ஆணை கூறிற்று.

109] அவ்வுருபுகளுள் சில செய்யுளுள் திரிதல் [உரு

குஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடும் சிவணும் செய்யு ளுள்ளே.

இஃது, அவ்வுருபுகளுள் சில செய்யுளுள் திரியும் என்கின்றது.

(இ-ள்.) கு ஐ ஆன் என வரூஉம் இறுதி - கு ஐ ஆன் என வரும் மூன்று உருபும் தொடர் இறுதிக்கண் நின்ற வழி, அவ்வொடும் சிவணும் செய்யுளுள்ளே - அகரத்தோடு பொருந்தி நிற்றலும் உடைய செய்யுளுள் (எ-று.)

(உ-ம்.) 'கடிநிலை இன்றே ஆசிரியற்க'[1]
'காவ லோனக் களிறஞ் சும்மே.'

1. எழுத். புள்ளிமயங். சூ. 94.

'களிறு மஞ்சுமக் காவ லோன.'
'புரைதீர் கேள்விப் புலவ ரான.'

என வரும்.

'உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான.'[1]

என்பது வினைக்குறிப்புக் காரணம் பெற்றது.

110] எய்தியது விலக்கல் [உகூ

அஎனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) குவ்வும் ஐயும் அஃறிணை மருங்கின் அ எனப் பிறத்தல் இல்லென மொழிப - குவ்வும் ஐயும் அஃறிணைப் பெயர்க்கண் அகரத்தோடு சிவணி ஈறு திரிதல் இல்லை என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

எனவே, 'புள்ளினுன' என அஃறிணைக்கண் ஆன் பிறக்குமாறு ஆயிற்று.

111] நான்காவது ஏனையுருபுகளின் பொருளோடு மயங்கல் [உஎ

இதன திதுவிற் றென்னும் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே.

இது, நான்காவது ஏனையுருபுகளின் பொருள்களோடு மயங்கும் என்கின்றது.

1. கற்பியல், சூ. 53.

(இ-ள்.) இதனது இது இற்று என்னும் கிளவியும் - 'இப்பொருளினுடையது இப்பொருள்; அதுதான் இத்தன்மைத்து,' என்னும் ஆறுவதன் பொருண்மையும், அதனைக் கொள்ளும் பொருள்வயினானும் - ஒன்றனை ஒன்று கொள்ளும் என்னும் இரண்டாவதன் பொருண்மையும், அதனால் செயற்படற்கு ஒத்த கிளவியும் - ஒன்றனான் ஒன்று தொழிற்படற்கு ஏற்கும் என்னும் மூன்றாவதன் பொருண்மையும், முறைக்கொண்டு எழுந்த பெயர்ச் சொற் கிளவியும் - முறைப்பொருண்மையைக் கொண்டு நின்ற பெயர்ச்சொல்லினது ஆறும் வேற்றுமைப் பொருண்மையும், பால் வரை கிளவியும் பண்பின் ஆக்கமும் - நிலத்தை வரைந்து கூறும் பொருண்மையும் பண்பின்கண் ஆம் பொருவுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும், காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும் - காலத்தின்கண் அறியப்படும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும், பற்று விடு கிளவியும் தீர்ந்து மொழிக் கிளவியும் - பற்று விடும் பொருண்மையும் தீர்ந்து மொழிப் பொருண்மையும் ஆகிய ஐந்தாவதன் பொருண்மையும், அன்ன பிறவும் நான்கன் உருபில் தோன்றலாறு தொன்னெறி மரபின - அவை போல்வன பிறவும் நான்கன் உருபிடத்துக் கூறுதலைப் பழைய நெறி முறைமையாக உடைய (எ-று.)

(உ-ம்.) யானைக்குக் கோடு கூரிது.—இஃது ஆறுவது.
இவட்குக் கொள்ளும் இவ்வணி—இஃது இரண்டாவது.
அவற்குச் செய்யத்தகும் காரியம்—இது மூன்றுவது.
ஆவிற்குக் கன்று—இஃது ஆறுவது.
கருவூர்க்குக் கிழக்கு—இஃது ஐந்தாவது.
சாத்தற்கு நெடியன்—இதுவும் அது.
காலைக்கு வரும்.—இஃது ஏழாவது.
மனை வாழ்க்கைக்குப் பற்று விட்டான்.—இஃது ஐந்தாவது.
ஊர்க்குத் தீர்ந்தான்.—இதுவும் அது.

'அன்ன பிறவும்' என்றதனால்,

ஊர்க்கட்சென்றான்.
ஊர்க்கண் உற்றது செய்வான்.
ஊரிற்சேயன்

16

என்பனவற்றிற்கு நான்கன் உருபு கொள்க. இது தொகாது நின்றவிடத்து நான்கன் உருபு சென்று மயங்குதலின், வேறு கூறினர்.

112] நான்கனுருபு ஒழிந்தனவும் தம்முள் மயங்கல் [உஅ

ஏனை உருபும் அன்ன மரபின
மானம் இலவே சொல்முறை யான.

இது, நான்கன் உருபு ஒழிந்தனவும் தம்முள் மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) ஏனை உருபும் அன்ன மரபின மானம் இல - நான்கன் உருபு அல்லாத பிற உருபும் தொகை அல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன் பொருளிற்சிதையாமல் ஒன்று மயங்குதற்கண் குற்றம் இல, சொல் முறையான - வழக்கு முறையான் (எ-று.)

(உ-ம்.) நூலது குற்றம் கூறினன்.
நூலைக் குற்றம் கூறினன்.
அவட்குக் குற்றேவல் செய்யும்.
அவளது குற்றேவல் செய்யும்.

என வரும். பிறவும் அன்ன.

113] வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் [உகூ

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்று
இன்னதற் கிதுபயன் ஆக என்னும்
அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே.

இது, வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறுகின்றது.

(இ-ள்.) வினையே - வினைப்பெயரையும் வினைச்சொல்லையும் தோற்றுவிக்கும் உண் தின் செல் கோள் வனை என்பன முதலாகிய வினையும், செய்வது - அவ்வினையைச் செய்யும் வினை

முதலும், செயப்படு பொருளே - அவ்வினைமுதல் அதனைச் செய்ய அத்தொழிலையுறும் பொருளும், நிலனே - அத்தொழிலைச் செய்கின்ற இடமும், காலம் - அத்தொழிலைச் செய்யும் காலமும், கருவி - அவ்வினைமுதல் தொழிலினைச் செய்யுங் காலத்து அதற்குத் துணையாம் கருவிகளும் ஆகிய ஆறும், இன்னதற்கு - ஒரு பொருள் நின்று அவ்வினைமுதல் செய்யப் பட்டதனை ஏற்றுக்கோடற்கு உபகாரமாக, இது பயன் ஆக - அப்பொருள் அதனை ஏற்றுக்கொண்டதனான் அவ்வினைமுதற்கு இப்பயன் உண்டாக, என்னும் அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ - என்று சொல்லப்படும் அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய இரண்டோடும் தொக்கு, தொழில் முதல் நிலை ஆயெட்டு என்ப - காரியத்திற்கு முன்னிற்கும் காரணம் அவ்வெட்டு என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

'ஆக' என்றதனை 'இன்னதற்காக' என்றும் கூட்டுக.

(உ-ம்.) வனைந்தான்.

என்றவழி 'வனை' என்னும் வினையும், வனைந்த கருத் தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கு இடமாகிய நிலமும், அத்தொழில் நிகழும் காலமும், அதற்குக் கருவி யாகிய திகிரி முதலியனவும், அதனைக் கொள்வானும், அவன் கொண்டதனால் பெறும் பயனும் ஆகிய எட்டுக் காரணத்தானும் தொழில் நிகழ்ந்தவாறு காண்க. ஒழிந்த வினைகட்கும் அவ்வாறு விரிக்க.

வினையை முன் வைத்தார், சொற்களையும் தோற்று வித்து, மேல் நிகழும் காரியத்திற்கு ஏனை ஏழினும் சிறந்த காரணமாய் நிற்றலின். வினையும் தொழிலும் வேறு என்பது இச்சூத்திரத்தான் உணர்தற்கு 'வினை' என்று எடுத்துத் 'தொழில் முதல் நிலையே' என முடித்தார்.

'வனைந்தான்' என்பதற்குக் 'குடத்தை வனைதலைச் செய்தான்,' என்று பொருள் தந்துழிச் 'செய்தான்' என்ற தகரம் காலம் காட்டித் தொழிலைத் தோற்று வித்தவாறும், 'வனை' என்னும் வினை காலம் காட்டாமல்

நின்றவாறும், 'வினைதல்' என விரிந்துழியும் புடை பெயர்ச்சி மாத்திரம் அன்றிக் காலம் காட்டாமல் நின்ற வாறும் உணர்க. காரியத்திற்கு யாண்டும் காலம் காட் டும் எழுத்துக்களோடு கூடிய 'செய்' என்பதே வாசகம் என்று உணர்க. இக்காரிய வாசகம், இவ்வாறன்றி ஒரு சொல் முழுவதும் தானாய் நிற்பனவும் உள. அவை,

'கறைமிட றணியலும் அணிந்தன்று.'[1]

என்புழிக் 'கறை மிடற்றை அழகு பெறுதலையும் செய் தது,' எனவும்,

'இனியான் உண்ணலும் உண்ணேன்.'[2]

என்புழி, 'இனி யான் சோற்றை உண்ணுதலையும் செய் யேன்,' எனவும்,

'வாழ்தலும்* வாழேன்.'[3]

என்புழி, 'இனி யான் உயிரை வாழுதலையும் செய்யேன்,' எனவும் வந்தவற்றுள் 'அணிந்தன்று, உண்ணேன், வாழேன்,' என்பன முழுதும் காரிய வாசகமாயே நின்ற வாறு காண்க.

இனி, 'வனைந்தான்' என்பதன்கண் செய்வது எழுவா யாயும், வினையும் செயப்படுபொருளும் இரண்டாவதாயும், வினை முதலும் கருவியும் மூன்றாவதாயும், ஒருவன் ஏற்றுக் கொண்டவழி, 'இன்னதற்கு இது பயன்' நான்காவ தாயும், நிலமும் காலமும் ஏழாவதாயும் சேர்ந்தன. இன்னும், வனைந்தவன் கொடுத்த குடம் அவன் கையி னின்று நீங்குதல் ஐந்தாவதாயும், அதனை ஒருவன் ஏற்றுக்கொண்டவழி அஃது அவன் உடைமையாதல் ஆறாவதாயும் சேருமாறும் உணர்க. கருவிக்கண் அடங் கும் ஏதுவும் ஐந்தாவதற்கு வரும்.

இங்ஙனம் இவ்வுருபுகள் இவ்வினைச்சொற்கண் தோன்றுதல்பற்றி இச்சூத்திரத்தை வினையியலிற் கூறாது

பி-ம்: * வாழலும் 1. புறம். 1 : 5. 2. கலி. 23 : 7.
3. கலி. 23 : 7.

ஈண்டுக் கூறினர். 'பெயர்நிலைக் கிளவி',[1] 'இரண்டாகுவதே'[2] என்னும் சூத்திரங்களானும் இக்கருத்து உணர்க.

114] மேலதற்கு ஒரு புறனடை [௬0

அவைதாம்,
வழங்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும்.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) அவைதாம் - மேல் கூறப்பட்ட தொழில் முதல் நிலைகள்தாம், வழங்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும் - (எல்லாத் தொழிற்கும் எட்டும் வரும் என்னும் யாப்புறவு இல்லை) வழக்கின்கண் சில தொழிலிற்குன்றத்தகுவன குன்றும் (எ-று.)

குன்றத்தகுவன, செயப்படு பொருளும், 'இன்னதற்கு இது பயன்' என்பனவுமாம்.

(உ-ம்.) கோடி ஆடிற்று.
வளி வழங்கிற்று.

என வரும்.

115] ஆகுபெயரின் இலக்கணம் [௬௧

முதலிற் கூறும் சினைஅறி கிளவியும்
சினையிற் கூறும் முதல்அறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

இது, குறிப்பால் பொருள் உணர்த்தும் பெயர் இத்துணை என்கின்றது.

(இ-ள்.) முதலிற்கூறும் சினை அறி கிளவியும் - முதற்சொல் வாய்பாட்டால் கூறப்படும் சினைப்பொருளை அறிவிக்கும் சொல்

1. வேற்றுமையியல், சூ. 9. 2. வேற்றுமையியல், சூ. 10.

லும், சினையிற்கூறும் முதல் அறி கிளவியும் - சினைச்சொல் வாய்பாட்டால் கூறப்படும் முதற்பொருளை அறிவிக்கும் சொல்லும், பிறந்த வழிக் கூறலும் - நிலத்துப் பிறந்த பொருள்மேல் அந் நிலத்துப்பெயர் கூறலும், பண்பு கொள் பெயரும் - பண்புப் பெயர் அப்பண்புடையதனை உணர்த்தி நிற்கும் சொல்லும், இயன்றது மொழிதலும் - முதற்காரணப்பெயரான் அக்காரணத் தான் இயன்ற காரியத்தினைச் சொல்லுதலும், இரு பெயர் ஒட்டும் - அன்மொழிப்பொருள்மேல் நில்லாத இருபெயரொட்டும், வினை முதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ - செய்யப்பட்ட பொருள்மேல் அதனைச் செய்தான் பெயரைச் சொல்லும் சொல்லோடே முற்கூறிய ஆறும் தொக்கு, அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி - அப்பெற்றிப்பட்ட இலக்கணத்தை உடையவாகும் ஆகுபெயரான சொல் (எ-று.)

(உ-ம்.) கடுத் தின்றான்.
தெங்கு தின்றான்.
இலை நட்டு வாழும்.
பூ நட்டு வாழும்.
குழிப்பாடி நேரிது.

என வரும்.

இவ்வாடை கோலிகன்.

என்பதும் அது.

'நீலம்' என மணியை உணர்த்திற்று.

'பொன்' எனக் குடத்தை உணர்த்திற்று.

'மக்கட்சுட்டு' என இரண்டும் இல்லாததோர் பொருளை உணர்த்தாது மக்களை உணர்த்திற்று, நன்கு மதிக்கும் பொருள் மக்களே ஆதலின்.

'பொற்றொடி' என்பது அன்மொழி; ஆகுபெயர் அன்மை உணர்க.

இச்சூத்திரத்தானே, இயற்கைப்பெயரே அன்றிக் குறிப்பால் பொருள் உணர்த்தும் பெயரும் பெறும் பான்மை என்றார்.

116] ஆகுபெயர் இலக்கணம் இரு வகைய. [௩௨

அவைதாம்,
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலே.

இஃது, அவ்வாகுபெயர் இலக்கணம் இரு வகைய என்கின்றது.

(இ-ள்.) அவைதாம் தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும் - மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கள்தாம் தத்தம் பொருள்வயின் நீங்காது நின்று தம் பொருளின் வேறு அல்லாத பொருளொடு புணர்தலும், ஒப்பு இல் வழியான் பிறிது பொருள் சுட்டலும் - பொருத்தம் இல்லாத கூற்றான் நின்று பிறிது பொருளை உணர்த்தலும், அப்பண்பினவே நுவலுங்காலை-என்று சொல்லப்படுகின்ற அவ்விரண்டு இலக்கணத்தையும் உடைய சொல்லும் காலத்து (எ-று.)

(உ-ம்.) கடுத் தின்றான்.
குழிப்பாடி நேரிது.

என வரும்.

117] ஆகுபெயரும் வேற்றுமை ஏற்கும். [௩௩

வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்.

இஃது, ஆகுபெயரும் வேற்றுமை ஏற்கும் என்கின்றது.

(இ-ள்.) வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும் - அவ்வாகுபெயர்கள் ஐ முதலிய அறுவகை வேற்றுமைப் பொருண்மையிடத்தும் இயைபு உடைமையைப் பாதுகாத்து அறியல் வேண்டும் ஆசிரியன் (எ-று.)

(உ-ம்.) மக்கட்சுட்டை உயர்திணை என்மனார்.
தோல்காப்பியனால் செய்யப்பட்டது.
தண்டூண் ஆதற்குக் கிடந்தது.
பாவையினும் அழகியாள்.

கடுவினது காய்
குழிப்பாடியுள் தோன்றியது.

எனக் காண்க.

118] ஆகுபெயர் வேறுபாடு [௩௪

அளவும் நிறையும் அவற்ெறாடு கொள்வழி
உளஎன மொழிப உணர்ந்திசி னோரே.

இஃது, ஆகுபெயர் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) அளவும் நிறையும் அவற்ெறாடு கொள்வழி உள என மொழிப - அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளும் இடம் உடைய என்று சொல்லுவர், உணர்ந்திசினோரே - உணர்ந்தோர் (எ-று.)

(உ-ம்.) பதக்கு, தூணி
தொடி, துலாம்

என அளக்கவும் நிறுக்கவும்பட்ட பொருட்கண் கிடந்த வரையறைக் குணப்பெயர் அப்பொருட்குப் பெயராயிற்று.

நெல்லை அளந்து பார்த்தும் பொன்னை நிறுத்துப் பார்த்தும் பின்னர் அவற்றிற்குப் 'பதக்கு, தொடி' என்று அளவும் நிறையுமாகிய பெயர் கூறப்படுதலின், அவற்றை ஆகுபெயர் என்றார்.

'ஒன்று' என்னும் எண்ணுப்பெயரால் அவ்வெண்ணப்படும் பொருளைக் கூறுவதற்கு முன்னும் அப்பொருள் ஒன்றாயே நிற்றலின், எண்ணுப்பெயரை ஆகுபெயரோடு கூறார் ஆயினர்.

119] ஆகுபெயர்க்குப் புறனடை [௩௫

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இஃது, ஆகுபெயர்க்குப் புறனடை.

(இ-ள்.) கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும் - சொல்லப்பட்டனவே அன்றி வேறு பிற சொற்கண்ணே ஆகுபெயர்த் தன்மை தோன்றினும், கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே - சொல்லப்பட்டவற்றது இயல்பான் உணர்ந்து கொள்க (எ-று.)

(உ-ம்.) யாழ், குழல் என்னும் கருவிப்பெயர், 'யாழ்கேட்டான்; குழல் கேட்டான்,' என்று அவற்றான் ஆய ஓசை மேலும்; யானை, பாவை என்னும் உவமப் பெயர், 'யானை வந்தான்; பாவை வந்தாள்,' என உவமிக்கப்படும் பொருள்மேலும்; ஏறு, குத்து என்னும் தொழிற்பெயர், 'இஃது ஓர் ஏறு; இஃது ஓர் குத்து,' என அத்தொழிலானாய வடுவின்மேலும்; நெல்லாதல் காணமாதல் பெற்றானொருவன், 'சோறு பெற்றேன்,' எனக் காரணப்பொருட்பெயர் காரியத்தின்மேலும் ஆகுபெயராய் வந்தன.

'ஆறு அறி அந்தணர்'[1] என்புழி, 'ஆறு' என்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினை உடைய அங்கத்தினை உணர்த்தி நிற்றலும்; அவ்வெண்ணுப்பெயரினை அறிகுறியாகிய அலகு நிலைத் தானமும் அப்பெயரவாய் நிற்றலும்; அகரம் முதலிய எழுத்துக்களை உணர்த்துதற்குக் கருவியாகிய வரி வடிவுகளும் அப்பெயர் பெற்று நிற்றலும் கொள்க.

கடி சூத்திரம் செய்ய இருந்த பொன்னைக் 'கடி சூத்திரம்' என்றும், தண்டூண் ஆதற்குக் கிடந்த மரத்தைத் 'தண்டூண்' என்றும் காரியத்தின் பெயரைக் காரணத்திற்கு இட்டு வழங்குவனவும்; எழுத்து, சொல், பொருள் என்பனவற்றிற்கு இலக்கணம் கூறிய அதிகாரங்களை 'எழுத்து, சொல், பொருள்' என்பன உணர்த்தி நிற்றலும் கொள்க.

1. கலி. 1 : 1.

'பிற' என்றது, 'வேறு' என்றதனான், அவை 'தொல் காப்பியம், கபிலம், வில்லி, வாளி' என ஈறு திரிதலும் கொள்க.

இவ்வாறு பெயர்கள் எழுவாய் வேற்றுமை மயக்கம் என்று உணர்க, 'கடு' என்பது, தனக்கு உரிய முதற் பொருளை உணர்த்தாது சினைப்பொருளை உணர்த்தலின்.

வேற்றுமை மயங்கியல் முற்றும்.

ச. விளி மரபு

120] விளியின் போது இலக்கணம் [க

விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப.

என்பது சூத்திரம். இது, நிறுத்த முறையானே விளி உணர்த்துதலின், இவ்வோத்து **விளி மரபு** என்னும் பெயர்த்து ஆயிற்று. இச்சூத்திரத்தான் விளியது பொது இலக்கணம் கூறுகின்றார்.

(இ-ள்.) விளி எனப்படுப - விளி என்று சொல்லப்படுவன, கொள்ளும் பெயரொடு - தம்மை ஏற்கும் பெயரோடு, தெளியத் தோன்றும் இயற்கைய என்ப - விளங்கத் தோன்றும் இயல்பினை உடைய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

ஈறு திரிதலும், ஈற்று அயல் நீடலும், பிறிது வந்து அடைதலும், இயல்பு ஆதலும் என்னும் வேறுபாட்டால் 'படுப' என்றார். 'கொள்ளும் பெயர்' எனவே, கொள்ளாப் பெயரும் உளவாயின. 'இயல்பாய் விளி ஏற்பனவும் தெற்றென விளங்கும்,' என்றற்குத் 'தெளியத் தோன்றும்' என்றார்.

121] 'அப்பெயர்களைக் கூறுவல்,' எனல் [உ

அவ்வே,
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

இஃது, அப்பெயர்களைக் கூறுவல் என்கின்றது.

(இ-ள்.) அவ்வே இவ் என அறிதற்கு - விளி கொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவை என மாணக்கன் உணர்

தற்பொருட்டு, மெய்பெறக் கிளப்ப - பொருள் பெற எடுத்து ஓதுவர் ஆசிரியர். (அதனான், யானும் அம்முடிபே கூறுவல் எ-று.)

122] விளி ஏற்கும் உயர்திணைப் பெயர்கள் [ரு

அவைதாம்,
இஉ ஐஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கில்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

இஃது, உயர்திணைப் பெயருள் விளி ஏற்பன இவை என்கின்றது.

(இ-ள்.) அவைதாம் - கிளக்கப்படுவனவாகிய பெயர்தாம் எண்வகைய அவற்றுள், உயர்திணை மருங்கில் மெய்ப்பொருள் சுட்டிய விளி கொள் பெயர் - உயர்திணையிடத்து மெய்ப்பொருளைக் கருதின விளி கொள்ளும் உயிர் ஈற்றுப்பெயர், இ உ ஐ ஓ என்னும் இறுதி அப்பால் நான்கே - இ உ ஐ ஓ என்னும் இறுதியை உடைய அக்கூற்று நான்கு பெயரும் (எ-று.)

'மெய்ப்பொருள்' என்றதனான், அஃறிணைப்பெயர் அன்மொழியாய் உயர்திணைக்கண் வந்துழி உயர்திணைப் பெயராய் விளி ஏற்றலும், அவ்வீற்று அஃறிணைப்பெயர்களும் உயர்திணைப்பெயர்கள் போல விளி ஏற்றலும் கொள்க.

(உ-ம்.) 'சுடர்த்தொடீஇ! கேளாய்.'[1]
எனவும்,
'தும்பீ !'[2]
எனவும்,
'சிறுமீன் கவுட்கொண்ட செந்தூவி நாராய் !'[3]
எனவும்,
'கோன்றாய்! குருந்தே! கொடிமுல்லாய்! வாடினீர்
நின்றீர் அறிந்தேன் நெடுங்கணாள்-சென்றாளுக்கு'[4]
எனவும் வரும்.

---

1. கலி. 51 : 1. 2. குறுந். 2. 3. ஐந். எழு. 68. 4. திணை. நூற். 81.

123] இகர ஐகார ஈறுகள் விளி ஏற்குமாறு [ச

அவற்றுள்,
இஈ ஆகும்; ஐஆய் ஆகும்.

இஃது, இகர ஈறும் ஐகார ஈறும் விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - முற்கூறிய நான்கு ஈற்றுப் பெயருள், இ ஈ ஆகும் - இகர ஈற்றுப்பெயர் ஈகாரமாயும், ஐ ஆய் ஆகும் - ஐகார ஈற்றுப்பெயர் ஆய் ஆயும் ஈறு திரிந்து விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) நம்பி—நம்பீ !
நங்கை—நங்காய் !

என வரும்.

124] ஓவும் உவ்வும் விளி ஏற்குமாறு [ரு

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.

இஃது, ஒழிந்தன விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும் - ஓகார ஈற்றுப் பெயரும் உகர ஈற்றுப்பெயரும் ஏகாரத்தோடு பொருந்திப் பிறிது வந்து அடைதலாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) கோ—கோவே !
வேந்து—வேந்தே !

என வரும்.

125] மேற்கூறிய உகரம் குற்றியலுகரம் எனல் [சு

உகரந் தானே குற்றிய லுகரம்.

இஃது, ஐயம் அறுக்கின்றது.

(இ-ள்.) உகரந்தானே குற்றியலுகரம் - மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம் (எ-று.)

'திரு - திருவே !'[1] எனச் சிறுபான்மை முற்றியலுகரமும் விளி ஏற்கும்.

---

1. சீவக. 2121.

126] ஏனையுயிர் உயர்திணையில் விளி ஏலாமை [எ

ஏனை உயிரே உயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.

இது, வேண்டா கூறி, வேண்டியது முடிக்கின்றது.

(இ-ள்.) ஏனை உயிரே - மேற்கூறப்பட்ட நான்கு ஈறும் அல்லா உயிர் ஈறு, உயர்திணை மருங்கில் தாம் விளி கொள்ளா என்மனார் புலவர் - உயர்திணைக்கண் விளி கொள்ளா என்று கூறுவர் புலவர் (எ-று.)

இதனாற்பயன், 'கணி—கணியே! கரி—கரியே!' என முற்கூறிய உயிர்கள் பிறவாறும் விளி ஏற்கும் என்றல்.

'தாம்' என்றதனால், 'மக'[1] என்றது 'மகவே!' எனப் பிறிது வந்தும்,

'சான்றோர் ஈன்ற தகரத் தகாமகா!'

என ஆகாரமாயும், 'ஆடூஉ' என்றது 'ஆடூஉ! கூறாய்,' என இயல்பாயும், 'ஆடூஉவே!' எனப் பிறிது வந்தும் விளி ஏற்றவாறு கொள்க.

127] இகர ஈற்று அளபெடைப்பெயர் விளியேற்குமாறு [அ

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

(இ-ள்.) அளபெடை மிகூஉம் இகர இறு பெயர் - அளபெடை தன் இயல்பு மாத்திரையின் மிக்கு நான்கு* மாத்திரை பெற்று நிற்கும் இகர ஈற்றுப்பெயர், இயற்கைய ஆகும் செயற்கைய என்ப - இ ஈயாகாது இயல்பாய் விளி ஏற்கும் செயற்கையை† உடைய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) 'தொழீஇஇ!'[2] ‡

என வரும். 'தொழீஇஇஇ' § என ஐந்து எழுத்தும் இட்டு எழுதுப.

பி-ம்: * நான்கும் ஐந்தும் † செய்கையை ‡ தோழீஇஇஇ
§ தோழீஇஇஇஇ

1. மலைபடு. 185. 2. கலி. 103 : 40; 104 : 69.

'இகர ஈற்றுப்பெயர்' எனவே, நெட்டெழுத்து அளபெடுத்தது அன்று, குற்றெழுத்தே நின்று மாத்திரை பெற்றது என்று உணர்க. இது, 'தொழில் செய்கின்றவளே !' என்னும் பொருள் தந்து நிற்பதோர் சொல்.*

128] முறைப்பெயரில் ஐயீறு ஆவாகவும் வருதல் [கூ

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

(இ-ள்.) முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி-முறைப் பெயரிடத்து ஐகார ஈறு, ஆவொடு வருதற்கு உரியவும் உள-ஆய் ஆகாது ஆகாரத்தோடு வருதற்கு உரியனவும் உள (எ-று.)

(உ-ம்.) அன்னை—அன்னா !
அத்தை—அத்தா !

என வரும்.

உம்மை மறுத்து நிற்றலின், 'அன்னாய்! அத்தாய் !' என்று வருதலே சிறப்பிற்று.

---

* குறிப்பு :—சென்னை இராசதானிக் கல்லூரித் தமிழாசிரியராயிருந்து காலஞ்சென்ற கலித்தொகைப் பதிப்பாசிரியராகிய உயர் திருவாளர் இ. வை. அனந்தராமையரவர்கள், தமது கலித்தொகைப் பதிப்பின் கூசச-ஆம் பக்கத்து, 'தொழீஇஇ' எ-து: காண்டற்றொழிலையுடையவளே. எ-று. இஃது "அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்." ' என்னும் பகுதியைப்பற்றி எழுதிய அடிக்குறிப்பில், 'இச்சூத்திரத்தின் உரையும் மேற்கோளும் எழுதுவோராலும் அவற்றை ஊன்றிப்பாராது அச்சிடுவோராலும் எளிதின் உண்மையறிய இயலாதவாறிருக்கின்றன. இச்சூத்திர உரையில், "தொழீஇ என்பது பெயர்; விளியுமஃதே எனக் கொள்க. இஃதியல்பு. 'இயற்கைய' என்று பன்மை கூறிய அதனான், இவ்வளபெடை மூன்று மாத்திரையின் மிகிர்ந்து நிற்குமென்பது கொள்ளப்படும். 'செயற்கைய' என்றதனான், இவ்வளபெடைப்பெயர் எழுதும் வழி ஐந்தெழுத்திட்டும் எழுதுப," என்பர் கல்லாடர். ஏனைய உரை

இவை விரவுப்பெயரேனும், ஈண்டு உயர்திணைப் பெயரிடை வைத்தார், மேல் விரவுப்பெயரை இவற்றோடு மாட்டு எறிதலின் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப விளி ஏற்பன உயர்திணைப் பெயர்களுள் வேறு இன்மையான்.

129] அண்மை விளி இயல்பாதல் [கo

அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) அண்மைச் சொல்லே இயற்கை ஆகும் - நான்கு ஈற்று அண்மைக்கண் விளி ஏற்கும் சொற்கள் இயற்கையாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) நம்பி ! வாழி.
வேந்து ! வாழி.
நங்கை ! வாழி.
கோ ! வாழி.

என வரும்.

கள் அச்சிடப்பட்டுள்ளன. 'தொழீஇஇ' கலி. கoச: சுகூ. 'தொழீஇ யுடனுண்ணூர்' (சிறுபஞ்ச. ௩அ) என இச்சொல் பிறவிடத்து வருதலும் காண்க,' என எழுதியுள்ளார்கள்.

ஐயரவர்கள் கூற்று உண்மையே: என் பார்வைக்குக் கிடைத்த இந்நூலின் ஏட்டுப்பிரதிகளுள் இரண்டில் இச்சூத்திரத்தின் உரையில் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் 'தோழீஇ இஇஇ என வரும். தோழீஇஇஇஇஇ என ஐந்தெழுத்தும் இட்டெழுதுப,' எனவும், மற்றொன்றில், 'தொழிலீஇஇஇஇ என வரும். தொழிலீஇஇஇஇஇ என ஐந்தெழுத்தும் இட்டு எழுதுப,' எனவும் உள்ளன. இவை ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழை என்பது வெள்ளிடை மலை.

ஏனைய உரைகள் வருமாறு :

இளம்பூரணர் உரை :

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், எய்தியது விலக்கல் நுதலிற்று.

130] புள்ளி ஈற்றுள் விளி ஏற்பன [கக

னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே.

இது, புள்ளி ஈற்றுள் விளி ஏற்பன கூறுகின்றது.

(இ-ள்.) புள்ளி இறுதி விளி கொள் பெயர் - புள்ளி ஈற்றினையுடைய விளித்தலைக் கொள்ளும் உயர்திணைப்பெயர், ன ர ல ள என்னும் அந்நான்கு என்ப - ன ர ல ள என்று கூறப்படும் அந்நான்கு ஈற்றுப் பெயரும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

131] புள்ளி ஈற்றுள் விளி ஏலாதன [கஉ

ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா.

இது, வேண்டா கூறி, வேண்டியது முடிக்கின்றது.

(இ-ள்.) ஏனைப் புள்ளி ஈறு விளி கொள்ளா - அந்நான்கும் அல்லாத புள்ளி ஈற்றுப்பெயர் விளித்தலைக் கொள்ளா (எ-று.)

உரை: அளபெடை இகரம் ஈறுயின் இயல்பாயே விளி ஏற்கும் என்றவாறு.

வரலாறு: தொழீஇ என வரும். பெயர் நிலையும் விளி நிலையும் அதுவே நிற்குமாறு.

இனிச் 'செயற்கைய' என்றதனால், இரண்டு மூன்று மாத்திரை பெற எழுதுவாரும், ஐந்து மாத்திரை பெற எழுதுவாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என உணர்க.

சேனாவரையர் உரை:

இதன் பொருள்: அளபெடை தன்னியல்பு மாத்திரையின் மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப் பெயர், இ ஈயாகாது இயல்பாய் விளியேற்கும் செயற்கையை உடையவாம் என்றவாறு.

'அளபெடை மிக்கியற்கையவாகும் செயற்கைய' என்னாது, 'மிகூஉ மிகர விறுபெயர்' என அநுவதித்தாரேனும், மாத்திரை மிக்கு இயல்பாமென்பது அதனாற்பெறப்படும்.

இங்ஙனம் வேண்டா கூறிய அதனாற்பயன், மேற் கூறுகின்ற புள்ளி ஈறுகள் பிறவாற்றான் விளி கொள்வன உள என்பதூஉம், எடுத்து ஓதாப் புள்ளி ஈறுகளிலும் விளி ஏற்பன உள என்பதூஉம் உணர்த்துதலாம்.

முறைமை சுட்டா 'மகன், மகள்' என்பன,

'படிவ உண்டிப் பார்ப்பன மகனே !'[1]
'அகவல் மகளே ! அகவல் மகளே !'[2]

என ஏகாரம் பெற்று வருதலும் ('அகவல் மகள்' முறைமை சுட்டியது அன்று; அகவல் - ஓசை),

'கூந்தல்மா கொன்று* குடமாடிக் கோவலனாய்ப் [தாய்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்†—யாங்கொளித்
தென்னவனே ! தேர்வேந்தே ! தேறுநீர்க் கூடலார்
மன்னவனே ! மார்பில் மறு ?'[3]

என 'அன்' ஈறு ஏகாரம் பெற்று வருதலும்,

பி-ம்: * ஊர்ந்து † ஞான்றுண்டாங்கொல்

1. குறுந். 156. 2. குறுந். 23. 3. முத்தொள்ளாயிரம்

உதாரணம் : தோழீஇ எனவும், தோழீஇஇ எனவும் வரும்.

இ ஈயாகாமையின் இயற்கையவாகுமென்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையாற் செயற்கையவென்றுங் கூறினார்.

இகரவிறுபெயரென்றது, இகரத்தானிற்ற பெயரென விரியும்.

தெய்வச்சிலையார் உரை:

இகர ஈற்றுக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: அளபெடை மிக்க இகர ஈற்றுப்பெயர் இயற்கையவாகிய செய்தியையுடைய (எ-று.)

உ-ம்: தோழீஇ என்பது விளிக்கண்ணும் அவ்வாறே வரும். செயற்கை என்றதனான் விளிக்கண் வரும் ஓசை வேறுபாடு அறிந்துகொள்க.

'நம்பன் ! சிறிதே இடைதந் திதுகேட்க.'[1]

என 'அன்' ஈறு இயல்பாய் வருதலும்,

'நம்பான் ! எம்பெருமா !'

என 'அன்' ஈறு ஈற்று அயல் நீண்டு வருதலும், 'ஆன்' ஈறு,

'வாயி லோயே ! வாயி லோயே !'[2]

என ஏகாரம் பெற்று வருதலும், ரகர ஈறு,

மாந்தர் ! கூறீர்.

என இயல்பாயும்,

இறைவரே !

என ஏகாரம் பெற்றும் வருதலும், லகார ஈறு,

கானல் ! கூருய்.
குரிசில் ! கூருய்.

என இயல்பாயும்,

1. சீவக. 1975. 2. புறம். 206 : 1.

இந்நூலின் முதற்பதிப்பாசிரியராகிய உயர் திருவாளர் யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் முதலிற் காட்டியுள்ள 'தோழீஇஇஇஇ' என்னும் உதாரணத்தை மேற்கொண்டு பதிப்பித்துள்ளார்கள்.

இனி இதன் உண்மை வடிவம் இன்னதென என் சிற்றறிவிற் கெட்டியபடி யான் பதிப்பித்தமைக்குக் காரணம் பின் வருமாறு :—

'தோழீஇயட* உண்ணர்; தோழரில் துஞ்சார்;
வழீஇப்† பிறர்பொருளை வெளவார்:—கெழீஇக்
கலந்தபின் கீழ்காணர்; காணய் மடவாய் !
புலந்தபின் போற்ருர் புலை.'

என்பது சிறுபஞ்ச மூலம். இதிலுள்ள 'தோழீஇ' என்பதே இச்சொல்லின் உண்மை உருவம். இச்சொல்லுக்குத் 'தொழுத்தை' என்பது பொருள். இதிலுள்ள இயற்கை அளபெடைக்கு

பி-ம்: * தொழீஇயுடன் † வழீஇய

திருமாலே! தாழ்குழலே!

என ஏகாரம் பெற்றும் வருதலும், ளகார ஈறு,

கடவுள்! வாழி.

என இயல்பாயும்,

அடிகள் - அடிகேள்!

என ஈற்றயல் அகரம் ஏகாரமாயும் வருதலும், இவையிற் பிறவாறாய் வருதலும் கொள்க.

இனி, எடுத்து ஓதாதனவற்றுள் ஆகார ஈறு,

'துறந்துள்ளார் அவ்ரெனத் துனிகொள்ளல் எல்லா! நீ.'[1]

என 'ஏடீ' என்றும்,

'எல்லா! நீ
முன்னத்தான் ஒன்று குறித்தாய்போற் காட்டினை.'[2]

என 'ஏடா' என்றும் இருபாற்கும் பொதுவாய் விளி ஏற்றலும், 'முன்' ஈறு,*

தம்முன்—தம்முனே!

என ஏகாரம் பெற்றும்,

நம்முன்—நம்முனா!

என ஆகாரம் பெற்றும், 'இர்' ஈறு,

பி-ம்: * 'உன்' ஈறு 1. கலி. 35: 8. 2. கலி. 61: 7.

மாத்திரை மூன்று. 'அளபெடை தன் இயல்பு மாத்திரையின் மிக்கு நான்கு மாத்திரை பெற்று நிற்கும் இகர ஈற்றுப்பெயர்' என்று நச்சினார்க்கினியர் கூறிய உரைக்கிணங்க இச்சொல் விளியேற்றபோது 'தோழீஇஇ' என நின்றது என்பதே நேரிது. இனி, 'ஐந்தெழுத்தும் இட்டு எழுதுப,' என அவர் கூறுவதால், இது 'தோழீஇஇஇ' என நிற்றலும் பொருந்துமென்க. இச்சொல் விளி ஏற்குங்கால் இவ்விரு வடிவத்திலும் நிற்றலைக் கருதியே 'இயற்கையவாகும் செயற்கைய' எனப் பன்மை வாசகத்தாற் சூத்திரஞ்செய்தார் ஆசிரியர் தொல்காப்பியனார் என்பதே நச்சினார்க்கினியரின் கருத்து என்பதும் இதனால் விளங்கும்.

பெண்டிர்—பெண்டிரோ !

என ஓகாரம் பெற்றும்,

'என்னை கேளீர் !'[1]

என 'ஈர்' பெற்றும்,

'கேளிர் ! வாழியோ கேளிர் நாளும்.'[2]

என இயல்பாயும், யகர ஈறு,

'விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய் !'[3]

என இயல்பாயும், 'ஆயே!' என ஏகாரம் பெற்றும் வருதலும் கொள்க.

இனி,

'கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.'[4]

என்றும்,

'கிழவோட் குவமம் ஈரிடத் துரித்தே.'[5]
'கிழவோற் காயின் இடம்வரை வின்றே.'[6]

என்றும் பிறண்டும் உடம்பொடு புணர்த்துக் கூறிய 'ஓன்' என்னும் ஈறு, தொழிலிற் கூறும் ஆன்என் இறுதி'[7] போல அகரமாய் விளி ஏற்றலும் கொள்க. அது,

'பெருங்கல் வைப்பின் நாடுகிழ வோயே !'[8]
'மாஅயோய் !'[9]

என்றாற்போலச் செய்யுட்களுள்ளும் வருவனவும்கொள்க. ஓகாரம் அடுத்த ளகார ஈறு விளியேற்குமேனும் உணர்க.

'ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணி'[10]

என்றாற்போலும் அண்மை விளியும் இதனாற்கொள்க.

---

1. சீவக. 1594. 2. குறுந். 280. 3. புறம். 130 : 1.
4. பொருளியல், சூ. 40. 5. உவமவியல், சூ. 29.
6. உவமவியல், சூ. 30. 7. விளி மரபு, சூ. 16.
8. புறம். 202 : 21. 9. பரி. 3 : 1. 10. புறம். 9 : 1, 2.

132] னகார ஈறு விளி ஏற்குமாறு [கக

அவற்றுள்,
அன்னென் இறுதி ஆவா கும்மே.

இது, முறையானே னகார ஈறு விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் அன் என் இறுதி ஆ ஆகும்மே - அந் நான்கு ஈற்றுப் பெயருள் 'அன்' என்னும் னகர ஈற்றுப்பெயர் ஆவாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) துறைவன்—துறைவா !
ஊரன்—ஊரா !
சோழன்—சோழா !
சேர்ப்பன்—சேர்ப்பா !

என வரும்.

133] னகார ஈறு அண்மை விளியில் அகரம் ஆதல் [கச

அண்மைச் சொல்லிற் ககர மாகும்.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) அண்மைச் சொல்லிற்கு அகரம் ஆகும் - அண்மை விளிக்கண் 'அன்' ஈறு அகரமாகும் (எ-று.)

(உ-ம்.) துறைவன்—துறைவ !
ஊரன்—ஊர !
சோழன்—சோழ !

என வரும்.

134] ஆன் இறுதி இயல்பாதல் [கரு

ஆனென் இறுதி இயற்கை ஆகும்.

இஃது, 'ஆன்' என்பது விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஆன் என் இறுதி இயற்கை ஆகும் - 'ஆன்' என்னும் னகர ஈற்றுப்பெயர் இயல்பாய் விளி ஏற்கும் (எ-று.)

'சேரமான் ! மலையமான் !' எனக் கூவுதற்கண்ணும் அவ்வாறே நிற்றல் காண்க.

135] ஆன் ஈற்று வினையாலணையும்பெயர் விளி ஏற்குமாறு [கசா

தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆய்ஆ கும்மே விளிவயி னான.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) தொழிலிற்கூறும் ஆன் என் இறுதி விளிவயினான- தொழிலினான் ஒரு பொருள் அறியச் சொல்லும் 'ஆன்' ஈற்றுப் பெயர் விளி ஏற்குமிடத்து, ஆய் ஆகும் - 'ஆய்' ஆம் (எ-று.)

(உ-ம்.) வந்தான்—வந்தாய்!
சென்றான்—சென்றாய்!

என வரும்.

'தொழிலின்' என்றதனால், 'கழலாய்! இடையாய்!' எனக் குறிப்பினும் கொள்க.

136] ஆன் ஈற்றுப் பண்புப்பெயர் விளி ஏற்குமாறு [கஎ

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

இதுவும் அது.

(இ-ள்.) பண்பு கொள் பெயரும் அதனோரற்றே - 'ஆன்' ஈற்றுப் பண்பைக் கொண்டு நின்ற பெயரும் அவ்வீற்றுத் தொழிற்பெயர் போல 'ஆய்' ஆய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) கரியான்—கரியாய்!
தீயான்—தீயாய்!

என வரும்.

137] ஆன் ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு [கஅ

அளபெடைப் பெயரே அளபெடை இயல.

இஃது, எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்.) அளபெடைப்பெயரே அளபெடை இயல - 'ஆன்' ஈற்று அளபெடைப்பெயர் இகர ஈற்று அளபெடைப்பெயர் போல[1] மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளி ஏற்கும் (எ-று.)

---

1. விளி மரபு, சூ. 8.

(உ-ம்.) உழாஅஅன்!
கிழாஅஅன்!

என வரும். இஃது, அளபெடுத்தலின், 'ஆன்' ஈற்றின் அடங்காதாயிற்று.

138] னகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு [கசு

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே.

இதுவும் அது.

(இ-ள்.) முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே - னகார ஈற்று முறைப்பெயர் ஏகாரம் பெற்று விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) மகன்—மகனே!
மருமகன்—மருமகனே!

என வரும். ஐகார ஈற்று முறைப்பெயர்க்குக் கூறிய உரையை[1] ஈண்டும் கூறிக்கொள்க.

139] னகார ஈற்றுள் விளி ஏலாதன [உ0

தான்என் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யான்என் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே.

இது, னகார ஈற்றுள் விளி ஏலாதன கூறுகின்றது.

(இ-ள்.) தான் என் பெயரும் சுட்டு முதற்பெயரும் யான் என் பெயரும் வினாவின் பெயரும் அன்றி அனைத்தும் விளி கோள் இலவே - 'தான்' என்னும் 'ஆன்' ஈற்று விரவுப்பெயரும் 'அவன், இவன், உவன்' என்னும் 'அன்' ஈற்றுச் சுட்டு முதற் பெயரும் 'யான்' என்னும் 'ஆன்' ஈற்றுப்பெயரும் 'யாவன்' என்னும் வினாப்பொருளை உணர்த்தும் 'அன்' ஈற்றுப்பெயருமாகிய அவ்வனைத்தும் னகார ஈறேயாயினும் விளி கொள்ளா (எ-று.)

---

1. விளி மரபு, சூ. 9, உரை.

140] ரகார ஈற்றுப்பெயர் விளி ஏற்குமாறு [உக

ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.

இது, முறையானே ரகார ஈறு விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஆரும் அருவும் ஈரொடு சிவணும் - ரகார ஈற்றுப் பெயருள் ஆர், அர் என நின்ற இரண்டீற்றுப்பெயரும் 'ஈர்' ஆய் இறுதி திரிந்து விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்) பார்ப்பார்—பார்ப்பீர்!
கூத்தர்—கூத்தீர்!

என வரும்.

141] ரகார ஈற்று வினையாலணையும் பெயர் விளி ஏற்குமாறு [உஉ

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்.) தொழிற்பெயர் ஆயின் - மேற்கூறிய இரண்டீறும் தொழிற்பெயர்க்கு ஈறாய் வருமாயின், ஏகாரம் வருதலும் வழுக்கு இன்று என்மனார் வயங்கியோரே - முற்கூறிய ஈரோடு ஏகாரம் வருதலும் குற்றம் இன்று என்று கூறுவர் விளங்கிய அறிவினையுடையார் (எ-று.)

(உ-ம்.) வந்தார்—வந்தீரே!
சென்றார்—சென்றீரே!

என வரும். 'அர்' ஈறு வந்துழிக் காண்க.

'வழுக்கு இன்று,' என்றதனால், தொழிற்பெயர் அல்லா 'ஆர்' ஈறுகளும் ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்க.

(உ-ம்.) நம்பியார்—நம்பியீரே!
கணியார்—கணியீரே!

என வரும்.

இன்னும் இதனானே 'அர்' ஈறு,

வந்தவரே! சென்றவரே!

என 'ஈர்' பெறாது ஏகாரம் பெற்று வருதலும் சிறுபான்மை கொள்க.

142] ரகார ஈற்றுப் பண்புகோள் பெயர் விளி ஏற்குமாறு [உரு

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி வகுத்தது.

(இ-ள்.) பண்பு கொள் பெயரும் அதனோரற்றே - அவ்விரண்டீற்றுப் பண்பு கொள் பெயரும் அவ்வீற்றுத் தொழிற்பெயர் போல ஈரொடு சிவணியும், சிறுபான்மை ஈரோடு ஏகாரம் பெற்றும், ஈர் பெறாது ஏகாரம் பெற்றும் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) கரியர்—கரியீர்!

இளையார்—இளையீர்!

எனவும்,

கரியீரே! இளையீரே!

எனவும்,

கரியவரே! இளையவரே!

எனவும் வரும்.

இனி, '**தன்னினம் முடித்தல்**' என்பதனால், 'சீவகசாமி'[1] என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, 'சீவக சாமியார்' என 'ஆர்' ஈறாய்ச் 'சீவக சாமியீரே!'[2] என ஈரோடு ஏகாரம் பெறுதல் கொள்க.

143] ரகார ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு [உச

அளபெடைப் பெயரே அளபெடை இயல.

இஃது, எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்.) அளபெடைப் பெயரே அளபெடை இயல - ரகார ஈற்று அளபெடைப்பெயர் னகார ஈற்று அளபெடைப் பெயர்போல மாத்திரை மிக்கு இயல்பாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) சிறூஅஅர்! துடியர்! பாடுவல் மகாஅஅர்!'[3]

1. சீவக. 665. 2. சீவக. 1913. 3. புறம். 291 : 1.

என வரும். அவ்வளபெடைகள் செய்யுளுள் குறைந்து வந்தன, சந்த இன்பம் நோக்கி விகாரத்தால் குறைந்து வந்தன என்று கொள்க.

144] ரகார ஈற்றுள் விளி ஏலாத பெயர்கள் [உரு

சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

இது, விளி ஏலாதன கூறுகின்றது.

(இ-ள்.) சுட்டு முதற்பெயரே முன் கிளந்தன்ன - 'அவர், இவர், உவர்' என்னும் ரகார ஈற்றுச் சுட்டு முதற்பெயர் னகார ஈற்றுச் சுட்டு முதற்பெயர் போல விளி கொள்ளா (எ-று.)

145] இதுவும் அது. [உசு

நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை இரண்டும் அவற்றியல் பியலும்.

இதுவும் அது.

(இ-ள்.) நும்மின் திரிபெயர் -'நும்' என்னும் சொல்லினது திரிபாகிய 'நீயிர்' என்னும் சொல்லும், வினாவின் பெயர் - வினாப் பொருளை உணர நின்ற 'யாவர்' என்னும் சொல்லும், என்று அம்முறை இரண்டும் அவற்று இயல்பு இயலும் - என்று சொல்லப்பட்ட அம்முறைமையினையுடைய இரண்டு சொல்லும் முற்கூறிய சுட்டுப்பெயர்போல விளி ஏலா (எ-று.)

'ஏனைப் புள்ளி'[1] என்பதனுள் 'இர்' ஈறு கோடலின், ஈண்டு 'நீயிர்' என்பதனை எடுத்து ஓதி விலக்கினர்.

146] லகார ளகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்குமாறு [உஎ

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்.

இது, லகார ளகார ஈறு விளி ஏற்குமாறு கூறுகின்றது.

---

1. விளி மரபு, சூ. 12.

(இ-ள்.) எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே - உணர்த்தாது நின்ற லகார ளகாரம் என்னும் இரண்டு புள்ளியை இறுதியாக உடைய பெயர், ஈற்று அயல் நின்ற நீட்டம் வேண்டும் - ஈற்று எழுத்துக்கு அயல் நின்ற எழுத்து நீண்டு விளி ஏற்றல் வேண்டும் (எ-று.)

(உ-ம்.) குரிசில்—குரிசீல் !
ஏந்தல்—ஏந்தால் !
தோன்றல்—தோன்றால் !
குழையள்—குழையாள் !
அணியள்—அணியாள் !
மக்கள்—மக்காள் !

என வரும்.

147] இதுவும் அது. [உஅ

அயல்நெடி தாயின் இயற்கை ஆகும்.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) அயல் நெடிது ஆயின் இயற்கை ஆகும் - அவ்விரண்டீற்றுப் பெயரும் ஈற்று அயல் எழுத்து நெட்டெழுத்து ஆயின் இயல்பாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) ஆண்பால் ! பெண்பால் !
ஏமாள் ! கோமாள் ! கடியாள் !

என வரும். 'நமர்காள் !' என்பதும் அது. 'நமரங்காள்! அறிமின்,' எனப் பெயர்த்திரி சொல்லாய்த் திரிந்து நின்று விளி ஏற்றலும் கொள்க.

148] ளகார ஈற்று வினைப்பெயரும் பண்புகோள் பெயரும் 'ஆய்' ஆதல் [உகூ

வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆள்என் இறுதி
ஆய்ஆ கும்மே விளிவயி னான.

இஃது, அவ்விரண்டனுள் ளகார ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) வினையினும் பண்பினும் நினையத் தோன்றும் ஆள் என் இறுதி - வினைச்சொல்லின்கண்ணும் பண்புச்சொல்லின் கண்ணும் ஆராயத் தோன்றும் 'ஆள்' ஈற்றுப்பெயர், விளிவயினான ஆய் ஆகும்மே - விளிக்குமிடத்து இயல்பாகாது 'ஆய்' ஆய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) உண்டாள்—உண்டாய்!
கரியாள்—கரியாய்!

என வரும்.

'விளிவயினான' என்பதனை யாண்டும் கூட்டுக.

149] ளகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு [ரூ0

முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) முறைப்பெயர்க் கிளவி முறைப்பெயர் இயல - ளகார ஈற்று முறைப்பெயர் னகார ஈற்று முறைப்பெயர் போல ஏகாரம் பெற்று விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) மகள்—மகளே!
மருமகள்—மருமகளே![1]

என வரும்.

150] ளகார ஈற்றுப் பெயருள் விளி ஏலாதன [ரூக

சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

இது, ளகார ஈற்றுள் விளி ஏலாதன கூறுகின்றது.

(இ-ள்.) சுட்டு முதற்பெயரும் வினாவின் பெயரும் முற்கிளந்தன்ன என்மனார் புலவர் - 'அவள், இவள், உவள்' என்னும் ளகார ஈற்றுச் சுட்டு முதற்பெயரும் 'யாவள்' என்னும் வினாப் பெயரும் முற்கூறிய சுட்டு முதற்பெயரும் வினாப்பெயரும் போல[2] விளி கொள்ளா (எ-று.)

1. அகம். 165 : 13. 2. விளி மரபு, சூ. 20.

151] ல, ள ஈற்று அளபெடைப்பெயர் விளி ஏற்குமாறு [கூஉ

அளபெடைப் பெயரே அளபெடை இயல.

இஃது, எய்தாதது எய்துவித்தது.

(இ-ள்.) அளபெடைப் பெயரே அளபெடை இயல - லகார ளகார ஈற்று அளபெடைப்பெயர் முற்கூறிய னகார ஈற்று அளபெடைப்பெயர் போல அளவு நீண்டு இயல்பாய் விளி ஏற்கும் (எ-று.)

(உ-ம்.) மாஅஅல்!நின் நிறம்போல் மழையிருட் பட்டதே
கோஒஒள்! கொளக்கோடு கொண்டு.'

என்பதனுள் 'மாஅஅல்! கோஒஒள்!' என வந்தவாறு காண்க.

152] விரவுப்பெயர் விளி ஏற்குமாறு [கூகூ

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலே.

இது, விரவுப்பெயர் விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர் - மேல் உயர்திணைக்கண் விளி ஏற்கும் என்ற எட்டு ஈற்றினையும் உடைய உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப்பெயர், விளம்பிய நெறிய விளிக்குங்காலே-அவ்வீறுகளின் எடுத்து ஓதிய முறைமையினையுடைய விளிக்குமிடத்து (எ-று.)

(உ-ம்.) சாத்தீ ! பூண்டே ! தந்தாய் !

எனவும்,

சாத்தா !* கூந்தால் ! மக்காள் !

எனவும் வரும்.

சாத்தி ! பூண்டு ! தந்தை ! சாத்த !

என அண்மை விளியும் கொள்க.

இனி, 'விளிக்குங்காலே' என்றதனால்,

பி-ம்: * சாத்தாய்

பிணு ! வாராய்.
அழிநூ ! வாராய்.

என எடுத்து ஓதாத ஆகார ஊகார ஈற்று விரவுப்பெயர் இயல்பாய் விளி ஏற்றலும்,

சாத்தன் ! வாராய்.
மகள் ! வாராய்.
தூங்கல் ! வாராய்.

என எடுத்து ஓதிய ஈறுகள், கூறியவாறு அன்றி, இயல்பாய் விளி ஏற்றலும், இப்பெயர்கள் ஏகாரம் பெற்று விளி ஏற்றலும் கொள்க.

உயர்திணையோடு அஃறிணை விரவுமாறு,

'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமாருளவே.'[1]

என்புழிக் கூறினும்.

153] அஃறிணைப்பெயர் விளி ஏற்குமாறு [நடச

புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்*
தெளிநிலை உடைய ஏகாரம் வரலே.

இஃது, அஃறிணைப்பெயர் விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) புள்ளியும் உயிரும் இறுதியாகிய - புள்ளியீறும் உயிரீறுமாகிய, அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும் - அஃறிணையிடத்து வரும் எல்லாப் பெயர்களும், விளி நிலை பெறூஉம் காலம் தோன்றின் - விளி கொள்ளும் காலம் தோன்றின், ஏகாரம் வரல் தெளி நிலை உடைய - ஏகாரம் பெறுதலைத் தெற்றென உடைய (எ-று.)

(உ-ம்.) மரம்—மரமே !
அணில்—அணிலே !

பி-ம்: * தோன்றில் 1. எழுத். தொகை மரபு, சூ. 13.

புலி—புலியே !
கிளி—கிளியே !

என வரும்.

'தெளி நிலை உடைய' என்றதனன்,

'வருந்தினை வாழியென் னெஞ்சம் !'[1]
'கருங்கால் வெண்குருகு ! ஒன்று* கேண்மதி.'[2]
'திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால் !'[3]

என்றாற்போலப் பிறவாற்றான் விளி ஏற்பனவும் கொள்க.

இனி உயர்திணைப்பெயருள் ஏகாரம் பெருமல் விளி ஏற்று நின்றனவற்றையும் வழக்குச் சொல்லால் தெரியப் பொருள்கூற வேண்டியக்கால் இவ்வேகாரமே விரித்துக் கூறல் வேண்டுதலும் இதனல் கொள்க.

'தோண்டையோர் மருக !
மள்ளர் மள்ள ! மறவர் மறவ !
செல்வர் செல்வ ! செருமேம் படுந !'[4]
'பைம்பூண் சேஎய் !'[5]

என்றாற்போல்வன ஏகாரத்தால் பொருள் கூறுமாறு உணர்க.

'விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்' என்றார், முன்னிலையாக்கலும் சொல்வழிப்படுத்தலும் வேண்டுழியே விளி ஏற்கும் என்றற்கு.

154] விளி ஏற்கும் பெயர்கள் சேய்மையில் அளபிறந்து [ருடு
ஒலித்தல்

**உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான.**

பி-ம்: * எனவ 1. அகம். 19 : 2. 2. நற். 54. 3. கலி. 144 : 18. 4. பெரும்பாண். 454-56. 5. பெரும்பாண். 458.

இது, முற்கூறிய மூவகைப்பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்.) உள எனப்பட்ட எல்லாப் பெயரும் - இரு திணைக் கண்ணும் விளி ஏற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப் பெயரும் விளிக்குங்காலை அளபு இறந்தன - விளிக்குமிடத்துத் தம் மாத்திரையின் இறந்து இசைத்தனவாம், சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான - சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கின்கண் (எ-று.)

(உ-ம்.) நம்பீஇ ! சாத்தாஅ !

என வரும்.

சேரமாஅன் ! மலையமாஅன் !

என்பன அளபிறந்து இசைக்கும் வழி இயல்பன்றி ஈற்று அயல் நீண்டனவாம்.

155] 'அம்ம' என்னும் இடைச்சொல் விளி ஏற்குமாறு [நுசு

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இஃது, 'அம்ம' என்னும் இடைச்சொல் விளி ஏற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம் - 'அம்ம என்று கூறப்படும் உரைப்பொருட்கிளவியினது* நீட்டமாகிய 'அம்மா' என்னும் சொல், அம்முறைப் பெயரொடு சிவணாது ஆயினும் - முற்கூறிய விளி ஏற்கும் முறைமையினையுடைய பெயர்களோடு பொருந்தாது இடைச்சொல்லாய் நிற்பினும், விளியொடு கொள்ப தெளியுமோரே - விளி ஏற்கும் பெயர்களோடு இதனையும் விளி நிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினை உடையோர் (எ-று.)

(உ-ம்.) 'அம்மா கொற்றா !'

என வரும்.

பி-ம் : * முறைப்பொருட்கிளவி

'கோற்ரு!' என்பது எதிர்முகம் ஆக்கும் ஆயினும், 'கேளாய்' என்பதும் அதனோடு கூடி எதிர்முகம் ஆக்கி நின்றவாறு காண்க.

'அம்ம கேட்பிக்கும்.'[1]

எனவும்,

'அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்'[2]

எனவும்,

'உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.'[3]

எனவும் ஆசிரியர் இதனைப் பொருள் தந்து நிற்கும் என்றே சூத்திரம் செய்தலின், ஈண்டு 'அசைச்சொல் நீட்டம்' என்றதற்கு

'யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு'[4]

என்ருற்போல, 'எதிர்முகமாக்கும் சொல்லின் நீட்டம்' என்று பொருள் உரைத்துக்கொள்க.

156] உயர்திணைப்பெயருள் விளி ஏலாதன [நுஎ

தநநு எஎன அவைமுத லாகித்
தன்மை குறித்த னரளவென் இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே.

இஃது, உயர்திணைப்பெயருள் விளி ஏலாதன கூறுகின்றது.

(இ-ள்.) த ந நு எ என அவை முதலாகி - த ந நு என்னும் உயிர்மெய்யையும் எ என்னும் உயிரையும் முதலாக உடையவாய், தன்மை குறித்த ன ர ள என் இறுதியும் - ஒருவனது கிழமைப்பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாக உடைய சொல்லும், அன்ன பிறவும் பெயர் நிலை வரினே - அவை போல்வன பிறவுமாகிய

1. இடையியல், சூ. 28. 2. எழுத். உயிர். மயங். சூ. 8.
3. எழுத். உயிர். மயங். சூ. 10. 4. எழுத். மொழி மரபு, சூ. 1.

பெயராகிய நிலைமையை உடைய சொற்கள் வரின், விளியொடு கொளல் இன்மை வேண்டும் - மேல் விளி ஏற்கும் என்னப் பட்ட பெயரோடு கோடலை இல்லாமை வேண்டும் ஆசிரியன் (எ-று.)

(உ-ம்.) தமன், தமர், தமள்
நமன், நமர், நமள்
நுமன், நுமர், நுமள்
எமன், எமர், எமள்

எனவும்,

தம்மான், தம்மார், தம்மாள்
நம்மான், நம்மார், நம்மாள்
நும்மான், நும்மார், நும்மாள்
எம்மான், எம்மார், எம்மாள்

எனவும் வரும்.

'பிறவும்' என்றதனன்,

மற்றையான், மற்றையார், மற்றையாள்
பிறன், பிறர், பிறள்

என வரும்.

'வேண்டும்' என்றதனன்,

எம்பி !
'எம்மானே! தோன்றினய் என்னை ஒளித்தியோ !'[1]

என்ருற்போலச் சிறுபான்மை விளி ஏற்பனவும், 'தமர்' முதலியன 'கள்' என்னும் இடைச்சொல்லோடு கூடிய வழி, ளகார ஈறு போல, ஈற்று அயல் நீண்டு, 'தமர்காள்! நமர்காள்!' எனவும், 'நமரங்காள்!' எனப் பெயர்த்திரி சொல்லாய்த் திரிந்து நின்று விளி ஏற்பனவும் கொள்க. 'எம்பி' என்னும் கிளைமுதற்பெயரைத் தன்னினம் முடித்த லாற்கொள்க.

விளி மரபு முற்றும்.

1. சீவக. 1801.

ரு. பெயர் இயல்

157] நால்வகைச் சொற்கும் பொது இலக்கணம் [க

எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.

என்பது சூத்திரம். இவ்வோத்து, பெயர்க்கு இலக்கணம் உணர்த்தினமையால், **பெயரியல்** என்னும் பெயர்த்து ஆயிற்று. இது முதல் ஐந்து சூத்திரமும் பொது இலக்கணம் கூறுதலின், வேற்றுமை இலக்கணத்தைச் சேர முன் வைத்தார். இச்சூத்திரம், நால்வகைச் சொற்கும் பொது இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச் சொல்லுமாகிய எல்லாச் சொல்லும் பொருள் உணர்த்துதலைக் கருதியே நிற்கும்; பொருள் உணர்த்துதலைக் கருதாது நிற்பன இல்லை (எ-று.)

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே,' என்றது,

இவ்வாள் வெட்டுதலைக் கருதியே இருக்கும்.

என்றாற்போலக் **கருவிக்கருத்தா**வாய் நின்றது.

'ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே.'[1]

என்புழி, இருதிணைப் பொருளையும் சொற்கள் உணர்த்தும் என்பதன்றித் தமிழ்ச்சொல் எல்லாம் ஒருதலையாகப் பொருள் உணர்த்தும் என்னும் துணிபு விதி ஆண்டு இன்மையின், இச்சூத்திரம் கூறினர்.

1. கிளவியாக்கம், சூ. 1.

தாம் சார்ந்த சொற்களின் பொருளை உணர்த்தியும் அச்சொற்களை அசைத்தும் நிற்றலின், அசை நிலையும் பொருள் குறித்தனவேயாம்.

சொற்கள் ஓசை நிறைந்து நின்றே பொருள் உணர்த்த வேண்டுதலின், இசை நிறையும் பொருள் உணர்த்திற்றேயாம்.

முயற்கோடு, பொய்ப்பொருள் குறித்ததாம், இல்லை என வருதலின்.

158] சொல், தன்னையும் பொருளையும் உணர்த்தல் [உ

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்.

இதுவும், அச்சொற்கள் பொருள் உணர்த்துமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பொருண்மை தெரிதலும் - சொல்லின் வேறாகிய பொருள் தன்மை அறியப்படுதலும், சொன்மை தெரிதலும் - பொருள் தன்மை அறியப்படாது அச்சொல் தன்மை அறியப்படுதலும் என்று இரண்டும், சொல்லின் ஆகும் என்மனார் புலவர் - சொல்லான் ஆம் என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) சாத்தன் வந்தான்.
பண்டு காடுமன்
உறுகால்

இவை பொருள் தன்மை தெரிந்தன.

'செய்தென் எச்சம்'[1]
'தஞ்சக் கிளவி'[2]
'வேறென் கிளவி'[3]
'செய்கென் கிளவி'[4]
'கடியென் கிளவி'[5]

---

1. வினையியல், சூ. 42.
2. இடையியல், சூ. 18.
3. வினையியல், சூ. 25.
4. வினையியல், சூ. 7.
5. உரியியல், சூ. 85.

இவை சொல் தன்மை தெரிந்தன, அச்சொற்றன்னையே அறியப்படுதலின்.

'ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.'[1]

என்றாற்போல்வன, பெயர்ச்சொல்லை உணர்த்தலின், சொற்றன்மை தெரிதலும், உருபு ஏற்றுழிச் செயப்படு பொருள் முதலிய பொருள்களை உணர்த்தலின் பொருண்மை தெரிதலும் உடன் நின்றனவாம். பிறவும் இவ்வாறு உடன் வருவன உணர்ந்துகொள்க.

159] சொல், இரு வகையால் பொருளுணர்த்தல் [ந

தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

இதுவும் அது.

(இ-ள்.) பொருண்மை நிலையே - மேற்கூறப்பட்ட பொருள் தன்மை தெரிதல், தெரிபு வேறு நிலையலும் - சொன்மை மாத்திரத்தான் விளங்கி வேறு நிற்றலும், குறிப்பின் தோன்றலும் - சொன்மை மாத்திரத்தால் தோன்றாது சொல்லோடு கூடிய குறிப்பால் தோன்றலுமாகிய, இரு பாற்று என்ப - இரண்டு கூற்றை உடைத்து என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) அவன், இவன், உவன்
வந்தான், சென்றான்.

இவை தெரிந்தன.

ஒருவர் வந்தார்.

என்றாற்போல்வனவும் ஆகுபெயராய் வருவனவும் குறிப்பின் தோன்றலாம்.

சேனாவரையர் காட்டிய,

'இளைதாக முண்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.'[2]

என்னும் உதாரணம் செய்யுளாதலின், செய்யுளியலில்

1. வேற்றுமையியல், சூ. 8. 2. குறள், 879.

'சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்.'[1]

என்னும் சூத்திரத்துள் ஆசிரியர் 'குறிப்பெச்சம்' எனக் கூறியவாறு காண்க.

160]   சொற்களின் பாகுபாடு   [௪

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே.

இஃது, அந்நால்வகைச் சொல்லினுள் சிறந்தவற்றிற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) சொல்லெனப்படுப - 'சொல்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, பெயரே வினை என்று ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே - பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என அவ்விரண்டு என்று கூறுவர் அறிந்தோர் (எ-று.)

பொருளும் பொருளினது புடை பெயர்ச்சியுமாகிய முறைமை பற்றிப் பெயரை முற்கூறினார்.

161]   இடைச்சொல்லும் உரிச்சொல்லும்   [௫

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப.

இஃது, இறந்தது காத்தது.

(இ - ள்.) இடைச்சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும் அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப - இடைச்சொல்லாகிய சொல்லும் உரிச்சொல்லாகிய சொல்லும் பெயர் வினைகளது தாம் தோன்றுதற்கு இடமாகிய இடத்தே தோன்றும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

தாம் தோன்றுதற்கு இடமாவன, அவன், அவள், உண்டான், உண்டாள், துவைத்தல், துவைக்கும் என்றாற்போல்வன.

---

1. செய்யுளியல், சூ. 206.

தாம் தோன்றுதற்கு இடம் அல்லாதன, **மரம், மான்** என்றாற்போல்வனவாகிய பெயரும், **உண், தின்** என்றாற் போல்வனவாகிய முதல் நிலைப்பெயர் தானே நிற்பன வும் என்று உணர்க.

162] பெயர்ச்சொற்கள் [கு

அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியும் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருவின தோன்றல் ஆறே.

இது, நிறுத்த முறையானே பெயர்ச்சொற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - மேற்கூறப்பட்ட நான்கு சொல்லுள் ளும், பெயர் எனப்படுபவை தெரியும் காலை - பெயர்ச்சொல் என்று சொல்லப்படுவனவற்றை ஆராயும் காலை, தோன்றல் ஆறே - அவை தோன்றும் நெறிக்கண், உயர்திணைக்கு உரிமை யும் - உயர்திணைக்கு உரிமையுடைமையும், அஃறிணைக்கு உரிமை யும் - அஃறிணைக்கு உரிமையுடைமையும், ஆயிரு திணைக்கும் ஓர் அன்ன உரிமையும் - அவ்விருதிணைக்கும் ஒத்த உரிமை உடைமையும், அம்மூவுருவின - அம்மூன்று வேறுபாட்டை உடையவாம் (எ-று.)

'ஓரன்ன உரிமைய' என்றதற்கு ஒரு சொல்லுதற் கண்ணே இரண்டினையும் உணர்த்தா என்று உணர்க.

163] பெயர்க்கண்ணதோர் இலக்கணம் [எ

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான.

இதுவும், பெயர்க்கண்ணதோர் இலக்கணம் கூறு கின்றது.

(இ-ள்.) பெயர்வயினை - ஒருபாற்பெயரிடத்து முடிபாக வந்த வினைகள், இரு திணைப் பிரிந்த ஐம்பாற்கிளவிக்கும் - இரு திணையினின்றும் பிரிந்த ஐம்பாற்பொருட்கும், உரியவை உரிய- தனித்தனி கூறாமல் தானே சென்று உணர்த்தற்கு உரியன உரியவாம் (எ-று.)

உம்மையால், 'ஐம்பாலையும் சேர உணர்த்தாது சில பாலை உணர்த்துதற்கு உரியன உரியவாம்,' என்றும் கொள்க.

(உ-ம்.) 'நஞ்சுண்டான் சாம்,' என்றவழி, நஞ்சுண்டல் சாதற்குக் காரணம் என்பான், ஒரு பால்மேல் வைத்துக் கூறினாயினும், அஃது ஒழிந்த நான்கு பாற்கும் சாதல் எய்தினமையை உணர்த்தினவாறு காண்க.

'பார்ப்பான் கள் உண்ணான்,' என்பது, ஏனை இரு பாற்கும் எய்துவித்து நின்றது.

இனிச் சேனாவரையர், 'இரு திணைப் பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்கும் பெயருள் உரியன உரியவாம்,' என்று பொருள் கூறி, 'அவன், பெண்மகன், சாத்தன் என னகர ஈறு ஆடூஉவிற்கும் மகடூஉவிற்கும் அஃறிணைப் பாற்கும் உரித்தாய் வருதலின், 'உரியவை உரிய,' என்றார் என்பது இச்சூத்திரத்திற்குக் கருத்து,' என்றாரால் எனின், ஆசிரியர் வினைச்சொல்லை ஈற்றான் அடங்கும் என்று கருதி ஈறு பற்றி ஓதி, பெயர்ச்சொல்லை ஈற்றான் அடங்காது பல்வேறு வகையவாய் வரும் என்று கருதிச் சொல்லாகத் தனித்தனியே எடுத்து ஓதினர் ஆதலின், இவ்வெடுத்தோதிய சொற்களான் இவர் கூறிய பொருள் விளங்குதலின், இச்சூத்திரத்திற்கு இதுவே பொருள் என்று உணர்க. அன்றியும்,

'ஒருபாற் கிளவி ஏனைப்பாற்* கண்ணும்
வருவகை† தானே வழக்கென மொழிப.'[1]

பி-ம்: * ஏனைப்பாற்கண்ணும் † வருவன
1. பொருளியல், சூ. 28.

என்னும் பொருளியற்சூத்திரத்தான் 'நஞ்சுண்டான் சாம்,' என்பது அடங்கும் என்று கூறல் அச்சூத்திரத்தின் கருத்து அறியாது கூறிற்றாம். என்னை? அஃது,

'ஒத்த கிழவனும் கிழத்தியும்'[1]

என்ற களவியற்சூத்திரத்திற் பன்மை கூறா வழுவை அமைத்தற்கு எழுந்த சூத்திரம் ஆதலின்.

164] உயர்திணைப் பெயர்கள் [அ

அவ்வழி,
அவன்இவன் உவன்என வரூஉம் பெயரும்
அவள்இவள் உவள்என வரூஉம் பெயரும்
அவர்இவர் உவர்என வரூஉம் பெயரும்
யான்யாம் நாம்என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

இது, முறையானே உயர்திணைப்பெயரை உணர்த்துகின்றது.

(இ-ள்.) அவ்வழி - மூன்று கூற்றாக முற்கூறிய பெயருள், அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும் அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும் அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும் - 'அவன்' என்பது முதலாகிய சுட்டுப்பெயர் ஒன்பதும், யான் யாம் நாம் என வரூஉம் பெயரும் - 'யான்' என்னும் தனித்தன்மைப்பெயர் ஒன்றும் 'யாம்' என்னும் படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும் 'நாம்' என்னும் முன்னிலை உளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும், யாவன் யாவள் யாவர் என்னும் ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும் - 'யாவன்' முதலிய வினாப்பொருளிடத்துப்பெயர் மூன்றுமாயுள்ள அப் பதினைந்து பெயரும், பால் அறி வந்த உயர்திணைப்பெயரே - 'ஒருவன், ஒருத்தி, பலர்' என்னும் மூன்று பாலினையும் அறிய வந்த உயர்திணைப்பெயராம் (எ-று.)

---

1 களவியல், சூ. 2.

'யான், யாம், நாம்' என இரு பாற்கும் பொது வேனும், குறிப்பால் உணர்ந்துழி ஒரு பால் உணர்த்தியே நிற்றலின், பால் அறிய வந்த உயர்திணைப்பெயர் ஆயிற்று.

'நம்பி, பெண்டாட்டி' என இகர ஈறும், 'ஆடூஉ, மகடூஉ' என ஊகார ஈறுகளும், பிற ஈறுகளும் இரு பாற்கும் உரியவாய் வருதலின், ஈறுபற்றி ஓதாது இச் சூத்திரம் முதலாகப் பெயர் பற்றி ஓதினர்.

165] உயர்திணைப் பெயர்கள் [கூ

ஆண்மை அடுத்த மகன்என் கிளவியும்
பெண்மை அடுத்த மகள்என் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம்ஊர்ந்து வரூஉம் இகரஐ காரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்
சுட்டுமுதல் ஆகிய அன்னும் ஆனும்
அவைமுதல் ஆகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.

இதுவும், அது.

(இ-ள்.) ஆண்மை அடுத்த மகன் என் கிளவியும் - ஆளும் தன்மை அடுத்த 'ஆண்மகன்' என்னும் சொல்லும், பெண்மை அடுத்த மகள் என் கிளவியும் - கட்புலன் ஆயதோர் அமைதித் தன்மை அடுத்த 'பெண்மகள்' என்னும் சொல்லும், பெண்மை அடுத்த இகர இறுதியும் - கட்புலன் ஆயதோர் அமைதித் தன்மை அடுத்த இகர ஈற்றுப் 'பெண்டாட்டி' என்னும் சொல் லும், நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும் - 'நம்' என்னும் முதல் நிலையை ஊர்ந்து 'நமக்கு இன்னார்' என வரூஉம் இகர ஐகார ஈற்று 'நம்பி, நங்கை' என்னும் சொல்லும், முறைமை

சுட்டா மகனும் மகளும் - முறைப்பொருண்மை கருதாத 'மகன், மகள்' என்னும் சொல்லும், மாந்தர் மக்கள் என்னும் பெயரும்- 'மாந்தர், மக்கள்' என்னும் பன்மைச்சொல்லும், ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும் - 'ஆடூஉ, மகடூஉ' ஆகிய அவ்விரு வகைச்சொல் லும், சுட்டு முதல் ஆகிய அன்னும் ஆனும் - சுட்டெழுத்தை முதலாக உடைய 'அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன், அன்னன், அனையன்' என்னும் 'அன்' ஈற்றுச் சொல்லும் 'அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான், அன்னான், அனையான்' என்னும் 'ஆன்' ஈற்றுச் சொல்லும், அவை முத லாகிய பெண்டு என் கிளவியும் - அச்சுட்டெழுத்தினை முதலாக உடைய 'அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு' என்னும் சொல்லும், ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ - ஒப்பு மைப் பொருள் பற்றி வரும் 'பொன் அன்னான், பொன் அன் னாள், பொன் அன்னார்' என வரும் சொல்லொடு தொக்கு, அப்பதினைந்தும் அவற்றோரன்ன - அப்பதினைந்து பெயர்ச் சொல்லும் முற்கூறிய பெயர்போலப் பால் அறிய வந்த உயர் திணைப்பெயராம் (எ-று.)

'ஆண்மை, பெண்மை' என்பனவற்றிற்கு இவ்வாறு பொருள் உரையாக்கால், கூறியது கூறலாம். இவை, 'ஆளும் மகன் - ஆண்மகன், பெண்ணாகிய மகள் - பெண்மகள்' என விரியும். பெண்டாட்டி - பெண்மை ஆள்கின்றவள்; நம்பி, நங்கை - உயர் சொல்; 'மகள்' என்பது, பிரியாது ஒரு சொல்லாயே நின்று பெண்மை உணர்த்திற்று.

'பெண்டன் கிளவி' என்று பாடம் ஓதி, 'அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி' என்பாரும் உளர்.

'ஊரார் பெண்டென மொழிய'*[1]

'என்னைநின்
பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்'[2]

பி-ம்: * மொழிப

1. ஐங். 113. 2. கலி. 77 : 10, 11.

எனச் சான்றோர் கூறலின், 'பெண்டு' என்பதே பாடம். 'அப்பெண்டு' என்னும் சுட்டு, 'கடிசொல் இல்லை'[1] என்பதனால், 'பெண்டு' என நின்றது.

166]   உயர்திணை ஒருபாற்பெயர்   [கo

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகன்என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

இதுவும், உயர்திணை ஒருபாற்பெயர் உணர்த்துகின்றது.

(இ-ள்.) எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் - 'எல்லாரும்' என்று சொல்லப்படுகின்ற படர்க்கைப் பெயர்ச்சொல்லும், எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் - 'எல்லீரும்' என்று சொல்லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச்சொல்லும், பெண்மை அடுத்த மகன் என் கிளவியும் - கட்புலன் ஆயதோர் அமைதித்தன்மை அடுத்து நாணு வரை இறந்து புறத்து விளையாடும் பருவத்தால் பால் திரிந்த 'பெண்மகன்' என்னும் பெயர்ச்சொல்லும், அன்ன இயல என்மனார் புலவர் - இவை மூன்றும் அவை போலப் பால் அறிய வந்த உயர்திணைப் பெயராம் (எ-று.)

'பெண்மகன்' என்பது, அத்தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினர் ஆயிற்று, இங்ஙனம் கூறலின்.

167]   இதுவும் அது.   [கக

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே

1. எச்சவியல், சூ. 56.

பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோ
டன்றி அனைத்தும் அவற்றியல் பினவே.

இதுவும் அது.

(இ-ள்.) நிலப்பெயர் - ஒருவன் தான் பிறந்த நிலத்தினால் பெற்ற பெயர்களும், குடிப்பெயர் - ஒருவன் தான் பிறந்த குடியினால் பெற்ற பெயர்களும், குழுவின் பெயரே - தாம் திரண்டு ஒரு துறைக்கண் உரிமை பூண்ட பல்லோர்மேல் எக்காலத்தும் நிகழும் பெயர்களும், வினைப்பெயர் - தாம் செய்யும் தொழிலினால் பெற்ற பெயர்களும், உடைப்பெயர் - தன் உடைமையால் பெற்ற பெயர்களும், பண்பு கொள் பெயரே - தனது ஓர் பண்பினால் பெற்ற பெயர்களும், பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயரே - பல்லோரைக் கருதின தமது முறைமையால் பெற்ற பெயர்களும், பல்லோர்க் குறித்த சினை நிலைப்பெயரே - பல்லோரைக் கருதின சினை நிலைமையால் பெற்ற பெயர்களும், பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயரே - பல்லோரைக் கருதின குறிஞ்சி முதலிய ஐந்திணை நிலைமையால் பெற்ற பெயர்களும், கூடி வரு வழக்கின் ஆடு இயல் பெயரே - இளந்துணை மகார் தம்மிற்கூடி விளையாடல் குறித்த பொழுதைக்குத் தாமே படைத்திட்டுக் கொண்ட பெயர்களும், இன்றிவர் என்னும் எண் இயல் பெயரோடு - இத்துணையார் எனத் தமது வரையறை உணர நின்ற எண்ணுகிய இயல்பு பற்றிப் பொருள் உணர்த்தும் பெயருடனே, அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே - அவ்வனைத்துப் பெயர்களும் மேற்கூறிய பெயர்கள் போலப் பால் அறிய வந்த உயர்திணைப்பெயராம் (எ-று.)

(உ-ம்.) 'அருவாளன், சோழியன்' எனவும்; 'சேரமான், மலையமான், பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர்' எனவும்; 'அவையத்தார், அத்திகோசத்தார், வணிக கிராமத்தார், மாகத்தார்' எனவும்; 'வருவார், செல்வார், தச்சர், கொல்லர், தட்டார், வண்ணார்' எனவும்; 'அம்பர் கிழான், பேரூர் கிழான்,

குட்டுவன், பூழியன், வில்லவன், வெற்பன், சேர்ப்பன்' எனவும்; 'கரியான், கரியாள், செய்யான், செய்யாள்' எனவும்; 'தந்தையர், தாயர்' எனவும்; 'பெருங்காலர், பெருந்தோளர், அலை காதர்' எனவும்; 'குறவர், இறவுளர், வேட்டுவர், ஆயர், பொதுவர், நுளையர், திமிலர், பரதவர், களமர், உழ்வர், எயினர், மறவர்' எனவும்; 'பட்டி புத்திரர், கங்கை மாத்திரர்' எனவும்; 'ஒருவர், இருவர், முப்பத்து மூவர்' எனவும்; 'அருவாட்டி, சோழிச்சி, மலையாட்டிச்சி, பார்ப்பனி, அரசி, வாணிச்சி, வெள்ளாட்டிச்சி, கொல்லிச்சி, தட்டாத்தி, வண்ணாத்தி, அம்பருடைச்சி, பேரூர் கிழத்தி' எனவும் வரும்.

மகடூஉப் பெயர்கள், டகர ஒற்று இரட்டியும், 'இச்சு'ப் பெற்றும், தகர ஒற்று இரட்டியும், இரண்டு இடைநிலை எழுத்துக்களைப் பெற்றும், பெறுதும் வருமாறு உணர்க. இவை இங்ஙனம் இடைநிலை எழுத்துக்களும் பெற்றுப் பால் உணர்த்துதற்கு உரிய இகரமும் பெற்று நிற்கும் என்பது,

'சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்.'[1]

என்னும் அதிகாரப் புறனடையாற்கொள்க.

168] உயர்திணைப்பெயர்க்குப் புறனடை [கஉ

அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

இஃது, உயர்திணைப்பெயர்க்குப் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) அன்ன பிறவும் - மேற்கூறிய பெயர் போல்வன பிறவுமாயுள்ள, உயர்திணை மருங்கில் பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த என்ன பெயரும் - உயர்திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த எல்லாப் பெயர்களும், அத்திணையவ்வே - அவ்வுயர்திணைப்பெயராம் (எ-று.)

1. எச்சவியல், சூ. 67.

(உ-ம்.) அன்னள், அனையாள், அவ்வாட்டி, ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பெண்டிர், பெண்டுகள், அடியான், அடியாள், அடியார், வேனிலான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார்.

என்னும் தொடக்கத்தன எனக் கொள்க. இன்னும்,

'எல்லேம் பிரியற்கெம் சுற்றமொ டொருங்கே'[1]
'வல்லேம் இருந்தேமே வாய்ந்தமன் றிதுவென.'
'இருவேமும் வல்லேம் இருவர்நம் படர்தீர.'

என்னும் பெயர்களும் கொள்க.

169] அஃறிணைப் பெயர்கள் [கரு

அதுஇது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுதல் ஆகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுதல் ஆகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே.

இது, முறையானே அஃறிணைப்பெயர் கூறுகின்றது.

(இ-ள்.) அது இது உது என வரூஉம் பெயரும் - 'அது' இது, உது' என்று சொல்லப்பட்டு வரும் சுட்டு முதற்பெயர் களும், அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும் - அப்பெயர்க்கு முதலாகிய சுட்டெழுத்தே தமக்கு முதலாக ஆய்தத்தோடு கூடி 'அஃது, இஃது, உஃது' என்று சொல்ல வரும் ஆய்தத்தொடர் மொழிக் குற்றுகர ஈற்றுப் பெயர்களும், அவை இவை உவை என வரூஉம் பெயரும்-'அவை, இவை, உவை' என வரும் சுட்டு முதற்பெயர்களும், அவை முதல் ஆகிய வகரப் பெயரும் - அப் பெயர்க்கு முதலாகிய சுட்டெழுத்தே தமக்கு முதலாக வகர ஒற்றோடு கூடி 'அவ், இவ், உவ்' என்று சொல்லப்படும் வகர

1. 'வானா ரெழிலி' எனத் தொடங்கும் பரிபாடலின் ஈற்றடி.

ஈற்றுப் பெயர்களும், யாது யா யாவை என்னும் ஆவயின் மூன்றோடு அப்பதினைந்து பெயரும் - 'யாது? யா? யாவை?' என்று சொல்லப்படுகின்ற அவ்வினாப்பொருளிடத்து மூன்று பெயர்களோடும் கூடிய அப்பதினைந்து பெயர்களும், பால் அறி வந்த அஃறிணைப்பெயரே - ஒருமை பன்மைப்பால் அறிய வந்த அஃறிணைப்பெயராம் (எ-று.)

170] அஃறிணை ஒருசார்ப் பெயர்கள் [கச

பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பின் ஆகிய பெயர் நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன.

இதுவும், அஃறிணை ஒருசார்ப் பெயர்களைக் கூறுகின்றது.

(இ-ள்.) பல்ல பல சில என்னும் பெயரும் - 'பல்ல, பல, சில' என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், உள்ள இல்ல என்னும் பெயரும் - 'உள்ள, இல்ல' என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், வினைப்பெயர்க் கிளவியும் - 'வருவது, வருவன' என்றாற்போலும் வினைப்பெயராகிய சொற்களும், பண்புகொள் பெயரும் - 'கரியது, கரியன' என்றாற்போலும் பண்பினைக் கொண்ட பெயர்களும், இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக் குறிப் பெயரும் - 'ஒன்று, பத்து, நூறு' என்றாற்போலச் சொல்லப்படுகின்ற இத்துணை என வரையறை உணர்த்தி எண்ணப்படும் பொருள்மேல் நிற்கும் பெயர்களும், ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட - 'பொன்னன்னது, பொன்னன்ன' என்றாற்போல உவமத்தினால் பெற்ற பெயர்ச்சொல் உட்பட, அப்பால் ஒன்பதும் அவற்றோரன்ன - அக்கூற்று ஒன்பதும் மேற் கூறிய பெயர்போலப் பால் அறிய வந்த அஃறிணைப் பெயர்களாம் (எ-று.)

171] அஃறிணை இயற்பெயர் [கரு

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலஅறி சொற்கே.

இதுவும், அஃறிணை இயற்பெயர் கூறுகின்றது.

(இ-ள்.) கள்ளொடு சிவணும் அவ்வியற்பெயரே - 'கள்' என்னும் வாய்பாட்டோடு பொருந்தும் அவ்வஃறிணை இயற் பெயர்கள், பல அறி சொற்குக் கொள்வழி உடைய - பல வற்றை அறியும் சொல் ஆதற்குக் கொள்ளும் இடமுடைய (எ-று.)

(உ-ம்.) ஆ, நாய், குதிரை, ஒட்டகம், புலி, புல்வாய், தெங்கு, பலா, மலை, கடல்

என்னும் தொடக்கத்துச் சாதிப்பெயர் இரு பாற்கும் பொதுவாய் நின்றன, கள்ளொடு சிவணி,

ஆக்கள், குதிரைகள், கடல்கள், மலைகள்

எனப் பன்மை விளக்கி நின்றன.

'வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்'[1]

எனவும்,

'பிறந்தவர்கள் எல்லாம் அவாப்பெரியர் ஆகி'[2]

எனவும்,

'கற்றனங்கள் யாமுமுடன் கற்பனகள் எல்லாம்'[3]

எனவும்,

'எங்கள்வினை யாலிறைவன் வீடியவஞ் ஞான்றே'[4]

எனவும் 'கள்' ஈறு பலரை உணர்த்தி நின்றனவால் எனின், இவற்றுள் பலரை உணர்த்துதற்கு ஓதிய ஈறு களே பலரை உணர்த்தி நின்றன, 'கள்' என்பது இசை நிறைத்து நின்றது எனப்படும், அவ்வீறுகளை ஒழிந்து நின்று 'கள்' என்பது பலரை உணர்த்தாமையின். இனி, இவ்வீறுகளை ஒழியத் தாமே பலரை உணர்த்து வன உளவேல்,

1. யாப். விருத். சூ. 67, உரை, மேற். 2. சீவக. 2622.
3. சீவக. 1795. 4. சீவக. 1793.

'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே.'[1]

என்றதனால் கொள்க. அஃது, இக்காலத்துப் 'பெண்டுகள்' என்றாற்போல வருவன போலும்!

172] அஃறிணைப் பெயர்க்குப் புறனடை [கசு

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

இஃது, அஃறிணைப் பெயர்க்குப் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) அன்ன பிறவும் அஃறிணை மருங்கின் - முற்கூறிய பெயர் போல்வன பிறவுமாகிய அஃறிணைக்கண், பன்மையும் ஒருமையும் பால் அறி வந்த - பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த, என்ன பெயரும் அத்திணையவ்வே - எல்லாப் பெயரும் அவ்வஃறிணைக்கு உரிய பெயராம் (எ-று.)

(உ-ம்.) பிறிது, பிற
அனையது, அனையன
மற்றையது, மற்றையன
பல்லவை, சில்லவை
உள்ளது, இல்லது
உள்ளன, இல்லன
அன்னது, அன்னன

என வரும். நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், உண்டல், தின்றல், கருமை, செம்மை என்பனவும் அப்பாற்படும்.

173] அஃறிணை இயற்பெயர் பால் உணர்த்துமாறு [கஎ

தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.

இஃது, அஃறிணை இயற்பெயர் பால் உணர்த்துமாறு கூறுகின்றது.

---

1. எச்சவியல், சூ. 56.

(இ-ள்.) அஃறிணை இயற்பெயர் - கள்ளோடு சிவணாத அஃறிணை இரு பாற்கும் உரிய பெயர், ஒருமையும் பன்மையும் தெரிநிலை உடைய - ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் விளங்கும் நிலைமை உடைய, வினையொடு வரினே - அதற்கு ஏற்ற வினையோடு தொடர்ந்தவழி (எ-று.)

(உ-ம்.) ஆ வந்தது; ஆ வந்தன.
யானை வந்தது; யானை வந்தன.
குதிரை வந்தது; குதிரை வந்தன.

என வரும்.

கள்ளொடு சிவணிய இயற்பெயரை வேறு கூறினார், வினையான் அன்றிப் பெயர் தாமே பன்மை விளக்கலின்.

174] விரவுப்பெயர் பால் தெரிய நிற்குமாறு [கஅ

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

இது, நிறுத்த முறையானே விரவுப்பெயர் கூறுகின்றது.

(இ-ள்.) இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின் - இரு திணைச் சொற்கும் ஒத்த உரிமைய ஆதலின், திரிபு வேறு படூஉம் எல்லாப் பெயரும் - உயர்திணைக்கண் சென்றுழி உயர் திணைப் பெயராயும் அஃறிணைக்கண் சென்றுழி அஃறிணைப் பெயராயும் வேறுபடூஉம் விரவுப்பெயர் எல்லாம், நினையுங்காலை - ஆராயுங்காலத்து, தத்தம் மரபின் வினையோடு அல்லது பால் தெரிபு இலவே - அவ்வத்திணையை உணர்த்துதற்கு உரிய முறைமையினை உடைய வினைச்சொல்லோடு இயைந்து அல்லது திணை விளங்க நில்லா (எ-று.)

(உ-ம்.) சாத்தன் வந்தான்.
சாத்தன் வந்தது.
முடவன் வந்தான்.
முடவன் வந்தது.

என வரும்.

'நினையுங்காலை' என்றதனால்,

சாத்தன் ஒருவன்.
சாத்தன் ஒன்று.

எனப் பெயரோடு வந்து பால் விளக்கலும் கொள்க. இன்னும் இதனானே, முற்கூறிய அஃறிணை இயற்பெயர்களும்

ஆ ஒன்று.
ஆ பல.

எனப் பெயரால் பால் அறியப்படுதலும் கொள்க. இன்னும் இதனானே,

முலை எழுந்தது.
மோவாய் எழுந்தது.

என்றாற்போல்வன தன் சினை வினையால் பால் தெரியாமையும் கொள்க.

175] விரவுப்பெயர், விரவு வினையானும் திணையறியப்படல் [ககூ

நிகழூஉ நின்ற பால்வரை* கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான.

இஃது, அவ்விரவுப்பெயர், விரவு வினையானும் திணை அறியப்படும் என்கின்றது.

(இ-ள்.) நிகழூஉ நின்ற பால்வரை கிளவியின் - நிகழ்காலமே பற்றி வரும் 'செய்யும்' என்னும் முற்றுச்சொல்லான், உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே - உயர்திணை ஒருமைப்பால் தோன்றலும் உரித்து, அன்ன மரபின் வினை வயினான - அவ்வொருமைப்பால் தோன்றுதற்கு ஏற்ற வினையிடத்து (எ-று.)

(உ-ம்.) சாத்தன் யாழ் எழூஉம்; குழல் ஊதும்; பாடும். எனவும்,

பி-ம்: * பலர்வரை

சாத்தி சாந்தரைக்கும்; பூத்தொடுக்கும்.

எனவும் வரும்.

இனி, 'ஒன்றென முடித்தல்' என்பதனான், வியங்கோளானும் உயர்திணை ஒருமை தோன்றுதலும் கொள்க.

(உ-ம்.) சாத்தன் யாழ் எழுக!
சாத்தி சாந்து அரைக்க!

என வரும்.

சாத்தன் புல் தின்னும்.
சாத்தி கன்று ஈனும்.

என அஃறிணையும் வருமால் எனின், 'சாத்தன் புல் தின்னும்,' என்பது, 'புல்லரிசிச் சோற்றைத் தின்னும்,' என்று உயர்திணைக்கும் ஏற்றலின், அஃறிணைக்கே அஃது ஆகாமையின், அது கொள்ளார். 'சாத்தி கன்று ஈனும்,' என்பது, 'கன்று' என்னும் சார்பான் அஃறிணை தோன்றிற்று, அதனால் கொள்ளார்.

176] விரவுப்பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் [௨௦

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீஎனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடும் கொளலே.

இது, விரவுப்பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்.) இயற்பெயர் - சாத்தன் கொற்றன் என வழங்குதற்பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருள் பற்றி வரும் இயற்பெயர், சினைப்பெயர் - 'பெருங்காலன், முடவன்' எனச் சினை உடைமையாகிய நிமித்தம் பற்றி முதல்மேல் வரும் பெயர், சினைமுதற்பெயரே-'சீத்தலைச்சாத்தன், கொடும்புறமருதி' எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து அல்லது பொருள் உணர்த்தாது

வரும் இயற்பெயராகிய முதற்பெயர், முறைப்பெயர்க்கிளவி - 'தந்தை, தாய்' எனப் பிறவியான் ஒருவரோடு ஒருவற்கு வரும் இயைபு பற்றி வரும் பெயராய் முறையுடைப் பொருள்மேல் வரும் பெயர், தாமே தானே எல்லாம் நீயிர் நீ எனக் கிளந்து சொல்லியவற்ருெடு - 'தாம், தான், எல்லாம், நீயிர், நீ' என்று தொல்லாசிரியராலே விதந்து ஓதப்பட்டவற்றோடே, அல்ல அன்னவை பிறவும் ஆங்குத் தோன்றின் கொளல் - எடுத்து ஓதாதனவாய் அவை போல்வன பிறவும் அவ்விரவுதலிடத்தே தோன்றுமாயின் அவற்றையும் கொள்க (எ-று.)

'அன்ன பிற' ஆவன, 'மக, குழவி' போல்வனவும், 'காடன், காடி, நாடன், நாடி, தரையன், திரையன், மலையன்' போல்வனவும், 'முதியான்' எனப் பிராயம் பற்றி வருவனவும், 'சுமையன்' எனத் தொழில் பற்றி வருவனவும், பிறவுமாம்.

177] விரவுப்பெயரின் பாகுபாடு [உக

அவற்றுள்,
நான்கே இயற்பெயர்; நான்கே சினைப்பெயர்;
நான்கென மொழிமனர் சினைமுதற் பெயரே;
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே;
ஏனைப் பெயரே தத்தம் மரபின.

இது, தொகுத்தனவற்றை விரிக்கின்றது.

(இ-ள்.) அவற்றுள் - முற்கூறிய விரவுப்பெயருள், நான்கே இயற்பெயர் - இயற்பெயர் நான்கு வகைப்படும்; நான்கே சினைப் பெயர் - சினைப்பெயர் நான்கு வகைப்படும்; நான்கு சினைமுதற் பெயரே - சினைமுதற்பெயர் நான்கு வகைப்படும்; முறைப் பெயர்க்கிளவி இரண்டு ஆகும்மே - முறைப்பெயராகிய சொல் இரண்டு வகைப்படும்; ஏனைப் பெயரே தத்தம் மரபின - ஒழிந்த ஐந்து பெயரும் பொருண்மை சுட்டாது ஒரோவொன்ருய் நின்ற பெயரைச் சுட்டி நிற்கும் இலக்கணத்தன; என மொழிமனர் - என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

178] இயற்பெயர் நான்கின் பெயரும் முறையும் [௨௨

அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமையியற் பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே.

இஃது, 'இயற்பெயர் நான்கு' என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் - அவ்வாறு பகுக்கப்பட்டனதாம் யாவை எனின், இயற்பெயர் நிலையே-இயற்பெயரது நிலைமையை, பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர் பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று அந்நான்கு என்ப - பெண்மை இயற்பெயரும் ஆண்மை இயற்பெயரும் பன்மை இயற்பெயரும் ஒருமை இயற்பெயரும் என்று கூறப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

179] சினைப்பெயர் நான்கின் பெயரும் முறையும் [௨௩

பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச்சினைப் பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

இது, 'சினைப்பெயர் நான்கு' என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

(இ-ள்.) சினைப்பெயர் நிலை - சினைப்பெயரது நிலைமையை, பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர் பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் என்று அந்நான்கு என்ப - பெண்மைச் சினைப்பெயரும் ஆண்மைச் சினைப்பெயரும் பன்மைச் சினைப்பெயரும் ஒருமைச் சினைப்பெயரும் என்று கூறப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

180] சினைமுதற்பெயர் நான்கின் பெயரும் முறையும் [௨௪

பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே

பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

இது, 'சினை முதற்பெயர் நான்கு' என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

(இ-ள்.) சினை முதற்பெயரே - சினை முதற்பெயரது நிலைமையை, பெண்மை சுட்டிய சினைமுதற்பெயரே ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரே பன்மை சுட்டிய சினைமுதற்பெயரே ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர் என்று அந்நான்கு என்ப - பெண்மை சுட்டிய சினைமுதற்பெயரும் ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரும் பன்மை சுட்டிய சினைமுதற்பெயரும் ஒருமை சுட்டிய சினைமுதற்பெயரும் என்று கூறப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

181] முறைப்பெயர் இரண்டின் பெயரும் முறையும் [உரு

பெண்மை முறைப்பெயர் ஆண்மைமுறைப் பெய
ருயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. [ரென்

இது, 'முறைப்பெயர் இரண்டு' என்றவற்றுப் பெயரும் முறையும் கூறுகின்றது.

(இ-ள்.) முறைப்பெயர் நிலையே - முறைப்பெயரது நிலைமையை, பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயர் என்று ஆயிரண்டு என்ப - பெண்மை முறைப்பெயரும் ஆண்மை முறைப்பெயரும் என்று கூறப்பட்ட அவ்விரண்டும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

182] பெண்மை சுட்டிய விரவுப்பெயர் [உசு

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே.

இது, பெண்மைப் பெயரெல்லாம் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும் - பெண்மை இயற்பெயரும் பெண்மைச் சினைப்பெயரும் பெண்மைச் சினை முதற்பெயரும் பெண்மை முறைப்பெயரும், ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே - அஃறிணைப்பெண் ஒன்றற்கும் உயர்திணை ஒருத்திக்கும் பொருந்திய நிலைமையை உடையனவாம் (எ-று.)

(உ-ம்.) சாத்தி வந்தது; சாத்தி வந்தாள்.
முடத்தி வந்தது; முடத்தி வந்தாள்.
முடக்கொற்றி வந்தது; முடக்கொற்றி வந்தாள்.
தாய் வந்தது; தாய் வந்தாள்.

என வரும். முடம், சினையாகிய காலை உணர்த்திற்று.

'ஆய்' என்பதும் அது. 'யாய்'[1] என்பது தன்மையோடு ஒட்டுதலின், முறைப்பெயர் எனினும், உயர்திணையாம்.

183] ஆண்மை சுட்டிய விரவுப்பெயர் [உஎ

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

இஃது, ஆண்மைப்பெயர் எல்லாம் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும் - ஆண்மை இயற்பெயரும் ஆண்மைச்சினைப்பெயரும் ஆண்மைச் சினைமுதற் பெயரும் ஆண்மை முறைப்பெயரும், ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே - அஃறிணை ஆண் ஒன்றற்கும் உயர்திணை ஒருவற்கும் பொருந்திய நிலைமையை உடையனவாம் (எ-று.)

(உ-ம்.) சாத்தன் வந்தது.
சாத்தன் வந்தான்.
முடவன் வந்தது.
முடவன் வந்தான்.
முடக்கொற்றன் வந்தது.
முடக்கொற்றன் வந்தான்.

1. குறுந். 40; அகம். 12: 1.

தந்தை வந்தது.
தந்தை வந்தான்.

என வரும்.

'நுந்தை'[1] என்பதும் அது. 'எந்தை'[2] என்பது தன்மையோடு ஒட்டுதலின், உயர்திணையாம்.

184] பன்மை சுட்டிய விரவுப்பெயர் [உஅ

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.

இது, பன்மைப்பெயர் எல்லாம் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) பன்மை சுட்டிய எல்லாப் பெயரும் - பன்மை இயற்பெயரும் பன்மைச் சினைப்பெயரும் பன்மைச் சினைமுதற் பெயரும், ஒன்றே பலவே ஒருவர் என்னும் என்றிப்பாற்கும் ஓரன்னவ்வே - அஃறிணை ஒருமையும் அத்திணைப் பன்மையும் உயர்திணை ஒருமையும் என்று சொல்லப்படும் அம்மூன்று பாற்கும் ஒரு தன்மைய (எ-று.)

'ஒன்று' என்பதனை அஃறிணை ஆண் ஒன்றனையும் பெண் ஒன்றனையும், 'ஒருவர்' என்பதனை உயர்திணை ஆண் ஒருமையும் பெண் ஒருமையுமாகக் கொள்க.

(உ-ம்.) யானை வந்தது.
யானை வந்தன.
யானை வந்தான்.
யானை வந்தாள்.
நெடுங்கழுத்தல்வந்தது-வந்தன-வந்தான்-வந்தாள்
பெருங்கால் யானை வந்தது-வந்தன-வந்தான்-வந்தாள்.

என வரும்.

---

1. கலி. 80 : 18. 2. கலி. 81 : 35.

'வெண்குடைப் பெருவிறல்' என்பது, செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது, வெண்குடையோடு இயைபு இன்மை மாத்திரை நீக்கி நின்றாற்போலப் 'பன்மை சுட்டிய' என்பதும் ஒருமை இயைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபு இன்மை மாத்திரை நீக்கி நின்றது. இஃது, இயைபு இன்மை நீக்கமாம். 'கருங் குவளை' என்பது, செம்மை முதலியவற்றோடு இயைபு நீக்குதலின், பிறிதின் இயைபு நீக்கமாம். எனவே, விசேடித்தல் இரு வகைய ஆயின.*

185] ஒருமை சுட்டிய விரவுப்பெயர் [உகூ

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

இஃது, ஒருமைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும் - ஒருமையைக் கருதி வரும் ஒருமை இயற்பெயரும் ஒருமைச்சினைப்பெயரும் ஒருமைச் சினைமுதற்பெயரும், ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே - அஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் பொருந்திய நிலைமையை உடையனவாம் (எ-று.)

(உ-ம்.) கோதை வந்தது-வந்தான்-வந்தாள்.
சேவியிலி வந்தது-வந்தான்-வந்தாள்.
கொடும்புற மருதி வந்தது-வந்தான்-வந்தாள்.

என வரும்.

பெண்மைப்பெயரும் ஆண்மைப்பெயரும் ஒருமையும்† உணர்த்துமாயினும், இவை பெண்மை ஆண்மை

பி-ம்: * இங்கு "எனவே, 'பல பால்களையும் உணர்த்தி நிற்றலின் 'பன்மை சுட்டிய என்றார்' என்று உரையாசிரியர் கூறியதே சேனாவரையர்க்கும் கருத்தாயிற்று," என்னும் வாக்கியம் முன் பதிப்பில் உள்ளது. 'உரையாசிரியர் இங்ஙனம் கூறிற்றிலராதலின், இவ்வாக்கியம் நன்னூல் விருத்தி படித்த மாணவரால் சேர்க்கப்பட்டது,' என்பது தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பின் ஆசிரியர் கருத்து.

† ஒருமை

என்னும் வேறுபாடு உணர்த்தாது ஒருமை உணர்த்த லின், இவற்றை 'ஒருமைப்பெயர்' என்றார்.

186] 'தாம்' என்னும் விரவுப்பெயர் [௩௦

தாம்என் கிளவி பன்மைக் குரித்தே.

இது, 'தாம்' என்னும் பெயர் இருதிணைக்கும் உரித்தா மாறு உணர்த்துகின்றது.

(இ-ள்.) தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே - 'தாம்' என்னும் பெயர் இரு திணைக்கண்ணும் பன்மைப்பாற்கு உரித்து (எ-று.)

(உ-ம்.) தாம் வந்தார்.
தாம் வந்தன.

என வரும்.

187] 'தான்' என்னும் விரவுப்பெயர் [௩௧

தான்என் கிளவி ஒருமைக் குரித்தே.

இது, 'தான்' என்பது இரு திணைக்கும் உரித்தா மாறு கூறுகின்றது.

(இ-ள்.) தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே - 'தான்' என்னும் பெயர் இரு திணைக்கண்ணும் ஒருமைப்பாற்கு உரித்து (எ-று.)

(உ-ம்.) தான் வந்தான்.
தான் வந்தாள்.
தான் வந்தது.

என வரும்.

188] 'எல்லாம்' என்னும் விரவுப்பெயர் [௩௨

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

இஃது, 'எல்லாம்' என்பது திணைக்கு உரித்தாமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி - 'எல்லாம்' என்னும் பெயராகிய நிலைமையை உடைய சொல், பல் வழி நுதலிய நிலைத்து ஆகும்மே - இரு திணைக்கண்ணும் பன்மை இடத்தைக் கருதின நிலைமைத்தாய் வரும் (எ-று.)

(உ-ம்.) எல்லாம் வந்தேம்-வந்தீர்-வந்தார்-வந்தன.

என வரும்.

'மேனி எல்லாம் பசலை ஆயிற்று,' என்பது, எஞ்சாப் பொருட்டு ஆயதோர் உரிச்சொல்.

189] 'எல்லாம்' என்பது உயர்திணையில் பெரும்பான்மை [௩௩ தன்மைப்பன்மையில் வரும் என்பது

தன்உள் ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை.

இஃது, எய்தியது ஒரு மருங்கின் மறுக்கின்றது.

(இ-ள்.) உயர்திணை மருங்கின் தன் உள்ளுறுத்த பன்மைக்கு அல்லது ஆக்கம் இல்லை - 'எல்லாம்' என்னும் சொல் உயர்திணைக்கண் வருங்கால் தன்மைப்பன்மைக்கு அல்லது பெரும்பான்மை வாராது (எ-று.)

எனவே, சிறுபான்மை முன்னிலைப்பன்மைக்கும் படர்க்கைப்பன்மைக்கும் வருமாயிற்று.

(உ-ம்.) 'கண்டனிர்* எல்லாம் கதுமென வந்தாங்கே†
பண்டறியா தீர்போல நோக்குதிர்'‡[1]
'ஊடினீர்! எல்லாம் உருவிலான் தன்னாணை
கூடமின்§ என்று குயில்சாற்ற'[2]

என முன்னிலைக்கண்ணும்,

'நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம்
சிறுபாக ராக'[3]

எனப் படர்க்கைக்கண்ணும் வந்தன.

பி-ம்: * கண்டவிர் † வாங்கே ‡ நோக்குவீர் § கூடினிர்
1. கலி. 140 : 1, 2. 2. சிலப். 8. இறுதி. 3. கலி. 97 : 28, 29.

190] 'நீயிர், நீ' என்பன திணை உணர்த்தாமை [௩௪

நீயிர் நீஎன வரூஉம் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள.

இது, 'நீயிர், நீ' என்பனவற்றைத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) நீயிர் நீ என வரூஉம் கிளவி - 'நீயிர்' எனவும் 'நீ' எனவும் வரும் பெயர்ச்சொற்கள், பால் தெரிபு இலவே உடன்மொழிப் பொருள - திணைப்பகுதி தெரிய நில்லா; இரு திணைப்பொருளும் ஒருங்கு தோன்றுதலைப் பொருண்மையாக உடைய (எ-று.)

(உ-ம்.) நீயிர் வந்தீர்.
நீ வந்தாய்.

என வினையானும் திணை தெரியாமை காண்க. இவற்றிற்குத் தத்தம் மரபின் வினை இன்று.

191] 'நீ' என்பது பாற்கு உரித்து ஆமாறு [௩௫

அவற்றுள்,
நீஎன் கிளவி ஒருமைக் குரித்தே.

இது, 'நீ' என்பது பாற்கு உரித்து ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே - முற்கூறிய இரண்டு பெயருள் 'நீ' என்னும் பெயர் ஒருவன் ஒருத்தி ஒன்று என்பனவற்றிற்கெல்லாம் பொதுவாகிய ஒருமைக்கு உரித்தாம் (எ-று.)

(உ-ம்.) நீ வந்தாய்.

என வரும்.

192] 'நீயிர்' என்பது பாற்கு உரித்து ஆமாறு [௩௬

ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

இது, 'நீயிர்' என்பது பாற்கு உரித்து ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே - ஒழிந்த 'நீயிர்' என்னும் பெயர் பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொது வாகிய பன்மைக்கு உரித்தாம் (எ-று.)

(உ-ம்.) நீயிர் வந்தீர்.

என வரும்.

193] 'ஒருவர்' என்பது உயர் இரு பாற்கும் பொதுவாதல் [நஎ

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியும் காலை.

இஃது, உயர்திணை அதிகாரத்தின் ஒழிபு கூறு கின்றது. இது பொதுவாய் நிற்றலின், ஈண்டுக் கூறினர்.

(இ-ள்.) ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி - மேல் 'இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்'[1] என்றவற்றுள் 'ஒருவர்' என்னும் பெயர் நிலைமையை உடைய சொல், தெரியும் காலை இருபாற்கும் உரித்தே - ஆராயும் காலத்து உயர்திணைப்பாலுள் ஒரு பால் உணர்த்தாது 'ஒருவன், ஒருத்தி' என்னும் இரு பாற் கும் பொதுவாய் நிற்கும் (எ-று.)

(உ-ம்.) ஒருவர் வந்தார்.

என வரும்.

194] 'ஒருவர்' என்பது பன்மை வினை கோள்ளல் [நஅ

தன்மை சுட்டில் பன்மைக் கேற்கும்.

இஃது, 'ஒருவர்' என்பதன் முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) தன்மை சுட்டில் - முற்கூறிய 'ஒருவர்' என்னும் சொல் முடியும் தன்மையைக் கருதில், பன்மைக்கு ஏற்கும் - தான் காட்டுகின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச்சொல் லோடு முடியாது ரகர ஈற்றதாய் நின்ற சொற்றன்மைக்கு ஏற்பப் பன்மைச்சொல் பெற்று முடியும் (எ-று.)

1. பெயரியல், சூ. 11.

(உ-ம்.) ஒருவர் வந்தார்.
ஒருவர் அவர்.

இது, பால் பற்றிய **மரபு வழுவமைதி.**

195] 'நீயிர், நீ, ஒருவர்' என்பவற்றின் பால் தெரியுமாறு [கூசு

இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்.

இது, 'நீயிர், நீ, ஒருவர்' என்பனவற்றிற்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) இன்ன பெயரே இவை எனல் வேண்டின் - 'நீயிர், நீ, ஒருவர்' என்பன இன்ன பாற்பெயர் என்று அறியலுறின், முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல் - இடமும் காலமும் பற்றிச் சொல்லுவான் குறிப்போடு கூட்டி மேல் ஓதின முறையானே திணையும் பாலும் உணர்க (எ-று.)

(உ-ம்.) விலங்கு வாராததோர் இடத்திருந்து 'நீயிர் வந்தீர்; நீ வந்தாய்,' என்றால் உயர்திணை எனவும், மக்கள் வாராததோர் இடத்திருந்து அங்ஙனம் கூறினால் அஃறிணை எனவும் உணரப்படும்.

'நீயும் தவறிலை நின்னைப் புறங்கடை'[1]

என்றவழிப் பெண் பால் என்பதூஉம்,

'நீயே பிறர்நாடு கொள்ளுங் காலை'[2]

என்றவழி ஆண் பால் என்பதூஉம்,

'இன்றுணைப் பிரிந்தாரை உடையையோ நீ'[3]

என்றவழி அஃறிணை என்பதூஉம் உணரப்படும்.

'ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றின்'*[4]

என்றவழிச் சொல்லுவானோடு கேட்டான் ஆடூஉ ஒருமை குறித்தான் என்பது விளங்கும்.

பி-ம் : * ஆற்றி

1. கலி. 56 : 30. 2. புறம். 57 : 5.
3. கலி. 129 : 15. 4. நாலடி. 309.

196] 'பெண்மகன்' என்னும் பெயர் பெண் பாற்குரிய [சo
வினை கோளல்

மகடூஉ மருங்கில் பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான.

இஃது, உயர்திணை ஒழிபு கூறுகின்றது.

(இ-ள்.) மகடூஉ மருங்கில் பால் திரி கிளவி - மகடூஉப் பொருண்மைக்கண் பால் திரிந்து வரும் 'பெண்மகன்' என்னும் பெயர், தொழில்வயினான மகடூஉ இயற்கை - தொழில் கொள்ளு மிடத்து மகடூஉவிற்கு உரிய தொழில் கொள்ளும் (எ-று.)

(உ-ம்.) பெண்மகன் வந்தாள்.

என வரும். பொருள் பற்றி முடிபு கூறிற்று.

197] ஆகார ஈறு செய்யுளில் ஓகாரமாதல் [சக

ஆஓ ஆகும் பெயருமார் உளவே;
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே.

இது, பெயர் ஈறு செய்யுளுள் திரியும் என்கின்றது.

(இ-ள்.) ஆ ஓ ஆகும் பெயருமார் உள - ஆகாரம் ஓகார மாய்த் திரியும் பெயரும் உள; ஆயிடன் அறிதல் செய்யுளுள்ளே - அத்திரியும் இடம் அறிக செய்யுளுள் (எ-று.)

(உ-ம்.) 'வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல்! அளியர் தாமே!'[1]
'கழனி நல்லூர்* மகிழ்நர்க்கென்
இழைநெகிழ்† பருவரல் செப்பா தோயே!'[2]

என வரும்.

'அழாஅன், கிழாஅன்' என்னும் அளபெடைப் பெயர் அளபெடுத்தால் ஆ ஓ ஆகா.

பா-ம்: * நல்லூர † இழைநெகிழப்
1. குறுந். 7. 2. நற். 70.

198] விரவுப்பெயர் செய்யுளுள் வரும் முறைமை [சஉ

**இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான.**

இது, விரவுப்பெயர் செய்யுளுள் வரும் முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) செய்யுளுள் இறைச்சிப் பொருள்வயின் கிளக்கும் இயற்பெயர்க் கிளவி - செய்யுளுள் கருப்பொருள் கூறும்வழிக் கிளக்கப்படும் இரு திணைக்கும் உரிய பெயர், நிலத்துவழி மருங்கில் தோன்றலான - நால்வகை ஒழுக்கங்களின் இடமாகிய இடத்தே அவற்றிற்கு உறுப்பாய்த் தோன்றலின், உயர்திணை சுட்டா - உயர்திணையை உணர்த்தாது அஃறிணையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு
வதுவை வந்த வன்பறழ்க் குமரி'[1]

என்புழிக் 'கடுவன், மூலன்' என்பன உயர்திணை ஆண்பால் உணர்த்தும் அன்னீற்றுப்பெயர் அஃறிணை ஆண்பாலையும் உணர்த்தி நிற்றலின் விரவுப்பெயர் ஆயினும், ஈண்டுப் பொருட்கு உபகாரப்படும் இறைச்சிப்பொருளாய் நிற்றலின், அஃறிணைப்பெயராம். 'குமரி' என்பதூஉம் விரவுப்பெயர்.

199] எய்தியது விலக்கல் [சந

திணையொடு பழகிய பெயரலங் கடையே.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) திணையொடு பழகிய பெயரலங்கடையே - கருப்பொருள் உணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அஃறிணை சுட்டுவது திணைதோறும் உரிமை பூண்டு வழங்கப்பட்டு வரும் பெயர் அல்லாத இடத்து (எ-று.)

---

1. நன். சூ. 359. மயிலை நா. உரை, மேற்.

எனவே, திணைதோறும் உரிமை பூண்டு வழங்கப் பட்டு வரும் பெயர், உயர்திணையும் சுட்டி வரும் என்பதாம்.

(உ-ம்.) 'அவனும்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு'[1]
'திருந்துவேல் விடலையொடு* வருமெனத் தாயே'[2]

என வரும். ஓர் எருத்தையும் 'காளை, விடலை' எனப் படுதலின், விரவுப்பெயர் ஆயிற்று.

பெயர் இயல் முற்றும்.

பி-ர்: * விடலை 1. நற். 184. 2. அகம். 195 : 2.

௬. வினை இயல்

200] வினைச்சொற்குப் பொது இலக்கணம் [௧

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்.

என்பது சூத்திரம். இது, நிறுத்த முறையானே வினை இலக்கணம் உணர்த்தினமையின், இவ்வோத்து 'வினை இயல்' எனக் காரணப்பெயர் பெற்றது. இச்சூத்திரம், வினைச்சொற்கு எல்லாம் பொது இலக்கணம் உணர்த்து கின்றது.

(இ-ள்.) வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது - 'வினைச்சொல்' என்று சொல்லப்படுவது வேற்றுமையோடு பொருந்தாது, நினையும் காலைக் காலமொடு தோன்றும் - ஆராயுங்கால் காலத்தோடு புலப்படும் (எ-று.)

'வினை' என்றது, முதல் நிலையை. இஃது ஆகுபெயராய்த் தன்னால் பிறக்கின்ற சொல்லை உணர்த்திற்று.

(உ-ம்.) உண், தின், கரு, செய் என்பன வினை.

உண்டல், தின்றல், கருமை, செம்மை என்பன அம்முதல் நிலையால் பிறந்த வினைப்பெயர்.

உண்டான், தின்றான், கரியன், செய்யன் என்பன அம்முதல் நிலையால் பிறந்த வினைச்சொல்.

இங்ஙனம் வினையால் பிறத்தலின், 'வினை இயல்' என்றார்.

201] காலம் மூன்று. [௨

காலந் தாமே மூன்றென மொழிப.

இது, முற்கூறிய காலம் இனைத்து என்கின்றது.

(இ-ள்.) காலந்தாமே மூன்று என மொழிப - மேல் தோற்றுவாய் செய்யப்பட்ட காலந்தாம் மூன்று என்று கூறுவர் புலவர் (எ-று.)

202] காலத்தின் பெயரும் முறையும் தொகையும் [௫

. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
மெய்ந் நிலை உடைய தோன்ற லாறே.

இஃது, அக்காலத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறி, அதுதான் குறிப்பிற்கும் உண்டு என்கின்றது.

(இ-ள்.) இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா அம்முக் காலமும் - இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும் அம்மூன்று காலமும், குறிப்பொடும் கொள்ளும் மெய்ந்நிலை உடைய-வினைக்குறிப்போடும் பொருந்தும் உண்மை நிலைமையை உடைய, தோன்றலாறே - வினைச்சொல்லான் அக்காலங்கள் தோன்றும் நெறிக்கண் (எ-று.)

(உ-ம்.) உண்டான்.
உண்ணாநின்றான்.
உண்பான்.

எனக் காலம் மூன்றும் தோன்றி நின்றவாறு காண்க.

கரியன், செய்யன்.

என்பன வினைக்குறிப்பு.

இறப்பாவது, தொழிலது கழிவு; நிகழ்வாவது, தொழில் தொடங்கி முற்றுப்பெறாமல் நடக்கின்ற நிலைமை; எதிர்வாவது, தொழில் பிறவாமை.

தொழிலாவது, பொருளினது புடை பெயர்ச்சி. இஃது, இரண்டு கணம் காலத்தின்கண் நில்லாமையின், நிகழ்ச்சி என்பது ஒன்று இன்று ஆயினும், 'உண்ணா நின்றான்,' எனப் பல்தொழிற்பகுதி பற்றி நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று. இதனானே, 'நிகழ் காலம் இன்று,'

என்பாரும், 'நிகழ் காலம் ஒன்றுமே உண்டு,' என்பாரும் எனப் பல பகுதியர் ஆசிரியர் என்பது கொள்க.

203] வினைச்சொற்களின் பாகுபாடு [௪

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.

இது, வினைச்சொற்களது பாகுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம் - குறிப்புப்பொருண்மைக்கண்ணும் தொழிற்பொருண்மைக்கண்ணும் முறைமைப்படத் தோன்றிக் காலத்தோடு வரும் எல்லா வினைச்சொல்லும், உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும் ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்-உயர்திணைக்கு உரிமையுடைமையும் அஃறிணைக்கு உரிமையுடைமையும் அவ்விரண்டு திணைக்கும் ஒப்ப உரிமையுடைமையும் என, அம்மூவுருபின தோன்றலாறே-அம்மூன்று கூற்றினையுடையவாம் தோன்றும் நெறிக்கண் (எ-று.)

(உ-ம்.) உண்டான், கரியன்.
சென்றது, செய்யது.
வந்தனை, வெளியை.

என வரும். 'காலமொடு வரூஉம்,' எனப் பின்னும் கூறினர், குறிப்பிற்கும் காலம் உண்டு என்பது வலியுறுத்தற்கு.

இம்முக்காலத்தும் வருதற்கு உரிய காலம் காட்டும் எழுத்துக்களை ஆசிரியர் எடுத்து ஓதார் ஆயினர், பின் உள்ளோர் காலங்கட்கு உரியவாக எடுத்து ஓதிய எழுத்துக்கள் தம்முள் மயங்கியும் வருதலின். ஆசிரியர், அங்ஙனம் மயங்குதல் பற்றி எடுத்து ஓதாமையின்,

உரையாசிரியரும் அவ்வெழுத்துக்களைச் சிறிதே காட்டினர்.

இனிப் பின்னுள்ளோர் கூறினர் என்பது பற்றியும், மாணாக்கர்க்கு உய்த்து உணரும் உணர்வு இன்று என்பது பற்றியும், யாமும் அவ்வெழுத்துக்களைப் பிரித்துக் காட்டுதும். சேனவரையர் அவ்வாறு பிரித்துக் காட்டுகின்றவர், 'நெறிப்படத் தோன்றி' என்பதனால் பிரித்துக் காட்டுவர். அது பொருந்தாது, ஆசிரியர் எடுத்து ஓதாமல் 'மயங்கும்' என்று போதலின். இதனைச் 'செய்யுள் மருங்கினும்'[1] என்னும் அதிகாரப் புறனடையிற் 'பிரித்தனர் காட்டல்' என்பதனால் பிரித்துக் காட்டுதும். அது மேல் கண்டுகொள்க.

204] உயர்திணைத் தன்மைப்பன்மை வினை முற்று [டு

அவைதாம்,
அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே.

இது, முறையானே உயர்திணை முற்று வினை கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் - மேல் பகுக்கப்பட்ட வினையின் முப்பால் பாகுபாடுமாகிய அவைதாம் ஆகுமாறு இனிச்சொல்லுவல், அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும் - 'அம், ஆம், எம், ஏம்' என்னும் ஈற்றவாகிய சொல்லும், உம்மொடு வரூஉம் க ட த ற என்னும் அந்நாற்கிளவியொடு - 'உம்' என்னும் இறுதி இடைச்சொல்லின் உகரம் 'க, ட, த, ற' என்னும் ஒற்றின்மேல் ஏறிய கும்மும் டும்மும் தும்மும் றும்மும் என்னும் ஈற்றவாகிய அந்நான்கு சொல்லும், ஆயெண் கிளவியும் - ஆகிய அவ் எட்டுச் சொல்லும், பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே - சொல்லு

1. எச்சவியல், சூ. 67.

வான் தன்னோடு பிறரையும் கூட்டிப் பன்மையினைச் சொல்லும் தன்மைக்கு உரிய சொல்லாம் (எ-று.)

இச்சூத்திரம் முதலாக, 'முன்னிலை வியங்கோள்'[1] ஈறாக, முற்று உணர்த்துகின்றார், வினையெச்சமும் பெயரெச்சமும் ஒழித்து, இச்சூத்திரத்தால் பன்மைத்தன்மையும் மேலைச்சூத்திரத்தான் ஒருமைத்தன்மையும் உணர்த்துகின்றார்.

முன்னர் நின்ற நான்கும் இறந்த காலம் பற்றி வருங்கால் 'அம், ஆம்' என்பன தன்னோடு முன்னின்றாரையும் தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுத்தி, க ட த ற என்னும் கால எழுத்தின் முன் அம் 'அன்' பெற்றும், ஆம் 'அன்' பெறாதும் வரும். 'எம், ஏம்' என்பன, படர்க்கையாரை உளப்படுத்தி, அக்கால எழுத்தின் முன்னர் எம் 'அன்' பெற்றும், ஏம் 'அன்' பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) நக்கனம், உண்டனம், உரைத்தனம், தின்றனம்.
நக்கிலம், உண்டிலம், உரைத்திலம், தின்றிலம்.
நக்கனமல்லம், உண்டனமல்லம், உரைத்தனமல்லம், தின்றனமல்லம்.

எனவும்,

நக்காம், உண்டாம், உரைத்தாம், தின்றாம்.
நக்கிலாம், உண்டிலாம், உரைத்திலாம், தின்றிலாம்.
நக்காமல்லாம், உண்டாமல்லாம், உரைத்தாமல்லாம், தின்றாமல்லாம்.

எனவும்,

நக்கனெம், உண்டனெம், உரைத்தனெம், தின்றனெம்.
நக்கிலெம், உண்டிலெம், உரைத்திலெம், தின்றிலெம்.
நக்கனெமல்லெம், உண்டனெமல்லெம், உரைத்தனெமல்லெம், தின்றனெமல்லெம்.

எனவும்,

1. வினையியல், சூ. 25.

நக்கனேம், நக்கேம்.
உண்டனேம், உண்டேம்.
உரைத்தனேம், உரைத்தேம்.
தின்றனேம், தின்றேம்.
நக்கிலேம், உண்டிலேம், உரைத்திலேம், தின்றிலேம்.
நக்கேமல்லேம், உண்டேமல்லேம், உரைத்தேமல்லேம், தின்றேமல்லேம்.

எனவும் வரும்.

இனி, 'அம், ஆம்' என்பனவற்றிற்கு,

(உ-ம்.) நீயும் யானும் உண்டனம்.
நீயும் யானும் உண்டாம்.
நீயும் யானும் அவனும் உண்டனம்.
நீயும் யானும் அவனும் உண்டாம்.

என வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

'எம், ஏம்' என்பனவற்றிற்கு,

(உ-ம்.) யானும் அவனும் உண்டனெம்.
யானும் அவனும் உண்டனேம்.
யானும் அவனும் உண்டேம்.

என வரும். ஏனையவற்றோடும் ஒட்டுக.

அந்நான்கு ஈறும் ஏனை எழுத்தின்முன் ஙகாரமும் ழகாரமும் ஒழித்து 'இன்' பெற்று வரும்.

(உ-ம்.) அஞ்சினம், தப்பினம்.

எனவும்,

உரிஞினம், எண்ணினம், பொருநினம், திருமினம், பன்னினம்.

எனவும்,

போயினம், வாரினம், சொல்லினம், மேவினம், எள்ளினம்.

எனவும் வரும். ஒழிந்த மூவீற்றோடும் ஒட்டுக.

கலக்கினம், தெருட்டினம், அருத்தினம், அரற்றி
னம்.

என்பன, ககர ஈறும் டகர ஈறும் தகர ஈறும் றகர ஈறும் முதல் நிலைச் சொல்லாய் நின்று 'இன்' பெற்றன.

இனி, இவை நிகழ் காலம் பற்றி வருங்கால் 'நில், நின்று' என்பனவற்றோடு வந்து, முற்கூறியவாறே நிற்கும். 'நில்' என்பது லகரம் னகரமாய்த் தனக்கு ஏற்ற றகரம் பெற்று நிற்கும்.

இனி, 'நின், கின்' என நிற்கும் என்றுமாம்.

(உ-ம்.) உண்ணாநின்றனம், உண்கின்றனம்.
உண்ணாநின்றிலம், உண்கின்றிலம்.

எனவும்,

உண்ணாநின்றாம், உண்கின்றாம்.
உண்ணாநின்றிலாம், உண்கின்றிலாம்.

எனவும்,

உண்ணாநின்றனெம், உண்கின்றனெம்.
உண்ணாநின்றிலெம், உண்கின்றிலெம்.

எனவும்,

உண்ணாநின்றனேம், உண்கின்றனேம்.
உண்ணாநின்றேம், உண்கின்றேம்.
உண்ணாநின்றிலேம், உண்கின்றிலேம்.

எனவும் வரும்.

உண்ணாகிடந்தாம், உண்ணாவிருந்தாம்.

எனக் 'கிட, இரு' என்பனவும் நிகழ் காலத்து வரும்.

'உண்கிறேம்,' எனக் 'கிறு' என்பது நிகழ் காலம் உணர்த்துதல் இக்கால வழக்கு.

இனி, இவை எதிர் காலம் பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரம் ஏற்புழிக் குகரமும் உகரமும் அடுத்தும் நிற்கும்.

(உ-ம்.) உண்பம், உண்குவம், உரினுவம், திருமுவம், உண்ணலம்.

எனவும்,

'உண்பாம், உண்குவாம், உண்ணும்.

எனவும்,

உண்பெம், உண்குவெம், உண்ணலெம்.

எனவும்,

உண்பேம், உண்குவேம், உண்ணேம்.

எனவும் வரும்.

இனி, 'அம்' ஈறு வருங்கால்,

'அந்த* ணாளனை நகுகம் யாமே.'[1]

எனவும்,

'பாடுகம் வம்மின் போதுகம்.'†[2]

எனவும்,

'பாடுகம் வாவாழி தோழி.'[3]

எனவும் ககரம் எதிர் காலமும் உணர்த்தி வரும்.

கூறுவன், சொல்லுவன், போதுவன்.

என வரும் வகரமும் எதிர் காலம் உணர்த்தும்.

இனி, 'உம்மொடு வரூஉம் கடதற',

உண்கும், உண்டும், வருதும், சேறும்.

என வரும்.

யானும் நீயும் உண்கும்.

யானும் அவனும் நீயும் உண்கும்.

என எல்லாவற்றோடும் ஒட்டுக.

இக்கடதறக்கள் முதல் நிலையை அடுத்து வருங்கால் இறப்பும், ஈற்றினை அடுத்து வருங்கால் எதிர்வும் உணர்த்தும். இனி, இவற்றுள் சிறுபான்மை நிகழ் காலம் உணர்த்துவனவும் உள. அது,

---

பி-ம்: * மண்க † பொதுவன்

1. அகம். 32 : 21. 2. கலி. 104 : 63. 3. கலி. 41 : 1.

'சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாமவ ணின்றும் வருதும்.'[1]

என வரும்.

இனி, 'உரிஞுதும், திருமுதும்,' என ஏனை எழுத்தின் முன் உகரம் பெற்று வரும்.

205] உயர்திணைத் தன்மை ஒருமை வினை முற்று [சூ
கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே.

இது, தனித்தன்மையாகிய முற்றுக் கூறுகின்றது.

(இ-ள்.) க ட த ற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமோடு - 'க, ட, த, ற' என்னும் அந்நான்கு மெய்யையும் ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தினை ஈறுக உடைய அந்நான்கு சொல்லும், என் ஏன் அல் என வரூஉம் ஏழும் - 'என், ஏன், அல்' என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லுமாகிய அவ் வேழும், தன் வினை உரைக்கும் தன்மைச்சொல்லே - பிறரை உளப்படுத்தாது தன் வினையை உணர்த்தும் தன்மைச்சொல்லாம் (எ-று.)

குற்றுகரம் நான்கும், பெரும்பான்மையும் எதிர் காலத்தும், சிறுபான்மை ஏனைக் காலத்தும் வரும்.

(உ-ம்.) உண்கு, உண்டு, வருது, சேறு.
உரிஞுகு, திருமுகு.

என 'உம்' ஈறு போல எதிர் காலம் காட்டின.

'கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்'[2]

என்புழிப் 'பொழிந்து' எனவும், 'விளைந்து' எனவும் இறந்த காலம் உணர்த்தின.

1. சிறுபாண். 142-3. 2. புறம். 203 : 1, 2.

நிகழ் காலம் வந்துழிக் காண்க.

'அழாஅற்கோ வினியே நோய்நொந் துறைவி'*[1]

என்னும் குறுந்தொகைப் பாட்டினுள் 'அழுது' என்னும் உடம்பாட்டிற்கு 'அழாஅற்கு' என எதிர்மறை வந்தது.

இனி, ஓசை வேற்றுமையால், ககர உகரமும் றகர உகரமும் வியங்கோள் முற்ருயும் நிற்கும்.

(உ-ம்.) 'நெடுந்தேர்
தாங்குமதி வலவ!என் றிழிந்தனன்.'†[2]
'தாங்குநின் அவலம் என்றீர்.'

எனவும்,

'நீயுறும்‡ பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ? கூறு.'[3]

எனவும் வரும்.

'என், ஏன்' என்பன, மூன்று காலமும் பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் 'என்' ஈறு 'எம்' ஈற்ருேடும், 'ஏன்' ஈறு 'ஏம்' ஈற்ருேடும் ஒக்கும்.

(உ-ம்.) உண்டனென், உண்டிலென், உண்டனெனல்லென்.
உண்ணாநின்றனென், உண்கின்றனென், உண்ணாநின்றிலென், உண்கின்றிலென்.
உண்பென், உண்குவென், உண்ணலென்.

எனவும்,

உண்டனேன், உண்டேன், உண்டிலேன், உண்டனேனல்லேன்.
உண்ணாநின்றனேன், உண்ணாநின்றேன், உண்கின்றனேன், உண்கின்றேன், உண்ணாநின்றிலேன், உண்கின்றிலேன்.
உண்பேன், உண்குவேன், உண்ணேன்.

எனவும் வரும்.

பி-ம்: * 'அழாற்கோவினி நோநொந் திறைவி'
† றினிதிழிந்தனன் ‡ கூறும்

1. குறுந். 192. 2. அகம். 66 : 12, 13. 3. கலி. 88 : 20, 21.

இனிப் பகர வகரங்கள் நிகழ் காலத்தும் வரும்.

'கூடநீர் நின்ற பெற்றி கண்டிப்பால் நோக்கு வேற்கு'[1]

என்புழிப் 'பார்க்கின்றேற்கு' எனப் பொருள் தந்தவாறு காண்க. பகரம் வந்துழிக் காண்க.

'அல்' ஈறு, பகர வகரம் பெற்று, எதிர் காலத்து வரும். 'உண்பல், வருவல்' என வரும்; 'உண்ணுநிற்பல்' எனச் சிறுபான்மை நிகழ் காலமும் பெறும். 'ஒழிவல், தவிர்வல்' என வரும் மறை வாய்பாடும் அறிக.

வினை கொண்டு முடியும் 'செய்கு' என்பதனை 'உம்' ஈற்றோடு இயைய வைத்தமையான், 'செய்கும்' என்பதூஉம் 'காண்கும் வந்தேம்,' என வினை கொண்டு முடியும்.

206] 'செய்கு' என்னும் வாய்பாட்டு வினை முற்று வினை கோண்டு முடிதல் [எ

அவற்றுள்,
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

இஃது, அவற்றுள் ககர உகர ஈற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - முற்கூறிய ஒருமைத் தன்மை வினை ஏழனுள், செய்கு என் கிளவி வினையொடு முடியினும் - 'செய்கு' என்னும் முற்றுச்சொல் பெயரோடு முடியாது வினையோடு முடியினும், அவ்வியல் திரியாது என்மனார் புலவர் - அம்முற்றுச் சொல்லாம் தன்மையின் திரியாது என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'காண்கு வந்திசின் பெரும!'[2]

என வரும். 'நோகோ யானே'[3] எனப் பெயர் கோடல் சிறுபான்மையாம்.

---

1. சீவக. 1751. 2. புறம். 17 : 33. 3. ஐங்குறு. 205.

207] உயர்திணைப் படர்க்கை ஒருமை வினை முற்று [அ

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இது, படர்க்கை ஒருமை முற்று உணர்த்துகின்றது.

(இ-ள்.) அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் - 'அன் ஆன், அள், ஆள்' என்னும் ஈற்றை உடைய நான்கு சொல்லும், ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே - 'ஒருவன், ஒருத்தி' என்னும் உயர்திணை ஒருமைப்பாலிடத்துப் படர்க்கையை உணர்த்தும் சொல்லாம் (எ-று.)

இந்நான்கு ஈறும் மூன்று காலமும் பற்றி வருங்கால் அன்னும் அள்ளும் 'அம்' ஈற்றோடும், ஆனும் ஆளும் 'ஆம்' ஈற்றோடும் ஒக்கும்.

(உ-ம்.) உண்டனன், உண்டிலன்.
உண்ணாநின்றனன், உண்கின்றனன், உண்ணாநின்றிலன், உண்கின்றிலன்.
உண்பன், உண்குவன், உண்ணலன்.

எனவும்,

உண்டான், உண்டிலான்.
உண்ணாநின்றான், உண்கின்றான், உண்ணாநின்றிலான், உண்கின்றிலான்.
உண்பான், உண்குவான், உண்ணான்.

எனவும்,

உண்டனள், உண்டிலள்.
உண்ணாநின்றனள், உண்கின்றனள், உண்ணாநின்றிலள், உண்கின்றிலள்.
உண்பள், உண்குவள், உண்ணலள்.

எனவும்,

உண்டாள், உண்டிலாள்.
உண்ணாநின்றாள், உண்கின்றாள், உண்ணாநின்றிலாள், உண்கின்றிலாள்.
உண்பாள், உண்குவாள், உண்ணாள்.

எனவும் வரும்.

Chennai-600 008.

உண்டனனல்லன், உண்டானல்லன்.
உண்டனளல்லள், உண்டாளல்லள்.

எனப் பிற வாய்பாட்டான் வரும் மறையும் அறிக.

208] உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினை முற்று [கூ

அர் ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இது, படர்க்கைப் பன்மை முற்று உணர்த்துகின்றது.

(இ-ள்.) அர் ஆர் ப என வரூஉம் மூன்றும் - 'அர், ஆர், ப' என்னும் ஈற்று எழுத்தினை உடையவாய் வரும் மூன்று சொல்லும், பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே - பல்லோரிடத்துப் படர்க்கைப் பன்மையை உணர்த்தும் சொல்லாம் (எ-று.)

'அர், ஆர்' என்னும் இரண்டு ஈறும், மூன்று காலமும் பற்றி வரும். இவை கால எழுத்துப் பெறுங்கால் 'அன்' ஈற்றோடு 'அர்' ஈறும், 'ஆன்' ஈற்றோடு 'ஆர்' ஈறும் ஒக்கும்.

(உ-ம்.) உண்டனர், உண்டிலர்.
உண்ணாநின்றனர், உண்கின்றனர், உண்ணாநின்றிலர், உண்கின்றிலர்.
உண்பர், உண்குவர், உண்ணலர்.

எனவும்,

உண்டார், உண்டிலார்.
உண்ணாநின்றார், உண்கின்றார், உண்ணாநின்றிலார், உண்கின்றிலார்.
உண்பார், உண்குவார், உண்ணார்.

எனவும் வரும்.

உண்டனரல்லர், உண்டாரல்லர்.

என வரும் மறை விகற்பமும் அறிக.

பகரம் எதிர் காலம் பற்றி வருங்கால் உகரமும் குகரமும் அடுத்தும் அடாதும் நிற்கும்.

(உ-ம்.) உரிஞுப, வருகுப.

எனவும், 'உண்ப,' எனவும் வரும். 'ஒழிப, தவிர்ப,' என மறையும் வரும். 'உண்ணுதொழிப,' என்பது எல்லா வற்றிற்கும் பொது. இஃது, 'உண்ணுநிற்ப,' என நிகழ் காலத்தும் வரும்.

209] 'செய்மார்' என்னும் வாய்பாட்டு வினை முற்று வினைகொண்டு முடிதல் [௧௦

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை;
காலக் கிளவியொடு முடியும் என்ப.

இதுவும், பன்மைக்கு உரிய ஈறும் அதன் முடிபு வேற்றுமையும் கூறுகின்றது.

(இ-ள்.) மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை-முன்னை யனவே அன்றி 'மார்' ஈற்றுச் சொல்லும் பல்லோரை உணர்த் தும் படர்க்கைச்சொல்லாம்; காலக்கிளவியொடு முடியும் என்ப- அஃது அவை போலப் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும் (எ-று.)

'மார்' உகரம் அடுத்தும் அடாதும் நிற்கும்.

(உ-ம்.) 'எள்ளுமார் வந்தாரே ஈங்கு.'[1]
'ஆர்த்தார் கொண்மார் வந்தார்.'

என வரும். இஃது எதிர் காலம்.

'நிலவன் மாரே* புலவர்'[2]
'பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே.'[3]
'நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே.'[4]

என்பன, 'நிலவுக, பாடுக, காண்க,' என்னும் வியங் கோட்கு எதிர்மறை என்று உணர்க.

இனி, ' 'நிலவுவார், பாடுவார், காண்பார்' என்பன சில வியங்கோள் முற்று,' என்று கூறி, அதற்கு எதிர்

பி-ம்: * மாரோ
1. கலி. 81: 24. 2. புறம். 375: 18.
3. புறம். 375: 21. 4. நற். 64.

மறையாய், 'நிலவாதொழிவார், பாடாதொழிவார், காணு தொழிவார்,' என ஏவற்பொருண்மையை உணர்த்தி நின்றன என்றலும் ஒன்று.

210] உயர்திணை வினை முற்றின் தொகை [கக

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே.

இது, விரிந்தது தொகுத்துத் தெரிநிலை வினைகள் உயர்திணைக்கு உரிய என்கின்றது.

(இ-ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த மூன்று தலையிட்ட அந்நாலைந்தும் - பன்மையும் ஒருமையுமாகிய பால் அறிய வந்த இருபத்து மூன்று ஈற்று வினைச்சொல்லும், முன்னுறக் கிளந்த உயர்திணைய - கிளவியாக்கத்துக் கூறப்பட்ட உயர்திணையை உடையனவாம் (எ-று.)

ஈண்டுக் கூறியதனாற்பயன், 'அன், ஆன்' முதலிய இடைச்சொற்பற்றி உயர்திணைப்படர்க்கை வினைமுற்று உணர்த்துதல்; ஆண்டுக்[1] கூறியதனாற்பயன், வழுக்காத்தற்கு அவற்றின் ஈறுகளைத் தொகுத்து இலக்கண வழக்கு உணர்த்துதல் என்று உணர்க.

211] உளப்பாட்டுத் தன்மை வினை முற்றின் திரிபு [கஉ

அவற்றுள்,
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கில் திரிபவை உளவே.

இஃது, உளப்பாட்டுத் தன்மைக்குத் திரிபு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி - முற்கூறப்பட்ட இருபத்து மூன்று சொற்களுள் பன்மையை உணர்த்தும் தன்மைச்சொல், எண் இயல் மருங்கில் திரிபவை

---

1. கிளவியாக்கத்தில்

உள - எண்ணுதல் நடக்கும் இடத்து அஃறிணையை உளப் படுத்தித் திரிவன உள (எ-று.)

(உ-ம்.) 'யானுமென் எஃகமும் சாறும்.'

இஃது அஃறிணையை உளப்படுத்தல் 'தன்மைச் சொல்'[1] என்னும் சூத்திரத்தான் வந்தது.

212] 'யார்?' என்னும் குறிப்பு முற்று உயர்திணை முப்பாற்கும் உரித்தாதல் [கரு

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே.

இஃது, உயர்திணை வினைக்குறிப்பினுள் ஒன்று கூறுகின்றது.

(இ-ள்.) யாஅர் என்னும் வினாவின் கிளவி அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே - 'யார்?' என்னும் வினாப் பொருளை உணர்த்தும் சொல் உயர்திணை மருங்கின் மூன்று பாற்கும் உரித்து (எ-று.)

(உ-ம்.) அவன் யார்?
அவள் யார்?
அவர் யார்?

இது, வினைக்குறிப்பு ஆயினும், பல்லோர் படர்க்கையை உணர்த்தும் 'ஆர்' ஈற்றான் மூன்று பாலையும் உணர்த்துதலின், அவற்றோடு வையாது ஈண்டு வைத்தார். 'உயர்திணைக்கு உரித்து,' எனவே அஃறிணைக்கு உரித்தன்றிச் சிறுபான்மை வருதல் கொள்க. அஃது,

'ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெம்
கோதைகூட் டுண்ணிய தான்யார்மன்—போதெல்லாம்
தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்
தூதொடு வாராத வண்டு?.'[2]

என 'உண்ணிய வண்டுதான் யார்?' என அஃறிணைக் கண் வந்தது.

---

1. கிளவியாக்கம், சூ. 43. 2. நன். சூ. 349. சங். ந. உரை மேற்.

இது திணை வழுவமைதி என்றலும் ஒன்று.

213] ஆன், ஆள், ஆர் ஈற்று ஆ, செய்யுளுள் ஓவாதல் [கச

பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஓ ஆகும் செய்யு ளுள்ளே.

இஃது, அவ்விருபத்து மூன்று ஈற்றினுள் மூன்று ஈறு செய்யுளுள் திரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பால் அறி மரபின் அம்மூவீற்றும் - பால் விளங்க வரும் இயல்பையுடைய 'ஆன், ஆள், ஆர்' என்னும் மூன்று ஈற்றின்கண்ணும், ஆ ஓ ஆகும் செய்யுளுள்ளே - ஆகாரம் ஓகாரமாம் செய்யுளிடத்து (எ-று.)

(உ-ம்.) 'வினவி நிற்றந் தோனே'[1]
'நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே'[2]
'வாடா வள்ளியங் காடிறந் தோரே'[3]

என வரும்.

'வந்தோம், சென்றோம்' என்னும் வழக்கு 'ஏம்' ஈற்றின் சிதைவு என மறுக்க.

214] 'ஆய்' என்னும் ஈற்று ஆவும் செய்யுளுள் ஓவாதல் [கரு

ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்.

இது, விரவு வினையும் அம்முடிபு பெறும் என்கின்றது.

(இ-ள்.) ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும் - முன்னிலை ஈற்றுள் 'ஆய்' என்னும் ஈறும் மேற்கூறப்பட்டன போல ஆகாரம் ஓகாரமாம் செய்யுளுள் (எ-று.)

(உ-ம்.) 'வந்தோய் மன்ற தண்கடற்* சேர்ப்ப !'[4]

என வரும்.

பி-ம்: * தெண்கடற்
1. அகம். 48 : 14. 2. அகம். 248 : 16.
3. குறுந். 216. 4. அகம். 80 : 3.

இவ்விரவு வினை உயர்திணைமேல் வந்தால் ஆ ஓ ஆம் என்றற்கும், ஆ ஓ ஆதல் அதிகாரப்படுதலானும் ஈண்டுக் கூறினர். இவை தொழிற்பெயராயின், பெயரியலுள் அடங்கும்.

215] உயர்திணைக் குறிப்பு வினை முற்று [கக௫

அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்என் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானும்என்
றப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்.

இது, நிறுத்த முறையானே உயர்திணை வினைக் குறிப்பு உணர்த்துகின்றது.

(இ-ள்.) அதுச்சொல் வேற்றுமை உடைமையானும் - ஆறும் வேற்றுமையது உடைமைப்பொருட்கண்ணும், கண் என் வேற்றுமை நிலத்தினானும் - ஏழாம் வேற்றுமையது நிலப் பொருண்மைக்கண்ணும், ஒப்பினானும் - உவமத்தின்கண்ணும், பண்பினானும் - பண்பின்கண்ணும், என்று அப்பாற்காலம் குறிப் பொடு தோன்றும் - என அப்பொருட்பகுதி பற்றி வரும் சொல்லகத்துக் காலம் குறிப்பால் தோன்றும் (எ-று.)

'உடைமை' என்பது, உடைமைத்தன்மையும் உடைமைப்பொருளும் என இரு வகைப்படும். உடைமைத் தன்மையாவது, தன் செல்வத்தை நினைந்து இன்புறுதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். அஃது,

'ஆங்கவை ஒருபா லாக'[1]

என்னும் மெய்ப்பாட்டியற்சூத்திரத்து 'உடைமை இன்புறல்' என்பதனுன் உணர்க. உடைமைப்பொருளாவது, ஒன்றற்கு ஒன்றை உரிமை செய்து நிற்பது. அஃது, 'இப்பொருளினுடையது இப்பொருள்,' என்றும், 'இப் பொருள் இப்பொருளினுடையதாயிருந்தது,' என்றும்,

1. மெய்ப்பாட்டியல், சூ. 12.

'இப்பொருளை உடையதாயிருந்தது இப்பொருள்,' என்றும் மூன்று வகைப்படும். அவை முறையே 'சாத்தனது ஆடை' என ஆறன் உருபாயும், 'ஆடை சாத்தனது,' எனவும், 'குழையன், கச்சினன்' எனவும் வினைக்குறிப்பாயும் நிற்கும். உருபு உணர்த்தும்வழி ஆடை முதலியன பின் நிற்குமாறும், குறிப்பு உணர்த்தும்வழி ஆடை முதலியன முன் நிற்குமாறும் உணர்க. 'குழையன்' என்புழி, மேல் வந்து முடிக்கும் வினைமுதற்பெயரைத் தோற்றுவித்து நிற்கும் '**அன்**' என்னும் பால் காட்டும் ஈறு நின்று உடைமைப்பொருளைத் தனக்கு உரிமை செய்யும் உடைமையை விரித்து நிற்கும் என்று உணர்க.

இனி, 'இல்லத்தன், புறத்தன்' எனவும், 'பொன்னன்னன், புலி போல்வான்' எனவும், 'கரியன், செய்யன்' எனவும் வரும். 'கரியன்' என்பது, 'இவ்வண்ணமாய் இருப்பன்,' என்னும் பொருள் உணர்த்தி முதனிலையாய் நிற்றலின், பண்பாம். 'கருமையன்' என்பது, பண்புப்பெயர் உடைமைப்பொருளாய் நின்று 'கருமையை உடையன்' என உருபு ஏற்று நிற்றலின், உடைமைப்பொருளாம். 'இவ்வாறன் உடைமைப்பொருட்கு இரண்டாவது விரியுமாறு என்னை?' எனின், 'வனைந்தான்' என்னும் தெரிநிலை முற்றுச்சொல் 'செய்தான்' என்னும் காரியத்தினை நிகழ்த்தும் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கி வினைமுதலோடு அமைந்து மாறி நின்று அவாய்நிலை தோன்றிய காலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழினையும் விரித்து நிற்குமாறுபோல, 'உடையன்' என்னும் வினைக்குறிப்பு முற்றுச் சொல்லும் 'உடையனாய் இருந்தான்' என விரிந்துழி உணரப்படும் காரியத்தினை நிகழ்த்தும் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கி வினைமுதலோடு அமைந்து மாறி நின்று அவாய்நிலை தோன்றிய காலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழினையும் விரித்து நிற்கும் ஆதலான், 'உடையன்'

என்பதனுள் அடங்கி நின்ற செயப்படுபொருள் 'குழையை' என உருபை விரித்தல் அதற்கு இயல்பு என்று உணர்க. இத்தெரிநிலையும் குறிப்பும் இங்ஙனம் உருபை விரித்து நிற்றலின் அன்றே ஆசிரியர்,

'ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலிற் றோன்றும் அதுவே.'[1]

என்றது?

தெரிநிலை வினைத் தொழிற்பெயர் காலம் தோன்றி நின்றாற்போலக் 'கச்சினன், இல்லத்தான்' என்றாற் போலும் குறிப்புப்பெயரும் காலம் தோன்றி நிற்கும் என்று உணர்க.

'தன்னினம் முடித்தல்' என்பதனால், 'ஐயாட்டையான், துணங்கையன்' எனச் சிறுபான்மை காலமும் வினை செய் இடமும் பற்றி வருவனவும் கொள்க.

''ஒப்பினானும்' என்பதற்கு உதாரணமாகிய 'பொன்னன்னான்' என்பது, ஒப்புமைக் குணப் பண்பு ஆதலின், வினைக்குறிப்பிற்கும் குணப்பண்பிற்கும் உரியவாக மேற்கூறுகின்ற 'வன்மை' முதலியவற்றோடு வைக்க,' எனின், இக்குணம் உவமைக்கும் உவமிக்கும் பொருட்கும் ஒப்ப நிற்றலின் ஈண்டு வைத்தார், அவற்றின் வேறு என்று கருதி.

216] இதுவும் அது. [கள

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மை
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும் [யின்
என்ன கிளவியும் குறிப்பே காலம்.

இதுவும் அது.

(இ-ள்.) அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின் - அன்மை இன்மை உண்மை வன்மை என்னும் பொருள்

1. வேற்றுமையியல், சூ. 10.

பற்றி வருவனவும், அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும் என்ன கிளவியும் - அவை போல்வன பிறவுமாய்க் குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும், காலம் குறிப்பு - காலம் குறிப்பான் உணரப்படும் சொல்லாம் (எ-று.)

பண்பாவது, ஒரு பொருள் தோன்றும் காலத்து உடன் தோன்றி அது கெடுந்துணேயும் நிற்பது.

குறிப்பாவது, பொருட்குப் பின் தோன்றிச் சிறிது பொழுது நிகழ்வது.

அன்மையாவது, 'எப்பொருளும் அல்லன் இறைவன்,' என்றால் பண்பை உணர்த்தியும், 'அவைதாம் இவன் அல்லன்,' என்றால் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இதற்கு உடம்பாடு 'ஆவன்' என்பதாம்.

இனி, உண்மைக்கு இன்மை மறை என்று உணர்க. உண்மைதான் மூவகைய: அவை, 'ஆ உண்டு,' என உண்மையை உணர்த்தியும்,

'எவ்வுயிர்க் கண்ணும் இறைவன் உளன்.'

எனப் பண்பை உணர்த்தியும்,

'மாற்றருங்* துப்பின் மாற்றோர் பாசறை உளன்.'[1]

எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும்.

இன்மையாவது,

'போய்யர் நெஞ்சில் புனிதன் இலன்.'

எனப் பண்பை உணர்த்தியும்,

'மாற்றோர் பாசறை இலன்.'

எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இவ்வின்மை தான், 'குழை இலன்; கச்சு இலன்,' என உடைமைக்கு மறையாயும் நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்கால் 'குழையை உடையன் அல்லன்,' என அன்மை வருமாறும் உணர்க.

'வன்மை' என்றது, வலியும் ஒன்றனை வல்லுதலுமாம். அது 'மெய் வலியன்' எனப் பண்பை உணர்த்தி

பி-ம்: * ஆற்றருங்

1. புறம். 309 : 5, 6.

யும், 'சொல் வல்லன்' எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். இதற்கு மறை, 'வல்லன் அல்லன்,' என்பதாம். 'அல்லள், அல்லர், இல்லள், இல்லர், உளள், உளர், வல்லள், வல்லர்' என ஒட்டுக. இவ்வன்மை முதலிய நான்கினது பண்பையும் குறிப்பையு மீண்டும் கொள்க.

'அன்ன பிறவும்' என்றதனால், 'நல்லன், நல்லள், நல்லர், தீயன், தீயள், தீயர், உடையன், உடையள், உடையர்' என்னும் தொடக்கத்தனவும் கொள்க.

இவ்விரண்டு சூத்திரத்தால் கூறியவற்றை 'அம் ஆம்' என்பன முதலியவற்றுள் ஏற்பனவற்றோடு படுத்து ஒட்டிக்கொள்ளுமாறு மேல் கூறுப.

217] உயர்திணைக் குறிப்பு வினை முற்றின் ஈறு [கஅ

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இது, முற்கூறிய வினைக்குறிப்பிற்கு ஈறு ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த-பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த, அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம் காலக் கிளவி - அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய காலம் குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொற்கள், உயர்திணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இல - உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இன்றித் தமக்கு ஏற்பனவற்றைக் கொள்ளும் (எ-று.)

அவை, 'அம், ஆம், எம், ஏம், என், ஏன்' என்னும் தன்மை ஈறு ஆறும், 'அன், ஆன், அள், ஆள், அர், ஆர்' என்னும் படர்க்கை ஈறு ஆறுமாம்.

(உ-ம்.) கரியம், கரியாம்.
கரியெம், கரியேம்.
கரியென், கரியேன்.

எனவும்,

கரியன், கரியான்.
கரியள், கரியாள்.
கரியர், கரியார்.

எனவும் வரும்.

'உடையம், நிலத்தம், பொன்னன்னம், அல்லம்' என ஒழிந்தவற்றோடும் ஒட்டுக.

218] அஃறிணைப் பன்மைத் தெரிநிலை வினை முற்று [ககூ

அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

இது, முறையானே அஃறிணைத் தெரிநிலை வினை கூறுகின்றது.

(இ-ள்.) அ ஆ வ என வரூஉம் இறுதி அப்பால் மூன்றே - அகரமும் ஆகாரமும் வகர உயிர்மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்று சொல்லும், பலவற்றுப் படர்க்கை - அஃறிணைப் பன்மைப் படர்க்கை வினையாம் (எ-று.)

அகரம் இறந்த காலம் பற்றி வருங்கால் 'க, ட, த, ற' என்னும் அந்நான்கின்முன் 'அன்' பெற்றும் பெறாதும், ஏனை எழுத்தின்முன் ஙகார ழகாரம் ஒழித்து 'இன்' பெற்றும், யகரத்தின்முன் சிறுபான்மை இன்னேயன்றி 'அன்' பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) தொக்கன, தொக்க, தொக்கில.
உண்டன, உண்ட, உண்டில.
வந்தன, வந்த, வந்தில.
சென்றன, சென்ற, சென்றில.

எனவும்,

அஞ்சின, தப்பின.

எனவும்,

உரிஞின, நண்ணின, பொருநின, செருமின, துன்னின.

எனவும்,

போயின, சேரின, சொல்லின, மேவின, துள்ளின.

எனவும்,

போயன, போய.

எனவும் வரும்.

இனி, அகரம் நிகழ் காலம் பற்றி வருங்கால் 'நில், நின்று' என்பனவற்றோடு 'அன்' பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) உண்ணாநின்றன, உண்ணாநின்ற, உண்ணாநின்றில.
உண்கின்றன, உண்கின்ற, உண்கின்றில.

என வரும்.

இனி, அகரம் எதிர் காலம் பற்றி வருங்கால் பகர வகரத்தோடு 'அன்' பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) உண்பன, உண்ப, உண்ணல.
வருவன, வருவ.

என வரும். 'உரிஞுவன, உரிஞுவ' என உகரம் பெற்று ஏனை எழுத்தின்கண் வருதலும் ஏற்புழிக் கொள்க.

இனி, ஆகாரம் கால எழுத்துப் பெறாது எதிர்காலத்துப் பயின்று மறையாய் வரும்.

(உ-ம்.) உண்ணா, தின்னா.

என வரும்.

இனி, வகரம் எதிர்காலத்திற்கு உரித்தாய்க் குகரம் பெற்றும் பெறாதும், ஏற்றவழி உகரம் பெற்றும் வரும்.

(உ-ம்.) உண்குவ, தின்குவ, உண்ணல.

எனவும்,

ஓடுவ, தாவுவ.

எனவும்,

உரிஞுவ, செருமுவ.

எனவும் வரும்.

உண்டனவல்ல, உண்டனவில்லே.

எனப் பிற வாய்பாட்டு மறையும் அறிக.

219] அஃறிணே ஒருமைத் தெரிநிலே விணே முற்று [உ०

ஒன்றன் படர்க்கை தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி ஆகும்.

இஃது, ஒருமை விணே கூறுகின்றது.

(இ-ள்.) ஒன்றன் படர்க்கை - ஒன்றனே உணர்த்தும் படர்க்கை விணேயாவது, தறட ஊர்ந்த குன்றியலுகரத்து இறுதி ஆகும் - 'த, ற, ட' என்னும் ஒற்றுக்களே ஊர்ந்து நின்ற குன்றியலுகரத்திணே ஈருக உடைய சொல்லாம் (எ-று.)

தகர உகரம் இறந்த காலத்து வருங்கால் 'க, ட, த, ற'க் கள் அகரம் பெற்றும், ஏனே எழுத்தின்முன் இகரமும் யகர உயிர்மெய்யும் பெற்றும், யகர உயிர்மெய்யே பெற்றும் வரும்.

(உ-ம்.) புக்கது, புக்கிலது.
உண்டது, உண்டிலது.
வந்தது, வந்திலது.
சேன்றது, சென்றிலது.

எனவும்,

எஞ்சியது, தப்பியது.

எனவும்,

உரிஞியது, நண்ணியது, பொருநியது, செருமியது, துன்னியது.

எனவும்,

போயது, கூரியது, சொல்லியது, மேவியது, துள்ளியது.

எனவும் வரும்.

இனி, 'நில், கின்று' என்பனவற்றேடு நிகழ்காலத்தின் கண் அகரம் பெற்று வரும்.

(உ-ம்.) நடவாநின்றது, நடவாநின்றிலது.
நடக்கின்றது, நடக்கின்றிலது.
உண்ணாநின்றது, உண்ணாநின்றிலது.
உண்கின்றது, உண்கின்றிலது.

என வரும்.

இனி, எதிர் காலத்தின்கண் உயிர்மெய்யான பகர வகரம் பெற்று, 'உண்பது, செல்வது' என வரும்.

றகர உகரம், 'க, ட, த, ற' என்பனவற்றின்முன் அன்னும் இன்னும் பெற்றும், ஏனை எழுத்தின்முன் 'இன்' பெற்றும், அவ்வின்னின் னகரம் திரிந்தும் இறந்த காலம் பற்றி வரும்.

(உ-ம்.) புக்கன்று, புக்கின்று.
உண்டன்று, உண்டின்று.
வந்தன்று, வந்தின்று,
சென்றன்று, சென்றின்று.

என வரும்.

'கூயின்று, கூயிற்று, போயின்று, போயிற்று' என ஏனை எழுத்தோடும் ஒட்டிக்கொள்க.

'வந்தின்று' என்பது இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை வினையாதல்,

வந்தில, வந்திலன், வந்திலள், வந்திலர்.

என்னும் ஏனைப்பாற்சொல்லான் அறிக.

இந்த றகர உகரம்,

'தாலி களைந்தன்று மிலனே.'[1]

எனவும்,

'வியந்தன்று மிழிந்தன்று மிலனே.'[2]

எனவும் உயர்திணைக்கண்ணும் வந்ததால் எனின், அவை 'களைந்தான், வியந்தான், இழிந்தான்' என்பனவற்றிற்கு மறையாய்க் 'களைந்திலன், வியந்திலன், இழிந்திலன்' என நிற்கின்றவை 'களைந்தன்றுமிலன், வியந்தன்றுமிலன்,

1. புறம். 77 : 7. 2. புறம். 77 : 10.

இழிந்தன்றுமிலன்' என முற்று வினைத் திரிசொல்லாய் நின்றன.

இனி, டகர உகரம் மூன்று காலத்திற்கும் உரிய வினைக்குறிப்பாய்க் 'குண்டு கட்டு, குறுந்தாட்டு' என வரும்.

மேல் குறிப்பினைத் தெரிநிலை வினையோடு மாட்டெறியும் ஆதலின், இத்தெரிநிலை வினையுள் டகர உகர ஈறு இல்லது கண்டு ஆண்டு மாட்டேறு ஏலாது என ஈண்டுக் கூறினர் என உணர்க.

கிளவியாக்கத்துத் திணையும் பாலும் அறிவிப்பான் இவ்வீறுகளை விதந்தோதினர், ஈண்டு இவை இன்ன இடம் பற்றி உணர்த்தும் என்றார்.

220] அஃறிணை வினை முற்றின் தொகை [உக

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே.

இது, விரிந்தது தொகுத்துத் திணைக்கு உரிமை கூறுகின்றது.

(இ-ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த-பன்மையும் ஒருமையுமாகிய பால் அறிய வந்த, அம்மூவிரண்டும் அஃறிணையவ்வே - அவ் ஆறு ஈற்றுச் சொல்லும் அஃறிணை உடையனவாம் (எ-று.)

221] 'எவன்?' என்னும் குறிப்பு முற்று அஃறிணை இரு பாற்கும் உரித்தாதல் [உஉ

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவன்என் வினவே.

இஃது, அஃறிணை இரு பாற்கும் உரியதோர் வினைக் குறிப்புக் கூறுகின்றது.

(இ-ள்.) எவன் என் வினா - 'எவன்?' என்னும் வினாச் சொல், அத்திணை மருங்கின் இரு பாற்கிளவிக்கும் ஒக்கும்

என்ப - அஃறிணையிடத்து ஒருமை பன்மையாகிய இரு பாற் பொருண்மைக்கும் மிகுதி குறைவு இன்றி ஒக்கும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) அஃது எவன் ?
அவை எவன் ?

என வரும்.

னகர ஈறாய் இரு பாற்கும் பொதுவாய் வருதலின், வேறே கூறினர். 'நமக்கு இவன் எவனும் ?' என்பது, முறை பற்றி நிற்றலின், அஃறிணைக்கண் வந்ததாம்.

படுத்தல் ஓசையால் 'எவன்?' என்பது பெயருமாம்.*

222] அஃறிணைக் குறிப்பு வினை முற்று [உ௬

இன்றில உடைய என்னும் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.

இஃது, அஃறிணை வினைக்குறிப்புக் கூறுகின்றது.

(இ-ள்.) இன்று இல உடைய என்னும் கிளவியும் - 'இன்று, இல, உடைய' என்னும் சொற்களும், அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும் - 'அன்று, உடைத்து, அல்ல' என்னும் சொற்களும், பண்பு கொள் கிளவியும் - நிறப் பண்பைத் தனக்கு அடியாகக் கொண்ட சொல்லும், உள என் கிளவியும் - 'உள' என்னும் சொல்லும், பண்பின் ஆகிய சினைமுதற்கிளவியும் - நிறப்பண்பாலும் குணப்பண்பாலும் உளதாகிய சினையொடு முதலை உணர்த்தும் சொல்லும், ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ - உவமப்பொருள் பற்றி வரும் சொல்லோடே தொக்கு, அப்பால் பத்தும் குறிப்பொடு கொள்ளும் - அக் கூற்றுப் பத்துச் சொல்லும் காலம் குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொல்லாகக் கொள்ளப்படும் (எ-று.)

* இதன்பின் 'அஃது இக்காலத்து 'என் !' என்றும், 'என்னை !' என்றும் மருவிற்று,' என்னும் வாக்கியம் பழைய பதிப்பில் உள்ளது.

(உ-ம்.) இன்று, இல.
உடைத்து, உடைய.
அன்று, அல்ல.
உள.

என்பன ஒருமையும் பன்மையுமாகிய வாசகத்தை உணர்த்தி நின்றன. அல்லன பொருள் உணர்த்தி நின்றன.

'உண்டு' என்னும் சொல் உண்மையை உணர்த்துங் கால் 'இன்று' என்னும் சொல்லும் அதற்கு மறையாய், 'முயற்குக் கோடு இன்று,' எனப் பொய்ம்மையை உணர்த்தியும், அவ் 'உண்டு' என்னும் சொல் பண்பை உணர்த்துங்கால் அவ் 'இன்று' என்னும் சொல்லும் அதற்கு மறையாய், 'இக்குதிரைக்கு எக்காலமும் நடை இன்று,' எனப் பண்பை உணர்த்தியும், அவ் 'உண்டு' என்னும் சொல் குறிப்பை உணர்த்துங்கால் 'இன்று' என்னும் சொல்லும் அதற்கு மறையாய், 'இக்குதிரைக்கு ஈண்டு நடை இன்று,' எனக் குறிப்பை உணர்த்தியும் நிற்கும். 'பொருண்மை சுட்டல்'[1] என்பதனன் உண்மை உணர்த்தலும், 'உண்டென் கிளவி உண்மை செப்பின்'[2] என்பதனன் வினைக்குறிப்பும் பண்பும் உணர்த்தினமை யும் பெற்ரும்.

இனி, 'உள' என்னும் பன்மைக்கு 'இல' என்னும் பன்மை மறையாம். இதற்கு 'உளது' என்னும் ஒருமை ஈறு சிறுபான்மை ஆதலின், கூறிற்றிலர். அதுதான், 'மா உள,' எனப் பண்பு உணர்த்தியும், 'ஈண்டு நெல் உள,' எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும். இனி, 'அறம் செய்வார்க்குத் துன்பங்கள் இல,' எனப் பண்பு உணர்த்தியும், 'ஈண்டு உழுந்து இல,' எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

இனி, 'உடைத்து, உடைய' என்னும் ஒருமையும் பன்மையும் பெரும்பான்மை உறுப்பின் கிழமையும் பிறிதின் கிழமையும் பற்றி வரும்.

---

1. வேற்றுமையியல், சூ. 5. 2. எழுத். குற். புணர். சூ. 25.

இவ்வெருது கோடு உடைத்து.
இவ்வெருதுகள் கோடு உடைய.

எனப் பண்பு உணர்த்தியும், 'குருதி படிந்துண்ட காகம் குக்கிற்புறம் உடைத்து, உடைய,'[1] எனக் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

'இன்று, இல' என்பன, இவ்வுடைமைக்கு மறுதலையாய்க் 'கோடு இன்று; கோடு இல,' என நிற்கும். இவற்றிற்குப் பொருள் உரைக்குங்கால் 'கோடு உடைத்து அன்று; கோடு உடைய அல்ல,' என 'அன்று, அல்ல' என்னும் வாசகம் வருமாறும் உணர்க.

இனி, 'அன்று, அல்ல' என்பன ஒருமையும் பன்மையும் உணர்த்தும். 'உழுந்து அன்று பயறு; உழுந்து அல்ல பயறு,' எனப் பண்பு உணர்த்தியும், 'வேல் அன்று வென்றி தருவது'[2] எனவும்,'படை அல்ல வென்றி தருவன,' எனவும் குறிப்பு உணர்த்தியும் நிற்கும்.

'ஒன்றென முடித்த'லான், 'நன்று, தீது; நல்ல, தீய' என்பனவும் கொள்க.

பண்பு கோள் கிளவி : கரிது, கரிய.
பண்பின் ஆகிய சினை முதற்கிளவி : வெண்கோட்டது, வெண்கோட்டன; நெடுஞ்செவித்து, நெடுஞ்செவிய.
ஒப்போடு வரூஉம் கிளவி : பொன்னன்னது, பொன்னன்ன.

என வரும்.

இனி,

'அறிந்த மாக்கட் டாகுக தில்ல'[3]
'மேல்விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே.'[4]
மேற்று, வைகற்று.

---

1. களவழி, 5.
2. குறள், 546.
3. அகம். 15 : 8.
4. கலி. 40 : 16.

'அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே.'[1]

என்பன பிறிதின் கிழமையாகிய உடைமைப்பொருள் பட நின்றன.

'வடாஅது, தெனுஅது'[2]

என்பன ஏழனுருபின் பொருள்பட வந்தன.

மூவாட்டையது, செலவிற்று.

என்பன காலமும் தொழிலும் பற்றி வந்தன. இவை எல்லாம் உரையிற்கோடலாம்.

223] அஃறிணைக் குறிப்பு வினை முற்றின் ஈறு [உச

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இஃது, அவ்வினைக்குறிப்பிற்கு ஈறு ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த - பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த, அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம் காலக் கிளவி - அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய காலம் குறித்துக்கோடலோடு வரும் வினைச்சொற்கள், அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே - அஃறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இல (எ-று.)

அகரமும் தகர றகர உகரமும் பெரும்பான்மை அவ்வீறு பற்றிப் பாலும் இடமும் உணர்த்துதல் முற்காட்டியவற்றுள் காண்க.

இனி, ஆகாரம் 'இம்மணி நல்ல,' என்னும் உடம்பாட்டுக் குறிப்பிற்கு 'இம்மணி பொல்லா,' என வரும்.

---

1. புறம். 173 : 12. 2. புறம். 6 : 1, 2.

இனி, வகரம்,

'கதவவாற் றக்கதோ காழ்கொண்ட இளமுலை?'*[1]

என்புழிக் 'கதத்தினையுடைய' என வரும்.

இனித் தெரிநிலையுடன் கூடிய டகர உகரம் 'பூணை உடைத்து,' என்னும் பொருண்மைக்கண் 'பூட்டு' எனவும், 'இடத்து' என்னும் பொருண்மைக்கண்,

'வகைதெரிவான் கட்டே உலகு.'[2]

எனவும், 'எந்நாளது?' என்னும் பொருண்மைக்கண்,

'எந்நாட் டாகுநும் போரே?'

எனவும், 'விளைவினை உடைத்து,' என்னும் பொருண்மைக்கண்,

'வேலி, ஆயிரம் விளையுட் டாக!'[3]

எனவும், 'குழிவினையுடைய கண்ணை உடைத்து,' என்னும் பொருண்மைக்கண்,

'குண்டு கட்டு.'

எனவும் 'பொருள், இடம், காலம், தொழில், உறுப்பு' என்னும் ஐவகைப்பெயரும் அடியாக வரும்.

ஓட வற்று; ஓட வல்ல.
ஓட வல்லாது; ஓட வல்லா.

என்பனவும் கொள்க.

224] விரவு வினையின் பெயரும் முறையும் தோகையும் [உரு

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉம் செய்திய ஆகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய.

பி-ம்: * வனமுலை

1. கலி. 57 : 19. 2. குறள், 27. 3. பொருந. 246-47.

இது, நிறுத்த முறையானே விரவு வினை உணர்த்து கின்றவற்றின் பெயரும் முறையும் தொகையும் கூறு கின்றது.

(இ-ள்.) முன்னிலை - எதிர்முகமாக நின்ற பொருளினது தொழில் உணர்த்தும் முற்றுச் சொல்லும், வியங்கோள் - படர்க்கைப் பொருள்மேல் ஏவற்பொருண்மையைக் கொண்டு வரும் முற்றுச்சொல்லும், வினை எஞ்சு கிளவி - முடிக்கும் வினையை ஒழிபாக உடைய வினைச்சொல்லும், இன்மைசெப்பல்-'இன்மை' என்னும் பண்பினை உணர்த்தும் 'இல்லை' என்னும் வினைக் குறிப்பு முற்றுச்சொல்லும், வேறு என் கிளவி - 'வேறு' என்னும் வேறுபாடுதன்னை உணர்த்தி நிற்கும் வினைக்குறிப்பு முற்றுச்சொல்லும், செய்ம்மன - 'மன' ஈற்று எச்சமாய் எதிர் காலம் உணர்த்தும் 'செய்ம்மன' என்னும் சொல்லும், செய்யும்-முற்றும் எச்சமுமாய் 'உம்' ஈற்றால் நிகழ் காலம் உணர்த்தும் 'செய்யும்' என்னும் சொல்லும், செய்த - அகர ஈற்று எச்சமாய் இறந்த காலம் உணர்த்தும் 'செய்த' என்னும் சொல்லும், என்னும் அம்முறை நின்ற ஆயெண் கிளவியும் - என்று சொல்லப்படுகின்ற அவ்வடைவின்கண் நின்ற அவ்வெட்டுச்சொல்லும், பிரிவு வேறுபடூஉம் செய்திய ஆகி - பொதுமையிற்பிரிந்து ஒருகால் உயர்திணையையும் ஒருகால் அஃறிணையையும் உணர்த்தி வேறுபடும் தொழிலை உடையவாய், இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய - இரு திணையை உணர்த்தும் சொல்லாதற்கும் ஒத்த உரிமையவாம் (எ-று.)

'என் செய்யாநின்றான்?' என்று வினயவழி, 'உண்ணாநின்றான்,' எனச் செப்புதலின், 'செய்' என்னும் வாசகம் எல்லாத் தொழிலினையும் அகப்படுத்தி நிற்றல் பெற்றாம். இரு திணைக்கும் பொதுவாயதோர் பொருள் இன்மையான், அதனால் நிகழும் விரவுத்தொழில் என்பது ஒன்று இன்றால் எனின், அவ்விரவுத்தொழிலைக் கூறுகின்றவன் அதனை நிகழ்த்திய வினைமுதல் உயர் திணை அஃறிணை என்பது உணர்ந்தே கூறும் ஆயினும், பால் காட்டும் ஈறு இன்மை காரணத்தால் கேட்டோர்

உணர்வு இரு திணை வினைமுதல் மேலும் ஒருங்கு சேறலான், அவ்வினைமுதற் பொதுமையால் நிகழும் விரவுத் தொழிலும் உளவாயின.

225] முன்னிலை ஒருமை வினை முற்று [உசூ

அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இஐ ஆய்என வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும்* ஒன்றற்கும்.

இது, முறையானே முன்னிலை ஒருமை வினை கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் முன்னிலைக் கிளவி - அவ்வெட்டனுள் முன்னிலைச்சொல் ஆமாறு சொல்லுவல், இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும் - 'இ, ஐ, ஆய்' என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும், ஒருவர்க்கும் ஒன்றற்கும் ஒப்பத் தோன்றும்- உயர்திணை ஆண் பாலும் பெண் பாலுமாகிய ஒருமைப்பாற்கும் அஃறிணை ஒருமைப்பாற்கும் மிகுதி குறைவு இன்றி ஒப்பத் தோன்றும் (எ-று.)

இகரம், 'ட, த, ற' ஊர்ந்து எதிர் காலம் பற்றி வரும்.

(உ-ம்.) உண்டி, உரைத்தி, தின்றி.

இவற்றை 'உண்பை, உரைப்பை, தின்பை' என விரிக்க.

இனி,

உரைக்கிற்றி.
'நன்றுமன் என்னிது நாடாய் கூறி.'

என நிகழ்வு பற்றியும் வரும்.

இவைதாம் எடுத்தல் ஓசையாற் கூறும்வழி,

உண்பாய், உரைப்பாய், தின்பாய்.

என ஏவற்பொருண்மையும் உணர்த்தும்.

பி-ம்: * ஒருவற்கும்

இனி,

'ஐய! சிறிதென்னை ஊக்கி.'[1]

எனவும்,

'ஈதன்மாட் டொத்தி பெரும!'[2]

எனவும் ககரமும் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும். இதற்குப் 'பிரிந்துறை சூழாதி,'[3] என்பது மறை.

இனி, ஐகாரம் 'அம்' ஈற்றுக்கு உரிய எழுத்துப் பெற்றும், 'ஆய்' ஈறு 'ஆம்' ஈற்றுக்கு உரிய எழுத்துப் பெற்றும், மூன்று காலத்தும் வரும்.

(உ-ம்.) உண்டனை, உண்ணாநின்றனை, உண்பை, உண்குவை, கரியை.

எனவும்,

உண்டாய், உண்ணாநின்றாய், உண்பாய், கரியாய்.

எனவும் வரும்.

'உரிஞினை, உரிஞினாய்' என ஏனை எழுத்தோடும் ஒட்டுக.

'உரை' என்றால், ஏவல் கண்ணுமாறும் உணர்க.

'உண்ணாநிற்றி' என்பது, எதிர் காலத்துப் பிறந்த நிகழ் காலம்.

இனி,

உண்டிலை, உண்ணாநின்றிலை, உண்ணலை.

எனவும்,

உண்டிலாய், உண்ணாநின்றிலாய், உண்ணலாய்.

எனவும் மறை வரும்.

---

1. கலி. 37 : 15. 2. கலி. 86 : 22. 3. கலி. 18 : 2.

226] முன்னிலைப்பன்மை வினை முற்று [உஎ

இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்.

இது, முன்னிலைப் பன்மை கூறுகின்றது.

(இ-ள்.) இர் ஈர் மின் என வரூஉம் மூன்றும் - 'இர், ஈர், மின்' என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும், பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும் - உயர்திணைக்கண் பல்லோரிடத்தினும் அஃறிணைக்கண் பலவற்றிடத்தினும், சொல் ஓர் அனைய என்மனார் புலவர் - சொல்லுதலை ஒரு தன்மையாக உடைய என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

'இர்' ஈறு 'அர்' ஈற்றுக்கு உரிய எழுத்தும், 'ஈர்' ஈறு 'ஆர்' ஈற்றுக்கு உரிய எழுத்தும் பெற்று மூன்று காலத்தும் வரும்.

(உ-ம்.) உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்பிர், உண்குவிர். எனவும்,

உண்டீர், உண்ணாநின்றீர், உண்பீர், உண்குவீர்.

எனவும் வரும்.

'மின்' பிற எழுத்துப் பெறாது, ஏற்றுழி உகரம் பெற்று, எதிர் காலத்து வரும்.

(உ-ம்.) உண்மின்களே, அடுமின் சோறே, உரிஞுமின்.

என வரும்.

இதற்கு, 'உண்பீர், அடுவீர், உரிஞுவீர்' என விரிக்க.

'கானம் கடத்திர் எனக் கேட்பின்'[1]

என்புழிக் 'கடவாநின்றீர்' என நிகழ் காலத்துத் தகரம் வந்தது. இஃது எதிர் காலத்தும் வரும்.

இனி, முன்னிலை வினைக்குறிப்பு, உயர்திணை வினைக் குறிப்பிற்கு ஓதிய பொருள் பற்றி ஐயும் ஆயும் இருவும் ஈரும் என நான்கு ஈற்றவாய்,

---

1. கலி. 7 : 3.

கழலினை; நாட்டை; பொன்னன்னை, கரியை.
கழலினுய், நாட்டாய், பொன்னன்னுய், கரியாய்.
கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர், கரியிர்.
கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர்.

என வரும்.

'போறி' என்பது, 'போன்றனன், போன்ருன்' என்பது போல வந்த தெரிநிலை வினை.

இனி,

உண்டிலிர், உண்ணுநின்றிலிர், உண்ணலிர்.
உண்டிலீர், உண்ணுநின்றிலீர், உண்ணலீர், உண்ணன்மின்.

என மறை வரும்.

மேல் எச்ச இயலுள் 'முன்னிலை முன்னர்'[1] என்னும் சூத்திரத்தால் பெற்ற முன்னிலைகளுள் மொழிக்கு ஈரும் எனப்பட்ட 'நட, வா, விரி, ஈ, கொடு, கூ, மே, கை, நொ, போ, வெள' என்னும் உயிரீறு பதினென்றும், 'உரிஞ், மண், பொருந், திரும், தின், தேய், பார், செல், தெவ்*, தாழ், கொள்' என்னும் புள்ளி ஈறு பதினென்றும், 'போக்கு, பாய்ச்சு, ஊட்டு, நடத்து, எழுப்பு, தீற்று, வெஃகு' என எழுவகையவாகிய குற்றியலுகர ஈறு ஒன்றுமாக எழுத்து வகை இருபத்து மூன்றும் எடுத்தல் ஓசையான் முன்னிலை ஏவல் ஒருமை முற்ருய் நிற்கும். இவைதாமே படுத்தல் ஓசையால் அச்செய்கைமேல் பெயர்த்தன்மை பட முதல் நிலையாயும் நிற்கும். அங்ஙனம் முதல் நிலையாய் நிற்குங்கால் 'நடந்தான், வந்தான், விரிந்தான், ஈந்தான், கொடுத்தான், கூவினுன், மேவினுன், கைத்தான், நொந்தான், போயினுன், வெளவினுன்' என உயிர் ஈறு பதினென்றும், 'உரிஞினுன், மண்ணினுன், பொருநினுன், திருமினுன், தின்ருன், தேய்த்தான், பார்த்

பி-ம்: * வவ், அவ்   1. எச்சவியல், சூ. 55.

தான், சென்றான், தெவ்வினான், தாழ்ந்தான், கொண்டான்' எனப் புள்ளி ஈறு பதினொன்றும், 'போக்கினான், பாய்ச்சினான், ஊட்டினான், நடத்தினான், எழுப்பினான், தீற்றினான், வெஃகினான்' எனக் குற்றியலுகர ஈறு ஒன்றுமாக முற்றுச்சொல் விரிந்து நின்றவாறு காண்க.

'நடந்து வந்தான், வந்து போனான், விரிந்து கிடந்தான், ஈத்து உவந்தான்,' எனவும், 'நடந்த சாத்தன், வந்த சாத்தன், விரிந்த சாத்தன், ஈத்த சாத்தன்' எனவும், 'உரிஞி வந்தான், பொருநி வந்தான்,' எனவும், 'உரிஞின சாத்தன், பொருநின சாத்தன்' எனவும், வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் இவ்வாறே ஒழிந்த முதல் நிலைகளையும் விரித்துக்கொள்க.

முற்காட்டிய முன்னிலை ஏவல் ஒருமை முற்றுக்கள் ஒருவனை நோக்கி, 'ஒன்றனை ஒரு தொழிலைச் செய்வி,' என்னும் பொருண்மைக்கண் 'நடத்துவி, நடப்பி, வருவி, விரிவி, விரிப்பி, ஈப்பி, கொடுப்பி, கூவுவி, மேவுவி, கைப்பி, நொவ்வுவி, போக்குவி, வெளவுவி, உரிஞுவி, மண்ணுவி, பொருநுவி, திருமுவி, தின்பி, தேய்ப்பி, பார்ப்பி, செலுத்துவி, தெவ்வுவி, தாழ்த்துவி, கொள்ளுவி, வெஃகுவி' என எதிர்காலத்திற்கு உரிய வகரமும் பகரமும் முன்னிலைக்கு உரிய இகரம் ஏறி இடைநிலைக்கு உரிய எழுத்துக்களும் பெற்று எடுத்தல் ஓசையான் நிற்கும் என்று உணர்க.

இன்னும் அவைதாம் படர்க்கையிடத்துப் பால் காட்டும் முற்றாய், 'நடத்துவித்தான், நடப்பித்தான், வருவித்தான், விரிவித்தான், விரிப்பித்தான், ஈப்பித்தான், கொடுப்பித்தான், கூவுவித்தான், மேவுவித்தான், கைப்பித்தான், நொவ்வுவித்தான், போக்குவித்தான், வெளவுவித்தான், உரிஞுவித்தான், மண்ணுவித்தான், பொருநுவித்தான், திருமுவித்தான், தின்பித்தான், தேய்ப்பித்தான், பார்ப்பித்தான், செலுத்துவித்தான், தெவ்வுவித்

தான், தாழ்த்துவித்தான், கொள்வித்தான், வெஃகுவித்தான்,' என வருங்கால் இடைநிலையாகிய எழுத்துக்களும் பெற்று முன்னர் எடுத்தல் ஓசையாய் இடைநின்ற ஈருகிய இகரம் படுத்தல் ஓசைப்பட்டு இடைநிலையாய் நிற்கும் என்று உணர்க.

இனி, 'நடத்துவிப்பி, வருவிப்பி, நடப்பிப்பி' எனவும் வரும் என்று கூறி, இவற்றை **இருமடி ஏவல்** என்பாரும் உளர். இவற்றை இருகால் ஏவுதல் **கூறியது கூறல்** ஆம் ஆதலின், இவை இழி வழக்கு என மறுக்க.

இனி, 'உண்ணும், தின்னும்' எனப் பன்மைக்கண் வரும் 'உம்' ஈறும், 'உண்ணல்' என வரும் 'அல்' ஈற்று மறையும், 'மரூல்' என வரும் 'ஆல்' ஈறும், 'அகையேல் அமர்தோழி அழேல்,'[1] என வரும் 'ஏல்' ஈறும், 'உண்டு காண், சொல்லிக்காண்' என வரும் 'காண்' ஈறுமாகிய சொல் வகை ஐந்தும் முன்னிற்சூத்திரத்து எதிர் காலம் ஒன்றினும் வரும் இகரம் முற்கூறிய முறையன்றிக் கூற்றினுற்கொள்க.

முற்கூறிய எழுத்து வகை இருபத்து மூன்றும் சொல் வகை ஐந்துமாகிய இருபத்தெட்டும் முன்னிலை ஏவல் ஒருமை முற்று என்று உணர்க. 'நடவாய், வாராய், உண்ணுய், தின்னுய்' என்னும் சொற்கள், 'ஆய்' ஈறு கெட்டு, 'நட, வா, உண், தின்' என நிற்கும் என்று **சேனுவரையர்** கூறினுரால் எனின், அது பொருந்தாமை எச்ச இயலுள் 'செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்'[2] என்னும் சூத்திரத்துள் கூறுதும்.

227] முன்னிலை ஒழிந்த ஏனை வினைகள் [உஅ

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே.

---

1. சீவக. 1524. 2. எச்சவியல், சூ. 54.

இது, முன்னிலை ஒழிந்தவற்றின் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) எஞ்சிய கிளவி - முன்னிலை வினை ஒழித்து ஒழிந்த ஏழு வினைச்சொல்லும், இடத்தொடு சிவணி ஐம்பாற்கும் உரிய - மூன்று இடத்தோடும் பொருந்தி ஐந்து பாற்கும் உரியவாம், தோன்றலாறே - அவை தத்தம் பொருட்கண் தோன்றும் இடத்து (எ-று.)

மேல் விலக்குவன ஒழிந்தன ஈண்டுக் காட்டுதும்:

(உ-ம்.) அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க.

எனவும்,

உழுது வந்தேன், உழுது வந்தேம்.
உழுது வந்தாய், உழுது வந்தீர்.
உண்டு வந்தான், உண்டு வந்தாள், உண்டு வந்தார், உழுது வந்தது, உழுது வந்தன.

எனவும்,

யான் இல்லை, யானும் நீயும் இல்லை, யானும் அவனும் இல்லை, யானும் நீயும் அவனும் இல்லை.
நாம் இல்லை, யாம் இல்லை.
நீ இல்லை, நீயிர் இல்லை.
அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை.

எனவும்,

யான் வேறு, யானும் நீயும் வேறு, யானும் அவனும் வேறு, யானும் நீயும் அவனும் வேறு.
நாம் வேறு, யாம் வேறு.
நீ வேறு, நீயிர் வேறு.
அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு.

எனவும்,

யான் உண்மன, யானும் நீயும் உண்மன, யானும் அவனும் உண்மன, யானும் நீயும் அவனும் உண்மன

நாம் உண்மன, யாம் உண்மன

நீ உண்மன, நீயிர் உண்மன

அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன, அது உண்மன, அவை உண்மன

எனவும்,

யான் உண்ணும் ஊண், யானும் நீயும் உண்ணும் ஊண், யானும் அவனும் உண்ணும் ஊண், யானும் நீயும் அவனும் உண்ணும் ஊண்

நாம் உண்ணும் ஊண், யாம் உண்ணும் ஊண்

நீ உண்ணும் ஊண், நீயிர் உண்ணும் ஊண்

அவன் உண்ணும் ஊண், அவள் உண்ணும் ஊண், அவர் உண்ணும் ஊண், அது உண்ணும் ஊண், அவை உண்ணும் ஊண்

எனவும்,

அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்.

எனவும்,

யான் உண்ட ஊண், யானும் நீயும் உண்ட ஊண், யானும் அவனும் உண்ட ஊண், யானும் நீயும் அவனும் உண்ட ஊண்

நாம் உண்ட ஊண், யாம் உண்ட ஊண்

நீ உண்ட ஊண், நீயிர் உண்ட ஊண்

அவன் உண்ட ஊண், அவள் உண்ட ஊண், அவர் உண்ட ஊண், அது உண்ட ஊண், அவை உண்ட ஊண்

எனவும் வரும்.

வியங்கோளும், '**மன**' ஈறும் எதிர் காலம் உணர்த்தும்.

இன்மை செப்பலும், 'வேறு' என்பதும் மூன்று காலமும் உணர்த்தும்.

'உண்மன' என்பது, 'யான் உண்ணும், நீ உண்ணும், அவன் உண்ணும்' என்னும் பொருண்மை உணர்த்தி, எச்ச நீர்மைத்தாய், இறந்த வழக்கிற்றாய் வரும். இச்'செய்யும்' என்னும் வாசகத்துக்கு அக் காலத்து 'மன' என்னும் வாசகத்தாலும் வழங்குதலின், ஆசிரியர் 'மன' என்பதனை ஈண்டு வேறாக ஓதி, எழுத்து ஓத்தினுள்ளும்,

'செய்ம்மன என்னும் தொழிலிறு சொல்லும்'[1]

என்றார்.*

228] வியங்கோள் முற்றுத் தன்மை முன்னிலைகளில் வாராது என்பது [உகூ

அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

இஃது, எய்தியது விலக்கிற்று.

(இ-ள்.) அவற்றுள் - மேல் 'எஞ்சிய கிளவி' என்னப்பட்ட எழனுள், வியங்கோட்கிளவி - ஏவற்பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்தும் சொல், முன்னிலை தன்மை ஆயீரிடத் தொடும் மன்னாதாகும் - முன்னிலையும் தன்மையுமாகிய அவ் விரண்டிடத்துப் பொருளொடும் அஃறிணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறாது; உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலை பெறும் (எ-று.)

எனவே, படர்க்கைப்பொருட்கண் 'இருதிணைச்சொற்கும் ஓரன்ன உரிமைய'[2] ஆம். இதற்கு உதாரணம் முன்னர்க் காட்டினம்.

பி-ம்: * இதன் பின், 'யாம் நாம் என்பதனை இன்மை செப்பல் முதலியவற்றோடும் ஓட்டுக,' என்பது முன் பதிப்பில் உள்ளது.

1. எழுத். உயிர் மயங்கியல், சூ. 8. 2. வினையியல், சூ. 25.

'நோயும் இன்பமும்'[1] என்னும் பொருளியற்சூத்திரத்தில்,

> 'சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
> செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்'

என்றும், 'ஞாயிறு திங்கள்'[2] என்னும் செய்யுளியற் சூத்திரத்து,

> 'சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்.'

என்றும் அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாமையைக் கூறுகின்ற ஆசிரியர், அவற்றிற்கு ஏற்ப ஈண்டும் முன்னிலைக்கண் வரும் அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாது என்பது உணர்த்துதற்கு 'மன்னுதாகும்' என்றார். எனவே, 'அஃறிணைக்கண் வரும் முன்னிலை வியங்கோட்கு ஓரன்ன உரிமை இன்று,' என்றார் ஆயிற்று. தன்மை அஃறிணைக்கு இன்மை கூறல் வேண்டா ஆயினும், உயர்திணைக்கண் சிறுபான்மை வழங்குதல் பற்றி உடன் ஓதினர்.

முற்கூறிய 'நட, வா' முதலிய இருபத்து மூன்று ஈற்று முன்னிலை ஏவல் ஒருமையும் அஃறிணைக்கண் வருங்கால் ஏவல் வினையை உணர்ந்து அவை முற்ற முடியா என்பதனை உணர்த்தும் அதனை ஏவுதல் மரபு அன்று என்று கருதி ஆசிரியர் இங்ஙனம் ஓதினர்.

அவைதாம், கூறுகின்றவர் கருத்தான், ஏவல் கண்ணியே வரும். உயர்ந்தான் இழிந்தானை 'இன்னது செய்க,' என விதித்தல் ஏவல் கண்ணியது. இழிந்தான் உயர்ந்தானை 'இன்னது செய்ய வேண்டும்,' என வேண்டிக்கோடலும் ஏவல் கண்ணிற்று. இனி, உயர்திணைப் பொருளாகிய முன்னிலைக்கண் 'வாழ்க, வாழிய' என வாழ்த்துப் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று.

---

1. பொருளியல், சூ. 2. 2. செய்யுளியல், சூ. 201.

'கடாவுக பாக!நின் கால்வல் நெடுந்தேர்.'

என வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று.

இனி, உயர்திணைத் தன்மைக்கண்,

'யானும் நின்னோ டுடனுறைக.'

என வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று. இது சிறுபான்மை என்பது உணர்த்துதற்கு முன்னிலையை முற்கூறினர்.

இனி, எழுத்து ஓத்தினுள்;

'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்'[1]

என அகர ஈற்றுள் எடுத்து ஓதினமையாற் பொருந்திய மெய்யை ஊர்ந்து அகர ஈறாய் வருதலும், 'உடம்பொடு புணர்த்தல்' என்பதனால்,

'வழாஅல் ஓம்பல்.'[2]

எனவும்,

'இற்றெனக் கிளத்தல்.'[3]

எனவும்,

'ஆக்கமொடு கூறல்.'[4]

எனவும் வந்த 'அல்' ஈறும்,

'மரீஇய தொராஅல்.'[5]

என வரும் 'ஆல்' ஈறுமாய் வருதலும், 'ஒன்றென முடித்தல்' என்பதனான் 'வாழியர்' என 'அர்' ஈறும், மறைக்கண் 'காணன்மார் எமர்'[6] என்னும் 'மார்'* ஈறும்,

'வாழ்தல் வேண்டும்இவண் வரைந்த வைகல்.'[7]

என 'உம்' ஈறும்,

பி-ம்: * ஆர்

1. எழுத். உயிர் மயங்கியல், சூ. 8. 2. கிளவியாக்கம், சூ. 13.
3. கிளவியாக்கம், சூ. 19. 4. கிளவியாக்கம், சூ. 20.
5. எச்சவியல், சூ. 47. 6. நற். 64. 7. புறம். 367 : 9.

'அஞ்சாமை அஞ்சுவ தொன்றின்'

என ஐகார ஈறுமாய் வருதலும் கொள்க.

இன்னும் இதனானே,

'மகனெனல்; மக்கட் பதடி எனல்.'[1]

என உடம்பாடும் மறையுமாய் வருதலும் கொள்க.

இன்னும் இதனானே,

'நாடா கொன்றோ, காடா கொன்றோ.'[2]

என்பனவற்றையும் 'நாடேயாக, காடேயாக' என இதன் பாற்படுத்துக. இவற்றுள் ஏவல் கண்ணாதது இது என உணர்க.

229] 'செய்யும்' என்னும் முற்றுப் பொருந்தாத இடம் [உ௰

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா.

இதுவும் அது.

(இ-ள்.) பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை அவ் வயின் மூன்றும் - பல்லோரது படர்க்கையும் முன்னிலையும் தன்மையுமாகிய அவ்வெஞ்சிய கிளவிக்கண் வரும் மூன்றும், நிகழும் காலத்துச் செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா - நிகழும் காலத்து வரும் 'செய்யும்' என்னும் முற்றுச்சொல்லோடு பொருந்தா (எ-று.)

(உ-ம்.) ஓஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.'[3]
'என்குறை சொல்லல் வேண்டும் ஆர்வல !'
யான் பொருதல் வேண்டும்.

என வருவனவற்றிற்குத் 'தவிர்வாராக' எனவும், 'சொல் வாயாக' எனவும், 'பொருவேனாக' எனவும் பொருள் உரைக்க.

---

1. குறள், 196. 2. புறம், 187 : 1. 3. குறள், 653.

230] வினையெச்சங்களின் வாய்பாடு [நூக

செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

இது, முறையானே வினையெச்சம் உணர்த்துகின்றவற்றுள் சிறந்தன தொகுத்து உணர்த்துகின்றது.

(இ-ள்.) செய்து செய்யூ செய்பு செய்தென செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி - 'செய்து' என்பது முதலாகச் சொல்லப் பட்ட அக்கூற்று ஒன்பது வாய்பாடும் முற்கூறிய வினையெச்சமாம் (எ-று.)

இது, 'தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்.'[1] 'செய்' என்னும் வாய்பாட்டினை உகரமும், ஊகாரமும், புகரமும், எனவும், இயரும், இயவும், இன்னும், அகரமும், குகரமும் என்னும் இறுதி இடைச்சொல்லான் வேறு படுத்தினர். 'செய்து' என்பது இறந்த காலம் பற்றி வருங்கால் குற்றுகரத்தான் ஊரப்பட்ட 'க, ட, த, ற' என்னும் நான்கும், இகர ஈறும், யகர ஈறும் என அறு வகைத்து ஆமேனும், இகர ஈறும் 'செய்து' என்னும் வாசகத்தைத் தந்தே நிற்றலின், பொருண்மையான் ஒன்றாக அடக்கப்பட்டன.

(உ-ம்.) நக்கு, உண்டு, வந்து, சென்று.
எஞ்சி, தப்பி, உரிஞி, ஓடி.
ஆய், போய்

என வரும்.

இவற்றுள் உகரம் இகரமாய்த் திரிந்தது எனின், 'உரிஞி' என்பதனை 'ஞகாரை ஒற்றிய'[2] என்னும் சூத்திரத்தான் 'உரிஞ்' என நிறுத்தி, நிலைமொழித் தொழிலாகிய உகரம் பெறும் என விதித்தலின், 'உரிஞு' என்

1. மரபியல், சூ. 110. 2. எழுத். புள்ளி மயங். சூ. 1.

னும் முற்றுகரம் திரிந்து 'உரிஞி' என நின்றது என்றல் பொருந்தாமை உணர்க.

இனி, 'ஆகு, போகு' எனக் குற்றுகர ஈற்றூன் முதல் நிலை ஆயிற்று எனில், 'ஆகினான், போகினான்' என முற்றும் அதன்கண்ணே தோன்றுதல் வேண்டும். அங்ஙனம் வழங்காமையின் 'ஆ, போ' என்பன முதல் நிலையாய்க் காலம் காட்டும் யகர ஒற்றுப் பெற்று 'ஆயினான், போயினான்' என முற்றும் அதன்கண்ணே தோன்றுதலின், 'ஆகு, போகு' எனக் குற்றுகர ஈற்று முதல் நிலை இன்றாம் என்று உணர்க. இதனானே வினையெச்சம் முற்றாய்த் திரியும் என்பதும் உணர்க. அவை, 'தூயினான், தாயினான், மேயினான், ஏயினான், சினைஇயினான், முனைஇயினான், உரைஇயினான், மரீஇயினான், உடீஇயினான், கடைஇயினான், தழீஇயினான், குழீஇயினான், பராயினான், விராயினான், நிலாயினான், கலாயினான்' என வரும். இவை இங்ஙனம் முற்றாய்த் திரிதலின், பெயர் கொண்டு முடிவன ஆயின. 'ஆய், போய்' என்பன,

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.'[1]

என்பதனால் திரிந்து நிற்கும் என்பது கோடலின், திரிந்து நின்றன. அச்சூத்திரத்து வினையெச்சம் முற்று வினை கொள்ளுமாறும் காட்டுதும். முன்னர்க் காட்டிய உதாரணங்களுள் உகரம் இகரமாய்த் திரியாமையும் இவ்வாறே பிரித்து உணர்ந்துகொள்க.

'விருந்தின்றி உண்ட பகலும்'[2]

எனவும்,

'நாளன்று போகி'[3]

எனவும் வருவன **செய்தென் எச்சக் குறிப்பு.**

'செய்து' என்பதற்கு,

---

1. எச்சவியல், சூ. 61. 2. திரிகடுகம், 44. 3. புறம். 124 : 1.

ஓடாநின்று போயினான்.

எனவும்,

'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு'[1]

எனவும்,

'தலைப்பெயற் கரும்பின்று
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமும்'[2]

எனவும் நிகழ்கால வாய்பாடும் சிறுபான்மை உளது என்று உணர்க.

'நக்கு' என்பது 'நகு' என்னும் முதல் நிலைக்கண் விரிந்த 'நகுதல்' என்னும் வினைப்பெயர் அடியாகச் 'செய்து' என்னும் வினையெச்சம் தோன்றி, 'நகுதலைச் செய்து' என்னும் பொருள் தந்து நின்றது.

இனி, ஊகாரம்,

உண்ணூ வந்தான்.

எனவும்,

'படுமகன் கிடக்கை காணூஉ'[3]

எனவும்,

'நிலம்புடையூ எழுதரும் வலம்படு குஞ்சரம்'[4]

எனவும் பின் வரும் தொழிற்கு இடையின்றி விரைவு உணர்த்தி முன் வரும் தொழில்மேல் இறந்த காலம் பற்றி வரும்.

'உண்ணூ' எனவும்,

'கல்லாக் கழிப்பர்'[5]

எனவும்,

'நிலங்கிளையா நாணிநின்றோள்'[6]

எனவும் ஆகாரம் வினையெச்சமாய் வருதல்,

---

1. பெரும்பாண். 1, 2.
2. கலி. 101 : 1, 2.
3. புறம். 278 : 8.
4. பதிற். 'இலங்குதொடி'.
5. நாலடி. 366.
6. அகம். 16 : 15, 16.

'செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.'[1]

என்பதனால் பெறப்படும்.

இனிப் பகர உகரம்,

'பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர உண்டு'[2]

எனவும்,

'புலராப் பச்சிலை இடையிடுபு தொடுத்த'[3]

எனவும் பெரும்பான்மை இறந்த காலத்து வரும். அப் புகரம் 'நகுபு வந்தான்' என்புழி, 'நகாநின்று வந்தான்' என்று முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிலோடு உடன் நிகழ்ந்து, நிகழ் காலத்தும் வரும். அது,

'வாடுபு வனப்போடி'[4]

என வரும். 'உரிஞுபு' என உகரமும், 'கற்குபு' எனக் குகரமும் ஏற்புழி வரும்.

இனி, 'என' என்பது, 'க, ட, த, ற' ஊர்ந்து, இறந்த காலம் பற்றி முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிற்குத் தன் முதல் நிலைத் தொழில் காரணமாய விரைவுப்பொருள் உணர்த்தும்.

(உ-ம்.) சோலை புக்கென வெப்பு நீங்கிற்று.
உண்டெனப் பசி கெட்டது.
உரைத்தென உணர்ந்தான்.
மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று.

என வரும். 'எஞ்சியென' எனவும், 'உரிஞியென' எனவும் ஏனை எழுத்தோடும் ஒட்டுக.

இனி, 'இயர், இய' என்பன,

உண்ணியர், தின்னியர்.

எனவும்,

---

1. எழுத். உயிர் மயங்கியல், சூ. 20.
2. பொருந. 86-88.
3. புறம். 33 : 12.
4. கலி. 16 : 2.

உண்ணிய, தின்னிய

எனவும் எதிர் காலம் பற்றி வரும்.

போகியர், போகிய

என ஏற்புழிக் குகரமும் பெறும்.

இனி, 'இன்' எதிர் காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வரும்.

(உ-ம்.) மழைபெய்யின் குளம் நிறையும்.
மெய் உணரின் வீடு எளிதாம்.

என வரும்.

நடப்பின், உரைப்பின்

என ஏற்புழிப் பகரமும் பெறும். இது,

'நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே'[1]

என 'உம்' ஈறு ஆதலும்,

'அற்றால் அளவறிந் துண்க.'[2]

என 'ஆல்' ஈறு ஆதலும்,

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.'[3]

என்பதனால் பெறப்படும்.

'அவாவுண்டேல் உண்டாம்.'[4]

என்னும் ஏலும்,

'அவனெள்ளுமேனும் வரும்.'

என்னும் ஏனும் இதன் குறிப்பு.

'ஒன்றானும் தீச்சொல்'[5]

என்புழி, 'ஆயினும்' என்பது 'ஆனும்' எனக் குறைந்து நின்றது.

'நுணங்கிய கேள்வியர் அல்லால்'*[6]

பி-ம்: * அல்லார்

1. கலி. 39 : 35. 2. குறள், 943. 3. எச்சவியல், சூ. 61.
4. குறள், 1075. 5. குறள், 128. 6. குறள், 419.

என்பது, 'அன்றி' என்னும் செய்தெனெச்சக்குறிப்பு உணர்த்துவதோர் வாய்பாடு 'அல்லவாயின்' என்று பொருளாயின், இதன் குறிப்பாம்.

இனி, அகரம் இறந்த காலத்துக்கண்,

மழை பெய்யக் குளம் நிறைந்தது.

எனக் காரணப் பொருளாயும்,

குளம் நிறைய மழை பெய்தது.

எனக் காரியப் பொருளாயும் வரும். இனி, நிகழ் காலத்துக்கண்,

ஞாயிறு பட வந்தான்.

என்பது, 'நிகழாநிற்க வந்தான்,' என்னும் பொருட்டாய் வரும்.

'வாழச் செய்த நல்வினை யுலகம்'

என்பதும் அது.

இனி, எதிர் காலத்துக்கண்,

உண்ண வந்தான்.

என அதற்பொருட்டாய் வரும்.

உரைப்ப, உரைக்க

என ஏற்புழிப் பகரமும் ககரமும் வரும். இனி,

'துன்னிப்
பெரிய ஓதினும் சிறிய உணரா'[1]

என அகரம் வினைக்குறிப்புப்பற்றி வருவனவும்,

'சேவ்வன் தெரிகிற்பான்'

எனவும்,

'புதுவதின் இயன்ற அணியன்'

எனவும்,

'புதுவது புனைந்த வெண்கை யாப்பு'[2]

எனவும்,

1. புறம். 375 : 18, 19. 2. மலைபடு. 28.

'போய்கைபூப் புதிதீன'[1]

எனவும்,

'பெருங்கை யற்றபெண் புலம்பு'

எனவும்,

'சிறுநனி நீதுஞ்சி ஏற்பினும்'[2]

எனவும்,

'ஒல்லைக் கொண்டான்.'

எனவும் அகர ஈறு அன்றிப் பிற ஈறுகளான் முடிக்கும் சொல்லை விசேடித்து வருவனவும்,

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.'[3]

என்பதனுல் பெறப்படும். இது மறைக்கண்,

'கூருமல் குறித்ததன்மேற் செல்லும் கடுங்கூளி'[4]

என 'மல்'* ஈறும்,

'கூருமை நோக்கிக் குறிப்பறிவான்'[5]

என மகர ஐகார ஈறும் வரும்.

இனிக் குகரம்,

உணற்கு வந்தான்.

என எதிர் காலத்து வரும்.

'உண்டான், உண்டவன்' என்னும் தொழிற்பெயர்கள், 'உண்டாற்கு, உண்டவற்கு' என நான்கன் உருபை ஏற்றுழிச் 'செயற்கு' எனும் எச்சப்பொருள் தரும் மயக்கம் இன்மையும், 'உணல்' என்னும் வினைப் பெயர் குகரம் அடுத்துழி 'உண்டலைச் செய்தற்கு' என்னும் பொருள் தந்து எச்சப்பொருட்டாயே நிற்றலின், வினைப்பெயர் நான்கன் உருபு பெற்று நின்றது என்னும் மயக்கம் இதற்கு இன்மையும் உணர்க. 'எற்றுக்கு வந்தான்?' என்பது 'எக்காரியம் செய்தற்கு வந்தான்?' என்னும் பொருட்டாய் இவ்வெச்சக் குறிப்பாய் நிற்கும். 'எவற்றுக்கு?' என்பதும் அது.

பி-ம்: * அல்

1. கலி. 31 : 5. 2. கலி. 12 : 8.

3. எச்சவியல், சூ. 61. 4. கலி. 1 : 3. 5. குறள், 701.

இவ்வினையெச்சங்கட்கு எஞ்சி நிற்கும் வினைகளும் அறுவகைப்படும். அவை, தெரிநிலை முற்றும், குறிப்பு முற்றும், பெயரெச்சமும், பெயரெச்சக் குறிப்பும், வினையெச்சமும், வினையெச்சக் குறிப்பும் ஆம்.

ஓதி வந்தான்.—இது தெரிநிலை முற்று.
ஓதி நல்லன்.—இது குறிப்பு முற்று.
ஓதிப் பெற்ற பொருள்—இது பெயரெச்சம்.
ஓதி நல்ல சாத்தன்—இது பெயரெச்சக் குறிப்பு.
உழுது பயன் கொண்டு—இது வினையெச்சம்.
உழுது அன்றி உண்ணுன்—இது வினையெச்சக் குறிப்பு.

231] இதுவும் அது. [௩உ

பின்முன் கால்கடை வழிஇடத் தென்னும்
அன்ன மரபிற் காலம் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

இதுவும் ஒருசார் வினையெச்சம் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பின் முன் கால் கடை வழி இடத்து என்னும் கிளவியும் - பின்னும் முன்னும் காலும் கடையும் வழியும் இடத்தும் என்னும் ஈற்றவாகிய சொற்களும், அன்ன மரபிற் காலம் கண்ணிய என்ன கிளவியும் - அம்முறைமை போலக் காலத்தைக் குறித்த எல்லாச் சொற்களும், அவற்று இயல்பின - முற்கூறிய ஒன்பதும் போல வினையெச்சத்திற்கு வாய்பாடாம் இயல்பை உடைய (எ-று.)

(உ-ம்.) பின் :

நீயிர் பொய் கூறியபின் மெய் கூறுவார் யார்?
'இளமையும் தருவதோ இறந்த பின்னே ?'[1]

என இறப்பும்,

நீ இவ்வாறு கூறுகின்றபின் உரைப்பது உண்டோ?

என நிகழ்வும் பற்றி வரும்.

---

1. கலி. 15 : 26.

முன் : 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை'[1]

என இறப்புப் பற்றி வரும்.

இவை, 'பின்னர், பின்னை, முன்னர், முன்னை' எனத் திரிந்தும் வரும்.

கால் : 'வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத் தக்கால்'[2]

என இறப்பும்,

'அகன்றவர் திறத்தினி நாடுங்கால்'[3]

என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

கடை : 'தோடர்கூரத் துவ்வாமை வந்தக் கடை'[4]

என இறப்புப் பற்றி வரும்.

வழி : 'விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.'[5]

என இறப்பும்,

'அவள்ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே!'[6]

என நிகழ்வும், 'உரைக்கும்வழி' என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

இடத்து : 'களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து.'[7]

என இறப்பும், 'உரைக்குமிடத்து' என நிகழ்வும் எதிர்வும் பற்றி வரும்.

'அன்ன மரபின்' என்றதனால், 'பான், பாக்கு, வான், வாக்கு' என்பனவும் கொள்க.

(உ-ம்.) 'அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்.'[8]

'திருவிற்றான் மாரி கற்பான் துவலைநாட் செய்வ தேபோல்'[9]

---

1. குறள், 435. 2. கலி. 35 : 15. 3. கலி. 16 : 3, 4.
4. கலி. 22: 21, 22. 5. கலி. 130: 20, 21. 6. அகம். 49: 17, 18.
7. குறள், 879. 8. நான்மணி. 28. 9. சீவக. 2070.

'புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்.'[1]
'கோள்வான் கொடித்தானை கொண்டெழுந்தான்.'[2]
கோள்வாக்கு வந்தான்.

என வரும்.

'அல்லது, அல்லால்' என வரும் குறிப்பெச்சமும் கொள்க. இவை பெயர்த்தன்மையும் உடையவாய் நின்று முன் வந்த வினையின் காலத்தை உணர்த்தி நிற்றலின், வேறு ஓதினர்.

'வேபாக்கு அறிந்து.'[3]

என்பது 'வேதலை அறிந்து' என்னும் பொருள் தருதலின், எச்சம் அன்று. இவற்றைக் 'காலம் கண்ணிய' என்றது,

கூதிர் போயபின் வந்தான்.

எனவும்,

நின்றவிடத்து நின்றான்.

எனவும் 'பின்' முதலியன பெயரெச்சத்தோடு வந்துழி இறப்பு முதலியன கண்ணுமையின்.

232] வினைமுதல் வினைகோண்டு முடியும் வினையெச்சம் [நூ

அவற்றுள்,
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின.

இது, முதல் நின்ற மூன்றற்கும் முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் முதல் நிலை மூன்றும் - முற்கூறிய பதினைந்தனுள் முதற்கண் நின்ற 'செய்து, செய்யூ, செய்பு' என்னும் மூன்றும், வினைமுதல் முடிபின - அவ்வெச்ச வினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையினை உணர்த்தும் சொல்லினையே முடிபாகக் கொண்டு முடிதலை உடைய (எ-று.)

(உ-ம்.) உண்டு வந்தான்.
உண்ணூ வந்தான்.
உண்குபு வந்தான்.

எனவும்,

1. கார். 11. 2. பு. வெ. 99. 3. குறள், 1128.

கற்று வல்லன் ஆயினான்.
கல்லூ வல்லன் ஆயினான்.
கற்குபு வல்லன் ஆயினான்.

எனவும் வரும்.

'ஒன்றென முடித்தல்' என்பதனால், 'செய்யா' என்பதற்கும் 'உண்ணா வந்தான்,' என இம்முடிபு கொள்க.

இனி, செய்தெனெச்சக் குறிப்பாகிய 'இன்றி, அன்றி' என்பனவும்,

'தம்மின் றமையா நந்நயந் தருளி'[1]

'தோல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்'[2]

என வினைமுதல் வினையால் முடியும்.

233] மேலே கூறிய மூன்றற்கும் முடிபு வேற்றுமை [கூச

அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா; முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர்.

இதுவும் அம்மூன்றற்கும் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்.) அம்முக்கிளவியும் - 'வினைமுதல் முடிபின' என்ற அம்மூன்று சொல்லும், சினை வினை தோன்றின் சினையொடு முடியா - சினைப்பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் தமக்கு உரிய சினை வினை கொண்டு முடியா; முதல் வினை கொண்டே முடியும்; வினைமுதலொடு முடியினும் - அவ்வெச்சங்கள் தாம் தத்தமக்கு உரிய வினைமுதலான் அன்றிப் பிற வினைமுதலான் முடியினும் பிறவாற்றான் முடியினும், ஒரனைய என்மனார் புலவர் - தத்தமக்கு உரிய வினைமுதல் கொண்ட தன்மையோடு ஒரு தன்மையை உடைய என்று கூறுவர் புலவர் (எ-று.)

'சினையொடு முடியா,' எனவே, முதலொடு முடிதல் பெற்றாம். உம்மை எதிர்மறை.

---

1. நற். 1. 2. கலி. 29 : 1.

(உ-ம்.) கண் நொந்து கிடந்தான்.
வயிறு நொந்து கிடந்தான்.

எனவும்,

கண் வலியூக் கிடந்தான்.

எனவும்,

வயிறு குத்துபு கிடந்தான்.

எனவும்,

'கண் துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்'[1]
'தாளொற்றித் தப்பி வீழ்ந்தார்
தறிவலை மானிற் பட்டார்.'[2]

எனவும் சினைப்பொருட்கண் வந்த வினையெச்சம் காரண காரியப்பொருட்டாய் வினைமுதலோடு முடிந்தன.

'அசுனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.'[3]
'காமன் கணையொடு கண்சிவந்து புலந்தாள்.'

என்பன காரண காரியம் இன்றி அங்ஙனம் வந்தன.

இனி, 'தலைவன் பிரிந்து வருந்தினள்' எனவும்,

'மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்'[4]

எனவும்,

'உடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறுகச் சார்ச்சாரல் ஓடி
நெறிமயக் குற்ற'[5]

எனவும் காரண காரியப்பொருட்டாய்த் தமக்கு உரிய வினைமுதலான் அன்றிப் பிற வினைமுதலான் முடிந்தன.

1. புறம். 159 : 4, 5. 2. சீவக. 2768. 3. குறள், 84.
4. கலி. 5 : 2, 3. 5. கலி. 12 : 4-7.

ஞாயிறு பட்டு வந்தான்.
ஞாயிறு படூஉ வந்தான்.
ஞாயிறு படுபு வந்தான்.

என்பன காரண காரியம் இன்றி அங்ஙனம் வந்தன.

'உறற்கால் யானை ஒடித்துண் டெஞ்சிய யா'[1]

என்பதும் அது.

இனி, 'ஆ கிடந்து செறு விளைந்தது,' என்றது, இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றிச் செறுவின் வினையொடு முடிந்தது. இதற்கு வினைமுதல் தானே செயப்படுபொருள் ஆயிற்று.

'பூணணிந்து விளங்கிய புகழ்சால் மார்ப!'[2]

என 'அணிந்து' என்னும் முதல் வினை சினை வினை கொண்டது. உண்டு பசி கெட்டதும் அது. இவை காரண காரியப் பொருட்டாய்ப் பிறவாற்றான் முடிந்தன.

ஏனை வினையெச்சங்கட்கு வினைமுதல் வினையும் பிற வினையும் ஒப்ப உரியவாய் வருதலின், ஒரு சூத்திரத்தால் கூறினர். இம்மூவகை எச்சமும் வினைமுதல் கொள்ளுங் கால் காரண காரியப் பொருட்டாகாது வருதலின், அதனையும் வேறு கூறி, சினை வினை முதல் வினையோடு முடியுங்கால் பெரும்பான்மை காரண காரியப் பொருட்டாயே வருதலானும், முதல் வினை தான் பிற வினை முதலான் முடியும்வழிப் பெரும்பான்மை காரண காரியப் பொருட்டாயே வருதலானும், இரண்டு சூத்திரத்தால் கூறினர்.

'வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.'[3]

என்ற சூத்திரத்தான் வினையெச்சங்கள் எல்லாம் பெயர் வேறு பட்டும் ஈறு வேறுபட்டும் சிறுபான்மை வரும் என்று பொதுவாகக் கூறினர் ஆதலின், அதன்கண்ணே

1. குறுந். 232. 2. பதிற். 65 : 12. 3. எச்சவியல், சூ. 61.

பிற வினைமுதல் கொண்டனவற்றையும் அடக்குதல் பொருந்தாது. என்னை? அவை வழக்கிடத்தும் செய்யு ளிடத்தும் பெரும்பான்மை வருதலானும், 'வினைமுதல் முடிபின'[1] என்ற விதி பிற வினைமுதல் கொள்ளாமையை வலியுறுத்து நிற்றலின் சூத்திர விதி வேண்டுமாதலானும் என்பது.

234] ஒழிந்த வினையெச்சங்கள் இரு வினையும் கொண்டு முடியும் என்பது [௩௫

ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினை நிலை யானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப.

இஃது, ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) ஏனை எச்சம் - முதல் நிலை மூன்றும் அல்லாத பிற வினையெச்சம், வினைமுதலானும் - வினைமுதல் வினையானும், ஆன் வந்து இயையும் வினை நிலையானும் - ஆண்டு வந்து பொருந் தும் பிற வினையானும், தாம் இயல் மருங்கின் முடியும் என்ப - வரையறை இன்றித் தாம் இயலுமாற்றான் முடியும் என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) மழை பெய்தெனப் புகழ் பெற்றது.
மழை பெய்தென மரம் குழைத்தது.

எனவும்,

மழை பெய்யியர் எழுந்தது.
மழை பெய்யியர் பலி கொடுத்தனர்.

எனவும்,

மழை பெய்யிய முழங்கும்.
மழை பெய்யிய வான் பழிச்சுதும்.

எனவும்,

மழை பெய்யின் புகழ் பெறும்.
மழை பெய்யின் குளம் நிறையும்.

எனவும்,

1. வினையியல், சூ. 33.

மழை பெய்யப் புகழ் பெற்றது.
மழை பெய்ய மரம் குழைத்தது.

எனவும்,

மழை பெய்தற்கு முழங்கும்.
மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்துதும்.

எனவும்,

இறந்தபின் இளமை வாராது.
கணவன் இனிது உண்டபின் காதலி முகம் மலர்ந்தது.

எனவும்,

கடுத் தின்னுமுன் துவர்த்தது.
மருந்து தின்னுமுன் நோய் தீர்ந்தது.

எனவும்,

உரைத்தக்கால் உரை பல்கும்.
'வலனுக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்
ஒளியிழாய்*நமக்கவர் வருதுமென் றுரைத்ததை.'[1]

எனவும்,

நல்வினை தான் உற்றக்கடை உதவும்.
நல்வினை தான் உற்றக்கடை தீவினை வாரா.

எனவும்,

நல்வினை தான் உற்றவழி உதவும்.
நல்வினை தான் உற்றவழித் தீவினை வாரா.

எனவும்,

நல்வினை தான் உற்றவிடத்து உதவும்.
நல்வினை தான் உற்றவிடத்துத் தீவினை வாரா.

எனவும் வரும்.

கற்பான் நூல் செய்தான்.
செல்வம் தருபாக்கு யாம் விரும்புதும்.
நமது நலன் நுகர்வான் யாம் விரும்புதும்.

இவை பிற வினை கொண்டன. இவை வினைமுதல் வினை கொண்டவாறு முன்னர்க் காட்டினும்.

பி-ம்: * சுடரிழாய் 1. கலி. 35 : 15, 16.

235] வினையெச்சங்கள் அடுக்கிய போது முடியுமாறு [ருசு

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே.

இஃது, அவ்வெச்சங்கள் அடுக்கியவழிப் படுவதோர் முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) வினையெஞ்சு கிளவி சொன்முறை முடியாது - வினையெச்சமாகிய சொற்கள் ஒன்றற்கு ஒன்று முடிக்கும் வினை வந்து முடியாது, பன்முறையானும் அடுக்குந வரினும் - ஒரு வாய்பாட்டான் அன்றிப் பல வாய்பாட்டானும் அடுக்கி வரினும், முன்னது முடிய முடியும் மன் பொருளே - முன்னின்ற எச்சம் முடிய ஏனையவும் பொருள் முடிந்தனவாம் (எ-று.)

(உ-ம்.) உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான்.
உண்டு பருகூஉத் தின்குபு வந்தான்.
உழுது உண்பானொடு விரைஇ வந்தான்.

என வரும்.

'பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக ஏற்றி மோரின்
றவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோளும்'[1]

எனச் செய்தெனெச்சத்திடையே அவ்வினையெச்சமுற்றும் அதன் குறிப்பெச்சமும் உடன் அடுக்கி முடிந்தனவும் பிறவும் 'பன்முறை யானும்' என்றதனல் கொள்க.

'வினையெச்சம் பன்முறையான் அடுக்கி ஒரு சொல்லான் முடியும்,' எனவே, 'பெயரெச்சம் ஒரு முறையான் அடுக்கி ஒரு சொல்லான் முடியும்,' என்பது ஆம்.

1. புறம். 159 : 6-14.

'நெல்அரியும் இருந்தொழுவர்'[1]

என்னும் புறப்பாட்டினுள், 'பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து, பாயும்' என்னும் பெயரெச்சம் அடுக்கி 'மிழலை' என்னும் ஒரு பெயர் கொண்டு முடிந்தன. ஆண்டு 'நல்லூர் கெழீஇய' என்னும் பெயரெச்சம் இடைநிலையாய் வந்தது.

236] பெயரெச்சம் கொண்டு முடியும் சொற்கள் [௩௭

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே.

இது, 'செய்யும், செய்த' என்னும் பெயரெச்சத்திற்குப் பொருள் முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) செய்யும் செய்த என்னும் சொல்லே - 'செய்யும், செய்த' என்னும் சொற்கள் 'இன்னதற்கு, இது பயன்' என்னும் இரண்டு ஒழித்து, நிலனும் பொருளும் காலமும் கருவியும் வினைமுதற்கிளவியும் வினையும் உளப்பட அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய - நிலப்பொருளும் செயப்படு பொருளும் காலப்பொருளும் கருவிப்பொருளும் வினைமுதற்பொருளும் என்ற ஐந்துடனே வினைப்பொருளும் கூடச் சொல்லப்பட்ட அவ்வறு வகைப் பொருட்கும் ஒத்த உரிமையினை உடையவாம் (எ-று.)

(உ-ம்.) வாழும் இல்
கற்கும் நூல்
துயிலும் காலம்
விளையும் கோல்
ஓதும் பார்ப்பான்
உண்ணும் ஊண்

என 'உம்' ஈறு கால எழுத்துப் பெறாது ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

1. புறம். 24.

புக்க இல்
உண்ட சோறு
வந்த நாள்
வென்ற வேல்
ஆடிய கூத்தன்
போயின போக்கு

என அகர ஈறு 'க, ட, த, ற'வும் யகர னகரமும் ஊர்ந்து, ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

இவற்றுள் வினைமுதற்கிளவி ஒழிந்தனவற்றிற்கு வினை முதற்பொருள் முன் வந்தே பின் வரும் வினையோடு முடிந்து பொருள் தருதலும், வினைமுதற்கிளவியாயின் பின் வரும் வினையோடு முடிந்தே பொருள் தருதலும் கொள்க. இவற்றிற்குச் 'செய்யாநிற்கும்' எனவும் 'செய்யாநின்ற' எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமை **'ஒன்றென முடித்த'**லால் கொள்க.

'மற்றிந்நோய் தீரும் மருந்தருளாய் ஒண்டொடீ!
நின்முகம் காணும் மருந்தினேன் என்னுமால்'[1]

என்புழி, 'நோய் தீர்தற்குக் காரணமாகிய மருந்து' என வரும் காரணத்தைக் கருவிக்கண்ணும், 'நின் முகத்தைக் காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த அருளை மருந்தாதல் தன்மையாக உடையன்' என வரும் காரியத்தை **'ஒன்றென முடித்தற்'**கண்ணும் அமைத்துக் கொள்க.

'தேரொடும் புறங்காணே னாயினேன்'

என்பதூஉம்,

'நிலம்பூத்த மரமாயின்'

என்பதூஉம் காரணத்தின்கண்ணும்,

'ஆறு சென்ற வியர்'

என்றதனை 'ஆறு சேறலான் வந்த வியர்' எனக் காரியத்தின்கண்ணும் அடக்குக.

1. கலி. 60 : 18, 19.

'ஆர்களிறு மிதித்த நீர்'[1]
எள் ஆட்டின எண்ணெய்
உண்ட எச்சில்

என்பனவும் காரியத்தின்கண் அடக்குக.

'குண்டுசுனைப் பூத்த வண்டுபடு கண்ணி'[2]
'நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ'[3]

என்பன, 'பூத்த பூவான் இயன்ற கண்ணி, நூலாத நூலான் இயன்ற கலிங்கம்' என ஒற்றுமை நயம் பற்றிச் செயப்படுபொருண்மேல் நின்றன.

'போச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.'[4]

என்பது கருவிக்கண் அடங்கும்.

அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான்
,, ஆ கொடுத்த பார்ப்பான்

எனவும்,

ஆடை ஒலிக்கும் கூலி
,, ஒலித்த கூலி

எனவும் ஒத்த உரிமைய அன்றிச் சிறுபான்மை 'இன்ன தற்கு, இது பயன்,' என்பனவற்றின்கண்ணும் வரும்.

இன்னும்,

பழம் உதிரும் கோடு
,, உதிர்ந்த கோடு

எனச் சிறுபான்மை தீர்தற்பொருண்மை பற்றி வருதலும் கொள்க.

இனி, 'செய்த' என்பதன் குறிப்பாய்,

இன்ன, அன்ன, என்ன

எனவும்,

1. குறுந். 52.
2. முருகு. 199.
3. பதிற். 12 : 21.
4. குறள், 537.

கரிய, செய்ய

எனவும் வருவனவும் கொள்க. அவை,

'இன்ன தன்மையி னருமையின்'[1]
'அன்னதன்மையும் அறிந்தீயார்'[2]

எனவும்,

'என்ன கிளவியும் பண்பின் தொகையே.'[3]

எனவும், 'கரிய மலர்நெடுங்கண்' எனவும், 'செய்ய கோல்' எனவும் வந்தவாறு காண்க.

237] 'செய்யும்' என்பதற்கு ஓர் முடிபு வேற்றுமை [நூஅ

அவற்றெடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே.

இது, 'செய்யும்' என்பதற்கு ஓர் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றெடு வருவழி-அங்கிலம் முதலிய பொருள்களோடு வருங்கால், செய்யுமென் கிளவி - 'செய்யும்' என்னும் சொல், முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்து - மேல் விலக்கப்பட்ட 'பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை' என்னும் மூவகைக்கும் உரித்து (எ-று.)

அவை 'எஞ்சிய கிளவி'[4] என்பதனுள் காட்டினும்.

ஈண்டுக் கூறிய விதி எச்சத்திற்கும், ஆண்டு விலக்கியது முற்றிற்கும் என்று உணர்க. இனி, அவற்றிற்கு வேறுபாடு கூறுதும் :

இரு திணைக்கும் பொதுவாகிய 'செய்யும்' என்னும் சொல், 'உண்ணும்' என நின்றுழித் தானே தன் தொடர்ப்பொருள் உணர்த்தல் ஆற்ருது நின்று, தன்னை 'அவன், அது' என்னும் வினைமுதல் வந்து திணையும் பாலும் விளக்கத் தன் தொடர்ப்பொருள் உணர்த்தி,

1. சீவக. 2754.
2. புறம். 136 : 10.
3. எச்சவியல், சூ. 20.
4. வினையியல், சூ. 28.

எடுத்தல் ஓசையான் மற்றோர் சொல் நோக்காது, செப்பு மூயினாற்போல அமைந்து மாறி நிற்றல் முற்றிற்கு இலக்கணம். அச்'செய்யும்' என்னும் சொல் 'வாழும் இல்' எனப் படுத்தல் ஓசையால் கூறியவழி, அம்முடிக்கும் சொல்லான் அமையாது, 'நன்று' என மற்றும் ஓர் சொல் நோக்கி நிற்றல் எச்சத்திற்கு இலக்கணம்.

இனி, ''அம்' ஈறு முதலிய முற்றுச்சொற்கள் எங்ஙனம் முற்றி நிற்கும்?' எனின்,

'எத்திறத் தானும் பெயர்முடி பினவே'[1]

என்பதனான் வினைமுதலோடு முடிந்து, ஈண்டுக் கூறியவாறே முற்றி நிற்கும் என்க. 'பெயர் பற்றி நில்லாது, தாமேயும் தொடர்ப்பொருள் உணர்த்தி முற்றி நிற்கும்,' எனச் **சேனாவரையர்** கூறினார் எனின், 'சாத்தற்குச் சோறு இடுக!' என ஒருவன் ஏவியவழி அவ்வேவப் பட்டான் அவற்கு அதனை ஈத்து வந்து 'உண்டான்,' என்றவழி, 'யான் கூறிய சாத்தன் உண்டான்,' என வினைமுதல் தொடர்ப்பொருள் அவன் மனத்தின்கண் உணர்த்தி நிற்பது அல்லது, நன்மக்கள் குழீஇயவழி ஒருவன் வந்து நின்று 'உண்டான்,' என்றவழி அவ் வினைமுதல் தொடர்ப்பொருள் உணர்த்தாது பால் மாத்திரம் உணர்த்தி நிற்கும் என்பது கருதி,

'எத்திறத் தானும் பெயர்முடி பினவே.'[2]

என்றார் ஆகலின், அது பொருத்தம் இன்று என்க.

238] இரு வகை எச்சமும் எதிர்மறை வினையையும் கொண்டு முடிதல் [நகூ

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா.

இஃது, இரு வகை எச்சத்திற்கும் எதிர்மறை வினையும் முடிவு ஆம் என்கின்றது.

1, 2. எச்சவியல், சூ. 33.

(இ-ள்.) பெயர் எஞ்சு கிளவியும் வினை எஞ்சு கிளவியும் - பெயரெச்சமாகிய சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், எதிர் மறுத்து மொழியினும் - செய்தல் தொழிலினை எதிர் மறுத்துச் சொல்லினும், பொருள் நிலை திரியா - தத்தம் எச்ச மாகிய பெயரையும் வினையையுங் கொண்டு அல்லது அமையாத நிலைமையின் வேறுபடா (எ-று.)

(உ-ம்.) உண்ணா இல்லம்
உண்ணாச் சோறு
உண்ணாக் காலம்
விளையாக் கோல்
ஓதாப் பார்ப்பான்
உண்ணா ஊண்

என வரும்.

'உண்ணா' என்பது, 'உண்ணும், உண்ட' என்னும் இரண்டற்கும் மறை. 'உண்ணாத' என்பது, 'உண்ட' என்பதற்கு மறை. 'உண்ணாது' என்பது, 'உண்டு, உண்ணூ, உண்ணு, உண்குபு' என்பனவற்றிற்கு மறை. இதனானே, 'செய்பு' என்பது இறந்த காலம் உணர்த்து தல் பெற்றாம்.

இனி, 'செய்தென' என்பது வினைமுதலோடு வருவழி, 'மழை பெய்யாது அறம் பெறாதாயிற்று,' எனச் 'செய்து' என்பதன் மறையே வருதலும், அது பிற வினையோடு வருவழி, 'மழை பெய்யாமல் மரம் குழையாதாயிற்று,' என இறந்த காலம் உணர்த்தும் 'செய்து' என் எச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய் வருதலும் கொள்க. இவ்விரண்டு எச்சத்திற்கும் 'செய்யாமை' என்பதூஉம் மறை.

இனி, 'உண்ணாமைக்கு' என்பது, 'உண்ணியர், உண்ணிய, உண்ணற்கு' என்பனவற்றிற்கும், 'உண்ண' என எதிர் காலம் உணர்த்தும் 'செய' என் எச்சத்திற்கும் மறையாம்.

இனி, 'செயின்' என்பதற்கு,

மழை பெய்யாவிடின் அறம் பெருது.
மழை பெய்யாவிடின் மரம் குழையாது.

எனப் பிற சொல்லால் மறை வரும்.

இனி, 'உண்ணுதபின், உண்ணுதமுன், உண்ணுக்கால், உண்ணுக்கடை, உண்ணுவழி, உண்ணுவிடத்து' எனவும் வரும்.

இனி, 'கொள்ளாது ஒழிவான்' என ஏனையவற்றிற்கும் வரும்.

இனி, கரியசாத்தற்குச் 'செய்ய சாத்தன்' எனவும், நல்ல சாத்தற்குப் 'பொல்லாச் சாத்தன்' எனவும் வரும் பெயரெச்சக் குறிப்பு மறை விகற்பமும் அறிக.

இனி, 'சோறு உண்டாயிருந்தது, சோறு ஆவதாயிருந்தது,' என்பனவற்றிற்குச் 'சோறு இன்றி, சோறு அன்றி' என வினையெச்சக் குறிப்பு மறை ஆதலும் கொள்க.

'எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.'[1]

என்று வேற்றுமை எதிர் மறுத்து வரும் எனவே, அவ்வேற்றுமை ஏற்ற சொல் முற்றுச் சொல்லே ஆதலின், முற்றுச் சொற்கும் மறை வரும் என்பது கூறினுராயிற்று.

இனி, 'செய்யும்' என்னும் முற்றிற்கும் 'உண்ணுன் அவன், உண்ணுது அது,' என வரும் மறை, 'ஒன்றென முடித்த'லால் கொள்க.

239] எச்சங்களின் இடை நிகழும் முடிபு வேற்றுமை [௪௦

தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.

---

1. வேற்றுமை மயங்கியல், சூ. 24.

இஃது, அவ்வெச்சங்களின் இடை நிகழும் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்.) தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின் எச்சொல் ஆயினும் - தத்தம் எச்சமாகிய வினையொடும் பெயரொடும் பொருள் இயையும் கருத்தினை உடைய எவ்வகைச் சொல்லாயினும், இடை நிலை வரையார் - அவ்வெச்சத்திற்கும் அவற்றான் முடிவனவாகிய தமக்கும் இடை நிற்றலை நீக்கார் கொள்வர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) உழுது சாத்தன் வந்தான்.
உழுது ஏரோடு வந்தான்.
கொல்லும் காட்டுள் யானை
கொன்ற காட்டுள் யானை

என வரும்.

ஒருதலையாக எச்சத்தோடு இயையாது, முடிக்கப் படும் சொல்லோடு இயைந்து கவர் பொருள் படுவன சிவணுக் குறிப்பினவாம். அவை,

உண்டு விருந்தொடு வந்தான்.

வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி

என்புழி, 'விருந்தொடு உண்டு' எனவும், 'வல்லம் எறிந்த கோசர்' எனவும் கவர் பொருள் பட்டு வரும்.

'எச்சொல் லாயினும்' என்றதனால்,

உழுது ஓடி வந்தான்.
'கவளம் கொள்ளாக் களித்த யானை'

என எச்சமும் இடை நிலை ஆதல் கொள்க.

அறத்தை அரசன் விரும்பினான்.
உண்டான் பசித்த சாத்தன்.

என ஏனைத் தொடர்க்கண்ணும் பிற சொல் இடை நிற்றல் 'ஒன்றென முடித்த'லால் கொள்க.

240] 'செய்யும்' என்னும் பெயரேச்ச ஈறு கெடுமாறு [சச

அவற்றுள்,
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்;
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்.

இது, 'செய்யும்' என்பதற்கு ஈறு கெடுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - முற்கூறிய இரு வகை எச்சங்களுள், செய்யும் என்னும் பெயர் எஞ்சு கிளவிக்கு - 'செய்யும்' என்னும் பெயரெச்சத்திற்கு, ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும் - ஈற்றெழுத்தின்மேல் நின்ற உகரம் தன்னான் ஊரப்பட்ட மெய்யொடும் கெடும்; அவ்விடன் அறிதல் என்மனார் புலவர் - 'அக் கெடும் இடம் அறிக,' என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'வாவும் புரவி வழுதியோ டெம்மிடை'[1]
'யான் போகும் புழை'

என்பன 'வாம்புரவி, போம்புழை' என நின்றன.

'செய்யும் என்னும் பெயர்எஞ்சு கிளவிக்கு
ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும்.'

எனவே, 'செய்யும்' என்னும் முற்றுச்சொற்கு ஈற்றுமிசை உகரம் மெய்யொடும் கெடும், மெய் ஒழித்தும் கெடும் என்பது பெறுதும்.

(உ-ம்.) 'அம்பல் ஊரும் அவனொடு மொழிமே.'[2]
'சாரல் நாட!என் தோழியும் கலுழ்மே.'

என வரும்.

241] இறந்த கால வினையெச்சம் ஏனைக் காலச் சொல்லோடும் இயையும் [சஉ

செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்.

---

1. யா. வி. சூ. 'மாலை மாற்றே'—உரை. மேற். 2. குறுந். 51.

இஃது, இறந்த காலச் சொல் ஏனைக் காலச் சொல்லோடு இயையும் என்கின்றது.

(இ-ள்.) செய்து என் எச்சத்து இறந்த காலம் - 'செய்து' என்னும் வினையெச்சத்தினது இறந்த காலம் தன் இறந்தகாலத்தினை நீங்காது நின்று, வாராக் காலம் எய்து இடன் உடைத்து- முடிக்கும் சொல்லின் எதிர் காலத்தைப் பொருந்தும் இடம் உடைத்து (எ-று.)

(உ-ம்.) நீ உண்டு வருவாய்.

என்பது 'நாளை உண்டு வருவாய்,' என்னும் பொருள் உணர்த்தவும், வருதல் தொழிலுக்கு உண்டல் தொழில் முன் நிகழ்ந்து, ஆண்டும் தன் இறந்த காலமே உணர்த்திற்றும்.

கோடி ஆடித் தோன்றும்.

என்புழித் தோற்றமும் ஆட்டமும் உடன் நிகழ்தலின், 'செய்து' என்பது நிகழ் காலத்திற்கும் உரித்து ஆதல் 'வாராக் காலம்' எனவே அடங்கும்.

'வறனீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்'[1]

என்பதும் அது.

'ஒன்றென முடித்த'லால், 'செய்யூ, செய்பு,' என்பனவற்றிற்கும் ஒழிந்த எச்சங்கட்கும் இம்மயக்கம் கொள்க.

242] நிகழ் காலச்சொல் ஏனைக் காலங்களையும் உணர்த்தல் [சநு

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்.

இது, நிகழ் காலச் சொல் ஏனைக் காலங்களையும் உணர்த்தும் என்கின்றது.

(இ-ள்.) முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எம்முறைச் சொல்லும் - மூன்று வகைப்பட்ட நிலைமையினையுடைய

1. கலி. 3 : 2.

காலத்தும் உளதாம் இயல்பையுடைய எவ்வகைப்பட்ட பொருளையும், நிகழும் காலத்து மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும் - நிகழ் காலத்திற்கு உரித்தாய் நின்றும் ஏனைக் காலங்களையும் உள்ளடக்கிநிற்கும் பொருள் நிலைமையினையுடைய 'செய்யும்' என்னும் சொல்லால் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன் (எ-று.)

முக்காலத்திற்கும் பொதுவாய் முற்றும் எச்சமுமாய் நிற்றலை நோக்கிப் 'பொதுச்சொல்' என்றார்.

(உ-ம்.) மலை நிற்கும்.
தீச் சுடும்.
ஞாயிறு இயங்கும்.
திங்கள் இயங்கும்.

எனவும்,

'வெங்கதிர்க் கனலியொடு மதிவலம் திரிதரும்
தண்கடல் வரைப்பு'[1]

எனவும் வரும்.

'தீச்சுடும்,' என்றால், பண்டும் இன்றும் மேலும் சுடும் என்பதனை ஒப்ப விளக்கியவாறு காண்க.

'மெய்ந்நிலை' என்றது, ஏனை நிகழ் காலச் சொல்லோடு ஒவ்வாமையை உணர்த்துதற்கு.

243] விரைவின்கண் காலம் மயங்கல் [சச

வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.

இது, விரைவின்கண் எதிர்வும் நிகழ்வும் இறப்பொடு மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச்சொற்கிளவி - எதிர் காலத்தும் நிகழ் காலத்தும்

1. பெரும்பாண். 17, 18.

ஒரு படியாக வருகின்ற வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையை, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் - தொழில் இறந்தின்றேனும் சொல்லுவான் கருத்து வகையால் தொழில் இறந்தனவாகக் கருதிக் கூறல், விரைந்த பொருள என்மனார் புலவர் - விரைவு பொருண்மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) சோறு பாணித்தவழி உண்ணுதிருந்தானைப் போதல் வேண்டும் குறையுடையான் ஒருவன், 'இன்னும் உண்டிலையோ?' என்றவழி, 'உண்டேன்; போந்தேன்,' என்னும். உண்ணுகின்ருனும், 'உண்டேன்; போந்தேன்,' என்னும்.

244] சிறப்பின்கண்ணும் காலம் மயங்கல் [சரு

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழும் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

இது, மிக்கது ஒன்றன்கண்ணே இறப்பும் எதிர்வும் நிகழ்வோடு மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி - இரு வினைகள் பலவற்றுள்ளும் சிறந்த இரு வினைக்கண்ணே நிகழும் வினைச்சொல்லை நோக்கி, அப்பண்பு குறித்த வினை முதற்கிளவி - திரிவு இன்றிப் பயக்கும் அம்மிக்க தனது பண்பைக் குறித்து வரும் வினைமுதற்சொல், செய்வது இல்வழி - சுட்டிச் சொல்லப் படுவதோர் வினைமுதல் இல்லாத இடத்து, நிகழும் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே - நிகழ் காலத்தான் யாப்புறத் தோன்றும் பொருளை உடைத்தாம் (எ-று.)

(உ-ம்.) தவம் செய்தான்; செய்வான்.
தாயைக் கொன்றான்; கொல்வான்.

என்பன முதலியன மிக்க வினைச் சொல்.

சுவர்க்கம் புகாநிற்பன்.
நிரயம் புகாநிற்பன்.

என்பன அவ்வப்பண்பு குறித்த வினைமுதற்கிளவி. இவை சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமல், 'யாவன் தவஞ்செய் தான்? அவன் சுவர்க்கம் புகும்; யாவன் தாயைக் கொன்றான்? அவன் நிரயம் புகும்,' எனவும்,

ஒருவன் தவம் செய்யின், துறக்கம் புகும்.
ஒருவன் தாயைக் கொல்லின், நிரயம் புகும்.

எனவும் வரும்.

இங்ஙனம் பொது வகையால் கூறாது,

சாத்தன் தவம் செய்து துறக்கம் புக்கான்.
சாத்தன் தவம் செய்யின், துறக்கம் புகுவன்.

எனச் சுட்டி ஒருவர் பெயர் கொண்டவழி ஏனைக் காலங்களால் கூறப்படுதலின், 'செய்வ தில்வழி' என்றார்.

'வினைச்சொல்' என்றாரேனும்,

தவம் செய்தான்
தாயைக் கொன்றான்

என வினைப்பெயராய் வருதலும் கொள்க.

245] 'இது செயல் வேண்டும்' என்பது ஈரிடத்துப் பொருள் தரல் [சசரு

இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

இது, முற்றுச்சொல் பொருள் தரும் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) இது செயல் வேண்டும் என்னும் கிளவி - 'இக் காரியத்தினைச் செயல் வேண்டும்,' என்று சொல்லப்படும் முற்றுச்சொல், தன் பாலானும் பிறன் பாலானும் இரு வயின் நிலையும் பொருட்டு ஆகும்மே - அக்காரியத்தினைச் செய்வான் தன்னிடத்தும் அவன் செயலை வேண்டியிருப்பான் பிறன் ஒருவனிடத்தும் என்ற இரண்டு இடத்தும் நிலைபெறும் பொருண்மையை உடையதாம் (எ-று.)

(உ-ம்.) சாத்தன் ஓதல் வேண்டும்.

என்புழி, 'வேண்டும்' என்னும் முற்றுச்சொல் ஒருவழிச் 'சாத்தன்' என்பது எழுவாயாய், 'வேண்டும்' என்னும் பயனிலையோடு முடிந்துழி அவ்வேண்டுதல் சாத்தன தாயும், 'சாத்தன்' என்னும் எழுவாய், 'ஓதுதல்' என்னும் வினைப்பெயர் கொண்டவழி இவ்வேண்டுதல் தந்தை தாய்மேலும் நின்றவாறு காண்க.

246] வற்புறுத்தலில் வினா எதிர்மறைப் பொருள் தரல் [சஎ

வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையும் உடைத்தே.

இதுவும் வினைச்சொல் பொருள்படும் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல் - ஒருவன் இன்னாங்கு உரைத்தான் என்று ஒருவன் மனங்கொண்டிருந்தவழித் தான் அவ்வின்னாங்கு உரையாமையை அவன் மனத்து வலியுறுத்துதற்கு வரும் வினாவினையுடைய வினைச்சொல், எதிர் மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்து - அவ்வுரையாமையை உணர்த்துகின்ற நிலைமையை மறுத்துத் தான் உரைத்தானாக உடம்பட்டமையை அவற்கு உணர்த்து தற்கு உரிமையினையும் உடைத்து (எ-று.)

உம்மை எதிர்மறை ஆகலான், மறுத்தல் பெரும் பான்மை; நேர்தல் சிறுபான்மையாம்.

'ஆ, ஏ, ஓ' என்பன வினா.

ஒருவன் கதத்தானாகி களியானாகி மயங்கி இன்னாங்கு உரைத்துப் பின் தெருண்டவழி, அவ்வின்னாங்கு உரைக் கப்பட்டான், 'நீ என்னை வைதாய்,' என்றக்கால், 'யான் வைதேனோ ?' எனத் தான் வையாமையை வலியுறுத்து தற்குக் கூறியதுதானே, 'அப்பொழுது வைதேன்; நோகாதே !' என நேர்ந்தமை படவும் நிற்கும். இனி, தான் வைதமையை வலியுறுத்துதற்கு வரும் 'வைதேனே!'

என்னும் சொல், 'வைதிலேன்,' என்னும் எதிர்மறையை உணர்த்தி நிற்கும் என்றலுமாம்.

247] இயற்கையிலும் தெளிவிலும் காலம் மயங்கல் [சஅ

வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை.

இஃது, எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும் மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) வாராக் காலத்து வினைச்சொற்கிளவி - எதிர் காலத்திற்கு உரிய வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மை, இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும் இயற்கையும் தெளிவும் கிளக்குங்காலை - வழங்கலாற்றான் 'இஃது இப்பெற்றித்து,' எனப் பெற்றியான் அறிந்திருந்த இயல்பாகலும், 'இது நிகழின், அது நிகழும்,' என நூல் நெறியால் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து இறந்த காலச் சொல்லானும் நிகழ் காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும் (எ-று.)

(உ-ம்.) 'இக்காட்டுள் போகின், கூறை கோட்படுவன்,' எனற்பாலது, 'கூறை கோட்பட்டான், கூறை கோட்படுகின்றான்,' எனக் கூறுதல் இயற்கை.

'எறும்பு முட்டை கொண்டு தெற்றி ஏறியது கண்டுழி மழை பெய்வதாம்,' என்னாது, 'மழை பெய்தது, மழை பெய்கின்றது,' எனக் கூறுதல் தெளிவு.

248] செயப்படுபொருள் வினைமுதல் போல வருதல் [சகூ

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே.

இது, வினைச்சொற்கண் மரபு வழுவமைதி கூறுகின்றது.

(இ-ள்.) செயப்படுபொருளை - ஒரு வினைமுதல் ஒரு தொழில் செய்வதனை உறுவதாகிய பொருளை, செய்ததுபோலத் தொழிற்

படக் கிளத்தலும் - தான் அத்தொழிலினைச் செய்த வினைமுதல் போல அத்தொழில் அதன் மேற்படக் கூறுதலும், வழக்கியல் மரபே - வழக்கின்கண்ணே நடக்கும் முறைமை (எ-று.)

எனவே, இலக்கணம் அன்றாயிற்று.

(உ-ம்.) 'இல்லம் மெழுகப்பட்டது,' என்னாது, 'இல்லம் மெழுகிற்று,' என்றலாம்.

இங்ஙனம் வினைமுதல் வாய்பாட்டால் கிளத்தலே அன்றி, எளிதின் அடப்படுவதனை நோக்கி, 'அரிசி தானே அட்டது,' எனச் செயப்படு பொருளை வினை முதலாகக் கூறலும் அடங்குதற்குத் 'தொழிற்படக் கிளத்தலும்' என்றார். இவை **கருமக் கருத்தா.**

இனி, **'ஒன்றென முடித்த'**லான், 'இவ்வாள் எறியும்,' எனக் கருவியைத்தானே செய்வதாகக் கூறும் **கருவிக் கருத்தா**வும், 'அரசன் எடுத்த ஆலயம்,' என ஏவினானைக் கருத்தாவாகக் கூறும் **ஏதுக் கருத்தா**வும் கொள்க.

249] வேறு இடத்தும் காலம் மயங்கல் [௫௦

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.

இஃது, ஒரு பொருண்மை குறியாது இறப்பும் எதிர்வும் மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) இறப்பே எதிர்வே ஆயிரு காலமும் - இறப்பும் எதிர்வும் ஆகிய அவ்விரண்டு காலமும், மயங்கும் மொழிக்கிளவி சிறப்பத் தோன்றும் - தம்முள் மயங்கும் மொழிப்பொருளாய் விளங்கத் தோன்றும் (எ-று.)

(உ-ம்.) இவர் பண்டு இப்பொழிலிடத்து விளையாடுவர்.
நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான் பின்,
நீ என் செய்குவை?

என வரும். அவை வினைப்பெயரும் வினையுமாய் மயங்குதலின், 'மயங்கும் வினைச்சொற்கிளவி' என்னாது, பொதுப்பட 'மயங்கும் மொழிக்கிளவி' என்றார்.

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்.

இது, நிகழ்வு ஏனையவற்ருேடு மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) ஏனைக் காலமும் மயங்குதல் வரையார் - நிகழ் காலமும் இறப்போடும் எதிர்வோடும் மயங்குதலை நீக்கார் கொள்வார் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) இவள் பண்டு இப்பொழிலிடத்து விளையாடும்.
,, நாளை வரும்.

என வரும்.

மூன்று காலமும் வினைப்பெயரோடு மயங்கும் என்ருரேனும், ஏற்றனவே கொள்க.

வினை இயல் முற்றும்.

எ. இடை இயல் *

251] இடைச்சொற்குப் பொது இலக்கணம் [க

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும்; தமக்கியல் பிலவே.

என்பது சூத்திரம். நிறுத்த முறையானே இடைச்சொல் உணர்த்துகின்றமையின், இவ்வோத்து இடைச்சொல் ஓத்து என்னும் பெயர்த்து ஆயிற்று. இச்சூத்திரம், இடைச்சொற்கெல்லாம் பொது இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) இடையெனப்படுப - 'இடைச்சொல்' என்று சொல்லப்படுவன, பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும் - பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றையே வெளிப்படுத்து நடக்கும்; தமக்கு இயல்பு இல - தமக்கென வேறோர் பொருளை உணர்த்தும் இலக்கணம் உடைய அல்ல (எ-று.)

முன்னும் பின்னும் நிற்குமேனும், பெரும்பான்மையும் இடையே நிற்றலின், இடைச்சொல் என்றார்.

(உ-ம்.) 'அதுகோல் தோழி! காம நோயே?'[1]
'வருகதில் அம்மவெம் சேரி சேர.'[2]

எனப் பெயரும் வினையும் சார்ந்து நின்று, அவற்றின் பொருளை விளக்கின.

'தமக்கு இயல்பு இல,' எனப் பொதுப்படக் கூறிய அதனால், சாரப்படும் சொல்லின் வேறாய் நிற்றலேயன்றி,

---

பி-ம்: * இடைச்சொல் இயல் 1. குறுந். 5. 2. அகம். 276 : 7.

'உண்டான், என்றிசினோரே, அருங்குரைத்து' என்பன வற்றிற்கு உறுப்பாய் வருதலும் கொள்க.

252] இடைச்சொற்களின் பாகுபாடு [உ

அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியால் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை.

இஃது, அவ்விடைச்சொற்களின் பாகுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் - முற்கூறிய இடைச்சொற்கள்தாம், புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதநவும் - இரு மொழி தம்மில் புணர்தல் இயன்ற நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைக்கு உதவி செய்து வருவனவும், வினை செயல் மருங்கிற் காலமொடு வருநவும் - முதல் நிலை நின்று காரியத்தினைத் தோற்றுவிக்கும் இடத்துக் காலம் காட்டும் இடைச்சொற்களோடே பாலும் இடமும் காட்டும் இடைச்சொற்களாய் வருவனவும், வேற்றுமைப்பொருள்வயின் உருபு ஆகுநவும் - வேறுபடச் செய்யும் செயப்படுபொருள் முதலாயவற்றின்கண் 'உருபு' என்னும் குறியவாய் வருவனவும், அசை நிலைக் கிளவி ஆகி வருநவும் - தமக்கு ஓர் பொருள் இன்றித் தாம் சார்ந்த பெயர் வினைகளை அசையப்பண்ணும் நிலைமையவாய் வருவனவும், இசை நிறைக் கிளவி ஆகி வருநவும் - செய்யுட்கண் இசை நிறைத்தலே பொருளாக வருவனவும், தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும் - கூறுவார் தாம்தாம் குறித்த குறிப்பினாலே அவர் குறித்த பொருளை விளக்கி நிற்பனவும், ஒப்பு இல் வழியால் பொருள் செய்குநவும் - நாடக வழக்கினான் உய்த்து உணரின் அன்றி

உலகியல் வழக்கினுல் காட்டப்படுவதோர் ஒப்பு இன்றி நின்ற ஒப்புமைப்பொருண்மையை உணர்த்தி வரும் உவம உருபுகளும், என்று அப்பண்பினவே நுவலுங்காலை - என்று சொல்லப்பட்ட அவ்வேழியல்பினை உடைய சொல்லுமிடத்து (எ-று.)

பொருள் நிலைக்கு உதவுவன, 'எல்லாம்' என்பதனை **வற்றுச்** சாரியை அஃறிணை ஆக்கியும், **நம்முச்** சாரியை உயர்திணை ஆக்கியும் நிற்பன போல்வன. இதனுனே, **'காரம், கரம்'** முதலிய எழுத்துச் சாரியையும் கொள்க.

(உ-ம்.) 'உண்டான்,' என்புழி, 'உண்' என்னும் முதல்நிலை, காலம் காட்டுகின்ற டகரத்தினையும், பாலும் இடமும் காட்டும் ஆனினையும் விரித்து நின்ற வாறு காண்க.

'உண்டு' என்னும் எச்சம் முதலியனவும் பாலும் இடமும் உணர்த்தும் என்பது, 'வந்தான், வந்தது' என்னும் வினைகளால் பெறுதல்,

'பிரிபுவேறு படூஉம் செய்திய ஆகி'[1]

என்பதனல் கொள்க.

'தன்னினம் முடித்தல்' என்பதனுன், 'உண்டவன்' என்றாற்போலும் தொழிற்பெயரும், 'நம்பி, நங்கை' என்னும் பெயர்ப்பெயரும் இவ்விடைச்சொற் பெற்று வருதல் கொள்க.

'கண்ணகல் ஞாலம்'[2]

என்புழிக் 'கண்' இடப்பொருள் உணர்த்துதலும், 'ஊர்க் கால்' என்புழிக் 'கால்' உருபு ஆகலும் முற்கூறினும்.[3]

'அனையை ஆகன்மாறே.'[4]

'சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே.'[5]

என்புழி 'மாறு' என்னும் இடைச்சொல் வினையை அடுத்துக் காரணப்பொருள் உணர்த்தி நிற்றலின், மூன்றும்

1. வினையியல், சூ. 25.
2. நள. சுயம்வர. 154.
3. வேற்றுமையியல், சூ. 21.
4. புறம். 4 : 17; 20 : 20.
5. நற். 40.

வேற்றுமைப்பொருள் உணர்த்தி நின்றதல்லாமை உணர்க. அது மூன்றாவதன் பொருள் உணர்த்திற்றேல்,

'கூறாய் தோழி!யாம் வாழு மாறே.'

என்புழி 'வாழுமாற்றை' என இரண்டாவது விரியாதாம்.

'மந்திர விதியின் மரபுளி வழாஅ'[1]

என்புழி, 'முறைமையின் வழுவாத அந்தணர்' என ஐந்தாவது விரிதலானும்,

'இயல்புளிக் கோலோச்சு மன்னவன்'[2]

என்புழி, 'முறைமையிலே செங்கோல் நடாத்தும்' என ஏழன் உருபு விரிதலானும், 'உளி' என்பது மூன்றன் உருபின் பொருள்பட வந்தது அன்று; பகுதிப்பொருள் விகுதியாய் நின்று, தனக்கு ஏற்ற உருபை ஏற்று நின்றது. இம்மூன்றும் புணரியலுள்ளும் வினையியலுள்ளும் வேற்றுமை ஓத்தினுள்ளும் கூறி, இடை நின்ற மூன்றும் ஈண்டுக் கூறுகின்றார். இறுதி நின்ற ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் உவம உருபுகள், 'அன்ன ஏய்ப்ப'[3] என்னும் சூத்திரத்தான் உவம இயலுட்கூறுப. அவை ஒப்பின்றி ஒப்பு உணர்த்துதல்,

'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா'[4]

என்னும் பொருளியற்சூத்திரத்தான் உணர்க.

253] இடைச்சொல் நிலைபெறும் இடமும் வேறுபாடும் [௩

அவைதாம்,
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப.

இஃது, இன்னும் அவற்றுக்கு ஓர் பொது விதி கூறுகின்றது.

---

1. முருகு. 95.
2. குறள், 545.
3. உவமவியல், சூ. 11.
4. பொருளியல், சூ. 53.

(இ-ள்.) அவைதாம் - முற்கூறிய இடைச்சொற்கள்தாம் இடை வருதலே அன்றி, மொழி முன்னும் பின்னும் அடுத்து வருதலும் - தம்மால் சாரப்படும் சொற்களை முன்னும் பின்னும் தாம் அடைந்து வருதலும், தம் ஈறு திரிதலும் - தம் ஈற்றெழுத்து வேறுபட்டு வருதலும், பிறிது அவண் நிலையலும் - ஓர் இடைச்சொல் நிற்கின்ற இடத்தே மற்றோர் இடைச்சொல் நிற்றலுமாகிய, அன்னவை எல்லாம் உரிய என்ப - அத்தன்மையை உடைய இலக்கணங்கள் எல்லாம் இடைச்சொற்கு உரிய என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) அதுமன், கேண்மியா—இவை முன் அடுத்தன.

'கோன்னூர் துஞ்சினும்'[1]
'ஓஒ இனிதே!' } இவை பின் அடுத்தன.

'உடனுயிர் போகுக தில்ல'[2]—இது திரிந்தது.

'வருகதில் அம்மவெம் சேரி சேர.'[3]

'பண்டறியா தீர்போல் படர்கிற்பீர் மற்கோலோ!'[4]
—இவை பிறிது நின்றன.

'அன்னவை எல்லாம்' என்றதனல்,

'மன்னைச் சொல்லே'[5]
'கொன்னைச் சொல்லே'[6]

எனத் தம்மை உணர நின்றவழி ஈறு திரிதலும்,

'னகாரை முன்னர்'[7]

என எழுத்துச்சாரியை ஈறு திரிதலும் கொள்க.

254] 'மன்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [ச

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

இது, தத்தம் குறிப்பிற் பொருள் செய்வனவற்றுள் ஒன்றன் பொருட்பாகுபாடு கூறுகின்றது.

1. குறுந். 138. 2. குறுந். 57. 3. அகம். 276 : 7.
4. கலி. 39 : 38. 5. இடையியல், சூ. 4.
6. இடையியல், சூ. 6. 7. எழுத். மொழி மரபு, சூ. 19.

(இ-ள்.) மன்னைச்சொல் கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவி என்று அம்மூன்று என்ப - மன்னைச்சொல் கழிவு பொருண்மையும் ஆக்கப் பொருண்மையும் எச்சமாய் ஒழிந்து நின்ற சொற்பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம் மூன்று கூற்றை உடையது என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) 'சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே!'[1]

'புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில் ஆவியர் கோவே!'[2]

'கூரியதோர் வாள்மன், திட்பம் இன்று.'

என வரும்.

255] 'தில்' என்னும் இடைச்சோல்லின் போருள் [ரு

விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

இதுவும் அது.

(இ-ள்.) தில்லைச்சொல் விழைவே காலம் ஒழியிசைக்கிளவி என்று அம்மூன்று என்ப - தில்லைச்சொல் விருப்பமும் காலமும் ஒழிந்து நின்ற பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம் மூன்று கூற்றை உடையது என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவை [யைப்
பெறுகதில் அம்ம யானே.'[3]

எனப் பெறுதற்கண் உளதாகிய விருப்பம் கூறிற்று.

'வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்துவிடு விழுத்தூ தாங்காங் கிசைப்ப
நூலரி மாலை சூடிக் காலிற்
றமியன் வந்த'[4]

இது காலம் குறித்தது.

'வருகதில் அம்மவெம் சேரி சேர.'[5]

1. புறம். 235 : 1. 2. புறம். 147 : 8, 9. 3. குறுந். 14.
4. புறம். 284 : 1-4. 5. அகம். 276 : 7.

என, 'வந்தக்கால், இன்னது செய்வல்,' என ஒழியிசை குறித்தது.

256] 'கோன்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [சு

அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

இதுவும் அது.

(இ-ள்.) கொன்னைச்சொல் அச்சம் பயமிலி காலம் பெருமை என்று அப்பால் நான்கே - கொன்னைச்சொல் அச்சப்பொருள் பயம் இன்மைப்பொருள் காலப்பொருள் பெருமைப்பொருள் என்று கூறப்பட்ட அக்கூற்று நான்கேயாம் (எ-று.)

(உ-ம்.) 'கொன்முனை இரவூர் போல'[1]

என அச்சமும்,

'கொன்னே கழிந்தன் றிளமையும்'[2]

எனப் பயம் இன்மையும்,

'கொன்வரல் வாடை'

எனக் 'காதலன் நீங்கிய காலம் அறிந்து வருதலையுடைய வாடை' எனக் காலமும்,

'கொன்னூர் துஞ்சினும்'[3]

எனப் பெருமையும் உணர்த்திற்று.

257] 'உம்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [எ

எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பால் எட்டே உம்மைச் சொல்லே.

இதுவும் அது.

(இ-ள்.) உம்மைச்சொல் எச்சம் சிறப்பே ஐயம் எதிர் மறை முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று அப்பால் எட்டே - 'உம்' என்னும் சொல் எச்சத்தைக் குறிப்பதும் சிறப்

1. குறுந். 91. 2. நாலடி. 55. 3. குறுந். 138.

பைக் குறிப்பதும் ஐயத்தைக் குறிப்பதும் எதிர்மறையைக் குறிப்பதும் முற்றைக் குறிப்பதும் எண்ணைக் குறிப்பதும் தெரிநிலையைக் குறிப்பதும் ஆக்கத்தைக் குறிப்பதும் என அக்கூற்று எட்டாம் (எ-று.)

எச்சம், இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதும் என இரு வகைத்து. 'சாத்தனும் வந்தான்,' என்னும் உம்மை, 'கொற்றனும் வந்தான்,' என எதிரது தழீஇயிற்று. பின் வந்த 'கொற்றனும் வந்தான்,' என்பதூஉம், முன் நின்ற 'சாத்தனும் வந்தான்,' என்பதனைத் தழூவுதலின், இறந்தது தழீஇயிற்று. இனி, இவ்விரண்டினையும் எதிர்காலம் தழீஇயின ஆக்கி, 'இன்று சாத்தனும் வரும்; நாளைக் கொற்றனும் வரும்,' என்பன எதிரது தழீஇயின என்றுமாம்.

இன்னும் இவ்வெச்சந்தான் 'யான் கருவூர்க்குச் செல்வல்,' என்றாற்கு, 'யானும் அவ்வூர்க்குப் போதுவல்,' என முழுவதூஉம் தழூவுவதும், அவ்வாறு கூறினாற்கு, 'யானும் உறையூர்க்குப் போதுவல்,' என ஒரு புடை தழூவுவதும் என இரு வகைத்தாம்.

சிறப்பு, உயர்வு சிறப்பும் இழிவு சிறப்பும் என இரு வகைத்து.

'உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.'[1]

'குறவரும் மருளும் குன்றத்துப் படினே'[2]

'ஊர்க்கும் அணித்தே பொய்கை.'[3]

என்பன உயர்வு.

'அவ்வூர்ப் பூசையும் புலால் தின்னாது.'

என்பது இழிவு.

'ஒன்று, இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்

1. நாலடி. 116. 2. மலைபடு. 275. 3. குறுந். 113.

வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கண் தோன்றும் அடக்கமு முடையன்
இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையு முடையன்
அன்னான் ஒருவன்'[1]

என்புழி, 'இன்னான்' என்று துணியாமைக்கண் வருதலின், ஐயம்.

'போய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே.'[2]

என்பதும் அது.

'சாத்தன் வருதற்கும் உரியன்,' என்பது, 'வாராமைக்கும் உரியன்,' என எதிர்மறையை ஒழிபாக உடைத்தாய் நிற்றலின், எதிர்மறை. இஃது,

'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே.'[3]

எனப் பண்பு பற்றியும் வரும். இது பிறிதோர் பொருளினைத் தழுவாது ஒரு பொருளின் வினையை மறுத்து நிற்றலின், எச்சத்தின் வேறு ஆயிற்று. மேல் ஆசிரியர், 'எதிர்மறை எச்சம்'[4] என்றமையின், இஃது எச்சத்தின் கூறும்.

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்.
'யாதும் ஊரே'[5]
'நாளும் அன்னான் புகழும் அன்னை'

என்பன முற்றும்மை.

'நிலனும் நீரும் தீயும் வளியும்
ஆகா யமும்எனப் பூதம் ஐந்து.'

என்பது எண்.

---

1. கலி. 47 : 1-7. 2. குறுந். 113. 3. எழுத். தொகை மரபு, சூ. 13.
4. எச்சவியல், சூ. 39. 5. புறம். 192 : 1.

'மண்திணிந்த நிலனும்
நிலன்ஏந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்'[1]

என்பதும் அது.

'இருநிலம் அடிதோய்தலின் திருமகளும் அல்லள்;
அரமகளும் அல்லள்; இவள் யாராகும்?'

என்பது, 'திருமகளோ! அரமகளோ!' என ஐயுறுது ஆராய்தற்கண் வருதலின், தெரிநிலை.

'ஐதேய்ந் தன்று, பிறையும் அன்று;
மைதீர்ந் தன்று, மதியும் அன்று;
வேயமன் றன்று, மலையும் அன்று;
பூவமன் றன்று, சுனையும் அன்று.'[2]

என்பதும் அது.

'நெடியனும் வலியனும் ஆயினன்,' என்பது ஆக்கம்.

'செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே.'[3]

என்பது, இலக்கணம் ஆக்கிக்கோடல் குறித்தமையின், ஆக்கமும் ஆம்.

258] 'ஓ' என்னும் இடைச்சொல்லின் பொருள் [அ

பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே.

இதுவும் அது.

(இ-ள்.) பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ இருமூன்று என்ப ஓகாரம்மே - பிரிநிலைப் பொருண்மை, வினாப்பொருண்மை, எதிர்மறைப்பொருண்மை, எஞ்சிநின்ற சொற்பொருண்மை, ஆராயும் நிலைமையை உடைய பொருண்மை என்கின்ற இவற்றை மிகுதிப் பொருண்மையோடே தொகுத்து, ஓகாரப் பொருண்மை ஆறு என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

1. புறம். 2: 1-3. 2. கலி. 55: 9-12. 3. கிளவியாக்கம், சூ. 15.

(உ-ம்.) 'யானே தேறேனவர் பொய்வழங் கலரே.'[1]—இது தேறுவார் பிறரிற்பிரித்தலின், பிரிநிலை.
சாத்தன் உண்டானே ?—இது வினா.
யானே கொள்வேன் !—இஃது எதிர்மறை.
கொளலோ கொண்டான்—இது, 'கொண்டு உய்யப்போகலானாயினான்,' என்றலின், ஒழியிசை.
திருமகளோ அல்லள்; அரமகளோ அல்லள்; இவள் யார் ?—என்பது தெரிநிலை.
'ஓஒ ! உவமன் உறழ்வின்றி ஒத்ததே !'[2]—இது மிகுதி உணர்த்தலின், சிறப்பு.
'மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்'[3]

என்னும் சூத்திரத்தால் ஐயமும் கொண்டார். அது, 'பத்தோ, பதினொன்றோ !' என வரும்.

259]　　'ஏ' என்னும் இடைச்சொல்லின் பொருள்　　[கூ

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே.

இது, பெரும்பான்மை பொருள்படுமாறும், சிறுபான்மை அசைநிலை ஆமாறும் கூறுகின்றது.

(இ-ள்.) தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே ஈற்றசை இவ்வைந்து ஏகாரம்மே - தெளிவு பொருண்மை, வினாப் பொருண்மை, பிரிநிலைப் பொருண்மை, எண்ணுப்பொருண்மை, ஈற்று அசை ஆதல் என இவ்வைந்து வகைப்படும் ஏகாரம் (எ-று.)

(உ-ம்.) உண்டேஎ மறுமை !
நீயே உண்டாய் ?
அவருள் இவனே கள்வன்.
'நிலனே நீரே தீயே வளியே'
'கடல்போல் தோன்றல காடிறந் தோரே.'[4]

என வரும்.

---

1. குறுந். 21.　　2. களவழி, 36.
3. எழுத். உயிர் மயங்கியல், சூ. 88.　　4. அகம். 1 : 19.

'ஈற்றசை' என்றதனைச் செய்யுள் ஈற்றின்கண் அன்றி,

'வாடா வள்ளியங் காடிறந் தோரே.'[1]

எனச் சொல்லின் ஈற்றினும் கொள்க.

'யானே கொண்டேன்!' என்புழி, 'நீயே கொண்டாய்' என்னும் எதிர்மறைப்பொருள் தருதல், 'மாறுகொள் எச்சமும் வினவும்'[2] என்பதனால் கொள்க.

260] 'என' என்னும் இடைச்சோல்லின் பொருள் [௧௦

விணையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி.

இது பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) வினையே குறிப்பே இசையே பண்பே எண்ணே பெயரோடு அவ்வறு கிளவியும் கண்ணிய நிலைத்தே என என் கிளவி - வினைச்சொல்லின் பொருண்மையும், குறிப்பாய் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும், இசைக்கண் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும், பண்பின்கண் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும், எண்ணுப் பொருண்மையும், பெயர்ப் பொருண்மையோடே கூடி அவ்வாறு பொருண்மையும் தான் இடை நின்று கருதிப் பின் வரும் சொல்லோடு இயைவிக்கும் நிலைமையை உடைத்து 'என' என்னும் சொல் (எ-று.)

(உ-ம்.) கார் வருமெனக் கருதி நொந்தாள்.
'துண்ணெனத் துடித்தது மனம்.'
ஒல்லென ஒலித்தது.
வெள்ளென விளர்த்தது.
நிலனென நீரெனத் தீயென வளியென
'அழுக்கா றெனவொரு பாவி'[3]

என வரும்.

1. குறுந். 216. 2. எழுத். உயிர் மயங்கியல், சூ. 88.
3. குறள், 168.

'நெடுநீர்க்* குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து'[1]
என்பதும் இசை.

261] 'என்று' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கக

என்றென் கிளவியும் அதனோ ரற்றே.

இதுவும் அது.

(இ-ள்.) என்று என் கிளவியும் அதனோரற்றே - 'என்று' என்னும் இடைச்சொல்லும் 'என' என்பது போல அவ்வாறு பொருளும் குறித்து வரும் (எ-று.)

(உ-ம்.) 'நரைவருமேன் றெண்ணி'[2]
'விண்ணென்று விணைத்தது.'
'ஒல்லென் றொலிக்கும் ஒலிபுனல் ஊரற்கு'[3]
பச்சென்று பசத்தது.
நிலனென்று நீரென்று
'பாரியென் றொருவன் உளன்.'

என வரும்.

262] 'தில்' என்பதற்குப் புறனடை [கஉ

விழைவின் தில்லை தன்னிடத் தியலும்.

இது, முற்கூறிய[4] 'தில்' என்பதற்குப் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) விழைவின் தில்லை தன்னிடத்து இயலும் - 'அம் மூன் றென்ப தில்லைச் சொல்லே'[5] என்ற மூன்றனுள் விழைவின் கண் வரும் தில்லை தன்மைக்கண் அல்லது வாராது (எ-று.)

(உ-ம்.) 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவையைப்
பெறுகதில் அம்ம யானே.'[6]

எனவே, ஏனைய எல்லா இடத்திற்கும் உரிய ஆயின.

263] 'ஏ, ஓ' என்பவற்றிற்குப் புறனடை [கங

தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்
அளபின் எடுத்த இசைய என்ப.

பி-ம்: * நிலையருவ் 1. புறம். 243 : 9. 2. நாலடி. 11.
3. ஐங். ஐம். 28. 4, 5. இடையியல், சூ. 5. 6. குறுந். 14.

இஃது, ஏகார ஓகாரங்கட்குப் புறனடை கூறு கின்றது.

(இ-ள்.) தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும் அளபின் எடுத்த இசைய என்ப - முற்கூறிய தெளிவின்கண் வரும் ஏகார மும்[1] சிறப்பின்கண் வரும் ஓகாரமும்[2] இரண்டு மாத்திரையின் மிக்கு மூன்று மாத்திரையினை உடைய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) உண்டேஎ மறுமை.

'ஓஒ! உவமன் உறழ்வின்றி ஒத்ததே!'[3]

264] 'மற்று' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கசு

மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர்.

இது, பொருள்படுமாறும் அசைநிலையும் கூறுகின் றது.

(இ-ள்.) மற்று என் கிளவி வினைமாற்று அசைநிலை அப்பால் இரண்டு என மொழிமனார் புலவர் - 'மற்று' என்னும் சொல் 'முன் சொல்கின்றது ஒழிய இனி வேறு ஒன்று,' என்னும் பொருண்மையும் அசைநிலை ஆதலும் என்னும் அக்கூற்று இரண் டாம் என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) இனி மற்றொன்று உரை.

'மற்றறிவாம் நல்வினை யாமிளையம்.'[4]

'மற்றுங் கூடும்* மனைமடி துயிலே.'[5]

எனத் தொழிலும் காலமும் இடமும் பற்றி வரும்.

'அதுமற் றவலம் கொள்ளாது.'[6]

என்பது அசைநிலை.

'உரையாடாநின்றுழிப் பொருள் குறியாது 'மற்றோ' எனவும் அசைநிலை வரும்,' என்பாரும் உளர்.

பி-ம்: * கூட்டும்

1. இடையியல், சூ. 9. 2. இடையியல், சூ. 8. 3. களவழி. 36. 4. நாலடி. 19. 5. நற். 360. 6. குறுந். 12.

265] 'எற்று' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கரு

எற்றென் கிளவி இறந்த பொருட்டே.

இது, பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எற்று என் கிளவி இறந்த பொருட்டே - 'எற்று' என்னும் சொல் 'ஒன்றினிடத்துநின்றும் ஒன்று போயிற்று,' என்னும் பொருண்மை உணர்த்துதல் உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'எற்றென் உடம்பின் எழில்நலம்.'

இஃது, 'என் நலம் இறந்தது,' என நின்றது.

'எற்றேற்றம் இல்லாருள் யானேற்றம் இல்லாதேன்.'

என்பதூஉம், 'இது பொழுது துணிவு இல்லாருள் துணிவு இல்லாதேன் யான்,' என்று துணிவு இறந்தது என்பது பட நின்றது.

266] 'மற்றை' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கசு

மற்றைய தென்னும் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே.

இதுவும் அது.

(இ-ள்.) மற்றையது என்னும் கிளவிதானே - 'மற்றையது' எனப் பெயர்க்கு முதல் நிலையாய் வரும் 'மற்றை' என்னும் ஐகார ஈற்று இடைச்சொல், சுட்டு நிலை ஒழிய இனம் குறித் தன்றே - ஒருவன் முன்னர்க் கருதப்பட்ட பொருள் ஒழிய அதன் இனப்பொருளைக் கருதி நிற்கும் (எ-று.)

(உ-ம்.) ஆடை கொணர்ந்தவழி, அவ்வாடை வேண்டாதார், 'மற்றையது கொண்டு வா', என்றால், அதற்கு இனமாகிய பிற ஆடை குறித்து நிற்கும். இனிச் சிறுபான்மை 'மற்றை ஆடை' எனத் தானேயும் வரும்.

'அஃது, அவன்' என்னும் தொடக்கத்தனவற்றிற்கு 'மற்றையஃது, மற்றையவன்' என அவ்விடைச்சொல் முதல் நிலையாய் வருதலின், 'மற்றை' என இடைச்சொல்

லைப் பிரித்து ஓதாது, 'மற்றையது' என ஒன்றாக ஓதினர்.

267] 'மன்ற' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கஎ

மன்றவென் கிளவி தேற்றம் செய்யும்.

இதுவும் அது.

(இ-ள்.) மன்ற என் கிளவி தேற்றம் செய்யும் - 'மன்ற' என்னும் சொல் தெளிவுப்பொருண்மை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மடவை மன்ற வாழிய முருகே!'[1]

என 'மன்ற' அறியாமையையே தெளிவித்தது.

268] 'தஞ்சம்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கஅ

தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே.

இதுவும் அது.

(இ-ள்.) தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே - 'தஞ்சம்' என்னும் சொல் 'எளிது' என்னும் பொருண்மையை உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'முரசுகெழு தாயத் தரசோ* தஞ்சம்.'[2]

எனத் 'தஞ்சம்' அரசு கொடுத்தல் எளிது என நின்றது.

269] 'அந்தில்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [கசு

அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகும் இயற்கைத் தென்ப.

இது, பொருள்படுமாறும் அசைநிலையும் கூறுகின்றது.

(இ-ள்.) அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவி என்று ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப - 'அந்தில்' என்னும் சொல் 'ஆங்க' என்னும் இடப்பொருள் உணர்த்துதலும் அசைநிலைச்சொல் ஆதலும் என்னும் அவ்விரண்டு கூறும் இயற்கையை உடைத்து என்று கூறுவர் புலவர் (எ-று.)

பி-ம்: * அரசே 1. நற். 34. 2. புறம். 73 : 3.

(உ-ம்.) 'வருமே சேயிழை அந்தில்'[1]
'அந்தில் கச்சினன் கழலினன்.'[2]

என இடமும் அசைநிலையுமாய் நின்றது.

270] 'கோல்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [உ௦

கொல்லே ஐயம்.

இது, பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) கொல்லே ஐயம் - 'கொல்' என்னும் சொல் ஐயப் பொருண்மையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'யாதுகோல் மற்றவர் நிலையே!'[3]

'இதனளவுண்டுகோல்* மதிவல் லோர்க்கே!'[4] எனத் துணிவின்கண் ஐயம் சிறிது நினைத்தலும் 'ஒன்றென முடித்த'லால் கொள்க.

271] 'எல்' என்னும் இடைச்சொல்லின் பொருள் [உக

எல்லே இலக்கம்.

இதுவும் அது.

(இ-ள்.) எல்லே இலக்கம் - 'எல்' என்னும் சொல் விளங்கு தற்பொருண்மை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'எல்வளை எம்மொடு நீவரின்'[5]

என வரும்.

272] 'ஆர்' என்னும் இடைச்சொல் முடிபு [உஉ

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே.

இஃது, 'ஆர்' என்னும் இடைச்சொல் முடிபு கூறுகின்றது.

பி-ம்: * அதனளவுண்டுகோள்

1. குறுந். 293. 2. அகம். 76 : 6, 7.
3. அகம். 139 : 17. 4. அகம். 48 : 26. 5. கலி. 13 : 10.

(இ-ள்.) இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி-இரு திணைக்கும் இயலும் பெயர்க்கும் அஃறிணை இரு பாற்கும் இயலும் பெயர்க்கும் முன்னர் வரும் 'ஆர்' என்னும் இடைச்சொல், பலர்க்கு உரி எழுத்தின் வினையொடு முடிமே - ரஃகான் ஒற்றினை ஈறாக உடைய வினைச்சொல்லான் முடியும் (எ-று.)

(உ-ம்.) பெருஞ்சேந்தனார் வந்தார்.
முடவனார் வந்தார்.
முடத்தாமக்கண்ணியார் வந்தார்.
தந்தையார் வந்தார்.

எனவும்,

கிளியார் வந்தார்.

எனவும் வரும்.

பெரும்பான்மை இயற்பெயர் கூறவே,

நம்பியார் வந்தார்.
நங்கையார் வந்தார்.

எனச் சிறுபான்மை உயர்திணைப்பெயர் முன்னரும் வருதல் 'ஒன்றென முடித்த'லால் கொள்க. இவை தாம் ரகர ஈற்றுப் பெயர் அன்மையின், விளி ஏற்குமிடத்து இகர ஈறும் ஐகார ஈறுமாய் நின்றே விளி ஏற்கும் என்று உணர்க. ஒருமைப்பெயர் நின்று ஆரைக்கிளவியை ஏற்றலின், இவை ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியின் வேறு ஆயின.

273] 'ஆர்' என்பதற்குப் புறனடை [உரு

அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல்.

இது, மேலதற்குப் புறனடை.

(இ-ள்.) அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல் - அவ் 'ஆர்' என்னும் சொல் அசைநிலைச்சொல்லாம் இடம் அறிக (எ-று.)

'ஆகுவழி அறிதல்,' என்றதனான், உம்மை முன்னரும் 'உம்' ஈற்று வினை முன்னரும் வருதல் கொள்க.

(உ-ம்.) 'பெயரி ளுகிய தொகையுமார் உளவே.'[1]
'எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.'[2]

என வரும்.

274] 'ஏ, குரை' என்னும் இடைச்சொற்களின் பொருள் [உச

ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப.*

இஃது, இசைநிறையும் அசைநிலையும் கூறுகின்றது.

(இ-ள்.) ஏயும் குரையும் இசைநிறை அசைநிலை ஆயிரண்டு ஆகும் இயற்கைத்து என்ப - 'ஏ' என்னும் இடைச்சொல்லும் 'குரை' என்னும் இடைச்சொல்லும் இசைநிறையும் அசைநிலையும் என ஒரோவொன்று அவ்விரண்டு இயல்பினை உடைத்து என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) 'ஏஎ இஃதொத்தன் நாணிலன் தன்னொடு'[3]— இஃது இசைநிறை.

ஏஎயெனச் சொல்லியது—இஃது அசைநிலை.

'அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே'[4]— இஃது இசைநிறை.

'பல்குரைத் துன்பங்கள் சென்று படும்.'[5]—இஃது அசைநிலை.

தேற்றேகாரம் முதலியன போலச் சார்ந்த மொழியோடு ஒன்றுபட்டு இசையாது தொடர்மொழி முதற்கண் பிரிந்து இசைத்தலின் வேறு கூறினர்.

275] 'மா' என்னும் இடைச்சொல் வருமாறு [உடு

மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

இஃது, அசைநிலை கூறுகின்றது.

(இ-ள்.) மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல் - 'மா' என்னும் இடைச்சொல் பெரும்பான்மை வியங்கோளைச் சார்ந்து அசைநிலையாய் வரும் (எ-று.)

பி-ம்: * இயற்கைய என்ப.

1. வேற்றுமையியல், சூ. 6. 2. எழுத். மொழி மரபு, சூ. 28.
3. கலி. 62 : 1. 4. புறம். 5 : 9. 5. குறள், 1045.

(உ-ம்.) 'புற்கை உண்கமா கொற்கை யோனே!'

என வரும்.

276] முன்னிலை அசைச்சொற்கள் [உசு

மியாஇக மோமதி இகும்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.

இதுவும் அது.

(இ-ள்.) மியா இக மோ மதி இகும் சின் என்னும் ஆவயின் ஆறும் - 'மியா, இக, மோ, மதி, இகும், சின்' என்று சொல்லப் பட்ட அவ்விடத்து இடைச்சொல் ஆறும், முன்னிலை அசைச் சொல் - முன்னிலைப்பொருளை உணர்த்தும் அசைச்சொல்லாம் (எ-று.)

(உ-ம்.) கேண்மியா, சென்மியா

எனவும்,

கண்பனி யான்றிக என்றி தோழி!'

எனவும்,

'காமம் செப்பாது கண்டது மொழிமோ.'[1]

எனவும்,

'உரைமதி வாழியோ வலவ!'

எனவும்,

'மெல்லம் புலம்ப! கண்டிகும்.'

எனவும்,

'காப்பும் பூண்டிசின் கடையும் போகலை.'*[2]

எனவும் வரும்.

277] 'இகும், சின்' என்பவற்றிற்குப் புறனடை [உஎ

அவற்றுள்,
இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்
தகுநிலை உடைய என்மனார் புலவர்.

இது, மேலதற்குப் புறனடை கூறுகின்றது.

பி-ம்: * போகல் 1. குறுந். 2. 2. அகம். 7: 5.

(இ-ள்.) அவற்றுள் இகுமும் சின்னும் - முற்கூறிய ஆறனுள் இகுமும் சின்னும், ஏனை இடத்தொடும் தகுநிலை உடைய என்மனார் புலவர் - ஒழிந்த தன்மைச்சொல்லோடும் படர்க்கைச் சொல்லோடும் பொருந்தும் நிலைமை உடைய என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'கண்டிகும் அல்லமோ !'[1]
'கண்ணும் படுமோ என்றிசின் யானே.'[2]

எனத் தன்மைக்கண்ணும்,

'புகழ்ந்திகும் அல்லரோ பெரிதே ?'
'யாரஃ தறிந்திசி னோரே ?'[3]

எனப் படர்க்கைக்கண்ணும் வந்தன.

முருகாற்றுப்படையுள்,

'விளவின்
றிருள்நிற முந்நீர் வளைஇய உலகத்
தொருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி; பலவுடன்
*		*		*
*		*		மலைகிழ வோனே !'[4]

என 'மதி' படர்க்கைக்கண்ணும் வந்ததனைத் 'தகுநிலை உடைய' என்றதனானதல்,

'அவ்வச் சொல்லிற் கவையவை'[5]

என்னும் சூத்திரத்தானதல் அமைத்துக்கொள்க. அன்றி, மதியை அறிவாக்கிப் 'பல அறிவுடனே நீ ஒருவனே யாகப் பரிசில் நல்கும்' எனப் பொருள் கூறுவாரும் உளர்.

'ஊனு மூனு முனையின்'[6] என்னும் புறப்பாட்டினுள்,

'சென்மோ பெரும!எம் விழவுடை நாட்டென'

என்பதனையும் தன்மைக்கண் 'மோ' வரும் என இவ்வாறு அமைத்தலும் ஒன்று. அன்றிப் 'பெரும, எம் விழவுடை

1. ஐங்குறு. 121.	2. நற். 61.	3. குறுந். 18.
4. முருகு. 292-295, 317.	5. இடையியல், சூ. 47.	6. புறம். 381.

நாட்டே நீ செல்,' என்று சுற்றத்தார் தலைவனை நோக்கிக் கூற, அப்பொருநனும் பாட்டுடைத் தலைவனை நோக்கிப் பின்னும் கூறினுனாகப் பொருள் கூறுதலும் ஒன்று.

278] 'அம்ம' என்னும் இடைச்சொல்லின் பொருள் [உஅ

அம்மகேட் பிக்கும்.

இது, பொருள்படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அம்ம கேட்பிக்கும் - 'அம்ம' என்னும் சொல், 'யான் கூறுகின்றதனைக் கேள்,' என்று ஒருவர்க்குக் கேட்பிக்கும் பொருண்மையினை உணர்த்தி நிற்கும் (எ-று.)

சொல்லொடு பொருட்கு ஒற்றுமை கருதிக் 'கேட்பிக்கும்' என்றார்.

(உ-ம்.) 'அம்ம வாழி தோழி!'[1]

'அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்'[2] என்புழியும் பொருள் தந்தே நிற்குமாறு கூறியவாறு ஆண்டு உணர்க.

279] 'ஆங்க' உரையசை என்பது [உகூ

ஆங்க உரையசை.

இதுவும் அது.

(இ-ள்.) ஆங்க உரையசை - 'ஆங்க' என்னும் இடைச்சொல் கட்டுரைக்கண்ணே அசைத்த நிலையாய் வரும் (எ-று.)

கட்டுரை-புனைந்துரை. அசைத்தல்-சேர்த்துதல்.

(உ-ம்.) 'ஆங்கக் குயிலும் மயிலும் காட்டிக்
கேள்வனை* விடுத்துப் போகி† யோளே.'

என்புழி 'அங்ஙனே' எனப் புனைந்துரைத்து நின்றது.

சிறிது பொருள் உணர்த்துவனவற்றை 'உரையசை' என்றும், பொருள் உணர்த்தாது சொற்களை அசைத்து நிற்பனவற்றை 'அசைநிலை' என்றும் கூறுதல் ஆசிரியர் கருத்து ஆதலை இரண்டு அதிகாரத்தும் கண்டுகொள்க.

பி-ம்: * கேசவனை † போக்கி

1. ஐங்குறு. 31; குறுந். 77. 2. விளி மரபு, சூ. 36.

280] ஒப்பில் போலி [௨௮௦

ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) ஒப்பில் போலியும் அப்பொருட்டு ஆகும் - ஒன்றற் கொன்று ஒக்கும் என்னும் பொருள் தன்கண் இன்றி வரும் 'போலி' என்னும் சொல்லும் அக்கட்டுரைக்கண்ணே அசைத்த நிலையாகிய பொருளை உடைத்தாய் வரும் (எ-று.)

'அப்பொருட்டு' எனவே, ஆங்கவும் பொருள் தருதல் பெற்றும்.

(உ-ம்.) மங்கலம் என்பதோர் ஊர் உண்டு போலும் !
'நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும்.'[1]

எனப் 'போலும்' என்னும் இடைச்சொல் ஊரையும் நெய்யையும் புணர்ந்து நின்றவாறு காண்க.

281] அசைநிலைச் சொற்கள் [௨௮௧

யாகா,
பிறபிறக் கரோபோ மாதென வருஉம்
ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.

இஃது, அசைநிலை கூறுகின்றது.

(இ-ள்.) யா கா பிற பிறக்கு அரோ போ மாது என வருஉம் ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி - 'யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது' என்று சொல்ல வருகின்ற அவ் வேழு சொல்லும் தாம் சார்ந்த சொல்லை அசைத்து நிற்கும் நிலைமையை உடைய சொல்லாம் (எ-று.)

(உ-ம்.) யா பன்னிருவர் மாணக்கர் உளர் அகத்தியனார்க்கு.

எனவும், இன்னும்,

---

1. நாலடி. 124.

'தோழியா* சுவாகதம் போது கீங்கென'[1]

என்று பாடமாயின் அதுவும் இதற்கு உதாரணம்.

'புறகிழற்† பட்டாளோ இவளிவட் காண்டிகா'[2]

எனவும்,

'தான்பிற
வரிசை அறிதலின் தன்னுந் தூக்கி'[3]

எனவும்,

'நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய'[4]

எனவும், .

'நோதக
இருங்குயில் ஆலு மரோ.'[5]

எனவும்,

'பிரியின் வாழா தென்போ தெய்ய'

எனவும்,

'விளிந்தன்று மாதவர்த்‡ தெளிந்தவென் னெஞ்சே.'[6]

எனவும் வரும்.

282] பிரிவில் அசைநிலைச் சொற்கள் [நூ.உ

ஆக ஆகல் என்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசை நிலை.

இது, தாம் சார்ந்து நின்ற சொல்லின் பொருண்மையை உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களைக் கூறுகின்றது.

(இ-ள்.) ஆக ஆகல் என்பது என்னும் ஆவயின் மூன்றும்- 'ஆக, ஆகல், என்பது' என்று சொல்லப்படுகின்ற அவ்விடத்து மூன்றும், பிரிவு இல் அசைநிலை - தாம் சார்ந்த சொற்களின் பொருள்களைப் பிரிதல் இன்றி உணர்த்தும் அசைநிலையாம் (எ-று.)

பி-ம்: * தோழியர் † புறகிழற்கீழ்ப் ‡ மாதவர்

1. சீவக. 1021. 2. கலி. 99 : 9. 3. புறம். 140 : 5, 6.
4. புறம். 15 : 15. 5. கலி. 33 : 24, 25. 6. நற். 178.

(உ-ம்,) 'காரெதிர் கானம் பாடினே மாக'[1]
'இனைதல் ஆனு ளாக'[2]
'சோல்லற் பாணி நின்றன னாக'[3]

எனச் செயவெனெச்சம் முற்றுய்த் திரிவுழி 'ஆக' என்னும் இடைச்சொல் வந்து அவற்றின் பொருளே உணர்த்திச் செயவெனெச்சமாய் நின்றது. இவ்வினையெச்ச முற்று வினைமுதலைக் கொள்ளும்வழி, 'ஆகல்' என்னும் இடைச்சொல்லைப் பெற்று நிற்கும்.

'அருளா யாகலோ கொடிதே'[4]
'தன்பெய ராகலின் நாணி'[5]
'அனையை யாகன் மாறே.'[6]

என 'ஆகல்' என்னும் வினைக்குறிப்புச்சொல் சார்ந்து நின்ற சொற்பொருளையே உணர்த்தி நின்றது. தெரிநிலைக்கும் குறிப்பிற்கும் உரிய இவ்விரண்டு இடைச்சொற்களும் சிறுபான்மைய ஆகலின், வினையியற்கண் எடுத்து ஓதாராயினர்.

'நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தாள் என்பதோ
........துறந்ததை.'[7]
'எறிதிரை இமிழ்கானல் எதிர்கொண்டாள் என்
பதோ........துறந்ததை'[8]

என்புழி 'என்பது' என்றது, 'என்று சொல்லப்படுவது' என்னும் பொருள் தந்து நில்லாது, 'வாய்த்தாள், எதிர் கொண்டாள்' என்னும் சொற்கள் உணர்த்திய செய்ந்நன்றியைத் தானும் உணர்த்தி நின்றவாறு காண்க.

இவை தாம் சார்ந்த சொல்லை அசைத்தே நிற்கும் என்றலின், 'பிரிவில் அசைநிலை' என்ருர். இங்ஙனம் நில்லாது, வழக்கின்கண் 'ஆக ஆக' என அடுக்கி வந்து, உடம்படாமையும் ஆதரம் இன்மையுமாகிய பொருள்

1. புறம். 144 : 3. 2. புறம். 144 : 6. 3. குறிஞ்சி. 152.
4. புறம். 144 : 1. 5. புறம். 152 : 22. 6. புறம். 4 : 17.
7. கலி. 127 : 7, 9. 8. கலி. 127 : 11, 13.

தந்து நிற்கும் என்றல் அசைநிலைக்கு ஆகாமையின், அவ்வாறு கூறுதல் பொருள் அன்மை உணர்க.

283] 'ஔ' என்பதன் பொருள் வேறுபாடு [௩௩

ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையும் காலத் தானும்
அளபெடை நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரு காலையும்
உளவென மொழிப பொருள்வேறு படுதல்;
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.

இது, பொருள் வேறுபடுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) ஈரளபு இசைக்கும் இறுதியில் உயிரே - இரண்டு மாத்திரையை இசைக்கும் 'உயிர்ஔ எஞ்சிய இறுதியாகும்,'[1] என்றதனான் மொழிக்கு ஈருகாது என்ற ஔகாரம், ஆயியல் நிலையும் காலத்தானும் - 'கவவோ டியையின் ஔவு மாகும்,'[2] என்ற இயல்பின்கண்ணே 'கௌ, வௌ' என மொழிக்கு ஈருய் நிற்கும் காலத்துக்கண்ணும் ('எவ்வாறு நிற்கும்?' எனின்), அளபெடை நிலையும் காலத்தானும் அளபெடை இன்றித் தான் வரு காலையும் உள என மொழிப பொருள் வேறுபடுதல் - அவை அளபெடுத்து நிற்கும் காலத்தினும் அளபெடாது நிற்கும் காலத்தினும் பொருள் வேறுபடுதல் உளது என்று கூறுவர் ஆசிரியர்; குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும் - அப்பொருள் வேறுபாடுதான் சொல்லுவான் குறிப்பினன் உளதாம் ஓசை வேறுபாட்டான் வழிப்படப் புலப்படும் (எ-று.)

முன்னர் நின்ற உம்மை சிறப்பும்மை. பின்னர் நின்ற இரண்டும் எண்ணும்மை.

ஆசிரியர் முன்னர்க் கூறியதனை ஈண்டும் 'இறுதியில் உயிரே' என்று 'ஒருதலை மொழி'*[3] என்னும் உத்தியாகக் கூறினமையானும், உரையாசிரியரும்,

---

பி-ம்: * மொழிதல்

1. எழுத். மொழி மரபு, சூ. 36.
2. எழுத். மொழி மரபு, சூ. 37.
3. மரபியல், சூ. 110.

'நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி'[1]

என்புழி ஔகாரத்தினை உதாரணம் காட்டாது, 'கவவோ டியையின்' என்பதனால் 'கௌ, வௌ' என உதாரணம் காட்டினமையானும், ஈண்டு,

'ஆயியல் நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரு காலையும்'

என்னும் இரண்டற்கும் 'ஔஉ, ஔ' என்று உயிரையே உதாரணமாகக் காட்டுதல் 'மாறுகோளக் கூறல்'[2] ஆம் என்று உணர்க.

(உ-ம்.) 'கௌஉ' என அளபெடுத்தவழிக் 'கைக்கொண்டே விடு' எனத் துணிவும், 'கௌ' என அளபெடாத வழி 'நினக்குக் கருத்தாயின், கைக்கொள்,' என ஐயமும் உணர்த்தும். இது 'வௌ' என்பதற்கும் ஒக்கும்.

இனி, ஔகாரம் அளபெடுத்துழி உகர ஈறுயே நிற்றலின், 'ஔஉ' என உகர ஈறுகிய ஔகாரமும் ஈண்டுக் கோடும். இது வியப்பு உணர்த்தும் அளபெடா ஔகாரம் ஆகாது என்று உணர்க.

284] சொல்லுவான் குறிப்போடு பொருள் உணர்த்துவன [நூச

நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.

இதுவும் அது.

(இ-ள்.) நன்று ஈற்று ஏயும் - நன்றினது ஈற்றின்கண் வந்த ஏயும், அன்று ஈற்று ஏயும் - அன்றினது ஈற்றின்கண் வந்த ஏயும், அந்து ஈற்று ஓவும் - அந்தினது ஈற்றின்கண் வந்த ஓவும், அன் ஈற்று ஓவும் - அன்னினது ஈற்றின்கண் வந்த ஓவும், அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும் - அவை போல்வன பிறவும் சொல்லுவான் குறிப்போடு பொருள் உணர்த்திநிற்கும் (எ-று.)

1. எழுத். மொழி மரபு. சூ. 10. 2. மரபியல், சூ. 108.

ஒருவன், 'கொலை, களவு, கள், காமம், பொய் என்பனவற்றை விரும்புக,' என்றவழி, 'அவற்றை விரும்புதல் நன்றே!' என்றால், மேவாமைக்குறிப்பு உணர்த்தும்.

'நின்றே எறிப பறையினை—நன்றேகாண்'[1]

என்பது, 'தீது' என்னும் குறிப்பு உணர்த்தும்.

'இஃது ஊழன்றே!' என்றால், 'அஃது இங்ஙன் நுகர்வியாது ஒழியுமோ ?' என்னும் குறிப்பு உணர்த்தும்.

'அந்தோ! எந்தை அடையாப் பேரில்'[2]

• 'அன்னோ! என்னாவதுகொல் தானே!'[3]

என்பன இரக்கக் குறிப்பு உணர்த்தும்.

இவ்வேகார ஓகாரங்கள் பல சொல்லோடு அடுத்து வராது இச்சொற்களையே அடுத்துப் பொருள் வேறுபட்டு நிற்றலின், அவற்றைப் பெயர் தந்து வேறு கூறினர்.

'அன்ன பிறவும்' என்றதனான்,

'அன்னா! அலமரும் ஆருயிரும்'

என்புழி 'அன்னா' இரக்கக் குறிப்பு உணர்த்துதல் கொள்க. இதனை ஓகாரம் ஆகாரமாய்த் திரிந்தது என்றலும் ஆம்.

'ஏஎ* இவளொருத்தி பேடியோ என்றார்.'[4]

என ஏகாரத்தின் பின் வந்த எ இழிபு உணர்த்துதலும்,

'அஆ இழந்தான்!'[5]

எனவும்,

'ஐயாவென் ஐயாவென் ஐயா அகன்றனையே!'[6]

எனவும்,

'ஆவம்மா அம்மாவென் அம்மா அகன்றனையே!'[7]

எனவும் ஆகாரம் இரக்கக்குறிப்பு உணர்த்துதலும், பிறவும் கொள்க.

பி-ம்: * எஎ, எயே

1. நாலடி. 24. 2. புறம். 261 : 1.
3. புறம். 345 : 18, 19. 4. சீவக. 652.
5. நாலடி. 9. 6. சீவக. 1802. 7. சீவக. 1804.

285]   உம்மைகள் மயங்குமாறு   [கூரு

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும்; உடனிலை இலவே.

இது, முற்கூறிய உம்மைகள் மயங்கும் என்கின்றது.

(இ-ள்.) எச்ச உம்மையும் - எச்சப் பொருண்மையினை உடைய உம்மையும், எதிர்மறை உம்மையும் - அதனை முடிக்க வரும் எதிர்மறைப் பொருண்மையினை உடைய உம்மையும், தத்தமுள் மயங்கும்-தொடராய் வந்து தம்முள் மயங்கும்; உடனிலை இலவே - அங்ஙனம் மயங்கிற்றேனும் தன் வினை ஒன்றிய முடிபு கொள்ளா (எ-று.)

(உ-ம்.) 'சாத்தனும் வந்தான்; இனிக் கொற்றனும் வரினும் வரும்,' என்புழிச் 'சாத்தனும் கொற்றனும்' என்னும் எச்ச உம்மைகள் 'வரினும்' என்னும் எதிர்மறை உம்மையோடு தொடர்ந்து நின்று ஒரு வினை கொள்ளாது, இறப்பும் எதிர்வும் பற்றி வரும் வேறு வினை கொண்டவாறு காண்க. இங்ஙனம் உலக வழக்கு உண்மையானும், ஆசிரியர் 'மயங்கி உடனிலை இல,' என்னாது, 'மயங்கும் உடனிலை இல,' எனச் சூத்திரம் செய்தமையானும், இதுவே பொருள் என்று உணர்க. இவ்விரண்டு உம்மையும் எச்சம் ஆதலின், இவற்றிற்கே மயக்கம் உளது என்று கூறினார்.

'ஒன்றென முடித்தல்' என்பதனான், 'வடுகரசரும் வந்தார்; இனித் தமிழ் நாட்டு மூவேந்தரும் வரினும் வருவர்,' என எச்ச உம்மையோடு முற்றும்மை தொடர்ந்து வேறு வினை கோடலும் கொள்க.

286]   எச்ச உம்மை நிற்றற்குரிய இடம்   [கூசு

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் ஆயின்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்.

இஃது, எச்ச உம்மைக்கண் சொல்லுதல் வகைமை கூறுகின்றது.

(இ-ள்.) எஞ்சு பொருட்கிளவி-எச்ச உம்மையால் தழுவப் படும் எஞ்சுபொருட்கிளவி, செஞ்சொல் ஆயின் பிற்படக் கிள வார் முற்படக் கிளத்தல் - உம்மை இல் சொல்லாயின் அவ் வும்மை இல் சொல்லை அவ்வும்மைத் தொடர்க்குப் பின் சொல் லாது முன் சொல்லுக (எ-று.)

(உ-ம்.) சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான்.

'அடகுபுலால் பாகு பாளிதமும் உண்ணான்
கடல்போலும் கல்வி யவன்.'

என வரும். பிற்படக் கிளப்பின் பொருள் கொள் ளாமை காண்க. 'செஞ்சொல் ஆயின் முற்படக் கிளக்க,' எனவே, 'உம்மையோடு வரின் பிற்படக் கிளக்க,' என்ற வாறும்.

287] முற்றும்மை எச்ச உம்மையாகும் வழுவமைதி [௩௭

முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்
எச்சக் கிளவி உரித்தும் ஆகும்.

இது, முற்றும்மை எச்ச உம்மையாம் பொருள் தரும் என வழு அமைக்கின்றது.

(இ-ள்.) முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின் - முற்றும்மை அடுத்து நின்ற பெயரும் வினையும் சார்ந்த சொல் லிடத்து, எச்சக்கிளவி உரித்தும் ஆகும் - எச்சச்சொல் உரித் தும் ஆகும் (எ-று.)

எனவே, எச்சப்பொருள் குறியாது நிற்றலே பெரும் பான்மை. 'ஏற்புழிக் கோட'லால், இஃது எதிர்மறைக் கண்ணது எனக் கொள்க.

(உ-ம்.) பத்தும் கொடால். அனைத்தும் கொடால்.

என்னும் முற்றும்மைகள், 'சில கிடக்கக் கொடு,' என எச்சப்பொருள் உணர்த்தி நின்றவாறு காண்க. 'தொகைச்சொல்' என்றதனனே, 'எல்லாரும் வாரார்,'

எனப் பொருட்பெயர்க்கண்ணும் கொள்க. 'பத்தும் கொடு; பிறவும் கொடு,' என்பது கருத்தாயின், அஃது எச்ச உம்மையாம்.

288] ஈற்றசை ஏகாரத்திற்கு அளபு ஒன்று [௯அ

ஈற்று நின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே.

இஃது, ஈற்றசை ஏகாரத்திற்கு வேறோர் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) ஈற்று நின்று இசைக்கும் ஏ என் இறுதி-செய்யுள் இறுதிக்கண் நின்று இசைக்கும் ஈற்றசை ஏகாரம், கூற்றுவயின்-அச்செய்யுளிடத்துப் பா என்னும் உறுப்பினை நிலைபெறக் கூறுமிடத்து, ஓர் அளபு ஆகலும் உரித்தே - தனக்கு உரிய இரண்டு மாத்திரையே அன்றிப் பின்னரும் ஒரு மாத்திரை உண்டாய் வருதலும் உரித்து (எ-று)

உம்மையான், மூன்று மாத்திரை பெறாது இரண்டு மாத்திரை பெற்று வருதலும் உரித்தாயிற்று. பா என்னும் உறுப்பினை நிலைபெறக் கூறுமிடத்து மூன்று மாத்திரை பெறுவது செய்யுள் இறுதிக்கண் நிற்கும் ஈற்றசையே என்பது அறிவித்தற்கு 'ஏயென் இறுதி' என்று மீட்டும் கூறினர்.

(உ-ம்.) 'கடல்போல் தோன்றல காடிறந் தோரேஎ*'[1]
'அகில்படு கள்ளியங் காடிறந் தோரேஎ*.'
'தண்கடல் வேலிநின் குடநா டற்றேஎ*.'

இவை போல்வன பிற சான்றோர் செய்யுட்களெல்லாம் மூன்று மாத்திரை பெற்றுப் பா என்னும் உறுப்பை விளக்கி நிற்குமாறு காண்க.

இனி,

'அவரே†, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரேஎ*.'[2]

பி-ம்: * தோரே, டற்றே † அவரேஎஎ
1. அகம். 1: 19. 2. குறுந். 216.

எனச் செய்யுள் இடைக்கண் வரும் ஈற்றசை ஏகாரம் இரண்டு மாத்திரை பெற்றுப் பா என்னும் உறுப்பை விளக்கி நின்றவாறு காண்க. இஃது ஈற்றசையாகலின், செய்யுளியலிற்கூறும் மாத்திரை என்னும் உறுப்பின் கண் அடங்காது என்று ஈண்டுக் கூறினர், அது பெரும் பான்மை பொருள் தரும் சொற்கே விதியாகலின்.

289] எண்களுக்கு முடிபு வேற்றுமை [நகூ

உம்மை எண்ணும் எனவென் எண்ணும்
தம்வயின் தொகுதி கடப்பா டிலவே.

இஃது, எண்களுக்கு முடிபு வேற்றுமை கூறு கின்றது.

(இ-ள்.) உம்மை எண்ணும் என என் எண்ணும் - உம்மை யான் வரும் எண்ணும் எனவான் வரும் எண்ணும், தம்வயின் தொகுதி கடப்பாடு இலவே - தத்தம் இறுதிக்கண் தொகைச் சொல் பெறுதலை முறைமையாக உடைய அல்ல (எ-று.)

எனவே, தொகை பெற்றும் பெறாதும் வரும் என்பதாம்.

(உ-ம்.) 'உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின'[1]
'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி'[2]
'நிலனென நீரெனத் தீயென வளியென
நான்கும்'
'உயிரென உடலென இன்றி யமையா'

என வரும்.

'தொகை' எனப் பொதுப்படக் கூறிய அதனல், எண்ணுப்பெயரே அன்றி, 'அனைத்தும், எல்லாம்' என்னும் தொடக்கத்தனவும் கொள்க.

1. பெயரியல், சூ. 6. 2. உரியியல், சூ. 1.

290] எண்ணேகாரம் இடையிட்டும் வரும் [சo

எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக்குறித் தியலும் என்மனார் புலவர்.

இஃது, எண்ணிடத்து வழு அமைக்கின்றது.

(இ-ள்.) எண் - உம்மையும் ஏகாரமும் எனவும் என்றும் எனாவும் என்றாவும் செவ்வெண்ணுமாகிய எழுவகை எண்களுள் ஒன்று முதல் நின்று, ஏகாரம் இடையிட்டுக்கொளினும் - ஏகார எண்ணைத் தன்னிடத்தே அழைத்துக்கொண்டு நிற்பினும் பிற எண்களைத் தன்னிடத்தே அழைத்துக்கொண்டு நிற்பினும், எண்ணுக் குறித்து இயலும் என்மனார் புலவர் - பல எண் வந்தனவென்று குற்றமாகா, தான் உணர்த்தும் எண்ணுப் பொருளையே அப்பலவும் குறித்து நடக்கும் என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில் உணர்வுடை யோர்.'

'தோற்றம் இசையே நாற்றம் சுவையே
உறலோ டாங்கைம் புலனென மொழிப.'

இவை செவ்வெண் நின்று ஏகார எண்ணை இடையிட்டன.

'மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ'[1]

என்பது, செவ்வெண் நின்று 'எனா' எண்ணை இடையிட்டது.

'வண்ணம் வடிவே அளவே சுவையே'[2]

என்னும் சூத்திரம், செவ்வெண் நின்று, ஏகார எண்ணையும் 'என்றா' என்னும் எண்ணையும் இடையிட்டது.

'யாத்த சீரே அடியாப் பெனாஅ'[3]

என்பது, ஏகார எண் செவ்வெண்ணையும் எனாவையும் இடையிட்டது. ஒழிந்த எண்களும் இவ்வாறு வருமாறு சூத்திரங்களுள்ளும் செய்யுட்களுள்ளும் காண்க.

1,3. செய்யுளியல், சூ. 1. 2. வேற்றுமையியல், சூ. 17.

291] 'எனு, என்று' இரண்டும் எண்ணில் வருதல் [சக

உம்மை தொக்க எனுவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணுவழிப் பட்டன.

இஃது, எண்ணும்மை பிற எண்ணோடு மயங்குங்கால் சிறந்து வரும் என்கின்றது.

(இ-ள்.) உம்மை தொக்க எனு என் கிளவியும் - முன்னர் எண்ணும்மை அடுக்கி நின்ற 'எனு' என்னும் இடைச்சொல்லும், ஆ ஈறு ஆகிய என்று என் கிளவியும் - முன்னர் எண்ணும்மை அடுக்கி நின்ற ஆகாரத்தை ஈறாக உடைய 'என்று' என்னும் இடைச்சொல்லும், ஆயிரு கிளவியும் எண்ணுவழிப்பட்டன - அவ்விரண்டு சொல்லும் எண்ணுமிடத்தே சிறந்து வரும் (எ-று.)

(உ-ம்.) 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்று'[1]

என்னும் சூத்திரம், உம்மை தொக்க என்றாவிற்கு உதாரணம். உம்மை தொக்க 'எனு' வந்துழிக் காண்க.

இனி, 'உம்மை தொக்க' என்பதற்கு 'நிலன் எனுவும்' என ஈற்று நின்ற உம்மை தொக்கு 'நிலன் எனு' என்றல் வழக்கம் இன்மையானும், எனுவும் என்றாவும் எண்ணிடைச்சொல்லாதல் மேலிற்சூத்திரத்தால் பெறப்படுதலானும், இதுவே ஆசிரியர் கருத்து.

292] எண்ணிடைச் சோற்களுக்கு முடிபு வேற்றுமை [சஉ

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குறி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின் றியலா.

இஃது, எண்ணிடைச்சொற்கட்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

1. பொருளியல், சூ. 53.

(இ-ள்.) அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும் - முற்கூறிய 'எனா, என்று' என்பனவற்றான் வரும் எண்ணுச் சொற்களின் இறுதியும், பெயர்க்கு உரி மரபிற் செவ்வெண் இறுதியும்- இடைச்சொல்லான் அன்றிப் பெயரான் எண்ணப்படும் செவ்வெண்ணின் இறுதியும், ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும் - ஏகாரத்தான் வரும் எண்ணுச் சொற்களின் இறுதியும், யாவயின் வரினும் தொகை இன்று இயலா - யாதானும் ஓரிடத்து வரினும் தொகை இன்றி நடவா (எ-று.)

(உ-ம்.) நிலனெனா நீரெனா இரண்டும்
நிலனென்று நீரென்று இரண்டும்
நிலம் நீரென இரண்டும்
நிலனே நீரேயென இரண்டும்

என வரும்.

'இறுதியும்' என்றது, 'அவ்வெண்ணுக்கண் இறுதி தொகை பெறும்,' என்றற்கு. 'பெயர்க்குரி மரபின்' என்றது, 'மற்றைய எல்லாம் இடைச்சொல்; செவ்வெண்ணுப் பெயர் தம்மாலே ஆம்,' என்றற்கு.

293] உம்மை எண்ணில் உருபு தொகுதல் [சஙு

உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார்.

இஃது, உம்மையும் உருபும் தொக்கவழியும் 'உருபு தொகை' எனப்படும் என வழூ அமைத்தது.

(இ-ள்.) உம்மை எண்ணின் - உம்மையான் வரும் எண்ணின்கண், உருபு தொகல் வரையார் - இரண்டாவதும் ஏழாவதும் தொக்கு நிற்றலை நீக்கார் ஆசிரியர் (எ-று.)

'உம்மை எண்' எனப் பொதுப்படக் கூறுதலின், உம்மை தொக்குழியும் விரிந்துழியும் உருபு தொகுதல் கொள்க.

(உ-ம்.) புலிவிற்கெண்டை
யாணைதேர்குதிரைகாலாள்

என்னும் பல பெயர் உம்மைத் தொகைகள் ஒருசொல் நடையவாய்க் 'கிடந்தன, வந்தன' என்னும் தம் வினையாகிய பயனிலைகளைக் கொள்ளும்வழியும்,

புலியும் வில்லும் கெண்டையும் கிடந்தன.
யானையும் தேரும் குதிரையும் காலாளும் வந்தன.

என உம்மை விரிந்து நின்ற பொருளைத் தந்தே நிற்குமாறு போல, இவ்வும்மைத் தொகைகள்,

புலிவிற்கெண்டை வைத்தான்.
யானைதேர்குதிரைகாலாள் எறிந்தான்.

என உருபு ஏற்று நின்றவழியும்,

புலியும் வில்லும் கெண்டையும் வைத்தான்.
யானையும் தேரும் குதிரையும் காலாளும் எறிந்தான்.

என உம்மை விரிந்து நின்ற பொருளைத் தந்தே நிற்றல் வேண்டும். அங்ஙனம் உம்மை விரிந்து நிற்குமிடத்து 'வைத்தான்' என்னும் வினைமுதல் வினைக்குப் புலியும் வில்லும் கெண்டையும் செயப்படு பொருளாய் இரண்டாம் உருபே விரித்து நிற்றலும், 'எறிந்தான்' என்னும் வினைமுதல் வினைக்கு யானை முதலியன செயப்படு பொருளாய் இரண்டாம் உருபே விரித்து நிற்றலும் உணர்க.

'குன்றி கோபம் கொடிவிடு பவளம்
ஒண்செங் காந்தள் ஒக்கும் நின்னிறம்.'

என்னும் பல பெயர் உம்மைத்தொகைக்கும் உம்மையும் உருபும் விரித்தே பொருள் உரைக்க. இக்குன்றி முதலியவற்றைச் செவ்வெண் ஆக்கி, 'இவற்றை' எனத் தொகை கொடுத்து உருபு விரித்துழியும் அச்சுட்டு அக்குன்றி முதலியவற்றையே சுட்டுதலின், அக்குன்றி முதலியன செயப்படு பொருளாயே நிற்குமாறு முணர்க. அன்றி அவை செவ்வெண் ஆயின்,

'நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரியை.'[1]

1. பதிற். 14 : 1, 2.

என்றாற்போல உம்மையும் உருபும் விரித்தற்குப் பொருந்தாது எழுவாயாய், 'நான்கு' என்னும் தொகைச்சொற் பயனிலை கொண்டு நிற்றல் வேண்டும் என்று உணர்க. இவை உம்மைத்தொகைக்கண் உருபு தொக்கன. 'இங்ஙனம் இரண்டு தொக்கனவற்றை என்ன தொகை என்று கோடுமோ!' எனின், 'புலியையும் வில்லையும் கெண்டையையும் வைத்தான்,' என விரித்துழி எண்ணுப்பொருள் தந்து நிற்கும் உம்மையினும் சொற்றொடர்ப்பொருளை உணர்த்தி நிற்பது உருபு ஆதலின், அச்சிறப்பு நோக்கி 'உருபு தொகை' என்றே கோடும்.

இனி,

'பாட்டும் கோட்டியும் அறியாப் பயமில்
தேக்கு மரம்போல் நீடிய ஒருவன்'
'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி'[1]

என்னும் இவை, உம்மை விரிந்து நின்று, உருபு தொக்கன.

294]　　　'உம்' என்பது 'உந்து' எனத் திரிதல்　　　[சச

உம்மூந் தாகும் இடனுமார் உண்டே.

இஃது, 'உம்' என்னும் இடைச்சொல் திரியும் என்கின்றது.

(இ-ள்.) உம் உந்து ஆகும் இடனுமார் உண்டே - 'வினைசெயல் மருங்கிற் காலமொடு வரு'வனவற்றுள்[2] 'உம்' ஈறு உந்தாய்த் திரிதலும் உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து'[3]
'நாரரி நறவி னுண்மகிழ் தூங்குந்து'[4]

என வரும்.

'இடனுமார் உண்டே,' என்றதனான், இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க.

---

1. உரியியல், சூ. 1.
2. இடையியல், சூ. 2.
3. புறம். 395 : 11.
4. புறம். 400 : 14.

295] எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்களோடும் [சரு
வருதல்

வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா;
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே.

இஃது, எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்கண்ணும் வரும் என்கின்றது.

(இ-ள்.) எண்ணு வினையொடு நிலையினும் நிலை திரியா - எண்ணிடைச்சொற்கள் பெயர்ச்சொல்லோடு அன்றி வினைச் சொல்லோடு நிற்பினும் தத்தம் நிலைமையின் திரியா; அவற் றவற்று இயல்பு நினையல் வேண்டும் - அவற்றவற்று இலக்கணங் களை ஆராய்ந்து அறிதலை வேண்டும் ஆசிரியன் (எ-று.)

(உ-ம்.) 'உண்டும் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வ லத்தை யானே.'[1]

உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந் தான்.

என வரும். ஒழிந்த எண் வினையோடு வந்தன உளவேல் காண்க.

உண்டு தின்று ஓடி வந்தான்.

என்பது தொகை இன்றேனும், செவ்வெண்ணும், சிறு பான்மை முற்றும் தொகை பெற்று வருதலின்.

சாத்தன் வந்தான் கொற்றன் வந்தான் வேடன் வந்தான் மூவரும் வந்தமையான் கலியாணம் பொலிந்தது.

என முற்றுச்செவ்வெண் தொகை பெற்று வரும். 'இவை எழுவாயும் பயனிலையுமாய் நிற்றலின் எண்ணப்படா,' எனின், ஒரு பொருள் வேறுபாட்டான் எண்ணினர். இதனை, 'இம்மூவரும் வரின் கலியாணம் பொலியும்,' என்று இருக்கின்றான் கூற்றாகக் கொள்க. என்னை?

1. புறம். 166: 30, 31.

'முன்னர்ச் சாத்தன் வந்தான்; பின்னர்க் கொற்றன் வந்தான்; அதன் பின்னர் வேடன் வந்தான்; இவர்கள் ஒருங்கு வந்திலரேனும், முடிவில் வந்து நிற்றலின், இது முடிவு போயிற்று,' என்று கூறினுதலின். 'இம்மூவர்' என்றமையான், பெயர் தொகை பெற்றதேனும், 'வந்தமையான்' என்றதனன், வினையும் தொகை பெற்று, அவ்வினையால் கலியாணம் முடிந்தவாறும் உணர்க. இம்முற்று அடுத்து வந்தனவும் செவ்வெண்ணும்.

இனி, 'யாம் கண்ட பொழுது இம்மாடத்துமேல் நின்றானும் இருந்தானும் கிடந்தானும் இவன்,' என முற்றுச்சொற்கண்ணும் எண்ணும்மை வருதல் கொள்க.

பெயரெச்சத்தில் எண்ணிடைச்சொல் வாரா.

296] எண்ணிடைச்சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல் [சசு

என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி உடைய எண்ணினுட் பிரிந்தே.

இஃது, எண்ணிடைச்சொற்கள் பிரிந்து சென்று ஒன்றும் என்கின்றது.

(இ-ள்.) என்றும் எனவும் ஒடுவும் தோன்றி - என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித் தோன்றி, எண்ணினுட் பிரிந்து ஒன்று வழி உடைய - எண்ணினுட்பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றும் இடம் உடைய (எ-று.)

(உ-ம்.) 'வினைபகை என்றிரண்டின் எச்சம்'[1]
'கண்ணிமை நொடியென'[2]
'பொருள்கருவி காலம் வினையிடனே டைந்தும்'[3]

என்புழி, 'வினையென்று, கண்ணிமையென, பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு' என்று பிறவழிச் சென்று ஒன்றியவாறு காண்க.

'ஒன்றுவழி உடைய' என்றதனல், சொற்றொறும் நிற்றல் பெரும்பான்மை. அஃது இக்காலத்து அரிது.

---

1. குறள், 674. 2. எழுத். நூன்மரபு, சூ. 7. 3. குறள், 675.

அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல ஆயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே.

இஃது, எழு வகை இடைச்சொற்கும் பொருட்புற னடை கூறுகின்றது.

(இ-ள்.) அவ்வச்சொல்லிற்கு அவையவை பொருளென மெய் பெறக் கிளந்த இயல ஆயினும்-முற்கூறிய இடைச்சொற்கள் தாம் அவ்வச்சொற்குக் கூறிய அவையே அவையே பொருளென நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்பையுடைய ஆயினும், வினை யொடும்பெயரொடும்நினையத்தோன்றித் திரிந்து வேறுபடினும்-தாம் அடைந்து வரும் வினையோடும் பெயரோடும் ஆராய்ந்து உணரத்தோன்றி வேறு பொருளவாயும் அசைநிலையாயும் திரிந்து வரினும், தெரிந்தனர் கொளல் - ஆராய்ந்து கொள்க (எ-று.)

வேறு பொருள என்று உணர்தற்குச் சார்பு, வினை யும் பெயரும்.

(உ-ம்.) ஓகாரம் :

'சென்றீ பெரும!நிற் றகைக்குநர் யாரோ?'[1]

என ஈற்றசையாயும்,

'கலக்கொண்டனன்* கள்ளென்கோ!
காழ்க்கொண்டன† சூடென்கோ!'‡[2]

என எண்ணும்,

'நீங்கின ளோவென் பூங்க ணோளே!'[3]

என இரக்கக் குறிப்பாயும் வந்தது.

'என' என்பது :

'ஊரெனப் படுவ துறையூர்.'

எனச் சிறப்பின்கண் வந்தது.

பி-ம் : * கலக்கொண்டன் † காழ்கோத்தன ‡ சூட்டென்கோ
1. அகம். 46 : 16. 2. யா. வி. சூ. 93 உரை மேற். 'தாழிரும் பிணர்த்'
3. ஐங்குறு. 375.

அவர் நமக்குத் தஞ்சம் அல்லர்.

எனத் தஞ்சக்கிளவி, 'பற்றலர்' என்கின்றது.

மா: 'ஓர்கமா தோழி! அவர் தேர்மணிக் குரலே.'

என முன்னிலைக்கண் அசைச்சொல்லாயும்,

'ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே.'[1]

என முன்னிலையன்றி அசைச்சொல்லாயும் வந்தது.

'அதுமன் கொண்கன் தேரே.'

என 'மன்' அசைநிலையாய் வந்தது.

சாரியை இன்: 'காப்பின் ஒப்பின்'[2] என அசைநிலையாயும் வந்தது.

இனி, உருபு பொருண்மை நோக்கிய ஐகாரமும்,

'நேரை நோக்க நாரரி பருகி'

எனவும்,

'முனையுண்டவ ருருகும் பசுந்தினைப் பிண்டியும்'

எனவும் அசைநிலையாய் வருதலும் கொள்க.

'தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே.'
'விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே.'[3]

என்பன, 'தண்ணென்றது, போன்றது' என முற்றுச் சொல் 'சின்' அசைக்கண் படுதலும் கொள்க. பிறவும் செய்யுட்கண் வேறுபடுவன எல்லாம் இதனான் அமைத்துக்கொள்க.

298] இடைச்சொற்களுக்குப் புறனடை [சஅ

கிளந்த அல்ல அன்ன பிறவும்*
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

இஃது, அவற்றிற்குச் சொற்புறனடை கூறுகின்றது.

பி-ம்: * வேறுபிற தோன்றினும்

1. புறம். 193: 4. 2. வேற்றுமையியல், சூ. 11. 3. ஐங்குறு. 74.

(இ-ள்.) கிளந்த அல்ல அன்ன பிறவும் - மேல் சார்பும் இடமும் குறிப்பும் பற்றிச் சொல்லப்பட்டன அன்றி அவை போல்வன பிற வரினும், கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளல் - அவற்றையும் அச்சொற்களின் மூவகையவாகக்கூறிய இலக்கணத்தான் உணர்ந்துகொள்க (எ-று.)

(உ-ம்.) 'சிறிது தவிர்ந்தீக மாளநின் பரிசிலர் உய்ம்மார்'
என மாளவும்,

'சொல்லேன் தெய்ய நின்னொடு பெயர்ந்தே'
எனத் தெய்யவும்,

'அறிவார் யாரஃ திறுவுழி யிறுகென'
என எனவும்,

'அஞ்சுவ தோரும் அறனே'[1]
என ஓரும்,

'செலியர் அத்தைநின் வெகுளி'[2]
என அத்தையும்,

'செழுந்தேர் ஓட்டியும் வென்றீ'
என ஈகாரமும்,

'காத னன்மா நீமற் றிசினே'
என இசினும்,

'பணியுமாம் என்றும் பெருமை'[3]
என ஆமும்,

'ஈங்கா யினவால் என்றிசின் யானே'
என ஆலும்,

'புனற் கன்னிகொண் டிழிந்த தென்பவே'[4]
என என்பவும்,

'சேவடி சேர்தும் அன்றே.'[5]
என அன்றும் அசைநிலையாய் வந்தன.

'குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே.'[6]

1. குறள், 366. 2. புறம். 6 : 23. 3. குறள், 978.
4. சீவக. 39. 5. சீவக. 1. 6. முருகு. 217.

எனத் தொறு, தான் சார்ந்த மொழிக்குப் பன்மையும் இடமும் உணர்த்திற்று. இது, 'நாடோறும் நாடி' என நீண்டும் நிற்கும்.

'ஆ' என்பது, வியப்பு உள்வழியும் மறுத்தல் உள் வழியும் பொருள் உணர்த்துதலும்; 'ஐ' என்றது, இசை உள்வழியும் வருத்தம் உள்வழியும் பொருள் உணர்த்து தலும் கொள்க.

பொள்ளென, பொம்மென, கதுமென—இவை விரைவு உணர்த்தின.

'கோம்மென' என்பது, பெருக்கம் என்னும் குறிப்பு உணர்த்திற்று.

'ஆனம், ஏனம், ஓனம்' என்பன எழுத்துச் சாரியை.

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்'[1] என வரும் எகர வினவும் கொள்க.

'அங்கு, இங்கு, உங்கு, எங்கு' என எழுத்தினுள் 'இடப்பொருள் உணர்த்தும்' என்றனவும், இவை நீண்டு வருவனவும், பிறவாற்றான் வரு வனவும் இதனாற்கொள்க.

இடை இயல் முற்றும்.

1. குறள், 355.

அ. உரி இயல் *

299] உரிச்சொற்குப் பொது இலக்கணம் [க

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

என்பது சூத்திரம். இது, தமக்கு இயல்பு இல்லா இடைச்சொல் போலாது, இசை குறிப்புப் பண்பு என்னும் பொருட்கு உரியவாய் வருதலின், 'உரிச்சொல் ஓத்து' என்னும் பெயர்த்து ஆயிற்று. ஈறு பற்றிப் பல பொருள் விளக்கலும் உருபு ஏற்றலும் இன்றிப் பெயரையும் வினையையும் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின், உரிச்சொல், பெயரின் வேறு என்று உணர்க. இச் சூத்திரம், உரிச்சொற்கு எல்லாம் பொது இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை - உரிச்சொல்லாகிய சொல்லை விரித்து உணர்த்துமிடத்து, ஒரு சொற் பல பொருட்கு உரிமை தோன்றினும் பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும் - அஃது ஒரு சொல் ஒரு பொருட்கு உரித்தாய் வாராது பல பொருட்கு உரித்தாய் மயங்கி வரினும்

பி-ம்: * உரிச்சொல்லியல்

பலசொல் ஒரு பொருட்கு உரியவாய் மயங்கி வரினும், இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப் பெயரினும் வினையினும் மெய் தடுமாறித் தத்தம் மரபிற் சென்று நிலை மருங்கின் - இசைப் பொருண்மைக்கண்ணும் மனத்தாற்குறித்து உணரும் பொருண்மைக்கண்ணும் பண்புப் பொருண்மைக்கண்ணும் வெளிப்பட்டுப் பெயர் வினைகள் போன்றும் அவற்றிற்கு முதல் நிலையாயும் தம் உருபு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையால் சென்று நிற்கும் நிலைக்களங்களாலே, எச்சொல்லாயினும் பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருள் வேறு கிளத்தல் - கேட்போனல் பொருள் உணரப்படாத எவ்வகைப் பட்ட சொல்லாயினும் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சேர்த்திப் பொருளை வேறு வேறு சொல்லுக (எ-று.)

'அது மயங்கி வரினும், நிலைக்களங்களாலே சேர்த்தி வேறு வேறு கிளத்தல்,' என வினை முடிபு செய்க.

பண்பு, பொறியான் அறியப்படும் குணம்.

கறுப்பு, பெயர்ப்போலி.
தவ, வினைப்போலி.
துவைத்தல், பெயர்க்கு முதல் நிலை.
தாவாத, வினைக்கு முதல் நிலை.

பலவும் ஓதினரேனும், உரிச்சொற்கு இலக்கணம் மூவகைப் பொருளும் பற்றி வருதலேயாம்.

300] வெளிப்படை அல்லா உரிச்சொற்கே பொருள் கூறுதல் [உ

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா;
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

இஃது, உரிச்சொற்களுள் யான் கூறப்படுவன இவை என்கின்றது.

(இ-ள்.) வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா - பொருள் புலப்பட்ட உரிச்சொற்கள் எல்லாரும் அறிதலின் எடுத்து ஓதிப் பொருள் உணர்த்துதல் வேண்டா; வெளிப்பட வாரா உரிச்சொல் மேன - பொருள் புலப்பட வாராத உரிச்சொல் மேலன யான் பொருள் புலப்பட ஓதுதல் (எ-று.)

301] 'உறு, தவ, நனி' என்பவற்றின் பொருள் [௩

அவைதாம்,
உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப.

இது, குறிப்புப் பற்றி வரும் உரிச்சொல் பொருள் படுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் - 'வெளிப்பட வாராத உரிச்சொற்கள்தாம் யாவை?' எனின், உறு தவ நனி என வரூஉம் மூன்றும் - உறுவெனத் தவவென நனியென வருகின்ற மூன்று உரிச்சொற்களும், மிகுதி செய்யும் பொருள என்ப - 'மிகுதி' என்னும் உரிச்சொல் காட்டும் குறிப்புப் பொருளை உடைய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

குறிப்புச்சொல் பரப்பு உடைமையின், முற்கூறினர்.

(உ-ம்.) 'உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்'[1]
'ஈயாது வீயும் உயிர்தவப் பலவே.'[2]
'வந்துநனி வருந்தினை வாழிய* நெஞ்சே!'[3]

என வரும்.

302] 'உரு, புரை' என்பவற்றின் பொருள் [௪

உருவுட் காகும்; புரைஉயர் வாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) உரு உட்கு ஆகும் - 'உரு' என்னும் உரிச்சொல் 'உட்குதல்' என்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருட்டாம்; புரை உயர்வு ஆகும் - 'புரை' என்னும் உரிச்சொல் 'உயர்வு' என்னும் உரிச்சொல்லது குறிப்புப் பொருட்டாம் (எ-று.)

(உ-ம்.) 'உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த'[4]
'புரைய மன்ற புரையோர் கேண்மை.'[5]

என வரும்.

பி-ம்: * வாழியென்

1. நற். 300. 2. புறம். 235 : 20.
3. அகம். 19 : 1, 2. 4. புறம். 160 : 1. 5. நற். 1.

'உருவக் குதிரை மழவர் ஓட்டிய'[1]
'உருவமென் றுரைத்தி யாயின்'[2]

என 'உரு' வடிவழகையும்,

'புரைதீர் கேள்விப் புலவ ரான'

எனப் 'புரை' குற்றத்தையும் உணர்த்துதல்,

'கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல.'[3]

என்னும் சூத்திரத்தாற்கொள்க.

303] 'குரு, கெழு' என்பவற்றின் பொருள் [ரு

குருவும் கெழுவும் நிறனா கும்மே.

இது, பண்பு.

(இ-ள்.) குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே - 'குரு' என்னும் உரிச்சொல்லும் 'கெழு' என்னும் உரிச்சொல்லும் 'நிறன்' என்னும் உரிச்சொல்லது பண்புப் பொருளாம் (எ-று.)

(உ-ம்.) 'குருமணித் தாலி'
'நறுஞ்சாந்து புலர்ந்த* கேழ்கிளர் அகலம்'[4]

என வரும்.

'குரூஉத்துளி† பொழிந்த'
'குரூஉக்கண் இறடிப் பொம்மல்'[5]

எனக் 'குரு' நீடலும், 'கெழு' கேழ் என நீடலும் ஈறு கெடுதலும்,

'எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே.'[6]

என்பதனல் கொள்க. 'கெழு' என்று வரும் இடம் உளதாயின் கொள்க. இக்கெழு பொருத்தத்தை உணர்த்துதலும், 'கெழுமுதல்' என்னும் வழக்கிற்கு முதல் நிலையாய் நிற்றலும் 'கூறிய கிளவி'[7] என்பதனல் கொள்க. மேல் வரும் சூத்திரங்கட்கும் இவ்வாறே பொருள் கூறுக.

பி-ம்: * நீவிய . † குருத்துளி

1. அகம். 1 : 2. 2. சீவக. 1585. 3, 7. உரியியல், சூ. 92.
4. மதுரைக். 493. 5. மலைபடு. 169. 6. உரியியல், சூ. 97.

304] 'செல்லல், இன்னல்' என்பவற்றின் பொருள் [சூ

செல்லல் இன்னல் இன்னுமையே.

இது, குறிப்பு.

(இ-ள்.) செல்லல் இன்னல் இன்னுமையே - செல்லலும் இன்னலும் 'இன்னுமை' என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மணங்கமழ் வியன்மார்* பணங்கிய செல்லல்'[1]
'வெயில்புறந் தரூஉம் இன்னல் இயக்கத்து'[2]

என வரும்.

305] 'மல்லல், ஏ' என்பவற்றின் பொருள் [எ

மல்லல் வளனே; ஏபெற் ருகும்.

இதுவும் அது.

(இ-ள்.) மல்லல் வளனே - 'மல்லல்' செல்வம் என்னும் குறிப்பினையும், ஏ பெற்று ஆகும் - 'ஏ' என்பது 'பெருக்கம்' என்னும் குறிப்பினையும் உணர்த்தும் (எ-று.)

'பெற்று' அடுக்குதலுமாம்.

(உ-ம்.) 'மல்லல்மார் படுத்தனன் புல்லுமா றெவனே!'
'ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்'[3]

என வரும்.

306] 'உகப்பு, உவப்பு' என்பவற்றின் பொருள் [அ

உகப்பே உயர்தல்; உவப்பே உவகை.

இதுவும் அது.

(இ-ள்.) உகப்பே உயர்தல் உவப்பே உவகை - 'உகப்பு' உயர்வு என்னும் குறிப்பினையும் 'உவப்பு' உவகை என்னும் குறிப்பினையும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'விசும்புகந் தாடா திரைதேர்ந் துண்ணுது.'
'உவந்துவந்
தார்வ நெஞ்சமொ டாய்நலன் அளைஇய'[4]

என வரும்.

பி-ம்: * வியன்மார்பன்

1. அகம். 22 : 3.
2. மலைபடு. 374.
3. அகம். 52 : 5.
4. அகம். 35 : 11, 12.

307] 'பயப்பு' என்பதன் பொருள் [௯

பயப்பே பயனும்.

இதுவும் அது.

(இ-ள்.) பயப்பே பயனும் - 'பயப்பு'ப் பயன் என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பயவாக்
களரனையர் கல்லா தவர்.'[1]

என வரும்.

308] 'பசப்பு' என்பதன் பொருள் [௧0

பசப்பு நிறன் ஆகும்.

இது, பண்பு.

(இ-ள்.) பசப்பு நிறன் ஆகும் - 'பசப்பு' நிறன் என்னும் பண்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே.'[2]

என வரும்.

309] 'இயைபு' என்பதன் பொருள் [௧௧

இயைபே புணர்ச்சி.

இது, குறிப்பு.

(இ-ள்.) இயைபே புணர்ச்சி - 'இயைபு' கூட்டம் என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வளன்வலி யுறுக்கும் உளமி லாளரொ
டியைந்த கேண்மை இல்லா கியரோ.'[3]

என வரும்.

310] 'இசைப்பு' என்பதன் பொருள் [௧௨

இசைப்பிசை யாகும்.

இஃது, இசை கூறுகின்றது.

---

1. குறள், 406. 2. கலி. 7 : 8. 3. புறம். 190 : 4, 5.

(இ-ள்.) இசைப்பு இசையாகும் - 'இசைப்பு' இசைப் பொருண்மையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வாயிற் றேன்றி யாழிசையூப் புக்கு'

என வரும்.

311] 'அலமரல், தெருமரல்' என்பவற்றின் பொருள் [கந

அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி.

இது, குறிப்பு.

(இ-ள்.) அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி - 'அலமரல், தெருமரல்' ஆகிய அவ்விரண்டும் மனத்தடுமாற்றமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'அலமரல் ஆயம்'[1]

'தெருமரல் உள்ளமொ டன்னையும் துஞ்சாள்'

என வரும்.

'உலமரல்' சொற்புறனடையால் கொள்க.

312] 'மழ, குழ' என்பவற்றின் பொருள் [கச

மழவும் குழவும் இளமைப் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) மழவும் குழவும் இளமைப் பொருள - மழவும் குழவும் 'இளமை' என்பதன் குறிப்புப் பொருண்மையை உடைய (எ-று.)

(உ-ம்.) 'வரைபுரையும் மழகளிற்றின்மிசை'[2]

'உருவக் குதிரை மழவர் ஓட்டிய'[3]

'தடமருப் பெருமை மடநடைக் குழவி.'[4]

என வரும்.

313] 'சீர்த்தி, மாலை' என்பவற்றின் பொருள் [கரு

சீர்த்தி மிகுபுகழ்; மாலை இயல்பே.

இதுவும் அது.

---

1. ஐங்குறு. 64. 2. புறம். 38 : 1.
3. அகம். 1 : 2. 4. நற். 120.

(இ-ள்.) சீர்த்தி மிகுபுகழ் மாலை இயல்பே - 'சீர்த்தி' மிகு புகழும் 'மாலை' இயல்புமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வயக்கஞ்சால் சீர்த்தி'
'இரவரல் மாலையனே'[1]

என வரும்.

314] 'கூர்ப்பு, கழிவு' என்பவற்றின் பொருள் [கசூ

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.

இதுவும் அது.

(இ-ள்.) கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும் - கூர்ப்பும் கழிவும் முன் சிறவாது உள்ளது ஒன்று சிறத்தலாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூர் எவ்வமொடு'[2]
'சினனே காமம் கழிகண் ணோட்டம்'[3]

என வரும்.

315] 'கதழ்வு, துனைவு' என்பவற்றின் பொருள் [கஎ

கதழ்வும் துனைவும்* விரைவின் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) கதழ்வும் துனைவும் விரைவின் பொருள - கதழ்வும் துனைவும் 'விரைவு' என்னும் சொல்லினது குறிப்புடைய (எ-று.)

(உ-ம்.) 'அண்டர்
கயிறரி எருத்தின் கதழும் துறைவன்.'[4]
'துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்'[5]

என வரும்.

பி-ம்: * துனையும்

1. குறிஞ்சி. 239. 2. சிறுபாண். 38, 39. 3. பதிற். 22: 1,
4. குறுந். 117. 5. அகம். 9: 16.

316] 'அதிர்வு, விதிர்ப்பு' என்பவற்றின் பொருள் [கஅ

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்.

இதுவும் அது.

(இ-ள்.) அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும் - அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'அதிர வருவதோர் நோய்'[1]
'விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை'[2]

என வரும்.

317] 'வார்தல், போகல், ஒழுகல்' என்பவற்றின் பொருள் [கக

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள.

இது, பண்பு.

(இ-ள்.) வார்தல் போகல் ஒழுகல் மூன்றும் நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள - 'வார்தல், போகல், ஒழுகல்' என்னும் மூன்று சொல்லும் நேர்மையும் நெடுமையும் உணர்த்தும் பண்பினைத் தமக்குப் பொருளாக உடைய (எ-று.)

(உ-ம்.) 'வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
அரிவையை'[3]
'தெள்ளறல் தழீஇய வார்மணல் அடைகரை'[4]

எனவும்,

'போகுகொடி மருங்குல்'
'திரிகாய் விடத்தரொடு* காருடை போகி'[5]

எனவும்,

'ஒழுகுகொடி மருங்குல்'
'மால்வரை ஒழுகிய வாழை'[6]

எனவும் வரும்.

பி-ம்: * விடத்தேரொடு

1. குறள், 429. 2. புறம். 20 : 19. 3. குறுந். 14.
4. அகம். 34 : 7. 5. பதிற். 13 : 14. 6. சிறுபாண். 21.

318] 'தீர்தல், தீர்த்தல்' என்பவற்றின் பொருள் [உ0

தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்.

இது, குறிப்பு.

(இ-ள்.) தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும் - தீர்தலும் தீர்த்தலும் 'விடல்' என்னும் உரிச்சொல்லது குறிப் புப் பொருண்மை உடைத்தாம் (எ-று.)

(உ-ம்.) 'துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை'[1]

'நங்கையைச் செற்ற தீங்குத்
தீர்த்துநீர் கொண்மின்'[2]

என வரும்.

இதனானே, 'விடல்' என்னும் உரிச்சொல் அடியாகப் பிறக்கும் பெயரும் வினையும் தன் வினையும் பிற வினையும் பற்றிப் பிறக்கும் என்பது உணர்த்தற்கு 'விடற் பொருட்டு' என்றார். 'இயைபு' என்பதற்கு 'இயைப்பு' என வழங்காது, 'இயைக்க, இயைவிக்க' என வேறு பட்டு வழங்குதலின், தன் வினை பிற வினையுடன் ஓதா ராயினர்.

'ஒன்றென முடித்த'லால், 'பிளத்தல், அணங்கல்' என் றாற்போலத் தன் வினை பிற வினைக்குப் பொதுவாய் வரு வனவும் கொள்க. இப்பிறவினை, 'தீர்வித்தல், தீர்ப்பித் தல்' என வாய்பாடு வேறுபட்டு இக்காலத்து வழங்கு மாறும் உணர்க.

319] 'கெடவரல், பண்ணை' என்பவற்றின் பொருள் [உக

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு.

இதுவும் அது.

(இ-ள்.) கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு - 'கெடவரல், பண்ணை' என்னும் அவ்விரண்டும் விளையாட்டாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

1. நற். 108. 2. சீவக. 1275.

(உ-ம்.) ‘கேடவரல் ஆயமொடு’
‘பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்’[1]
என வரும். ‘விளையாட்டு’ என்றது, விளையாட்டுக் கருத்தினை.

320] ‘தட, கய, நளி’ என்பவற்றின் பொருள் [உஉ

தடவும் கயவும் நளியும் பெருமை.

இது, பண்பு.

(இ-ள்.) தடவும் கயவும் நளியும் பெருமை - தடவும் கயவும் நளியும் பெருமையாகிய பண்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) ‘வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவன்’[2]
‘இரும்பிடி கன்றொடு விரைஇய* கயவாய்ப்
பெருங்கை யானை’[3]
‘நளிமலை நாடன் நள்ளியவன் எனவே’[4]
என வரும்.

‘கயவர்’[5] என்பது வழக்கு.

321] ‘தட’ என்பது வளைவையும் உணர்த்தல் [உங

அவற்றுள்,
தடவென் கிளவி கோட்டமும் செய்யும்.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

(இ-ள்.) அவற்றுள் தட என் கிளவி கோட்டமும் செய்யும் - முற்கூறிய மூன்றனுள் ‘தட’ என்னும் சொல் ‘கோட்டம்’ என்னும் பண்பினையும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) ‘தடமருப் பெருமை’[6]
என வரும்.

322] ‘கய’ என்பது மென்மையையும் உணர்த்தல் [உச

கயவென் கிளவி மென்மையும் செய்யும்.

இதுவும் அது.

பி-ம்: * விரைஇக்

1. மெய்ப்பாட்டியல், சூ. 1. 2. புறம். 394 : 3. 3. அகம். 118 : 7, 8.
4. புறம். 150 : 28. 5. குறள், 1076. 6. நற். 120.

(இ-ள்.) கய என் கிளவி மென்மையும் செய்யும் - 'கய' என்னும் சொல் 'மென்மை' என்னும் பண்பினையும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கயந்தலை மடப்பிடி'[1]

என வரும்.

323] 'நளி' என்பது செறிவையும் உணர்த்தல் [உரு

நளியென் கிளவி செறிவும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) நளி என் கிளவி செறிவும் ஆகும் - 'நளி' என்னும் சொல் 'செறிவு' என்னும் குறிப்பினையும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'சிலைப்புவல் லேற்றிற் றலைக்கை* தந்துநீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி'[2]

என வரும்.

324] 'பழுது' என்பதன் பொருள் [உசு

பழுதுபயம் இன்றே.

இது, குறிப்பு.

(இ-ள்.) பழுது பயம் இன்றே - 'பழுது' பயம் இன்மையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பழுதுகழி வாழ்நாள்'

என வரும்.

'பழுது' குற்றத்தை உணர்த்துதல் வழக்கு.

325] 'சாயல்' என்பதன் பொருள் [உஎ

சாயல் மென்மை.

இது, பண்பு.

பி-ம்: * லேற்றித் தலைக்கை

1. நற். 137. 2. பதிற். 52 : 15, 16.

(இ-ள்.) சாயல் மென்மை-'சாயல்' என்னும் சொல் 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என்னும் ஐம்பொறியான் நுகரும் மென்மையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மயிர்சாயல் மகள்வேண்டிய'

'சாயல் மார்பு நனியலேத் தன்றே.'[1]

என இவை ஒளியானும் ஊற்றானும் பிறந்த மென்மை உணர்த்தின.

'அமிர்தன்ன சாயல்'[2]

என்பது, •தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமல் தடுக்கும் மென்மையை உணர்த்தவே, பல மென்மையும் அடங்கின. ஒழிந்தன, வந்துழிக் காண்க.

326] 'முழுது' என்பதன் பொருள் [உஅ

முழுதென் கிளவி எஞ்சாப் பொருட்டே.

இது, குறிப்பு.

(இ-ள்.) முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே - 'முழுது' என்னும் சொல் எஞ்சாமையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மண்முழு தாண்டநின் முன்னோர் போல'

என வரும்.

327] 'வம்பு' என்பதன் பொருள் [உகூ

வம்பு நிலை யின்மை.

இதுவும் அது.

(இ-ள்.) வம்பு நிலையின்மை - 'வம்பு' நிலையின்மையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வம்பு* மாரியைக் காரென மதித்தே'[3]

என வரும்.

பி-ம்: * வம்ப

1. பதிற். 16 : 20. 2. சீவக. 8. 3. குறுந். 66.

328] 'மாதர்' என்பதன் பொருள் [கூ0

மாதர் காதல்.

இதுவும் அது.

(இ-ள்.) மாதர் காதல் - 'மாதர்' காதல் என்னும் குறிப்பினை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'மாதர்கொள் மானோக்கின் மடநல்லாய் !'[1]
என வரும்.

329] 'நம்பு, மே' என்பவற்றின் பொருள் [கூக

நம்பும் மேவும் நசையா கும்மே.

இதுவும் அது.

(இ-ள்.) நம்பும் மேவும் நசை ஆகும்மே - நம்பும் மேவும் 'நசை' என்னும் குறிப்பினை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி'[2]
எனவும்,

> 'பேரிசை நவிரம் மேஎய் உறையும்
> காரி யுண்டி'[3]

எனவும் வரும்.

330] 'ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்'—பொருள் [கூஉ

ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்.

இதுவும் அது.

(இ-ள்.) ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் - 'ஒய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்' என்னும் உரிச்சொல் முதல் நிலையாகிய அவ்விடத்து வந்த குறிப்புப் பெயர் நான்கும், உள்ளதன் நுணுக்கம் - பண்டு உள்ளது ஒன்றனது நுணுகுதலை உணர்த்தும் (எ-று.)

'சாய்தல்' விகாரப்பட்டது.

---

1. கலி. 56 : 17. 2. அகம். 198 : 3. 3. மலைபடு. 82, 83.

(உ-ம்.) 'வேனில் உழந்த வறிதுயங் கோய்களிறு'[1]
'பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை'[2]
'நிழத்த யானை மேய்புலம் படர'[3]
'கயலறல் எதிரக் கடும்புனல் சாஅய்'[4]

என வரும்.

'ஆய்ந்த தானை' என்றது, 'பொங்குதல் அவிதலான்* நொசிந்த துகில்' என்றவாறு.

331] 'புலம்பு' என்பதன் பொருள் [கூகூ

புலம்பே தனிமை.

இதுவும் அது.

(இ-ள்.) புலம்பே தனிமை - 'புலம்பு' தனிமை என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி'[5]

என வரும்.

'தமி' என்பது சொற்புறனடையால் கொள்க.

332] 'துவன்று' என்பதன் பொருள் [கூச

துவன்று நிறை வாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) துவன்று நிறைவு ஆகும் - 'துவன்று' நிறைவு என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்'[6]

என வரும்.

333] 'முரஞ்சல்' என்பதன் பொருள் [கூரு

முரஞ்சல் முதிர்வே.

இதுவும் அது.

பி-ம்: * விசித்தலான்

1. கலி. 7 : 1. 2. கலி. 96 : 2. 3. மதுரைக். 303.
4. நெடுநல். 18. 5. அகம். 7 : 18. 6. பதிற். 11 : 23.

(இ-ள்.) முரஞ்சல் முதிர்வே - 'முரஞ்சல்' முதிர்வு என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கோடுபல முரஞ்சிய கோளி ஆலத்து'[1]

என வரும்.

334] 'வெம்மை' என்பதன் பொருள் [நகூ

வெம்மை வேண்டல்.

இது, பண்பு.

(இ-ள்.) வெம்மை வேண்டல் - 'வெம்மை' விரும்புதலாகிய பண்பை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'ஏமவேங்* காமம் இயைவ தாயினும்†'[2]

என வரும். இது,

'குழைமாண் ஒள்ளிழை நீவெய் யோளொடு'

எனத் திரிந்தும் நிற்கும்.

'வெம்மை' வெப்பம் உணர்த்துதல் வழக்கு.

335] 'பொற்பு' என்பதன் பொருள் [நஎ

பொற்பே பொலிவு.

இது, குறிப்பு.

(இ-ள்.) பொற்பே பொலிவு-பொற்புப் 'பொலிவு' என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்'[3]

என வரும்.

336] 'வறிது' என்பதன் பொருள் [நஅ

வறிதுசிறி தாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) வறிது சிறிது ஆகும் - 'வறிது' சிறிது என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

பி-ம்: * எம்வெங் † தாயின்

1. மலைபடு. 268. 2. அகம். 15 : 1. 3. நற். 34.

(உ-ம்.) 'வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி'[1]
என வரும்.

337] 'எற்றம்' என்பதன் பொருள் [௩௬

எற்றம்* நினைவும் துணிவும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) எற்றம் நினைவும் துணிவும் ஆகும் - 'எற்றம்' நினைவும் துணிவும் ஆகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கானலஞ் சேர்ப்பன் கொடுமை எற்றி'[2]
'எற்றமி லாட்டியென் ஏமுற்றாள்!'[3]
என வரும்.

338] 'பிணை, பேண்' என்பவற்றின் பொருள் [௪௦

பிணையும் பேணும் பெட்பின் பொருள.

இது, குறிப்பும் பண்பும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) பிணையும் பேணும் பெட்பின் பொருள - பிணையும் பேணும் 'பெட்பு' என்னும் உரிச்சொல்லினது பொருளை உடையவாம் (எ-று.)

'பெட்பு' என்பது, புறந்தருதலும் விரும்புதலுமாகிய குறிப்பும் பண்பும் உணர்த்தும்; சிறுபான்மை, 'பெட்பநகும்,'†[4] எனப் பெருமையும் உணர்த்தும்.

(உ-ம்.) 'அரும்பிணை அகற்றி வேட்ட ஞாட்பினும்'
'யானும் பேணினே னல்லனோ மகிழ்ந!'
இவை புறந்தருதல் உணர்த்தின.

'பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென'

என்புழிக் 'கணவனைப்புறந்தரும் விருப்பத்தை உடையை ஆவாய்,' எனப் 'பிணை' விருப்பத்திற்கு வந்தது.

பி-ம்: * ஏற்றம் † நகுகின்றது
1. பதிற். 24 : 24. 2. குறுந். 145.
3. கலி. 144 : 63. 4. சீவக. 1662.

'அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்'[1]

இது விருப்பம் உணர்த்திற்று.

'பேட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்'[2]

'காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்'[3]

என ஆசிரியர் பெட்பின் பகுதியாகிய 'பெட்டு' என்னும் உரிச்சொல்லை உடம்பொடு புணர்த்து ஓதியவாறும் காண்க.

339] 'பணை' என்பதன் பொருள் [சக

பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும்.

இது, குறிப்பு.

(இ-ள்.) பணையே பிழைத்தல் பெருப்பும் ஆகும் - 'பணை' பிழைத்தலாகிய குறிப்பு உணர்த்துதலே அன்றிப் பெருப்பு ஆகிய குறிப்பும் உணர்த்தும் (எ-று.)

பெருமையாகிய பண்பு உணர்த்தாது பெருத்தலாகிய குறிப்பு உணர்த்துதற்குப் 'பெருப்பு' என்றார்.

(உ-ம்.) 'அமர்க்க ணுமா னருநிற மூழ்காது*
பணைத்துவீழ்† பகழிப் போக்குநினைந்து கானவன்'[4]
'வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டு'[5]

என வரும். இப்பணை மூங்கிலினை உணர்த்தல் உரிச்சொல் அன்மை உணர்க.

340] 'படர்' என்பதன் பொருள் [சஉ

படரே உள்ளல் செலவும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) படரே உள்ளல் செலவும் ஆகும் - 'படர்' உள்ளுதல் என்னும் குறிப்பு உணர்த்துதலே அன்றிச் 'செலவு' என்னும் குறிப்பும் உணர்த்தும் (எ-று.)

பி-ம் : * முள்காது † பணைத்த

1. புறம். 99 : 1. 2. களவியல், சூ. 11. 3. கற்பியல், சூ. 6.
4. நற். 165. 5. அகம். 1 : 8.

உள்ளல், வருத்தக் குறிப்பான் உள்ளுதலும் வருத்தக் குறிப்பின்றி உள்ளுதலும் என இரு வகைத்து ஆகலின், செலவுப்பொருட்டாகிய படரும் இவ்விரு வகையும் உடைத்து.

(உ-ம்.) 'வள்ளியோர்ப் படர்குவர் புலவர் யானும்'[1]
'பசந்த மேனியொடு படரட வருந்தி'[2]

எனவும்,

'கறவை கன்றுவயின் படர'[3]

எனவும் வரும்.

341] 'பையுள், சிறுமை' என்பவற்றின் பொருள் [சரு

பையுளும் சிறுமையும் நோயின் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) பையுளும் சிறுமையும் நோயின் பொருள - பையுளும் சிறுமையும் நோயாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பையுள் மாலைப் பழுமரம் படரிய'[4]
'சிறுமை உறுப* செய்பறி யலரே.'[5]

என வரும்.

342] 'எய்யாமை' என்பதன் பொருள் [சச

எய்யா மையே அறியா மையே.

இதுவும் அது.

(இ-ள்.) எய்யாமையே அறியாமையே - 'எய்யாமை' அறியாமையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'எய்யா மையலை நீயும் வருந்துதி'[6]

என வரும்.

'அறிதல்' என்னும் உடம்பாட்டிற்கு மறையாகிய 'அறியாமை' என்னும் உரிச்சொல்லான் எய்யாமையை

பி-ம்: * உறுபவோ

1. புறம். 154 : 5.
2. புறம். 159 : 6.
3. குறுந். 108.
4. களவியல், சூ. 23 நச். உரை மேற்.
5. நற். 1.
6. குறிஞ்சி. 8.

உணர்த்தவே, அவ்வெய்யாமை மறைச்சொல் என்ப தூஉம், அதற்கு 'எய்த்தல்' என்னும் உடம்பாட்டுச்சொல் உளது என்பதூஉம் பெற்றும். அவ்வுடம்பாட்டை ஓதாது மறையை ஓதினர், மறைச்சொல்லும் உரிச் சொல்லாய் வரும் என்றற்கு.

'எய்த்து நீர்ச்சிலம் பின்குரை* மேகலை'[1]

என்புழி, 'எய்த்து' என்பது 'அறிந்து' என்னும் பொருள் உணர்த்திற்று.

343] 'நன்று' என்பதன் பொருள் [சரு

நன்றுபெரி தாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) நன்று பெரிது ஆகும் - 'நன்று' பெரிது என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'நன்றும் அரிதுற் றனையாற் பெரும!'[2]

என வரும்.

'பெருமை' என்னாது 'பெரிது' என்றதனான், 'நன்று' என்பது வினையெச்சம் ஆயிற்று.

344] 'தா' என்பதன் பொருள் [சசு

தாவே வலியும் வருத்தமும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) தாவே வலியும் வருத்தமும் ஆகும் - 'தா' வலியும் வருத்தமும் ஆகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'தாவில் நன்பொன் தைஇய பாவை'[3]
'தாவாக் கொள்கைத் தகைசால் சிறப்பின்'

என வரும். தாவாக் கொள்கை, வருத்தம் இல்லாத விரதம்.

பி-ம்: * பின்குரல்

1. சீவக. 2481. 2. அகம். 10 : 6, 7. 3. அகம். 212 : 1.

இனி,

'கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்று'[1]

எனத் தாவுதலும்,

'தாவாத இல்லை வலிகளும்'

எனக் கேடும் உணர்த்துதல் 'கூறிய கிளவி'[2] என்பதனால் கொள்க.

345] 'தெவு' என்பதன் பொருள் [சஎ

தெவுக்கொளற் பொருட்டே.

இதுவும் அது.

(இ-ள்.) தெவு கொளல் பொருட்டே - 'தெவு' கொள்ளுதலாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'நீர்தெவு நிரைத்தொழுவர்'[3]

என வரும்.

346] 'தெவ்வு' என்பதன் பொருள் [சஅ

தெவ்வுப்பகை ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) தெவ்வு பகை ஆகும் - 'தெவ்வு' பகையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'தெவ்வுப்புலம் சிதைய வெய்கணை சிதறி'

என வரும்.

347] 'விறப்பு, உறப்பு, வெறுப்பு' என்பவற்றின் பொருள் [சகூ

விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே.

இதுவும் அது.

(இ-ள்.) விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே - விறப்பும் உறப்பும் வெறுப்பும் 'செறிவு' என்னும் குறிப்பு உணர்த்தும் (எ-று.)

1. குறுந். 69. 2. உரியியல், சூ. 92. 3. மதுரைக். 89.

(உ-ம்.) 'விறந்த காப்போ டுண்ணின் று வலியுறுத்து'
'உறந்த இஞ்சி உயர்நிலை மாடத்து'
'வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்'[1]
என வரும்.

348] 'விறப்பு' அச்சமும் உணர்த்தல் [நூo

அவற்றுள்,
விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி கூ-றுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்-அம்மூன்றனுள் 'விறப்பு'ச் செறிவே அன்றி வெருவுதற்குறிப்பும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'அவலெறி உலக்கைப் பாடுவிறந் தயல'[2]
என வரும்.

349] 'கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்'—பொருள் [நூக

கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள.

இஃது, இசை.

(இ-ள்.) கம்பலை சும்மை கலியே அழுங்கல் என்று இவை நான்கும் அரவப்பொருள - 'கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்' என்று சொல்லப்பட்ட இந்நான்கும் அரவமாகிய இசைப் பொருண்மையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'களிறுகவர் கம்பலை போல'[3]
'தளிமழை* பொழியும்† தண்பரங் குன்றில்
கலிகொள் சும்மை ஒலிகொள் ஆயம்'[4]
'கலிகொள் ஆயம் மலிதொகு‡ பெடுத்த'[5]

பி-ம்: * துளிமழை † தோயும் ‡ மலிபுதொகு
1. புறம். 53 : 12. 2. பெரும்பாண். 226. 3. அகம். 96 : 17.
4. மதுரைக். 263-4. 5. அகம். 11 : 4.

'உயவுப்புணர்ந் தன்றிவ் வழுங்கல் ஊரே.'[1]

என வரும்.

'கலிகொள் சும்மை'[2] என்பதனுள் 'கலி' செருக்கினை உணர்த்துதல் 'கூறிய கிளவி'[3] என்பதனால் கொள்க.

350] 'அழுங்கல்' இரக்கமும் கேடும் உணர்த்தல் [ருஉ

அவற்றுள்,

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

(இ-ள்.) அவற்றுள் அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும் - அந்நான்கனுள் 'அழுங்கல்' அரவமே அன்றி இரக்கமும் கேடுமாகிய குறிப்பும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பழங்கணோட்டமும்* நலியு†
அழுங்கினே‡ னல்லனோ அயர்ந்தனன்§ மனனே.'$[4]
'குணனழுங்கக்
குற்றம் உழைநின்று கூறும் சிறியவர்கட்கு'[5]

என வரும்.

351] 'கழுமு' என்பதன் பொருள் [ருந

கழுமென் கிளவி மயக்கம் செய்யும்.

இது, குறிப்பு.

(இ-ள்.) கழுமு என் கிளவி மயக்கம் செய்யும் - 'கழுமு' என்னும் சொல் மயக்கமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கழுமிய ஞாட்பினுள் மைந்திழந்தார்|| இட்ட'[6]

என வரும்.

இது,

'கழும முடித்துக் கண்கூடு கூழை'[7]

பி-ம்: * ணோட்டம் † முதலிய ‡ அழுங்கின
§ அயர்ந்ததன் $ மணனே || மைந்திழைத்தார்

1. நற். 203. 2. மதுரைக். 264. 3. உரியியல், சூ. 92.
4. அகம். 66 : 25-6. 5. நாலடி. 353.
6. களவழி. 11. 7. கலி. 56 : 3.

எனத் திரட்சியை உணர்த்துதல், 'கூறிய கிளவி'[1] என்பதனால் கொள்க.

352]   'செழுமை' என்பதன் பொருள்   [நுச

செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்-'செழுமை' வளனும் கொழுப்புமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'செழுஞ்செய்ந் நெல்லின் சேயரிப் புனிற்றுக்கதிர்'
'சேழுந்தடி தின்ற செந்நாய் ஏற்றை'

என வரும்.

['வளத்தொடு கொழுப்பிடை வேற்றுமை என்னை?' எனின், 'வளம்' என்பது, ஆக்கம்; 'கொழுப்பு' என்பது, ஊன் தொடக்கத்தனவற்றது 'நிணங்கோடலிழுதிருப்பு.]*

353]   'விழுமம்' என்பதன் பொருள்   [நுரு

விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.

இதுவும் அது.

(இ-ள்.) விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் - 'விழுமம்' சீர்மையும் சிறப்பும் இடும்பையுமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.)   'விழுமியோர்†
காண்டொறும் செய்வர் சிறப்பு.'[2]
'வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து'[3]
'நின்னுறு விழுமம் களைந்தோன்'[4]

என வரும்.

354]   'கருவி' என்பதன் பொருள்   [நுசா

கருவி தொகுதி.

இதுவும் அது.

பி-ம்: * இப்பகுதி ஏடுகளில் இல்லை   † விழுமியோர்க்

1. உரியியல், சூ. 92.   2. நாலடி. 159.
3. புறம். 27 : 3.   4. அகம். 170 : 13.

(இ-ள்.) கருவி தொகுதி - 'கருவி' தொகுதியாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

உணர்த்துங்கால் பலவற்றது கூட்டத்தை விளக்கும்.

(உ-ம்.) 'கருவி வானம் கதழுறை சிதறி'[1]

என வரும். ஆண்டு மின்னும் முழக்கும் காற்றும் என்பன இத்தொகுதி.

355] 'கமம்' என்பதன் பொருள் [டுஎ

கமம்நிறைந் தியலும்.

இதுவும் அது.

(இ-ள்.) கமம் நிறைந்து இயலும் - 'கமம்' நிறைவாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

சொல்லொடு பொருட்கு ஒற்றுமை கருதி 'நிறைந்து இயலும்,' எனப் பொருளின் தொழிலைச் சொன்மேல் ஏற்றினர்.

(உ-ம்.) 'கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை'[2]

என வரும்.

356] 'அரி' என்பதன் பொருள் [டுஅ

அரியே ஐம்மை.

இதுவும் அது.

(இ-ள்.) அரியே ஐம்மை - 'அரி' ஐம்மையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'அரிமயிர்த் திரண்முன்கை'[3]

என வரும்.

357] 'கவவு' என்பதன் பொருள் [டுகூ

கவவகத் திடுமே.

இதுவும் அது.

1. அகம். 4 : 6. 2. முருகு. 7. 3. புறம். 11 : 1.

(இ-ள்.) கவவு அகத்திடுமே-'கவவு' அகத்தீடாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கவவுக்கடுங் குரையள் காமர் வனப்பினள்'[1]
என வரும்.

இது,

'கழூஉவிளங்* காரம் கவைஇய மார்பே'[2]
என எச்சமாங்கால் திரிந்து நிற்கும்.

358] 'துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல்'—பொருள் [சுo

துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்.

இஃது, இசை.

(இ-ள்.) துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட்கிளவி என்மனார் புலவர் - 'துவைத்தல்' முதலிய நான்கும் இசைப்பொருளை உணர்த்தும் சொல்லாம் என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்'[3]
'ஆமா நல்லேறு சிலைப்ப'[4]
'கடிமரம் தடியும் ஓதை† தன்னூர்
நெடுமதில் வரைப்பிற் கடிமனை இயம்ப'[5]
'ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம்பெறூஅன்'[6]
என வரும்.

359] 'இரங்கல்' கழிவாகிய குறிப்பும் உணர்த்தல் [சுக

அவற்றுள்,
இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

பி-ம்: * கழுவிளங் † ஓசை
1. குறுந். 132. 2. புறம். 19 : 18. 3. புறம். 158 : 1.
4. முருகு. 315. 5. புறம். 36 : 9, 10. 6. கலி. 46 : 10.

(இ-ள்.) அவற்றுள் இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும் - அந்நான்கனுள் 'இரங்கல்' இசையே அன்றி ஒரு பொருளது கழிவால் பிறந்த வருத்தமாகிய குறிப்பும் உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்'[1]

என வரும். இஃது,

'இனிநினைந் திரக்க மாகின்று'[2]

என 'இரக்கம்' எனவும் நிற்கும்.

உம்மை, இறந்தது தழீஇயிற்று.

360] 'இலம்பாடு, ஒற்கம்' என்பவற்றின் பொருள் [சூஉ

இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை.

இதுவும் அது.

(இ-ள்.) இலம்பாடு - 'இலம்' என்னும் சொல் குறிப்புச் சொல் தன்மைப்பட்டு 'இன்மை' என்னும் உரிச்சொல்லாய் நின்றதுவும், ஒற்கம் - 'ஒற்கம்' என்னும் உரிச்சொல்லும், ஆயிரண்டும் வறுமை - ஆகிய அவ்விரண்டும் 'வறுமை' என்னும் உரிச்சொற்பெயரது குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்) 'இலம்படு புலவர் ஏற்றகைந் நிறைய'[3]

'ஒக்கல் ஒற்கம் சொலியத் தன்னூர்'[4]

என வரும்.

'இலம்படு புலவர்' என்பதற்கு 'இல்லாமை உண்டா கின்ற புலவர்' என அல்வழியாகப் பொருள் உரைக்க. இதற்கு உரையாசிரியர், 'இலத்தால் பற்றப்படும் புலவர்' என வேற்றுமையாகப் பொருள் கூறினால் எனின், ஆசிரியர்,

'அல்வழி எல்லாம் மெல்லெழுத் தாகும்.'[5]

என அல்வழியே கூறத் தொடங்கி,

'அகமென் கிளவிக்குக் கைமுன் வரின்'[6]

எனப் பண்புத்தொகையும்,

1. புறம், 10 : 11. 2. புறம், 243 : 1. 3. மலைபடு, 576.
4. புறம், 327 : 5. 5. தொல், எழுத். புள். மயங். சூ. 19.
6. தொல். எழுத். புள். மயங். சூ. 20.

'இலமென் கிளவிக்கு'[1]

என அல்வழிக்கண் வரும் உரிச்சொல்லும் கூறி, பின்னர் எண்ணுப்பெயரும் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் கூறி, 'படர்க்கைப் பெயரும்'[2] என்னும் சூத்திரத்தின் 'வேற்றுமையாயின்' என மீட்டும் வேற்றுமையை எடுத்து ஓதினமையின், 'இலம்' என்பதனை வேற்றுமை என்றல் பொருந்தாமை உணர்க.

'இலம்' என்னும் சொல், 'யாம் பொருள் இலம்,' என முற்றுச்சொல்லாயும், ஒருகால் உரிச்சொல்லாயும் நிற்கும் என்பது உணர்த்துதற்கு 'இலத்திற்கு உரிச்சொல் தன்மைப்பட்டு நிற்குமிடத்து' என்றார்.

'இலமென் கிளவிக்குப் படுவரு காலை'[3]

என நிலைமொழி வருமொழி செய்து முன்னர் ஆசிரியர் புணர்த்தமையின், 'இலம்பாடு' என ஒரு சொல்லாக ஓதாமை உணர்க.

''இலம்பாடு நாணுத் தரும்'[4]

என்றதோ ?' எனின், 'இல்லாமை உண்டாதல் நாணுத் தரும்,' எனப் பொருள் கூறிக்கொள்க.

361] 'ஞெமிர்தல், பாய்தல்' என்பவற்றின் பொருள் [சுரு

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற்பொருள - ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தலாகிய குறிப்புப் பொருண்மையை உடைய (எ-று.)

(உ-ம்.) 'தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து'[5]
'புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதர'[6]

என வரும்.

1. தொல். எழுத். புள். மயங். சூ. 21.
2. தொல். எழுத். புள். மயங். சூ. 25.
3. தொல். எழுத். புள். மயங். சூ. 21.
4. சிலப். 9 : 71. 5. நெடுநல். 90. 6. குறிஞ்சி. 172.

362] 'கவர்வு' என்பதன் பொருள் [சுசச

கவர்வுவிருப் பாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) கவர்வு விருப்பாகும் - 'கவர்வு' விருப்பாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கவர்நடைப் புரவி'[1]

என வரும். இனி,

'கொள்ளை மாந்தர் இன்னது கவரும்'

எனக் கைக்கொள்ளுதல், 'கூறிய கிளவி'[2] என்பதனுல் கொள்க.

'கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்'[3]

எனக் 'கவைத்தல்' சொற்புறனடையால் கொள்க.

363] 'சேர்' என்பதன் பொருள் [சுருரு

சேரே திரட்சி.

இதுவும் அது.

(இ-ள்.) சேரே திரட்சி - 'சேர்' திரட்சியாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'சேர்ந்துசெறி குறங்கின்'[4]

என வரும்.

364] 'வியல்' என்பதன் பொருள் [சுசுசு

வியலென் கிளவி அகலப் பொருட்டே.

இதுவும் அது.

(இ-ள்.) வியல் என் கிளவி அகலப் பொருட்டே - 'வியல்' என்னும் சொல் அகலமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'இருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுதின்று'

என வரும். இது,

---

1. அகம். 130 : 10. 2. உரியியல், சூ. 92.
3. சிறுபாண். 197. 4. நற். 170.

'வியன்ருனே விறல்வேந்தே!'[1]

எனத் திரிந்தும் நிற்கும்.

365] 'பேம், நாம், உரும்' என்பவற்றின் பொருள் [சுஎ

பேம்நாம்* உருமென வரூஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) பேம் நாம் உரும் என வரூஉம் கிளவி ஆமுறை மூன்றும் அச்சப் பொருள -'பேம், நாம், உரும்' என்று சொல்ல வருகின்ற கிளவியாகிய அம்முறைமையினையுடைய மூன்றும் 'அச்சம்' என்னும் உரிச்சொல்லது குறிப்புப்பொருண்மையை உடைய (எ-று.)

(உ-ம்.) 'மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்'[2]
'நாம நல்லராக்† கதிர்பட வுமிழ்ந்த'
'உருமில் சுற்றமொடு'[3]

என வரும். 'நாம்' **நாமம்** எனத் திரிந்து வழங்கிற்று.

366] 'வய' என்பதன் பொருள் [சுஅ

வயவலி ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) வய வலி ஆகும்-'வய' வலியாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்'[4]

என வரும்.

367] 'வாள்' என்பதன் பொருள் [சுசு

வாள்ஒளி ஆகும்.

இது, பண்பு.

பி-ம்: * பேஎநாம் † நல்லார்க்

1. புறம். 38 : 4.
2. குறுந். 87.
3. பெரும்பாண். 447.
4. புறம். 44 : 10.

(இ-ள்.) வாள் ஒளி ஆகும் - 'வாள்' ஒளியாகிய பண்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'கண்ணே, நோக்கி நோக்கி வாள்இழந் தனவே'[1] என வரும்.

368] 'துயவு' என்பதன் பொருள் [எ௦

துயவென்* கிளவி அறிவின் திரிபே.

இது, குறிப்பு.

(இ-ள்.) துயவு என் கிளவி அறிவின் திரிபே - 'துயவு' என்னும் சொல் அறிவினது திரிதலாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'துயவுற்றேம் யாமாக' என வரும்.

369] 'உயா' என்பதன் பொருள் [எக

உயாவே உயங்கல்.

இதுவும் அது.

(இ-ள்.) உயாவே உயங்கல் - 'உயா' வருத்தமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பருந்திருந்
துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை'[2]
என வரும்.

370] 'உசா' என்பதன் பொருள் [எ௨

உசாவே சூழ்ச்சி.

இதுவும் அது.

(இ-ள்.) உசாவே சூழ்ச்சி - 'உசா' சூழ்ச்சியாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'உசாத்துணை'[3] என வரும்.

பா-ம்: * துய்வென்

1. குறுந். 44. 2. அகம். 19 : 2, 3. 3. திருக்கோ. 400 உரை.

371] 'வயா' என்பதன் பொருள் [எகு

வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்.

இதுவும் அது.

(இ-ள்.) வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம் - 'வயா' என்னும் சொல் வேட்கையினது பெருக்கமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்'[1] என வரும். இது, 'வயவுறு மகளிர்'[2] எனத் திரிந்தும் நிற்கும்.

ஈண்டு 'வேட்கை' என்றது, கருப்பம் தங்கி வருத்த முற்று நுகரப்படும் பொருள்மேல்செல்லும் வேட்கையை.

372] 'கறுப்பு, சிவப்பு' என்பவற்றின் பொருள் [எச

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள - கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புப் பொருண்மையை உடைய (எ-று.)

(உ-ம்.) 'நிற்கறுத் தோரருங் கடிமுனை யரணம்போல்'*
'நீசிவந் திறுத்த நீரழி பாக்கம்'[3]

என வரும்.

'கருமை, செம்மை' என்னது, 'கறுப்பு, சிவப்பு' எனத் தொழிற்படுத்தினர், அவை வெகுளியை உணர்த்தி னமையின்.

373] மேற்கூறியன நிறப்பண்பும் உணர்த்தல் [எரு

நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

பி-ம்: * நிற்கறுத் தோருங் குடிமுனை யாள்போல்

1. நாலடி. 201. 2. புறம். 20 : 14. 3. பதிற். 13 : 12.

(இ-ள்.) நிறத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப - 'கறுப்பு, சிவப்பு' எனத் தொழிற்படுத்துக் கூறிய சொற்கள் வெகுளியே அன்றி நிற வேறுபாடாகிய பண்பு உணர்த்துதற்கும் உரிய என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

இவை தொழிற்பட்டுழியும் பண்பு உணர்த்தும் என வெளிப்படு சொல்லையும் கூறினர், ஐயம் அகற்றுதற்கு.

(உ-ம்.) 'கறுத்த காயா'
'சிவந்த காந்தள்'[1]

என வரும். முதல், சினைமுதல்.

374] 'நொசிவு, நுழைவு, நுணங்கு'—பொருள் [எசு

நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

இதுவும் அது.

(இ-ள்.) நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை-நொசிவு முதலியன நுண்மையாகிய பண்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'நொசிபடு மருங்குல் கசிவுறக் கைதொழா'
'இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்'[2]
'நுணங்குதுகில் நுடக்கம் போல'[3]

என வரும்.

'நுணங்கு நுண்கொடி மின்னூர் மழைமிசை'

என 'நுணங்கு' நுடக்கத்தை உணர்த்துதல், 'கூறிய கிளவி'[4] என்பதனால் கொள்க.

375] 'புனிறு' என்பதன் பொருள் [எஎ

புனிறென் கிளவியீன் றணிமைப் பொருட்டே.

இது, குறிப்பு.

(இ-ள்.) புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே - 'புனிறு' என்னும் சொல் ஈன்றணிமையாகிய குறிப்புப்பொருளை உடைத்து (எ-று.)

---

1. பதிற். 15 : 11.
2. மலைபடு. 561.
3. நற். 15.
4. உரியியல், சூ. 92.

(உ-ம்.) 'புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போல'[1]
'புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி'[2]
என வரும்.

376] 'நனவு' என்பதன் பொருள் [எஅ

நனவே களனும் அகலமும் செய்யும்.

இதுவும் அது.

(இ-ள்.) நனவே களனும் அகலமும் செய்யும் - 'நனவு' களனும் அகலமுமாகிய குறிப்புப் பொருண்மையை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன்'[3]
'நனந்தலை உலகம் வளைஇ'[4]
என வரும்.

377] 'மத' என்பதன் பொருள் [எகூ

மதவே மடனும் வலியும் ஆகும்.

இதுவும் அது.

(இ-ள்.) மதவே மடனும் வலியும் ஆகும் - 'மத' மடனும் வலியுமாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'பதவு மேய்ந்த* மதவுநடை நல்லான்'[5]
'கயிறிடு† கதச்சேப் போல மதமிக்கு'[6]
என வரும். 'மதவு நடை' என்பதில் மத 'மதவு' என ஈறு திரிந்து நின்றது.

378] 'மத' என்பது வேறு பொருளும் உணர்த்தல் [அ0

மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

பி-ம்: * மேயலருந்து † கயிற்றிடு

1. புறம். 68 : 8. 2. அகம். 56 : 11. 3. அகம். 82 : 10.
4. முல்லை. 1. 5. அகம். 14 : 9. 6. அகம். 36 : 7.

(இ-ள்.) மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே - 'மத' மடனும் வலியுமே அன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்பும் சிறுபான்மை உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'போரார ஏற்றின் பொருநா கிளம்பாண்டில்
தேரூரச் செம்மாந் ததுபோல் மதைஇனள்'*[1]
'மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே.'[2]

என வரும். இவையும் ஈறு திரிந்தன.

379] 'யாணர்' என்பதன் பொருள் [அக

புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி.

இதுவும் அது.

(இ-ள்.) யாணர்க் கிளவி புதிதுபடற்பொருட்டே-'யாணர்' என்னும் சொல் வருவாய் புதிதாகப் படுதலாகிய குறிப்பை உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'வீகொடு சென்ற வட்டிற் பற்பல†
மீனொடு பெயரும் யாணர் ஊர!'[3]

என வரும்.

380] 'அமர்தல்' என்பதன் பொருள் [அஉ

அமர்தல் மேவல்.

இதுவும் அது.

(இ-ள்.) அமர்தல் மேவல் - 'அமர்தல்' மேவுதலாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'அகனமர்ந்து செய்யாள் உறையும்'[4]

என வரும்.

381] 'யாண்' என்பதன் பொருள் [அ௩

யாணுக்கவின் ஆகும்.

இதுவும் அது.

பி-ம்: * மதைஇயினள் † வித்தொடு கசன்ற வட்டி பற்பல

1. கலி. 109 : 4, 5. 2. அகம். 130 : 14.
3. நற். 210. 4. குறள், 84.

(இ-ள்.) யாணுக்கவின் ஆகும் - 'யாண்' என்னும் சொல் கவினாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'யாணது பசலை என்றனன்'[1] *

என வரும்.

382] 'பரவு, பழிச்சு' என்பவற்றின் பொருள் [அ

பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.

இதுவும் அது.

(இ-ள்.) பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள - பரவும் பழிச்சும் 'வழுத்துதல்' என்னும் சொல்லினது குறிப்புப் பொருளை உடைய (எ-று.)

(உ-ம்.) 'கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே.'[2]
'செறிவளை விறலியர் கைதொழூஉப் பழிச்சி
வறிதுநெறி ஒரீஇ'

என வரும்.

383] 'கடி' என்பதன் பொருள் [அ

**கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற் றாயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.**

இது, பெரும்பான்மை குறிப்பும் . சிறுபான்மை பண்பும் உணர்த்துகின்றது.

(இ-ள்.) கடி என் கிளவி வரைவே கூர்மை காப்பே புதுமை விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே அச்சம் முன் தேற்று ஆயீரைந்தும் மெய்ப்படத் தோன்றும் பொருட்டு ஆகும்மே - 'கடி' என்னும் சொல் 'வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு,

பி-ம்: * என்றனென்

1. நற். 50. 2. புறம். 335 : 11, 12.

விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், தெய்வம் முதலியவற்றை முன் நின்று தெளிவித்தல்' என்று கூறப்படுகின்ற அப்பத்துச் சொல்லும் மெய்ம்மைப்படத் தோன்றும் பொருண்மையினை உடைத்து (எ-று.)

(உ-ம்.) 'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு'[1]
'கடிநுனைப் பகழி'
'கடிமரம் தடியும் ஓசை'[2]
'கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்'*[3]
'கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்'[4]
'கடும்பகல் ஞாயிறு'[5]
'கடுங்கால் ஒற்றலின் சுடர்சிறந் துருத்து'[6]
'அம்பு துஞ்சும் கடியரணால்'
'கடியுருமின் உரறிக் கடிப்புச் சேர்பு
கடிய மன்றலின் தழங்குகுரல் முரசம்'
'கோடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவன் நினக்கே கானல்'[7]

என வரும். இவ்வுரிச்சொல், பெரும்பான்மை திரிந்து நிற்கும்.

384] 'கடி' என்பது வேறு பொருளும் உணர்த்துதல் [அசு

ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே.

இஃது, எய்தியதன்மேல் சிறப்பு விதி.

(இ-ள்.) ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே - 'கடி' என்னும் சொல் முற்கூறிய பத்துமே அன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்பும் கரிப்பாகிய பண்பும் உணர்த்துதற்கும் உரித்து (எ-று.)

(உ-ம்.) 'கடுத்தனள் அல்லளோ அன்னை ?'
'கடிமிளகு தின்ற கல்லா மந்தி'

என வரும்.

பி-ம்: * சில்குரல், சிறுகுரல்

1. குறள், 658. 2. புறம். 36 : 9. 3. குறுந். 105.
4. புறம். 15 : 1. 5. கலி. 145 : 26.
6. பதிற். 25 : 6. 7. அகம். 110 : 3, 4.

385] 'ஐ' என்பதன் பொருள் [அஎ

ஐவியப் பாகும்.

இது குறிப்பு.

(இ-ள்.) ஐ வியப்பு ஆகும் - 'ஐ' வியப்பாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'ஐதே காமம் யானே'[1]

என வரும்.

386] 'முனைவு' என்பதன் பொருள் [அஅ

முனைவுமுனி வாகும்.

இதுவும் அது.

(இ-ள்.) முனைவு முனிவு ஆகும் - 'முனைவு' என்னும் சொல் முனிவாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

'முனை' என்றும் பாடம்.

(உ-ம்.) 'சேற்றுநிலை முனைஇய செங்கண் காரான்'[2]

என வரும்.

387] 'வை' என்பதன் பொருள் [அகூ

வையே கூர்மை.

இதுவும் அது.

(இ-ள்.) வையே கூர்மை - 'வை' கூர்மையாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'வைநுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து'[3]

என வரும்.

388] 'எறுழ்' என்பதன் பொருள் [கூ0

எறுழ்வலி ஆகும்.

இதுவும் அது.

1. குறுந். 217. 2. குறுந். 261. 3. முல்லைப். 73.

(இ-ள்.) எறுழ் வலி ஆகும் - 'எறுழ்' வலியாகிய குறிப்பு உணர்த்தும் (எ-று.)

(உ-ம்.) 'சிலைநவில் எறுழ்த்தோள் ஓச்சிவலன் வளையூ' என வரும்.

389] உரிச்சொற்களுக்குப் புறனடை [கூக

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்;
தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.

இஃது, உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) மெய் பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம் - 'ஒரு சொற் பலபொருட் குரிமை தோன்றியும், பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றியும் வரும்,'[1] என இரு கூறு செய்து பொருள் பெறக் கூறப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும், முன்னும் பின்னும் வருபவை நாடி - தத்தமக்கு முன்னும் பின்னும் வரும் மொழிகளை ஆராய்ந்து, ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல் - அம்மொழிகளுள் தமக்குப் பொருந்தின மொழியோடு கூட்டிப் பொருள் உணர்த்துக; மரபின் - அங்ஙனம் உணர்த்திய வரலாற்று முறைமையானே, தத்தம் பொருள் மன் தோன்றும் - தத்தமக்கு உரிய பொருள் விளங்கித் தோன்றும் (எ-று.)

எனவே, 'உரிச்சொல் ஆணையால் பொருள் உணர்த்தாது, வரலாற்று முறைமையால் பொருள் உணர்த்தும்,' என்றார்.

(உ-ம்.) 'போதுகொடி மருங்குல்' என்பதில் 'போகல்' என்பது முன் வரும் சொல்லான் நேர்மையை உணர்த்திற்று.

1, உரியியல், சூ. 1.

'திரிகாய் விடத்தரொடு* காருடை போகி'[1] என்பதில் 'போகல்' என்பது பின் வரும் சொல்லான் நெடுமையை உணர்த்திற்று.

'உறுகால்'[2] என்பது முன் வரும் 'கால்' என்னும் சொல்லான் மிகுதியை உணர்த்திற்று.

'அணங்கிய செல்லல்'[3] என்பது பின் வரும் 'அணங்கிய' என்னும் சொல்லான் இன்னுமையை உணர்த்திற்று.

இங்ஙனம் கூறவே,

'முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்'[4]

என இடைச்சொற்கு ஓதிய விதி இதற்கும் கூறினாராயிற்று.

390] உரிச்சொல், கூறப்பட்ட பொருளேயன்றிப் பிற பொருளும் உணர்த்தல் [கூஉ

கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே.

இதுவும் அது.

(இ-ள்.) கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல வேறு பிற தோன்றினும் - முன்னும் பின்னும் வருபவை நாடிய வழி முற்கூறிய உரிச்சொற்களின் பொருள் நிலைமை அல்லாத வேறு பிற பொருள் தோன்றுமாயினும், அவற்றொடு கொளல் - அக்கூறப்பட்டனவற்றோடே அவற்றையும் உரிச்சொல்லாகக்கொள்க (எ-று.)

(உ-ம்.) 'கடிநாறும் பூந்துணர்' என்றால், முற்கூறியவற்றிற்கு ஏலாது மணப்பொருட்டு ஆயிற்று.

'மரம் புரைபட்டது,' என்பது உயர்வு பொருள் குறித்தது என்று கொள்ளற்க; 'பொத்துபட்டது,' என்னும் பொருட்டு ஆயிற்று.

பி-ம்: * விடத்தேரோடு

1. பதிற். 13 : 14. 2. நற். 37.
3. அகம். 22 : 3. 4. இடையியல், சூ. 3.

இவையே அன்றி, வேறு பிற தோன்றினவை அவ் வச்சூத்திரங்களுள் காட்டிப் போந்தாம்; அவற்றான் உணர்க.

391] பொருள் உணர்த்தும் முறைமை [௩௯௧

பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம் பின்றே.

இச்சூத்திரம் முதல் 'எழுத்துப்பிரிந் திசைத்தல்'[1] என்னும் சூத்திரத்தளவும் முற்கூறிய நால்வகைச் சொல்லையும் உணருமாறும், உணர்த்துமாறும், அவற்றின் தன்மையும் உணர்த்துகின்றார், மேற்கூறுகின்ற பொது இலக்கணமாகிய எச்ச இயற்கு ஏற்ப அதிகாரப் பட்டமை கருதி.

(இ-ள்.) பொருட்குப் பொருள் தெரியின் - ஒரு சொல்லை ஒரு சொல்லானும் பல சொல்லானும் உணர்த்திய வழிப் பொருள் உணர்த்த வந்த சொற்கும் பொருள் யாது எனப் பொருள் தெரியுமாயின், அது வரம்பு இன்று - அங்ஙனம் தெரிதல் வரம்பின்றாகிவிடும்; அதனால், பொருட்குப் பொருள் தெரியற்க (எ-று.)

ஒரு சொற்கு ஒரு சொல்லானும் பல சொல்லானும் பொருள் உணர்த்தினாலும் உணரும் உணர்வு இல்லாதானை உணர்த்துமாறு மேற்கூறுகின்றார்.

392] உணர்த்துமாறு உணர்த்தின் பொருட்குத் திரிபின்மை [௩௯௨

பொருட்குத்திரி பில்லை உணர்த்த வல்லின்.

இதுவும் அது.

(இ-ள்.) உணர்த்த வல்லின் பொருட்குத் திரிபு இல்லை - மாணாக்கன் உணருமாறு அறிந்து ஆசிரியன் உணர்த்த வல்லனாயின், 'இச்சொல் இப்பொருட்டு,' என்று தான் கூறியபொருட்குத் திரிபு இன்றாம் (எ-று.)

'யாம் என்பது படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப் பெயர்,' என்றால் உணராதானை, 'அது செய்மைக்கண்

நின்றூரைத் தன்னேடு கூட்டிக் கூறப்பட்டுப் புடை பெயர்ச்சி இன்றி நின்றதோர் பொருளை உணர்த்திற்றுக் காண்,' எனத் தொடர்மொழி கூறியானும், சேய்மைக் கண் நின்றூரைத் தன்னேடு சேர்த்துக் காட்டியானும் பொருள் உணர்த்துக.

'உண்டேம் என்பது பன்மைத் தன்மை,' என்றூல் பொருள் உணராதானை, 'இது யானும் இவனும் அவனும் உண்டல் தொழிலைச் செய்தேம் என்னும் பொருள் உணர்த்திற்றுக்காண்,' எனத் தொடர்மொழி கூறியானும், அவரைத் தன்னெடு சேர்த்தித் தொழில் நிகழ்த்திக் காட்டியானும் பொருள் உணர்த்துக.

''சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே !'[1]

என்புழி மன்னைச்சொல், 'இனி அது கழிந்தது!' என்னும் பொருள் குறித்து நின்றதுகாண்,' என்றூல் பொருள் உணராதானை, 'அரிதாகப் பெற்ற கள்ளை எக்காலமும் எமக்குத் தருகின்றவன் துறக்கத்துச் சேறலின், எமக்குக் கள் உண்டல் போயிற்று என்றல் இதன் பொருள்,' எனத் தொடர்மொழி கூறிப் பொருள் உணர்த்துக.

''உறுகால்'[2] என்புழி 'உறு' என்பது மிகுதி,' என்றூல் பொருள் உணராதானை, 'கடுங்காலினது வலி கண்டாய், ஈண்டு 'உறு' என்பதற்குப் பொருள் அஃது,' என்று தொடர் மொழி கூறியானும், கடுங்கால் உள் வழிக் காட்டியானும் உணர்த்துக.

இங்ஙனம் நால்வகைச் சொல்லையும் மாணக்கன் உணருமாறு அறிந்து உணர்த்தவே பொருட்குத் திரிபு இன்றூம்.

இங்ஙனம் உணர்த்தவும் உணராதானை உணர்த்தற் பாலனல்லன் என்கின்றது மேல் வருகின்ற சூத்திரம்.

---

1. புறம். 235 : 1.   2. நற். 37.

393] பொருளுணர்ச்சி உணர்வோர் ஆற்றலைப் பொறுத்தது [கூரு

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.

இதுவும் அது.

(இ-ள்.) உணர்ச்சி வாயில் - நால்வகைச் சொல்லையும் மாணாக்கன் உணர்தற்குக் கூறிய இவ்விலக்கணம், உணர்வோர் வலித்து - தன்னை உணர்வோரது உணர்வைத் தனக்கு வாயிலாக உடைத்து (எ-று.)

எனவே, தன்னை உணரும் உணர்வு இல்லாதாற்குத் தான் சொல்வது பயன்படாது ஆகலின், அதனை அவற்கு உணர்த்தற்க என்பது பொருளாயிற்று.

இத்துணையும் உணருமாறும் உணர்த்துமாறும் உணர்த்தினார்.

394] சொற்பொருள் உணர்த்தும் காரணம் ஆசிரியர்க்கே புலப்படல் [கூசு

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.

இது, சொற்பொருள் உணர்த்தும் காரணம் ஆசிரியர்க்கே புலப்படும் என்கின்றது.

(இ-ள்.) மொழிப்பொருட் காரணம் - நால்வகைச் சொல்லுக்கும் பொருளை அறிவித்து நிற்கின்றதோர் காரணம் உண்டாம் தன்மை, விழிப்பத் தோன்றா - நுண்ணுணர்வு இல்லாதோர்க்கு 'மரபு' என்று கொள்வது அல்லது விளங்கத் தோன்றா (எ-று.)

எனவே, நுண்ணுணர்வு உடையோர்க்குக் காரணம் உண்டாம் தன்மை விளங்கத் தோன்றும் என்பது பொருளாயிற்று.

இது மரபு என்று கோடல், 'நிலந்தீ நீர்வளி'[1] என்னும் மரபியற்சூத்திரத்தினும் ஆசிரியர் உணர்த்தினார்.

---

1. மரபியல், சூ. 89.

உலகத்துப் பொருள்களின் நிகழ்ச்சிக்குச் சொல் காரணம் ஆதலின், 'மொழிப்பொருட் காரணம்' என்றார். இக்காரணம் அக்காரியங்களோடு இயைந்து நிற்கின்ற தன்மை ஆசிரியர்க்கு அல்லது புலப்படாமையின், 'விழிப்பத் தோன்றா,' என்றார்.

395] உரிச்சொற்கு எழுத்துப் பிரிந்து இசையாமை [கூஎ

எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே.

இஃது, உரிச்சொற்கு எழுத்துப் பிரிந்து இசைத்தல் இன்று என்கின்றது.

(இ-ள்.) எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்று - எழுத்துக்கள் முதல் நிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்து வேறு வேறு பொருள் உணர்த்துதல் உரிச்சொல்லிடத்து இயல்பு உடைத்தன்று (எ-று.)

எனவே, எழுத்துக்கள் திரிந்து பொருள் உணர்த்துதல் உரிச்சொல்லிடத்து இயல்பு உடைத்து என்றவாறும்.

எழுத்துக்கள் பிரிந்து இசைத்தன வினைச்சொல்லும் ஒட்டுப்பெயரும். அவற்றுள், வினை பிரிந்தன வினை இயலுள் ஈறு பற்றி ஓதிப் பிரித்துக் காட்டினர்; பெயர் பிரிந்தன 'நம்மூர்ந்து வரூஉம் இகரஐ காரமும்'[1] என்பன முதலியவற்றால் காட்டினர். 'வெற்பன், பொருப்பன்' என்பன முதல்நிலை பிரிப்பப் பிரியுமேனும், அவையும் ஒட்டுப்பெயர் என்று உணர்க.

தாமாகப் பொருள் உணர்த்தாமையின், பிரிதலும் பிரியாமையும் இடைச்சொற்கு இன்று.

இனி, உரிச்சொல் எழுத்துத் திரிந்து இசைத்தன எல்லாம் இவ்வோத்தினுள் காட்டிப் போந்தவற்றான் உணர்க.

1. பெயரியல், சூ. 9.

396] உரிச்சொற்களுக்குப் புறனடை [கூஅ

அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்.

இஃது, உரிச்சொற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

(இ-ள்.) கிளந்த அல்ல அன்ன பிறவும் - சொல்லப்பட்டனவே அன்றி அவை போல்வன பிறவுமாய், பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம் - ஈறுபற்றி உணர்த்தற்கு அடங்காது பலவாற்றானும் பரந்து வரும் உரிச்சொல் எல்லாம், பொருட்குறை கூட்ட - பொருளைச் சொல் இன்றியமையாக் குறைபாடு தீரப் பொருளை அதனோடு கூட்டி உணர்த்த, இயன்ற மருங்கின் இனைத்து என அறியும் வரம்பு தமக்கு இன்மையின் - 'இசை, குறிப்பு, பண்பு' பற்றித் தாம் இயன்ற நிலத்து 'இத்துணை' என வரையறுத்து உணரும் எல்லை தமக்கு இன்மையான் எஞ்சாமல் கிளத்தல் அரிது ஆகலின், வழி நனி கடைப்பிடித்து - அவற்றை அறிவதற்கு ஓதிய வழிகளைச் சோராமல் மிகவும் கடைப்பிடித்து, ஓம்படை ஆணையிற் கிளந்தவற்று இயலாற் பாங்கு உற உணர்தல் என்மனார் புலவர் - பாதுகாவலாகிய ஆணையிற் கிளந்தவற்றின் இயல்பாலே அவற்றையும் பகுதியுற உணர்க என்று சொல்லுவர் புலவர் (எ-று.)

'ஆதலால் யானும் அவ்வாறே கூறினேன்,' என்றார் எனக் குறிப்பெச்சமாக உரைக்க.

எனவே,

''பெயரினும் வினையினும் மெய்தடு மாறி'[1]

எனவும்,

---

1. உரியியல், சூ. 1.

'முன்னும் பின்னும் வருபவை நாடி'[1]

எனவும் யான் கூறிய நெறியைச் சோராமல் கடைப் பிடித்து,

'எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்'[2]

எனவும்,

'ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே'[3]

எனவும் என்னல் தரப்பட்ட பாதுகாவலாணையால் கிளந் தவற்று இயலால் பாங்குற உணர்க,' என்பது இதன் கருத்தாயிற்று.

'உரிச்சொல் எல்லாம், கூட்ட வரம்பு தமக்கு இன்மையின், கடைப்பிடித்து, இயல்பாகவே அவற்றை உணர்க,' என வினை முடிபு செய்க.

'இருமை' என்பது கருமையும் பெருமையுமாகிய குறிப்பும், 'சேண்' என்பது சேய்மையாகிய குறிப்பும், 'தொன்மை' என்பது பழமையாகிய குறிப்பும் உணர்த்து தலும்; 'இவறல்' உலோபமும்,

'நோறிலியற் புரவி அதியர்* கோமான்'

என 'நொறில்' நுடக்கமும்,

'நோறிலியற் புரவிக் கழற்கால் இளையோர்'

என 'நொறில்' விரைவும், 'தெவிட்டுதல்' அடைதலும், 'மலிதல்' நெருங்குதலும், 'மாலை' குற்றமும் உணர்த்து தலும்; பிறவும் 'கிளந்த அல்ல' என்பதனல் கொள்க.

உரி இயல் முற்றும்.

பி-ம் : * அதிபர்

1. உரியியல், சூ. 91. 2. உரியியல், சூ. 1. 3. உரியியல், சூ. 91.

கூ. எச்ச இயல்

397] நால்வகைச் சோற்கள் [க

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.

என்பது சூத்திரம். முற்கூறிய எண்வகை ஓத்தினுள்ளும் உணர்த்துதற்கு இடம் இன்றி எஞ்சி நின்ற சொல் இலக்கணங்களைத் தொகுத்து உணர்த்துதலின், இஃது 'எச்ச இயல்' என்னும் பெயர்த்தாயிற்று. செய்யுட்கு உரிய சொல்லும், அவற்று இலக்கணமும், அவற்றின் விகாரமும், அச்செய்யுட்பொருள்கோளும் முதல் உணர்த்துகின்றார். இச்சூத்திரம், செய்யுள் விதி ஒழிபு பெரும்பான்மைத்து ஆதலின், செய்யுட்செய்தற்கு உரிய சொற்கள் இவை என அவற்றின் வரையறை கூறுகின்றது.

(இ-ள்.) இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று அனைத்தே - இயல்பாகிய சொல்லும் அதுதான் திரிந்து வரும் சொல்லும் திசைக்கண் வழங்கும் சொல்லும் ஆரியச் சொல்லும் என்று கூறிய அத்துணையே, செய்யுள் ஈட்டச் சொல்லே - ஒரு பொருண்மேல் நிகழும் செய்யுளை ஈட்டுதற்கு உரிய சொல்லாவன (எ-று.)

எனவே, பிற பாடைச்சொற்கள் ஈட்டுதற்கு உரிய அன்றிச் சிறுபான்மை வரும் ஆயின. அவை, 'செப்பு, குளிரு, சிக்கு, அந்தோ' என்றாற்போல்வன பிறவுமாம்.

இயல்பாகிய சொல், முற்கூறிய நால்வகைச் சொல்லேயாய் நின்று, செய்யுட்கு உரித்தாம்.

அவ்வியற்சொல், திரிசொல் ஆங்கால் பெரும்பான்மை பெயராகவும், சிறுபான்மை வினைத்திரிசொல்லாகவும் திரிதலன்றி, இடையும் உரியுமாகத் திரிந்து வாரா.

திசைச்சொல்லும் வடசொல்லும் பெரும்பான்மை பெயர்ப்பெயராயும் சிறுபான்மை தொழிற்பெயராயும் வருதலன்றி ஏனையவாய் வாரா.

398] இயற்சொல்லுக்கு இலக்கணம் [உ

அவற்றுள்,
இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.

இது, நிறுத்த முறையானே இயற்சொற்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் இயற்சொல்தாமே - அந்நான்கனுள் 'இயற்சொல்' என்று கூறிய சொல்தாம், செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி - செந்தமிழ் நிலத்தின்கண்ணே வழங்குதலோடுபொருந்தி, தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்லே - அச்செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் கேட்டோர்க்குத் தத்தம் பொருள் வழுவாமல் ஒலிக்கும் சொல்லாம் (எ-று.)

திரிபு இன்றி இயல்பாகிய சொல்லாவன, 'நிலம், நீர், தீ, வளி, சோறு, கூழ், பால், மக்கள், மரம், தெங்கு, கமுகு' என்னும் தொடக்கத்தன.

செந்தமிழ் நிலமாவது, வையை யாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்.

399] திரிசொல்லுக்கு இலக்கணம் [ந

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி.

இது, திரிசொற்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) திரிசொற்கிளவி - அவ்வியற்சொல் திரிந்த திரிசொல்லாகிய சொல்லை, ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும் வேறு பொருள் குறித்த ஒரு சொல்லாகியும் இருபாற்று என்ப - ஒரு பொருளைக் குறித்து வரும் பல சொல்லாயும் பல பொருளைக் குறித்து வரும் ஒரு சொல்லாயும் இருவகைப்படும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

அவ்வியற்சொல்லைத் திரிக்குங்கால் தம் எழுத்துச் சிறிது நிற்பத் திரிப்பனவும், அவ்வியற்சொல்தம்மையே பிறசொற்கொணர்ந்து முழுவதூஉம் திரிப்பனவும் என இரு வகையவாம்.

(உ-ம்.) 'கிளி, மயில்' என்பவற்றைக் 'கிள்ளை, மஞ்ஞை' எனச் சிறிது நிற்பத் திரித்தும், அவற்றைத் 'தத்தை, பிணிமுகம்' எனப் பிற சொற்கொணர்ந்து முழுவதூஉம் திரித்துங் கூறுதல்.

மலைக்கு 'வெற்பு, விலங்கல், விண்டு' என்பன முழுவதூஉம் திரித்தன. இவை ஒரு பொருள் குறித்த வேறு சொல்.

'உந்தி' என்பது யாழ்ப்பத்தலும், கொப்பூழும், தேர்த்தட்டும், கானியாற்றிடையும் உணர்த்துதல் முழுவதூஉம் திரித்தது. இது, வேறு பொருள் குறித்த ஒரு சொல்.

'அளகு' என்பது 'கோழி, கூகை, மயில்' என்னும் மூன்று சாதியிற் பெண்பாற்கும் பெயராதலின், இதுவும் வேறு பொருள் குறித்ததாம். இவை முழுவதூஉம் திரித்தன.

இவை எல்லாம் **பெயர்த் திரிசொல்.**

'கேட்டிவாயாயின், செப்பீமன், ஈங்குவந்தீத்தாய், புகழ்ந்திகுமல்லரோ, என்மனார், என்றிசினோரே, பெறலருங்குரைத்து' என்பன போல்வன **வினைத் திரிசொல்.** இவை சிறிது நிற்பத் திரித்தன.

'பைங்கண், பைந்தார், பச்சிழை; காரா; சேதா' என்றாற்போலும் பண்புத்தொகையாகிய சொற்களைப் 'பசுமை, கருமை, செம்மை' எனப் பண்புப்பெயராக நிறுத்தி, ஈற்றுயிர்மெய்யும் ஈற்றயல் உயிரும் கெட்டு வருமொழிக்கு ஏற்ப ஒற்றுத் திரிந்தும் திரியாதும் ஆதி நின்ற அகரம் ஐகாரமாயும் திரிந்தன என்றும், ஈற்றுயிர் மெய்யும் ஈற்றயல் உயிரும் கெட்டு ஆதி நீண்டது என்றும், ஈற்றுயிர்மெய்யும் இடையில் ஒற்றும் கெட்டு ஆதி நீண்டது என்றும் பின்னுள்ளோர் சந்தி முடிக்கின்றது பொருந்தாது. என்னை? 'பைங்கண்' என்புழிப் 'பசியதாகிய கண்' எனப் பண்பு உணர்த்தும் ஈற்றை விரித்தல் அன்றிப்'பசுமைக்கண்' எனத் தாம் தொகுத்த பண்புப்பெயரை விரித்தல் ஆகாமையின். இவை செய்யுட்குப் புலவர் சிறிது நிறப்பத் திரித்துக்கொண்ட பெயரெச்ச வினைக்குறிப்புப் பெயரென்று உணர்க. எழுத்ததிகாரத்துச் 'செய்யுட்கு இவ்வாறு முடிக்க,' என ஆசிரியர் முடிபு கூறியவற்றை எல்லாம் 'செய்யுள் முடிபு' என்று கூறலும், வழக்குச்சொல் இவ்வாறு திரிந்து வந்தனவற்றை 'வினைத்திரிசொல்' என்று பெயர் கூறலும் ஆசிரியர் கருத்தாம்.

இடையும் உரியும் திரிசொல்லாய் வருமேனும் உணர்க.

400] திசைச்சொற்கு இலக்கணம் [௪

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி.

இது, திசைச்சொற்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) திசைச்சொற்கிளவி - திசைச்சொல்லாகிய சொல், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் தம் குறிப்பினவே - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் பன்னிரண்டையும் புறம் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும் தாம் தாம் குறித்த பொருளையே விளக்கும் தன்மையை உடையன (எ-று.)

உம்மையை எச்ச உம்மையாக்கிப் பொருள் உரைக்க. எனவே, இயற்சொற்போல எந்நிலத்தும் தம் பொருள் விளக்காவாயின.

பன்னிரு நிலமாவன: பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலையமானாடு,* அருவா நாடு, அருவாவடதலை எனத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பால் ஈறாக எண்ணுக.

இனிப் பன்னிரண்டையும் சூழ்ந்த பன்னிரண்டாவன: சிங்களமும், பழந்தீவும், கொல்லமும், கூபமும், கொங்கணமும், துளுவும், குடகமும், கருநடமும், கூடமும், வடுகும், தெலுங்கும், கலிங்கமும் ஆம்.

தென்பாண்டி நாட்டார் 'ஆ, எருமை' என்பனவற்றைப் 'பெற்றம்' என்றும், குட்ட நாட்டார் தாயைத் 'தள்ளை' என்றும் நாயை 'ஞெள்ளை' என்றும், குடநாட்டார் தந்தையை 'அச்சன்' என்றும், கற்கா நாட்டார் வஞ்சரைக் 'கையர்' என்றும், சீத நாட்டார் 'ஏடா' என்பதனை 'எலுவன்' என்றும் தோழியை 'இகுளை' என்றும் 'தம்மாமி' என்பதனைத் 'தந்துவை' என்றும், பூழி நாட்டார் நாயை 'ஞமலி' என்றும் சிறு குளத்தைப் 'பாழி' என்றும், அருவாநாட்டார் செய்யைச் 'செறு' என்றும் சிறுகுளத்தைக் 'கேணி' என்றும், அருவாவடதலையார் குறுணியைக் 'குட்டை' என்றும் வழங்குப.

இனிச் சிங்களம், 'அந்தோ!' என்பது. கருநடம், 'கரைய, சிக்க, குளிர' என்பன. வடுகு, 'செப்பு' என்பது. தெலுங்கு, எருத்தைப் 'பாண்டில்' என்பது. துளு,† மா மரத்தைக் 'கொக்கு' என்பது.

ஒழிந்தவற்றிற்கும் வந்துழிக் காண்க.

பி-ம்: * மலாட்டு நாடு † துளுவம்

401] வடசொற்கு இலக்கணம் [ரு

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

இது, வடசொற்கு இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்.) வடசொற்கிளவி - வடசொல்லாகிய சொல், வடவெழுத்து ஒரீஇ - உரப்பியும் எடுத்தும் கனைத்தும் கூறும் வடவெழுத்துக்களின் நீங்கி, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்- இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம் (எ-று.)

அவை, 'வாரி, மேரு, குங்குமம், மணி, மானம், மீனம், வீரம், வேணு, காரணம், காரியம், நிமித்தம், காரகம்' என்றாற்போலச் சான்றோர் செய்யுட்கண் வருவன.

இனி, ஒழிந்தோர் செய்யுட்கண் வருவன, 'கமலம், அமலம், மூலம், கோபம், ஞானம், ஞேயம், தமாலம், தாரம், திலகம், நாமம், யானம், யோனி, உற்பலம்' இவை போல்வன பிறவுமாம்.

402] மேலதற்கு ஒரு புறனடை [சா

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்.

இதுவும் அது.

(இ-ள்.) சிதைந்தன வரினும் - பொது எழுத்தான் இயன்றனவே அன்றி வடவெழுத்தான் இயன்ற வடசொல் சிதைந்து வரினும், இயைந்தன வரையார் - பொருத்தமுடையன செய்யுளிடத்து நீக்கார் (எ-று.)

(உ-ம்.) 'அரமிய வியலகத் தியம்பும்'[1]
'தசநான் கெய்திய பணைமருள் நோன்றாள்'[2]
'வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி'[3]
'கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை'[4]

---

1. அகம். 124 : 15.
2. நெடுநல். 115.
3. மலைபடு. 112.
4. புறம். 378 : 18.

'பேதை அல்லை மேதையங் குறுமகள்'
'தைப்பமை சருமத்து'

என்றாற்போல்வன சான்றோர் செய்யுட்கண் சிதைந்து வந்தன.

இனி, 'தந்திரம், சூத்திரம், விருத்தி, அருத்தாபத்தி, உத்தி' என்றாற்போல்வன, நூலுள் சிதைந்து வந்தன. பங்கயம், இடபம், விசயம், இருடிகள், மேகம், பந்தம், மயானம், விடம், துங்கம், பலம், பாரம், சர்ச்சரை, சாதி, சேனை, சித்தி, சாதனம், அயன், அரி, அரன், ஆரம், அருகம், சிங்கம், மோக்கம், காமம், பக்கம், சூலம், சதம், போதகம், போகம், சுத்தம், சலம், மோகம், யோகம், வந்தனை, வேலை, சாலை, மாலை, உவமை, வனிதை, புரி, மேதினி, குமரி, நதி, அரங்கம், இலங்கை, இயக்கன், உலோபம், உலோகம், நிருத்தம், கீதம், வாச்சியம், வச்சிரம், அருத்தம், கருமம், கருப்பம், காப்பியம், பருப்பதம்' என்றாற்போல்வன பின்னுள்ளோர் செய்யுட்கண் திரிந்து ஏற்கும் எழுத்துக்களால் மருவி வந்தன.

இனி, 'சிதைந்தன வரினும்' எனப் பொதுப்படக் கூறிய அதனால், 'ஆணை, வட்டம், நட்டம், கண்ணன்' எனப் பாகதமாகச் சிதைந்தனவும் கொள்க.

403] செய்யுள் விகாரம் [எ

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்த
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும் [லும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்.

இது, செய்யுள் விகாரம் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அந்நாற்சொல்லும் தொடுக்குங்காலை - முற்கூறிய நான்கு சொல்லையும் செய்யுளாகத் தொடுக்குங்கால், வலிக்கும் வழி வலித்தலும் - மெல்லொற்றை வல்லொற்றாக்க வேண்டும்வழி

வல்லொற்று ஆக்கலும், மெலிக்கும்வழி மெலித்தலும் - வல்லொற்றை மெல்லொற்றுக்க வேண்டும்வழி மெல்லொற்று ஆக்கலும், விரிக்கும்வழி விரித்தலும் - சந்தி நிரம்புதற்கு ஓர் சொல்லை விரிக்கவேண்டும்வழி விரித்தலும், தொகுக்கும்வழித் தொகுத்தலும் - சந்தம் உளவாதற்கு ஓர் சொல்லைத் தொகுக்கவேண்டும் வழித் தொகுத்தலும், நீட்டும்வழி நீட்டலும் - குற்றெழுத்தினை நீட்ட வேண்டும்வழி நீட்டலும், குறுக்கும்வழிக் குறுக்கலும் - நெட்டெழுத்தினைக் குறுக்க வேண்டும்வழிக் குறுக்கலுமாகிய அறுவகை விகாரமும், நாட்டல் வலிய என்மனார் புலவர் - செய்யுள் இன்பம் பெறச் செய்வார் நாட்டுதலை வலியாக உடைய என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) 'முத்தை வரூஉம் காலம் தோன்றின்'[1]
'குன்றிய லுகரத் திறுதி ஆகும்.'[2]
'தண்ணந் துறைவன் கொடுமை'[3]
'இடையெனப் படுப'[4]
'வெள்வளை நல்கார் வீடுமென் உயிரே.'
'திருத்தார்நன் றென்றேன் தியேன்.'[5]

என முறையே காண்க.

'பாசிலை,[6] அழுந்துபடு விழுப்புண்'[7] என்றாற்போல இரண்டு விகாரம் வருவனவற்றை 'நாட்டல் வலிய' என்றதனாற்கொள்க.

404] பொருள்கோள் வகை [அ

நிரல்நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே.

இது, செய்யுள் செய்வழி அதன் பொருட்கிடை கூறுகின்றது.

(இ-ள்.) இயல்பு புணர் மொழி - இயற்கையாகவே தம்முள் கூடிய பொருள் உணர்த்தும் சொற்கள் அங்ஙனம் இயற்கை

---

1. தொல். எழுத். தொகை மரபு, சூ. 22. 2. கிளவியாக்கம், சூ. 8.
3. குறுந். 9. 4. இடையியல், சூ. 1.
5. யா. வி. சூ. 62. உரை மேற். 6. புறம். 54 : 10. 7. நற். 97.

யாகக் கூடிப் பொருள் உணர்த்தாது விகாரப்பட்டுப் பொருள் உணர்த்துங்கால், அவை - அவ்விகார வகை, நிரல் நிறை சுண்ணம் அடிமறி மொழி மாற்று நான்கு என்ப - நிரல் நிறையும் சுண்ணமும் அடி மறியும் மொழி மாற்றும் என நான்கு என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

நிரல் நிறையும் சுண்ணமும், நிரலே நிறுத்தலும் துணித்துக் கூட்டுதலுமாகிய வேறுபாடு உடைமையின், மொழி மாற்றின் வேறு ஆயின.

405] நிரல் நிறைப் பொருள்கோள் [கூ

அவற்றுள்,
நிரல்நிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.

இது, நிறுத்த முறையானே 'நிரல் நிறை' கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் நிரல் நிறைதானே - அந்நான்கனுள் நிரல் நிறையாவது, வினையினும் பெயரினும் நினையத் தோன்றி - வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றி, சொல் வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல் - முடிக்கப்படும் சொல்லும் வேறே நிலைபெற்று முடிக்கும் சொல்லும் வேறே நிற்றலாம் (எ-று.)

தொடர்மொழிப் பொருள் முடிக்கும் சொற்கண்ணது ஆகலான், முடிக்கும் சொல்லைப் 'பொருள்' என்றார்.

'வினையினும் பெயரினும்' என்றதனான், வினைச் சொல்லான் வருவதூஉம் பெயர்ச்சொல்லான் வருவதூஉம் அவ்விரு சொல்லான் வருவதூஉம் என நிரல் நிறை மூன்றாம்.

(உ-ம்.) 'மாசு போகவும் காய்பசி நீங்கவும்
கடிபுனல் மூழ்கி அடிசில்கை தொட்டு'

என்புழி, முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறு வேறு நிற்றலின், வினை நிரல் நிறை.

'கோடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி'[1]

என முடிவனவும் முடிப்பனவுமாகிய பெயர்ச்சொல் வேறு வேறு நிற்றலின், பெயர் நிரல் நிறை.

'உடலும் உடைந்தோடும் ஊழ்மலரும் பார்க்கும்
கடல்இருள் ஆம்பல்பாம் பென்ற—கெடலருஞ்சீர்த்
திங்கள் திருமுகமாச் செத்து.'*

என்புழி, முடிவனவாகிய பெயரும் முடிப்பனவாகிய வினையும் வேறு வேறு நிற்றலின், பொது நிரல் நிறை.

'நினைய' என்றதனால், சொல்லும் பொருளும் நிரல் பட நில்லாது,

'களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனும் தோன்றும்'[2]

என மயங்கி வருதலும் கொள்க.

406] சுண்ணப் பொருள்கோள் [கo

சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்.

இது, 'சுண்ணம்' ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) சுண்ணந்தானே - சுண்ணமாவது, பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர் - இயல்பாக அமைந்த ஈரடிக்கண் உளவாகிய எண்சீரை, துணித்தனர் ஒட்டுவழி அறிந்து இயற்றல் - துணித்து இயையும்வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம் (எ-று.)

ஈரடி எண்சீர் அளவடி அல்லா விகார அடியானும் பெறப்படுதலின், அவற்றை நீக்குதற்கு 'அளவடியான் அமைந்த' என்பார், 'பட்டாங் கமைந்த ஈரடி' என்றார்.

பி-ம்: * சேத்து
1, 2. உவமவியல், சூ. 37 உரை மேற்.

(உ-ம்.) 'சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.'[1]

'சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து' எனத் துணித்துக் கூட்ட இயையும்.

சுண்ணம்போலச் சிதர்ந்து கிடத்தலின், **சுண்ணம்** ஆயிற்று.

இதனுள், 'ஆழ அம்மி, நீத்து முயற்கு' என ஒட்டிப் பொருள் தந்து நின்றனவேனும், சுரைக்கும் யானைக்கும் சொல் முடிபு நோக்குப்பட நின்று பொருள் உணர்த்தாமையின், மாற வேண்டிற்று.

407] அடி மறிப் பொருள்கோள் [கக

அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே.

இஃது, 'அடி மறி' ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) அடி மறிச்செய்தி - 'அடி மறி' என்பதன் செய்தி, சீர் நிலை திரியாது அடி நிலை திரிந்து தடுமாறும் - சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தம் நிலையின் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று நிற்கும் (எ-று.)

(உ-ம்.) 'மாறாக் காதலர் மலைமறந் தனரே;
ஆறாக் கட்பனி வரலா னாவே;
ஏறா மென்றோள் வளைநெகி ழும்மே;
கூறாய் தோழி!யான் வாழு மாறே.'[2]

இது சீரும் பொருளும் திரியாது, அடி திரிந்தவாறு காண்க. இது நான்கடிச் செய்யுட்கல்லது பெரும்பான்மை வாராது.

408] மேலதற்கு ஒரு புறனடை [கஉ

பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரியும்
தோற்றமும் வரையார் அடிமறி யான.

1, 2. யா. வி. சூ. 95 உரை மேற்.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) அடிமறியான - அவ்வடிமறிச்செய்யுளிடத்து, பொருள் தெரி மருங்கின் - பொருள் முடிவை ஆராயுமிடத்து, ஈற்று அடி - அப்பொருள் முடிவினை உடைய அடியில், எருத்து வயின் இறுசீர்-முடிக்கின்ற சீர்க்கு முதற்சீரிடத்துப் பொருளே தன் பொருளாய் இறும் சீர், திரியும் தோற்றமும் வரையார் - ஏனை அடிகள் போல நேராய் முடியாது மீண்டு சென்று முன் நின்றதோர் சொல்லோடே பொருள் முடியும் தோற்றாவும் நீக்கார் ஆசிரியர் (எ-று.)

'கூறாய் தோழி!யான் வாழு மாறே.'

என்பது, யாண்டு நிற்பினும் பாட்டில் பொருள் முடிக்கின்ற அடி. அதில் 'வாழும்' என்பது, எருத்துச் சீர். 'மாறு' என்னும் இடைச்சொல்லாகிய இறுதிச்சீர் தான் பிரிந்து நின்று உணர்த்துதற்குத் தனக்கு ஓர் பொருள் இன்றி 'வாழும்படியை' என எருத்துச்சீரின் பொருளையே உணர்த்தி, உருபை ஏற்றுக் 'கூறாய்' என முன் நின்ற சொல்லோடு முடிந்தவாறு காண்க.

உம்மையான், இங்ஙனம் முடிதல் சிறுபான்மை ஆயிற்று.

409] மொழி மாற்றுப் பொருள்கோள் [கரு

மொழிமாற் றியற்கை
சொல்நிலை மாற்றிப் பொருள்எதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்.

இது, 'மொழி மாற்று' ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) மொழி மாற்று இயற்கை - மொழி மாற்றினது இயல்பாவது, சொல் நிலைப் பொருள் எதிர் இயைய முன்னும் பின்னும் மாற்றி - செய்யுட்கண் 'பா' என்னும் உறுப்பிற்கு ஏற்பச் சொல் நின்ற நிலை பொருள் தாராத வழிச் சொல் நின்ற நிலைக்குப் பொருள் எதிரே வந்து பொருந்தும்படி அச்சொல்லின் முன் நின்ற சொல்லைப் பின்னேயும் பின் நின்ற சொல்லை

முன்னேயும் மாற்றி, கொள்வழிக் கொளாஅல் - பொருள் கொள்ளுமிடத்தே கொளுத்துதலாம் (எ-று.)

(உ-ம்.) 'சூரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன* வாங்குவள் பரிய'[1]

'புரவியினது வாங்குவள் நரம்பு ஆர்ப்பு அன்ன பரிய' என முன் நின்ற சொல்லைப் பின்னே மாற்றியவாறு காண்க. இச்சூத்திரமும் அது.

'இடைமுலைக் கிடந்து'[2]

என்பது, ''முலையிடை' எனப் பின் நின்ற மொழியை முன்னே மாற்றியவாறு காண்க.

'கடற்படை குளிப்ப மண்டி'[3]

என்பதும் அது.

'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப'[4]

என்பதும் அது.

'பொன்னோடைப் புகரணிநுதல்
துன்னருந்திறல் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக வெயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானையிரும் பிடர்த்தலை இருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாவா'†[5]

என்றாற்போல வருவன எல்லாம் 'அணுகி வந்த மாட்டு' என்னும் உறுப்பு.

'ஆரிய மன்னர் பறையின் எழூந்தியம்பும்'[6]

என்பதும் அது.

'அகன்று வந்த மாட்டு' முருகாற்றுப்படை முதலியவற்றுட்காண்க.

பி-ம்: * நரம்பார்த் தன்ன † சாயா

1. அகம். 4: 8, 9. 2. குறுங். 178.
3. புறம். 6: 12. 4. அகம். 4: 3, 4.
5. புறம். 3: 7-12. 6. யா. வி. சூ. 95 உரை மேற்.

மொழி மாற்றுவது, கேட்டோர் கூட்டி உணருமாற்றான் ஈரடிக்கண்ணே வருவது என்றும்; 'மாட்டு' என்னும் உறுப்பாவது, இரண்டு இறந்த பல அடிக்கண்ணும் பல செய்யுள் தொடரின்கண்ணும் அகன்றும் அணுகியும் வரும் என்றும் உணர்க. அஃது,

> 'அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
> இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
> மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.'[1]

என்னும் செய்யுளியற்சூத்திரத்தான் உணர்க. உதாரணங்கள் ஆண்டுக் காட்டுதும்.

பூட்டுவிற்பொருள்கோளும், அளைமறி பாப்புப்பொருள்கோளும், தாப்பிசைப் பொருள்கோளும், கொண்டு கூட்டுப் பொருள்கோளும் 'மாட்டு' என்னும் உறுப்பின்கண் அடங்குமாறும்; யாற்றொழுக்குப் பொருள்கோள் 'யாப்பு' என்னும் உறுப்பின்கண் அடங்குமாறும் உணர்க.

410] கிளைப்பெயர்கள் பிரிக்கப்படா [கச

> தநநு எஎனும் அவைமுத லாகிய
> கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா.

இது, மேல் தொகைச்சொற்கூறுவான், தொகை போல இரு பொருள்படுவன இவை என்கின்றது.

(இ-ள்.) த ந நு எ எனும் அவை முதலாகிய கிளை நுதற் பெயரும் - 'த, ந, நு, எ' என்கின்ற எழுத்துக்களை முதலாக உடைய ஒருவரோடு ஒருவர்க்கு உள்ள தொடர்ச்சிக்கிழமையைக் கருதின ஒட்டுப்பெயர்களும், பிரிப்பப் பிரியா - தொகைச் சொற்போல இரு பொருள்பட்டு நிற்பினும் அவை போலப் பின் வரும் சொல் தம் பொருள் உணர்த்தாமையின் பிரிக்கப் படா, ஒரு சொல்லேயாய் நிற்கும் (எ-று.)

---

1. செய்யுளியல், சூ. 210.

(உ-ம்.) தமன், தமள், தமர்.
நமன், நமள், நமர்.
நுமன், நுமள், நுமர்.
எமன், எமள், எமர்.

என வரும். விளி மரபில் முதலும் ஈறும் பற்றி ஓதி இடையின் விகற்பம் கூறாமையின், 'தம்மான், நம்மான், நும்மான், எம்மான்' என்றாற்போலும் வாய்பாட்டு விகற்பமும் கொள்க.

சேனாவரையர், 'தங்கிளை, நங்கிளை, நுங்கிளை, எங்கிளை' என்பனவற்றை ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்கும் என்றால் எனின், ஆசிரியர்,

'தாம்என் கிளவி பன்மைக் குரித்தே.'[1]
'யாம் நாம்என வரூஉம் பெயரும்'[2]

என இவ்வதிகாரத்து எடுத்து ஓதிய பன்மைச்சொற்களை எழுத்ததிகாரத்துள் அவை எழுவாயும் பயனிலையுமாய் நிற்கும்வழித் திரியாது புணரும் என்று கூறி,

'தாம்நாம் என்னும் மகர இறுதியும்'[3]

என்னும் சூத்திரத்தான் உருபு ஏற்கும்வழித் திரிந்து புணரும் என்று கூறி, 'நும்' என்பதனை,

'நும்மென் ஒருபெயர்'[4]

என்னும் சூத்திரத்தான் உருபு ஏற்குமாறு கூறி,

'அல்லதன் மருங்கின்'[5]

என்னும் சூத்திரத்தான் அஃது எழுவாயும் பயனிலையு மாய் நிற்கும்வழி 'நீயிர்' எனத் திரிந்து பன்மையாயே நிற்கும் எனவும் கூறிப்போந்தார் ஆதலின், ஈண்டும் அதற்கு ஏற்பத் 'தம்முடைய கிளை, எம்முடைய கிளை'

1. பெயரியல், சூ. 30. 2. பெயரியல், சூ. 8.
3. தொல். எழுத். உருபியல், சூ. 16.
4. தொல். எழுத். புள். மயங். சூ. 30.
5. தொல். எழுத். புள். மயங். சூ. 31.

எனப் பன்மை உணர்த்துதல் அன்றி ஒருமை உணர்த்தாமை உணர்க. ஏனையவும் அன்ன.

'தம்பொருள் என்பதம் மக்கள்'[1]

எனவும்,

'நம்ம னோர்க்கே'[2]

எனவும்,

'நும்ம னோருமற் றினைய ராயின்
எம்ம னோரிவண் பிறவலர் மாதோ'[3]

எனவும் இந்நான்கு சொல்லும் அம்முடிபு பெற்று, முதல் நிலை திரிந்து நின்று, பன்மைப்பொருள் உணர்த்தியவாறு காண்க.

ஈண்டு இவை 'வெற்பன், பொருப்பன்' போலத் 'தம், நம், நும், எம்' என்பன பிரிந்து நின்று பொருள் உணர்த்திப் பின் வருகின்ற 'அன், அள், அர்' என்பன பொருள் உணர்த்தாது இடைச்சொல்லாயே நிற்றலின், 'பிரிப்பப் பிரியா,' என்றார்.

இனி, உம்மையை எச்சப்படுத்திப் 'பிற ஒட்டுப் பெயர்களும் பிரிப்பப் பிரியா,' எனப் பொருள் கூறி, 'இம்பர், உம்பர்; இம்மை, உம்மை, எம்மை' என்றாற் போல்வன பிறவும் 'இவ்விடம், உவ்விடம்; இப்பிறப்பு, உப்பிறப்பு, எப்பிறப்பு' என்னும் பொருள் உணர்த்தி நிற்கும் என்று கொள்க.

411] ஒரு சொல் அடுக்கு [கரு

**இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல்என்
றவைமூன் றென்ப ஒருசொல் அடுக்கே.**

இதுவும் தொகைச்சொற்போல அடுக்கி வருவன கூறுகின்றது.

(இ-ள்.) ஒரு சொல் அடுக்கே - ஒரு சொல்லை அடுக்கும் அடுக்கு, இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தல் என்று

1. குறள், 63. 2. மலைபடு. 402. 3. புறம். 210 : 3, 4.

அவை மூன்று என்ப - இசைநிறையும் அசைநிலையும் பொருளொடு புணர்தலும் என்று சொல்லப்பட்ட அவை மூன்றும் என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) 'ஏஎ ஏஎ அம்பல் மொழிந்தனள்.'—இஃது இசை நிறை.

'மற்றோ மற்றோ'—இஃது அசைநிலை.

'வந்தது வந்தது கூற்று.'[1] அவன் அவன், வைதேன் வைதேன், போம் போம் என்பன விரைவும், துணிவும், உடம்பாடும், ஒரு தொழில் பலகால் நிகழ்தலுமாகிய பொருள் வேறுபாடு உணர்த்தலின், பொருளொடு புணர்தல்.

412] தொகை மொழியின் வகை [கசுஉ

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இது, தொகைச்சொற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்.) வேற்றுமைத் தொகையே - வேற்றுமை உருபுகள் தொக்க தொகை, உவமத் தொகையே-உவம உருபுகள் தொக்க தொகை, வினையின் தொகையே - வினைச்சொல் ஈறுகள் தொக்க தொகை, பண்பின் தொகையே - பண்பு உணர்த்தும் ஈறுகள் தொக்க தொகை, உம்மைத் தொகையே - 'உம்' என்னும் இடைச்சொல் தொக்க தொகை, அன்மொழித்தொகை - இத் தொகைச் சொற்களின் இறுதிக்கண் வந்து பொருள் தரும் வேறோர் சொல் தொக்க தொகை, என்று அவ்வாறு என்ப - என்று சொல்லப்பட்ட அவ்வாறும் என்று சொல்லுவர் ஆசிரியர், தொகை மொழி நிலையே - தொகைச் சொல்லினது நிலைமையை (எ-று.)

---

1. நாலடி. 4

'ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்'[1]

எனவும்,

'செய்யும் செய்த என்னும் கிளவியின்
மெய்யொருங் கியலும் தொழில்தொகு மொழியும்'[2]

எனவும்,

'உருபுதொக வருதலும்'[3]

எனவும்,

'மெய்யுருபு தொகாஅ இறுதி யான'[4]

எனவும்,

'பண்புதொக வரூஉம் கிளவி யானும்'[5]

எனவும்,

'உம்மை தொக்க பெயர்வயி னானும்'[6]

எனவும்,

'வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்'[7]

எனவும்,

'உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி'[8]

எனவும் ஆசிரியர் தொக்கே நிற்கும் எனச் சூத்திரம் செய்தலின், வேற்றுமை உருபும் உவம உருபும் உம்மும் வினைச்சொல் ஈறும் பண்பு உணர்த்தும் ஈறும் இத் தொகைச்சொற்கள் அல்லாததோர் சொல்லும் தொக்கு நிற்றலின், தொகைச்சொல் என்பதே அவர் கருத்தாயிற்று. 'ஆயின், 'கேழற்பன்றி,[9] வேழக்கரும்பு'[10] என்பனவற்றிற்குத் தொக்கன இன்மையின், தொகைச் சொல் ஆமாறு என்னை?' எனின், அவற்றிற்கும் ஒன்றை ஒன்று விசேடித்து நிற்கின்ற தன்மையை உணர்த்துதற்கு வரும் 'ஆகிய' என்னும் வாசகம் தொக்கு நின்றது என்றே கோடும். அன்றித் 'தன்கண் தொக்கன இன்றி

1, 2. தொல். எழுத். குற். புணர். சூ. 77.
3. வேற். மயங். சூ. 21. 4. வேற். மயங். சூ. 22.
5, 6, 7. எச்சவியல், சூ. 22. 8. தொல். எழுத். உயிர் மயங். சூ. 21.
9. புறம். 152 : 4. 10. பெரிய பு. ஏனாதி. 2.

அங்ஙனம் வாசகம் தொக்கு நின்றது 'தொகை' என்றற்குச் சாலாமையின், அதனை ஒட்டி ஒரு சொல்லாய் நின்று தம் பொருள் உணர்த்தும் என்று கொண்டு ஏனையவற்றையும் அவ்வாறே கோடும்,' எனின், எடுத்தோத்தினும் இலேசு சிறத்தல் யாண்டும் இன்மையின், அது பொருந்தாது. என்னை? அவ்விருபெயரொட்டுப் பண்புத்தொகை அறுவகைத் தொகைச் சூத்திரங்களுள் எடுத்தோத்து இன்றி 'என்ன கிளவியும்'[1] என்ற இலேசினால் கொண்டதாகலின். ஆயின், 'வண்ணத்தின் வடிவின்'[2] என்பதன்கண் இருபெயரொட்டாய் ஐம்பால் அறியாத வடிவினையும் எடுத்தோதினால் எனின், வடிவு முதலியவற்றிற்கும் அறுவகைத் திரிபினுள் ஏற்பன கொணர்ந்து முடித்தலின், குன்றலும் தொகையாம் என்று உணர்க. 'என்ன கிளவியும்'[3] என்றதனால் கொள்வன வருமொழி இன்றி நிலைமொழியும் பொருள் உணர்த்தி நிற்கும் என்பது ஆண்டுக் கூறுதும்.

அன்றியும், 'செய்தான் பொருள், இருந்தான் குன்றத்து' என வழங்குவன ஒட்டி ஒரு சொல் ஆகாமையும்; செய்யுட்கண்

'கழூஉவிளங் காரம் கவைஇய மார்பே'[4]

எனவும்,

'மாற்றுமைக் கொண்ட வழி'[5]

எனவும் இறுதிக்கண் இரண்டாவது தொக்கன,

'முயங்கினெ னல்லனோ'[6]

எனவும், 'போற்றாய்' எனவும் வரும் முடிக்கும் சொற்களோடு ஒட்டி ஒரு சொல் ஆகாமையும்;

'தோன்றல் மறந்தோர் துறைகெழு நாட்டே'

எனவும்,

'சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே'[7]

1, 2, 3. எச்சவியல், சூ. 20. 4. புறம். 19 : 18. 5. கலி. 12 : 19.
6. புறம். 19 : 7. 7. அகம். 120 : 16.

எனவும் இறுதிக்கண் ஏழாவது தொக்கன, 'தோன்றும்' எனவும் 'சேர்ந்தனை செலினே' எனவும் வரும் முடிக்கும் சொற்களோடு ஒட்டி ஒரு சொல் ஆகாமையும் உணர்க.

இன்னும்,

'வல்லே மறவல் ஓம்புமதி எம்மே.'

என இடைக்கண் தொக்கனவும்

'பொன்னோடைப் புகரணிநுதல்
துன்னருந்திறல் கமழ்கடாஅத்
தெயிறுபடை யாக எயிற்கத விடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கை யானை'[1]

என அடுக்கி வருவனவும் ஒட்டி ஒரு சொல் ஆகாமையும் உணர்க.

'அதுவென் வேற்றுமை'[2] என்னும் சூத்திரத்து 'அதுவென் உருபுகெட' என்றதனால், 'அது' என் உருபு நின்றால் அல்லது கெடுதல் இன்மையின், அது நின்று கெட்டது என்னும் பொருள் தரல் ஆண்டுக் கூறிப் போந்தாம். அதனால், ஈண்டுச் சேனவரையர் கூறிய பொருட்கு விடை இன்மை உணர்க.

இவற்றுள் வினைத்தொகையும் பண்பின் தொகையும் சிறிது தொக்குத் தொகையாதலும், ஏனைய முழுவதூஉம் தொக்குத் தொகையாதலும் உணர்க.

413] வேற்றுமைத் தோகை [கஎ

அவற்றுள்,
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல.

இது, முறையானே வேற்றுமைத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் - முற்கூறிய ஆறனுள், வேற்றுமைத் தொகை - வேற்றுமை உருபுகள் தொக்க தொகைச்சொற்கள்,

1. புறம். 3 : 7-11. 2. வேற். மயங். சூ. 11.

வேற்றுமை இயல - அவ்வுருபுகள் தொக்கனவேனும் தொகாது நின்றாற்போலப் பொருள் உணர்த்தும் இயல்பின (எ-று.)

(உ-ம்.) 'பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க.'[1]

'ஒருகுழை ஒருவன் போல'[2]

எனவும்,

'வல்லவர், செதுமொழி சீத்த செவி.'[3]

எனவும்,

'பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்'[4]

எனவும்,

'வரையிழி மயிலின் ஒல்குவள்'

எனவும்,

'நின், மைந்துடை மார்பிற் சுணங்கு'[5]

எனவும்,

'மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து'[6]

எனவும் வரும்.

வழக்கு உதாரணம் வேற்றுமை மயங்கியலுள் காட்டினும்.

'சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான்' என்றாற்போல்வன தொக்கால், தொகைப்பொருள் உணர்த்தாது, எழுவாயும் பயனிலையுமாய் நிற்றலின், இந்நிகரன தொகா என்று உணர்க.

414] உவமத் தொகை [கஅ

உவமத் தொகையே உவம இயல.

இஃது, உவமத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) உவமத் தொகையே - உவம உருபுகள் தொக்க தொகைச்சொற்கள், உவம இயல - அவ்வுவம உருபுகள் தொக்கனவேனும் தொகாது நின்றாற்போலப் பொருள் உணர்த்தும் இயல்பின (எ-று.)

1. நாலடி. 2. 2. கலி. 26 : 1. 3. கலி. 68 : 2, 3.
4. புறம். 324 : 7. 5. கலி. 18 : 3, 4. 6. புறம். 79 : 2.

மேல் உவம இயலுள் 'வினைபயன் மெய்யுரு'[1] என்னும் சூத்திரத்தான் 'உவமை நால் வகைய,' என்றும், 'அவைதாம், அன்ன ஏய்ப்ப'[2] என்னும் சூத்திரத்தான் 'அவற்றின் உருபு முப்பத்தாறு,' என்றும் கூறுகின்ற ஆசிரியர், ஈண்டு அவ்வுருபுகள் தொக்கு நிற்குமாறு கூறுகின்றார்.

ஒப்பில் வழியால் பொருள் செய்யும் அவ்வுவம உருபுகள் தாம் முதல் நிலையாய் நின்றும், பெயரெச்சங்கட்கும் முற்றிற்கும் வினையெச்சங்கட்கும் உரிய ஈறுகளை ஏற்ற சொல்லாயே நின்று, அவற்றிற்கு ஏற்ற முடிபு கொள்ளும் என்று உணர்க.

ஆசிரியர் செய்யுள் இன்பம் நோக்கி அவ்வுவம உருபுகளைப் பெரும்பான்மை செயவெனெச்ச வாய்பாட்டானும் சிறுபான்மை 'செய்த' என்னும் பெயரெச்ச வாய்பாட்டானும் ஓதினரேனும், ஏனை வாய்பாடுகளும் அம்முதல் நிலைக்கண் விரியுமாறு ஆண்டு உணர்க.

'புலிப்பாய்த்துள், மழை வண்கை, துடி நடுவு, பொன் மேனி' என வினை பயன் மெய் உருவின்கண் வந்த இவ்வுவமத் தொகைகள் விரிந்துழிப் 'போலும்' என்னும் உருபானும் 'அன்ன' என்னும் உருபானும் பிற உருபானும் விரிந்து, 'செய்யும், செய்த' என்னும் பெயரெச்சக்குறிப்பு ஆமாறு உணர்க. அவற்றுள் 'போலும்' என்பது, 'செய்யும்' என்னும் குறிப்பு முற்று ஆமாறும் உணர்க. உணர்த்துங்கால், 'புலி **போலும்** பாய்த்துள், புலி **அன்ன** பாய்த்துள்' என விரித்தால் உணராதானை, 'இதன் பொருள், 'புலியினது பாய்த்துளை ஒத்த பாய்த்துள்' என்றவாறுகாண்,' என 'ஒப்பு' என்னும் வழக்கு வாசகத்தால் 'செய்யும், செய்த' என்னும் பெயரெச்சக் குறிப்பு வாசகம் தோன்ற உணர்த்துக.

---

1. உவமவியல், சூ. 1. 2. உவமவியல், சூ. 11.

'முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.'[1]

என்புழி, 'வேய்த்தோளாட்கு முறி போலும் மேனி; முத்தம்போலும் முறுவல்; தெய்வ மணம் போலும் இயற்கை நாற்றம்; வேல் போலும் கண்,' என விரித்தால் உணராதானை, 'இதன் பொருள், 'வேய்த்தோளாட்குத் தளிரினது நிறத்தை ஒக்கும் நிறம்; முத்தினது நிறத்தை ஒக்கும் பல்லு; தெய்வ மணத்தை ஒக்கும் இயல்பான நாற்றம்; வேலினது கொலைத்தொழிலை ஒக்கும் கண்,' என்றவாறு காண்,' என 'ஒப்பு' என்னும் வழக்கு வாசகத்தால் 'செய்யும்' என்னும் குறிப்பு முற்று வாசகம் தோன்ற உணர்த்துக. 'கண் மலர்ந்த காவி' என்புழிக் 'கண் போல மலர்ந்த காவி' என்றால் உணராதானை, 'இதன் பொருள், 'கண்ணை ஒக்க மலர்ந்த காவி' என்றவாறு காண்,' என 'ஒப்பு' என்னும் வழக்கு வாசகத்தால் செயவெனெச்ச வாசகம் தோன்ற உணர்த்துக. இங்ஙனம் கூறிய இரு வகை எச்சத்தையும் முற்றையும் இவ்வுவம உருபுகள் தருமாறு காண்க.

இனி, 'முறிமேனி முதலியன உருவகமாம்,' எனின், ஆசிரியர்க்கு உருவகமும் உவமை ஆமாறு ஆண்டு உணர்க.

'இங்ஙனம் வேற்றுமை உருபும் உவம உருபும் விரிந்துழி, வேற்றுமைத்தொகை என்று கோடுமோ, உவமத்தொகை என்று கோடுமோ?' எனின், ஆசிரியர் தாம் மேற்கூறும் உவம உருபுகளில் சில இரண்டாவதற்கு முடிபாம் என்பது உணர்த்துதற்கு உவம உருபிற்கெல்லாம் பொதுவாய் வழக்கு வாசகமாய் நிற்கும் 'ஒப்பு' என்னும் உருபினைக் 'காப்பின் ஒப்பின்'[2] என எடுத்து ஓதினர் ஆதலின், அவ்விரண்டாவது அவ்வுவம உருபுகளான் முடிந்து நின்றுழி உவமத் தொடர்மொழி ஒப்பு

1. குறள், 1113. 2. வேற்றுமையியல், சூ. 11.

மைப் பொருளே தந்து நிற்றலின், உவமத் தொகை என்று கோடும்.

'ஆயின், எடுத்து ஓதிய 'ஒப்பு' என்பதனோடு அன்றி ஏனை உருபுகளோடும் இரண்டாவது முடியுமோ?' எனின், முடியும்:

'தீயின் அன்ன ஒண்செங் காந்தள்'[1]

எனவும்,

'கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்'[2]

எனவும்,

'மானோக்கு நோக்கு மடநடை ஆயத்தார்'[3]

எனவும்,

'எழிலி வானம் எள்ளினன் தரூஉம்
கவிகை வண்கைக் கடுமான் தோன்றல்'[4]

எனவும்,

'வீங்குசுரை நல்லான் வென்ற ஈகை'[5]

எனவும் வருவனவற்றின்கண் 'அன்ன, மானும், நோக்கு, எள்ளி, வென்ற' என்னும் உவம உருபுகளை இரண்டாவது கொண்டு முடிந்தவாறு காண்க. இவற்றுள் 'எள்ளி' என்பது, செய்தெனெச்சமாகிய உவம உருபு. இங்ஙனம் உவம உருபு விரிந்துழி நின்று உவமப்பொருள் தருகின்ற இரண்டாவது தொக்குழியும் அவ்வுவமப் பொருள் தந்தே நிற்கும் என்று உணர்க.

'என்போல் பெருவிதுப் புறுக.'[6]

என்புழிப் 'போல்' என்பது 'போல' என்னும் செயவெனெச்சக் குறிப்பாகிய உவம உருபு.

'நும்ம னோருமற் றினைய ராயின்'[7]

என்புழி, 'அன்னோர்' என்பது உவம உருபாகிய இடைச்சொல் முதல் நிலையாகப் பிறந்த பெயர். இனிச் சிறு

1. மலைபடு. 145. 2. குறுந். 9. 3. உவமவியல், சூ. 12 உரை மேற்.
4, 5. உவமவியல், சூ. 14 உரை மேற்.
6. புறம். 83: 4. 7. புறம். 210: 3.

பான்மை ஏனையுருபுகள் இத்தொகைக்கண் விரியுமாறு உவம இயலுள் காண்க.

சேனுவரையர் இவற்றை உவம உருபு அன்று என்றும், உவம உருபுகளை இரண்டாவது கொண்டு முடியாது என்றும் கூறினரால் எனின், அவர் ஆசிரியர் கருத்தும் சான்றோர் செய்யுள் வழக்கமும் உணராமல் கூறினர் என்பது இக்கூறியவாற்ருன் உணர்க.

415] வினைத்தொகை [கக

வினையின் தொகுதி காலத் தியலும்.

இது, வினைத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) வினையின் தொகுதி - வினைச்சொல்லினது ஈருய்த் தொக்கு நிற்கும் எழுத்துக்கள், காலத்து இயலும் - காலத்தின் கண்ணே தொக்கு நிற்கும் (எ-று.)

'வினை' என்றது, 'உண், தின்' முதலிய முதல் நிலைகளை. அவை ஈண்டும் ஆகுபெயராய்த் தம்மாற்பிறந்த* பெயரெச்சத்தை உணர்த்தின. தொகுதியாவன, அகரமும் 'நில், கின்று' என்பனவும் உம்முமாம். அவை காலத்து இயலுதலாவது, 'கொல் யானை' எனத் தொகுத்துக் 'கொன்ற யானை' என விரித்தால், 'செய்த' என்னும் பெயரெச்ச வாய்பாட்டுத் தகர ஈறு இறந்த காலம் உணர்த்துதலும், 'கொல்லாநின்ற யானை, கொல்கின்ற யானை' என விரித்தால், 'நின்ற, கின்ற' என்னும் பெயரெச்சம் நிகழ் காலம் உணர்த்துதலும், 'கொல்லும் யானை' என விரித்தால், 'செய்யும்' என்னும் பெயரெச்சத்து 'உம்' ஈறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்துதலுமாம்.

'ஆயின், 'உம்' ஈறு எதிர் காலம் உணர்த்துதல் யாண்டுப் பெறுதும்?' எனின், 'காலத் தியலும்' என மூன்று காலத்திற்கும் பொதுவாகக் கூறிய அதனல்

பி-ம்: * தன்னுற்பிறந்த

பெறுதும். இக்கருத்தானே பின்பு நூல் செய்தவர்கள் எல்லாரும் 'உம்' ஈறு எதிர் காலமே உணர்த்தும் என்றார். சேனாவரையரும் இக்கருத்தானே

'அகன்றவர் திறத்தினி நாடுங்கால்'[1]

என்பதே நிகழ்விற்கும் எதிர்விற்கும் காட்டினார்.

'கோல் யானை' என்பது, அக்காலத்து அஃது உதிரக் கோட்டோடு வந்ததேல் இறப்பும், அதன் தொழிலைக் கண்டு நின்றுழி நிகழ்வும், அது கொல்ல ஓடுவதனைக் கண்டுழி எதிர்வும் விரியும்.

இனி, 'கொல் யானை' என்பதன்கண் இரண்டு ஈறும் ஒருங்கு தொக்கு நின்றது என்றற்கு விதி,

'செய்யும் செய்த என்னும் கிளவியின்
மெய்யொருங் கியலும் தொழில்தொகு மொழியும்'[2]

என்றது ஆம். என்றதன் பொருள், 'செய்யும், செய்த' என்னும் பெயரெச்சச் சொற்களினுடைய காலம் காட்டும் உம்மும் அகரமும் ஒரு சொற்கண்ணே சேர நடக்கும் புடை பெயர்ச்சி தொக்கு நிற்கும் சொற்கள் என்றவாறு. இங்ஙனம் இரண்டுபெயரெச்ச வாசகமும் சேரத் தொக்கு நிற்றலான், ஆசிரியர் ஒரு சொல்லாக்கிப் புணர்க்கலாகாதென்று 'புணரியல் நிலையிடை உணரத் தோன்றா'[3] என்றார். இவ்வெழுத்ததிகாரச் சூத்திரத்தானே பெயரெச்சம் நின்று தொக்கது என்னாது, 'பெயரெச்சப் பொருளவாய் நின்று இரண்டு சொல் தொகும்,' என்று சேனாவரையர் கூறியது பொருந்தாமை உணர்க. அவை தொகுங்கால் தத்தமக்கு உரிய ஆறு பொருட்கண்ணும் தொகும்.

(உ-ம்.) ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல் யானை, செல் செலவு

எனவும்,

1. கலி. 16 : 3, 4. 2, 3. தொல். எழுத். குற். புணர். சூ. 77.

'உறைபதி அன்றித் துறைகெழு சிறுகுடி'[1]
'செய்பொருட் சிறப்பெண்ணி'[2]
'வான்மடி பொழுதினி னீர்நசைஇக் குளித்த'
'வெல்வேல் அண்ணல் காணு ஊங்கே'[3]
'நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்'[4]
'வெல்போர்ச் சோழர்'[5]

எனவும் வரும். இவற்றிற்குப் பொருட்கு ஏற்ற காலங் களை விரிக்க.

416] பண்புத்தொகை [உ0

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்ன திதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே.

இது, பண்புத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) இன்னது இது என - ஒரு பொருட்குப் பொதுமை உள்வழி 'இப்படி இருப்பது இப்பொருள்,' என்று அதனை விசேடித்துக் கூறும்படியாக, அதன் குணம் நுதலி - பின் வருகின்ற அப்பொருளின் குணத்தைத் தான் கருதி, வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் வரூஉம் இயற்கைக் கிளவியும் - அப்பொருட்குணமாகிய வண்ணத்தின்கண்ணும் வடிவின்கண்ணும் அளவின்கண்ணும் சுவையின்கண்ணும் வரும் இயல்பாகிய கிளவியும், அன்ன பிறவும் என்று வரூஉம் கிளவியும் - அவை போல்வன பிறவும் என்று சொல்லப்பட்டு வரும் கிளவியும், என்ன கிளவியும் - எத்தன்மையவாகிய சொற்களும், பண்பின் தொகை - பண்புச்சொல் தொக்க தொகையாம் (எ-று.)

'பண்பு' எனப் பண்புச்சொல்லை உணர்த்திற்று, ஆகுபெயராய். எழுத்ததிகாரத்து,

'உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பால் அறியும் பண்புதொகு மொழியும்'[6]

1. குறுந். 145. 2. கலி. 16 : 18. 3. புறம். 141 : 7.
4. புறம். 379 : 3. 5. ஐங்குறு. 56
6. தொல். எழுத். குற். புணர். சூ. 77.

என்புழிப் 'பண்புத்தொகை ஐந்து பாலையும் உணர நிற்றலின், அங்ஙனம் நின்றன பிரித்துப் புணர்த்தற்கு இயையா,' என்றமையான், ஈண்டும் அதற்கு ஏற்ப 'இயற்கை' என்றார். 'ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்' என்றதன் பொருள், 'ஐந்து பாலையும் ஒருவன் அறிதற்குக் காரணமாகிய பண்புச்சொல் தொக்க தொகைச்சொல்லும்' என்றவாறும். பண்பு உணர்த்துகின்ற ஐம்பால் ஈறுகள் தொக்கு நின்றே விரியும் என்பது உணர்த்துதற்கு அவ்வாசகம் தோன்ற 'இன்னது' என்றார். ஐம்பாலும் பொருள் என்றால், அஃறிணையாய் அடங்கும் ஆதலின், பொருளாக்கி 'இது' என்று அஃறிணையால் கூறினர். இந்நான்கனுள் வண்ணமும் அளவும் சுவையும் ஐம்பாற்கண்ணும் வரும்.

(உ-ம்.) வண்ணம்: 'கரும்பார்ப்பான், கரும்பார்ப்பனி, கரும்பார்ப்பார், கருங்குதிரை, கருங்குதிரைகள்' என்னும் பண்பு உணர்த்தும் ஈறுகள் தொக்கனவற்றை விரிப்புழிக் 'கரியனாகிய பார்ப்பான், கரியளாகிய பார்ப்பனி, கரியராகிய பார்ப்பார், கரியதாகிய குதிரை, கரியனவாகிய குதிரைகள்' எனப் பண்பு உணர்த்தும் ஐம்பால் ஈற்றினையும் விரித்தவாறு காண்க. 'கரிய பார்ப்பான்' என்பது ஈறு தோன்றாத பெயரெச்சக் குறிப்பாய் நிற்கும். இனி, 'வெம்மை' முதலியவற்றிற்கும் இவ்வாறே ஒட்டுக. இவற்றுள் 'கரு' ஒழிய ஏனைய தொக்கவாறு காண்க. இவற்றுள் அஃறிணைக்கண் வரும் ஈறுகள் பண்புகொள் பெயராய் நிற்குமாறும் உணர்க.

இனி, அளவு: 'குறுமுனி,[1] குறுமகளாடிய, ஊர்க் குறுமாக்கள்,[2] குறுந்தாட்கூதளிர், குறுங்கோட்டன' என்பனவற்றையும் அவ்வாறே விரிக்க. இனி, 'நெடுமை' முதலியவற்றிற்கும் இவ்வாறே ஒட்டுக.

1. கல்லா. 62: 20. 2. புறம். 94: 1.

இனி, சுவை: ஐம்பொறியான் நுகர்தற்கு உரிய இனிமைகளை உணர்த்தும் ‘சாயல் மார்பிற் கமழ் தார் குழைத்த’ எனவும், ‘தீங்கரும்பனுக்கிய’ எனவும், ‘தீம்புகை கமழ ஊட்டி’ எனவும், ‘உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்’ எனவும், ‘தீந்தொடை நரம்பின்’ எனவும் மெய்யானும் நாவானும் மூக்கானும் கண்ணானும் செவியானும் நுகரும் இனிமையை உணர்த்தின. இவற்றை விரிப்புழி அஃறிணை இரு பாற்கும் ஏற்ப ‘இனி தாகிய மார்பு, தீவியனவாகிய கரும்புகள், தீவி தாகிய புகை, தீவிதாகிய நீர், தீவியனவாகிய நரம்புகள்’ என விரிக்க. இனி, ‘கட்கு இன் புதல்வன், கட்கு இன்புதல்வி, கட்கு இன்புதல் வர்’ எனக் கண்ணால் நுகரும் இனிமைக்கண் உயர்திணை முப்பாற்கும் ஏற்ப ‘இனியனாகிய புதல்வன், இனியளாகிய புதல்வி, இனியராகிய புதல்வர்’ என விரிக்க.

இனி, வடிவு: இது வட்டம், சதுரம், கோணம் முதலியனவாம். ‘வட்டப் பலகை’ என்பது, ‘வட்டமாகிய பலகை’ என விரிந்து, தனக்கு ஏற்ற ஒருமை பன்மையை உணர்த்தும் ஈறுகள் இன்றி நிற்றலின், இஃது ஐம்பால் அறியாத பண்புத்தொகை ஆயிற்று. இங்ஙனம் ஐம்பால் அறியாத பண்புத்தொகையை ஆசிரியர் எழுத் தின்கண் நிலைமொழி வருமொழி செய்து புணர்த் தார். அவை ‘அகங்கை’ முதலியனவாம்.

‘கரும்பார்ப்பான்’ என்புழிக் கருமையும் பார்ப் பானும் தம்மின் வேறு இன்றி நின்று மகனாகிய பொரு ளையே உணர்த்தியவாறும், ‘கருமை’ பார்ப்பான் பொது மையை விசேடித்தவாறும், ‘பார்ப்பான்’ கருமையின் பொதுமையை விசேடியாதவாறும் காண்க. இவை தொகுங்கால், ‘கரு’ என்னும் பண்பு மாத்திரம் நின்று பண்புப்பெயராங்கால் பெற்று நிற்கும் ‘கருமை’ என்னும்

மகர ஐகாரம் தொக்கு நிற்கும் என்றால், 'கரியது, வெளியது, கரியன, வெளியன' என்னும் பண்பு உணர்த்தும் ஈறுகளின்கண்ணும் அவை தொக்கு இவையும்தொகைச் சொல்லாவான் சேறலின், அது பொருந்தாது; 'கரியன், கரியள், கரியர், கரியது, கரியன' என்னும் பண்புஉணர்த்தும் ஈறுகளே தொக்கு நிற்பன என்று உணர்க. என்னை? ஆசிரியர், 'இப்படி இருப்பது இப்பொருள்,' என்று வினைக்குறிப்பிற்கு ஏற்ற விரிவு தோன்றச் சூத்திரம் செய்தாராகலின். 'இன்னது இது,' என ஒரு பொருள்மேல் நிற்றலின், இப்பண்புத் தொகைகள் எல்லாம் பெயரெச்ச வினைக்குறிப்பாய் நிற்பதோர் பெயர் என்று உணர்க, அஃது உருபு ஏற்றும் பயனிலை கொண்டு நிற்றலின்.

' 'உயர்திணை' என்பது வினைத்தொகையோ, பண்புத் தொகையோ?' எனின், 'உயர்' என்னும் முதல் நிலை நின்று, 'உயர்ந்த திணை' என அகர ஈற்றுப் பெயரெச்சமாய் இறந்த காலம் தொக்கு நிற்றலின், வினைத்தொகையாம். இதற்கு ஏனைக் காலமும் தொகுமாறு அறிக. இதனைப் பண்புத்தொகையாக்கி விரிக்குங்கால், 'கரியதாகிய குதிரை' என விரிந்தாற்போல விரியாது 'உயர்ந்ததாகிய திணை' என விரிக்க வேண்டும். அங்ஙனம் விரிந்துழி, அஃது 'உயர்' என்னும் முதல் நிலைப்பின் வந்த தகர அகரம் இறந்த காலம் உணர்த்தியே நிற்றலின், பண்புத்தொகை ஆகாமை உணர்க. என்னை? பண்பும் வினைக்குறிப்பும் முக்காலமும் புலப்படாமை நிற்குமென்றே முற்கூறலின். அன்றியும், காலம் புலப்பட நின்றதன்மேல் பண்புகொள் பெயர் விரியாமை உணர்க.

இனி, 'அன்ன பிறவும்' என்றதனான், 'நுண்ணூல், பராரை, நல்லாடை, வெந்தீ, தண்ணீர், நறும்பூ' என்னும் தொடக்கத்தன கொள்க.

'மெல்லிலை' வினைத்தொகையுமாம்.

இத்தொகையை வேற்றுமைத் தொகை என்பார், 'கருமையை உடைய பார்ப்பான்' என்று பண்புப் பெயராக்கி விரிப்பர். அது பொருந்தாது. 'கரு' என்னும் முதல் நிலை பண்பினை உணர்த்தி, 'இதனை உடையது இது,' என நில்லாது, 'கரியது' எனப் பண்பு உடைய பொருளை நோக்கி நிற்றலின், வேற்றுமைப்பொருண்மை ஆண்டு இன்று என உணர்க. 'என்ன கிளவியும்' என்றதனால், 'சாரைப்பாம்பு, கேழற்பன்றி, வேழக் கரும்பு,[1] இடைச்சொற்கிளவி,[2] உரிச்சொற்கிளவி'[3] என்றாற்போலப் பண்பு உணர்த்தும் ஈறுகள் தொகாது தம் பொருள் உணர்த்தும் பெயர்ப்பெயர் இரண்டு கூடி நின்று விசேடித்தலை உணர்த்தும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகையும் கொள்க. அவை 'சாரை' எனவும், 'கேழல் உழுத கரிப்புனக் கொல்லை'[4] எனவும், 'வேழம் தீவியது,' எனவும், 'இடைச்சொல் எல்லாம்'[5] எனவும், 'உரிச்சொல் மருங்கினும்'[6] எனவும் பின் வரும் சொல் இன்றியும் தம் பொருள் உணர்த்துதல் பற்றி எடுத்தோத்தினுள் முடியாமையின், இலேசால் கொண்டார். 'வட்டப் பலகை, அகங்கை' முதலியன பின் வரும் சொல்லோடு அன்றித் தம் பொருள் உணர்த்தாமையின், நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியுமாய் நிற்கும் என்று அவற்றை முடித்தார். இவற்றிற்குப் பின் வரும் சொல், முன் வரும் மொழியை விசேடியாது நிற்கும். இங்ஙனம் வரும் என்றற்கு அன்றே ஆசிரியர் 'இன்னது இது,' என்று முன் மொழியை விசேடிப்பதாகவும், பின் மொழியை விசேடிக்கப்படுவதாகவும் கூறுவாராயிற்று என்று உணர்க.

---

1. பெரிய பு. ஏனாதி. 2.
2. பெயரியல், சூ. 5.
3. உரியியல், சூ. 1.
4. ஐங். எழு. 11.
5. எச்சவியல், 59.
6. எச்சவியல், சூ. 60.

இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலத்தே உம்மைத் தொகையே.

இஃது, உம்மைத்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) உம்மைத்தொகை - உம்மை தொக்கு நிற்கும் தொகை, இரு பெயர் - இரண்டாகிய பெயரும், பல பெயர் - பலவாகிய பெயரும், அளவின் பெயர் - அளத்தலால் உளதாகிய பெயரும், எண் இயல் பெயர் - எண் இயலான் ஆகிய உயர் திணைப்பெயரும், நிறைப்பெயர்க்கிளவி - நிறுத்தலான் ஆகிய பெயர்ச்சொல்லும், எண்ணின் பெயரோடு - எண்ணினான் உளதாகிய அஃறிணைப்பெயரோடே கூடப்பட்ட, அவ்வறு கிளவியும் கண்ணிய நிலத்து - அவ்வாறு சொல்லையும் கருதின நிலைமையை உடைத்து (எ-று.)

(உ-ம்.) உவாஅப் பதினான்கு
புலிவிற்கெண்டை
தூணிப் பதக்கு
முப்பத்து மூவர்
தோடியரை
பதினைந்து

இவற்றை உம்மை விரித்துக்கொள்க.

'பல பெயர்' எனவே இரு பெயரும் அடங்குமேனும், இரண்டாகிய பல பெயரினும் இரண்டு இறந்த பல பெயரினும் தொகும் என்றற்கு 'இரு பெயர், பல பெயர்' என்றார். அளவுப்பெயர் முதலியன இரு பெயர்க்கண் அடங்கும் எனினும், முன்னர் யாண்டும் பொருள் வேற்றுமையே பற்றி வேறாக ஓதுதலின், ஈண்டும் எடுத்து ஓதினார்.

பண்புதொக வரூஉம் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்று நின் றியலும் அன்மொழித் தொகையே.

இஃது, அன்மொழித்தொகை கூறுகின்றது.

(இ-ள்.) அன்மொழித்தொகை - ஒருவன் கூறும் சொற்கண் அன்றிப் பின்னர் வேறோர் சொல் தொக்கு நிற்கும் தொகை, பண்பு தொக வரூஉம் கிளவியானும் - பண்புச்சொல் தொக வரும் தொகைப்பெயர்க்கண்ணும், உம்மை தொக்க பெயர்வயினானும் - 'உம்' என்னும் இடைச்சொல் தொக்க தொகைப்பெயர்க்கண்ணும், வேற்றுமை தொக்க பெயர்வயினானும் - வேற்றுமை உருபுகள் தொக்க தொகைப்பெயர்க் கண்ணும், ஈற்று நின்று இயலும் - இறுதிச்சொற்கண்ணே நின்று நடக்கும் (எ-று.)

முன்னர் அன்மொழியான் உணரும் பொருள்களை மனத்தான் உணர்ந்து தான் பின்னர்ப் பண்புத்தொகை முதலியனவற்றால் கூறக் கருதியவழி அத்தொகைகளின் இறுதிச்சொற்கண் எழுந்து, படுத்தல் ஓசையான் அத் தொகைச்சொல் தோன்றிப் பொருள் விளக்குதலின், 'ஈற்றுநின்று இயலும்' என்றார்.

(உ-ம்.) வெள்ளாடை, தகர ஞாழல், பொற்றொடி

என வரும். இவை 'வெள்ளாடை உடுத்தாள்,* தகர ஞாழல் அணிந்தாள், பொற்றொடி தொட்டாள்,' என இறுதிச்சொற்கண் எழுந்து, படுத்தல் ஓசையால் தொகை தோன்றியவாறு காண்க.

பெரும்பான்மை வரும் பண்புத்தொகைப் பின்னர் அங்ஙனம் வரும் வேற்றுமைத்தொகையை வையாது, 'முந்து மொழிந்ததன் தலைதடுமாற்'றான்[1] உவமத்தொகைக்

பி-ம்: * உடுத்தான் 1. மரபியல், சூ. 110.

கண்ணும் வினைத்தொகைக்கண்ணும் அன்மொழித் தொகை வருதல் கொள்க.

'வினையின் தொகையினும் உவமத் தொகையினும்
அன்மொழி தோன்றும் என்மனார் புலவர்.'

என்பது அவிநயம். 'அறற்கூந்தல், திரிதாடி' என்பனவற்றை 'அறல் போலும் கூந்தலை உடையாள், திரிந்த தாடியை உடையான்' என விரிக்க.

419] தொகைச்சொற்பொருள் நிலை [உரு

அவைதாம்,
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.

இது, தொகைச்சொற்பொருள் நிலை கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் பொருள் நிலை மரபு - அத்தொகைச் சொற்கள்தாம் பொருள் பெற்று நிற்கும் நிலைமையினது முறைமையினை, முன் மொழி நிலையலும் - முன் மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்றலும், பின் மொழி நிலையலும் - பின் மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்றலும், இரு மொழி மேலும் ஒருங்கு உடன் நிலையலும் - இரு மொழிக்கண்ணும் பொருள் ஒருங்கு சிறந்து நிற்றலும், அம்மொழி நிலையாது அன் மொழி நிலையலும் - அவ்விரு மொழிக்கண்ணும் பொருள் சிறந்து நில்லாது மற்றோர் மொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்றலும், அந்நான்கு என்ப - என்று சொல்லப்பட்ட அந்நான்கு கூறு என்று சொல்லுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) வேங்கைப்பூ - முன் மொழி நிலையல், அது 'நறிது' என்பதனோடு கூட்ட வேங்கைக்கண் பொருள் சிறவாது பூவின்கண் பொருள் சிறத்தலின்.

ஆரமாலை - பின் மொழி நிலையல்.

இவை வேற்றுமைத்தொகை.

வேற்கண் - முன் மொழி நிலையல்.

'பெண்ணணங்கு' என்பது 'அணங்கு போலும் பெண்' என்பதாகலின், பின் மொழி நிலையலாம்.

இவை உவமத்தொகை.

கோல் யானை—முன் மொழி நிலையல்.

இவ்வினைத் தொகைக்குப் பின் மொழி நிலையல் இன்று.

தீந்தேன்—முன் மொழி நிலையல்.

அடைகடல்—பின் மொழி நிலையல், இது 'கடலாகிய கரை' எனக் 'கரை' கூறுதலே கருத்தாகலின்.

இவை பண்புத்தொகை.

இவை இடம் பற்றி வந்த முன்னும் பின்னுமாம். காலம் பற்றி வருவனவும் வந்துழிக் காண்க.

பண்புத்தொகையே அன்றி ஏனைத் தொகைக்கும் விசேடித்தல் சிறுபான்மை வருதலின், 'ஒன்றன் கண்ணது பொருட்சிறப்பு,' என்றார். 'உவாஅப் பதினான்கு' இரு மொழிமேலும் நின்றது. 'உடன்' என்றதனால், 'புலிவிற்கெண்டை' எனப் பன்மொழிமேல் நிற்றலும் கொள்க. 'வெள்ளாடை' என்பது இரு மொழிமேலும் நில்லாது, உடுத்தாள்மேல் பொருள் நின்றது.

420] தொகைச்சொற்கள், ஒரு சொல் தன்மைய. [உச

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய.

இது, தொகைச்சொற்கள் எல்லாம் ஒரு சொல்லாய் நிற்கும் என்கின்றது.

(இ-ள்.) எல்லாத் தொகையும் - இரு மொழித் தொடரின் கண்ணும் பன்மொழித் தொடரின்கண்ணும் தொக்கு நிற்கும் எல்லாத் தொகைச்சொற்களும், ஒரு சொல் நடைய-ஒரு சொல் நின்று தன்னை முடிக்கும் சொற்களோடு முடியுமாறு போலத் தாமும் தம்மை முடிக்கும் சொற்களோடு முடிதலை உடைய (எ-று.)

அங்ஙனம் முடியுங்கால், 'பெயரி னாகிய தொகையுமா ருளவே,'[1] என்னும் சூத்திரத்தால், தொகைச்சொல் இரு வகைய என்றும் அவற்றுள் பெயரும் பெயரும் தொக்கன ஒரு சொல் நீர்மையவாய்ப் பயனிலை கொள் ளும் என்றும் கூறிய விதி ஒழிந்த இலக்கணங்கள் எல் லாம் ஈண்டுக் கொள்க. அவை, 'யானைக்கோடு' என்னும் பெயரின் ஆகிய தொகை, 'யானைக்கோட்டைக் குறைத் தான்,' என உருபு ஏற்றலும், 'நிலம் கடந்தான், குன்றத் திருந்தான்,' என்னும் வினையின் ஆகிய தொகைகளும் ஒரு முற்றுச்சொல்லாய்ச் 'சாத்தன்' என்னும் பெயர் கோடலும், 'மா ஊர்ந்து போயினான், குன்றத்திருந்து போயினான்,' என வினையெச்சச் சொல்லாய் நிற்றலும், 'மா ஊர்ந்த சாத்தன், குன்றத்திருந்த சாத்தன்' எனப் பெயரெச்சச் சொல்லாய் நிற்றலுமாம். இவ்வினையின் ஆகிய தொகை, படுத்தல் ஓசையால் பெயராகியவழிப் பயனிலை கோடலும் கொள்க. எழுத்தினுள் 'பெயரும் தொழிலும்'[2] என்னும் சூத்திரத்துள் 'பெயரும் தொழி லும் பிரிந்து இசைத்தவழியும் பெயரும் பெயரும் ஒருங்கு இசைத்த வழியும் வேற்றுமை தொக்கு நிற்கும்,' என்ற லின், 'நிலம் கடந்தான், குன்றத்திருந்தான்,' எனப் பெயரும் தொழிலும் பிரிந்து இசைத்த வழியும் தொகை யாதல் ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. இப்பெயரும் வினையும் தொகுதல் உவமத்தொகைக்கும் வினைத் தொகைக்கும் கொள்க. இவை இரு மொழித் தொடர்.

'உயர்சொற் கிளவி'[3]
'இடைச்சொற் கிளவி'[4]
'உரிச்சொற் கிளவி'[5]

என்புழி, 'உயர்சொல், இடைச்சொல், உரிச்சொல்' என்னும் தொகைச்சொற்கள் ஒரு சொல் நடையவாய்,

1. வேற்றுமையியல், சூ. 6. 2. எழுத். புணரியல், சூ. 30.
3. கிளவியாக்கம், சூ. 27. 4. பெயரியல், சூ. 5. 5. உரியியல், சூ. 1.

அவை 'கிளவி' என்பதனோடு தொக்கு ஒரு சொல் நடையவாய், மேல் வந்து முடிப்பனவற்றோடு முடிந்தன. 'கற்சுனைக் குவளை இதழ்' என்றாற்போல்வனவும் அது.

இனி,

'கரியமலர் நெடுங்கண் காரிகைமுன்'[1]
'முட்புற முதிர்கனி'
'பேடைமயில் உருவிற் பெருந்தகு பாடினி'[2]
'கன்னிப் பெண்ணாரமுதின்'

எனச் செய்யுட்கண் பல தொகையும் விராய் வந்து, ஒரு சொல் நடையவாய், தம்மை முடிப்பனவற்றோடு முடிந்தன.

'துடியிடை நெடுங்கண் துணைமுலைப் பொற்றொடி'—இஃது அறுவகைத் தொகையும் ஒருங்கு தொக்கது. இனி, 'கலனே தூணிப் பதக்கு, தொடியே கஃசரை, பதினென்றரை' என அளவும் நிறையும் எண்ணும் ஒரு சொல் நடையவாய் நின்றன. இப்பன்மொழித் தொகைக்கு முற்கூறிய முடிபுகளும் கொள்க.

இனி, உம்மை எச்ச உம்மை ஆகலின், தொகையல் தொடர்மொழிகளினும் ஒருசொல் நடையவாய் முடிவன உள எனக் கொள்க. அவை, 'யானைக்கோடு கூரிது, இரும்பு பொன்னாயிற்று, மன்று பாடவிந்தது, மக்களை உயர்திணை என்ப,' என வரும்.

421] உயர்திணை உம்மைத்தொகை முடிபு [உடு

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்.

இஃது, உம்மைத்தொகைக்கு வழூவமைக்கின்றது.

(இ-ள்.) உயர்திணை மருங்கின் உம்மைத்தொகை - உயர்திணைப் பெயரிடத்துத் தொக்க உம்மைத்தொகையின் ஈறு, பலர் சொல் நடைத்து என மொழிமனார் புலவர் - பலரைச்

1. சிலப். 7 : 5. 2, பொருந. 47.

சொல்லும் சொல்லின் இறுதிபோலப் பன்மை உணர்த்தி நிற்கும் என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

(உ-ம்.) கபில பரணர்

'கபிலன் பரணன்' என்பதில் 'கபிலன்' என்னும் னகர ஈறு சந்தியால் கெட்டுக் 'கபில பரணன்' என நின்றவழி இருவராய் நின்றமையின், 'வந்தார்' என்னும் பன்மையொடு முடிதல் வேண்டுதலின், ஆண்டு நின்ற ஒருமை ஈறு பன்மையொடு முடிதல் வழு என்று கருதி, னகர ஈறு ரகர ஈறாய் நிற்கும் என வழூவமைத்தார். 'கல்லாட மாமூல சீத்தலைச்சாத்தர்' என்றாற்போல்வனவும் அது. இவை ஓசை பகுத்து இசைத்தலின், ஒரு சொல்லாய் ஒட்டாமை காண்க.

'உயர்திணைப்பெயர்' என்னாது, 'மருங்கின்' என்றார், உயர்திணை விரவுப்பெயரும் அடங்குதற்கு.

422] குறிப்பு மொழியின் இலக்கணம் [உசு

வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னும் குறிப்புரை ஆகும்.

இது, தொகை அதிகாரம் விட்டு, மரபு வழூக் காக்கின்றது.

(இ-ள்.) வாரா மரபின வரக் கூறுதலும் - இயங்காதனவற்றை இயங்குவனவாகக் கூறுதலும், என்னா மரபின எனக் கூறுதலும் - சொல்லாதனவற்றைச் சொல்லுவனவாகச் சொல்லுதலுமாகிய, அன்னவை எல்லாம் - அத்தன்மையன எல்லாம், அவற்றவற்று இயல்பான் - அவ்வவ பொருள்களின் இயல்பு காரணத்தான், இன்ன என்னும் குறிப்புரை ஆகும் - 'இத்தன்மைய,' என்று சொல்லும் குறிப்பு மொழியாம் (எ-று.)

(உ-ம்.) அந்நெறி ஈண்டு வந்து கிடந்தது.
அம்மலை வந்து இதனோடு பொருந்திற்று.

எனவும்,

அவல்அவல் என்கின்றன நெல்.
மழைமழை என்கின்றது பைங்கூழ்.

எனவும் வரும். இவை வரவும் சொல்லும்* உணர்த்தாது, 'இன்ன' என்பதனைக் குறிப்பான் உணர்த்தியவாறு காண்க.

இனி, '**ஒன்றென முடித்தல்**' என்பதனால் 'கவவு அகத்திடும்'[1] என்றாற்போல அச்சொல்லின் பொருட்டொழிலை அச்சொல்மேல் ஏற்றிக் கூறுவனவும், 'ஆயிரம் காணம் வந்தது,' என்றாற்போல ஒருவனால் இயக்கப்பட்டதனைத் தான் இயங்கிற்றாகப் பொருள் கூறுவனவும், 'நீலுண் துகிலிகை' என்றவழி நீலம் பற்றியதனை நீலம் உண்டதாக்கிப் பொருள் கூறுதலும், 'இப்பொருளை இச்சொல் சொல்லும்,' என்றாற்போல வருவனவும் கொள்க.

423] இசைநிறை அடுக்கிற்கு வரையறை [உஎ

இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்.

இது, முற்கூறிய[2] இசைநிறை அடுக்கிற்கு வரையறை கூறுகின்றது.

(இ-ள்.) இசைப்படு பொருளே நான்கு வரம்பு ஆகும் - முற்கூறிய ஒரு சொல் அடுக்கினுள் இசை நிறைத்தலால் படும் பொருண்மைக்கு வரும் அடுக்கு நான்காகிய எல்லை உடைத்தாம் (எ-று.)

(உ-ம்.) 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ'[3] என வரும்.

424] விரைசொல் அடுக்கிற்கு வரையறை [உஅ

விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும்.

இது, முற்கூறிய பொருளொடு புணர்தல் அடுக்கிற்கு வரையறை கூறுகின்றது.

பி-ம்: * செலவும்
1. உரியியல், சூ. 59.
2. எச்சவியல், சூ. 15.
3. யா. வி. சூ. 51 உரை மேற்.

(இ-ள்.) விரை சொல் அடுக்கே மூன்று வரம்பு ஆகும் - முற்கூறிய ஒரு சொல் அடுக்கினுள் பொருளொடு புணர்தற்கண் விரைவு பொருட்பட அடுக்குவது மூன்றாகிய வரம்பை உடைத்து (எ-று.)

(உ-ம்.) தீத்தீத்தீ

என வரும். அசைநிலை இரு முறை அல்லது அடுக்காமை யின், அதற்குப் பேரெல்லை கூறாராயினர். ஒரு முறை வருவது அடுக்கு அன்மையின், 'ஒரு சொல் அடுக்கு' எனவே இரு முறை அடுக்கினமை பெறுதும். அவை பெறவே, 'தீத்தீ, படைபடை' என விரைவு பொருளின் சிற்றெல்லை இருகால் அடுக்குதல் கொள்க. இஃது இசைப்படு பொருளுக்கும் ஒக்கும். விரைவிக்கும் சொல், விரை சொல்.

425]　　அசைநிலை அடுக்கு　　[உகூ

கண்டீர் என்றா கேட்டீர் என்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்கும் கிளவி என்ப.

இது, வினைச்சொற்களுள் ஒரு சாரன அசையாம் என்கின்றது.

(இ-ள்.) கண்டீர் என்றா கேட்டீர் என்றா சென்றது என்றா போயிற்று என்றா அன்றி அனைத்தும் - 'கண்டீர்' எனவும் 'கேட்டீர்' எனவும் 'சென்றது' எனவும் 'போயிற்று' எனவும் வரும் அவ்வினைச்சொல் நான்கும், வினாவொடு சிவணி நின்றவழி அசைக்கும் கிளவி என்ப - வினாவொடு பொருந்தி நின்றவழி அசைநிலை அடுக்காம் என்று கூறுவர் புலவர் (எ-று.)

எனவே, வினாவொடு சிவணாதவழி வினைச்சொல்லே ஆம்.

ஒருவன் கூறிய கூற்றிற்கு உடம்படாதான், 'கண் டீரே கண்டீரே, கேட்டீரே கேட்டீரே' என்றால், வினைச்

சொற்பொருண்மையும் வினைப்பொருண்மையும் இன்றி நிற்கும்.

இது, வரையாது கூறினமையின், அடுக்காதும் வரும். ஏனையவும் ஏற்புழி அடுக்கியும் அடுக்காதும் வருமாயினும், அவை இக்காலத்து அரிய.

426] இதுவும் அது. [௩௰

கேட்டை என்று நின்றை என்று
காத்தை என்று கண்டை என்று
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.

இதுவும் அது.

(இ-ள்.) கேட்டை என்று நின்றை என்று காத்தை என்று கண்டை என்று அன்றி அனைத்தும் - 'கேட்டை' எனவும் 'நின்றை' எனவும் 'காத்தை' எனவும் 'கண்டை' எனவும் வரும் அம்முன்னிலை வினைச்சொல் நான்கும், முன்னிலை அல்வழி - முன்னிலைப்பொருளை உணர்த்தி நில்லாக்கால், முன்னுறக் கிளந்த இயல்பு ஆகும்மே-மேற்சொல்லப்பட்ட அசைநிலையாம் (எ-று.)

இவையும் கட்டுரைக்கண் அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் வந்து, ஏற்புழி அசைநிலையாய் நிற்கும். இவையும் இக்காலத்து அரிய. இவை சிறுபான்மை வினவொடு வருதலும் கொள்க.

427] ஒருசார் வினைமுற்றுக்குக் குறியீடு [௩௧

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தான் வினையினும் குறிப்பினும்
மெய்ம்மை யானும் ஈரிரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே.

இது, வினைச்சொற்களுள் ஒரு சாரனவற்றிற்கு ஆட்சி வேண்டியதன் குணம் காரணமாகக்கொண்டு ஓர் குறியிடுதல் கூறுகின்றது.

(இ-ள்.) தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம் மூவிடத்தான் - 'தன்மை, முன்னிலை, படர்க்கை' என்று சொல்லப்பட்ட அம்மூன்றிடத்தின்கண்ணும் வரும், மெய்ம்மையானும் - 'உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை' என்னும் மூவகைப் பொருள்தோறும், வினையினும் குறிப்பினும் ஈரிரண்டு ஆகும் என்ற அவ்வாறு மொழி - தெரிநிலை வினையானும் குறிப்பு வினையானும் இவ்விரண்டாய் வரும் என்று யான் முற்கூறிய அவ்வாறு வகைச்சொல்லை, இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்ற சிறப்பு உடை மரபின் அம்முக்காலமும் இயல் முற்று என்ப - இறப்பு ஒன்றுனும் நிகழும் சிறப்புடை மரபானும் நிகழ்வு ஒன்றுனும் நிகழும் சிறப்புடை மரபானும் எதிர்வு ஒன்றுனும் நிகழும் சிறப்புடை மரபானும் அம்முக்காலத்தும் நிகழும் சிறப்புடை மரபானும் இயலும் முற்றுச்சொல் என்று பெயர் கூறுவர் ஆசிரியர் (எ-று.)

'அம் ஆம்'[1] என்னும் சூத்திரம் முதலாகப் 'பல்லோர் படர்க்கை'[2] என்னும் சூத்திரம் இறுதியாக, மூவகை இடமும் மூவகைப் பொருளும் இருவகை வினையும் எடுத்து ஓதியவற்றை ஈண்டும் ஓதியது அனுவாதம் ஆயிற்று. ஆண்டு ஓதாது எஞ்சி நின்ற காலமும் குறியீடும் ஈண்டு ஓதியது இலக்கணமாயிற்று. முன்னர்க் 'குறிப்பினும் வினையினும்'[3] என்னும் சூத்திரத்தில் 'காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்' என்றது, மூவகை வினைக்கும் பொதுவாய் நின்று ஒரோவோர் முற்று வினையும் முக்காலமும் பெற்றே வரும் என்னும் ஐயம் நிகழ்த்திற்றதனை ஒரோவோர் காலம் பெற்று வருவனவும் முக்காலமும் பெற்று வருவனவுமாய் நிற்கும் முற்று என ஐயம் அகற்றினர் இச்சூத்திரத்தான். எச்சங்கட்கு

1. வினையியல், சூ. 5. 2. வினையியல், சூ. 30.
3. வினையியல், சூ. 4.

மேலிற்சூத்திரத்தான் ஐயம் அகற்றுப. மேல் 'பிரிநிலை வினை'[1] என்னும் சூத்திரத்தான் எச்சங்கட்குக் குறியீடு கூறுகின்றார் ஆதலின், அதற்கு ஏற்ப முற்றிற்கும் குறியீடு கூறினர்.

இனி, அவை காலத்தொடு வருங்கால், றகர உகரம் இறந்த காலத்தாற்சிறந்தது. உம்மொடு வரூஉம் கட தறவும், கடதற என்னும் அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமும், அல்லும் பகரமும் ஆரும் ஆவும் வவ்வும் ஆகிய பதின்மூன்றும் எதிர் காலத்தாற்சிறந்தன. அம், ஆம், எம், ஏம், என், ஏனும்; அன், ஆனும்; அள், ஆளும்; அர், ஆரும்; அகரமும், நகர உகரமும் ஆகிய பதினைன்கும் முக்காலத்தாற்சிறந்தன. முற்று இருபத்தொன்பதின் கண் டகர உகரம் வினைக்குறிப்பு ஆதலின், அதுவும் முக்காலத்தாற்சிறந்ததாம். ஆகத் தெரிநிலை முற்று இருபத்தெட்டும் காண்க.

''யார்? எவன்?' என்பனவோ!' எனின், அவையும் முப்பாற்கும் இரு பாற்கும் பொதுவாகி இடம் உணர்த்தாவேனும், வினைக்குறிப்பு ஆகலின், முக்காலமும் உடைய என்று உணர்க.

இரு திணைக்கும் ஓதிய குறிப்பு வினை பதினெட்டும் முக்காலமும் உடைய.

இனி, பொருள் உணர்த்தாது இடம் உணர்த்தும் முன்னிலையும் வியங்கோளுமாகிய விரவு வினைமுற்றுக்களும் இடமும் பொருளும் உணர்த்தா. விரவு வினைமுற்றுக்களும், பிரிவு வேறுபடூஉம் செய்தியவாய் நிற்றலின், இடமும் பொருளும் உணர்த்திக் காலம் கொண்டே நிற்கும் என்று உணர்க.

இவை ஐயும் ஆயும் இருவும்* ஈரும் முக்காலத்தாற் சிறந்தன. இகரமும் இன்னும் வியங்கோளும் செய்மன வும் எதிர்காலத்தாற்சிறந்தன. 'செய்யும்' என்பது

பி-ம்: * இர்ரும்

1. எச்சவியல், சூ. 34.

நிகழ் காலத்தாற்சிறந்தது. இன்மை செப்பலும் வேறு என் கிளவியும் வினைக்குறிப்பு ஆதலின், முக்காலத்தாற் சிறந்தன.

இனி, விரவு வினையுள் வினையெச்சமும் பெயரெச்சமும் மேல் கூறுதும். இவை ஈரிரண்டு ஆங்கால் ஓர் ஈற்றின்கண்ணே கொள்க.

(உ-ம்.) சென்றனன், கரியன்

எனவும்,

சென்றது, கரிது

எனவும்,

சென்றனை, கரியை

எனவும் வரும். ஈண்டுக் காலமும் குறியீடும் கூறினு ரேனும், 'வந்தது கொண்டு வாராத துணர்த்தல்'[1] என்னும் உத்தி பற்றி வினையியலுள் காலமும் குறியீடும் விரித்து ஆசிரியர் எல்லாரும் உரையும் காண்டிகையும் கூறினர் என்று உணர்க. இவை முற்றி நிற்குமாறு 'அவற்றொடு வருவழி'[2] என்னும் சூத்திரத்துள் கூறினர்.

'மெய்ம்மையானும்'என்றது,'ஊரானோர் தேவ குலம்' என்றாற்போலத் 'தொறு' என்பதன் பொருட்டாய் நின்றது.

இச்சூத்திரத்தில் கூறியன எல்லாம் முற்றப்பெறு வனவும் குறையப்பெறுவனவும் வினையியலுள் விரித்து ஓதியவாற்றான் உணர்க.

428] மேலதற்கு ஒரு புறனடை [கஉ

எவ்வயின் வினையும் அவ்வயின்* நிலையும்.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) எவ்வயின் வினையும் - மூன்றிடத்து வரும் வினை யெச்சமும் பெயரெச்சமும், அவ்வயின் நிலையும் - அம்முற்று இயல்பிலே நிற்கும் (எ-று.)

பி-ம்: * அவ்வியல்

1. மரபியல், சூ. 110. 2. வினையியல், சூ. 38,

என்றது, இறப்புப் பற்றி வருவனவும், இறப்பும் நிகழ்வும் பற்றி வருவனவும், எதிர்வு பற்றி வருவனவும், முக்காலமும் பற்றி வருவனவுமாம் என்றவாறு.

வினையெச்சங்களுள் உகரமும் ஊகாரமும் எனவும் முன்னும் கடையும் இறப்பும், புகரமும் பின்னும் இறப்பும் நிகழ்வும், இயரும் இயவும் இன்னும் குகரமும் எதிர்வும், அகரமும் காலும் வழியும் இடமும் முக்காலமும் பற்றி வந்தவாறும்; பெயரெச்சங்களுள் 'உம்' ஈறு நிகழ்வும் எதிர்வும், அகர ஈறு இறப்பும் பற்றி வந்தவாறும் காண்க.

இரு வகை எச்சத்திற்கும் 'காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்'[1] என்ற பொது விதியான் 'முக்காலமும் ஒன்றற்கு வருமோ!' என்னும் ஐயம் நிகழ்ந்ததனை இச்சூத்திரத்தான் அகற்றினர். ஆசிரியர் அவற்றிற்கு ஓதிய வாசகங்களான் அவற்றிற்கு உரிய காலங்களும் உணர்த்தினால் எனின், அவ்வாசகங்களால் காலம் உணராதவையும் உள ஆகலின், அவையும் விளங்குதற்கு ஈண்டுக் கூறினர் என்று உணர்க.

சேனவரையர், 'வினை என்றது முதல் நிலை,' என்று பொருள் உரைத்து, 'அவையும் முற்றுச்சொற்போல முற்றி நிற்கும்,' என்றால் எனின், அம்முதல் நிலை படுத்தல் ஓசையால் பெயர்த்தன்மைப்பட நிற்குமாறும், எடுத்தல் ஓசையால் முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்றாய் நிற்குமாறும் 'இர் ஈர் மின்'[2] என்னும் சூத்திரத்துள் கூறினும்.

முற்று இலக்கணம் கூறுதற்கு இடையே இச்சூத்திரத்தான் எச்ச இலக்கணத்தைக் கூறினர், பருந்து விழுக்காடாக,[3] மாட்டேற்றிற்று என்று கருதி.

1. வினையியல், சூ. 4. 2. வினையியல், சூ. 27.
3. நன். சூ. 18 மயிலை. உரை.

429] வினைமுற்றுப் பெயரோடு முடிதல் [௩௩

சென்னை-600 00

அவைதாம்,
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே.

இது, முற்றுச்சொற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) அவைதாம் - முற்கூறிய முற்றுச்சொற்கள்தாம், தத்தம் கிளவி அடுக்குந வரினும் - தத்தமக்கு உரிய வாய்பாடுகள் பலவாய் அடுக்கி வரினும் (உம்மையான், அடுக்காது ஒன்றே வரினும்), எத்திறத்தானும் பெயர் முடிபின - எவ்வாற்றானும் பெயர்ச்சொல்லை முடிபாக உடைய (எ-று.)

(உ-ம்) உண்டான் நின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்.
நல்லன் அறிவுடையன் செவ்வியன் சான்றோர்மகன்.

எனவும்,

வந்தான் வழுதி.
கரியன் மால்.

எனவும் வரும்.

'எத்திறத்தானும்' என்றதனால்,

உண்டான் சாத்தன்.
சாத்தன் உண்டான்.

என முன்னும் பின்னும் பெயர் நிற்றலும்,

'நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்றான்.'[1]

என அடுக்கிப் பெயர் வெளிப்படாது நிற்றலும், 'முப்பஃதென்ப'[2] என அடுக்காது பெயர் வெளிப்படாது நிற்றலும் கொள்க.

ஈண்டு இலேசால் கொண்டது முடிக்கும் பெயர் வெளிப்படாது நின்றதற்கு என்றும், 'எவ்வயிற் பெயரும்'[3] என்னும் சூத்திரத்தால் கொண்டது முடிக்கப்படும் பெயர் வெளிப்படாது நின்றதற்கு என்றும் உணர்க.

1. நாலடி. 29. 2. தொல். எழுத். நூல் மரபு, சூ. 1.
3. வேற்றுமையியல், சூ. 7.

'வேற்றுமைச்சொல்' என வேறு ஓர் சொல் இன்றி முற்றும் எச்சமும் வேற்றுமையை விரிக்குமாறுபோல, எழுவாயும் பயனிலையும் என வேறு ஓர் சொல் இன்றி முற்றும் எச்சமும் எழுவாயும் பயனிலையுமாய் நிற்கும் என்றும் உணர்க.

முற்றுப் பெயர் கொண்டு அல்லது தாமாக முற்றி நில்லாமைக்குக் காரணம் 'அவற்றொடு வருவழி'[1] என்னும் சூத்திரத்துள் கூறினும்.

430] எச்சத்தின் வகை [௩௪

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி.

இது, முற்கூறிய எச்சச்சொற்கட்கு முடிபு கூறுவான் அவற்றது பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்.) நெறிப்படத் தோன்றும்-முன்னர் எடுத்து ஓதிய இடங்களிலே முறைமைப்படத் தோன்றும், பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை எதிர்மறை உம்மை எனவே சொல்லே குறிப்பே இசையே ஆயீரைந்தும் - 'பிரிநிலை' முதல் 'இசை' ஈறுகிய அப்பத்தும், எஞ்சு பொருட்கிளவி - எச்சச்சொல் என்று பெயராம் (எ-று.)

எஞ்சி நிற்பதோர் பொருளையுடைய சொல் எனவே, 'எச்சச்சொல்' என்று பெயராயிற்று. இப்பத்தோடும் 'எச்சம்' என்பதனைக் கூட்டுக. இவற்றுள் 'பிரிநிலை எச்சம்' முதலிய ஏழும் எச்சச்சொல் வந்து முடித்தலை உடைய; ஏனைய மூன்றும் அச்சொல் வந்து முடியா என்று உணர்க.

1. வினையியல், சூ. 38.

வினையெச்சமும் பெயரெச்சமும் வினைச்சொல் ஒழிபு; ஏனைய இடைச்சொல் ஒழிபாம்.

431] பிரிநிலை எச்சத்திற்கு முடிபு [௩௫

அவற்றுள்,
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின.

இது, முறையே பிரிநிலை எச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள்-முற்கூறிய பத்தனுள், பிரிநிலை எச்சம்-ஏகாரமும் ஓகாரமுமாகிய பிரிநிலை எச்சங்கள், பிரிநிலை முடிபின-பிரிக்கப்பட்ட பொருள்மேல் வரும் சொல்லையே தமக்கு முடிபாக உடையவாம் (எ-று.)

(உ-ம்.) அவனே கொண்டான்.
அவனோ கொண்டான்.

எனப் பிரிக்கப்பட்ட சுட்டுப்பெயரின் வினை கொண்டு முடிந்தன. இடைச்சொற்குத் தமக்கு இயல்பின்மையின் 'சோற்றைப் பசித்து உண்டான்,' என்றாற்போல 'அவன்' என்னும் சுட்டுப் பெயரும் இடை நின்ற ஏகார ஓகாரமும் 'கொண்டான்' என்பதனோடு முடிந்தன. அன்றி, 'அவன்' என்பது 'கொண்டான்' என்பதனோடு முடிய, ஏகார ஓகாரங்கள் 'பிறர்கொண்டிலர்,' என்பதனோடு முடிந்தன என்றல் பொருத்தம் உடைத்து எனின், வினையெச்சமும் பெயரெச்சமும் ஒழித்து இடைச்சொல்லான் வரும் எச்சங்கள் பொருள் தருமாறு இடைச்சொல் ஓத்தினுள் கூறி, ஈண்டு அவற்றிற்கு முடிபு சொல் கூறுகின்றார் ஆதலின், 'கொண்டான்' என்னும் சொல் வந்து அவ்வெச்சங்களை முடித்தால் அல்லது 'பிறர் கொண்டிலர்,' என்னும் பொருண்மை முடிபு தோன்றாது ஆதலின், 'கொண்டான்' என்பதே முடிக்கும் சொல்லாய் நிற்பப் 'பிறர் கொண்டிலர்,' என்னும் பொருண்மை முடிபு தோன்றிற்று என்றலே பொருத்தம் உடைத்து

என்று கோடும். அன்றியும், மும்மை எச்சத்திற்கு உள் நின்ற பொருண்மை முடிபு முன்னர்க் கூறி, அதனை நீக்கிச் சொன்மை முடிபு ஈண்டுக் கூறுகின்றதனானும், இஃதே ஆசிரியர் கருத்து என்று உணர்க.

432] வினையெச்சத்திற்கு முடிபு [௩௬

வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே;
ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே.

இது, வினையெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும் - வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் ஆராயத் தோன்றிய முடிபு சொல்லாம்; ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே - ஆண்டுக் குறிப்பு முற்று ஆக்க வினையோடு வரும் (எ-று.)

(உ-ம்.) உழுது வந்தான்.
மருந்து உண்டு நல்லன் ஆயினன்.

என வரும். நினைய என்றதனான்,

உழுது வந்தவன்
உழுது வருதல்

எனத் தொழிற்பெயரோடும் வினைப்பெயரோடும்[1] முடிதலும் கொள்க.

'ஈண்டு இவ்வினையெச்ச முடிபு கூறுகின்றவர், வினையியற்கண் 'முதனிலை மூன்றும்'[2] என்னும் சூத்திரம்

---

1. இங்குத் 'தொழிற்பெயர்' என்றது வினையாலணையும் பெயரையும் 'வினைப்பெயர்' என்றது தொழிற்பெயரையும் உணர்த்துவனவாகக் கொள்க.

'தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்' (விளி மரபு, சூ. 22)

' 'செயல்' என்னும் வினைப்பெயர்' (நெடுநல். 171 உரை) என்பன இங்கு ஒப்பு நோக்கற்குரியன.

2. வினையியல். சூ. 33.

முதலிய மூன்று சூத்திரத்தான் வினையெச்சத்திற்கு முடிபு கூறியது என்னை?' எனின், ஈண்டுக் கூறிய பொது விதிக்கு ஆண்டு மூன்று சூத்திரத்தானும் மூவகையாகச் சிறப்பு விதி கூறினர், 'எதிரது போற்றல்'[1] என்னும் தந்திர உத்தியால் என்க.

இனி,

'வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான் தண் ணியளே.'[2]

'வில்லக விரலிற் பொருந்தியவன்
நல்லகம் சேரின் ஒருமருந் தினமே.'[3]

என்றாற்போல்வன பிறவும் ஆக்கம் விரிந்து அல்லது பொருள் உணர்த்தாமை உணர்க.

433] பெயரெச்சத்திற்கு முடிபு [ருஎ

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே.

இது, பெயரெச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே - பெயரெச்சம் பெயர்ச்சொல்லோடு முடியும் (எ-று.)

(உ-ம்.) உண்ணும் சாத்தன்
உண்ட சாத்தன்

என வரும்.

ஈண்டுப் 'பெயரொடு முடியும்' என்ற பொது விதி நோக்கி, 'நிலனும் பொருளும்'[4] என்னும் சூத்திரத்தான் இப்பெயர்தாம் பொருள் வகையான் ஆறு வகையவாம் என்று 'எதிரது போற்றல்'[5] என்னும் உத்தியால் கூறினர்.

434] ஒழியிசை எச்சத்திற்கு முடிபு [ருஅ

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின.

இஃது, ஒழியிசை எச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

1, 5. நன். சூ. 14.
2. குறுந். 84.
3. குறுந். 370.
4. வினையியல், சூ. 37.

(இ-ள்.) ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின - மன்னும் தில்லும் ஓகாரமுமாகிய ஒழியிசை எச்சம் மூன்றும் அவ்வொழியிசைப்பொருள்மேல் வரும் சொல்லையே தமக்கு முடிபாக உடைய (எ-று.)

(உ-ம்.) கூரியதோர் வாள்மன்,' என்பது 'திட்பம் இன்று,' என்பதனோடும், 'வருகதில் அம்ம,'[1] என்பது 'வந்தால் இன்னது செய்வேன்,' என்பதனோடும் முடியும். ஆண்டுப் பொருண்மை முடிபு கூறினார், ஈண்டுப் பொருண்மையை உணர்த்தும் சொன்மை முடிபு கூறினார்.

'கோளலோ கொண்டான்,' என்பது 'கொண்டான்' என்பதனோடு முடியும். அது, 'கொண்டுய்யப் போமாறு அறிந்திலன்' என்பதனோடு முடிந்தது எனின், 'கொண்டான்' என்பது வந்து முடியாக்கால் அப்பொருண்மை முடிபு தோன்றாமை உணர்க.

435] எதிர்மறை எச்சத்திற்கு முடிபு [௩௯

எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.

இஃது, எதிர்மறை எச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின - 'மாறுகொள் எச்சம்'[2] என்ற ஏகாரமும் ஓகாரமும் உம்மையுமாகிய எதிர்மறை எச்சம் மூன்றும் எதிர்மறைப் பொருளை உணர்த்தும் சொல்லை முடிபாக உடைய (எ-று.)

(உ-ம்.) யானே கொள்வேன்.
யானோ கொள்வேன்.
சாத்தன் வரலும் உரியன்.

என அவ்விடைச்சொற்களின் பின்னர் நின்ற சொற்கள் அவற்றை முடித்தலால், 'கொள்ளேன், கொள்ளேன், வாராமையும் உரியன்' என்னும் பொருண்மை முடிபு தோன்றியவாறு காண்க.

1. அகம். 276 : 7. 2. தொல். எழுத். உயிர் மயங். சூ. 88.

436] உம்மை எச்சத்திற்கு முடிபு [சுப

உம்மை எச்சம் இருவீற் றானும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே.

இஃது, உம்மை எச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) இரு ஈற்றானும் - ஒன்றற்கொன்று முடிவனவும் முடிப்பனவுமாகிய இரண்டு கூற்றின்கண்ணும் வரும், உம்மை எச்சம் தன் வினை - உம்மை எச்சங்களை முடிக்கும் தன்னுடைய வினைச்சொற்கள், ஒன்றிய முடிபாகும் - ஓர் உம்மைக்குப் பொருந்திய வினையே மற்றை உம்மைக்கும் முடிபாய் வரும் (எ-று.)

(உ-ம்.) 'சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான்,' என எதிரது தழீஇய உம்மைக்கு முடிபாய வினையே இறந்தது தழீஇயதற்கும் முடிபு ஆயிற்று.

'சாத்தனும் வந்தான் கொற்றனும் வரும்,' என்பதூஉம் ஒன்றிய முடிபாம்; 'கொற்றனும் உண்டான்,' என்றால், ஒன்றிய முடிபாகா.

எனவே, எச்சப் பொருட்கும் உம்மையை முடிபாகக் கூறாது அதனோடு தொடர்ந்த வினை முடிபாமாறு கூறவே, உள் நின்ற பொருள் முடிபு கூறாது சொல் முடிபு கூறுதலே ஆசிரியர் கருத்தாயிற்று. எனவே, முற்கூறியவற்றிற்கும் சொல் முடிபே கூறினாராயிற்று.

'வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் டிங்களும் ஊர்கொண் டன்றே.'[1]

என்பது, இணர் விரிதலும் ஊர் கோடலும் மணம் செய்யும் காலம் குறித்தலின், அவை ஒரு வினையே ஆம்.

இனி, எஞ்சுபொருட்கிளவி செஞ்சொல் ஆயவழியும் தன் வினை கோடல் '**தன்னினம் முடித்த**'லால்[2] கொள்க. அது, 'சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான், வரும்' என்பதாம்.

1. அகம். 2 : 16, 17. 2. நன். சூ. 14.

437] எச்ச உம்மையின் கால மயக்கம் [சக

தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை
நிகழும் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான.

இதுவும் அவ்வெச்ச உம்மையது கால மயக்கம் கூறுகின்றது.

(இ-ள்.) தன்மேற் செஞ்சொல் வரூஉங்காலை - அவ்வும்மை எச்சத்தின் முன்னர் முடிக்கும் சொல் உம்மை இல் சொல்லாய் வருங்காலத்து, நிகழும் காலமொடு வாராக் காலமும் - நிகழ் காலத்தோடு எதிர் காலமும், இறந்த காலமொடு வாராக் காலமும் - இறந்த காலத்தோடு எதிர் காலமும், மயங்குதல் வரையார் முறைநிலையான - மயங்குதலை நீக்கார் அவ்வாறு மயங்கும் முறைமைக்கண் (எ-று.)

(உ-ம்.) கூழ் உண்ணாநின்றான் சோறும் உண்பன்.
கூழ் உண்டான் சோறும் உண்பன்.

என வரும். 'முறை நிலை' என்றதனால், சிறுபான்மை நிகழ்வோடு இறப்பும் மயங்குதல் கொள்க:

(உ-ம்.) கூழ் உண்ணாநின்றான் சோறும் உண்டான்.

என வரும்.

438] எனவென் எச்சத்தின் முடிபு [சஉ

எனவென் எச்சம் வினையொடு முடிமே.

இஃது, எனவென் எச்சம் ஆமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எனவென் எச்சம் - முன்னர் வினையும் குறிப்பும் இசையும் பண்பும் எனக் கூறிய நால்வகையவாகிய எனவென் எச்சம், வினையொடு முடிமே - தெரிநிலை வினையோடும் குறிப்பு வினையோடும் முடியும் (எ-று.)

'செய்தென' என்னும் வினையெச்ச 'என' வினை கோடல் முற்கூறினர்.[1] எண் எனவும் பெயர் எனவும்

1. வினையியல், சூ. 31.

வினை கொள்ளா. எனவே, 'என' என்னும் இடைச் சொல் ஏழு வகையது ஆயிற்று.

(உ-ம்.) கார் வருமெனக் கருதி நொந்தாள்.
துண்ணெனத் துடித்தது.
ஒல்லென ஒலித்தது.
காரெனக் கறுத்தது.

என நான்கனுள் இரு வகை வினையும் காண்க.

'என்று' என்பதற்கும் இவ்விதி ஒக்கும்.

கொள்ளென்று கொண்டான்.
'மலைவான் கொள்ளென் றுயர்பலி* தூஉய்'[1]

என்பன, 'கொள்ளென்று சொல்லிக் கொண்டான்,' எனவும், 'மலைவான் கொள்ளவேண்டுமென்று சொல்லி' எனவும் பொருள் தருதலின், சொல்லெச்சமாம்.

439] ஏனை எச்சங்கட்கு முடிபு வேற்றுமை [சங

எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலஎன மொழிப.

இஃது, ஏனை எச்சங்கட்கு முடிபு வேற்றுமை கூறு கின்றது.

(இ-ள்.) எஞ்சிய மூன்றும் - ஒழிந்த சொல் எச்சமும் குறிப்பு எச்சமும் இசை எச்சமுமாகிய மூன்றும், மேல் வந்து முடிக்கும் எஞ்சு பொருட்கிளவி இல என மொழிப - ஒழிந்த எச்சங்கள் போலத் தமக்குமேல் வேறாய் வந்து தம்மை முடிக் கும் எஞ்சிய பொருட்கிளவியை உடைய அல்ல என்று கூறுவர் ஆசிரியர் (எ-று.)

எனவே, பிற சொல்லை அவாவி நின்றாலும், அவை வந்து முடியாமல், தாமே அவற்றைக் கூறி நிற்குமாயின. அவை மேல் காட்டுதும். 'சொல்லை எச்சமாக உடைய சொல்' எனவும், 'குறிப்பின்கண் தோன்றிய எச்சம்' என வும், 'இசையின்கண் தோன்றிய எச்சம்' எனவும் விரிக்க.

பி-ம் : * கொள்ளென உயர்பலி 1. புறம். 143 : 1.

440] குறிப்பெச்சமும் இசையெச்சமும் முடியுமாறு [சச

தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்.

இது, குறிப்பெச்சமும் இசையெச்சமும் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) எச்சம் - சொல்லெச்சம் ஒழிந்த இரு வகை எச்சங்கள், தத்தம் குறிப்பின் செப்பும் - தம்மைக் கூறுவோர் தம்முடைய குறிப்புக்களாலே தம்முடைய எஞ்சு பொருளைத் தாமே கூறி நிற்கும் (எ-று.)

(உ-ம்.) 'கற்கறிக்க நன்கு அட்டான்,' என்றால், 'தீங்கு அட்டான்,' என்னும் குறிப்பு, தோன்றிய எஞ்சு பொருளினைத் தானே கூறி நின்றது.

'வயிறு மொடுமொடுத்தது,' என்றால், இசையிற் குறிப்பாகிய 'உண்ண வேண்டா,' என்னும் எஞ்சு பொருளினைத் தானே கூறி நின்றது. இவ்விசையிற்குறிப்பு வயிற்றின்கண்ணும் கொள்க.

இனி, பிற சொல் வாராது தம்மைத்தாமே முடிக்கும் என்று, 'விண்ணென விணைத்தது, ஒல்லென ஒலித்தது,' என்பன காட்டினாரால் உரையாசிரியர் எனின், அவை தம்மைத் தாமே முடியாமல், 'அது விண்ணென வீங்கிற்று, ஒல்லென ஓடிற்று,' எனப் பிறசொல் வந்து முடித்தலும் அவற்றிற்கு ஏற்கும் ஆகலானும், அவை 'என' என்னும் இடைச்சொல் ஆகலானும், அவற்றைக் கொண்டால், 'காரெனக் கறுத்தது,' என்னும் பண்பும் கோடல் வேண்டும் ஆகலானும் அது போலி உரையாம்.

இனி, சேனாவரையர் குறிப்பெச்சத்திற்கு

'இளைதாக முள்மரம் கொல்க'[1]

என்னும் குறள் வெண்பாவும், இசையெச்சத்திற்கு 'அகர முதல'[2] என்னும் குறள் வெண்பாவும் காட்டினாரால்

1. குறள், 879. 2. குறள், 1.

எனின், அவர் காட்டின குறிப்பெச்சம் செய்யுள் இலக்கணம் கூறுகின்ற செய்யுளியற் 'சொல்லொடும் குறிப்பொடும்'[1] என்னும் சூத்திரத்தால் பல சொல் தொடர்ந்ததோர் செய்யுள் முடிந்தக்கால் வரும் என்று கொண்ட குறிப்பெச்சமாகலின், அதனைச் சொல்லிலக்கணத்திற் கூறுகின்ற குறிப்பெச்சத்திற்குக் காட்டினுல் ஆண்டைக் குறிப்பெச்சத்திற்கு வேறு பொருள் இன்றாம் ஆகலானும், அவர் இசையெச்சம் என்ற 'அகர முதல'[2] என்பதன்கண் 'அது போல' என விரிந்த உவமச்சொல் துணியுமாறு விரியாது, இரண்டற்கும் பொதுவாய் வேறுபட வந்த உவமத்தின்பாற்படுதல் அல்லது இசையால் பிறவாமையானும் அவை பொருந்தாமை உணர்க.

441] சொல் எச்சத்திற்கு முடிபு [சடு

சொல்என் எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்ல தெஞ்சுதல் இன்றே.

இது, சொல் எச்சத்திற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்.) என் எச்சம் - 'என்' என்கின்ற எச்சமானது, சொல் அளவு அல்லது - 'சொல்' என்னும் முதல் நிலை மாத்திரை தன்னுள்ளேயே எஞ்சி நிற்றல் அல்லது, சொல் முன்னும் பின்னும் எஞ்சுதல் இன்று - செய்யுளியலில் கூறும் சொல் எச்சம் போல ஒரு சொல் செய்யுட்கு முன்னும் பின்னும் எஞ்சி நிற்றல் இல்லை (எ-று.)

'என்' என்னும் இடைச்சொற்கண்ணே 'சொல்' என்பது தோன்றுதலின், 'என் எச்சம்' என்றார். 'என்' என்பது சொல்லை ஒழிபாக நிற்றலின், முன்னர்ச் 'சொல் எச்சம்' என்றார். 'வினையெனப் படுவது'[3] என்றது, 'வினையென்று சொல்லப்படுவது' என்று பொருள் தந்த இடத்து 'என்' என்னும் எச்சம் தான் அவாவுதலின், இடையே நின்ற 'சொல்' என்னும் முதல் நிலைக்குத் தன்

1. செய்யுளியல், சூ. 206. 2. குறள், 1. 3. வினையியல், சூ. 1.

ஈற்றில் நின்ற 'செய' என் எச்சத்தை உணர்த்தும் அகரத்தை ஏற்பித்து நின்றவாறு காண்க. 'நளியென் கிளவி'[1] என்றது, 'நளியென்று சொல்லும் சொல்' என்று பொருள் தந்த இடத்தும் 'என்' என்னும் எச்சம் தான் அவாவுதலின், இடைநின்ற 'சொல்' என்னும் முதல் நிலைக்குத் தன் ஈற்றில் நிற்கும் 'செய்யும்' என்னும் எச்சத்தை உணர்த்தும் 'உம்' என்பதனை ஏற்பித்து நின்றவாறு காண்க. 'தாவென நின்றான்,' என்பது, 'தாவென்று சொல்லி நின்றான்,' என 'என' என் எச்சம் 'சொல்லி' என்னும் வினை கொண்டு நின்றது. இது சொல் எச்சம் அன்று. இங்ஙனம் எச்ச ஈறுகளை ஏற்றலின், 'சொல்' என்பது முதல் நிலை ஆயிற்று. 'என்' என்பதற்கும் 'சொல்' என்பதற்கும் இடைநின்ற றகர உகரம், அவ்விரண்டினையும் கூட்டுதற்கு வந்து நின்றது. 'எழுத்தெனப் படுப,[2] பெயரெனப் படுப,[3] இடையெனப் படுப'[4] எனவும், 'இலமென் கிளவி,[5] முழூதென் கிளவி,[6] கடியென் கிளவி,[7] மீனென் கிளவி,[8] தேனென் கிளவி'[9] எனவும் வருவன எல்லாம் இக்கூறியவாறே வந்த சொல் எச்சம்.

இனி, செய்யுட்கண் வரும் சொல் எச்சமாயின், 'எமக்கு' என,

'கல்கெழு கானவர் நல்குறூஉம் மகள்
மருந்தெனின் மருந்து; வைப்பெனின் வைப்பு.'[10]

என்புழி முன்னும்,

'குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டு'[11]

---

1. உரியியல், சூ. 25. 2. தொல். எழுத். நூல் மரபு, சூ. 1.
3. பெயரியல், சூ. 6. 4. இடையியல், சூ. 1.
5. தொல். எழுத். புள். மயங். சூ. 21. 6. உரியியல், சூ. 28.
7. உரியியல், சூ. 85. 8. தொல். எழுத். புள். மயங். சூ. 44.
9. தொல். எழுத். புள். மயங். சூ. 45.
10. குறுந். 71 11. குறுந். 1.

என்புழி, 'யாம் காந்தட்பூவால் குறைவிலம்,' எனப் பின்னும் கூற்று, சொல் எச்சமாய் நிற்குமாறு உணர்க. இதற்கு விதி,

'சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்.'[1]

என்னும் சூத்திரம் என்று உணர்க.

இனி, 'உயர்திணை என்மனார்'[2] என்பதற்கு 'ஆசிரியர்' என வரும் பெயர் சொல் எச்சம் என்று உதாரணம் காட்டினால், அது பொருந்தாது. சூத்திரம் செய்யுளாதலானும், அதுதான் முற்றுச்சொற்குப் பெயர் தோன்றாமலும் நிற்கும் என்று முற்கூறியது ஆகலானும் இது சொல் எச்சம் ஆகாமை உணர்க.

442] இடக்கர் அடக்கல் [சசூ

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

இது, மரபு வழுக் காக்கின்றது.

(இ-ள்.) அவையல் கிளவி - நன்மக்களிடைக் கூறப்படுவது அல்லாத சொல்லினை, மறைத்தனர் கிளத்தல் - அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டால் கூறுக (எ-று.)

(உ-ம்.) 'ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்.'[3]
'கண்கழீஇ வருதும்.'
'கருமுக மந்தி'
'செம்பின் ஏற்றை'
'புலிசின்* றிறந்த நீரல் ஈரத்து'[4]

என வரும். 'ஈகார பகரம்' என்றது, ஓர் உயிர்மெய் எழுத்தாகக் கூறின் அவையல் கிளவியாம் என்று உயிரும் மெய்யுமாகப் பிரித்து அவ்வுயிர்மெய் எழுத்தையே கூறியது. ஒழிந்தன, அவ்வாறு அன்றி, அவை

பி-ம்: * களிறுசின்

1. செய்யுளியல், சூ. 206.
2. கிளவியாக்கம், சூ. 1.
3. தொல். எழுத். உயிர் மயங். சூ. 31.
4. நற். 103.

யல் கிளவிப் பொருளைப் பிற சொல்லான் உணர்த்திற் றேனும் அப்பொருளையே உணர்த்தி நிற்றலின், அதனைப் பிரிதோராற்றான் மறைத்தனவேயாம்.

தகுதியாவது, 'செத்தான்' எனப் பெரும்பான்மை வழங்கப்பட்டன, தகுதி நோக்கித் 'துஞ்சினான்'[1] எனச் சிறுபான்மை வழங்கப்பட்டு நிற்கும்; அவையல் கிளவியாவது, இழிந்தோர் கூறும் இழிசொற்களை நன்மக்களிடை மறைத்துக் கூறப்படும். இஃது, இரண்டற்கும் வேற்றுமை; இங்ஙனம் மறைத்துக் கூறுக்கால் வழுவாதல் கருதி, வழுவமைத்தார். இது, 'பொருளிடையிடுதல்'[2] என்னும் தந்திர உத்தி.

443] மேலதற்கு ஒரு புறனடை [சஎ

மறைக்குங் காலை மரீஇய தொரா அல்.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) மறைக்குங்காலை - அவ்வவையல் கிளவியை மறைத்துக் கூறுங்கால், மரீஇயது ஒராஅல் - மேல்தொட்டு மரீஇ வழங்கியதனை மறைத்தலை நீக்குக (எ-று.)

(உ-ம்.) 'மெழுகும் ஆப்பிகண் கலுழ்நீ ரானே'[3]
'ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை'
யானை இலண்டம்
யாட்டுப் பிழுக்கை

என வரும். தன் பொருள்மேல் நில்லாது அணி குறித்து நின்ற

'பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி'[4]

என்றாற்போல்வன தம் பொருளை உணர்த்துங்கால் மறைத்துக் கூறப்படுமாறு உணர்க.

---

1. நாலடி. 21.
2. மரபியல், சூ. 110.
3. புறம். 249 : 14.
4. பெரும்பாண். 2.

444] இரப்பு உணர்த்தும் சொற்கள் [சஅ

ஈதா கொடுஎனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய.

இஃது, ஒரு பொருள்மேல் வரும் 'ஈ, தா, கொடு' என்னும் பல சொற்கு மரபு வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) ஈ தா கொடு எனக் கிளக்கும் மூன்றும் - 'ஈ, தா, கொடு' என்று முன்னின்றானை நோக்கிக் கூறும் சொற்கள் மூன்றும், இரவின் கிளவி ஆகு இடன் உடைய - ஒருவன் ஒன்றை இரத்தற்கண் வரும் சொல்லாம் இடம் உடைய (எ-று.)

'ஈச்சிறகு'[1] எனவும், 'தாவில் நன்பொன்'[2] எனவும், 'கோடுங்கோல்'[3] எனவும் இவை பிற பொருளையும் உணர்த்துதலின், 'ஆகிடன் உடைய' என்றார்.

இவை மூன்றும் 'இல்' என இரப்போர்க்கும், இடன் இன்றி இரப்போர்க்கும், தொலைவாகி இரப்போர்க்கும் உரிய என்று உணர்க.

445] 'ஈ' என்பதன் மரபு [சகூ

அவற்றுள்,
ஈஎன் கிளவி இழிந்தோன் கூற்றே.

இது, முதலதன் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) அவற்றுள் ஈ என் கிளவி - முற்கூறிய மூன்றனுள் 'ஈ' என்னும் சொல், இழிந்தோன் கூற்று - இரக்கப்படுவானின் இழிந்த இரவலன் அவனை இரக்குங்கால் கூறும் கூற்றும் (எ-று.)

(உ-ம்.) 'பெருமா! எனக்கொரு பிடிசோறீ.'

எனவும்,

'ஈயென இரத்தலோ அரிதே நீயது'[4]

எனவும் இவ்விரண்டும் தன்மையும் முன்னிலையும் பற்றி வந்தன.

---

1. நாலடி. 41.
2. அகம். 212 : 1.
3. சிலப். 23 : 111.
4. புறம். 154 : 8.

'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே!'[1]

என்றது உளப்பாட்டுத் தன்மையும் படர்க்கையும் பற்றி வந்தது.

'இவற்கீத் துண்மதி கள்ளே.'[2]

என்புழியும் 'இவன்' என்பது முன்னிலையும் படர்க்கையும் என்று உணர்க.

446] 'தா' என்பதன் மரபு [ரு௦

தாஎன் கிளவி ஒப்போன் கூற்றே.

இஃது, இரண்டாவதன் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) தா என் கிளவி - தன்மை முன்னிலைக்கு உரிய 'தா' என்னும் சொல், ஒப்போன் கூற்று - இரக்கப்படுவானோடு ஒக்கும் இரவலன் அவனை இரக்குங்கால் கூறும் கூற்றாம் (எ-று.)

(உ-ம்.) எனக்குச் சோறு தா.

என வரும்.

'மாணலம் தாவென வருந்தற் கண்ணும்'

எனவும்,

'என்னலம் தாராய்.'[3]

எனவும் 'கொடு' போல வருவன, கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கண் செல்லாதனவற்றை இரந்தனவாம்.

'ஒப்போன் கூற்று' என்றாரேனும், சிறுபான்மை வலியாற்கொள்ளுமிடத்தும் 'தா' என்பது வரும் எனக் கொள்க.

'நின்னது தாவென நிலைதளரக்
குரங்கன்னபுன் குறுங்கூளியர்
பரந்தலைக்கும் பகையொன் றென்கோ!'[4]

என வரும்.

---

1. புறம். 235 : 1. 2. புறம். 290 : 1.
3. கலி. 128 : 10, 11. 4. புறம். 136 : 11, 13, 14.

447] 'கோடு' என்பதன் மரபு [ருக

கொடுஎன் கிளவி உயர்ந்தோன் கூற்றே.

இது, மூன்ருவதன் மரபு கூறுகின்றது.

(இ-ள்.) கொடு என் கிளவி - 'கொடு' என்னும் படர்க்கையாகிய முதல் நிலைச்சொல், உயர்ந்தோன் கூற்று - இரக்கப் படுவோனின் உயர்ந்த இரவலன் அவனை இரக்குங்கால் கூறும் கூற்ரும் (எ-று.)

(உ-ம்.) இவற்கு ஊண் கோடு.

என வரும்.

448] 'கோடு' என்பது தன்மையிலும் வருதல் [ருஉ

கொடுஎன் கிளவி படர்க்கை ஆயினும்
தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்
தன்னிடத் தியலும் என்மனுர் புலவர்.

இது, 'கொடு' என்பதற்கு இடவழு அமைக்கின்றது.

(இ-ள்.) தன்னைப் பிறன்போலாயினும் கூறும் குறிப்பின் கொடு என் கிளவியும் - இரப்போர் பலரும் தம்மில் ஒருவனைக் காட்டி 'இவற்குக் கொடு,' எனத் தம்மைப் பிறரைப்போலாயினும் கூறி இரக்கும் கருத்தினுல் கூறப்படும் 'கொடு' என்னும் சொல்லும், தன்னைப் பிறன்போலாயினும் கூறும் குறிப்பின் படர்க்கைக் கிளவியும் - கூறுகின்ருர் பலரும் தம்மைப் பிறரைப் போலாயினும் கூறும் கருத்தினுல் கூறப்படும் படர்க்கைச் சொற்களும், தன்னிடத்து இயலும் என்மனுர் புலவர் - இவ் விரண்டும் தன்மை இடத்திற்கு உரியவாய் நடக்கும் என்று கூறுவர் புலவர் (எ-று.)

(உ-ம்.) இவற்கு ஊண் கோடு.

என வரும். அங்ஙனம் சொல்லுவானே, பெருஞ்சாத்தன் தந்தை; சொல்லப்படுவாளோ, பெருஞ்சாத்தன் தாய்.

இந்நான்கு சூத்திரத்தானும் ஆண் பால் உரிமையால் கூறினுரேனும், அவை முப்பாற்கும் உரித்து ஆமாறு மேலே உணர்க.

சேனாவரையர், ''கொடு' என்பது தானே தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பினையும் உணர்த்தும்,' என்று, அதற்குச் 'சாந்து கோடு,' என்பது உதாரணம் காட்டினாரால் எனின், 'கொடு' என்பது கொடுப்பதோர் பொருளை ஏற்றற்கு உரிய நான்கன் உருபு வந்தால் அதனை முடித்தற்கு வந்த சொல்லாதலின், 'அவற்கு, இவற்கு, உவற்கு' என்னும் சொற்களை அவாய், அவற்றை முடித்தே நிற்றல் வேண்டும்; வேண்டவே, 'அவற்குக் கொடு,' என்பது 'ஏனை இரண்டும்'[1] என்புழிக் கூறியதாம். 'எனக்குக் கொடு,' என்பது தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பு இல்லாததாயிற்று. ஆதலால், தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பிற்றாய் வழுவமைதியும் ஏற்று நிற்பது 'இவற்குக் கொடு,' என்னும் உதாரணமே ஆயிற்று என்க.

449] ஒருசார்ச் சொற்களின் வழுவமைதி [௫௩

பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்தும் கடப்பா டிலவே.

இதுவும் ஒருசார் வழுவமைக்கின்றது.

(இ-ள்.) பெயர் நிலைக் கிளவியின் ஆஅகுநவும் - தத்தம் பொருள் உணர்த்தாது பெயர்ந்த நிலைமையை உடைய சொல்லான் வரும் செய்யுளும், திசைநிலைக் கிளவியின் ஆஅகுநவும் - திசையான் நிலைபெற்ற பெயரான் வரும் சொல்லும், மொழிவயின் தொன்னெறி ஆஅகுநவும் - சொல்லிடத்துப் பழைய நெறியான் ஆய் வரும் சொல்லும், மெய்ந்நிலை மயக்கின் ஆஅகுநவும் - ஒருமைப்பொருளால் கூறவே பன்மைப் பொருள்

1. கிளவியாக்கம், சூ. 30.

தோன்றி மயங்கும் மயக்கினான் ஆகும் செய்யுட்களும், மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும் - மந்திரத்தை உடைய தெய்வங்க ளிடத்தே அம்மந்திரமாய் வரும் சொற்களும், அன்றி அனைத் தும் - ஆகிய அவ்வனைத்தும், கடப்பாடு இல - வழங்கியவாறே கொள்வது அல்லது இலக்கணத்தான் யாப்புறவு உடைய அல்ல (எ-று.)

(உ-ம்.) 'ஒள்வாள்
கறையடி யானைக் கல்ல
துறைகழிப் பறியா வேலோன் ஊரே.'[1]

என்புழி, 'வேலோன்' என்பது 'வேலையுடையோன்' என்னும் பொருள் பெயர்ந்து ஒரு பெயர்த்தன்மையாய் நின்றது.

'செழுந்தா மரையன்ன வாட்கண்'[2]

என்பதூஉம் அது.

'தென்னன், வடமன், குடக்கோ, தென்பாண்டி' என இவை திசைநிலைக் கிளவி.

முதுமொழி, பொருள் உடையனவும் பொருள் இல்லனவும் என இரு வகைப்படும்: 'யாட்டுளா னின்னுரை தாரான்,' என்றது, 'இடையன் எழுத்தொடு புணராது பொருள் அறிவுறுக்கும் மொழியைக் கூறுதல் அன்றி, எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் மொழியைக் கூறான்,' என்னும் பொருள் தந்து நின்றது.

'யாற்றுட்செத்த எருமை ஈர்த்தல் ஊர்க் குயவர்க் குக் கடன்,' என்பது, 'குயவன் சுள்ளையி னெழுந்த புகையான் ஆய மேகம் தந்த நீரான் எருமை சாதலின், அதனை இழுத்தல் குயவர்க் குக் கடனாயிற்று,' என ஒரு காரணம் உள்ளது போலக் கூறுகின்றது, உண்மைப்பொருள் அன்றி, ஒருவன் இயைபின்றிக் கூறிய சொற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுதலின், பொருள் உணர்த்தாதாயிற்று.

1. புறம். 323 : 5-7. 2. சீவக. 8.

'இல்வாழ்வான் என்பான்'[1]

'தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்'[2]

'நட்பரண் ஆறும் உடையான்'[3]

'வறியவன் இளமைபோல்'[4]

என்றாற்போல்வன எல்லாம் ஒருமைப்பொருள் கூறிற்றேனும் பன்மைப்பொருளை உணர்த்தலின், மெய்ந்நிலை மயக்கம் ஆயிற்று. மெய் - பொருள்.

மந்திரச்சொல், மந்திர நூல்களிற் கேட்டு உணர்க.

'நம்பி, நங்கை' என அஃறிணையைக் கூறுவனவும்,

'எழுதுவரிக் கோலத்தார்'[5]

என்னும் பிரேளிகைச் செய்யுளில் திணை வழூவும்,

'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்'[6]

என்னும் சூத்திரத்துள் அடங்குமாறும், 'புலியான், பூசையான்' என்பன திசைச்சொற்கண் அடங்குமாறும் உணர்க. வெண்கொற்றப் படைத்தலைவனும் சிறப்பினாகிய பெயர்க்கண் அடங்கும்.

450] 'செய்யாய்' என்பது 'செய்' என நிற்றல் [ருச

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே.

இஃது, ஓசை வேறுபாட்டான் ஒரு சொல் ஒரு சொல்லாம் என்கின்றது.

(இ-ள்.) செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல் - ஒரு தொழிலினை 'மேற்செய்யாய்' என்னும் மறையாகிய முன்னிலை வினைச்சொல், செய் என் கிளவி ஆகு இடன் உடைத்து - 'அத்தொழிலினைச் செய்' என்னும் உடம்பாட்டு முன்னிலை வினைச்சொல்லாம் இடத்தினை உடைத்து (எ-று.)

---

1. குறள், 41. 2. குறள், 144.
3. குறள், 381. 4. கலி. 10 : 1.
5. நன். சூ. 268. மயிலை. உரை மேற். 6. கிளவியாக்கம், சூ. 27.

'இடன் உடைத்து,' என்றதனான், 'உண்ணாய்' என்பது மறையாய் வருதலே பெரும்பான்மை ஆயிற்று. அது சிறுபான்மை உடம்பாட்டின்கண் வருங்கால் வேண்டிக்கோடற்பொருண்மைக்கண் வரும் என்று உணர்க.

'உண், தின்' என்பன முதலிய முன்னிலை ஏவல், உயர்ந்தான் இழிந்தானை ஏவுதற்கண் வரும்.

'அறியாய் வாழி தோழி!
* * * *
பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே.'[1]

என்னும் அகப்பாட்டினுள் 'அறியாய்' என்றது, ''காதலர் அருளே காதலித்திருப்பார்,' என்று நீ கூறுகின்றமையால், காதலர் கருத்தினை நீ அறியாய்,' என முன்னிலை மறையாய் நின்றவாறும்,

'அறியாய் வாழி தோழி! பொறிவரிப்
பூநுதல் யானையொடு'[2]

என்னும் அகப்பாட்டினுள் 'அறியாய்' என்றது,

'காமங் கலந்த காதல் உண்டெனின்
நன்றுமன் அதுநீ நாடாய் கூறுதி.'

என்றதனோடு இயையுங்கால், 'அவனோடு கூட்டம் உண்டு எனின், அது மிக நன்று! அதனை நீ ஆராயாமல் கூறுகின்றாய்; அதனை நின் மனத்தான் ஆராய்ந்து பாராய்,' என வேண்டிக்கோடற்பொருள் தந்து முன்னிலை ஏவல் உடம்பாடாய் நின்றவாறும் உணர்க. இங்ஙனம் மறைச்சொல் உடம்பாட்டுப் பொருளைப் படுத்தல் ஓசையாய் உணர்த்தி நிற்றல் சான்றோர் செய்யுளுள் பெரும்பான்மை என்று உணர்க.

இனி, வழக்கினுள்ளும்,

1. அகம். 53 : 1, 15, 16. 2. அகம். 268 : 1, 2.

இந்நாள் எம் இல்லத்து உண்ணுய்.
இப்பொழுது சொல்லாய்.

என்ருற்போலப் பெரும்பான்மையும் வழங்குமாறு உணர்க.

'உண்பாய்' என்னும் சொல், ஓசை வேற்றுமையான் முற்றும் தொழிற்பெயரும் வினையெச்சமும் வியங்கோளுமாய் நின்ருற்போலவும்; 'தபு' என்பது, ஓசை வேற்றுமையான் 'ஒன்றனைக் கொல்,' என்றும், 'நீ சா,' என்றும் நின்ருற்போலவும், மறைச்சொல் ஓசை வேற்றுமையான் உடம்பாடு உணர்த்திற்று என்று உணர்க. 'அங்ஙனம் உணர்த்திற்றேனும், மறை உணர்த்தும் ஆகாரம் உடம்பாடு உணர்த்துமோ?' எனின், அதனை ஏகாரம் 'உண்பேனே, உண்ணேனே' என விதிக்கும் மறைக்கும் வந்தாற்போலக் கொள்க.

'மறை' என்பது, 'செய்யாய்' என்னும் வாசகத்தால் சூத்திரம் செய்தமையால் பெற்ரும். 'செய்' என்பது விதி வினையே உணர்த்துதல் பற்றிச் 'செய்யென் கிளவி' என்ருர்.

இனி, சேனுவரையர், ''செய்யாய்' என்னும் முன்னிலை முற்றுச்சொல் 'ஆய்' என்னும் ஈறு கெடச் 'செய்' என்னும் முன்னிலை ஏவல் முற்ருய் நிற்கும்,' என்று பொருள் கூறி, ''உண்ணுய், தின்னுய், நடவாய், கிடவாய்' என்பன ஈறு கெட்டு, 'உண், தின், நட, கிட' என நிற்கும்,' என்ருரால் எனின், 'உண்ணுய்' என்பதும் 'உண்' என்பதும் தம்மில் பொருள் வேறுபாடு உடைமையின், 'உண்ணுய்' என்பதன் பொருளை 'உண்' என்பது உணர்த்தி ஈறு கெட்டு நிற்கும் என்றல் பொருந்தாதாம். 'நீ கலாய்த்திராது உண்ணுய்,' என்ற பொருளை 'உண்' என்றது தாராது ஏவற்பொருட்டாய் நின்றவாறு காண்க. அன்றியும், இவ் 'உண், தின், நட, கிட' என்பனவற்றை முதல் நிலை என்றே தாமும் கூறிப்போந்தார் ஆதலின்,

இவை முதல் நிலையாய் நிற்குமிடத்துக் 'கரு, செய், வெள்' என்னும் முதல் நிலைகள் பண்பு மாத்திரையே உணர்த்தி, ஈறு கெடுதலும் பொருள் உணர்த்துதலும் இன்றி நின்றாற்போல, இவையும் வினை மாத்திரையே உணர்த்தி, ஈறு கெடுதலும் பொருள் உணர்த்துதலும் இன்றி நிற்றல் வேண்டும். இவை அங்ஙனம் நில்லாது, 'ஆய்' என்னும் ஈறு கெட்டு முன்னிலை ஏவற்பொருண்மையே உணர்த்தி நிற்கும் என்றலின், 'முதல் நிலை' என்றல் பொருந்தாதாம். ஆகவே, வினைச்சொற்கு முதல் நிலைகள் 'உண், தின், நட, கிட' முதலிய என்றும். இவர் பிறர் மதமே கூறினர்; இஃது ஆசிரியர்க்குக் கருத்து அன்மை உணர்க. அன்றியும், 'உண், தின், நட, கிட' முதலியன முன்னிலை உணர்த்தி நிற்குமேல், 'உண்டான், உண்டேன்' என 'உண்' என்னும் முதல் நிலையில் விரிந்து நின்ற ஈற்றான் உணர்த்தும் படர்க்கைக்கும் தன்மைக்கும் வழூவாமாறு காண்க.

451] 'ஈ, ஏ' என்பன நிலை வேறுபடுமாறு [௫௫

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.

இது, பொருள் தரும் இடைச்சொற்களுள் சில நிலை வேறுபடுமாறு கூறுகின்றது.

(இ-ள்.) முன்னிலை முன்னர் ஈயும் ஏயும் - முன்னிலை வினைச்சொல் முன் வரும் ஈகாரமும் ஏகாரமும், அந்நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே - அம்முன்னிலைச்சொற்கள் தாம் நிற்றற்கு உரிய முறைமையை உடைய மெய்களை ஊர்ந்து வரும் (எ-று.)

முன்னிலைச் சொல்லாவன, 'செல், நில், புகு, உண், தின், உரை' என்றாற்போல வருவனவாம்.

(உ-ம்.) 'சென்றீ பெரும! நிற் றகைக்குநர் யாரோ.'[1]
'அட்டில் ஓலை தொட்டனை நின்மே.'[2]

1. அகம். 46 : 16. 2. நற். 300.

என வரும். இவற்றுள் ஈகாரம், 'புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ' எனக் க ட த றவை ஊர்ந்து வரும் என்பது தோன்ற, 'அந்நிலை மரபின் மெய்' என்றார். ஏகாரம் மகரம் ஊர்ந்து வரும். இவை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையின், புணர்ச்சி விகாரம் இன்றி, முன்னிலைச்சொல் விகாரமாயிற்று.

'உண்பாய்' என்பதற்கு மறையாகிய 'உண்ணாய்' என்னும் சொல், படுத்தல் ஓசையான் 'உண்டலைச்செய்,' என்னும் பொருள் தந்து நிற்றலின்,

'செய்யென் கிளவி ஆகிடன் உடைத்து.'[1]

என்று சூத்திரம் செய்ததன் பின்னர், 'சொல்லுதலைச் செய்; நிற்றலைச் செய்,' என இச்சூத்திரத்தின் முதல் நிலைகளும் 'செய்' என்னும் வாசகத்தினையே உணர்த்தி நிற்கும் என்பது கருதி,

'செய்யென் கிளவி ஆகிடன் உடைத்து.'[2]

என்றதன் பின் இதனை வைத்தார்.

452] புதியன புகுதல் [ருசு

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே.

இது, காலந்தோறும் புதிதாகத் தோன்றிய சொற்களும் கொள்க என்கின்றது.

(இ-ள்.) கடிசொல் இல்லை - 'இவை தொன்றுதொட்டு வந்தன அல்ல,' என்று கடியப்படும் சொற்கள் இல்லை, காலத்துப் படினே - அவ்வக்காலத்துத் தோன்றி நன்மக்கள் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வழங்கப்பட்டு வருமாயின் (எ-று.)

(உ-ம்.) சட்டி, சள்ளை, சமை

எனவும்,

'சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே.'
'தைய லாய்!சம மாதுரை என்றதே.'[3]

1, 2. எச்சவியல், சூ. 54. 3. சீவக. 1000.

எனவும் சகரம் மொழிக்கு முதலாய் வந்தவாறு காண்க. இவை,

'சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐ ஔஎனும் மூன்றலங் கடையே.'[1]

என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம், பிற்காலத்து வழங்கியதாயிற்று.

'ஞெண்டு'[2] என்பது 'ஞண்டு' ஆய்ப் பின்னர் 'நண்டு' என மரீஇயிற்று.

இச்சூத்திரம், 'எதிர்பொருள் உணர்த்தல்'[3] என்னும் உத்தியாம். இவ்வாறு பின்னர் வழங்குவன எல்லாவற்றிற்கும் இதுவே விதி.

இனி, 'ஒன்றென முடித்த'லால், புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உள. அவை, 'அழன், புழன்' முதலியனவும், எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்.

453] செய்யுள் விகாரம் [நுள

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்.

இது, செய்யுள் விகாரம் கூறுகின்றது.

(இ-ள்.) குறைச்சொற்கிளவி - குறைக்கப்படும் சொல்லாகிய சொற்கள், குறைக்கும்வழி அறிதல் - குறைக்கும் இடம் அறிந்து குறைக்க (எ-று.)

'குறைக்கும்வழி அறிதல்' என்றது, 'ஒரு சொற்குத் 'தலை, இடை, கடை' என இடம் மூன்றே; அவற்றுள் 'இன்னுழிக் குறைக்கப்படும் இச்சொல்,' என்று அறிந்து குறைக்க,' என்றவாறும்.

(உ-ம்.) 'மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி'

எனவும்,

---

1. தொல். எழுத். மொழி மரபு, சூ. 29.
2. குறுந். 117. 3. மரபியல், சூ. 110.

'வேதின வெரிநின் ஓதிமுது போத்து'[1]

எனவும்,

'நீல்உண் துகிலிகை கடுப்பப் பலவுடன்'

எனவும் மூன்று இடத்தும் குறைத்தவாறு காண்க.

ஈது, ஒரு சொல்லின்கண் சிறிது நிற்பச் சிறிது கெடுத்தல் ஆதலின், முழுவதும் கெடுத்தலாகிய 'தொகுக் கும்வழித் தொகுத்த'லின்[2] வேறுதல் அறிக.

'குறைச்சொற் கிளவி' எனவே, இவ்விதி செய்யுட் கண் என்பது பெறுதும். இது, 'பொருளிடையிடுதல்'[3] என்னும் உத்தியாம்.

454] மேலதற்கு ஒரு புறனடை [ருஅ

குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல.

இது, மேலதற்கு ஓர் புறனடை.

(இ-ள்.) குறைத்தன ஆயினும் - செய்யுளகத்துச் சொற் கள் குறைக்கப்பட்டன ஆயினும், நிறைப்பெயர் இயல - அவை பொருள் உணர்த்தும்வழி நிறைந்து நின்ற பெயரின் இயல்பை உடையவாம் (எ-று.)

என்றது, முற்கூறிய உதாரணங்கள் 'தாமரை, ஓந்தி, நீலம்' என நிறைந்த பெயரின் பொருள்களைத் தந்தே நிற்கும் என்றவாறும்.

'கண்திரள் முத்தம் கொண்டு வந்து'

என்புழி, 'வந்தன்று' என்னும் வினையும்,

'சான்றோர் என்பிலர் தோழி!'

என்புழி, 'என்பாரிலர்' என்னும் வினையும் சிறுபான்மை குறைத்தல் '**தன்னினம் முடித்த**'லால் கொள்க.

455] விசேடிக்கும் சொல் நிற்குமாறு [ருகூ

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.

1. குறுந். 140. 2. எச்சவியல், சூ. 7. 3. மரபியல், சூ. 110.

இது, விசேடிக்கும் சொல் இவ்வாறு நிற்கும் என்கின்றது.

(இ-ள்.) வேற்றுமைச்சொல் எல்லாம் - முடிக்கும் சொல்லை விசேடித்து நிற்கும் சொற்கள் எல்லாம், இடைச்சொல் - முடிக்கப்படும் சொற்கும் முடிக்கும் சொற்கும் நடுவே வரும் சொல்லாய் நிற்கும் (எ-று.)

வேற்றுமைச்சொல், 'வேறுபாட்டினைச் செய்யும் சொல்' என விரியும். எழுவாயை முடிக்கும் பயனிலைக்கும், முற்றை முடிக்கும் பெயரிற்கும், வினையெச்சத்தை முடிக்கும் வினைக்கும், பெயரெச்சங்களை முடிக்கும் பெயர்கட்கும் இடையே வருதலின், 'இடைச்சொல்' என்றார்.

(உ-ம்.) 'கண்ணி கார்நறுங் கொன்றை;
* * * *
ஊர்தி வால்வெள் ளேறே.'[1]

என்புழி, கொன்றையையும் ஏற்றையும் இடை வந்த சொற்கள் விசேடித்து வந்தன.

'ஈர்ந்தை யோனே* பாண்பசிப் பகைஞன்.'[2]

என்புழி, 'ஈர்ந்தையோன்' என்னும் முற்றிற்கு முடிபாகிய 'பகைஞன்' என்னும் பெயரை இடையில் நின்ற சொல் விசேடித்து நின்றது.

'இழிபிறப் பினோன் ஈயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்'[3]

என்புழி, 'பெற்று' என்னும் செய்தெனெச்சத்திற்கு முடிபாகிய 'மிசையும்' என்னும் வினையை இடை நின்ற சொற்கள் விசேடித்து நின்றன.

'எந்தெழில் மழைக்கண் இளையோன் மடுப்பத்
தேம்பாய் தேறல் நீசிறி துணினே'

என்புழி, 'மடுப்ப' என்னும் செயவெனெச்சத்திற்கு முடிபாகிய 'உணின்' என்னும் வினையை இடை நின்ற சொற்கள் விசேடித்து நின்றன.

பி-ம்: * ஈந்தை யோனே, ஈரந்தை யோனே

1. புறம். 1 : 1, 3. 2. புறம். 180 : 7. 3. புறம். 363 : 14, 15.

'வேற்பர் ஆடும் வெற்புச்சேர் பிருக்கை
பயம்பிற் கொள்ளாப் பைங்கண் யானை'

என்புழி, செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கும் அதன் மறைக்கும் முடிபாகிய இருக்கையையும் யானையையும் இடை வந்த சொற்கள் விசேடித்து நின்றன.

'குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி'[1]
'நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய !'[2]

என்புழி, செய்தவென்னும் பெயரெச்சங்கட்கு முடிபாகிய புரவியையும் செழியனையும் இடை வரும் சொற்கள் விசேடித்து நின்றன. சான்றோர் செய்யுட்கண் இங்ஙனம் அச்சொற்களை விசேடித்து வருதல் பெரும்பான்மை என்று உணர்க. பண்பும் உடைமையும் முதலிய இடை வந்தால், அவை விசேடித்து நிற்குமாறும் உணர்க.

இனி, 'இடைச்சொற்கள் எல்லாம் தாம் அடைந்த பெயர் வினைகளின் பொருள்களை வேறுபடுத்தி நிற்றலின், 'வேற்றுமைச்சொல்' என்று சொல்லப்படும்,' என்று பொருள் கூறினால் **உரையாசிரியர்** எனின், அவை வேறுபாடு செய்தல் அவ்வோத்திற்கூறிய சூத்திரங்களின் பொருளால் ஆண்டுப் பெறப்படுதலின், ஈண்டுக் கூறல் '**கூறியது கூறல்**'[3] ஆம் ஆகலின், அது பொருந்தாது என்க. 'கூரியதோர் வாள்மன்' என்புழி, 'திட்பம் இன்று,' என்பது வாளை வேறுபடுத்தினவாறு அச்சூத்திரத்தால்[4] பெற்றும். பிறவற்றையும் இவ்வாறே கொள்க.

இனி, **சேனவரையர்**, 'இடைச்சொல் எல்லாம் விசேடித்து நிற்கும்,' என்றால் எனின்,

'கோன்னார் துஞ்சினும்'[5]
'கோன்னே கழிந்தன் றிளமையும்'[6]

1. அகம். 4 : 8.
2. புறம். 19 : 4.
3. மரபியல், சூ. 108.
4. இடையியல், சூ. 4.
5. குறுந். 138.
6. நாலடி. 55.

என்றாற்போல்வன சில இடைச்சொற்கள் விசேடித்தல் அன்றி, எல்லா இடைச்சொற்களும் விசேடித்து நில்லாமை ஆண்டு அவர் காட்டிய உதாரணங்களை நோக்கி உணர்க.

456]　　உரிச்சொற்கும் விசேடித்தல் உண்மை　　[கூ0

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய.

இஃது, உரிச்சொற்கும் விசேடித்தல் உண்டு என்கின்றது.

(இ-ள்.) உரிச்சொல் மருங்கினும் - உரிச்சொல்லிடத்தும், உரியவை உரிய - விசேடிக்கும் சொல்லாதற்கு உரியன உரியவாம் (எ-று.)

எல்லாம் உரியன ஆகா எனவே, உரிச்சொற்கள் விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் நிற்பன உள என்பது பெற்றாம்.

(உ-ம்.) உறுகால், தவப்பல, நனிசேய்த்து, ஏகல்லடுக்கம் என்பன ஒன்றை விசேடித்தல்லது வாரா.

குருமணி, விளங்கு குரு
கேழ்கிளர் அகலம், செங்கேழ்
செல்லல் நோய், அருஞ்செல்லல்
இன்னற்குறிப்பு, பேரின்னல்

இவை தாம் ஒன்றனை விசேடித்தும், பிற தம்மை விசேடிக்கப்பட்டும் நின்றன.

குரு விளங்கிற்று; செல்லல் தீர்க.

எனத் தாமே நின்று வினை கொள்வன விசேடிக்கப் படும் தன்மை உடையன என்று உணர்க. பிறவும் இவ்வாறு வருவன உளவேல், கண்டுகொள்க.

'**மருங்கினும்**' என்ற உம்மையை எச்ச உம்மையாக்கி, 'இடைச்சொற்களினும் விசேடித்து நிற்றற்கு உரியன சில உள; எல்லாம் உரியன ஆகா,' எனப் பொருள் உரைத்து,

'கோன்னூர் துஞ்சினும்'[1]
'கோன்முனை இரவூர் போல'[2]
'கோன்னே கழிந்தன் றிளமையும்'[3]

என்றாற்போல வருவன பிறவும் கொள்க.

முன்னிற்சூத்திரத்தால் கூறிய விசேடித்தல் உரிச் சொற்கும் இடைச்சொற்கும் ஏற்றலின், அவற்றையும் ஈண்டுக் கூறினர். விசேடித்தல் இடைச்சொற்குச் சிறுபான்மை ஆகலின், அதை உம்மையால் தழீஇயினர்.

457] வினையெச்சம் முதலியன வேறு பெயர் பெறல் [சுக

வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய.

இது, வினையெச்சம் முதலியன வேறு பெயர் பெறும் என்கின்றது.

(இ-ள்.) வினையெஞ்சு கிளவியும் - வினையெச்சமாகிய சொற்களும் (உம்மையால், பெயரெச்சமாகிய சொற்களும் முற்றுச் சொற்களும்), வேறு பல் குறிய - முற்கூறிய பெயர்களோடு வேறு வேறாகப் பல பெயர்களையும் உடையவாம் (எ-று.)

(உ-ம்.) 'பெயர்த்தனென் முயங்கயான்'[4]—இது வினையெச்சத் தன்மைத் தெரிநிலை முற்று.

'வந்தனை சென்மோ வளைமெய் பரப்ப'—இது வினையெச்ச முன்னிலைத் தெரிநிலை முற்று.

'முகந்தனர் கொடுப்ப'[5]

'மோயினள் உயிர்த்த காலை'[6]—இவை வினையெச்சப் படர்க்கைத் தெரிநிலை முற்று.

'ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி'—இது வினையெச்ச உளப்பாட்டுத் தன்மைத் தெரிநிலை முற்று.

'வறுவியேன் பெயர்கோ வாள்மேம் படுந!'[7]—இது வினையெச்சத் தன்மை வினைக்குறிப்பு முற்று.

---

1. குறுந். 138. 2. குறுந். 91. 3. நாலடி. 55.
4. குறுந். 84. 5. புறம். 33 : 6. 6. அகம். 5 : 24.
7. புறம். 209 : 12.

'நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி'[1]
'வெள்வேல் வலத்திர்'[2]—இவை வினையெச்ச முன்னிலை வினைக்குறிப்பு முற்று.[3]
'சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தையர்
அற்றம்பார்த் தல்கும் கடுங்கண் மறவர்'[4]—இவை வினையெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு முற்று.

இன்னும் வேறு வேறு பெயர் பெற்று வருவனவும் கொள்க.

'எல்வளை நெகிழ்த்தோர்க் கல்லல் உறீஇயர்'
'உள்ளேன் தோழி! படீஇயரென் கண்ணே'
'கேட்டீவா யாயின்'[5]

என்பன வினையெச்ச வினைத் திரிசொல். இங்ஙனம் வினையெச்சம் திரிந்து நிற்கும் எனவே, ஈறு திரிந்து நிற்குமென வினையியலுள் காட்டியவற்றிற்கும் இதுவே விதியாயிற்று.

இனி, பெயரெச்சம் வேறு பெயர் பெறுமாறு,

'அவர் தம்முளான்
தரும தத்தனென் பான்'[6]

எனவும்,

'கச்சினன் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியற்
சுரியலம் பொருநனைக் காணிரோ!'*[7]
'குவளை யேயள வுள்ள கோழுங்கணாள்
அவளை யே'[8]

எனவும்,

'புரிமாலையர் பாடினியரும்'

பி-ம்: * காண்டிரோ

1. கலி. 21 : 6. 2. கலி. 4 : 7.

3. இவ்வாக்கியம் 'இவை வினையெச்ச முன்னிலைத் தெரிநிலை முற்றும் குறிப்பு முற்றுமாம்,' என இருப்பின் பொருத்தமாம்.

4. கலி. 4 : 2, 3. 5. கலி. 93 : 5. 6. சீவக. 242.

7. அகம். 76 : 7-9. 8. சீவக. 243.

எனவும் வந்தன உயர்திணை முப்பாற்கண்ணும் வந்த பெயரெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு முற்று.

'பெருவரை மிசையது நெடுவெள் ளருவி'[1]
'தேரிநடைய மாகளிறு
தன்தாள் பாடுநர்க்கு நன்கருளியும்'

இவை அஃறிணை இரு பாற்கண்ணும் வந்த பெயரெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு முற்று.

'பெருவேட்கையேன் எற்பிரிந்து'

இது பெயரெச்சத் தன்மை ஒருமை வினைக்குறிப்பு முற்று.

'கண்புரை காதலேம் எம்மும் உள்ளாள்.'

இது பெயரெச்சத் தன்மை உளப்பாட்டுப் பன்மை வினைக்குறிப்பு முற்று.

'உலங்கொள் தோளினை ஒருநின்னால்'

இது பெயரெச்ச முன்னிலை ஒருமை வினைக்குறிப்பு முற்று.

'வினைவேட்கையிர் வீரர்வம்மின்.'

இது பெயரெச்ச முன்னிலைப் பன்மை வினைக்குறிப்பு முற்று.

இன்னும் வேறு வேறு பெயராய் வருவனவும் கொள்க.

பின்பு நூல் செய்தோர் 'வினையெச்ச முற்று' என்று பெயர் கூறாமல், 'முற்று வினையெச்சம்' என்று பெயர் கூறினாரேனும், 'பெயரெச்ச வினைக்குறிப்பு முற்று' என்று பெயரெச்சத்திற்குக் குறியிட்டு ஆள வேண்டுதலின், அதற்கும் அப்பெயரே கொள்ள வேண்டும் என்று உணர்க.

இனி, 'பாயுந்து, தூங்குந்து'[2] எனவும்,

'சினைஇய வேந்தன் எயிற்புறத் திறுத்த'

எனவும்,

1. குறுங். 78. 2. புறம். 24 : 3, 6.

'கடைஇய நின்மார்பு'[1]

எனவும் வருவன பெயரெச்ச வினைத்திரிசொல்.

இனி,

'கண்ணும் படுமோ என்றிசின் யானே.'[2]

இது தன்மை முற்று வினைத் திரிசொல்.

'ஈங்குவந் தீத்தந்தாய்.'[3]

இது முன்னிலை முற்று வினைத்திரிசொல்.

'புகழ்ந்திகும் அல்லரோ?'

இது படர்க்கை முற்று வினைத்திரிசொல்.

இவ்வாறு மூவகைப் பெயர்களும் வேறு வேறு பெயர் பெற்று நிற்றல் கூறவேண்டுதலின், இதனை இவ் வோத்தினுள் கூறினர். இங்ஙனம் பெயர்கள் கூறவே, அவற்றிற்கு உரிய இலக்கணமும் கூறினராயிற்று.

இனி, ஓரெச்சம் ஓரெச்சமாய்த் திரிந்து வருவனவும் வேறே பெயர் பெறுதலின், அவற்றிற்கும் இதுவே இலக்கணமாம். 'இவற்றுள்ளும் விசேடித்து நிற்பனவும் உள,' என்பது உணர்த்துதற்கு 'உரிச்சொல் மருங்கின்'[4] என்னும் சூத்திரத்தின் பின் இதனை வைத்தார்.

'இதனை விரவு வினையாகிய வினையெச்சமும் பெய ரெச்சமும், பாலும் இடமும் காட்டி நிற்றலின், முற்று எச்சமாய்த் திரிந்தது என்னுமோ?' எனின், என்னும்; 'அளிநிலை பெறூஅது'*[5] என்னும் அகப்பாட்டினுள், 'ஒண்ணுதல், குறுக வந்து, முகமாறிக்கொள்ளாது, தனித்து, வடுக்கொளுத்தி, நக்கு, முகத்தினுரைத்து, ஒற்றி, மோந்து, உயிர்த்த காலை' என வினையெச்ச அடுக் காகச் செய்யுள் செய்கின்றவர், தம் பேரறிவுடைமை தோன்ற, எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையேகிடந்து

பி-ம்: * பொரூஅது

1. கலி. 77 : 21. 2. நற். 61. 3. கலி. 96 : 4.
4. எச்சவியல், சூ. 60. 5. அகம். 5 : 1.

பயனிலையை விசேடிக்கும் எச்சங்களுள் சிலவற்றைத் திரித்துப் பாலும் இடமும் காட்டி நிற்பச் செய்யுள் செய்தார் ஆகலின். இனிப் பெயரெச்ச வினைக்குறிப்பு முற்றிற்கும் 'அவர்தம்மிடத்தே நின்ற தருமதத்தன், புரிமாலை அணிந்த பாடினியர்' எனப் பெயரெச்சம் விரிந்த வாறு காண்க.

பெரும்பான்மை இங்ஙனம் செய்யுள் செய்தற்குக் காரணம் விரவு வினை பிரிவு வேறுபடூஉம் செய்திய வாய்ப் பிரிந்து நிற்குங்கால் பாலும் இடமும் காட்டும் தன்மையும் தம்முள்ளே உடைய ஆயினமையின், அவ் வெச்சம் முற்றாய்த் திரிந்தது என்பது உணர்த்துதற்கு அன்றே இடையிடை வினையெச்ச வாய்பாடும் உடன் ஓதி எல்லாவற்றிற்கும் ஒரு வினையே முடிபு கூறிற்று என்று உணர்க. அன்றியும், முற்று எச்சமாய்த் திரிந்து அடுக்கியும் தனித்தும் வந்து வினை கோடல் ஆசிரியர்க் குக் கருத்தாயின், சிறுபான்மையாய் வினை கொள்ளும் முற்றிற்குச் சூத்திரம் செய்தாற்போல முற்றுச்சொல் அடுக்கியும் அடுக்காதும் வந்து பெயரொடு முடிதற்கு 'அவைதாம், தத்தம் கிளவி'[1] என்று சூத்திரம் செய்தாற் போல முற்றுச்சொல்லே எச்சமாகி அடுக்கியும் தனித் தும் வந்து வினை கொள்ளும் என்றாற்போல ஒரு சூத்தி ரம் செய்திலராம்; அங்ஙனம் பெரும்பான்மையும் வழங் குவதோர் இலக்கணத்திற்குச் சூத்திரம் செய்யார்மையின், அவர்க்கு அது கருத்து அன்மை உணர்க. அன்றியும், வினையெச்சம் முற்றாய்த் திரிந்து பின்னும் அதன் பொருள் உணர்த்தி நிற்றல் 'இன்றி என்னும் வினை யெஞ் சிறுதி'[2] என்னும் சூத்திரத்தானும் உணர்க. இவ் விலக்கணத்தினது நுண்மையை உணர்தலாற்றாப் பின் னுள்ளோர், 'முற்றே எச்சம் ஆகலும் உரித்தே,' எனச் சூத்திரம் செய்தார். அவர் கருத்தைப்பற்றிச் சேனா

1. எச்சவியல், சூ. 33. 2. தொல். எழுத். உயிர் மயங். சூ. 35.

வரையரும் 'முற்றெச்சமாம்,' என்றார். அது பொருந்தாமை, இக்கூறியவாற்றானும் சான்றோர் செய்யுட்கு முன்னுள்ளோர் கூறிய உரைகளானும் உணர்க.

இனி, ''ஞாயிறு பட' என்னும் செயவெனெச்சத்து அகர ஈறு, 'பட்டு' என உகர ஈறாய்த் திரிந்து நின்றது,' என்றாரால் உரையாசிரியர் எனின், 'ஞாயிறு பட வந்தான்,' என்பது, 'ஞாயிறு படாநிற்க வந்தான்,' என நிகழ் காலம் உணர்த்துதல் வழக்காதலின், அது திரிந்து இறந்த காலம் உணர்த்தும் என்றல் பொருந்தாமை உணர்க.

458] தொடர்மொழிப் பொருள் வேறுபாடு [சுஉ

உரையிடத் தியலும் உடனிலை அறிதல்.

இது, தொடர்மொழிப் பொருள் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) உரையிடத்து இயலும் - ஓர் எச்ச வாய்பாடாகக் கூறும் இடத்ததுதானே மற்றோர் எச்ச வாய்பாட்டிற்கும் ஏற்று நடக்கும், உடனிலை அறிதல் - கூட்டத்தினை அறிந்து தொடர் மொழிக்கு ஏற்ப வெவ்வேறாகப் பொருள் உரைக்க (எ-று.)

(உ-ம்.) 'பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்'[1]

என்புழி, 'பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்த' என வினையெச்ச வாய்பாடாயும், 'பெண்மை சுட்டிய பெயர்நிலைக் கிளவி' எனப் பெயரெச்ச வாய்பாடாயும் நின்றவாறு காண்க.

'ஆடிய கூத்தனும் வந்தான் அவனோடு
கூடிய கூத்தியையும் கொண்டு.'

என்றாற்போல்வனவும், சான்றோர் செய்யுட்கண் இவ்வாறு வருவனவும், பிறவும் இதனான் முடித்துக்கொள்க.

---

1. கிளவியாக்கம், சூ. 4.

இன்னும் 'உடனிலை' என்றதனானே, 'ஓடி வந்தான், விரைந்து போயினான்,' என முடிக்கும் வினையோடு உடன் நிகழ்வனவும் கொள்க.

இச்சூத்திரத்திற்கு, 'வழக்கிடத்து உடன் நிற்கற்பால அல்லனவற்றது உடனிலை போற்றுக,' என்று பொருள் கூறி, 'இந்நாழிக்கு இந்நாழி சிறிது பெரிது,' என்பது காட்டினாரால் உரையாசிரியர் எனின், அது சிறப்பின்கண் வரும் நான்காம் வேற்றுமைப்பொருளாய் அடங்குதலானும், 'சிறிது' என்பது பெருமையை விசேடித்து நிற்றலானும், அதுதான் முன்னர்ப் பெறப்பட்டமையானும், இவ்வெச்ச மயக்கம் கூறுதலே ஆசிரியர் கருத்து என்று உணர்க.

459] வினைக்குறிப்புச்சொல் பொருள் தரும் வேறுபாடு [சூ௩

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன என்னும் சொல்முறை யான.

இது, வினைக்குறிப்புச்சொல் பொருள் தரும் வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) இன்ன என்னும் சொல் முறையான - 'இத்தன்மைய' என்று சொல்லப்படும் வினைக்குறிப்புச் சொற்கள் பொருள் தரும் முறைமையிடத்து, முன்னத்தின் உணரும் கிளவியும் உள - அவற்றுள் சில நுண்ணுணர்வு உடையோர்க்குக் குறிப்பினால் தெரிநிலைப் பொருள் உணரப்படும் சொற்களும் உள; அவற்றை உணர்க (எ-று.)

உம்மையால், தெரிநிலைப்பொருள் உணரப்படாத சொற்களும் உள என்று உணர்க. தெரிநிலைப்பொருள் உணர்த்துவன, வினையெச்ச வினைக்குறிப்பு முற்றும் பெயரெச்ச வினைக்குறிப்பு முற்றுமாம். தெரிநிலைப் பொருள் உணர்த்தாதன, ஏனை வினைக்குறிப்பு முற்றும்.

முருகாற்றுப்படையுள்,

'கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்

தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்றோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே.'[1]

என்புழி வந்த வினையெச்ச வினைக்குறிப்பு முற்றுக்கள் ஆக்கம் பெற்றுப் பொருள் உணர்த்துங்கால், 'கச்சைக் கட்டி, கழலை அணிந்து, கண்ணியைச் சூடி, குழலை ஊதி, கோட்டைக் குறித்து, பல்லியங்களை எழுப்பி, தகரைப் பின்னிட்டு, மயிலை ஏறி, கொடியை உயர்த்து, வளர்ந்து, தோளிலே தொடியை அணிந்து, துகிலை உடுத்து, ஏந்தி, தழீஇ, தலைக்கை கொடுத்து ஆடலும் அவற்கு நிலை நின்ற பண்பு,' எனச் செய்தெனெச்சப் பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க.

முன்னர்க் காட்டிய பெயரெச்ச வினைக்குறிப்பு முற்றுக்கட்கும் தெரிநிலை வாசகமாக விரித்துப் பொருள் கூறுதற்கு ஏற்பனவற்றை உணர்ந்து, அவற்றிற்கு ஏற்கத் தெரிநிலையாகப் பொருள் கூறிக்கொள்க.

'நல்லன் அறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன்,' எனக் குறிப்பு முற்று அடுக்கிப் பெயரோடு முடிபுழி, 'நல்லனாயிருப்பன், அறிவுடையனாயிருப்பன், செவ்வியனாயிருப்பன் சான்றோர் மகன்,' என விரித்துப் பொருள் கூறியக்காலும் அத்தெரிநிலைப் பொருள் உணர்த்தாதவாறு காண்க.

இச்சூத்திரத்திற்கு **உரையாசிரியர்**, 'சொல்லுவான் குறிப்பால் பொருள் உணரப்படும் சொற்களும் உள, 'இப்பொருள் இத்தன்மையது,' என்று கூறுதற்கண்,'

1. முருகு. 208-217.

எனப் பொருள் கூறி, 'செஞ்செவி வெள்ளொக்கலர்' என்பது காட்டினாரால் எனின், அது குறிப்பின் தோன்றலினது வேறுபாடாம் என மறுக்க.

460] மரபு வழுவமைதி [சுச

ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்.

இஃது, ஒரு சொல் இரு பொருள் உணர்த்துவதோர் மரபு வழு அமைக்கின்றது. இதனை, 'ஒரு சொல் இரு பொருள் பிரிவில வரையார்,' என மாறுக.

(இ-ள்.) இரு பொருள் ஒரு சொல் பிரிவில வரையார் - ஒரு சொல் ஒருகால் கூறுதற்கண்ணே இரண்டு பொருளைப் புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவிலவாய் நிற்றலைச் சிறப்புடைய என்று கொள்வர் ஆசிரியர் (எ-று.)

'பிரிவில' என்றது, இரண்டற்கும் ஒப்ப நிற்றலை.

(உ-ம்.) 'குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத'[1]

என்புழி, 'குழல் வளர் முல்லை' என்று கூறிய பொழுதே ஆயர் ஊதும் குழலிலே எழுந்த 'முல்லை' என்னும் பண்ணையும், மயிரிலே கிடந்த 'முல்லை' என்னும் பூவையும் ஒரு காலத்தே புலப்படுத்தி இரண்டற்கும் பிரிவிலவாய் நின்ற வாறு காண்க. இஃது, 'ஒரு சொல் ஒருகால் கூறுதற் கண் இரண்டு பொருளை உணர்த்துதல் வழுவேனும், அமைக,' என அமைத்தார். இதனை உவமவியலுள் 'ஒரீஇக் கூறலும்'[2] என்னும் சூத்திரத்துச் செய்யுட்கு இலக்கணமாகக் கூறுமாறும் உணர்க. இங்ஙனம் சான்றோர் செய்யுட்களுள் பல இடத்தும் வருமாறு உணர்க.

'வரையார்,' என்றதனான், இவை விகாரப்பட்டு நிற்பனவும் கொள்க.

'பாடுதும் பாவை பொற்பே.'[3]

என்றவழி, ஒருகால் 'பொலிவே' என்று ஏகார ஈறும்,

1. சிலப். 4 : 15, 16. 2. உவமவியல், சூ. 33. 3. சீவக. 2046.

ஒருகால் 'பொன்னுற்செய்த பேய்' என்று யகர ஈறுயும் விகாரமாயும் நின்றவாறு காண்க. இவ்வாறு வருவன பிறவும் உணர்க.

இன்னும் **'உய்த்துக்கொண்டுணர்த்தல்'***[1] என்னும் தந்திர உத்தியான் இச்சூத்திரத்திற்குச் செவ்வனே கிடந்தவாறும் பொருள் கொள்க :

'ஒரு பொருளையே உணர்த்தி நிற்கும் இரண்டு சொற்கள் தம்மிற்பிரிதல் இன்றி நிற்பனவற்றை நீக்கார் கொள்வர் ஆசிரியர்' (எ-று.)

(உ-ம்.) 'நிவந்தோங்கு பெருமலை'
'துறுகல் மீமிசை'

என்றாற்போல ஒரு சொல் இடை வராமல் அடுக்கி நிற்பனவாம்.

461] பால் வழுவமைதி [சூ௫

ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி
பன்மைக் காகும் இடனுமார் உண்டே.

இது, பால் வழு அமைக்கின்றது.

